
சதாவதானி
செய்குதம்பிப் பாவலர்





பதிப்பாசிரியர்
கே.பி.செய்குதம்பி

சதாவதானி
செய்குதம்பிப் பாவலர்

பதிப்பாசிரியர் :

கே. பி. செய்குதம்பி

வெளியிடுவோர் :

பாவலர் பதிப்பகம்

53, நைனியப்பன் தெரு
சென்னை - 600 001

சதாவதானி செய்குதம்பிப் பாவலர்

SADHAVATHANI SEYGU THAMBI PAVALAR

BIBLIOGRAPHICAL DATA :

Title of the book	:	*SADHAVATHANI SEYGU THAMBI PAVALAR*
Publisher	:	*K. P. SHAIK THAMBI*
Copy Right	:	*Pavalar Pathippakam 53, Nainiappan Street MADRAS - 600 001*
Language	:	*Tamil*
Edition	:	*First*
Year of Publication	:	*1987*
Paper used	:	*16 kg. Map Litho*
Size of the book	:	*21 X 14 Cms.*
Printing types used	:	*10 Pt.*
Price	:	*Rs. 35*
Printers	:	*Taj Press 53, Nainiappan Street MADRAS - 600 001*
Artist	:	*A. R. MAHEEN*
Subject	:	*Collection of articles and poems on the life and works of Sadhavathani Seygu Thamby Pavalar and a few poems from his works.*

பதிப்புரை

வருங்கால உலகு வாய்விட்டுப் புகழும் அளவுக்கு இந்த நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டுக்கு அரும்பெரும் சிறப்புக்கள் சில உண்டு. தமிழ்த் தாயின் தலைமூத்த புதல்வராய் – சரித்திரமே இன்ன தென அறியா திருந்த சதாவதானத்தைச் செய்து வெற்றி வாகை சூடிய சான்றோராய் – தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியமாய் – மகாமதியாய் - கலைக்கடலாய் – அல்லாமாவாய் - தம்மை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தமிழ்ப் பெரும் புலவராய் - மாணவர் பலருக்குத் தமிழ் அமுதூட்டிய பேராசிரியராய் - நூல் பல கண்ட நுண்மாண் நுழை புலம் மிக்கோராய் – நாடு போற்றும் நாவலராய் – பாரபட்சமற்ற பத்திரிகை ஆசிரியராய் – திகழ்ந்த **கா. ப. செய்குதம்பிப் பாவலர்** அவர்கள் வாழ்ந்திருந்த சீரிய சிறப்புக்கும் இந்த இருபதாம் நூற்றாண்டு உரித்தானது.

இலக்கிய இலக்கண மேருவாக மட்டுமின்றி தேச விடுதலைப் போராட்டத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்ட சிறந்த தலைவர் களில் ஒருவராகவும் திகழ்ந்த பெருமைக்குரியவர் பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்கள் பிறந்த பெருமை நாஞ்சில் நற்பதிக் கெனினும், தாம் பெற்ற சிறப்பால் தமிழ்கூறு நல்லுலகே உறவு பாராட்டி உயர்ந்து பேசுமளவுக்குச் சீர்பெற்ற சிந்தனையாளர், அவர். சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்து தமிழ் என்ற உணர்வால் அனை வருமே அன்போடு ஆட்படுத்திக் கொள்ளும் அளவுக்குச் சிறந்து விளங்கிய பண்பாளர். 'பாவலர் வாழ்ந்த நூற்றாண்டில் நாமும் வாழ்ந்திருந்தோம்' என்ற பன்னரிய பெருமையை நமக்களித்து விட்ட நாயகர். சுருங்கக் கூறின் இந்த இருபதாம் நூற்றாண்டு தமிழ்ப் பேரரசின் உலகக் கிரீடத்தைத் தாங்கி நின்ற பெருமைக் குரியவர்.

பாவலர் அவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில் அவர்களைப் பெருமைப் படுத்தி, அதனால் பெருமையுற நாடு தவறி விட்டது துரதிருஷ்டமே.

பாவலர் அவர்கள் தாம் பிறந்த நாட்டுக்கும் நனிசிறந்த தமிழுக்கும் ஆற்றியுள்ள அளப்பரும் தொண்டினை நன்றியுணர்வோடு நினைவு கூர்ந்த இன்றைய தமிழ்நாடு அரசு, அவர்கள் பிறந்த ஊரிலே அவர்கள் நினைவாக பெரிய அளவில் ஓர் மணி மண்டபம் எழுப்பியுள்ளதோடு தமிழாய முற்படுவோருக்குத் தக்க துணையாக அமையும் விதத்தில் நூல் நிலையம் ஏற்படுத்தவும் நிதி ஒதுக்கியுள்ளது. மேலும், பழம் பெருமை வாய்ந்த இடலாக்குடி அரசு மேநிலைப் பள்ளியை, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அரசு மேநிலைப் பள்ளி எனப் பெயர் மாற்றம் செய்தும் அறிவித்துள்ளது. அரசையும் மாண்புமிகு முதல்வர் எம். ஜி. ஆர். அவர்களையும் நன்றி உணர்வோடு பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

தமிழ்நாடு அரசின் ஓரங்கமான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் சதாவதானி பாவலர் அவர்கள் பெயரால் அறக்கட்டளை ஒன்றினை உருவாக்கும் முயற்சியில் பேரார்வம் காட்டி பெருந்துணை நின்ற கீழக்கரை மதிப்புக்குரிய எம். இத்ரீஸ் மரைக்காயர் அவர்களுக்கும் எம். ஸையத் முஹம்மது ("ஹஸன்") அவர்களுக்கும் உளப்பூர்வமான நன்றியை உரித்தாக்குகின்றேன். இந்த அறக்கட்டளையின் சார்பில் ஒவ்வோராண்டும் தமிழறிஞர் ஒருவரால் பாவலர் அவர்கள் பற்றி – அவர்கள் படைப்புக்கள் குறித்து - இரு நாட்கள் ஆய்வுரை நிகழ்த்தச் செய்து அவ்வுரையினை நூலுருவில் வெளியிடும் பணியை மேற்படி நிறுவனம் தொடர்ந்து மேற்கொள்ளும்.

இந்நிலையில்,

பாவலர் அவர்களைப் பற்றி விரிவாகத் தெரிந்து கொள்ளும் வேணவா, பரவலாகத் தமிழ்கூறு நல்லுலகைப் பற்றிப் பிடித்துள்ளது என்பதை அன்றாடம் வரும் கடிதங்கள் புலப்படுத்தின.

எனவே,

அவர்கள் பற்றித் தெரிந்தோரிடமும், தெரிந்தோரிடம் தெரிந்தோரிடமும் கேட்டேன். காலமெல்லாம் கதை கூற வல்ல நல்ல பல கட்டுரைகளும் கற்கண்டு நிகர் கவிதைகளும் கிடைத்தன. இவற்றைத் தொகுத்து நூலுருவில் வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். தந்தோருக்கெல்லாம் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இற்றைக்குச் சரியாக கால் நூற்றாண்டுக்கு முன்னால் 1961–ஆம் ஆண்டு - பேராசிரியர் சி. சுப்பிரமணியம், எம்.ஏ., பி, ஓ. எல்., அவர்களை பதிப்பாசிரியராகக் கொண்டு இடலாக்குடி, பாவலர் மன்றத்தார் **'சாதுவதானி செய்குதம்பிப் பாவலர் மலர்'** என்ற பேரால் நூல் ஒன்றினை வெளிக்கொணர்ந்து பாவலர்

அவர்களின் நினைவுகளைப் பசுமைப் படுத்தியுள்ளனர். அம்மலரில் கருத்துரைத்தோர் பலர் இன்று நம்மிடையே இல்லை. எனவே அவர்கள்தம் எழுத்துக்களையும் இத்தொகுப்பில் நன்றி உணர்வோடு இணைத்துள்ளேன்.

பழையன பெரும்பகுதி கழியவில்லை. ஆனால் புதியன மிகப் பல புகுந்துள்ளன.

பாவலர் அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த சில முக்கிய நிகழ்ச்சிகளை கட்டுரை ஆசிரியர்களில் பெரும்பாலோர் தொட்டுச் சென்றுள்ளனர். அவற்றைக் கூறாமல் விட்டால் தங்கள் படைப்பு எங்கே முற்றுப் பெறாது போய்விடுமோ என்ற எண்ணம் காரணமாக இருக்கலாம். ஆனால் கருத்து ஒன்றானாலும் உரைக்கும் பாங்கு மாறுபடுகின்றது. தவிர்க்க இயலவில்லை.

நூலை மூன்று பகுதிகளாகப் பிரித்து முதற்பகுதியில் சதாவதானி பாவலர் அவர்களின் பாச் சோற்றில் சில பதச் சோறுகளைத் தந்துள்ளேன். இரண்டாம் பகுதி, பாவலர் அவர்கள் பற்றிய அறிஞர் பெருமக்களின் பல்வேறு கட்டுரைகளால் அணி பெறுகிறது. மூன்றாம் பகுதியில் தமிழ்க் கவிஞர் பலர் பாவலர் அவர்களுக்குத் தங்கள் கவிதைகளால் செலுத்தும் அஞ்சலி இடம் பெற்றுள்ளது.

இந்நூல், சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களின் நினைவுகளை மீண்டும் பசுமைப்படுத்தி பல்லூழி காலம் அவர்களைப் பற்றிப் பறையறைந்து நிற்கும் என்ற நம்பிக்கையோடு பாவலர் அவர்களைப் பற்றி அறியத் துடிக்கும் ஆர்வலர் அனைவருக்குமே இதை அணியாக்குகிறேன்.

அன்பன்

கே. பி. செய்குதம்பி

பதிப்பாசிரியன்





உள்ளே....

சதாவதானி
செய்குதம்பிப் பாவலர் அவர்களின்
கவிதைகளில் சில...

சதாவதானி
செய்குதம்பிப் பாவலர் அவர்கள்
பற்றிய
பல்வேறு கட்டுரைகள்...

★

56-4

சதாவதானி
செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்குக்
கவிதாஞ்சலி

சதாவதானி

செய்குதம்பிப் பாவலர் அவர்களின்

கவிதைகளில் சில....

ஏகம்

யோகமன்று ஞானமன்று யூகமன்று மோனமன்று
தேகமன்று நாமமன்று சித்தமன்று சத்தமன்று
போகமன்று சுத்தபரி பூரணத்திற் பூரணமா
ஆகநின்ற யேகமென்ற அத்தநிலை நத்தேமோ
'ஆகிர்'நபி நாயகமே! அத்தநிலை நத்தேமோ.

ஆகிர் - உலகம்

வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை பாரமதி யோடுவெளி
தானுமில்லை யேகமென்ற தத்துவத்தை நத்தேமோ
தருமநபி நாயகமே! தத்துவத்தை நத்தேமோ.

விண்ணுமில்லை மண்ணுமில்லை மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை மேடுமில்லை மூடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை சார்ந்தகர ணாதிகளின்
கண்ணுமில்லை யேகமென்ற கத்தநிலை நத்தேமோ
கருணைநபி நாயகமே! கத்தநிலை நத்தேமோ

—'நாயக மான்மிய மஞ்சரி' என்ற நூலிலிருந்து

எங்கள் திருநபி

கும்மியடி பெண்ணே கும்மியடி எங்கள்
கோமான்ற சூலென்று கும்மியடி
மும்மை யுலகமும் போற்றிட வந்தமஹா
மூது நபியென்று கும்மியடி

சுத்தசன் மார்க்கம் வகுத்தவர் யார்மக்கள்
சொகுசா யுயிர்வாழச் செய்தவர்யார்
சத்திய மாமறை தந்தவர் யார்பொல்லாச்
சமயச் சழக்கை யொழித்தவர்யார் (கும்மி)

உண்மைத் தௌஹீதை யுலகினுக் கேநல்கி
ஓங்கு புகழ்பெற்ற உத்தமர்யார்
திண்மை மலிந்தவைங் காலப் பிரார்த்தனை
செகத்திற் களித்துச் சிறந்தவர்யார் (கும்மி)

புண்ணிய நோன்பொரு முப்பது மானிலம்
போற்றிப் புகழ்ந்திட வைத்தவர்யார்
திண்ணிய வேழை வரிவிதித் தேமக்கள்
சிறுமை பெருமை தவிர்த்தவர்யார் (கும்மி)

மக்கநகர் புக்கு ஹஜ்ஜின் கடமையை
மாறா தியற்றிட மௌன்றவர்யார்
ஹக்கின் ஒளிவில்வந் தாயவெலா ந் தம்மொளிக்
காகப் பொருத்திய ஆண்டவர்யார் (கும்மி)

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோர்நிறை
எல்லாரு மோர்சமம் என்றவர்யார்
சொல்லாரு மொற்றுமை சோதர தத்துவஞ்
சூழ்ந்து மலியத் தொகுத்தவர்யார் (கும்மி)

வைய முழுவது மோர்சம நீதியே
வழங்கப் பணித்து மகிழ்ந்தவர்யார்
ஐய மிலாமலே ஆண்பெண் ணிருவர்க்கும்
அருமை உரிமை அளித்தவர்யார் (கும்மி)

ஜாதிபே தத்தைத் தவிர்த்தவர் யார்பொல்லாச்
சாத்திரக் குப்பை துடைத்தவர்யார்
நீதி வழுவாப் பிறப்பி னுரிமையை
நிலத்திற் களித்த நிருமலர்யார் (கும்மி)

சுவர்க்க மிருப்பது தாயி னடியகம்
சூழ்ந்து தெரிந்து பெறுவதற்கே
துவர்க்க மொடுமுடி வற்ற வநாதியைத்
தொழுது பணிந்திடச் செய்தவர்யார் (கும்மி)

சொற்ற மொழியினுக் கெட்டுணை யாயினுஞ்
சோர்வு வராமற் றுணிந்தெழுந்து
முற்ற முறைசெயல் நற்றவ மாமென
மோக வுரைதந்த முக்கியர்யார் (கும்மி)

துதிப் பாக்கள்

உருமகளை அயன்நாவில் உறைமகளை
பொறிமகளை உலகுக் கெல்லாம்
குருமகளை அன்பர்புகழ் குலமகளை
மலர்மகளை குறைதீர் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்கும்
கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒருமகளை எனக்கருள வருமகளைப்
பெருமகளை உன்னல் செய்வாம்!

★

கன்றெடுத்துக் கனியுகுத்துக் கருதுமுல
கோரடியிற் கவினச் சேர்த்து
குன்றெடுத்துப் பசுநிரைகாத் தாயர்குலக்
கோபியர்கள் கொண்ட கூறை
சென்றெடுத்துத் தூதுரைத்து வெண்ணெயொடு
தயிர்நெய்பால் சேர ஒன்றாய்
அன்றெடுத்துத் தின்றதகை யாதவனை
மாதவனென் றகத்துள் வைப்பாம்!

★

திங்களொடு கங்கைமுடி சேர்த்தசிவன் நீயே!
திரிபுரங்கள் நீறுபடச் சிரித்தசிவன் நீயே!
சங்கினொடு சக்கரம்கை தாங்கியமால் நீயே!
தசமுகனைப் போரினுயிர் தவிர்த்திடுமால் நீயே!
நங்கைகலை மங்கைதவழ் நாவினயன் நீயே!
நாரணனார் உந்திதரு நளினத்தோன் நீயே!
எங்குமுள பரம்பொருளே என்றுமுள பொருளே!
யானைமுகப் பொருளேவந் தேழையருக் கருளே!

(பிற சமய அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கிப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பாடியவை)

★

தமிழ்த்தாய் வாழ்த்து !

தாயே தாயே தமிழ்த்தாயே
தகைசா லின்பிற் றழைத்தாயே
வேயே தோளா யடுத்தாயே
மேனி வெண்மை பூத்தாயே.

மலையி னிடையே யுதித்தாயே
வாணர் பரவ மிளிர்ந்தாயே
நிலையில் வையம் தனிவிளங்க
நிறைசே ரிருளும் நீத்தாயே.

பாலே யனைய வெள்ளுடையும்
பணியு மணியு புனைந்துபெரும்
நூலே சுமந்த கையினொடு
நொய்தீர் தவமு நோற்றாயே.

வேதன் மனையா நாவிடத்தும்
வெள்ளைக் கமலப் பூவிடத்தும்
போத வதிந்த தன்றிநல்லோர்
புந்தி யிடத்தும் போந்தாயே.

குமரி முனையும் வேங்கடமும்
குடகுங் கடலும் திசையாக
அமரு மெல்லை யுள்ளிருந்தே
அகில முழுதும் படர்ந்தாயே.

தெலுங்குந் துளுவும் கன்னடமுந்
திறல்சேர் மலைநாட் டொருமொழியு
மிலங்கு மகவா யீன்றெடுத்தும்
எழில்சேர் கன்னி யானாயே.

வடபா லோடி மறைந்துலக
வழக்கே யொழிந்த வாரியமும்
இடபா லாகப் பூர்வதிசை
எதிர்த்தார் காண வெழுந்தாயே.

சேர சோழ பாண்டியரா
செப்பு மரச ரொருமூவர்
தேரக் கொலுவில் வீற்றிருந்தே
செங்கோன் மாட்சி தெரித்தாயே,

சங்கப் பலகை தவழ்ந்தாயே
சகல கலையு நிறைந்தாயே
அங்கம் பெண்ணா யமைந்துவர
அரிய மாட்சி விளைத்தாயே.

நீரின் எதிரே நடந்தாயே
நெருப்பில் மூழ்கி யெழுந்தாயே
பார முதலை யுண்டசிறு
பாலன் தனையு மழைத்தாயே.

நாதன் தூதாய் நடந்துசெல
நண்ணும் நாட்ட மீந்தாயே
வேதக் கபாடந் திறந்தாயே
வியன்சேர் வியப்பு மளித்தாயே,

எல்லாம் வல்ல நின்பெருமை
இயம்பற் கரிய வாயிடினும்
வல்லார் நாவி லெந்நாளும்
வாழாய் வாழாய் தமிழ்ந்தாயே.

அகில உலகமும் எங்கள் நாடே!

சீனம றாபியா எங்கள் நாடே செல்வஞ்
சேரிந்துஸ் தானமும் எங்கள் நாடே
ஆனவிந் நாங்களு மோமுசு லிங்களிவ்
அகில உலகமும் எங்கள் நாடே!

உண்மைத்தெள ஹீதாம மானத்தை யேயுள்ளில்
உவந்து சுமந்தோம் அதனாலெம்
திண்மைகொள் நாமத்தை யோசின்னத்தை யோவிச்
செகத்தில் அழித்தற் கியலாதே!

சொருப வணக்கத் துடக்கறுத் தேபரி
சுத்தத் துறைகொளத் தோற்றுவித்த
அருவ வணக்கத் தருள்தலமாம் இங்கண்
அமைந்து மிளிர்ந்த கஃபாவே!

அத்தக் கஃபாவிற்கோர் காவலராய் எம்மை
ஆக்கி விடுத்த அருளாளன்
எந்தச் சமயத்தும் காப்பனென்றே யுள்ளில்
எண்ணி இருப்பதும் பொய்யாமோ?

ஈட்டி முனைவரு நீழலிலே யென்றும்
இருந்து வளர்ந்திட்ட வாலிபர்யாம்
தீட்டி யொளிரும் இளம்பிறை தானெங்கள்
தேசச் சமுதயாயச் சின்னமன்றோ?

விண்ணக மேவெறும் பொய்மைகட் காயினி
விலவிலத் தோடிட மாட்டோமே
மண்ணகத் துற்றபல் சோதனை கட்கும்பின்
வாங்கிலம் தேறினம் வாழ்ந்தோமே!

உந்தலுஸ் என்னும்பைம் பூங்காவே நின்கிளை
உட்கட்டும் கூண்டகம் தௌஹீதின்
சந்தம் முழக்கியாம் வீற்றிருந் திட்டபொற்
சமயந் தனையு மறப்பாயோ ?

ஓங்குதஜ் லாதவழ் பேரலையே முன்நீ
உணர்ந்ததுண் டெம்விருத் தாந்தமுற்றும்
பாங்குகொ ளுன்னதி இன்றளவும் எங்கள்
பழமை முழக்கியே பாயுதுபார் !

சுத்தம் அளித்திடப் பூவுலகே நிற்காய்ச்
சோரி விடுத்தோம் உயிர்விடுத்தோம்
நித்தம் உனது நரம்பினிடை எம்முள்
நிலவும் இரத்தமே ஓடுதுபார் !

பாங்கு முரசொலி மேனா டனைத்திலும்
பரந்து பொலிந்திட முற்போக்கென்(று)
ஓங்கு பிரவாகம் எத்தடை யும்முடைத்
தூடுருவிப் பாய்தல் ஓராயோ ?

எங்கள் தளபதி யாரெனி லோவுற்ற
ஹிஜாஸின் அதிபதி அந்நாமச்
சங்கைகொண் டேயெங்கள் நாமமுஞ் சின்னமும்
தரணியில் சீர்த்திடக் கண்டோமே !

செந்தமிழ்ப் பாவலன் செப்பொலி யேசமர்
தேர்ந்தேறச் சொல்லும் மணியோசை
அந்த மணியோசை கேட்டெழுந்தே முன்னம்
அமைந்திடில் வெற்றியும் எம்மதுவே !

[கவிஞர் அல்லாமா இக்பால் அவர்களின் 'சீனம் அராப் ஹமாரா'
என்ற உருதுக் கவிதையின் தமிழாக்கம்]

நோன்பை மறவாதே!

நோன்பை மறவாதே நெஞ்சே நீ
நோன்பை மறவாதே.

வான்புகழும் தேவர்பிரான்
வந்தளித்த வண்புர்கான்
தான்புகழ வாய்த்ததெல்லாத்
தத்துவமும் சார்ந்த ரம்லான் (நோன்பை)

தேக சுகமளிக்கும்
சிந்தைத் துயரறுக்கும்
மோகக் கனலவிக்கும்
முத்திநிலை விளக்கும் (நோன்பை)

உண்ணா வறிய
ருறுபசியை இன்னதென
எண்ணா திருந்த
இடும்பர்க் கினிதுணர்த்தும் (நோன்பை)

ஊரனைத்துஞ் சுற்றி
யொருநொடியில் மீண்டுவரும்
பார மனக்குரங்கைப்
பத்தி நெறிநிறுத்தும் (நோன்பை)

தீய புலனவித்து
தெய்வ உணர்வளித்து
மாயப் பிரபஞ்ச
மாமயக்கைப் போக்குவிக்கும் (நோன்பை)

சோம்ப லகற்றும்
சுறுசுறுப்பை உண்டாக்கும்
ஓம்புந் தொழுகைக்
கொருமைப் பதமுதவும் (நோன்பை)

வாய்ந்தசம தத்துவத்தில்
மக்களெலாம் வாழநல
னேய்ந்தசகாத் தீந்தெவர்க்கும்
இன்துயிலைப் போக்குவிக்கும் (நோன்பை)

★

சாற்றுக் கவிகள்

நண்பா வருக நனிவருக நானிலத்தின்
பண்பா பொளிர்க படர்ந்தெழுக—கண்பாய
எவ்வகையும் மேற்கொள்க இன்பசுகிர் தந்தருக
செவ்வகையில் வாழ்க செழித்து

(பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்களின் 'நண்பன்' வார இதழுக்கு வழங்கியது.)

வாய்ந்த சுவையனைத்தும் வார்த்து வடிகட்டி
ஏய்ந்த தமிழிசையாய் ஈங்குவப்ப—ஆய்ந்துயர்ந்த
சீருடையான் கோடை திருநீல கண்டனெனும்
பேருடையான் தந்தான் பெரிது.

('தமிழிசை' என்னும் நூலுக்குத் தந்தது)

திருக்குமணியாச் செவ்வேள் சிந்தை களிகூர
உருக்குமணி அம்மாள் உவந்தாள்—இருக்குமணி
ஒன்பதுக்கும் மேலாக ஓங்கமுத கீதமதன்
அன்பதற்கு முண்டோ அரண்.

(உருக்குமணி என்பாரின் 'அன்பு' என்ற நூலுக்கு அளித்தது)

கோவை குளமளித்த கோன்செண் பகராமக்
காவைக் கனிந்தேத்தி கண்டபள்ளு—பாவைநேர்
ஒத்திக்கும் பாகும் உறுகனியும் கற்கண்டும்
தித்திக்குமே சொல்வீர் தேர்ந்து.

('செண்பக ராமன் பள்ளு' என்ற நூலுக்கு ஈந்தது)

உள்ளத் திருளொதுக்கி ஓங்குமுணர் வொளிவை
தெள்ளத் தெளிக்குந் தேசிகன்போல்—கள்ளமற
ஈட்டும் கலைக்கடலின் இன்னமுத முற்றுமெடுத்
தூட்டுந் திறந்த தொளி.

(கவி கா. மு. ஷெரீப் அவர்களின் 'ஒளி' என்ற ஏட்டுக்குக் கூறிய பாக்களில் ஒன்று.)

★

சீட்டுக்கவி

கற்றுவரும் பெருந்தொழிலைக் கனவிடையு
மறவாமற் கருத்திற் கொண்டு
முற்றுறவே யாய்ந்துணர்ந்து முடித்தவந்நூ
லேதினிநீ முடிக்கப் போகுங்
கொற்றமுறு நூலேது மேல்விளங்கு
நூலென்ன குணம தாக
வெற்றிதரு மிலக்கணங்க ளேதேனும்
பயின்றனையோ விள்ளு வாயே!

அன்னையுட னப்பனுமிங் கானவுற
வினருமெனக் காற்ற வொண்ணா
நன்னயமார் கல்விபல நாடோறு
நவநவமாய் நவையொன் றின்றி
சொன்னயமும் பொருணயமும் பெறப்புகட்டி
மனமயக்கந் தொலைத்தாட் கொண்ட
என்னயரெங் கிருக்கின்றார் சேமமென
யானறிய வியம்பு வாயே!

(சென்னையிலிருந்து தம் நண்பர் திரு. பாக்கியம் பண்டாரம் அவர்களுக்கு எழுதிய பல்வேறு சீட்டுக் கவிகளில் இவை இரண்டு.)



நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை யகற்றி மதிக்குந்—தெருளை
அருத்துவது மாவிக் கருந்துணையா யின்பம்
பொருத்துவதுங் கல்வியென்றே போற்று.

வாய்ந்த கலையுணர்ச்சி மாண்ட மனத்துரவோர்
சாய்ந்த தலைதூக்கித் தருக்கார்காண்—காய்ந்தகிளை
பாரம் பொறாமல் படிந்துதலை தாழ்த்தலல்லால்
நேர நிமிருமோ நின்று.

பூவாமற் காய்ப்பதுவே பூம்பனசம் போலுமொன்றை
ஏவாமற் செய்வதுவே எச்சமென்க—ஓவாமல்
ஏவியுஞ் செய்யா இழிமகவுக் கென்னுவமை
நாவியு மாமோ நவில்.

கூடாரைக் கூடற்க கூடிற் குறித்தவெலாம்
நாடா தெறிந்தேனும் நட்பொழிக—ஆடுமயில்
பச்சோந்தி பாற்படா பட்டால் மணிவிழிக
ளச்சோ வழிந்தொழியு மால்

நிந்தனையும் வந்தனையும் நேர்ந்தொன்றாய்க்
காண்பதல்லால்
சிந்தை திரிவாரோ சீரியோர்—அந்திமுல்லை
தன்மணத்தை என்சொலினும் தந்தருள்வ தன்றிமற்றோர்
புன்மணத்தை நல்கிடுமோ பூத்து.

பாலுற்ற நீருமப் பாலாம் பகுக்கிலப்பால்
மேலுற்றுத் தீக்குளித்து வேகுங்காண்—ஏலுற்ற
தக்கார்மற் றார்சாரிற் றாமாகித் தற்பிரிந்தா
லொக்கா ருயிர்வாழற் குற்று,

பெண்மாட்சி!

பெண்ணே பெண்ணே பெண்மணியே
பெருமை நிறைந்த பெட்டகமே
பண்ணே நிகர்த்த மொழிமறவாப்
பைம்பொற் கிளியே பசுந்தேனே!

பூமா தேவி நீயானாய்
புகழின் செல்வி நீயானாய்
நாமா மகளும் நீயானாய்
நளினத் தலைவி நீயன்றோ?

நாவிலொருவன் இடத்தொருவன்
நறைசேர் மார்பின் நடுவொருவன்
ஆவியனைய வைத்த துன்னை
அல்லால் யாரே அறையாயே?

சிருட்டிக் கரசா யெழுந்தனையே
ஜெகத்தின் வடிவாய்த் திகழ்ந்தனையே
இருட்டி மறைந்த வுலகினுக்கே
ஏற்றி வைத்த விளக்கானாய்!

கொள்ளுங் கணவர்க் குயிரானாய்
கூறு அமைச்சுந் தானானாய்
அள்ளும் பிணிக்கோ ரமுதானாய்
அறத்திற் குகந்த துணையானாய்!

நல்லா ரெவர்க்கும் தொழும்பானாய்
நவைதீர் விருந்தி னட்பானாய்
இல்லார்க் கிரங்கும் பொழிலானாய்
இயல்நாற் குணத்திற் கிருப்பானாய்!

சிற்றிற் சிதைக்கு மகவானாய்
சிறுவர்க் கூட்டுந் தாயானாய்
பற்றிற் காக்கும் பாட்டியெனப்
பரிவோ டுறவும் தாங்கினையே!


கற்பிற் கிலக்காய் நின்றனையே
    காய்தீக் குளித்துக் களித்தனையே
அற்பிற் கணவ னுயிர்கவர்ந்த
    அந்த கன்கை மீட்டனையே!

உறுவ தோரா தொருமூவர்
    உரைத்த மொழிக்கே உட்டுணுக்கிச்
சிறுவ ராக்கித் தொட்டிலிட்டுச்
    சிறப்போ டாட்டி மகிழ்ந்தனையே!

உரிய உரிய அரையினிடை
    ஓங்கி வளருந் துகில்காட்டி
அரிய மகிமை விளைத்தனையே!
    அழியாப் புகழும் பெற்றனையே!

எல்லாம் நீயே இல்லையெனில்
    எல்லா மில்லை யென்றுரைக்கும்
வல்லார் வாய்மைக் கொருசான்றாய்
    வந்தா யிருந்தாய் வாழ்ந்தாயே!

வாய்ந்த வுன்றன் மாட்சியெலாம்
    வவ்விப் பறித்த மாக்களினி
ஆய்ந்து தெளியுங் காலமிதோ
    அடுத்த தடுத்த தறிவாயே!



கள்ளைக் குடியாதே!

கள்ளைக் குடியாதே, ஐயா நீ
    கள்ளைக் குடியாதே.

கொள்ளை வியாதிமிகும்
    கொண்ட வறிவழியும்
சள்ளை மலிந்தபல
    சங்கடங்கள் சூழ்ந்துவரும் (கள்ளை)

மான மழிவாகும்
    மதிப்புக் குறைவாகும்
ஈன மலிவாகும்
    இடரோ பெருகிவிடும் (கள்ளை)

உற்ற பொருளழியும்
    ஊரார் பகைவளரும்
குற்ற மிகுந்தபல
    கூடா வொழுக்கமுறும் (கள்ளை)

பெண்டுபிள்ளை தாயென்ற
    பேத மறியாமற்
கண்டபடி திட்டிக்
    கலகமிட நாட்டமிகும் (கள்ளை)

பித்தம் பிடித்தலையும்
    பேய்ப்பட்டி போலுமெத்த
சித்தத் தியக்கேற்றி
    சீரழிவி லாழ்த்திவிடும் (கள்ளை)

தந்தைதாய் சுற்றமெலாஞ்
    சஞ்சலத்தி லாழவெகு
நிந்தைத் துயருறுத்தி
    நிருமூல மாக்கிவிடும் (கள்ளை)

கண்சுழல வாயுளறக்
    கைகால் தடுமாற
மண்சுழல விண்சுழல
    மாய மயக்களிக்கும் (கள்ளை)

★

வசன ரூபக வெண்பாக்கள்

கனம் பாக்கியம் அவர்கட்கு மிகவும் வந்தனம்.

ஐயா!

உண்மையுள்ள சர்வேசனது கிருபை கொண்டு யான் முதல் இங்கே எவரும் இந்நாள் வரையுங் குறைவற க்ஷேமம். தாங் களும் தங்கள் சமுகஞ்சார்ந்தவரும் எவ்விதத் தீங்குமின்றி எப்போதும் க்ஷேமமாய் அங்கே இருக்கின்ற செய்திக்கு எழுதி அனுப்ப விரும்புகிறேன்.

தாங்கள் என்மீது கருணையொடுந் தீட்டிவிட்ட காகிதம் என் கைக்குவரச் சகல சங்கதியும் வாசித்து ஒரு போதுங் கொள் ளாத ஆனந்தங் கொண்டேன். அதில் எழுதியுள்ள புராணம் உரையோடு மதுரையிலிருந்து வந்திருக்கலாமே! அது விஷய மாய் விவரமாகப் பதில் காகிதம் எழுதத் தங்கள்பால் கேட்டுக் கொள்கிறேன்.

இது முதல் எப்போதும் இனிக் கண்ணும் கருத்துமாய்க் கற்று வந்தால் சொற்ப தினத்துள் நல்ல மேதாவியோ என்ன எண்ணுந்தரத்தில் வரலாம். இதற்கு ஐயமில்லை.

பெருந்தகைமை வாய்ந்த நம் பேராசிரியர் சந்நிதிக்கு அன்புள்ள வந்தனத்தை ஆசையுடன் சொல்லுகின்றேன். அஃதொன்றா? நேசத்தால் ஓதரிய வேலாயுத முதலியார்க்கு மதுவே.

தமியேனால் இங்கே வேறாகவேண்டுங் காரியாதிகட்குந் தங்களது தேக சுகத்திற்குந் தினந்தினமுங் காகிதங்கள் தந்து கொண்டிருப்பதற்குத் தங்கள் கருணையை விதந்துமுவந்தேன். வந்தனம்.

இங்ஙனம்
தங்களன்பு மறவா,
கா. ப. செய்குதம்பிப் பாவலன்
42, ஆச்சாரப்பன் தெரு, சென்னை.

மேலே கண்ணுற்ற கடிதம் 15—1—1908-ல் சென்னையில் இருந்து பாவலர் அவர்கள் தம் நண்பர் பாக்கியம் என்பாருக்கு எழுதியது. கடிதத்தில் ஏழு வெண்பாக்கள் இருக்கின்றன. எங்கே கண்டுபிடியுங்கள்! தெரியா விட்டால் எதிர்ப்பக்கம் பாருங்கள்.

கனம்பாக் கியமவர் கட்குமிக வும்வந்
தனமையா! உண்மையுள்ள சர்வே—சனது
கிருபைகொண் (டி)யான்முதலிங் கேயெவரும் இந்நாள்
வரையும் குறையறச்சே மம். (1)

தாங்களும்தங் கள்சமூகம் சார்ந்தவரு மெவ்விதத்
தீங்குமின்றி எப்போதும் சேமமாய்—ஆங்கே
இருக்கின்ற செய்திக் கெழுதி யனுப்ப
விரும்புகின்றேன் தாங்களென் மீது (2)

கருணையொடும் தீட்டிவிட்ட காகிதமென் கைக்கு
வரச்சகல சங்கதியும் வாசித்—தொருபோதும்
கொள்ளாத ஆனந்தம் கொண்டேன் அதிலெழுதி
யுள்ள புராணமுரை யோடு (3)

மதுரையிலி ருந்திதற்குள் வந்திருக்க லாமே
அதுவிஷய மாய்விபர மாகப்—பதில்கா
கிதமெழுதத் தங்கள்பால் கேட்டுக்கொள் கின்றேன்
இதுமுதலெப் போதும் இனி (4)

கண்ணும் கருத்துமாய்க் கற்றுவந்தால் சொற்பதினத்
துண்ணலல்ல மேதாவி யோவென்ன—எண்ணும்
தரத்தில் வரலாமி தற்கைய மில்லை
பெருந்தகைமை வாய்ந்தநம் பேர் (5)

ஆசிரியர் சந்நிதிக் கன்புள்ள வந்தனத்தை
ஆசையுடள் சொல்லுகின்றேன் அஃதொன்றோ—நேசத்தால்
ஓதரிய வேலா யுதமுதலி யார்க்குமது
வே, தமியே னாலிங்கே வேறு (6)

ஆகவேண் டுங்காரி யாதிகட்கும் தங்களது
தேதசுகத் திற்கும் தினம்தினமும்—காகிதங்கள்
தந்துகொண்டி ருப்பதற்குத் தங்கள் கருணையைவி
தந்துமுவந் தேன்வந் தனம். (7)

இரங்கற் பாக்கள்

நேரிசை வெண்பா

ஆண்டு விரோதிமதி யைப்பசிநா லைந்திரண்டாம்
வேண்டும் புகழ்படைத்த மேலோனாய்—ஈண்டுவந்த
அண்ணல் ஜமால்முஹம்ம தாஜி சுவனபதி
நண்ண உவந்தெழுந்த நாள்.

அறுசீர் விருத்தம்

எண்ணேறு விரோதிமதி யைப்பசிநா லைந்திரண்டி
லிகத்தை நீத்து
மண்ணேறு புலவரெலா மயக்கேற மருளேறி
மக்க ளுள்ளம்
புண்ணேற வுறன்முறையார் புரிவேற எண்டிசையும்
புழுக்கு மேற
விண்ணேறிச் சென்றதென்னோ ஹாஜிஜமால் முஹம்மதென்னும்
வேந்தர் வேந்தே!

வான்கண்ட செழுமுகிலு மைந்தருவும் பைந்தேனும்
வள்ள லென்னத்
தான்கண்ட மூவேழோ டிருநிதியு மோருருவாய்ச்
சமைந்தாற் போன்று
நான்கண்ட நறும்பேறே ஹாஜிஜமால் முஹம்மதென்னும்
நாம வேந்தே
ஊன்கண்ட உடல்விடுத்தே யெங்கெழுந்தா யெங்கொளித்தா
யியம்பா யப்பா!

பொருட்டுறையி லரசியலிற் பொதுமன்றில் வர்த்தகத்தில்
புதுமை சான்ற
தெருட்டுறையி லறிவுரையில் செய்வினையில் நடுநிலையிற்
செம்மை பூத்த
அருட்டுறையிற் சீர்த்துயர்ந்த ஹாஜிஜமால் முஹம்மதெனு
மண்ணால் வையம்
இருட்டறையில் நின்றிரங்க யெங்கெழுந்தா யெங்கொளித்தா
யுரைப்பா யப்பா!

56-H

தனம்படைத்தரய் புகழ்படைத்தாய் தக்கபெரும் குணம்படைத்தாய்
தகைசா லன்பே
தினம்படைத்த மனம்படைத்தாய் திறம்படைத்தா யறம்படைத்
செம்மை பூத்தாய் [தாய்
கனம்படைத்த நடையுடைய ஹாஜிஜமால் முஹம்மதெனும்
கலைவ லாயுன்
இனம்படைத்த துயருணர்ந்து மெங்கெழுந்தா யெங்கொளித்தா
யிசைப்பா யப்பா !

அடுத்தடுத்து வந்தாலும் அணுத்துணையு முகங்கோணா
தாய வெல்லாங்
கொடுத்தடுத்து முகமனுரை கூறியுப சரித்தெவர்க்குங்
கோன்மை பூண்டு
மடுத்தடுத்த மதிவாணா ஹாஜிஜமால் முஹம்மதெனும்
வள்ளா லென்றுந்
தொடுத்தடுத்த தொடர்விடுத்தே யெங்கெழுந்தா யெங்கொ
சொல்லா யப்பா ! [ளித்தாய்

எவ்வுயிருந் தன்னுயிரா யெத்துயருந் தன்துயரா
யெண்ணி யெண்ணி
அவ்வுயிர்க்கு மத்துயிர்க்கு மாவனசெய் தனுதினமு
மாக்கம் நல்கி
நவ்வுயிரா நின்றசெழும் ஹாஜிஜமால் முஹம்மதென்னும்
நல்லோய் வையம்
வெவ்வுயிரா நின்றழுங்க வெங்கெழுந்தா யெங்கொளித்தாய்
விளம்பா யப்பா !

கொற்றமிகு மிசுலாத்திற் குறித்தகட னத்தனையுங்
குறைவொன் றின்றி
முற்றமுடித் தற்பகலு முனைவனருள் வாருதியுள்
மூழ்கி யென்றும்
அற்றமிலா வாழ்க்கைபெற்ற ஹாஜிஜமால் முஹம்மதென்னு
மறவோ யுன்றன்
சுற்றமெலாஞ் சோர்ந்தரற்ற வெங்கெழுந்தா யெங்கொளித்தாய்
சொல்லா யப்பா !

வந்தனைய்யும் நிந்தனையு மதித்தொன்றாய்க் கண்டுமன
மகிழ்வ தல்லால்
சிந்தனையிற் செயல்முறையி லோரணுவுந் திரியாத
செம்மை பூண்டோர்
பந்தனைய நயன்பயன்த ஹாஜிஜமால் முஹம்மதுபூ
பாலா வுன்றன்
இந்தனைய முகமறைத்தே யெங்கெழுந்தா யெங்கொளித்தா
யுரைப்பா யப்பா

பிறந்தபயன் யாதென்னப் பெரிதுன்னி மலமாயைப்
பெயரப் போக்கி
அறந்தவிரா நெறிதழீஇ அனுதினமு மொருவனையே
யகத்து ளாக்கி
சிறந்ததவப் பயனுவந்த ஹாஜிஜமால் முஹம்மதென்னுஞ்
செம்மால் நின்னைத்
துறந்தவுல குய்வதற்கே யெங்கெழுந்தா யெங்கொளித்தாய்
சொல்லா யப்பா !

மறைமுதலே யருளொளியே மதிப்பரிய பெரும்பொருளே
வைய மெல்லாங்
குறையறநின் றாளுமொரு கோமானே சீமானே
'குதா'வே யென்றும்
நிறையுறநின் றுனைப்பணிந்த ஹாஜிஜமால் முஹம்மதென்னும்
நிருபர் வேந்தை
இறையளவு மெள்ளாம லேற்பனசெய் தேற்றருள்வா
யின்ப வீடே !

21 - 11 - 1949ல்

ஹாஜி எம். ஜமால் முகம்மது சாஹிப்
அவர்கள் இறையளவில் சேர்ந்தபோது
சதாவதானி பாவலர் அவர்கள்
நொந்து பாடியவை

திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி

வடிகொண்ட மூன்று தமிழா லலங்கல்
வகைகோடி பாடி யனல்வாய்
அடிகொண்ட செம்பி னொருகாசு மின்றி
யறலோபர் வாய லலைந்து
மிடிகொண்ட வென்ற னிழிநோ யகற்றி
மிகவாழ்வு தந்த ருளுவீர்
வெடிகொண்ட சோலை புடையோங்கு கோடை
விதிராச போச பரமே.

பரமாத ரன்பு மிகவே மலிந்து
படியூட மர்ந்த பலவா
முரமான துன்ப மதிலேய மிழ்ந்தி
யொருசீரு மற்ற தறிவீர்
திரமான வின்ப மினியேனு மீந்து
திருவாகு முந்த மிருதாள்
தரமான வேழை முடிமீ தளித்தீர்
தகையோங்கு கோடை யிறையே.

இறையேனு நுந்த மடியார்க ளெண்ண
மிதயத்தி லுற்ற மறியாக்
கறையே மிகுந்த கொடியேனை யாண்டு
கனிவாயி னின்ப மருள்வீர்
மறையேவு மந்த முறைகாட்டி யன்பர்
மனதா யுறைந்த வள்ளால்
நிறையே மலிந்த பொறையோங்கு கோடை
நிலமாதி வேத முதலே.

(திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் நூலிலிருந்து)

திருநாகூர்த் திரிபந்தாதி

காப்பு

நேரிசை வெண்பா

வித்தகா சிற்பரா மேதகா யாவுஞ்செய்
வித்தகா சிற்பரா மேதகா—சித்தமுறத்
தாதிக் கருமஞ்சி தம்புரிநா கைத்திரிபந்
தாதிக் கருமஞ்சி தம்.

கட்டளைக் கலித்துறை

சாற்றவந் தாதி கலம்பகங் கோவை தமிழ்ப்படித்தூர்
தூற்றவந் தாதி னகரவென் றற்பரைச் சொல்லிலென்னா
மேற்றவந் தாதி லகும்வன நாகையி லெவ்வுலகும்
போற்றவந் தாதி பதிசர ணேத்திற் புகழ்வருமே.

வருவா ரணம்பரி வையம்ப தாதியின் மன்னர்வந்து
திருவா ணரமுரைத் தேத்துநன் னாகையர் சீர்படித்தால்
தருவா ரணங்க முறைவருஞ் சாதகந் தாரணியிற்
கருவா ரணங்கற வீடருள் வாய்க்கவெக் காலத்துமே.

காலத் தனத்தை வெளிதனிற் காட்டிக் கதிக்குமலை
போலத் தனத்தைப் பறிக்கின்ற மங்கையர் பூசற்கெழுஞ்
சீலத் தனத்தைச் சிதைத்தும தாளெனச் சேர்த்தருள்வீர்
கோலத் தனத்தைக் கொளுந்தட நாகைக் குருமணியே.

மணிக்கந் தரத்தை மருவுபன் மாதர் மயலெனுமா
பிணிக்கந் தரத்தைப் பிறவும தேர்பதப் பீதமலர்
எணிக்கந் தரத்தை னியமற வந்தருள் வீர்புலங்கொள்
கணிக்கந் தரத்தைக் கதிக்குநன் னாகைக் கதிநிதியே.

நிதியங் கவரு நினைவெடுத் தோடி நிதமுந்துயர்
கதியங் கவரும் படிகொணஞ் சேசமன் காய்ந்தவய
விதியங் கவரும் பொழுதெனை நாகை விமலாடி
துதியங் கவரு தவுமருள் போலிலை சொல்லுதற்கே,

(திருநாகூர்த் திரிபந்தாதி எனும் நூலிலிருந்து)

மங்கல வாழ்த்து

பிரமாதீ சச்சித்திரை பேசிருபத் தொன்பான்
வருமாதி வாரமிது னங்காண் —திரமா
ரருமணங்கொள் சாரதையை யண்ணல்கன்னி யப்பன்
திருமண முடித்த தினம்.

அறுசீர் விருத்தம்

துய்ய மகவும் பெரும்புகழுந் தொலையாச் சுகமு மிருந்தனமு
மெய்தப் பெற்றே சாரதைநல் லெழில்சேர் கன்னி யப்பனொடு
மெய்யு முயிருங் கைலைமலை மேவு மரனு முமையுமென
வைய மதனிற் பல்லாண்டு வாழி வாழி வாழியவே!

குணமுங் குறையாக் குண நலனுங் குலவு மருளுந் தெருளுமுயர்
பணமும் வாய்ப்பச் சாரதைசம் பன்னன் கன்னி யப்பனொடு
மணமு மலரும் பாற்கடல்சேர் மாலுங் கமல மாதெனவெவ்
வணமுஞ் சுகமாப் பல்லான்டு வாழி வாழி வாழியவே!

பண்ணிற் கினிய மொழிமடவார் பரந்து பரவிப் பணிந்துநிற்கும்
பெண்ணிற் சிறந்த சாரதைசீர் பெட்பார் கன்னி யப்பனொடு
கண்ணி லிமையே செந்தில்வளர் கந்தன் வள்ளி யம்மையென
மண்ணிற் பொலிந்து பல்லாண்டு வாழி வாழி வாழியவே!

அணியுந் துளவ மாலையனை யகத்தி லிருத்தி யனுதினமும்
பணியுங் குணமார் சாரதைதன் பதியாங் கன்னி யப்பனொடு
மணியு மொளியு மைங்கணைகொள் மதனும் ரதியும் போலநல்
பணியும் பொலியப் பல்லாண்டு வாழி வாழி வாழியவே!

அரும்பும் பொறையு நிறைபறிவும் அருளா ரொழுக்க
மமைநிலையும்
விரும்புஞ் சுகுண சாரதைதன் மேலோன் கன்னி யப்பனொடு
கரும்புஞ் சுவையு மமராவதிக் காவ லிறையுஞ் சசியுமென
வரும்புத் திரபௌத் திரர்மலிய வாழி வாழி வாழியவே!

(கன்னியப்பன் — சாரதை ஆகியோர் திருமணத்தின்போது வேண்டுதலுக் கிணங்கிப் பாடிய திருமண வரழ்த்து)

தரிசனப் பத்து!

உண்மைநிறை யறிவொழுக்க மோகை யீகை
யூகமன்பு வாகைவன்மை யோக முற்றுந்
திண்மைபெறப் பூத்துயர்ந்து சீர்த்த சேயைச்
செய்யதவப் பேறனைத்துந் திளத்த கோவை
வண்மைகொள வுலகளித்த வருண மாலை
வழுத்தரிய பெரும்பேற்றை மாற்றார் கூற்றைத்
தண்மைகெழு சரசகுண ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

மண்பூத்த வளமனைத்து மனைவாய் பூப்ப
மகிழ்பூப்பப் புகழ்பூப்ப மகிமை பூப்பக்
கண்பூத்த மணியெனமெய்க் கருணை பூத்த
கருமுகிலை யிருநிதியைக் கனகக் குன்றைப்
பண்பூத்த நிலவொளியைப் பகல்செய் வானைப்
பயனொருவா வருமருந்தைப் பசும்பொற் காவைத்
தண்பூத்த சுகிர்தமென ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

அத்திமுத லெறும்பீறா யனைத்து மாக்கி
யருந்துயர்தீர்த் தருளளிக்கு மமல வாழ்க்கை
நத்தியரைக் கணப்பொழுதும் நாட்ட மோவா
நடுநிலையைச் செழும்பறையை ஞான பானை
யெத்திசையும் போற்றவந்த இராஜ ராஜை
யெழிலொழுகு கனியமுதை யின்ப வூற்றை
சத்தியத்தி னிலைக்களத்தை ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

ஆர்ந்தபல கலையனைத்து மகத்துட் டேக்கி
யமுதகவி மழைபொழியு மான்றோர்க் கெல்லாம்
சேர்ந்தபெரு நிதிக்குவைதந் தின்னல் தீர்த்த
செழுமுகிலை யருணிலையைச் செல்வப் பேற்றை
நேர்ந்தநறுங் குணாலயத்தை நிமல வாழ்வை
நிறைந்ததவ வாருதியை நெடிய மாலைச்
சார்ந்தமணிப் பெட்டகத்தை ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

கந்தமல ராசனத்துக் கமலை வாழ்க்கை
கனிந்தமணிப் புயாசலத்தை கற்றோர் வாக்கை
பந்தமுற வுலகளித்த பாக்கி யத்தை
பத்தர்புகழ் கொழுகொம்பை பரபோ தத்தை
சொந்தமென வந்தவர்தம் துயர வாரி
தூர்த்தணைத்துக் காத்தசெழும் தூய சேயைச்
சந்ததமு மெனைப்புரந்த ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

பாரிருந்த பனுவலெலாம் பரிந்து மாந்தி
பயனறிந்த முறைநடந்து பலரும் வேட்பப்
பேரிருந்த புகழ்செறியப் பேறும் வீறும்
பெருந்திருவு மருந்தனமும் பெற்ற கோவை
நாரிருந்த மணமலரை நறிய தேனை
நவிலரிய பொக்கிஷத்தை நயனப் போதை
தாரிருந்த புயத்தரசை ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

இன்மைசொலி வருகுநர்தம் மின்னல் நீக்கி
யிருபொழுது மாழைமழை யிசைவிற் செய்து
நன்மைசெயும் பயோதரத்தை நாட்டார் தேட்டை
நவிலரிய பெரும்புகழை நவைதீர் ஞாட்பை
தொன்மையற வந்துதித்த சுகோ தயத்தை
துய்யமறை முறைவழுவாத் துய்ய வாழ்வைத்
தண்மைகெழு சற்குணத்தை ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

திருவருத்து நறியவனச் செழும்பூங் காவை
செம்மணியைக் கண்மணியைத் திகழ்சேர் முத்தை
மருவருத்து மலர்ப்புயத்து மன்னர் மன்னை
மண்டலமும் விண்டலமும் மதியா மாண்பை
மெருவருத்து மருவலர்தம் பெய்ய கூற்றை
மெய்ம்மைகெழு மருள்பொழியை மேலோர் நட்பை
தருவருத்துங் கொடைநலத்தை ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

வஞ்சமொடு கோள்கரவு வாது சூது
வசைபடிறு நசைகசடு வழங்கு வோரை
நஞ்சமெனத் தகைந்தொறுத்து நண்ணார்ப் போக்கி
நானிலமு மேனிலமு நவில நின்ற
கஞ்சமலர்ப் பதக்கொழுந்தைக் கருணை நோக்கைக்
கனகமணிப் பூஷணத்தைக் கவலை தீரத்
தஞ்சமளித் தரவணைக்கும் ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

சிந்தைவரு துயரனைத்துந் தீர்த்துக் காத்துச்
செய்யமுக மலர்க்காட்சி தெரித்தெஞ் ஞான்று
விந்தையுறப் புரந்தளித்த வேந்தர் வேந்தை
மேவுகுணச் சுகிர்தநல மிகைத்த கோவை
நிந்தையறப் போந்திலகு நித்தி லத்தை
நீண்டதபோ பலத்துறையை நியாய வேட்பைத்
தந்தையெனக் காத்தளிக்கும் ஷபீமு கம்மதைத்
தமிழ்ப்புலவீர் வம்மின்போய் தரிசிப் போமே!

22 - 12 - 1949 ல்
சென்னை முன்னாள் ஷரீப் எஸ். ஏ. ஷபீமுகம்மது
அவர்கள் பேரில் பாடியவை.

மது வேண்டும்!

கொஞ்ச மதுவேண்டும்—அம்மே எனக்குக்
கொஞ்ச மதுவேண்டும்.

1) நெஞ்சத் துயரனைத்தும்
நீணெருப்பின் வாய்ப்படுமோர்
பஞ்சாப் பறந்தகன்று
பற்றற் றிருப்பதற்கே (கொஞ்சம்)

2) நான்நீ எனுஞ்சொல்
நவிலாமல் காண்பவெலாம்
தான்நீ எனவுன்னிச்
சாகாமற் சாவதற்கே (கொஞ்சம்)

3) உச்சி திறந்தேஉள்
ஊறும் அமுதமதை
நச்சி அருந்தி
நனவற் றிருப்பதற்கே (கொஞ்சம்)

4) இரவு பகலற்ற
இன்பப் பெருவெளியுள்
விரவும் அறிவோ
டறியாமை வீழ்வதற்கே (கொஞ்சம்)

5) வெம்மாயை தாண்டி
வெளிக்குள் வெளிகடந்து
சும்மா இருந்து
சுகித்துக் களிப்பதற்கே (கொஞ்சம்)

6) வெட்ட வெளிதன்னை
மெய்யாக் கருதிமனக்
கட்ட மகற்றிக்
கலங்கா திருப்பதற்கே (கொஞ்சம்)

7) நரக சுவர்க்கமெலாம்
நந்தம் சிருஷ்டியென
விரக முடனோர்ந்து
வீம்பற் றிருப்பதற்கே (கொஞ்சம்)

8) சங்கற்ப விகற்பஞ்
சாராமற் றன்னகத்தே
தங்கற் புதமாஞ்
சமாதி சமைவதற்கே (கொஞ்சம்)

9) போற்றுநனும் போற்றப்
படுவோனு மொன்றானால்
வேற்று வணக்கமப்பால்
வீணென் றறிவதற்கே (கொஞ்சம்)

10) தன்னை யறிந்து
தலைவனையுந் தானறிந்திங்
கென்னை மறந்துபிற
கின்புற் றிருப்பதற்கே (கொஞ்சம்)

11) சத்தோ டசத்தென்னும்
சர்வமய மாயவொன்றை
வித்தார மாயேதும்
விள்ளா திருப்பதற்கே (கொஞ்சம்)

12) பேச்சற்று மூச்சற்றுப்
பேணுந் தொழிலற்று
நீச்சற்ற சுத்த
நிலையி லிருப்பதற்கே (கொஞ்சம்)

சதாவதானி
செய்குதம்பிப் பாவலர் அவர்கள்
பற்றிய
பல்வேறு கட்டுரைகள்....

வாழ்க்கைப் பாதையிலே...

குமரிக் கடல் முனையையும் வேங்கட மலை முகட்டையும் எல்லையாகக் கொண்ட தென்னவர் திருநாட்டிற்கு புகழ் தேடித் தந்த பெருமை தகைசால் தமிழன்னையைச் சாரும். எழில்சேர் கன்னியாய் என்றும் திகழும் அவ்வன்னைக்கு, பிள்ளைத் தமிழ் பேசி, சதகம் சமைத்து, பரணி பாடி, கலம்பகம் கண்டு, உலாவந்து, அந்தாதி கூறி, கோவை யாத்து அணியாகப் பூட்டி அழகூட்டி அகம்மிக மகிழ்ந்தனர் செந்நாப் புலவர்கள். அத்தகைய புலவர்களின் பொன்னனைய ஆக்கங்களுக்கு நோக்கமறிந்து உதவி, அழகு தமிழ்ப் பாவையை அலங்கரிக்கும் பணியில் அவர்களை மென்மேலும் ஊக்கினர், புரவலர் பெருமக்கள். புலவர்கள்தம் படைப்பாக்கங்களும் புரவலர்கள்தம் கொடைப் பாங்கும் ஒன்றோடொன்று போட்டியிட்டன. தமிழ் மலர்ந்தது; மணந்தது; சிறந்தது.

தமிழை மலரவைத்த — மணக்கச் செய்த — சிறக்கப் பண்ணிய பெரும்பணியில் சமயச் சழக்கில்லாமல் சைவமும், சமணமும், வைணவமும், இஸ்லாமும், கிறித்தவமும் ஒன்றையொன்று முந்தும் பாங்கில் முயற்சி மேற்கொண்டன. அந்தந்த சமயங்களைச் சார்ந்த தன்னேரிலாப் புலவர் பெருமக்கள் முழுக்க முழுக்க தங்களை தமிழ்ப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டனர்.

முஸ்லிம் தமிழ்ப் புலவர்களில் ‘ஆதிப் புலவர்’ எனத் தெரியவரும் ‘மிஃராஜ் மாலை’ பாடிய ஆலிப் புலவர் தொட்டு முன்னூறுக்கும் மேற்பட்ட முத்தனைய புலவர்கள் சத்தனைய ஆக்கங்களைச் செய்து தமிழ்த்தாய்க்குத் தகைமை சேர்த்துள்ளனர். மாறாப் புகழ் படைத்த

'சீறா'வின் கருத்தா உமறுப்புலவர் பெருமான் அவர்கள் உலகளாவிய பெருமைக்கு உரித்தாகின்றார்.

அந்த வரிசையில் மிகப் பெரும்புலவராக நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்திருந்து வான்புகழ் கொண்டவர், தமிழ்ப்பெரும் புலவர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், கலைக்கடல், மகாமதி, அல்லாமா, டாக்டர், சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

'மருதமும் நெய்தலும் மயங்கியங் கெங்கும் புரையறு செல்வம் நிலைபெற வளரும்' என மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை அவர்களால் பாடல் பெற்ற நாஞ்சில் நாட்டில், பண்டக சாலையும் சண்டை செய் களமும் தன்னகம் கொண்ட பழம் பெரும் பதியாம் கோட்டாறு என்னும் பகுதிக்குட்பட்ட இளங்கடை என்னும் எழில் சேர் ஊரில், 1874-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 31-ஆம் நாள், 'ஓரும் அவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் புகழ்படைக்க' செய்குதம்பி அவதரிக்கின்றார்.

தந்தையார் பக்கீர் மீரான் என்னும் தகைமைக்குரியார். அன்னையோ 'மெஞ்ஞானத் திருப்பாடல் திரட்டு' என்னும் ஞான நூலை ஞாலத்திற் கீந்த ஹசரத் ஞானியார் சாகிப் என்ற செய்குமுஹ்யித்தீன் மலுக்கு முதலியார் அவர்களின் வழித் தோன்றல்.

செய்குதம்பி தம் ஐந்தாவது அகவையில் மார்க்க ஆச்சாரப்படி இறைமறையாம் திருகுர்ஆனை ஓதத் தொடங்கி எட்டாவது அகவையில் முடித்துக் கொண்டார். பின் இளங்கடை ஆதாரப் பள்ளியில் அரை வகுப்பில் சேர்க்கப்பட்டார். அது மலையாள மொழிப்பள்ளி. அவர்தம் அறிவாற்றல் அப்போதே பளிச்சிட, இருபதே நாட்களில் முதல் வகுப்புக்கு அனுப்பட்பட்டு ஆறே திங்களில் நான்கு வகுப்புக்களையுமே படிப்படியாக முடித்துக் கொண்டார். இதுவே அவருக்குக் கிடைத்த பள்ளிக் கல்வி. எளிய குடும்பத்தில் பிறந்த செய்குதம்பிக்கு இதற்கு மேல் படிக்க வறுமை இடந்தர மறுத்து விட்டது. பெற்றோரின் நெசவுத் தொழிலில் ஈடுபடலானார். 'செய்யும் தொழிலி லெல்லாம் நெய்யத் தொழிலுக்கு நிகரில்லை' என்பர்.

நெசவுப் பாவிலே சீர் பார்த்த வேளை, கவிப் பாவிலே சீர்பார்க்கத் துடித்தார்.

தறிப் பாவிலே அசைநோக்குங் காலை இலக்கியப் பாவிலே அசைநோக்க விழைந்தார்.

பாவிலுள்ள தளையெல்லாம் பாட்டின் தளையாகக் கண்டார்.

நூல் முடிந்து பாவாக்கும் நேரமெல்லாம் பாப்புனைந்து நூலாக்கப் பரபரத்தார்.

இடமும் வலமுமாக ஓடிய ஓடங்கள் அவருக்கு எதுகையை—மோனையை—நினைப்பூட்டின.

அறிவு வேட்கைக்கு ஆட்பட்டு விட்ட செய்குதம்பி அடுத்திருந்த பட்டாரியார் தெருவில் பள்ளி நடத்தி வந்த சங்கர நாராயண அண்ணாவியார் அவர்களிடம் சென்று நின்றார். வருங்காலத்தில் பெருங்கலைச் செல்வமாய்த் திகழ்ந்து அதனால் தம் பெயர் நிறுத்தும் தன்மைகள் அவரிடம் பொருத்தம் கொண்டிருந்ததை எடுத்த உடனேயே அவதானித்துக் கொண்ட அண்ணாவியார் அவர்கள், செய்குதம்பியைத் தம் மாணாக்கருள் ஒருவராக ஏற்றுக் கொண்டார். அருள் தவழும் தம் மாணாக்கரிடம் பொருள் இல்லை என்பதும் அண்ணாவியாருக்குத் தெரியும். அழியும் பொருளைவிட செழித்த புகழையே விரும்பிய குருவிடம்,

“பொழுதொடு சென்று வழிபடல் முனியான்
குணத்தொடு பழகி அவன்குறிப் பிற்சார்ந்
திருவென இருந்து சொல்லெனச் சொல்லிப்
பருகுவன் அன்ன ஆர்வத் தனாகிச்
சித்திரப் பாவையின் அத்தக அடங்கிச்
செவிவா யாக நெஞ்சு களனாகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்துப்
போவெனப் போதல்”

என நன்னூலார் நவின்றதற் கிணங்க நடந்து கொண்டார், செய்குதம்பி.

அண்ணாவியார் அவர்களிடம் கற்பவை அனைத்தையும் கற்றார், செய்குதம்பி. அண்ணாவியாரும் இவருக்கு ‘ஓகை’யுடன் கற்பித்தார். இலக்கியமும் இலக்கணமும் ஏற்புறத் தெரிந்து கொண்ட இளவல் செய்குதம்பி, இனிய கவிகளைப் பிழையறப் புனையும் அளவுக்கு வல்லமை பெற்றார். கற்றதனாலாய களிப்பு இவருக்கு. அறுவடை கண்டுவிட்ட— அதுவும் மேனி கண்டுவிட்ட — ஆனந்தம் அண்ணாவியாருக்கு.

ஹசரத் ஞானியார் சாகிப் அவர்களின் ‘மெஞ்ஞானத் திருப் பாடல்திரட்டு’ நூலினைப் பிழையறப் பதிப்பித்து வெளிக் கொணர

அன்னாரின் வழித் தோன்றல் செய்யிது தாஹா சாகிப் அவர்கள் விரும்பினார். உறவின் முறையால் மைத்துனரான செய்குதம்பியை இதன் பொருட்டு சென்னைக்கு அழைத்தேகினார். பத்தொன்பதே வயது நிரம்பப் பெற்ற செய்குதம்பி சென்னை மாநகரில் காலடி வைத்தார்.

சென்னை, ஸ்ரீபத்மநாப விலாசம் அச்சுக் கூடத்தில் ஞானியார் பாடல் அச்சு வாகனமேறியது. வேலையை முடித்துக் கொண்ட தாஹா சாகிப் ஊருக்குத் திரும்பினார். செய்குதம்பியின் தமிழாற்றலில் மனம் பறிகொடுத்த அச்சக உரிமையாளர் இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்கள், அவரைத் தமது அச்சகத்திலேயே தலைமைப் பிழை திருத்துவார் பொறுப்பினைத் தந்து சென்னையிலேயே வைத்துக் கொண்டார். பத்மநாப விலாசம் பல நூல்களை அச்சிட்டு வெளி யிட்டது. செய்குதம்பியின் மேதாவிலாசம் அந்நூல் அனைத்தையும் தம் மனவரங்கின் உள்ளே பிரதி எடுத்து வைத்துக் கொண்டது. அத்துணை நினைவாற்றல் கைவரப் பெற்ற அருள் கொண்ட உளத்தினராக அவர் விளங்கினார்.

செய்குதம்பி பிழைதிருத்தி வெளிவந்த நூல்கள் அனைத்துமே பிழையறப் பொலிவு பெற்றது கண்ட பிற பதிப்பகத்தார்கள்கூட தாங்கள் வெளியிடும் நூல்களுக்குப் பிழைதிருத்தும் பெரும் பொறுப்பினை ஏற்க வேண்டி நின்றனர். நாயுடு அவர்களும் இசைவு தந்தார். அதனால் கல்விப் பெருக்கோடு செல்வப் பெருக்குக்கும் ஆளானார்.

நாயுடு அவர்கள் செய்குதம்பிக்குத் தமது அச்சகத்தில் சிறப்பான இடத்தையும் தம் உள்ளத்தில் வெகுவான மதிப்பையும் தந்தார். சான்றோர் பல்லோர் செய்குதம்பியைச் சார்ந்திருந்து தமிழமுதுண்டு நாளும் மகிழ்ந்தனர். இக்காலை நாயுடு அவர்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்க மாறாப் புகழ் படைத்த சீறாப் புராணத்திற்கு உரையெழுதி இருபகுதிகளாக அச்சிட்டு வெளிக் கொணர்ந்தார். அவரைச் சொற்பொழிவாற்றச் செய்து சொக்கி மனம் மகிழ்ந்தனர், பலர். 'யதார்த்தவாதி', 'இஸ்லாமிய மித்திரன்' என்னும் ஏடுகளைச் சிறப்புற நடத்தினார். பாவியற்றும் தமது வன்மையை வாய்ப்புக் கிட்டிய போதெல்லாம் வகையாகக் காட்டினார். பாப் புனைவதில் இவருக்கிருந்த வல்லமையைக் கண்டோர் இவரைப் பா – வல்லவர், பா - வலவர், பாவலர் என அழைக்கத் தொடங்கினர். செய்குதம்பி, செய்குதம்பிப் பாவலர் ஆனார். தாம் எழுத நேர்ந்த கடிதங்களிலோ பிறவற்றிலோ கையெழுத்திடும்போது அடக்கமாக கா. ப. செய்கு தம்பிப் பாவலன் என எழுதந் தொடங்கினார்.

இராமலிங்க அடிகளாரின் அருட்பாவுக்கு மாபெரும் எதிர்ப்பு முளைவிட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் என்பாரின் மாணாக்கரும் தலைசிறந்த தமிழறிஞருமான கதிர்வேல் பிள்ளை என்பார் அருட்பாவை மருட்பா எனக் கூறி எதிர்த்த கூட்டத்தினரின் தளபதியாக நின்று சண்டமாருதம் செய்தார். "அருட்பா சைவ நூலேயாயினும் அது தமிழ் நூல்; தன்னேரிலா ஞானப் பூங்கா. எனவே அதன் பெருமை காக்கப் பட்டாக வேண்டும்; கண்டனங் களிலிருந்து அது மீட்கப்பட்டாக வேண்டும்" என்ற தமிழுணர்வு பிடர் பிடித்து உந்த முஸ்லிமான செய்குதம்பிப் பாவலர் அருட்பாக் களம் புகுந்தார். அடுக்கடுக்கான ஆதாரங்கள் ; மிகமிகத் தெளிவான வாதங்கள் பாவலர் அவர்கள் வாயிலிருந்து கடல்மடை திறந்தாற் போன்று வெளிப் போந்தன. அருட்பா, அருட்பாவே என நிறுவப் பட்டது. யானை மீதமர்த்தி காஞ்சீபுரம் வீதிகளில் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டு பெரிய கோயிலில் பூரண கும்ப மரியாதையுடன் பாவலர் அவர்கள் வரவேற்கப்பட்டார். தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டம் சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

அருட்பாக் கட்சியில் பாவலர் அவர்களோடு தொழுவூர் வேலாயுத முதலியார், கோ. வடிவேலுச் செட்டியார், மறைமலை அடிகள் ஆகியோரும் மருட்பாக் கட்சியில் கதிர்வேல் பிள்ளை அவர்களோடு அவரது மாணாக்கரான திரு. வி. கலியாணசுந்தர முதலியார் மற்றும் சிலரும் சொற்போரில் ஈடுபட்டனர். அருட்பா ஆதரவாளர்கள் பாவலர் அவர்களை கதிர்வேல் பிள்ளைக்கு எதிர்வேல் பிள்ளை எனக் கூறி மதித்தனர்.

அருட்பாப் போரில் பாவலர் அவர்கள் ஆற்றிய உரைகள் அன்றைய புலவர் பெருமக்களை அவர்பால் மரியாதை கொள்ளச் செய்தன. அவருடனேயே காலமும் அமர்ந்து சொற்சுவை யுண்டு சுகித்திருந்த புலவர்களின் எண்ணிக்கை நாளும் பெருகியது.

முதுகுளத்தூரைச் சார்ந்த கலியாண சுந்தரம் பிள்ளை என்னும் புலவர் பெருமகன் பாவலர் அவர்களை சென்னையில் சந்திக்கிறார். இருவரும் அமர்ந்து இலக்கியச் சுவை மாந்திக் கொண்டிருந்த வேளையில் பிள்ளை அவர்கள் தமக்கு அவதானமும் செய்யத் தெரியும் என்ற உண்மையைப் பாவலர் அவர்களிடம் கூறுகின்றார். பாவலர் அவர்கள் அவதானம் பற்றிய பிள்ளை அவர்களின் பேச்சில் ஈடுபாடு கொண்டாரில்லை. பிள்ளை அவர்களோ தம்மால் அவதானம் செய்து காட்ட இயலும் என உறுதிபடக் கூறியதைத் தொடர்ந்து மறுநாள் அதைச் சோதித்துப் பார்த்து விடுவதென முடிவாகின்றது.

மறுநாள் குறித்த வேளையில் பிள்ளை அவர்களிடம் அவதானத் தில் ஓரம்சமான கண்டப் பத்திரிகை கொடுக்கத் தொடங்கினார்,

பாவலர். சற்றும் தயங்காமல், ஒவ்வோர் எழுத்தாகக் கூறக் கேட்ட பாவலர் அவர்களின் வெண்பாவை எழுத்துப் பிசகாமல் அப்படியே கூறி வெற்றி கண்டுவிட்ட பிள்ளை அவர்களை ஆரத் தழுவி அகமிக மகிழ்ந்து பாராட்டினார். அன்று தொட்டு பாவலர் அவர்களுக்கு அவதானக் கலையில் ஆர்வம் பிறந்தது; அது படிப்படியாக வளர்ந்தது; பயிற்சி மேற்கொண்டார்; முயற்சி முழுப்பலன் தந்தது.

தன்னைப் பெற்றாரை, உற்றாரை, அறிவொளி ஏற்றிய ஆசிரியப் பெம்மானைக் காண விரும்பிய பாவலர் அவர்கள் 1906–ஆம் ஆண்டு சொந்த ஊரான கோட்டாற்றுக்கு வருகின்றார். தங்கள் மகனின் வளர்ச்சி கண்டு மகிழ்ந்தனர் பெற்றோர். அறிவு முதிர்ச்சி நோக்கி வியந்தனர் மற்றோர். தன் மாணவன் சான்றோனாய் வந்து நின்ற காட்சியைக் கவினுறக் கண்டு கண்ணிரண்டும் பனிக்க மகிழ்ந்தார் சங்கர நாராயண அண்ணாவியார்.

பாவலர் அவர்கள் தமக்குக் கைவரப் பெற்றிருந்த அருங்கலை அவதானம் பற்றி அன்பர்களோடு அளவளாவினார். அதைக் கண்டு களிக்கக் கருதிய நண்பர்கள் அந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினர். கோட்டாற்றூரில் உள்ள தம் சீடர்களைக் காணவென கொச்சியிலிருந்து வந்திருந்த செய்யிது முகம்மது அபுபக்கருல் ஐதுரூஸ் தங்கள் எனப்படும் ஆற்றக் கோயா தங்கள் அவர்கள் தலைமையேற்க கோட்டாறு பொன் அரிப்புத் தெருவிலுள்ள மாலிக் தீனார் பள்ளியின் முன்னால் அமைக்கப்பட்டிருந்த அலங்காரப் பந்தலில் பதினாறு செயல்களைக் கொண்ட சோடசாவதானம் நிகழ்ச்சி தொடங்கியது.

நாஞ்சில் நாட்டின் நற்றமிழ்ப் புலவோர் என யார் யார் அன்றிருந்தனரோ அத்தனை பேரும் அவதான நிகழ்ச்சியில் பங்கு கொண்டனர். சங்கர நாராயண அண்ணாவியார், பாக்கியம் பண்டாரம், வேலாயுத முதலியார், மீனாட்சி நாயுடு, செய்யிது தாஹா சாகிப், குறுந்தெரு சங்கர நாராயணபிள்ளை, பெரும் புலவர் தாழக்குடி பிள்ளை போன்றோர் அன்றைய நிகழ்ச்சியில் கலந்து கொண் டோரில் குறிப்பிடத்தக்கோர்.

இலக்கியத்தில், இலக்கணத்தில், கணிதத்தில், சோதிடத்தில் இவையன்ன பிறவற்றில் பிறந்தெழுந்த வினாக்களின் இனந்தெரிந்து விடை பகர்ந்து வெற்றி வாகை சூடினார் பாவலர்.

அருங்கலை அவதானத்தைக் கண்டு மகிழும் வாய்ப்பினைப் பெற்றோர் தாம் பெற்ற பெரும் பேற்றைப் பெரிதுன்னி மகிழ்ந்தனர்; பாவலரை நெஞ்சாரப் புகழ்ந்தனர். பொன்னாடை போர்த்தியும், பூமாலை அணிவித்தும், பொற்கிளி வழங்கியும் பாராட்டிச் சிறப்பித் தனர். அன்பர்கள் அளித்த பரிசில்கள் அனைத்தையும் தம் அருகமர்ந்திருந்த—தம் அறிவுக் கண்களை அகலத் திறந்து விட்ட –

ஆசிரியப் பெம்மான் அண்ணாவியார் அவர்களின் தாளடியில் சமர்ப் பித்து தம் குருவின்மீது தாம் கொண்டிருந்த அளப்பரும் மரியாதை யையும் அன்பையும் வெளிப்படுத்தினார். அரைப் பணத்தோடு தம்மிடம் தமிழ் கற்க வந்து அஞ்சி அஞ்சி நின்ற அன்றைய செய்கு தம்பியை, பொன் குவித்து மரியாதை செய்யும் செய்குதம்பிப் பாவல னாகக் கண்ட அண்ணாவியார் அவர்கள் தமது தள்ளாத நிலையிலும் உள்ளமும் உடலும் நிமிர நின்று உச்சி மோந்து ஆசி கூறினார்.

பாவலர் அவர்கள் சென்னை திரும்பும் முன்னரே அவர் நிகழ்த்திக் காட்டிய அவதானம் பற்றிய சேதி சென்னையை எட்டிவிட்டது. அவரது வருகைக்காகவே காத்திருந்தவர்கள் போல சென்னையிலுள்ள அவரது அன்பர்களும் நண்பர்களும் அவதானம் கர்ண வேண்டு மென்ற தங்களின் வேணவாவினை வெளிப்படுத்தினர். பாவலர் அவர் களும் ஒப்புதல் தந்தார்.

துண்டுப் பிரசுரங்களும் சுவரொட்டிகளும் பத்திரிகைச் சேதி களுமாக சென்னை நகர் முழுவதுமே அவதானம் பற்றிய அறிவிப் புக்கள் அமர்க்களப்பட்டன.

1907-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ஆம் நாள் சென்னை விக்டோரியா நினைவு மண்டபத்தில் அவதான நிகழ்ச்சி நடைபெறும் என முடிவாயிற்று. இப்போது நடைபெற்றது நூறு செயல்களைக் கொண்ட சதாவதானம் ஆகும்.

வித்துவான் கண்ணபிரான் முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சதாவதான நிகழ்ச்சியில் காஞ்சி மகா வித்துவான் இராமசாமி நாயுடு, தஞ்சை சுப்பிரமணிய ஐயர், பச்சையப்பன் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் திருவேங்கடசாமி நாயுடு, புலவர் க. நமச்சிவாய முதலியார், 'இந்து', 'சுதேசமித்திரன்' ஆகிய நாளேடு களின் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், அக்காலையில் சட்டக் கல்லூரி மாணவராயிருந்த டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழறியாத ஒரு ஆங்கில நீதிபதி போன்றோர் கலந்து கொண்டிருந்தனர். மக்கள் கூட்டம் அலை மோதியது.

வினாத் தொடுத்தோர் விடுத்த கேள்விகள் அனைத்திற்கும் கண்டோர் வியக்க விடைகளைக் கூறித் தம் அரும்பெரும் நினை வாற்றலை, ஆழ்ந்தகன்ற புலமையை, இலக்கிய — இலக்கணத் திறமையை, கணித—சோதிட வன்மையை, ஐம்புலன்களையும் அடக்கி யாளும் தன்மையை எல்லாவற்றுக்கும் மேலாகத் தமக்கிருந்த இறை யருளின் மேன்மையைப் புலப்படுத்தினார். கண்டோர் மெய்சிலிர்த் தனர். பக்திநெறி நின்றோர் பலர் 'இத்தகைய அவதானத்தைச் செய்து முடித்த இவர் ஓர் அவதார புருடரே' என்றும் கூடக் கூறினர்.

புலனறிவிற்கு அப்பாற்பட்ட இந்தப் புதுமையைக் கண்ட வெள்ளை நீதிபதி வியப்பு மேலீட்டால் மிகமிகப் பாராட்டினார். விழாத் தலைவர், 'மகாமதி', 'சதாவதானி' என்ற பட்டங்களைச் சூட்ட 'செய்குதம்பிப் பாவலர் வாழ்க' எனக் கூடியிருந்தோர் எழுப்பிய ஒலி விண்ணை அதிரச் செய்தது.

பாவலர் அவர்கள் தமது முப்பத்து மூன்றாவது வயதில் பதினைந்தே வயதினரான முகம்மது பாத்திமா பீவியை மணம் முடித்துக் குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டார். நன்மக்கட் பேற்றினையும் பெற்றார்.

நூல் பல யாத்த பாவலர் அவர்கள் நூல் வியாபாரத்தில் ஈடுபட்டார். ஊரிலே அவர் தொடங்கிய நூல் கடையிலேயே நூல் வியாபாரத்தோடு நூல்கள் பற்றிய விரிவுரைகளும் நடந்தேறின. அங்கேயும் அவதானம் தான்!

தமிழ் கற்கவென தம்மை நாடி வந்த எவருக்கும் தடையேதும் கூறாது கற்பிக்கத் தொடங்கினார். நாஞ்சில் நாட்டில் பல்கிப் பெருகிய தமிழ்ப் புலவர்கள், வித்துவான்கள், ஒன்று பாவலர் அவர்களிடமோ அல்லது அவரது மாணாக்கரிடமோ பாடம் கேட்டவராகத்தான் இருக்க முடியும் என்ற அளவுக்கு தமிழ்ப் புலவர் பரம்பரையின் தந்தையாக – தாத்தாவாக – விளங்கினார்.

1930-ஆம் ஆண்டைத் தொடர்ந்து நாஞ்சில் வள நாட்டில் ஏற்பட்ட தேசிய விடுதலை உணர்வுத் தீக்கு எண்ணெய் வார்த்த பெருமை பாவலர் அவர்களையே சாரும் — காந்தீயம் பாவலர் அவர்களைக் கவர, காங்கிரஸ் பேரியக்கத்தின் கல் தூணாகத் தன்னை நிலை நிறுத்திக் கொண்டார். தீண்டாமை ஒழிப்பு, கதர்ப் பிரச்சாரம், தேச விடுதலை போன்ற இயக்கங்களில் டாக்டர் எம். இ. நாயுடு அவர்களின் தோளோடு தோள் துணை நின்றார். கதராடையைத் தவிர வேறாடையைக் கடைசி வரையிலும் அவர்கள் அணிந்ததே இல்லை.

பாவலர் போன்றோர் நட்ட விதை வேர் பாய்ச்சி முளை விட்டது. தேசம் விடுதலை பெற்றது சுதந்திர இந்தியாவைக் கண்டு விட்ட பின்னர் 1950-ஆம் ஆண்டு பிப்ருவரித் திங்கள் 13ஆம் நாள் பாவலர் அவர்கள் இறை நாட்டப்படி இவ்வுலக வாழ்வை நீத்தார்.

பாவலர் அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு தமிழகம் அழுதது.

அவர் போன்றோர் பிறக்க வேண்டும் என இறைவனைத் தொழுதது.

யாரையுமே காணாமல் இன்னமும் தொழுது கொண்டே இருக்கிறது!

★

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் புலவர்களி லொருவராகிய

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, கலைக்கடல்


அல்லாமா, டாக்டர், சதாவதானி

கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களது

70-வது ஆண்டு பிறந்த தின விழாவின்போது

நாஞ்சில் நாட்டு மக்கள் மனமுவந்து வாசித்தளித்த

இயன்மொழி வாழ்த்து



தமிழ் உலகப் பெருஞ்சேயே !

நீவிர் நாஞ்சில் நாட்டின் நடுநகரென நவிலப் பெறும் கோட்டாற்றில் தூய்மைசால் இஸ்லாமிய மரபில் செழுங்குடிப் பிறந்து இளமை தொட்டே தமிழ்த் தாயின் செம்மல ரடிகளில் அமைந்து தமிழர் சிறக்கவும் தமிழ்ப் பயிர் தழைக்கவும் அரிய செந்தமிழ்ப் பாக்கள் இயற்றும் வன்மை மிக்குற்றுப் பாவலரென நாமம்பெற்று இந் நாட்டிற்கு அணிகலனாய்த் திகழுமோர் அறிவுப் பண்ட சாலையாய் அமைந்து விளங்கும் மேன்மையை, உள்ளுந் தோறும் எங்கள் உள்ளம் களி பேருவகை அடைகின்றது; நினைக்கும் தோறும் நெஞ்சம் நெகிழ்கின்றது; மனம் மகிழ்கின்றது.

அறிவால் சிறந்த அருந்தவத்தோய் !

புலமையின் நறுமணம் நாடும் நகரமாம் மதுரையில் தமிழ்ச் சங்கத்தில் கலைப் பெருக்கும் கவிப்பெருக்கும் மேவிய புலவர் மக்களிடையே பல்லாண்டாகப் புகழ்பெறும் அங்கம் வகித்து அச்சங்கம் வாழ்விலும் வளத்திலும் வளர்ந்தோங்கச் செய்து வருவதை உன்னிய உள்ளம் யாண்டும் உவகையில் விஞ்சுகின்றது.

அரும்நூல் இயற்றும் ஆற்றல்சால் புலவ !

தமிழகம் தழைத்துய்யத் தாங்கள் இயற்றிய பல அந்தாதிகள், கோவைகள், இன்னிசைப் பாமாலைகள், மஞ்சரிகளாதிய தனிச் செய்யுட்களும் ஆழ்ந்த கருத்தினைத் தெரிக்கவல்ல வசன நூல்களும் முஸ்லிம் மதக் காப்பியமாகிய சீறாப் புராணம் போன்ற அரும்பெரும் நூல்களுக்களித்த அரிய உரைகளும் தமிழகத்துக் கீடுமிக்க பயனை அளிக்கத் தகுந்த பல்லாயிரக்கணக்கான சொற்கூட்டங்களைத் தொகுத்து விரித்த பேரகராதியும் மற்றும் கவிச் சிற்பம், புலமைத் திறன், கலை நுட்பம் வாய்ந்த பன்னூல் எங்களுக்கோர் அறிவுக் களஞ்சியமாய் நிற்கும் பெற்றியை யாங்கள் என்றும் மறப்பேமல்லேம்.

கொள்ளக் குறையாக் கல்விப் பெருங்கடலே !

கைம்மாறு கருதாமல், எவ்வகைப் பொருளினையும் எத்துணை நிலையினையும் மனக்கண் முன்னே தெளிவுறப் புலப்படுத்திச் சித்திரிக்கும் சிறப்பியல் வாய்ந்து, காலம், அளவு முதலிய வரை யறையின்றிச் செவிநுகர் கனிகளைச் சொரிந்து தரவல்ல கற்பகத் தருவாய் விளங்கும் தங்களிடத்தே அண்மிய மாணவர்கள் இந் நாஞ்சில் நாட்டில் நூற்றிற்கு ஐம்பதின் மேல் புலவர்களாகவும் பண்டிதர்களாகவும் அவதானிகளாகவும் சிறந்திலங்கக் கண்ட நாங்கள் உங்களைப் புகழாதிருத்தல் இயலுமோ ?

நுணுகிப் பரந்த மதிவீறுடையோய் !

சென்னை நகர் விக்டோரியா நினைவு மண்டபத்தில் 1907-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் அன்று பேரறிஞர் குழுமிய பெரும் பேரவையத்து தமிழ் மொழி தங்கள் தனியரசினுக்கு அடங்கி நின்று குற்றேவல் புரியும் தன்மை இலங்கப் பெற்று, ஏறுபோல் பீடுடன் இருந்து கண்டார் வியந்து களிக்க நூறு அவதானம் (சதாவதானம்) செய்து காட்டி வெற்றி பெற்ற தங்கள் அரிய ஆற்றலை யாருக்குத் தான் மறக்க இயலும் ?

அருள்வளம் அனைத்தும் வரையாது பெற்றோய் !

சென்னையில், வித்துவ ரத்தினமாகிய ஆறுமுக நாவலர் அவர்கள் காலமுதல் உயர்திரு. ந. கதிர்வேல் பிள்ளை அவர்கள் காலம் ஈறாக நடைபெற்ற அருள் பெரும் வள்ளல் இராமலிங்க அடிகளது திருவருட்பா மறுப்புப் போரில் இறுதியாகத் தாங்கள் முனைந்து, முடிந்த நூல்கள் முகமாகத் தங்களுக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லையெனக் காட்டி உயர்திரு கதிர்வேல் பிள்ளையோடு

அவர்களது தொண்டர்களை எதிர்த்துப் போராடி வென்று திருவருட்பா திருவருட்பாவே என்று உலகம் உவப்ப நிலைநாட்டி அப்போருக்கோர் முற்றுப் புள்ளியிட்டுக் கதிர்வேல் பிள்ளையின் எதிர்வேல் பிள்ளையெனப் பட்டமும் சூட்ட வாய்ந்த கூர்த்த மதியால் உதித்த ஆர்வத்தை வியந்த நாங்கள் இம்மாபெரும் செயலுக்கேற்ற கைம்மாறு செய்யும் வகை தெரியாது இன்னும் உழலுகின்றோம். தங்கள் அறிவே பேரறிவு! தங்கள் ஆற்றலே பேராற்றல்!


செந்தமிழுக்கோர் செழுஞ்சுடரே!

தங்களிடத்துக் கற்பான்வரும் மாணவர்கள் தங்களது அமிழ்தினும் இனிதினிக்கும் விரிவுரையின் ஏற்றத்தால் அவைகள் அவர்களது உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதியப் பெறும் தன்மையையும், பாங்கினும் பான்மையினும் சிறந்த தங்கள் சொற்பொழிவுகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் சொற்றிறனையும் நினைக்க நினைக்க எங்கள் உள்ளத்தை அவைகள் கொள்ளை கொள்ளுகின்றன. எங்கள் வாழ்நாளில் அவை என்றும் மறத்தற் குரியனவல்ல. தாங்கள் தமிழுலகம் என்றும் தழைத்துய்யுமாறு நீடிய வாயுளும் கூடிய செல்வமும் பெற்றுப் பல்லாண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

இங்ஙனம்,

நாகர்கோவில் — தங்கள்பால் அன்பும் கடமையும் பூண்ட,

23-12-1119 — நாஞ்சில் நாட்டார்



தலைசிறந்த மாமனிதர்

ஜஸ்டிஸ் மு.மு. இஸ்மாயில்

என்னுடைய நீண்ட கால மனக்குறைகளில் ஒன்று, நம்மிடையே வாழ்ந்திருந்த ஒரு மாபெரும் அறிஞரை சந்திக்க முடியாது போனது.

தமிழ்நாடு அரசின் சார்பில் ஒவ்வோராண்டும் நடத்தப் பெறும் மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களுடைய நினைவு விழா, 1979-ம் ஆண்டு நாகர்கோவிலில் நடைபெற்றபோது அதில் பங்கு கொள்ளும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அப்பொழுதுதான் பாவலர் அவர்களைப் பற்றி எழுத்தில் வெளிவந்திருந்த சில நூல்களையும் குறிப்புக்களையும் படித்தேன். அப்படிப் படித்தபொழுது தான் எவ்வளவு பெரிய மனிதரை நாம் நேரில் சந்திக்கத் தவறி விட்டோம் என்ற மனக்குறை ஆழமாக உள்ளத்தில் இடம் பெற்று விட்டது. இக்குறை மிகுதியானதற்கு இன்னொரு காரணம், பாவலர் அவர்கள் 1950-ம் ஆண்டு பெப்ருவரித் திங்கள் 13-ம் நாளில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொள்வதற்கும் முன்னரேயே அரசியல் வாழ்விலும் பொது வாழ்விலும் இலக்கிய உலகிலும் எனக்கும் ஒரு சிறு இடம் கிடைத்து விட்டிருந்தது. அப்படி இருந்தும் அரசியல் உலகில் எந்தப் பக்கம் நான் இருந்தேனோ, இலக்கிய உலகில் எந்தப் பாதையில் நான் போய்க் கொண்டிருந்தேனோ அதே பக்கத்தில் போயும் அதே பாதையில் சென்றும் பெரும் சாதனைகள் புரிந்து எல்லா மக்களுடையவும் பாராட்டுதலையும் மரியாதையையும் பெற்றி

ருந்த பாவலர் அவர்களை சந்திக்கவோ தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டத்தைப் பெற்றிருந்த அன்னாருடைய பேச்சைக் கேட்கவோ வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்பதாகும்.

அன்னாரைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு பின்னர் கிடைத்தது. அப்பொழுதுதான் பாவலர் அவர்களுடைய ஆச்சரியப் படத்தக்க தமிழார்வம், அறிவாற்றல், நாட்டுப் பற்று நினை வாற்றல், வாதத் திறமை முதலியவற்றின் காரணமாக சிறப்பும் சீரும் பெற்றிருந்த ஒரு பெருமனிதர் நம்முடைய காலத்திலேயே வாழ்ந்திருக்கிறார் என்பதை எண்ணி இறும்பூதும் பெருமையும் அடைந்தேன். அன்னார் காட்டிய திறமையும் அன்னாருடைய பரந்த உள்ளமும் எல்லோரையும் தன்பால் ஈர்க்கும் சக்தி பெற்ற சொல்லாற் றலும் இன்று எவ்வளவு அருமையாகி விட்டன என்பது பற்றி வருத்தமும் ஒருங்கே தோன்றியது.

எந்தவிதமான வசதியும் உதவியும் இல்லாமல் தமிழ்மீது தமக் கிருந்த ஆவலின் காரணமாக திரு. சங்கர நாராயண உபாத்தியா யரிடம் சென்று பழைய கால முறைப்படி தமிழில் இருந்த பெரும் பாலான இலக்கிய இலக்கணங்களை முழுமையாகக் கற்று அவை அனைத்தையும் நினைவிலே இருத்திக் கொள்ளும் திறமையைக் கொண்டு தன்னைச் சூழ்ந்திருக்கும் பிறருக்கு ஓர் தமிழ்க் களஞ்சிய மாகவே விளங்கிய பெருமை பாவலர் அவர்களைச் சாரும்.

மகாமதி, சதாவதானி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டங்களை யெல்லாம் அவர்களுக்கு யார், எப்பொழுது வழங்கி னார்கள் என்பதைத் தெரிந்து கொள்வோமே யானால் அவர் களுடைய தனிப் பெருமை தெற்றெனத் துலங்கும். எந்தவொரு தனிப்பட்ட மனிதருடைய ஆதரவிலோ செல்வாக்கின் காரண மாகவோ இயங்கும் ஒரு சங்கத்தாலோ அல்லது அமைப்பாலோ கொடுக்கப்பட்டவையன்று, அவை. அன்னாருடைய பிரசங்கத்தைக் கேட்டவர்களும் அன்னார் செய்து காட்டிய சதாவதானத்தைக் கண்டு கேட்டவர்களும் அவரோடு உரையாடும்போது அவரிடமிருந்து தங்கு தடையின்றி வெளியான இலக்கிய, இலக்கண வாத நுட்பங்களை உணர்ந்தவர்களும் தங்கள் அறிவிலும் உள்ளத்திலும் உண்டான கட்டுக்கடங்காத மகிழ்ச்சியாலும் வியப்பினாலும் இயற்கையாகவே அளித்த பட்டங்கள் இவை. இந்த மூன்று பட்டங்களையும் அறிவு நிறைந்த மக்களால் எத்தனையோ சோதனைக்கும் அனுபவத்திற்கும் பிறகு ஒருவர் பெற்றிருக்க வேண்டுமானால் அத்தகையவருடைய ஆற்றலையும் மாண்பினையும் விளக்குவதைவிட உணர்த்து கொள் வதுதான் எளிதாகும். அத்தகைய உணர்வு அவர் வாழ்க்கை நிகழ்ச்சிகளைத் தெரிந்து கொள்வதனால்தான் உண்டாகும்.

பாவலர் அவர்களுடைய வாழ்க்கையின் அணுகு முறையை செம்மையாகத் தெரிந்து கொள்வதற்கு ஒரே உதாரணம் போதுமான தாகும். திரு. இராமலிங்க வள்ளலார் அவர்களுடைய அருட்பாவை ஹிந்துக்களாகிய மிகப் பெரும் அறிஞர்கள், 'அது அருட்பா அன்று; மருட்பாவே' என்று குறிப்பிட்டு அதை நிரூபிக்கவும் முயன்றார்கள். அத்தகையவர்களில் இருவரின் பெயர்களைச் சொன்னாலே அந்த வாதம் எத்தகைய வலுவுடையதாக இருந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். கதிர்வேலுப் பிள்ளை, அவருடைய மாணாக்கர் திரு. வி. க. ஆகிய இரு பெயர்களும்தான் அவை. ஆனால் 'அது மருட்பா அன்று; அருட்பாதான்' என்பதை நிரூபித்து தமிழ் மக்களின் ஒப்புதலைப் பெற்ற அறிஞர்களிடையே தலையாக நின்றவர் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் என்பதுதான் அந்த உதாரணம்.

இந்த உதாரணம் எந்த அணுகு முறையைக் காட்டுகிறது என்ற கேள்வி இயற்கையாகவே தோன்றும். காரணம், வள்ளலார் பொதுவாக ஒரு ஹிந்து. அவருடைய அருட்பாக்களில் ஹிந்து மதத்தின் புராணக் கதைகளை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களும் இடம் பெற்றிருக்கின்றன. அப்படி இருக்கும் பொழுது "அது அருட்பா அன்று; மருட்பாவே" என்று ஹிந்து தமிழறிஞர்களே வாதிடும் போது ஹிந்துவல்லாத சாதாரண எந்த மனிதனுக்கும் "அவர்களிடையே இரு கட்சி; அவர்களே பேசித் தீர்த்துக் கொள்ளட்டுமே" என்று எண்ணி ஒதுங்கி இருக்கத்தான் தோன்றும். ஆனால் பாவலர் அவர்கள் அப்படி ஒதுங்காது இருந்ததோடல்லாமல் அதனை அருட்பாதான் என்று உறுதிப்படுத்தும் கூட்டத்தாரின் தலையாயவராக இருந்து தன்னுடைய கருத்தை நிறுவி அதனைப் பெரும்பாலான தமிழறிஞர்கள்—அவர்கள் நிச்சயமாக ஹிந்து தமிழறிஞர்களாகத்தான் இருந்திருக்க முடியும்—ஏற்றுக் கொள்ளும்படி செய்தார்கள் என்றால் அதற்கு எது தூண்டுதலாக இருந்திருக்க முடியும் என்பதைப் பார்க்க வேண்டும்.

முதலாவதாக, ஒன்றை யார் சொல்லியிருந்தாலும், எம்மதத்தினரா யிருந்தாலும் எந்நாட்டவரா யிருந்தாலும் அவர் பேசுவதிலோ எழுதுவதிலோ உண்மையோ சத்தியமோ இருக்கிறதா என்பதைத் தேர்ந்து பார்க்க முயல்வது. இரண்டாவதாக, அந்த முயற்சியின் காரணமாக அதில் உண்மையோ சத்தியமோ இருக்கிறது என்ற முடிவுக்கு வந்துவிட்டால் அதைப் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதில் எந்தக் காரணத்தைக் கொண்டும் அச்சமோ தயக்கமோ கொள்ளாமல் தன் மனம் உண்மை, சத்தியம் என்று தனக்கு உணர்த்துவதை துணிச்சலாகப் பிறரிடையே எடுத்துச் சொல்வது. மூன்றாவதாக, இந்த முயற்சியில் எதையும் எதிர்பார்க்காமல் தனக்கு

உண்மை, சத்தியம் என்று தோன்றியதை உலகுக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஒரே நன்னோக்கோடு இறங்குவது. நான்காவதாக —இது முந்தைய மூன்றினுடைய விளைவாக வருவது—அத்தகைய சுயநலமின்றி, எதிர்பார்ப்பின்றி தான் சந்தேகத்திற்கு இடமின்றி உண்மை என்று உணருவதை பிறருக்கும் உணர்த்த வேண்டுமென்ற நோக்கத்தோடு ஈடுபடும் எந்த முயற்சியிலும் இறைவனுடைய அருளே வெற்றியைத் தரும் என்பதாகும்.

இந்த அம்சங்களை பாவலர் அவர்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் காணமுடிகிறது. பிரிட்டிஷ் இந்தியா எனச் சொல்லப்படும், அப்பொழுது நேரடியாக ஆங்கில ஆதிபத்தியத்தின் கீழிருந்த இந்தியப் பகுதிகளில் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்த பொழுது அதில் ஈடுபட்டதோடல்லாமல் இந்திய சமஸ்தானாதிபதிகளின் பிரஜைகளுக்கும் அந்த சுதந்திரத்தின் பலன் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்தால் தான்பிறந்து வாழ்ந்த பகுதி திருவாங்கூர் மன்னராட்சி நிலப் பரப்பின் பகுதியாக இருந்த காரணத்தினால் அந்த சமஸ்தானத்தில் பிரஜைகளின் சுதந்திர இயக்கத்தில் பாவலர் அவர்கள் முனைந்து நின்றதும் இதையே காட்டும்.

இவ்வாறு தமிழ் இலக்கியங்களில் முழுமையான ஈடுபாடு உடையவர்களுக்கு ஒரு சங்கடம் ஏற்படுவது புதியதல்ல. பழந்தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் ஹிந்துக்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகியவர்களால் இயற்றப் பெற்றவை. சமணமும் பௌத்தமும் இந்நாட்டில் தோன்றிய மதங்களே. எனவே அவற்றிலும் அவற்றைப் பின்பற்றுபவர்களால் படைக்கப் பெற்ற இலக்கியங்களிலும் ஹிந்து மத சாயலும் சார்பும் இடம் பெறுவது இயற்கையே யாகும். இதற்கு மாறாக கிறித்தவமும் இஸ்லாமும் இந்த நாட்டில் தோன்றிய மதங்கள் அல்ல. ஆனால் இந்த நாட்டில் தோன்றியவர்கள் பலரால் அவை ஏற்றுக் கொள்ளப் பெற்றுப் பின்பற்றப் பெற்றன. அத்தகையவர்கள் சமயத்தால் வேறுபட்டிருப்பினும் பேசும் — பழகும் மொழியினால் பிறரோடு ஒன்றியவர்களாக இருப்பதும் இயற்கையே. இந்தச் சூழலில் கிறித்தவர்களும் முஸ்லிம்களும் படைக்கும் இலக்கியப் படைப்புக்களில் அவர்களுடைய சமயங்களின் அடிப்படைக் கொள்கைகள் அழுத்தமாக இடம் பெற்றிருப்பினும் பிற சமயத்தினர் படைத்திருந்த இலக்கியங்களின் தாக்கம் அவற்றில் இடம் பெறாமல் இருக்க முடியாது. இந்த உண்மையை உணர்ந்து கொள்வதற்குத் தேவையான பொதுவான கல்வியறிவோ வரலாற்றுப் பின்னணியோ சமய ஞானமோ இல்லாதவர்கள், அத்தகைய இலக்கியங்களையும் அவற்றைப் படைத்தவர்களையும் ஏதோ அவர்களுடைய சமயத்திற்கு ஒவ்வாத தவற்றினை இழைத்து விட்டதாகக் குறை கூறுவதும் உண்டு. இது இன்று

நேற்று ஏற்பட்டதல்ல. சீறாப் புராணம் பாடிய உமறுப் புலவர் அவர்களுடைய தோற்றத்தையும் உடையையும் கண்டு அவர் நபிகள் பெருமானார் அவர்களுடைய வரலாற்றைப் பாடுவதற்குத் தகுதியற்றவர் என்று மற்றவர்கள் கருதினார்கள் என்ற சம்பவமும் நமக்குத் தெரியும். அதற்குப் பின்னால் செய்குதம்பிப் பாவலர் அவர்களும் தம்முடைய தோற்றத்தினாலும், தாம் ஈடுபட்டிருந்த இயக்கத்தின் முறைப்படியும் மரபுப்படியும் அணிந்திருந்த ஆடையினாலும், தமிழிலிருந்த பிற சமயத்தவர்கள் படைத்திருந்த இலக்கியங்கள் பலவற்றை ஆழ்ந்தும் ஊன்றியும் கற்றிருந்ததன் காரணமாக அவற்றின் தாக்கம் அவருடைய எழுத்திலும் பேச்சிலும் இடம் பெற்றிருந்ததாலும், அவருடைய மாணாக்கர்களும் அவரைப் பாராட்டியவர்களும் பெருமளவில் ஹிந்துக்களாகவே இருந்ததாலும் அவருக்கும் ஓரளவு இந்த நிலை ஏற்பட்டதில் ஆச்சரியப்படுவதற்கு இடமில்லை. அத்தகைய நிலை இன்றும் சிலருக்கு இருப்பதும் அனைவரும் அறிந்ததே.

ஆனால் பாவலர் அவர்களின் இந்த நிலை அவருடைய பரந்த உள்ளத்தைத் திறந்து காட்டுவதோடல்லாமல் அவருடைய சமயப் பற்றையும் பிற மதத்தினருடைய உளங்கோணாமல் நடந்து கொள்ளும் தன்மையையும் காட்டுகிறது.

பாவலர் அவர்கள் பிற மதத்தைச் சார்ந்தவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வேண்டியோரின் உளநிலையில் நின்று அவர்கள் விரும்பியபடி பாடல்களைப் படைத்திருக்கிறார். அத்தகைய பாடல்களில் ஒன்று,

"உருமகளை அயன்நாவில் உறைமகளைப்
 பொறைமகளை உலகுக் கெல்லாம்
குருமகளை அன்பர்புகழ்க் குலமகளை
 மலர்மகளைக் குறைதீர் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்கும்
 கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒருமகளை எனக்கருள வருமகளைப்
 பெருமகளை உன்னல் செய்வாம்"

என்பதாகும். இந்தப் பாடல் பாவலர் அவர்கள் சென்னை அச்சகத்தில் பணியாற்றி வந்தபோது ஓர் நவராத்திரி விழாக் காலத்தில் அந்த அச்சகத்தின் உரிமையாளர் இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கப் பாடப் பெற்றது. இந்தப் பாடல் அன்னாருடைய விழாவுக்குப் பொருத்தமாக சரஸ்வதி துதியாக அமைந்திருக்கிறது.

இந்தப் பாடலின் மூன்றாவது அடியில் சரஸ்வதி திருமகளின் மருமகள் என்று குறிப்பிடப்படுகிறது. ஹிந்துக்களின் சமய நம்பிக்கைப்படியும் புராணக் கதைகளின் படியும் திருமகள் அதாவது இலக்குமி திருமாலின் துணைவி; அது போன்றே சரஸ்வதியும் பிரம்மாவின் மனைவி. பிரம்மாவோ திருமாலின் உந்தியிலிருந்து பிறந்ததால் திருமாலின் மகன் ஆகிறார். எனவே அந்த மகனுடைய மனைவியாகிய சரஸ்வதி, திருமாலின் மனைவியாகிய இலக்குமிக்கு மருமகள் ஆகிறாள்.

முஸ்லிம்களின் நம்பிக்கையின்படி திருமால், பிரம்மன், இலக்குமி, சரஸ்வதி என்ற ஆண்பாற் கடவுளருக்கோ அல்லது பெண்பாற் கடவுளருக்கோ இடமில்லை. எனினும் ஒரு முஸ்லிமாகிய பாவலர் அவர்களுடைய பாடலில் இவை இடம் பெறுவதற்குக் காரணம் என்ன என்றால் இதை எழுதிக் கேட்டவர், ஒரு ஹிந்து; அவர் இவற்றையெல்லாம் நம்புபவர்; அவர் சரஸ்வதியைத் துதிப்பதற்காக நவராத்திரி விழாவின்போது ஒரு பாடல் பாடித் தருமாறு பாவலர் அவர்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். எனவே அவருடைய வேண்டுகோளின் படி பாடப்படுகின்ற ஒரு துதிப் பாடல், அவருடைய நம்பிக்கையையும் உள நிலையையும் எதிரொலிப்பதாகத்தான் இருக்கவேண்டும்; இல்லாவிட்டால் பாடிக் கொடுக்க மறுத்திருக்க வேண்டும். பாவலர் அவர்களின் பெருந்தன்மையும் தாராளப் பண்பும் அப்படி மறுக்க அவருக்கு இடமளிக்கவில்லை. எனவே வேண்டிக் கொண்டவரின் உள நிலையில் நின்று இப்பாடலைப் பாடிக் கொடுத்துள்ளார்.

இதனைப் பாடிக் கொடுத்ததில் தம்முடைய சமயக் கொள்கைக்கு ஊறுசெய்து விட்டார் என்று கூறுவதற்கு பதிலாக அவருடைய பரந்த மனப்பான்மையையும் சமய சகிப்புத் தன்மையையுமே போற்ற வேண்டும். பிறர் மனத்தையும் மகிழ்வித்து தம் கொள்கைக்கு ஊறு வராமலும் நடந்து கொண்ட பெருஞ்செயலன்றி குறை கூறுவதற்குரிய செயலென்று இதனைக் கூறிவிட முடியாது.

அப்படி தம்முடைய சமயமாகிய சுத்த இஸ்லாத்திற்கு மாறுபடாமலேயே பிறருடைய வேண்டுகோளுக்கிணங்க அவர் இப்படிச் செய்தார் என்பதற்கு அவருடைய வேறு பாடல்களும் பேச்சுக்களுமே சான்றாகும். ஒரு மனிதனை எடை போடுவதற்கு அவனை முழுமையாக நோக்க வேண்டுமேயன்றி அவனைக் கூறுபடுத்தி ஒவ்வொரு கூறையும் தனியாக எடை போட்டு அதன் அடிப்படையில் அவனை முழுமையாக எடை போட்டுவிட முடியாது.

இந்தப் பாடலைப் பாடிக்கொடுத்த பாவலர் அவர்கள், எல்லோருடையவும் பாராட்டுதலையும் பெற்ற தம்முடைய சதாவதானத்தைச்

செய்வதற்காக மேடை மேல் தோன்றியபோது அவர்களின் நா, சிலேடைப் பொருள் கொண்ட 'மெஞ்ஞான நாதா' என்ற சொற்களைத் தொடர்ந்து உச்சரித்துக் கொண்டிருக்க இலாட சங்கிலியுடன் உலவிக் கொண்டிருந்தார். இந்தச் சொற்றொடருக்கு மெஞ்ஞான நாதா! என்று விளியாகப் பொருள் கொள்ள முடியும். அதே சமயத்தில் மெஞ்ஞான – நா – தா என்று வேண்டுதலாகவும் பொருள் கொள்ள முடியும். விளிப்பொருளில் மெஞ்ஞான நாதா என்ற சொற்றொடரில் பாவலர் அவர்கள் ஹசரத் ஞானியார் சாஹிப் அவர்களின் வழிவந்த ஆமினா அம்மையாரின் மகவாகத் தோன்றியதனால் அந்த ஞானியார் அவர்களையே பாவலர் அவர்கள் குருவாகக் கொண்டிருந்தார் என்றும் எனவே அச்சொற்றொடர் அந்த ஹஸரத் ஞானியார் சாஹிப் அவர்களையே குறிக்கிறது என்றும் பெரும்பாலும் பொருள் கொள்வர். ஆனால் இஸ்லாத்தையும் அதன் போதனைகளையும் நன்கறிந்திருந்த பாவலர் அவர்கள் இந்தப் பொருளில் அச்சொற்றொடரை ஆண்டிருப்பார் என்று நான் கருதவில்லை.

படைப்பனைத்திற்கும் காரணமான இறைவனே தன் படைப்புகளை போஷிக்கும், காக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பதோடு அந்தப் படைப்புகளுடைய தேவை அனைத்தையும் பூர்த்தி செய்யும் பொறுப்பையும் அவன் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறான்; காரணம் அதற்குரிய தகுதி உடையவன் அவன் ஒருவனே. இதில் ஒரு மனிதனுடைய திறமை, ஆற்றல், அறிவு, ஞானம் அனைத்தும் அடங்கும். இறைவனுடைய அருளன்றி எந்த மனிதனும் எந்த அறிவையும் பெற முடியாது. அறிவையே பெற முடியாது எனும் போது ஞானத்தைப் பற்றிச் சொல்லத் தேவை இல்லை. இதுவன்றியும் திருமறையின் முதல் அத்தியாயமாகிய 'சூரத்துல் ஃபாத்திஹா' வில், 'உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம்' (திருகுர்ஆன் 1:4) என்று இடம் பெற்றிருப்பதை ஒவ்வொரு நாளும் தொழுகையின் போது பன்முறை திருப்பித் திருப்பிச் சொல்வதோடன்றி அந்த வசனங்களில் பரிபூரண நம்பிக்கை கொண்ட எந்த முஸ்லிமும் தன்னுடைய தேவையை வேறு யாரிடமும் — இஸ்லாத்திலேயே எவ்வளவு சிறந்தவராக இருந்தாலும்—கேட்கமாட்டான். இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்கு இன்னொன்றும் உதவுகிறது. நாதன் என்ற சொல்லுக்கே தலைவன், இறைவன் என்றுதான் பொருள். மெஞ்ஞானத்தினுடைய நாதனாக — அதாவது தலைவனாக — இருப்பது இறைவனாகிய அல்லாஹ்வைத் தவிர வேறு யாராகவும் இருக்க முடியாது. அப்படி வேறு யாரையும் மெஞ்ஞான நாதா என்று குறிப்பிடுவதோ விளிப்பதோ இஸ்லாத்தின் அடிப்படைக்குக் குறைபாடு உடையது என்றுகூடச் சொல்ல முடியும்.

எந்தக் காரியத்தைத் தொடங்கினாலும் 'பிஸ்மில்லா' என்று இறைநாமத்தின் துணைகொண்டு தொடங்குவதாக 'நிய்யத்' என்னும் உறுதியோடு ஒவ்வொரு முஸ்லிமும் தொடங்க வேண்டும் என்றிருக்க, மாபெரும் சோதனையான சதாவதானம் வெற்றி பெறுவதற்குப் பொருத்தமான சொற்றொடரால் அல்லாஹ்வை விளித்து அவன் பேரிலேயே நம்பிக்கை வைத்து தன் கடின சோதனையைத் தொடங்கினார் என்பதுதான் பொருத்தமுடையதும் பெருமை சேர்ப்பதும் ஆகும்.

இது ஏதோ வலிந்து பொருள் கொள்வது ஆகாது என்பதை பாவலர் அவர்களுடைய பிற படைப்புக்களிலிருந்தும் உணரலாம்.

நபிகள் நாயக மான்மிய மஞ்சரியைப் பாடத் தொடங்கிய பாவலர் அவர்கள்,

"வையமெலாம் வாழ்த்தெடுப்ப வந்தநபி நாயகத்தின்
துய்யசெழு மான்மியநான் சொல்லுதற்கே—ஐயமறக்
கூறாதோ வான்கருணைக் கூர்ந்துவந்து வாய்மைநலந்
தாராதோ எம்மிறையோன் சார்பு."

என்ற பாடலையே தம்முடைய காப்புச் செய்யுளாக அமைக்கிறார். அப்படி அமைப்பதோடல்லாமல் அல்லாஹ்வின் தன்மையை,

"யோகமன்று ஞானமன்று யூகமன்று மோனமன்று
தேகமன்று நாமமன்று சித்தமன்று சத்தமன்று
போகமன்று சுத்தபரி பூரணத்திற் பூரணமா
ஆகநின்ற ஏகம்..."

என்றும்

"வானுமில்லை நீருமில்லை வாயுமில்லை தேயுமில்லை
நானுமில்லை நீயுமில்லை நாளுமில்லை கோளுமில்லை
பானுமில்லை மீனுமில்லை பாரமதி யோடுவெளி
தானுமில்லை ஏகம்..."

என்றும்,

"விண்ணுமில்லை மண்ணுமில்லை மேலுமில்லை கீழுமில்லை
பெண்ணுமில்லை ஆணுமில்லை பேடுமில்லை மூடுமில்லை
தண்ணுமில்லை சூடுமில்லை சார்ந்தகர ணாதிகளின்
கண்ணுமில்லை ஏகம்..."

என்றும் பாடுவது கூர்ந்து நோக்கத் தக்கது. இதுவன்றியும் நபிகள் பெருமானார் அவர்களைக் குறிப்பிடும்போது கூட,

சுத்தபர வெட்டவெளி தோன்றுபொரு ளத்தனைக்கும்
ஒத்தமுதற் காரணமாய் ஓங்குமொளி தாங்கியுறு
வித்தரிய மக்கநகர் வீற்றிருந்து மாற்றமற
இத்தரையில் பெற்றபுகழ் ஏத்தற் கெளிதேயோ
இன்பநபி நாயகமே ஏத்தற் கெளிதேயோ"

என்றும்,

"ஒன்றுதெய்வம் ஒன்றுமதம் ஒன்று மக்கள் சாதியென
நன்றுபெற வோதியவை நாட்டிநவின் நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தருளிக் கூர்த்தநெறி
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ"

என்றும் குறிப்பிடுகின்றார்.

இவையன்றியும் இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்றாகிய நோன்பைப் பற்றி 'நோன்பை மறவாதே' என்ற தலைப்பில் "நோன்பை மறவாதே நெஞ்சே நீ நோன்பை மறவாதே" எனத் தொடங்கி ஏழு பாடல்கள் பாடியிருக்கிறார்.

இவற்றையெல்லாம் ஒருங்கே சேர்த்துத்தான் பாவலர் என்ற மனிதருடைய ஆளுமையை (*Personality*) நிதானிக்க வேண்டும். அப்படி நிதானிக்கும் பொழுது சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள்,

ஒரு சிறந்த முஸ்லிம்
ஆழ்ந்த தமிழ்ப் புலமை வாய்ந்தவர்
பிரமிக்கத் தக்க சொல் வன்மை உள்ளவர்
ஆச்சரியப் படத்தக்க நினைவாற்றல் படைத்தவர்
பலருக்கும் உதவும் பண்பு நிறைந்தவர்
எல்லோரையும் அரவணைத்துச் செல்பவர்
நன்மைகளையும் சாதனைகளையும் தாராளமாகப்
போற்றி உற்சாகப் படுத்துபவர்
தீமைகளையும் குறைபாடுகளையும் பொருத்தமாக
எடுத்துக் காட்டி அவற்றை நீக்க முயல்பவர்
எத்துறையில் பார்க்கினும் ஒரு தலைசிறந்த மாமனிதர்!

ஒப்பற்ற பாவலர்

சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம்

தமிழ் மொழியை வளர்த்த வரலாற்றில் இஸ்லாமியப் புலவர் பெருமக்களுக்கு சிறப்பான இடமுண்டு. அவர்கள் சிலர் அல்லர்; பலராவர். அந்தப் பலரிலே ஒருவர் - அதாவது, ஒப்பற்றவர் செய்கு தம்பிப் பாவலர்.

இவர், கேரள மன்னராட்சி நடந்த திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் "நாஞ்சில் நாடு" எனப்படும் பகுதியில் நாகர்கோயிலை அடுத்துள்ள 'இளங்கடை' என்னும் சிற்றூரில் பிறந்தவர். இவரைத் தந்த நாஞ்சில் நாடானது, பிற்காலத்தில் — அதாவது 1956 நவம்பர் 1-ல் பெரிய தமிழகத்தோடு இணைக்கப்பட்டது யாவரும் அறிந்ததே.

நாஞ்சில் நாடு மலையாள மொழியினரின் செல்வாக்கில் சிக்கியிருந்த காலத்திலும், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, செய்கு தம்பிப் பாவலர் போன்ற கவிஞர்களைத் தந்தது. நாடகச் சக்ரவர்த்தியெனத் திகழ்ந்த ஔவை சண்முகம் உள்ளிட்ட டி.கே.எஸ். சகோதரர் நால்வரைத் தந்த பெருமையும் நாஞ்சில் நாட்டிற்கு உண்டு. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனும் பாவலர் பிறந்த பிரதேசத்தவர்தான்.

பாவலர் பெருமான் 1874-ல் பிறந்தார். ஆம்; மகாகவி பாரதியாருக்குப் பத்தாண்டுகள் முற்பட்டவர். அந்தத் தேசீய மகாகவி மறைந்த பின்னும் முப்பதாண்டுக் காலம் வாழ்ந்திருக்கும் பேறு பெற்றவர்.

இஸ்லாமியரான செய்குதம்பிப் பாவலர் சங்கர நாராயணன் என்னும் இந்து சமயப் புலவரிடமே தமிழ் பயின்றார். இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலத்தில் தோன்றிய சமயங் கடந்த சமுதாய

இலக்கியங்களைப் பயின்றதோடு, அவற்றை அடுத்துத் தோன்றிய சமய வழிப்பட்ட ஐம்பெரும் காப்பியங்களையும் செய்குதம்பிப் பாவலர் பழுதறப் பயின்றார்.

மற்றும் சைவ, வைணவ பக்திப் பாடல்களையும் பயின்றார்.

தாம் பெற்ற புலமையைக் கொண்டு சம்சுத்தாசீன் கோவை, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, திருநாகூர்த் திரிபந்தாதி போன்ற இஸ்லாமிய சமய இலக்கியங்களைக் கவிதை நடையில் படைத்து தமிழகத்திலுள்ள இஸ்லாமியரிடையே சமய உணர்வோடு சேர்த்துத் தமிழ்ப் பற்றையும் வளர்த்தார்.

பதினாறாம் வயதிலேயே கவிதை புனையும் திறன் இவருக்கு வந்துவிட்டது. அதன்பின் தாம் வாழ்ந்த அறுபதாண்டுக் காலத்திலே நாடு சுற்றி இலக்கியப் பிரசாத்திலும் ஈடுபட்டார்.

தம்பரம் இராமலிங்க சுவாமிகள் புனைந்த ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளைக் கொண்ட "திருவருட்பா" என்னும் கவிதைத் தொகுப்பான ஆறு திருமுறைகளையும் நன்கு பயின்று, நெஞ்சில் வைத்துப் போற்றினார்.

இராமலிங்க சுவாமிகளின் "எம்மதமும் சம்மதம்" என்னும் கோஷம் பாவலர் பெருமானைக் கவர்ந்தது. சமய ஒருமைப் பாட்டை விரும்பாத வைதீக சைவப் புலவர்கள் அருட்பாவுக்கு எதிர்ப்புக் காட்டி ஓர் இயக்கத்தையே தோற்றுவித்தனர்.

இராமலிங்கம் பிள்ளையின் பாடல்களை "திரு அருட்பா" என்னும் பெயரில் தொகுத்தது குற்றம் என்று கூறி கடலூர், மஞ்சக்குப்பம் நீதி மன்றத்திலே வழக்கும் தொடுத்தனர். அவர்களுடைய எதிர்ப்புக்கு எதிர்ப்புக் காட்ட சமய சமரச உணர்வுடைய புலவர் சிலர் திரண்டனர். அவர்களிலே இஸ்லாமியப் புலவரான செய்குதம்பிப் பாவலர் முக்கியமானவர் ஆவார்.

திருவருட்பா எதிர்ப்பு இயக்கத்திற்கு தலைமை தாங்கியவர் பெரும் புலமை பெற்ற யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆவார். அதனால், "நாவலருக்கு மறுப்புக் கொடுக்க இதோ ஒரு பாவலர் இருக்கிறேன்" என்று வீறு பேசி வெளிக் கிளம்பினார், செய்குதம்பிப் பாவலர். அக்காலத்தில் பாவலர் சென்னை நகரத்தில் தங்கி வாழ்ந்தாராதலால், நகரத்தின் பல பகுதிகளில் திருவருட்பாவுக்கு ஆதரவாக நடந்த பிரச்சாரக் கூட்டங்களிலே பங்கு கொண்டு பேசினார்.

சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடைய மறைமலையடிகளாரும் இஸ்லாத்தில் தோய்ந்த பற்றுடைய செய்குதம்பிப் பாவலரும் "இரட்டையர்" என்று சொல்லத்தக்க வகையிலே. தோளோடு தோள் சேர்த்து இராமலிங்க சுவாமிகளின் அருமை பெருமைகளை தமிழ் மக்களுக்கு எடுத்துக் கூறினர்.

செய்குதம்பிப் பாவலர், பெருங் கவிஞர் உமறுப் புலவர் யாத்தளித்த "சீறாப் புராணம்" என்னும் காப்பியத்தைப் பிழையறப் பதிப்பித்துக் கொடுத்தார். அந்த மாகாப்பியத்திற்கு உரையும் எழுதினார்.

பாவலர் சென்னை விக்டோரியா மண்டபத்தில் அறிஞர் பலர் கூடியிருந்த அவையிலே சதாவதானம் செய்து காட்டி, "சதாவதானி" என்னும் பட்டத்தையும் பெற்றார்.

தம் இறுதிக் காலத்திலே நாஞ்சில் நாட்டிற்குச் சென்று, அங்கேயே தங்கினார். தாம் வாழ்ந்த காலத்திலே இஸ்லாமியரும் இந்துக்களுமான பலருக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிற்றுவித்தார்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் நால்ரைக் கோடி தமிழ் மக்களும் பாராட்டத் தக்க உண்மைத் தமிழராவார். இஸ்லாமியர் என்னும் சமய உணர்ச்சிக்குப் பங்கமின்றி, 'தமிழர்' என்னும் இன உணர்ச்சியையும் பெற்றிருந்தார், பாவலர். அவரது புகழ் இன்பத் தமிழேபோல இறவா வரம் பெற்று என்றென்றும் நிலைத்திருக்கும்.

வாழ்க சதாவதானி செய்குதம்பிப் பாவலர் புகழ் !

பாவலர் ஒரு நாவலர்!

டாக்டர் ஏ.என். பெருமாள்

பாவலர் தெங்கம்புதூரில் இன்று மாலை பேசுகிறார் என்ற அரிய செய்தி சுமார் ஐம்பது சிற்றூர்களில் பெரிய ஆர்வத்தைக் கிளப்பியது. அப்பொழுது பத்து வயது சிறுவனாக இருந்தேன். யார் இந்தப் பாவலர் என்ற வினாவை எழுப்ப முடியாத சிறுவன். ஆனால் மக்களிடம் காணப்பட்ட பரபரப்பான ஆர்வம் என் ஆவலைக் கிளர்ந்தெழச் செய்தது. ஒரு திருவிழாவுக்குச் செல்லத் துடிக்கும் ஆவலில் பலர் தெங்கம்புதூருக்குச் செல்லப் புறப்பட்டார்கள். என் தந்தையாரும் அவர்களில் ஒருவர். என்னையும் உடன் அழைத்துச் செல்ல மாட்டார்களா என்ற மிகப் பெரும் ஆவல் என்னுள்ளே எழுந்தது.

நாலைந்து பேர் வீட்டுக்கு வந்தார்கள். அனைவரும் என் தந்தையாருடன் பாவலரைப் பார்க்கப் போக வேண்டும் என்ற விருப்பத்தில் வந்தவர்கள். அவர்கள் பேசுவதிலிருந்து சில உண்மைகள் விளங்கின. பாவலர் நம்மைப் போன்று சாதாரண மனிதர் அல்லர். மிகப் பெரும் அறிவாற்றல் கொண்ட மாபெரும் மகான். அவரைக் காண்பதே பெருமை. அவர் பேசுவதைக் கேட்டாலே போதும். வந்தவர்கள் ஆர்வத்துடன் பேசியது என் ஆவலை ஆயிரம் மடங்காகப் பெருக்கியது.

மாமனிதர் ஒருவர் பேசுமிடத்தில் சிறுவருக்கு என்ன வேலை என்று கருதாது என்னைத் தெங்கம்புதூருக்கு அழைத்துச் செல்ல என் தந்தையார் விரும்பினர். அந்த விருப்பம் எனக்கு வாழ்க்கையில் ஒரு பெரும் பேறாக அமைந்தது. மகாமதி என்றும் சதாவதானி என்றும் தமிழ் கூறும் நல்லுலகம் புகழ் பாடி மகிழும் தமிழ்ப் பெருமகன் செய்குதம்பிப் பாவலர் அவர்களைக் கண்ணால் கண்டு அவர்கள் பேச்சைக் காதால் கேட்டு மனம் களித்தவன் என்று நாவினிக்கக் கூறும் வாய்ப்பு அன்று கிடைத்தது.

பாவலர் தூய வெள்ளாடை புனைந்து கதர் குல்லாய் தலையில் விளங்க நீண்ட துண்டு தோளில் தொங்க வெண்ணிற மீசைக்கு அடியில் அகன்ற வாயுடன் ஒளி சிந்தும் கண்களால் அனைவரையும் பார்த்துக் கொண்டே அடக்கமாக மேடையில் அமர்ந்திருந்த அரிய காட்சி என் மனத் திரையில் அழியாப் படமாகப் பதிந்துள்ளது. அவருடைய தோற்றம் பண்டித மதன்மோகன் மாளவியாவை நினைவு கூரச் செய்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

தெங்கம்புதூர் கடைத் தெருவின் அருகில் அமைந்துள்ள பரந்த வெளி சிற்றூர் மக்களால் நிரம்பி வழிகிறது. சாலையிலும் கடைத் திண்ணைகளிலும் மக்கள் குழுமி வாகனங்களையும் வாணிபத்தையும் தடைசெய்து கொண்டிருந்தனர். இது வரைக் காணாத பெருங் கூட்டம் என்று சிலர் கூறியது என் காதில் விழுந்தது. என்னைப் பார்த்துத் தம்பிக்கு இங்கு என்ன வேலை என்று கூறிச் சிரித்ததும் என் நினைவில் மறக்காமல் பதிந்துள்ளது.

முதன் முதலில் தெங்கம்புதூர் பண்டித வித்துவான் முதுபெரும் புலவர் சாஸ்தாங்குட்டிப் பிள்ளை பாவலரை வரவேற்றுப் பேசினார். அவர் பாவலரின் தலை மாணாக்கர். பின்னர் எனக்குத் தமிழறிவு ஊட்டிய பேராசான். பாவலர் எதைப் பேசினார் என்பது எனக்கு நினைவில்லை. ஆனால் 'அஞ்சிலம்பு' என்று தொடங்கும் கம்ப ராமாயாணப் பாடலை வெகு நேரம் விளக்கியது மாத்திரம் நினைவுத் திரையில் மங்கலாகப் பதிந்துள்ளது. அவருடைய அரிய தோற்றம், சரளமான பேச்சுத் திறன் ஆகியவை அனைவரையும் கவர்ந்தன. சில நாட்கள் பாவலரைப் பாராட்டி மக்கள் மகிழ்ந்தனர்.

தெங்கம்புதூர் கூட்டத்தில் பார்த்த பின்னர் என் கண்கள் பாவலரைக் காணும் பேற்றைப் பெறவே இல்லை. சாஸ்தாங்குட்டிப் பிள்ளையிடம் நான் பாடம் கேட்கும்போது இடையிடையே அவருடைய குருநாதரான பாவலரைப் பற்றி வியந்து புகழ்வார். அவருடைய நினைவாற்றல், தமிழ்ப் பாடல்களை விளக்கும் திறன், மாணாக்கரிடம் அவருக்கிருந்த பற்று, அறிவைத் தேடும் ஆவல், மாசு மறுவற்ற தூய அன்பு, கல்வியால் ஏற்பட்ட தறுகண், தன்மான உணர்வு போன்ற பாவலருடைய பண்புகள் சாஸ்தாங்குட்டிப் பிள்ளையால் பாராட்டப்படும். தமிழறிவில் தன் ஆசான் மலையாக இருந்தார் என்று கூறித் தன்னை மிகக் குறைவாக மதிப்பிட்டு மகிழ்வார். மடமடவென்று தமிழிலக்கியப் பாடல்களையும் படபட வென்று இலக்கணச் சூத்திரங்களையும் மனப்பாடமாகக் கூறி விளக்கும் சாஸ்தாங்குட்டிப் பிள்ளை, பாவலரை நினைவாற்றலின் சிகரமாகக் கூறி வியப்பது நமக்கு வியப்பிலும் வியப்பாக இருக்கும்.

ஒரு நாள் பரவலரின் மறைவைப் பற்றிக் குறிப்பிட்ட சாஸ்தாங் குட்டிப் பிள்ளை தன் முதிய வயதில் அழுது கண்ணீர் சிந்தினார். பாவலரின் உடல் அசைவின்றிக் கிடந்த காட்சியை நினைத்து கலங்கி அழுதார். அடைய மடையாக வாய்வழி வழிந்த தமிழாகிய ஜீவ நதி வற்றி வரண்டு விட்டதோ என்று வருந்தி பாவலரின் காலடியில் நின்று தவித்ததாகக் கூறி வருந்தினார்.

என் ஆசான் சாஸ்தாங்குட்டிப் பிள்ளையுடன் பாவலரின் இடலாக்குடி இல்லத்துக்குச் செல்லும் வாய்ப்பு கிடைத்தது. பல ஆண்டுகளுக்கு முன் தெங்கம்புதூர் கூட்டத்தில் தமிழ்க் கடலாக முழங்கிய பாவலர் பெருமான் அன்று வீட்டின் முன் கூடத்தில் படமாகத் தென்பட்டார். பேரறிஞரின் மூத்த மகன் எங்களை வரவேற்றார். தமிழன்னை தலைநிமிர்ந்து நின்ற பாவலர் இல்லம் புனிதப் பொலிவாகக் காட்சி தந்தது.

பின்னாளில் பாவலரை பற்றி நிரம்ப அறிய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. டாக்டர் பசுலு முகைதீன் என்னிடம் பாவலரின் இலக்கியப் பணிபற்றி டாக்டர் பட்டத்திற்கான ஆய்வை மேற் கொண்டார். அவரும் படித்தார். நானும் படித்தேன். இருவரும் பாவலரைப் பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முயன்றோம்.

சதாவதானியான பாவலர் எழுதியதை விடவும் பேசியது அதிகம். கருத்து மழையான சொற்பொழிவில் நனைந்தவர் நினைத்துக் களித்துள்ளனர். ஆனால் பின் வந்தோருக்கு அக்குரல் எட்ட முடியாமல் காற்றுடன் கலந்து விட்டது. நூலாக எழுதப்பட்டதும் நினைவில் தங்கியதும் இன்று பாவலரின் புகழைப் பரப்பிக் கொண்டிருக்கின்றன. தமிழ் இலக்கிய வானில் மகாமதிப் பாவருக்கு என்றும் நிலைத்த ஓரிடம் உறுதியாக உண்டு. குமரி மண்ணின் தமிழ் மணத்துக்குக் கவிமணியுடன் பாவருக்கும் நல்ல பங்கு உண்டு.



இமயப் பெருமலை

~ குமரி அனந்தன் ~

மகாமதிப் பாவலர் பிறந்த மண்ணில் பிறந்தோம் என்று பெருமை பெறலாம்.

கோட்டாறு என்றால் வளைந்த ஆறு என்று பொருள்.

இன்றும் 'சைக்கிள்' எனும் இரு சக்கர வண்டியின் சக்கரம் வளைந்து போயிருந்தால் அதைச் சரி செய்ய 'கோட்டம்' எடுக்க வேண்டும் என்றே குமரி மக்கள் பேசுவர்.

'கோட்டை' ஏன்பதே அநேகமாக வளைந்துள்ள வளாகந் தானே?

எனவே, கோட்டாறு பாயும் இடம், கோட்டாறு என்றாயிற்று.

கோட்டாறில் பாவலர் பிறந்த பின்னர், அது பாட்டாறு ஆயிற்று.

பள்ளிப் படிப்புத்தான் படிப்பு; அது இல்லையென்றால் பாரோர் புகழும் பாவலராக முடியாது என்ற பொய்ம்மைத் திரையைக் கிழித்தவர் பாவலர்.

ஒரு சாவிக்கு மறு சாவி செய்ய நினைப்போர் மெழுகில் வைத்து அதனை அழுத்தி அதன் உருவளவைப் பதிய வைப்பர். அதுபோல் ஒரு நூலைப் புரட்டிப் படித்து உள்ளத்தில் அழுந்தப் பதித்து நினைவில் நிறுத்தும் ஆற்றல் கொண்டவர் பாவலர்.

ஏந்தாத ஒன்று அடுத்தவர்க்கு எடுத்துக் கொடுக்காது.

ஒன்றை ஏந்தி வைக்கத் தெரியாத மனது எப்படி அதைப் பிறருக்கு எடுத்துரைக்கும்?

படிப்பது வேறு.

பதிப்பது வேறு!

பட்டும் படாமலும் படித்துப்போவது மேட்டிலிருந்து உருட்டி விடும் விதைகளைப் போல் சிதறி ஓடி விடுகின்றன. ஊன்றிப் படித்துப் போவதோ உழுத நிலத்தில் விதைத்த விதையாகிறது.

விதைப்பது பத்தென்றால் அதன் மூலம் விளைவது நூறாகிறது.

பாவலர் அவர்கள் இவ்வாறே படித்தார்கள்; மனதில் பதித்தார்கள்! பல உள்ளங்களில் அவைகளைப் பதியங்களாக நட்டார்கள்.

'அதை நினைத்ததால்
இதை மறந்தேன்'

—என்றும்,

'ஒன்றைப் பார்த்ததால்
மற்றொன்றைப் பார்க்கவில்லை'

—என்றும்,

'பாட்டைக் கேட்டதால்
பாவத்தைக் காண முடியவில்லை'

—என்றும்,

பேசும் இந்நாளில் நூறு அவதானங்களைச் செய்து காட்டிய அற்புதப் பெருமானை — மகாமதிப் பாவலரை — தெய்வ நிலையில் வைத்துப் போற்றி 'உன்னருள் சுரந்து இன்னருள் நல்க வரமருள்வீராக' என்றல்லவோ வேண்ட வேண்டும்!

தமிழின் ஆற்றலைப் பாவலர் போல் பிரித்தும் விரித்தும் சொன்னவர் யாவர்?

சீறாப் புராணமா, அன்றி சீதையின் கற்பினைப் போற்றும் இராமாயணமா?

ஆசிரியப் பாவா, கட்டளைக் கலித்துறையா?

—எதுவும் அவருக்கு எளிதாகக் கைவரப் பெற்றதே!

இராமலிங்க சுவாமிகள் பாடியதை 'மருட்பா' என்று இந்து என்போர் சிலரே வாதிட—

இஸ்லாமிய மதத்தைக் கொண்ட பாவலர், அது 'அருட்பாவே என வாதிட்டு வென்றார் என்றால், தமிழை உச்சி மேல் வைத்து மெச்சியவச்—உண்மையை உயிரினும் மேலாக நேசித்தவர் — என்ற பெரும்புகழைத் தமக்கே உரித்தாக்கிக் கொண்டார் என்றுதானே பொருள்?

ஏழ்மை ஏற்றத்தைத் தடுக்காது என அறியவேண்டுமா...?

ஒரு மதம், பிற மதங்களை ஆழமாகக் கற்கத் தடைக்கல் ஆகாது என்பதைப் புரிய வேண்டுமா...?

சிலேடைத் தமிழால் சிந்தனையைத் தூண்டிடவும் சிரிக்க வைக்கவும் முடியும் என்று கண்டிட வேண்டுமா...?

தலைப்பைக் கொண்டே எதிரிக்கு மலைப்பை ஏற்படுத்தித் தொடுத்தவர் ஆயுதத்தையே எடுத்துத் தமது கூராயுதமாக்கி வெல்லுவது முடியும் என்பதற்கு சான்று வேண்டுமா...?

தெய்வத் தமிழையும் வளர்த்துத் தேசத் தொண்டையும் செய்ய முடியும் என்பதற்கு உதாரணம் வேண்டுமா...?

தமிழ்...தமிழ் என்று மட்டும் கூறிக் கொண்டு நுனிப்புல் மேய்ந்து அறிஞர்கள் முன் பனிப்போல் மறைந்து போகும் நிலைமாறி இளைஞர்கள் உருப்பட வேண்டுமா...?

மகாமதிப் பாவலர் வாழ்க்கை வரலாற்றையும் அவர் ஆற்றிய சாதனைகளையும் படிக்கவேண்டும்—மனதில் பதிக்க வேண்டும்.

தமிழை வளர்த்துத்
தன்னை வளர்த்த
தனிப்பெரும் புலவர்!

தண்டமிழின்
கண்டனையச் சிறப்பை
மண்டலமெங்கும்
கண்டிடச் செய்த
கொண்டல்!

தீந்தமிழ்த் தென்றல்!
தெவிட்டாத தெள்ளமுது!
தேடக் கிடைக்காத
தேனாமிர்தம்!

எடுத்துக் காட்டிற்கென்றே
கிடைத்திட்ட
இமயம்—
மகாமதிப் பாவலர்.

பாவலர் தொடுத்த பாமாலை

சிலம்பொலி சு. செல்லப்பன்

சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் (1874 — 1950) நாகர் கோயிலையடுத்த இளங்கடை என்னும் ஊரிற் பிறந்தவர். தமிழுக்கும் சமயத்திற்கும் இவர் செய்துள்ள தொண்டு சிறப்பானதாகும். பதினாறாம் வயதிலேயே பாக்கள் இயற்றும் திறமை பெற்றிருந்த இவர் கேட்போர்ப் பிணிக்கும் சொற்பொழிவாளராகவும் விளங்கினார். சீறாப் புராணத்தைப் பிழையறப் பதிப்பித்ததுடன் அதற்கு உரை யெழுதிய பெருமையும் இவருக்குண்டு. ஒரே நேரத்தில் நூறு தொடர் நிகழ்ச்சிகளை நினைவிற் கொண்டு செயல்படும் சதாவதானி யாகத் திகழ்ந்த இவர் ஷம்சுத்தாசீன் சோவை, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட் டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி முதலிய பல நூல்களை இயற்றி யுள்ளார். அவர் எழுதியவற்றுள் நபிகள் நாயக மான்மிய மஞ்சரி என்னும் நூல் ஒன்றாகும். பெருமானாரின் அருட் சிறப்புகளும், புகழ்ச் செயல்களும் பாவலரின் உள்ளத்தில் என்றென்றும் நின்று இனித்த வண்ணமிருந்தன. அவ்வினிய உணர்வுகளின் வெளிப் பாடே இந்நூலாக உருப் பெற்றுள்ளது. பெருமானாரின் வாழ்க் கையைக் கால நிரல்படி பாடவேண்டும் என்ற நோக்கத்தில் பாவலர் இந்நூலைப் பாடவில்லை. அவருடைய வாழ்க்கையில் நடந்த புகழுக்குரிய — பெருமைக்குரிய நிகழ்ச்சிகள் எவையெவை பாவல ருடைய உள்ளத்தில் நடமாடி ஒன்றன்பின் ஒன்றாக இன்ப ஊற்றெடுத்தனவோ அவையவை அப்படியே பாடல்களாக வெளி வந்துள்ளன. எனவே நிகழ்ச்சிகள் முன் பின்னாக இந்நூலில் இடம் பெற்றுள்ளதைக் காண முடிகிறது. ஆயினும் இவை பெரு மானாரின் பெருமைகளையும் — புகழ் மொழிகளையும், இசுலாமிய நெறிமுறைகளையும் மிக எளிமையாகவும் இனிமையாகவும் எடுத் துரைக்கின்றன. நயமான சொல்லாட்சியும் நல்ல இனிய சந்தமும் இச்சதாவதானியிடம் என்றும் உரிமை கொண்டாடி நின்றிருக் கின்றன. அவற்றைப் பயன்படுத்தி மிக நுணுக்கமான செய்தி களைக்கூடப் பாமரரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப் படுத்திக் கூறிவிடும் ஆற்றல் இப்பாவலருக்குண்டு. இந்நூலுள் இடம் பெற்றுள்ள ஓரோவடி மிக்குவந்த வெண்டாழிசைக் கொச்சகக்

கலிப்பா ஒரு நூற்றிரண்டும் இத்தகையனவேயாகும். அண்ணல் நபியின் அருமை பெருமைகளையும் இசுலாத்தின் ஏற்றங்களையும் எடுத்து எடுத்துக் கூறி அவற்றில் ஆழ்ந்து ஆழ்ந்து திளைக்கும் பாவலர் அவற்றைப் பின்பற்றுவதன் இன்றியமையாமையையும் பாடல்களில் சுட்டிக் காட்டுகிறார். இசுலாம் ஐந்து கடமைகளை வற்புறுத்துகிறது. கலிமா மொழிதல், தொழுகை, நோன்பு, ஸக்காத்து, ஹஜ் யாத்திரை என்பன அவை. இவற்றை எடுத்தோதிய பெருமானார் அவ்வாறே தாம் நடந்தும் காட்டி னார். இப்படி வழி காட்டிய பெருமானாரின் பேருள்ளத்தை நினைந்து நினைந்து வியந்து பாராட்டுகிறது பாவலரின் உள்ளம். இப்பாராட்டு,

"ஆதிஒரு வன்தொழுகை
ஐவேளை நோன்புடைமை
போதியநல் ஏழைவரி
புக்கமக்க ஹஜ்ஜைந்தும்
நீதிதரு சன்மார்க்க
நீர்மையஎன் றோதிமுதன்
மாதிரியா முன்னின்ற
வள்ளன்மை உள்ளேமோ
மன்னர்நபி நாயகமே
வள்ளன்மை உள்ளேமோ!" (பாடல் 3)

என்ற பாடலாக இந்நூலுள் இடம் பெற்றுள்ளது. பெருமானார் பெரு நெறியைப் பின்பற்ற மறுத்தோர் பெருமானாரை எதிர்த்துப் போரிட் டனர். பகை கொண்டிருந்த ஒருவன் எறிந்த கவண் கல்லால் பெருமானாரின் பல்லுடைந்து குருதி கொட்டியது. அந்நிலையி லும் பெருமானார் அவன்மீது கருணை காட்டி நன்மொழி நவின்று அவனுயிர் காத்தார். இந்நிகழ்ச்சி,

"மல்லுடைய வெஞ்சமரில்
வந்தெதிர்ந்த வஞ்சகர்தம்
கல்லுடைய கைக்கவணால்
காய்ந்தெறிந்து வாய்ந்தமுகப்
பல்லுடையக் கோறல்செய்த
பான்மைகண்டும் தீமையிலாச்
சொல்லுடைய நற்கருணை
தோய்ந்துநின்ற(து) ஆய்ந்தேமே
சுத்தநபி நாயகமே
தோய்ந்துநின்ற(து) ஆய்ந்தேமே!" (பாடல் 23)

என்ற பாடலாக உருவெடுத்துள்ளது. இது போன்றே நபிகள் பெருமானார் உணர்த்திய பெண்மை போற்றல் (35), பெண்கள் சொத்துரிமை (36), விதவை மறுமணம் (37), பொருளாதாரச் சமத்துவ நிலை (44), வேலை செய்தோரின் வியர்வை உலருமுன் அவர் கட்கு உரிய கூலி கொடுத்தல் (80) முதலிய உயர்நெறிகள் அனைத்தும் இந்நூலில் அழகிய சந்தப் பாடல்களாக ஆங்காங்கே மிளிர்கின்றன. இவை பொதுமைக் கருத்துக்கள் என்பதால் இவை பற்றிப் பாவலர் பாடியுள்ள பாடல்களாலேயே அவற்றை அனை வரும் அறிந்து கொள்ள இயலும். ஆயினும் சில பாடல்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை அசைபோடுவனவாக உள்ளன. எனவே வரலாற்றுப் பின்புலமறிந்தோர் தவிரப் பிறர் அப்பாடல்களின் விளக்கத்தை அறிந்து கொள்ளுவது கடினமாகும்.

முகம்மதுவின் செல்வாக்கு மேலும் மேலும் ஓங்கி வருவதைக் கண்ட குறைஷித் தலைவர்கள் எவ்வாறேனும் அவரை அடக்கி ஒடுக்க வேண்டுமெனக் கருதினர். நபிகள் நாயகம், தம்முடைய பெரிய தந்தையாரான அபுத்தாலிபிடம் அளவற்ற அன்பு கொண் டவர். தாய் தந்தையரையும் பாட்டனாரையும் இழந்த பெரு மானாரை எட்டு வயதிலிருந்து எடுத்து வளர்த்தவர் அவரே! ஆதலின் ஆபுதாலிப் சொன்னால் முகம்மது நபிகள் கேட்பார் என்ற எண்ணத்தில் குறைஷியர்கள் அவரிடம் சென்று "பெரியோய்! உம் தம்பி மகன் நாம் பன்னெடுங்காலம் வணங்கி வந்த தெய்வங்களை யெல்லாம் இகழ்கிறார். இது வரை நாம் பின்பற்றி வந்த இறைநெறி தவறு என்கிறார். உருவச் சிலைகளை உடைத்தெறிய வேண்டு மென்கிறார். முன்னோர் நெறியைப் பழித்துத் திரியும் அவரைத் திருத்துங்கள்! உங்கட்காகவே இது வரை பொறுத்திருக்கிறோம்! நீங்கள் அவரைத் திருத்தாவிடில் பிறகு நாங்கள் எங்கள் வலிமையைக் காட்டவேண்டிவரும் என்றனர். நபிகள் நாயகம் சொல்வது சரி யாகவே இருக்கும் என அபுத்தாலிபு மனத்தளவில் எண்ணினாரே யாயினும், ஊரார் பகை தன் தம்பி மகனுக்கு வந்து நேரக்கூடாதே என்பதால் அவரையழைத்து ஊருடன் ஒத்து வாழுமாறு உருக்கமாக எடுத்துரைத்தார். அதற்கு நாயகமவர்கள், "தந்தையே! தங்களை நான் உயிரினும் மேலாகப் போற்றுகிறேன். உங்கள் சொற்களை ஏற்று அதன்படி நடக்க நான் கடமைப்பட்டவனே என்றாலும் இப்போது நான் கூறி வருவது இறை கட்டளையாகும். என்னை வளர்த்த தாங்களே மறுத்துரைத்தாலும் இறைவன் விதித்துள்ள இந்நெறியிலிருந்து என்னால் மாற இயலாது. தங்களை மறுத்துப் பேசுகிறேன் என்பது அல்ல—நான் கொண்ட கொள்கை எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாதது ஆகும். நம் இனத்தவர் ஒருங்கு திரண்டு என் உயிரையே போக்குவதாயினும் ஓரிறைக் கொள்கையை

நான் மாற்றிக் கொள்ள முடியாது. தந்தையே! செயற்கரிய செயலாக என் வலக்கையில் சூரியனையும் இடக்கையில் சந்திரனையும் கொண்டு வந்து தருவதாக இருந்தாலும் என் கொள்கையிலிருந்து நான் மாறேன். என் உயிரனைய தங்கள் மனம் ஒப்பவில்லை யென்றாலும் மறைமொழியை விளக்குவதிலிருந்து நான் விலக மாட்டேன்'' என்றுரைத்தார்.

மேலும் குறைஷியர் ஒன்றுகூடி முகம்மதுவிடம் ''முகம்மதுவே! தாங்கள் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். நம்முடைய இனத்தினர் கண்ணியம் மிக்கவர்கள். அவ்வாறிருக்க நீங்கள் நம் வழிபாட்டுருவங்களைப் பழித்துரைப்பது கண்டு எங்கள் உள்ளம் வேதனையால் வெதும்புகிறது. நமக்குள் வேறுபாடு ஏற்படுவதற்கு இதுவே காரணம். இவ்வாறு செய்வதில் உம்முடைய நோக்கம்தான் என்ன? கோடிச் செல்வராக நடத்த ஆசைப்படுகிறீர்களாயின் கூறுங்கள். அரேபியாவில் உங்கட்குச் சமமான செல்வர் இல்லை யென்று சொல்லும்படியாக எங்கள் செல்வங்களையெல்லாம் உங்கள் காலடியில் கொண்டு வந்து குவிக்கிறோம். அரியணை ஏறி ஆட்சி நடத்த வேண்டுமென விரும்புகிறீர்களா? அரபு நாடு முழுவதற்குமே உங்களை அரசராக்கிப் பணிகிறோம்! இவ்விரண்டுமின்றி அழகிய பெண்ணை அடைய வேண்டுமென்பது உங்கள் நோக்கமா? அவ்வாறாயின் அழகே உருவான ஆரணங்கை உங்கட்கு மணமுடித்து வைப்போம்'' என்றனர். பெருமானாரோ ''நண்பர்களே! எனக்குச் செல்வனாக வேண்டுமெனும் நோக்கமில்லை; தலைமை வகிக்க வேண்டுமெனும் தற்செருக்கும் இல்லை. அழகிய பெண்ணை அடைய வேண்டுமெனும் அவாவும் இல்லை. நான் இறை தூதன். அவன் அருட்செய்தியை உங்கட்கு அளிக்கவே நான் இவ்வுலகுக்கு அனுப்பப் பட்டுள்ளேன். இறைமொழியை ஏற்று நடந்தால் உங்கட்கு உய்தி உண்டு: இன்றேல் அவன் தண்டனைக்கு ஆளாவீர்; ஏற்று நடப்பதும் விலகிச் செல்வதும் உங்கள் விருப்பம். ஆனால் உங்கள் சொல்லை ஏற்று இறை நெறியிலிருந்து நான் மாறுவதென்பது எந்நிலையிலும் முடியாதது'' எனத் திட்டமாக எடுத்துரைத்தார். இது வரலாறு. இவ்வரலாற்றை நன்குணர்ந்தோரே இந்நூலுள் இடம் பெற்றுள்ள,

செங்கதிரும் வெண்மதியும்
சேரஇரு கைத்தலத்தில்
தங்கவைத்துப் பைம்பொன்நிதி
தந்திறைமை ஈந்தாலும்
துங்கமிகு சாந்திநலம்
தோய்ந்தபரி சுத்தநெறி

எங்கள் நிலை என்றுரைத்த(து)
இப்புவியும் ஒப்பாதோ
ஏந்தல்நபி நாயகமே
இப்புவியும் ஒப்பாதோ! (பாடல் 4)

என்னும் பாடலின் பொருளாழத்தை உள்ளபடி உணர்ந்து இன்புற இயலும்.

பெருமானார் ஓரிறைக் கொள்கையை ஓதி தொழுகை முறையைச் செய்து காட்டியபோது அவரை எதிர்த்த மக்கா நகர்க் குறைஷியர் கட்குத் தலைமை தாங்கியவன் அபூஜகில் என்னும் கொடியவன். அவன் பெருமானாரைச் 'சதிகாரன்; வஞ்சகன்; அவனைக் கொல்வதே அறம்' என்றெல்லாம் ஆத்திர மூட்டிப் பேசி மக்களைப் பெருமானார்க்கு எதிராக்கி வந்தான். பெருமானார் மக்காவை விட்டு மதீனா சென்ற பிறகும் தொடர்ந்து தொல்லைகள் விளைத்து வந்தான். பெருமானாரின் உயிரைப் பறிப்பதையே நோக்கமாகக் கொண்டலைந்தான். மதீனாவிலிருந்து பெருமானாரை அழிக்கப் பெரும்படையுடன் புறப்பட்டான். 'பதுறு' என்னும் இடத்தில் நடந்த போரில் வெட்டுண்டு குற்றுயிராய்க் கிடந்த போதும் அண்ணல் நபியின் உடலைப் பிளந்தெறியத் தக்கவர் எவரும் இல்லையா? என்று முழங்கி உயிரை முடித்துக் கொண்டவன். அவனுக்குப் பின் பெருமானாரை எதிர்ப்பவர்கட்கு அபுசுபியான் தலைமையேற்றான். நபிகள் நாயகத்திற்கு எதிராகக் குறைஷியர்களைத் தூண்டிவிட்டு எல்லையற்ற கொடுமைகள் செய்தான். பெருமானார் மக்காமீது படையெடுத்தபோது ஓர் நாள் இரவு மக்காவுக்குப் பத்து கல் தொலைவில் உள்ள மஸ்அருல் ஸஹ்ரான் என்னும் குன்றில் தங்கியிருந்தனர். அப்போது அபுசுபியான் பெருமானார் இருப்பிடம் வந்து சேர்ந்தான். அபுசுபியானைக் கண்ட உமறும் மற்றத் தோழர்களும் கொதித்தெழுந்து அவனைக் கொல்வதற்குத் தயாராயினர். அண்ணலார் அமைதிப்படுத்தி மறுநாட் காலை அபுசுபியானைத் தம்மிடம் அழைத்து வருமாறு கூறினார். அண்ணலாரின் அறிவுரை கேட்டு அபுசுபியான் முஸ்லிமாயினார். தவற்றினை உணர்ந்து அபுசுபியான் நன்னெறியில் சேர்ந்ததும் அவர் முன்னர்ச் செய்த தவறுகள் அனைத்தையும் பெருமானார் மறந்து மன்னித்தார். அதுமட்டுமன்று. அப்போரில், 'கஃபா இறையில்லத்தில் அடைக்கலம் புகுந்தவர்களும் அபுசுபியான் இல்லத்தை அடைக்கலமாக நாடுபவர்களும், தங்கள் வீடுகளின் உள்ளிருந்து தாழிட்டுக் கொள்பவர்களும் முஸ்லிம்களால் தீங்கிழைக்கப்படமாட்டார்கள்" என்ற அறிவிப்பையும் திருவாய் மலர்ந்தருளினார்.

இவ்வரலாற்றை உணர்ந்தோரே இந்நூலுள் இடம் பெற்றுள்ள,

"பாதகன் அபூசுபியான்
பல்கோடி தீவினைகள்
போதவிடைத்(து) ஆர்ப்பரித்த
போதும் 'அவன் இல்லகத்தே
மோதவந்தோர் யாவரையும்
மோசமறக் காமின்'எனச்
சீதஉரை தந்தவுங்கள்
செப்பமுறை ஒப்பேமோ
செய்குநபி நாயகமே
செப்பமுறை ஒப்பேமோ!" *(பாடல் 95)*

என்னும் பாடலை முழுமையாக அறிந்து கொள்ள இயலும், இதேபோல்,

"வாய்ந்தஒட்டை மீதுவர
மாமதினத் தோரெவரும்
பாய்ந்தெதிர்ந்து 'வம்மினெங்கள்
பாரமனை நும்ம'தென
ஆய்ந்தறிந்து நிற்குமிந்த
அன்புருவத்(து) ஒட்டையதை
ஏய்ந்தஇட மாக்கொள்வ(து)'
என்றஉரை நன்றேயோ
ஏகன்நபி நாயகமே
என்றஉரை நன்றேயோ?" (பாடல் 75)

என்ற பாடலிலும் வள்ளல் நபியின் நல்லுள்ளத்தைக் காட்டும் தெள்ளிய வரலாறொன்றுள்ளது. எனவே உணர்த்துதல், உணர வைத்தல் என்னும் இரு போக்கிலும் இந்நூல் தன் அழகிய பாடல்களால் அடிபோட்டுச் சென்று நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகிறது. இந்நூல் பெருமானாரின் வாழ்க்கை வரலாற்றையும் இஸ்லாமிய கோட்பாடுகளையும் முறைப்படவும் முழுமையாகவும் தொகுத்துக் காட்டும் பணியில் ஈடுபடவில்லை. எனினும் அவற்றை அங்ஙனம் தொகுத்துக் காட்டும் இஸ்லாமிய இலக்கிய வரலாற்று நூற்கடலில் நாம் மூழ்கி மூழ்கி எடுத்துக் கொள்ளவேண்டிய முத்துக்களை, நமக்காக எடுத்து வந்து பொன்னிழையில் கோத்து ஒரு புகழ் மாலையாகவே இந்நூலைப் பாவலர் அவர்கள் தந்திருக்கிறார்கள் என்பதை இந்நூலைப் படிப்போர் தெள்ளிதின் உணர இயலும்.

★

பாவலரின் அந்தாதிகள்

டாக்டர் செ. பசுலு முகிமிதீன், M.A., Ph.D.

"ஓரு மவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் புகழ் படைத்த பண்டிதர்' — ஓராறு திங்களில் நான்காண்டு கல்வியை நனிகற்றுத் தீர்ந்த நாவலர் — சாற்றுக் கவிவேண்டி வந்தவரின் நூலையே சாற்றி வியக்கவும் வியர்க்கவும் வைத்த வித்தகச் சாதகர் — இலக்கண முடிச்சுக்களை அவிழ்த்து விளக்கம் தந்த போதகர் என்றெல்லாம் புகழத் தக்க ஒரு தமிழ்ப் புலவர் வாழ்ந்தார் எனில், அவர் மகாமதி செய்கு தம்பிப் பாவலர் அன்றி வேறு யாராகவும் இருக்க இயலாது. பாட்டாறு பெருக்கெடுக்கும் கோட்டாறு, இப்பாவலர் பிறப்பால் புகழ் ஏணியின் உச்சிக்கே சென்று விட்டது எனலாம். அன்னார் செய்த வியத்தகு சாதனைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று தம் பதினைந்தாம் வயதிலேயே புலவர்களுக்கெல்லாம் மிகவும் கடிதான அந்தாதிகளையும் சித்திரக் கவிகளையும் பாடி முடித்தமை. தம் ஆசான் சங்கர நாராயண அண்ணாவியிடம் தமிழ்க் கல்வி பயின்று கொண்டிருந்த காலையே இவ்வாற்றலைப் பெற்றுத் தாம் இயற்றிய இரண்டு அந்தாதி நூல்களையும் வெளிக் கொணர்ந்து விட்டார். திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் அவை முறையே திரிபு, மடக்கு என்னும் சொல்லணிகளில் பாடப் பெற்றவை. இவ்வந்தாதிகளின் வெளிப்பாட்டின் விளைவாகவே அவரது பெயருடன் 'பாவலர்' என்ற பட்டமும் ஒட்டிக் கொண்டிருக்கிறது.

இவ்விரண்டு நூல்களும் ஒரே தொகுதியாக 1900-ஆம் ஆண்டில் சென்னை ஸ்ரீபத்மநாப விலாச அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பெற்று வெளிவந்துள்ளன. நூலின் தொடக்கத்தில் பாவலரின் தமிழ் ஆசான் சங்கர நாராயண அண்ணாவியார் இயற்றியுள்ள,

> "வாணி மலர்ப்புகுத வாழ்சங்கம் வீறழிய
> நாணிக் குறுமுனியு நாகமுறப்—பேணிச்செய்
> குத்தம்பிப் பாவலன் கூறினா னந்தாதிக்
> கொத்தம்பி னாகை யார்க்கு"

என்னும் சிறப்புப் பாயிரம் இடம் பெற்றுள்ளது. இப்பாயிரத்தை நோக்க, இது நாகூர்த் திரிபந்தாதியை மட்டும் குறிப்பிடுவதாக உள்ளது. இவ்வந்தாதியைப் பாடி முடித்ததும் ஆசானின் சான்றிதழைப் பெற்ற பின்னர், திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதியைப் பாவலர் பாடியிருக்கலாம் எனக் கொள்ள இடமேற்படுகிறது. எனவே, இரண்டு அந்தாதிகளிலும் பாவலர் முதலில் பாடியது திரு நாகூர்த் திரிபந்தாதிதான் என்பது விளக்கமுறுகிறது.

ஒரு பாடலின் அந்தமும் அடுத்து வரும் பாடலின் ஆதியும் ஒரே சீராகவோ அசையாகவோ வருமாறு அமைத்துப் பாடப்படுவது அந்தாதி எனப்படும். இவ்வந்தாதி இலக்கியம் வெண்பாவிலோ கட்டளைக் கலித்துறையிலோ அமையும் என்பர் பாட்டியல் நூலார்.

'வெண்பாக் கலித்துறை வேண்டிய பொருளிற்
பண்பாய் உரைப்பதந் தாதித் தொகையே.' (212)

என்பது பன்னிரு பாட்டியல்.

'ஒத்தாய வெண்பா வொருநூறு—ஒத்தசீர்
அந்தாதி யாகுங் கலித்துறையு மவ்வகையே
வந்தா லதன்பே ரவை' (செய்யுளியல் – 9)

என்றவாறு இலக்கணங் கூறும் வெண்பாப் பாட்டியல், 'நேரிசை வெண்பா நூறு அந்தாதியாய் வந்தால் வெண்பா அந்தாதி என்றும், கட்டளைக் கலித்துறை நூறு அந்தாதியாய் வந்தால் கலித்துறை அந்தாதி என்றும் பெயர் பெறும்' என வகைப்படுத்தப்பட்ட பெயர் கூறி விளக்கம் தருகின்றது. இவ்வழியே நோக்க, பாவலர் பாடியுள்ள திருநாகூர்த் திரிபந்தாதி கலித்துறை அந்தாதி என்னும் வகையைச் சார்ந்ததாகும். அஃதாவது, நூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களாலானது அந்நூல். ஒவ்வோர் அடியிலும் முதல் எழுத்து ஒழிய இரண்டு முதலான பிற எழுத்துக்கள் ஒத்திருக்கப் பல்வேறுபட்ட பொருட் பயன் தோன்றுமாறு அமைக்கப் பெறும் 'திரிபு' என்னும் சொல்லணியில் பாடப்பட்டவை. எனவேதான் அது திரிபு அந்தாதி என்னும் பெயர் பெறுகின்றது. இந்நூல் தென்னக மக்கள் கண்ணெனப் போற்றும் நாகூர் நாயகம் ஹஸரத் சாகுல் ஹமீது ஒலியுல்லா அவர்கள் மீது பாடப் பெற்றது. நூலின் தொடக்கத்தில் நேரிசை வெண்பாவிலான காப்புச் செய்யுள் ஒன்றும் திரிபுச் சொல்லணியில் அமைந்துள்ளது.

'மாதவந் தங்க மனிதரு நாகை வதிந்திலங்கும்' அந்நாயகரின் அருமை பெருமைகளையும் கருதத் தக்க காரணச் சிறப்புகளையும்

கவினுற எடுத்துக் கூறும் நோக்கில் பாடப்பட்டுள்ள இந்நூலில், பாவலர் அந்நாயகர் மீது கொண்டுள்ள ஈடுபாட்டை வெளிப்படுத்தும் விதத்தில்,

சுவன விபுதர்	(2)
சின்மய	(3)
நற்கண்ணியம்	(6)
நல்லின்பம்	(7)
எழின்மதி	(8)
மாமதி	(10)
பொற்சுகம்	(10)
தயாபரம்	(13)
அருட்கடல்	(14)
பெருமாதவம்	(22)
வண்டிரு	(23)
செந்திரு	(34)
சீர்நலம்	(36)
உயரின்னமுது	(57)
தூய்புகழ்	(73)
கற்பகம்	(74)
முதுமருந்து	(98)

என்றெல்லாம் உருவகத் தொடர்களால் வியக்கின்றார். அந்நாயகர் அடக்கம் கொண்டதால் சிறப்புப் பெற்றுள்ள நற்றவம் புரிந்த நாகூரை,

இதம்புரி நாகை	(காப்பு)
திருநாகை	(3, 82, 90)
உயர் நாகை	(18)
காசறு நாகை	(23)
கொழும்புகழ் நாகை	(38)
பலன்படு நாகை	(46)
நன்னாகை	(58, 66, 70)
சூழ்வன நாகை	(73)
கற்பக மேயரு நாகை	(74)
கிரகம் பயன்தரு நாகை	(95)

என்றவாறெல்லாம் சிறப்பித்துப் பாடுகின்றார்,

இந்நூலின் கண்ணேயுள்ள பாடல்களில் அமைந்துள்ள தமிழ்ச் சொல்லணிகள் பாவலரின் சொல்விற்பனத்துக்குக் கட்டியங் கூறுவன.

"மதியா தவத்தை மதியா யிதத்தை மனதிருத்த
வதியா தவத்தை யணிமுக நோக்கி யடியருக்கோர்
கதியா தவத்தைக் கருதுநற் போதங் கசிந்தருள்வாய்
துதியா தவத்தைச் சுகிதிரு நாகைச் சுகாநந்தமே" (9)

என்பது போன்ற பாடல்கள் அவ்விற்பனத்தை வெளிப்படுத்துவன வாக உள்ளமை காணலாம். 'கவிஞனுக்குச் சொல் அடிப்படையில் குறியீடு மட்டுமன்று. அது பொருளை விளக்கும் வாயிலாக மட்டும் அமைந்ததுமன்று. ஆனால் அது ஒரு சமிக்ஞை. அது தன்னில் தானே பயனுடையது மட்டுமன்று; பிறிதொன்றை விளக்கும் பயனும் உடையது' என ரெனிவெல்லாக்கும் ஆஸ்டின் வாரனும் ("இலக்கியக் கொள்கை" – 1966) குறிப்பிட்டுள்ள கருத்துக்கும் பாவலரின் சொல்லமைப்பு தக்க சான்றாக உள்ளது எனலாம்.

'மாமேவு கோட்டாற்றில் மன்னுமுயர் மெய்ஞ்ஞான வள்ளல்' ஹஸரத் செய்கு முகியித்தீன் மலுக்கு முதலியார் என்னும் ஞானியார் சாகிப் மீது பாடப்பெற்ற நூல் திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி. மெய்ந்நிலை கண்ட சூஃபி ஞானி மன்சூர் ஹல்லாஜ் (ரஹ்) அவர்களின் ஞான மார்க்கத்தைச் சார்ந்த புலவர் ஞானியே கோட்டாற்று ஞானியார் சாகிபு. நெல்லை மாவட்டம் மேலப்பாளையம், முகவை மாவட்டம் கமுதி முதலான ஊர்களிலும் கோட்டாற்றுப் பதியிலும் பல்லாயிரக்கணக்கான 'முரீது' என்னும் சீடர்கள் இவர்களுக்கு உண்டு. இவர்களால் இயற்றப் பெற்ற பாடல்களின் தொகுதியான 'மெய்ஞ்ஞானத் திருப்பாடற்றிரட்டு' என்னும் சிறப்பு மிக்க நூல் தன்னையறிந்து தலைவனையும் அறியும் தத்துவத்தைக் கூறுவதொன்றாகும். இந்த ஞானியாரின் வழியில் வந்த ஆமினா அம்மையாரின் அருந்தவப் புதல்வராகத் தோன்றியவர்தாம் செய்குதம்பிப் பாவலர். எனவே, தம் தாய்வழிப் பாட்டனார்மீது கொண்டிருந்த ஈடுபாட்டின் பயனாக வெளிப்பட்டிருக்கிறது, இப் பதிற்றுப் பத்தந்தாதி. 'பதிற்றுப் பத்து' என்பதற்கிணங்கப் பப்பத்தாகப் பத்து யாப்பு வண்ணங்களில் – அந்தாதித் தொடையில் பாடப் பட்டுள்ளது.

கலிவிருத்தம்	(10)
கொச்சகக் கலி	(10)
கலித்துறை	(10)
தாழிசை	(10)
{ அறுசீர் விருத்தம் இருவண்ணங்களில்	(10 + 10 = 20)
{ எழுசீர் விருத்தம் மூன்று வண்ணங்களில்	(10 + 10 + 10 = 30)
எண்சீர் விருத்தம்	(10)

என்றவாறு நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. பாடல்கள் அனைத்தும் மடக்கு என்னும் சொல்லணியுடன் சிறக்கின்றன. நூலின் தொடக்கத்தில் அறுசீர் விருத்தத்தில் காப்புச் செய்யுள் ஒன்றுள்ளது.

ஞானியார் சாகிபின் பெருமைகளையும் காரணச் சிறப்புக்களையும் எடுத்துக் கூறுவதை நோக்கமாகக் கொண்டு விளங்கும் இந்நூலில் பாவலர் அவர்கள், ஞானியார் மீது தாம் கொண்டுள்ள ஈடுபாட்டை தெளிவுபடுத்தும் விதத்தில்,

திருக்கோடை நிமலர்	(2)
வஞ்சமாற்றிய வள்ளல்	(2)
நீதர்	(4)
கருணாகர வாரி	(5)
குறைவற நின்றாளுஞ் செழுந்தேன்	(12)
தெள்ளா ரமுது	(12)
மணி	(13, 23)
மணிவிளக்கு	(13)
மங்கா மதி ரவி	(13)
இன்பசுக மீந்தருளு மணி	(13)
ஆரமுது	(13, 30)
அற்புதம்	(14)
தீனர்குலச் சுடர்மணி	(16)
நசையா ரமுது	(22)
ஞான நிலை	(22)
மதி	(24)
மருக்கொழுந்து	(24)
அணி	(24)
சதானந்தத் தரு	(29)
மிளிர்மதி	(29)
தண்ணமுது	(30)
தாரகம்	(30)
அருட்டகை	(46)
சோதிமணி	(68)
நிதி	(69)
ஒரு பெருமணி	(83)
மாமதி	(84)

என்றவாறெல்லால் உருவகத் தொடர்களால் உயர்த்திக் கூறுகின்றார்.

'எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே'

என்பார் ஔவையார். அஃதாவது ஒரு நிலத்தின் பெருமை அந் நிலத்தே தோன்றியவர்களால் ஏற்படுகின்றது என்பது கருத்து. 'நிலத்திற் கிடந்தமை கால்காட்டும்' என்பார் வள்ளுவர். சிலபோது தோன்றியவர்களா லன்றிச் சார்ந்தவர்களாலும் நிலம் பெருமை அடைவது உண்டு. இவ்வாறு சார்ந்தவர்களால் பெருமை யடைந்தது தஞ்சைத் தரணியில் அமைந்த நாகூர். தோன்றியவர்கள் பலரால் சிறப்புற்றது நஞ்சைத் தரணியில் அமைந்த கோட்டாறு. பாவலர் தோன்றியதாலும் சிறப்பின் வருவாய் பெருகிய கோட்டாறு தான் முன்பு ஞானியார் சாகிபின் பிறப்பால் பெருமை பெற்றுத் திகழ் கின்றது. இங்கே ஞானியார் தோன்றிய கோட்டாற்றைப் புகழும் பாவலர் உள்ளத்தே தம் தாயகமாகிய கோட்டாறு என்னும் உணர்வும் ஒன்றி நிற்கப் பாடும் பாங்கினையும் காணலாம்.

'சீர்சால் கோடைத் திருநகர்' (வேதரத்தின மாலை)
'வியனருட் கோடைப் பதி' (புகழ்ச்சி மாலை)
'மன்னுபல் வளத்தால் வயங்கிய கோடை'
(மெஞ்ஞானக் குருக் கும்மி)
'மகிமைகொள் கோடை' (கோட்டாறு)

என்றெல்லாம் பிற பிற இடங்களில் புகழ்ந்து கூறும் பாவலர் இந்நூலின் கண்ணே.

'மாமேவு கோட்டாறு'	(காப்பு)
நீடு கோடை	(6)
கோதிலாத் திருக்கோடை	(7)
அந்த மேவிய கோடை	(8)
வண்ணக் கோடை	(9)
கோடைத் தலம்	(17)
எழிலார் கோடை	(24)
துதிமேவு கோடை	(62)
புகழ்க் கோடை	(63)
தகை யோங்கு கோடை	(65)
நிரந் தருங் கோடை	(71)
வண்ணமார் கோடை	(72)
எழிலுடைக் கோடை	(75)
துன்றருங் கோடை	(78)
நற்கோடை	(85)
வணமுறுங் கோடை	(86)
நிதிமலி கோடை	(87)
நலங்கிளர் கோடை	(88)

அபாயமற்ற அருளோங்கு கோடை (96)
திண்மையற்ற தென்கோடை (98)
தென்கோடை (3, 12, 100)
திருக்கோடை (2, 4, 56, 78, 80)
உயர்கோடை (46, 54)

என்றெல்லாம் வருணிக்கின்றவர் 'குலத்தா லுயர் கோடை' (51) என்ற தொடரால் அவ்வூரின் தனிச் சிறப்பையும் புலப்படுத்தி விடுகின்றார். 'ஷெய்கு பெருத்ததும் கோட்டாறு; ஷைத்தான் வெறுத்ததும் கோட்டாறு' என்ற பழமொழி இப்பகுதி மக்கள் வாய்களில் பழகிய மொழியன்றோ? பாவலர் பயன்படுத்தும் மற்றொரு தொடர் "சுகத்தி லோங்குயர் கோடை" (45) என்பது. இது அந்த ஊரில் இருந்து அனுபவிப்பவர்களின் அனுபவ உண்மை. இதே கருத்துள்ள மற்றொரு தொடரான "சுகத்திற் பொலி கோடை" (80) என்பதையும் பயன்படுத்துவதிலிருந்து பாவலர் எந்த அளவுக்கு உணர்ந்து கூறுகிறார் என்பதையும் காண முடிகிறது. இந்த ஊரில் பிறந்தவர்கள் வேறு எந்த ஊரையும் சுகந்தரும் ஊராகக் கருதுவதில்லை என்ற உண்மைக்குப் பாவலரும் விதிவிலக்கல்ல என்பதைக் காட்டுகிறதல்லவா?

"எரியார்புழு வெனவேயென திதயம்பல துயராய்
வரியார்விழி மடவாரிடை மருவாதொரு வரமே
புரியாதுயர் கோடைக்குறும் பொறையேயடி யேனுஞ்
சரியாதவ மருளேயுறிற் சரியாதவ மருளே" (54)

என்னும் பாடலின் ஈற்றடியைப் பிரித்துப் பார்த்து மடக்குச் சொல் லணியின் சிறப்பைக் கண்டு துய்க்கலாம்.

பொருளின் தன்மையைக் காட்டுவதோடு அப்பொருளைச் சிறப்பிக்கவும் வரும் உவமையை அறிஞர் ஜான்சன் சிறந்த உவமை என்கிறார். இவ்வாறு பொருளைச் சிறப்பிக்கவல்ல சிறந்த உவமைகளைக் கையாண்ட பெருமை பாவலரின் நூல்களில் காணப்படுகின்றன. இவ்விதத்தில் திருநாகூர்த் திரிபந்தாதியில் குறிப்பிடத் தக்க 17 உவமைகளும் திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதியில் குறிப்பிடத்தக்க 27 உமைகளும் காணக் கிடைக்கின்றன.

மொத்தத்தில் பாவலரின் அந்தாதிகள் இரண்டும் அவரை ஒரு 'பாவலர்' என்பதை உறுதிப்படுத்துவதோடு, அவரது தனித் தன்மை வெளிப்படும் விதத்திலும் அமைந்துள்ளன எனக் காண முடிகிறது.

★

சிரஞ்சீவி செய்குதம்பிப் பாவலர்

M.R.M. அப்துர் - றஹீம்

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் றோன்றாமை நன்று” என்று வள்ளுவப் பெருந்தகை கூறிச் சென்றார். அதனைச் சதவிகிதம் உண்மையாக்கியவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் ஆவார். இளங்கடை என்ற சிற்றூரில் பிறந்த அவர் தம்முடைய அறிவாற்றலினாலும் அந்த அறிவாற்றலை நன் முறையில் செலுத்திச் செய்த சாதனையாலும் உலகமெலாம் இலங்கும் புகழுருவை, உலகம் உள்ளளவும் ஒலிக்கும் புகழ்ப் பெயரை எய்தப் பெற்றார். இத்தகு மாபெரும் பேற்றினை அவர் எய்தியதற்குக் காரணம், தாம் இவ்வுலகில் ஒரே ஒரு தடவைதான் வாழப் போவதை உணர்ந்து, அதனைச் சாதாரணமாக வாழ்ந்து விட்டுச் செல்லக் கூடாது என்று அவர் கொண்ட மன உறுதியாகும்.

இத்தகு மன உறுதியே நாடகக் கொட்டகையின் வாயிலில் குதிரைகளைப் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டிருந்த ஷேக்ஸ் பியரை உலக மகாகவியாக ஆக்கி “எம் கவி போன்றுளார் எங்குளார்? எங்குளார்?” என்று பிரிட்டானிய மக்களைப் பெருமிதம் பேசச் செய்தது.

இத்தகு மன உறுதியே கிரேக்க நாட்டின் தெருக்களிலே நாதி யற்றுத் திரிந்த ஹோமரை, ‘இலியட்’, ‘ஆடிஸி’ என்ற இரு இறவாப் புகழ் பெற்ற காவியங்களை இயற்றுமாறு செய்து அவர் இறந்ததும், “அவர் எம் மண்ணில் தோன்றியவர்; எனவே அவர் எம்மண்ணிலேயே அடக்கப் பெறவேண்டும்” என்று ஏழு நகரங் களைப் போட்டியிட்டு முன் வருமாறு செய்தது.

இத்தகு மன உறுதியே ஏழையாக இருந்த பேர்னார்ட்ஷாவைத் தாம் வகித்து வந்த எழுத்தர் பதவியை உதறித் தள்ளி லண்டன் பொருட்காட்சிசாலை நூல் நிலையத்திலுள்ள நூல்களையெல்லாம் படிக்குமாறும் நாளொன்றுக்கு ஐந்து பக்கம் வீதம் ஒன்பதாண்டுகள் எழுதி எழுதிக் குவிக்குமாறும் செய்து உலகு புகழ் நாடக ஆசிரியராக ஆக்கியது,

இத்தகு மன உறுதியே ஒரு கவிஞராக இருந்த செய்குதம்பிப் பாவலரை முதலில் அட்டாவதானம் செய்யுமாறும் பின்னர் சோடசா வதானம் செய்யுமாறும் அதன் பின்னர் சதாவதானமே செய்யுமாறும் இயக்குவித்து அவருக்கு மகாமதி, சதாவதானி என்ற பட்டங் களையும் ஈட்டித் தந்தது.

அவர் 1907-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் நாள் சதாவ தானம் செய்தார். அதன் காரணமாக அந்த நாளே மாண்பு பெற்று விட்டது! அன்று அவர் ஆற்றிய அற்புத சாதனையைக் கண்டு அகிலமே அதிசயித்தது.

"எக்கிரியில் எம்முறையில் என்னதவம் செய்தானோ
பக்கிறுமீ றானென்னும் மாண்புடையோன்—தக்கபுகழ்
செந்தமிழ்சேர் நாவலனை செய்குதம்பிப் பாவலனை
தந்ததந்தை ஆவதற்குத் தான்"

என்று ஒரு புலவர் போற்றிப் புகழ்ந்தார். அது கேட்டு, "ஆஹா! என்ன அழகிய பாராட்டு! 'மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை என் நோற்றான் கொல் என்னும் சொல்' என்று வள்ளுவப் பெருந்தகை அன்று கூறிச் சென்றதை இன்று இவர் மெய்ப்பித்து விட்டாரே" என்று கூறி உலக மக்கள் மெய்சிலிர்த்தார்கள்.

அவர் இற்றைக்கு எண்பதாண்டுகளுக்கு முன் ஆற்றிய சாதனையை உலகம் தோன்றியது முதல் ஆன ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலத்தில் அவர் செய்ததுபோன்று ஊரறிய, உலகறிய ஒருவருமே செய்யவில்லை. அதற்குப் பின்னுள்ள இந்த எண்ப தாண்டு காலத்திலும் ஒருவரும் செய்யவில்லை. செய்யும் நெஞ்சத் துணிவைப் பெறவுமில்லை.

இது போட்டி நிறைந்த உலகமாகும். இன்று ஒருவன் செய்த சாதனையை அடுத்த நாளே மற்றொருவன் மிகைத்து வாகை சூடி உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பெறுகிறான். இத்தகு போட்டி மிகு உலகில் ஏன் இந்த எண்பதாண்டு காலத்தில் செய்குதம்பிப் பாவலர் போன்று ஒரு நூறு அவதானம் செய்ய எவரும் முன் வர வில்லை; அவரை மிகைக்கும் வண்ணம் ஒரு நூற்று ஒன்று அவதானமாவது செய்ய முன்வரவில்லை என்ற கேள்வி எழுகிறது. பதில்: செய்குதம்பிப் பாவலர் செய்த சாதனையின் மாண்புதான்.

தாஜ்மஹாலைப் பற்றிக் கூறும் பொழுது சிற்பக் கலையின் முடிவு அதுவேயாகும் என்று சொல்வர். இன்று அமெரிக்காவில் ஒருவர் கோடிக்கணக்கான டாலர்களைச் செலவழித்து தாஜ்மஹால் போன்று ஒரு கட்டடத்தை நிர்மாணிக்கிறார். அவர் தாஜ்மஹால்

போன்று அதாவது அதன் மறுபிரதி (Duplicate) ஆக ஒரு கட்டடத்தை நிர்மாணிபதாகக் கூறுகிறாரே யொழிய அதனை மிகைக்கும் வண்ணம் ஒரு கட்டடத்தை நிர்மாணிப்பதாகக் கூற வில்லை. காரணம் சிற்பக் கலையின் சிகரமாகத் தாஜ்மஹால் இருப்பதே யாகும். அதே போன்று அவதானக் கலையின் சிகரம் சதாவதானமாகவே இருப்பதால் அதனைச் செய்யவோ அதனை மிகைக்கவோ எவரும் முன்வரவில்லை.

டென்ஸிங்கும் ஹில்லாரியும் உலகம் தோன்றியது முதல் மனிதனின் பாதம் பதியாத எவரஸ்ட் உச்சியின் மீது தங்களின் பாதங்களைப் பதித்து அதனைத் தம் அடிபணியச் செய்தார்கள். அவர்கள் செய்த சாதனையைக் கண்டு அகில உலகமும் வியப்பில் ஆழ்ந்தது. உலகின் நாலா பக்கங்களிலிருந்தும் அவர்கள் மீது பாராட்டு மழை பொழியப்பட்டது.

அவர்களுக்குப் பின் எத்தனையோ பேர் எவரெஸ்ட் சிகரத்தின் மீது ஏறி நின்றார்கள்தாம். ஆனால் அவர்களுக்கெல்லாம் டென் ஸிங்குக்கும் ஹில்லாரிக்கும் கிடைத்த பாராட்டுகள் போன்று கிடைத் தனவா ? இல்லை. காரணம் அவர்களெல்லாம் அவ்விருவரிள் மறு பிரதி (Duplicate) ஆக இருந்ததுதான்.

அதேபோன்றுதான் செய்குதம்பிப் பாவலர் ஆற்றிய சாதனையும் இருக்கிறது. எந்த மனிதனும் ஆற்றாத அசாதாரண சாதனையை அவர் ஆற்றியதனால் அவரை உலகம் அன்றும் போற்றியது; இன்றும் போற்றுகிறது ; என்றும் போற்றும் என்பதில் ஐயமில்லை.

அந்த மாபெரும் மனிதருக்கு இச்சிறியேன் அளிக்கும் அன்புக் காணிக்கை இது.

பாவலன் செய்குதம்பி பண்புபுகழ்ப் பேர்கேட்டுச்
சாவுமே சாவைத் தழுவியதாம்—பூவியக்க
அன்னவன் ஆற்றிய ஆற்றவரும் சாதனை
தன்னையே வென்றதென்று தான்.

பாவலரின் நினைவாற்றல்!

மகாமதி, சதாவதானி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் மதுரைத் தமிழ் சங்கப் புலவர், தமிழ்க் கடல், அல்லாமா கா. ப. செய்கு தம்பிப் பாவலர் அவர்களின் அபார நினைவாற்றலை அவர்கள் காலத்தவர் கண்டு வியந்தனர்; மெச்சினர். பாவலர் அவர்களுக்கு இருந்த அசாதாரணமான ஞாபக சக்தி அவர்கள் காலத்தவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. ஆயிரம் கோடி மனங்களின் செயற்கை யாலான ஒற்றைத் தனிப் பெரும் மனத்தைப் பெற்ற அதி அமானுஷ்ய மனிதர் என்றும் ஆண்டவனின் அருள் கடாட்சம் பெற்ற அபூர்வ மேதையென்றும் பாவலர் அவர்கள் அனைவராலும் கருதப்பட்டார். தமிழ் இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிப் படித்தவர்கள்; ஐயந் திரிபறக் கற்றவர்கள், அவர்கள். சங்க இலக்கியங்களோ பிற்றைக் காலக் காவியங்களோ பிரபந்தங்களோ எவையாயினும் சரி, அவர்களது மனத்தில் தமிழ் இலக்கியங்கள் எத்தனை உளவோ அத்தனையின் பிரதிகளும் தளபாடமாக இடம் பெற்றிருந்தன. எந்தப் பாடலில் எந்த வரியை – அடியை – எடுத்துக் கொடுத்தாலும் உடனடியாக அப்பாடலை அவர்கள் ஒப்புவித்து விடுவார்கள்.

நாஞ்சில் நாட்டின் மிகப் பெரும் புலவர் ஒருவர் பாவலர் அவர் களின் புலமையிலும் வித்துவத் தன்மையிலும் அபார நம்பிக்கை வைத் திருந்தார். ஆனால் பாவலர் அவர்கள் சதாவதானம் — அதாவது ஒரே நேரத்தில் நூறு காரியங்களில் மனத்தை ஈடுபடுத்தவல்ல நினை வாற்றல் மிக்கவர் என்பதை மட்டும் பிடிவாதமாக நம்ப மறுத்து வந்தார். இது பாவலர் அவர்களுக்கும் தெரிந்திருந்தது. ஒரு நாள் அப்புலவர் தாம் புனைந்திருந்த கவிதை நூலொன்றை பாவலர்

அவர்களிடம் காட்டி சாற்றுக்கவி பெறுவதற்காக வந்திருந்தார். பாவலர் அவர்களோ பத்துப் பன்னிரண்டு நண்பர்களுடன் இலக்கிய சர்ச்சை ஒன்றில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம், அது வந்த புலவர் தாம் கவிதை நூலொன்றை எழுதி வந்திருப்பதாகவும் அதைப் பாவலர் அவர்கள் படிக்கக் கேட்டு சாற்றுக் கவி தரவேண்டும் எனவும் வேண்டி நின்றார். நடந்து கொண்டிருந்த சர்ச்சை தடைபட்டு நின்றது. புலவரைப் பார்த்து பாவலர் அவர்களும் "எத்தனையோ புலவர்கள் நூற்கள் எழுதிக் கொண்டு வருகிறார்கள்; நீங்களும் எழுதிக் கொண்டு வந்திருக்கிறீர்கள் போலும்! சரி பாடல் களைப் படியுங்கள்; கேட்கின்றேன்" என்று கூறி விட்டு மீண்டும் ஏற்கனவே நடந்து கொண்டிருந்த சர்ச்சையில் ஈடுபட்டு நண்பர்களுடன் இலக்கிய உரையாடலுக்கு சூடேற்றிக் கொண்டிருந் தார்கள்.

வந்த புலவரோ பாவலர் அவர்கள் விரும்பியபடி இலக்கிய சர்ச்சை களுக்கு இடையே தாம் யாத்து வந்த நூலின் பாடல்களை ஒவ்வொன் றாகப் பாடிக் கொண்டிருந்தார். பாவலர் அவர்கள் சற்றேனும் காது கொடுத்து தம் பாடல்களைக் கேளாமல் இலக்கிய சர்ச்சையில் ஈடு பட்டிருக்கிறாரே, அவரின் இச்செயல் வேண்டுமென்றே தன்னையும் தன் பாடல்களையும் துச்சமாகக் கருதி அவமதிக்கும் நோக்கத்தோடு தான் இருக்கவேண்டும் என்றெண்ணி மனம் நொந்து போனார். நடந்து கொண்டிருந்த சர்ச்சையின் இடை நுழைந்து பேசியவர் போல் "என் பாடல்களை சற்று கேட்கிறீர்களா?" என்று புலவர் பாவலர் அவர்களிடம் வினயமாகக் கேட்டார். பாவலர் அவர்களோ ஆத்திரம் அடைந்தவர்கள் போல, "படித்துக் காட்டிய பாடல்கள் அனைத்தையும் நீர் எங்கிருந்தோ திருடியிருக்கிறீர். இவை உம்மால் பாடப்பட்டவை அல்ல. இப்பாடல்களை நான் எங்கோ படித்திருக் கிறேன்" என்று கூறிய வண்ணம் மளமளவென்று புலவர் பாடிய ஐம்பதிற்கும் மேற்பட்ட பாடல்களை அப்படியே பாடிக் காட்டி ஒப்பு வித்தார்கள். கூடியிருந்த நண்பர்கள் மத்தியில், தாம் புனைந்த பாடல்களைப் பாடிக் காட்டி சாற்றுக் கவிபெற வந்திருந்த புலவர் முகம் சாம்பியது. வெட்கித் தலைகுனிந்தவர் போல் அவர் மெள்ள எழுந்து நழுவ முயன்றார். பாவலர் அவர்கள் தன்னைத் திருட்டுக் கவிஞன் என்றல்லவா கூறிவிட்டார் என்பதை நினைக்க நினைக்க அவர் முகமெல்லாம் முத்து முத்தாக வியர்த்தது.

பாவலர் அவர்கள் நழுவ முயன்ற அப்புலவரை உட்கார வைத்து இதமாகப் பேச்சைத் தொடங்கினார்கள். "நீவிர் பாடிக் காட்டிய பாடல்கள் அனைத்தும் உம்மால் இயற்றப் பட்டவைதாம், அவை சிறந்த சுவைமிக்க பாடல்கள். சாற்றுக் கவி தருகிறேன். ஆனால்

ஒன்று, இனி மேலாவது அவதானம் செய்வதில் எனக்கிருக்கும் திறமையையும் என் நினைவாற்றலின் வன்மையையும் நம்பு வீர்களா?" என்று தமக்கே உரிய களங்கமற்ற குறும்புச் சிரிப்புத் தோன்ற கேட்டார்கள். கூடியிருந்த நண்பர்களிடையே ஒரு கணம் மௌனம் நிலவியது.

புலவர்கள், பாவலர் அவர்களின் பக்தர்கள் எல்லோரும் வியப்போடு பாவலர் அவர்களை நோக்கினர். பாக்களைப் பாடிக் காட்டிய குறிப்பிட்ட புலவரைப் பார்த்தபடி பாவலர் அவர்கள் பேச்சை மீண்டும் தொடங்கினார்கள். "இதர நண்பர்களுடன் இலக்கிய உரையாடலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நான் அவ்வாறு உரை யாடிக் கொண்டிருந்த போதே நீவிர் பாடிய பாடல்களை மனத்தில் வாங்கிப் பதித்துக்கொண்டும் இருந்தேன். அவற்றை மீண்டும் நான் எங்கோ – என்றோ – படித்த பாடல்கள் போன்று ஒப்புவித்தேன். அவ்வளவுதான்" என்று முடித்ததும் "ஐயா அவர்களின் அவதானத்தில் நான் பூரண நம்பிக்கை கொள்கிறேன்" என்று சாற்றுக் கவிகேட்டு வந்த அப்பெரும்புலவர் கூறி முடிக்கும் முன்னரே எழுதிக் கொள்ளுமாறு பணித்தவாறு சாற்றுக் கவியையும் கூறி முடித்தார்கள், பாவலர் அவர்கள். கூடி இருந்த நண்பர்கள் அனைவரும் ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் திளைத்தனர்.

புத்தம் புதிய செய்யுட்களாக – பாக்களாக – எத்தனை நூறு பாடல் களாக இருப்பினும் சரி, அவற்றை ஒரே மூச்சில் 'மளமள' வென்று ஒரே தடவையில் பாடி முடித்து விட்டு, முடித்த அந்த மாத்திரத் திலேயே அவற்றை மீண்டும் திருப்பிக் கூறுமாறு கேட்டால் அப்படியே ஒப்புவிக்கும் நினைவாற்றல் பாவலர் அவர்களுக்கு இருந்தது. வேறு பல காரியங்களில் 'முழுக்க முழுக்க சிந்தையைச் செலுத்திக் கொண்டும் நண்பர்களுடன் சர்ச்சையில் – விவாதத்தில் – சொற்போரில் – ஈடுபட்டுக் கொண்டும் இதர புலன்களை வெவ்வேறு பணிகளில் செயல்படுத்திக் கொண்டும் இருக்கும்பொழுது கூட இவ்வாறு பாடப்பட்ட பாடல்களைக் கேட்டு திருப்பி ஒப்புவிக்கும் திறன் சதாவதானி அவர்களிடம் இருந்தது.

1907 மார்ச் திங்கள் 10–ம் நாள் அறிஞர்கள் முன்னிலையில் அவதானம் செய்து கொண்டிருந்த பொழுது நூற்று இருபத்தைந்து புலவர்கள் ஒருவர் பின் ஒருவராக ஒரே மூச்சில் புதிய வெண் பாக்களைப் பாடி முடித்தனர். மறு மூச்சிலேயே தாம் ஈடுபட்டிருந்த இதர தொண்ணூற்றொன்பது அவதானங்களுக்கிடையே தாம் கேட்ட அந்த நூற்று இருபத்தைந்து வெண்பாக்களையும் அப்படியே திருப்பி ஒப்புவித்தார்களாம், பாவலர் அவர்கள்.

வெண்பா ஒன்றை இருமுறை கேட்டதும் மனத்தில் பதித்துக் கொள்ளும் ஆற்றலைப் பண்டைப் புலவோர் மேம்பாடுடைய செயலாகக் கருதினர். ஆனால் பாவலர் அவர்களோ வெண்பாக்களை ஒரு முறை கேட்டு விட்டுச் சென்று திரும்ப அவற்றை அப்படியே கூறிய பெருமையை பச்சையப்பன் கல்லூரி முன்னாள் தமிழ்ப் பண்டிதர் க. வ. திருவேங்கடசாமி நாயுடு அவர்கள்,

“வெண்டளை இருகாற் கற்றன்மேம் பாடெனப்
பண்டையோன் கூற்றைப் பண்டையதாக்கி
ஒருமுறைகேட்டே வருமுறை அறைந்து...”

புகழ் பெற்றார் பாவலர் அவர்கள் என்று தாம் எழுதிய நேரிசை ஆசிரியப் பாவொன்றில் கூறுகிறார்.

பண்டையோர் கூற்றைப் பண்டைய தாக்க வல்ல திறன்மிக்க இந்த அபார ஞாபக சக்தியும் அசாதாரண நினைவாற்றலும் பாவலர் அவர்களின் வாணாள் முழுவதும் – அவர்கள் உயிர் நீங்கும் வரையிலும் – அவர்களிடம் நிலைத்திருந்தது என்றால் அந்த நினைவாற்றல் ஆண்டவனின் அளப்பருங் கருணையாகத் தானே இருக்க முடியும்?



அருந்தமிழ் இலக்கிய இருங்கடல்!

பண்டிட் மு. அப்துல் மஜீது

புலமை என்பது புலனின் உள் நிறைவு என்று பொருள்படும். மனிதர் கொள்ளும் இத்தகைய உள் நிறைவுக்கு அவரவரது புல நுட்பமே காரணமாகக் கூடும். இது பற்றித்தான் புல நுட்பம் இல்லாதாரிடம் புலமை இடம் பெறாதிருத்தலைக் காண்கின்றோம்.

தமிழ்ப் புலமையிலே பல தன்மைகளைக் கண்டறியலாம். சுருங்கக் கூறின் அத்தன்மைகளை முதுபெரும் புலமை, திறனாய்வுப் புலமை, பெயர்ப் புலமை என மூன்றனுள் அடக்கி விடலாம். இதில் முதுபெரும் புலமை கம்பன் போன்ற பெருங்காப்பிய ஆசிரியர்களைக் குறித்து நிற்கிறதாகும். திறனாய்வுப் புலமை ஆராய்ச்சிப் பெருக்கால் பல அருஞ்செயல் புரிகிறவர்களைக் குறிக்கிறதாகும். பெயர்ப் புலமை பலகலை கற்றுத் தேர்ந்தும் ஏதேனும் ஒன்றைச் செயல்படுத்த முடியாமையைக் குறிக்கிறதாகும்.

இதில் இரண்டாவதான திறனாய்வுப் புலமையின் ஒரு பகுதி தான் அவதானப் புலமையா யுள்ளது. நுண்ணிய ஆராய்ச்சியும் மருட்சியுறாத மனவுணர்வும் உடையவர்களே அவதானப் புலவர் களாக இலங்குவர். அவர்கள் மனவெளியிலே கலையுலகக் காட்சிகள் ஒப்பனை செய்து கொண்டே இருக்கும்

பின் அவதானப் புலவர்களையும் பல இயல்பினர்களாகப் பிரிக்கலாம். எட்டுப் பேர் கேள்விக்குத் தட்டாமல் பதில் கூறுகிறவரை அட்டாவதானி என்று கூறுவர். பத்துப் பேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரை 'தசாவதானி' என்று கூறுவர். பதினாறு பேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரை 'சோடசாவதானி' என்றும் ஒரு நூறு பேர் கேள்விக்குப் பதில் கூறுகிறவரை 'சதாவதானி' என்றும் கூறுவது வழக்கம்.

சதாவதானியே இவர்களில் தலையாய அவதானியாகக் கூடும். இவர் ஒரு நூறு பேர் கேள்விக்கு ஒத்த பதிலும் உட்கோளும் விளக்கி அரங்கினை ஆச்சரியத்தில் ஆழ்த்துகிறவர். இதனால் மற்ற அவதானிகள் சிறப்பிழந்தவர்கள் என்பது கருத்தல்ல. பொதுவாக அவதானிகள் எல்லாருமே புலமையில் ஒரு தனி இயல்பான எல்லையை எய்தியவராவர்.

ஆ! எவ்வளவு அருமைப்பாடு, இந்த அவதானச் செயல்! இஃதெல்லாம் மனித இயல்பிலே செயல்படுத்துகிறதா என்றுகூட எண்ணி விடுவார் மதிநுட்ப முடையோர். இதில் அவதானம் புரியும் ஒரு தனி நிலை உலகில் தமிழ்ப் புலமைக்கு மட்டும் உரித்தாய் இருந்து வருகிறது என்று அறிஞர் பலர் கூறுகின்றனர்.

தமிழ்நாடு காலங்கள் தோறும் புலவர் குழாத்திலே அவதானி களைப் பெற்றுத் தருவதில் பின்னடையவில்லை. இன்னும் அது தமிழ்ப் புலமை பெற்ற முஸ்லிம் அவதானிகளையும் பெற்றுத் தருவதில் பின்னடையவில்லை. பழங்காலத்தில் எவ்வளவு சிறப்பு வாய்ந்த அவதானிகளை உருவாக்கித் தந்ததோ அவர்களிலெல்லாம் சிறப்பு மிக்கவரான மாபெரும் அவதானியையும் அது நாம் வாழும் இருபதாம் நூற்றாண்டிலே உருவாக்கித் தந்திருக்கிறது.

அந்த அவதானி யார் என்று கேட்பீர்களோ நீங்கள்! அவர்தான் அவதான உலகிலே அரச பதவியை அடைந்திருந்தவர். அருந் தமிழ் இலக்கிய இருங்கடல் போன்றவர். இலக்கணக் கலைக்கு மருத்துவராய் விளங்கியவர். நாவாமிர்தம் துளிக்கும் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம். நாஞ்சில் நாட்டு நற்றமிழ் வேந்தர். மகாமதி செய்குதம்பிப் பாவலர்.

பாவலர் வேளாவேளைகளில் மதுரை மூதூர் வந்து போவார். சில வேளைகளில் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கும் வந்து இங்குள்ள புலவர் பெருமக்களிடம் உரையாடி விட்டுப் போவார். மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் சேதுபதி வழித் தோன்றல் பொ. பாண்டித் துரைத் தேவருக்கும் பாவலருக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்தது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே சோழவந்தான் நாவலர் அரசன் சண்முகனார், நாவலர் சைவ நூல் பரிசோதகர் சுப்பிரமணியர், இலக்கணப் பேராசிரியர் திரு. நாராயண அய்யங்கார், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் பொ. பாண்டித்துரை ஆகியவர்கள் உரை யாடிக் கொண்டிருந்தபோழ்து எதிர்பாரா வண்ணமாய் செய்குதம்பிப் பாவலரும் இங்கு வந்துவிட்டார்.

செய்குதம்பிப் பாவலருடைய கலைத் திறனும் அவதானம் புரியும் ஆற்றலும் அவர்களுக்கு நன்கு விளங்கி இருந்தும் அன்று பாவலரிடம் வாய் விட்டுப் பார்த்துப் பாவின்பம் துய்க்கலாமென்று எண்ணினார் போலும், நாவலர் அரசன் சண்முகனார்.

அவர் இங்குப் பாவலரைக் கண்டதும் ''வருக, வருக" என்று வரவேற்று மகிழ்ந்தவர் சற்று நேரம் சென்றதும், "உங்களுக்கு இராமலிங்கர் அருட்பாவிலே எத்தனை பாடல் நினைவிலிருக்கும்?" என்று கேட்டார். அதற்குப் பாவலர் "ஓரளவு நினைவிலிருக்கும்" என்று பதிலிறுத்தார். பாவலரைச் சோதிக்க வேண்டுமென்றோ என்னவோ "இராமலிங்கர் மகாதேவ மாலையில் 76–ஆவது பாடலைச் சொல்வீர்களா?" என்று கேட்டார் சண்முகனார்.

பாவலர் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்து விட்டு "உய்குவித்து மெய்யடியார் தம்மை எல்லாம்..." என்று அந்தப் பாடலைப் பாடிக் காட்டி விட்டார். பாவலரின் மனவுணர்வைக் கண்டு சண்முகனார் ஆச்சரியத்தில் ஆழ்கிறபோது இலக்கணப் பேராசிரியர் திரு. நாராயண அய்யங்கார் அந்தப் பாடலிலே 'கு' எப்படி வந்தது என்று பாவலரிடம் கேட்டார். அதற்கு 'கு' சாரியை பெற்று வந்தது என்று பதிலிறுத்தார் பாவலர்.

பின்னர் கந்தசாமிக் கவிராயர் பாவலரிடம் "அகப்பொருள் பாடல் ஒன்றிலே இரண்டு இடங்களில் கலாம் என்று வந்திருத்தல் வேண்டும். அப்படியொரு பழம்பாடலைக் கூறுங்கள்" என்று கேட்டார். இதிலும் பாவலர் முன்போலவே சற்று யோசனைக்குப் பின்,

"வருக குடநாடன் வஞ்சிக்கோ மானென்
றருகல ரெல்லாம் அறிய—ஒரு **கலாம்**
உண்டா யிருக்கவல் லொண்டொடியாள் மற்றவளைக்
கண்டா ளொழிந்தாள் **கலாம்**"

என்ற முத்தொள்ளாயிரம் பாடலைப் பாடிக் காட்டினார்.

பின் நாவலர் சுப்பிரமணியர், ''ஏதேனும் ஒரு புராண நூலிலே இரண்ட னுருபிலே ஏழு முறை நோக்க என்ற சொல் இணைந்து வந்துள்ள பாடல் ஒன்றினைக் கூறுங்கள்" என்று பாவலர் அவர்களிடம் கேட்டார். அதற்கும் நம் பாவலர் அவர்கள்,

"கரத்தை நோக்குவர் வானினை நோக்குவர் கடுப்பின்
எருத்தை நோக்குவர் வீரத்தை நோக்குவர் எதிராந்
தரத்தை நோக்குவர் அவையினில் அபூஜகில் உடனே
உரைத்த வார்த்தையை நோக்குவர் உளத்தை"

என்ற சீறாப் புராணப் பாடலைப் பாடிக் காட்டினார்.

பின்னும் அவர்கள் பாவலர் அவர்களிடம் பற்பல கேள்விகளைக் கேட்டார்கள். அதற்கெல்லாம் பாவலர் அவர்கள் தங்கு தடையில் லாமல் பதில் கூறிக் கொண்டு வந்தார். முடிவிலே பாண்டித்துரைத் தேவர் பாவலரை விளித்து ''நீங்கள் தமிழின் தாயகம்; அவதானி களின் அரசர்'' என்று புகழ்ந்து பேசியவர் வாய்ப்பு இருக்குமானால் மதுரையில் உங்களை அவதானம் பண்ணச் செய்வேன் என்றார்.

காலப்போக்கு, பாண்டித்துரைத்தேவர் விரும்பியதை நிறைவேற்ற விடவில்லை. திடீரென்று பாண்டித்துரைத் தேவருக்கு உடல் நலம் குன்றிவிட்டதே இதற்குக் காரணமானது.


செய்குதம்பிப் பாவலர் ஓர் அற்புத மனிதராவார். அவர் வாய் எந்த நூலிலே எந்தப் பாடலை வாவென்று அழைக்கிறதோ அந்தப் பாடல் அப்பொழுதே அவர் நாவினிலே வந்து சுழன்றுவிடும். பாவலர் பெருமையைப் பேச இயலாது. முஸ்லிம்களைவிட முஸ்லிமல்லாத தமிழரிடையே பாவலருக்கு பெருமதிப்பு இருந்து வந்தது.

இப்படி எல்லாம் இல்லாமலா் நாஞ்சில் நாட்டு நல்லிசைப் புலவர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை பாவலர் உயிர் நீத்தார் என்ற திடுக்குறும் செய்தியைக் கேட்டு,

"ஒரும் அவதானம் ஒருநூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
செந்தமிழ்ச் செல்வனை செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி."

என்று அரற்றி அவலமுற்றார்?

என்னுடைய ஆசிரியர் அவர்கள்



பண்டித வித்துவான் தா.சாத்தாங்குட்டிப் பிள்ளை

நாஞ்சில்நாடு என்பது தோவாளை, அகத்தீசுவரம் என்னும் இரு தொகுதிகளைக் கொண்ட ஒரு சிறு நிலப்பகுதி. இது சேர மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது. தற்போது தமிழ்நாட்டோடு சேர்ந்த குமரி மாவட்டத்தின் ஒரு பகுதியாய் விளங்குகிறது. இந்நாடு நீர்வளத்தாலும், நிலவளத்தாலும் நிறைந்து நாற்புறங்களும் நஞ்சை நிலங்கள் மலிந்தது. பழையாறு என்னும் பஃறுளியாறு இதனை வளப்படுத்துகின்றது. இதன் அழகை மனோண்மணிய ஆசிரியர் அவர்கள் அழகுற விளக்கியுள்ளார்கள். இங்கு வாழும் மக்கள் தமிழர்கள். தொழில் விவசாயம். இவர்கள் தமிழ்மக்களாக இருந்த போதிலும் தமிழைப் பேசுபவர்களே யொழிய தங்கள் மொழியைப் பயிலவோ அதனைப் பரப்பவோ இயலாத நிலையில் இருந்து வந்தனர். ஏனெனில் அக்காலத்தில் நாட்டில் மலையாளப் பள்ளிகள் இருந்தனவே யொழிய மருந்துக்குங் கூட தமிழ்ப்பள்ளிகள் இருந்ததில்லை. தமிழில் ஆர்வம் கொண்ட பெரியவர்கள் ஒவ்வொரு ஊரிலும் திண்ணைப் பள்ளிகள் ஏற்படுத்தித் தமிழ்மொழியிலுள்ள எழுத்துப் பயிற்சியை அளித்து வந்தனர். ஒன்றிரண்டு ஆண்டுகள் இந்தப் பள்ளிகளில் படித்துக் கிடைத்த அறிவோடு விட்டு நீங்குவர். இதனைக் கண்ணுற்ற தமிழ்ப் பெருமக்கள் இடைக்காலத்தில் தமிழ்மாநாடு கூட்டிக் கிளர்ச்சி செய்ததன் பயனாக ஏறக்குறைய அறுபது ஆண்டு களுக்கு முன்னர் தமிழ்ப் பள்ளிகள் தோன்றலாயின. பெயர்தான் தமிழ்ப் பள்ளியே தவிர மலையாளத் தேர்வில் தேறியவர்களே அங்கு ஆசிரியர்களாக இருந்து வந்தனர். இந்த மலையாள ஆசிரியர்களுக்கு ஒரு தேர்வு ஏற்படுத்தப் பட்டது. அதில் தேறியவர்கள் தமிழ்ப் பள்ளிகளில் ஆசிரியர்களாக அமர்த்தப் பட்டனர். இந்த நிலையில்

நாஞ்சில் நாட்டு மக்களுக்குத் தமிழ் நூல்களைப் படித்தறியவோ உணர்ந்துகொள்ளவோ முடியாத நிலையைக் கவிமணியவர்கள் தமது 'மருமக்கள் வழி மான்மியத்'தில், திருவாசகம், திருப்புகழ் முதலிய தமிழ் நூற்களையும் தமிழனாய்ப் பிறந்தும் படித்தறிய முடியாத நிலைகண்டு வருந்துவாராயினர்.

அறுவடை முடிந்த பின்னர் வேனிற்காலங்களில் ஊருக்கு ஊர் தமிழ்ப் புராணங்கள் படிக்கப்படும். ஒருவர் படிக்க, ஒருவர் விரிவுரை நிகழ்த்த ஊரிலுள்ள பலரும் அமைதியாக இருந்து ரசித்துக் கேட்பார்கள். இதுவே இந்நாட்டார் பொழுதுபோக்கு. இந்தக் காலத்தில் தமிழறிந்த பெரியார்கள் நாட்டில் இல்லாமலும் இல்லை. ஒரு சிலர் இருந்தாலும் அவர்களிடத்தில் சென்று முறையாகப் பாடம் கேட்டுக் கொள்ள வாய்ப்பும் வசதியும் இல்லை. இது ஒரு காலம். இவ்வாறிருக்கும் போது அமிழ்தினும் இனிதினிக்கும் இருந்தமிழ் மொழியைப் பயில வேண்டும் என்னும் பேரவா ஏற்பட்ட காலையில் சென்னையினின்றும் தமது சொந்த ஊராகிய கோட்டாறு என்னும் பதியில் சந்தித்தெருவில்வந்து வதிந்துவரும் தமிழ்க்கடல், சதாவதானி கா. ப. செ. பாவலர் அவர்களை தரிசிக்கும் பேறு கிடைத்தது. பாவலர் அவர்களை அறிமுகப் படுத்தியவர் அக்காலம் பிரபல ஜவுளி வர்த்தகராயிருந்த திரு. பி. வேலாயுத முதலியார் அவர்களாவர். சென்னையில் பாவலர் அவர்கள் நடத்திய அவதானச் சிறப்பையும் கவிபாடும் வன்மையையும் வேலாயுத முதலியார் அவர்கள் எடுத்து விளங்கப் பேசினார்கள். பாவலர் அவர்களைத் தேடிச் சென்று கண்டு வணங்கி நின்றேன். யாரையும் ஒருமையில் பேசியறியாத பாவலர் அவர்கள் இளைஞனாகிய என்னைப் பார்த்து "நீங்கள் யார். தங்களுக்கு யாது வேண்டும் ?" என்று கேட்ட போது விடையிறுக்க இயலாமல் நான் அப்படியே இருந்து போனதைக் கண்டு சிறிது நேரங் கழித்துப் பின்னும் வினவினார்கள். அப்போது தமிழைப் பயிலவேண்டும் என்ற எனது பெரு விருப்பத்தை அவர்களிடம் கூறினேன். "இதற்கு முன்னர் தாங்கள் என்ன படித்திருக்கிறீர்கள் ?" என்று கேட்டார்கள். "நல்வழி, மூதுரை போன்ற சிறு நூல்களைப் படித்திருக்கிறேன்" என்று மறுமொழி கூறினேன். என்னிடம் ஒரு புத்தகத்தைத் தந்து படிக்கும்படி கூறினார்கள். அதைப் பிழையறப் படிக்க இயலாதிருந்த என்நிலை கண்டு, "முயன்றால் எளிதாகக் கற்றுக் கொள்ளலாம். என்னால் உதவி செய்யத் தடையுமில்லை" என்று அன்பொழுகக் கூறினார்கள்.

அதுமுதல் அடிக்கடி அவர்களைக் காணவும் அவர்களோடு பழகவும் வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு பாடங்கேட்கத் துவங்கினேன். நள வெண்பாவும் நாலடியாரும் செம்மையாகப் படிக்க வேண்டும் எனக்

கூறி இரு புத்தகங்களும் தந்தார்கள். ஒரு சிறு குறிப்புப் புத்தகத்தில் இலக்கணப் பாடக் குறிப்புக்களை எழுதிக் கொள்ளும்படிக் கட்டளை யிட்டார்கள். இவ்விதம் ஆறு திங்கள் வரையிலும் நான் படித்த நாலடியார், நளவெண்பாப் பாடங்களைக் கேட்டும் இலக்கணப் பாடங்களை விளக்கியும் பாடங் கற்பித்து வந்தனர். ஆசிரியர் மாணவருக்குப் பாடஞ் சொல்ல வேண்டிய முறை பற்றி நன்னூலார் 'விரையான் வெகுளான் விரும்பி முகமலர்ந்து கொள்வோன் கொள் வகை அறிந்து அவனுளங் கொளக் கற்பிக்கும்' எனக் கூறிய மரபுக்கு இலக்கணமாகப் பிழையின்றிப் படிக்க முடியாத என்னைப் பொறுமை யோடு மறுமுறையும், மறுமுறையும் திருத்திக் கருணையோடு கற்பித் ததை எண்ணுங்கால் அத்தகைய பெரியாரிடம் பாடம் கேட்கும் பாக்கியத்தைப் பெற வெகு புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று நினைத்து உளம்பூரித்து ஆசையோடு படிக்கத் துவங்கினேன். பாவலர் அவர்களுடைய அத்தகைய உயர்வான பண்பை இன்று நினைத் தாலும் என் நெஞ்சம் நிறைவு பெற்று விடுகிறது.

நன்னூல் பாடங்கேட்கத் துவங்கிய காலத்தில் அதற்குத் துணை யாக அதிவீரராம பாண்டியர் இயற்றிய நைடதம் கற்பித்து வந்தார்கள் பாடம் சொல்லும் போது நன்னூலுக்கு மேற்கோளாக நேமிநாதர், இலக்கண விளக்கம், வீர சோழியம், தொன்னூல் விளக்கம் முதலிய நூல்களிலிருந்து விளக்கம் தருவார்கள். நைடதம் பாடம் நடக்கும் போது சீறா, இராஜநாயகம், இராமாயணம், பாரதம் முதலிய நூல் களிலிருந்து மேற்கோள் தருவார்கள். ஒவ்வொரு பாடலையும் குறிப் பெடுத்துக் கொள்வோம். இவ்விதமாக இலக்கண, இலக்கிய நூல் களைப் படிக்கவேண்டுமென்ற அவா எனது உள்ளத் தெழுந்தது. பிற்பாடு இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்ந்து கற்றுவந்தேன். இவ்விதம் இருபத்தைந்து ஆண்டுகள் பாடம் கேட்டபின்னர் நான் அறிந்து கொண்டது, "அவர்களுக்கு மாணவனாக இருப்பதற்கு வேண்டிய தகுதி மாத்திரம் எனக்கு உண்டென்பது ஆகும்." பின்னர் அவர்களை அடுத்துப் பாடம் கேட்க வசதி இல்லாமல் போய்விட்டது காரணம் வயிற்றுக் கொடுமையே. பல இடங்களிலும் நான் தமிழாசிரி யராகத் திறம்பட பணியாற்றிய பெருமை என்னருமை ஆசிரியர் பாவலர் அவர்களையே சாரும். படிக்கும்போது ஆரம்பமாகக் காணிக்கை பெற்றுக் கொண்டார்களே தவிர யாதொரு ஊதியமும் பெற்றுக் கொண்டதில்லை. "தமிழ்ப் படிக்க விரும்பும் மாணவனுக்கு ஊதியம் பெறாமல் கற்பிக்க வேண்டும் என்பது எனது விருப்பம்" என்று அடிக்கடி கூறுவார்கள். தமிழ் கற்றவர்கள் இடத்தில் மிகுந்த மதிப்பும் நேசமும் காட்டி வந்தார்கள். ஏதோ ஒன்றிரண்டு நூல்களின் பெயரை அறிந்து வைத்துக் கொண்டு

'நானும் ஒரு புலவன்' என்று டாம்பீகமாகப் பேசுவோரைக் கண்டால் விரும்பமாட்டார்கள்.

என்னோடு பல மாணவர்கள் அவர்களிடம் பாடம் கேட்டு வந்தார்கள். அவர்களில் தேரூர் வித்துவான் உ. சிதம்பரதாணு பிள்ளை அவர்களும் கோட்டாறு ரா. உடையார் பிள்ளை B.A., L.T., அவர்களும் என் சக மாணவர்கள். எனது இருபத்தைந்தாண்டு பழக்கத்தில் ஒரு நூலையாவது தொட்டுப் பார்க்கவோ கடுதாசியில் பாடல்களை எழுதவோ நான் கண்டதில்லை மாணவர்களையே படிக்கச் சொல்லி விளக்குவார்கள். மாணவர்கள் தவறாகப் படிக்கும்போது புத்தகத்தில் இருப்பதுபோல் திருத்திச் சொல்லுவார்கள். இவ்வாறு வியக்கத்தக்க விதத்தில் நினைவாற்றல் பெற்றிருந்தார்கள். அவர்களிடம் அமைந்திருந்த நினைவாற்றல் போல் வேறு எவரிடமும் இருக்க நான் கண்டதில்லை.

பழநி மாம்பழக் கவிச்சிங்க நாவலர் அவர்கள் இயற்றிய சந்திர விலாசம், உமறுப்புலவர் அவர்களின் ஆசிரியராகிய கடிகை முத்துப் புலவர் அவர்கள் இயற்றிய சமுத்திர விலாசம், திருமலைவேல் கவிராயர் அவர்கள் இயற்றிய இரத்தினாகர விலாசம் முதலிய அரிய நூல்களுக்கு இவர்களைத் தவிர வேறு எவரும் உரைசொல்ல நான் கேட்டதில்லை. எந்த நூலை எடுத்துப் பாடங் கேட்டாலும் எந்த விதமான இலக்கண ஐயப்பாடுகளைக் கேட்டாலும் ஐயமகல விளக்குவதில் அவர்களுக்கு அவர்களே நிகர்.

பாவலர் அவர்களுடைய ஆசிரியர் சங்கர நாராயண உபாத்தியாயர் அவர்களாவார். அண்ணாவி என்றே பெரும்பாலும் அழைக்கப் படுவார். நானறிந்த வரையில் என்னருமை ஆசிரியர் அவர்களை செய்குதம்பி என்று அழைப்பது அவர் ஒருவரே. ஏனையவர் பாவலர் என்றே அழைத்து வந்தனர். அண்ணாவி அவர்களின் முன்னிலையில் அவர் இருக்கக் கூறினாலும் பாவலர் அவர்கள் இருப்பதில்லை. ஆசிரியர் அவர்களை இருக்கச் செய்து தான் நின்றுகொண்டே அவர் வந்த காரியத்தை வினவி அவரை அனுப்பிய பின்னரே ஓரிடத்தில் வந்து உட்காருவது வழக்கம் ஆசிரியரைக் காணும் போது கலைமகள் கோவிலுக்குள் பக்தர்கள் சென்று வழி படுகிற போது எவ்விதப் பணிவை மேற்கொள்வார்களோ அவ்விதமே பணிவுடனும் பக்தியுடனும் காணப்படுவார்கள்.

திருவருட் பிரகாச வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் அவர்களியற்றிய பாடல்களில் பாவலர் அவர்களுக்கு மிகுந்த அன்பும் ஈடுபாடும் உண்டு. அவர்கள் இயற்றிய திருவருட்பாவை மருட்பா என மறுத்த திரு நா. கதிர்வேல் பிள்ளையின் கூட்டத்தை எதிர்த்து

வாதஞ் செய்து பேசி அருட்பாவே என நிலைநாட்டி வெற்றி கண்டார்கள். பாவலர் அவர்கள் மருட்பா கூட்டத்தாரோடு எதிர் வாதஞ் செய்து எழுதியுள்ளவைகளைச் 'குதர்க்காரண்ய நாசமகாபரசு' என்னும் நூலில் விளங்கக் காணலாம்.

பாவலர் அவர்களிடம் பாடம் கேட்டு வந்த நாளில் சாற்றுக் கவிக் காகவும் வாழ்த்துப் பாக்களுக்காகவும் பலரும் வருவதுண்டு வருவார் விருப்பத்தை அறிந்து உடன்தானே செய்யுட்களை எழுதிக் கொள் ளும்படி சொல்வார்கள். எனது இருபத்தைந்தாண்டு பழக்கத்தில் செய்யுட்கள் கேட்டு வருவாரிடம் முடியாது என்று சொல்லவோ பின்னர் வாருங்கள் எழுதித் தருகிறேன் என்று சொல்லவோ நான் கேட்டதில்லை. உடன்தானே செய்யுட்களைச் செய்வார்கள். இவ்வாறு கேட்ட உடன்தானே இலக்கண வழுக்கள் கிஞ்சிற்றும் இன்றி இனிய பல செய்யுட்களை யாத்துத் தரும் இன்தமிழ்க் கவிஞர் பாவலர் அவர்களைப் போல் வேறு புலவரை இவ்வையகத்து யான் இதுவரை கண்டதில்லை. இத்தகைய கவித்திறன் கைவரப் பெற்ற பாவலர் அவர்களையும் இக்காலக் கவிஞர்களையும் ஒப்பிட்டு நோக்கும் போது பாவலர் அவர்களின் கவித்திறன் கண்முன் வருகிறது.

பாவலர் அவர்கள் எவ்வகைப் பா இயற்றுவதிலும் வல்லவராகத் திகழ்ந்து வந்தார்கள். இவர்களுடைய கவிதைகள் அனைத்தும் திட்பமும் நுட்பமும் ஓசைநயமும் செறிந்து விளங்குபவை. இவரு டைய பாக்கள் அனைத்தும் படிக்கத் படிக்கத் தெவிட்டாத கவியமுதாய் விளங்குகின்றன. படித்தவர் வாய் தேனூறும்படி இவர்களுடைய வெண்பாக்கள் அமைந்திருக்கின்றன. பாவலர் அவர்களுடைய வெண் பாக்களை நான் படிக்கும்போது நளவெண்பா இயற்றிய வெண்பாவிற் புகழேந்திதான் மீண்டுவந்து மகாமதி பாவலராய் அவதரித்தாரோ என எண்ணி என்னுள்ளம் மகிழ்ந்திருக்கின்றேன். அந்த மகிழ்ச்சி உங்களுக்கும் உண்டாக இதோ பாவலர் அவர்களுடைய ஒருசில வெண்பாக்கள்.

"தென்னனந்தை செய்தவத்தால் சித்திரைநாள் வந்துதித்த
மன்னவனைச் சேரர்குல மாமணியை - உன்னியிரு
கண்ணு மதித்துக் கருணைபொழிந் தாயர்குல
கண்ணு புரப்பாய் கனிந்து"

"மண்முழுதும் போர்த்து மறிகடலும் தான்போர்த்து
விண்முழுதும் போர்த்துமிக மிஞ்சியதே-உண்முழுதும்
கோபால மாயனடி கொண்டுவக்குஞ் சித்திரைப்பேர்
பூபாலன் பெற்ற புகழ்"

(இவ்விரண்டு வெண்பாக்களும் சேரநாட்டு மன்னன் சித்திரைத் திருநாள் மீது பாடியவை)

"ஓரெழுபா னாண்டு உனையுவந்த வையகந்தான்
ஈரெழுபா னாண்டும் இனிதுவப்பச்-சீரெழுபா
சிந்தும் பெருமுகிலே தேசிகவி நாயகனே
சந்ததமும் வாழ்வாய் தழைத்து."

(இது கவிமணியின் எழுபதாம் ஆண்டு நிறைவு விழாவின்போது பாடப்பட்டது)

"தாய்மொழிக்கே ஆர்வம் ததும்பத் தமிழாசை
வாய்மொழிக்கே ஓர்நூல் வகுத்துரைத்தான்-ஆய்மொழிக்கே
சான்றோரும் மெச்சுதகை சால்பதும னாபனெனும்
வான்றோய் புகழான் மதித்து"

(இது பதுமனுபன் என்பார் இயற்றிவந்த நூலுக்களித்த சாற்றுக்கவி)

"பொன்மாலை தேயுமலர்ப் பூமாலை வாடும்
கன்மாலைத் துண்டுபடுங் காரணத்தால்-சொன்மாலை
என்மாலை யென்றொருநூ லீந்துதவி னான்பெருமாள்
வன்மாலை நீத்து மகிழ்ந்து"

(இஃது கவிஞர் தே. ப. பெருமாளுக் களித்தது)

"ஆகஞ் சுகமா அடுத்தவர்கள் சேமமா
மேகம் வழங்கியதா மேலுமிந்தப்-போகம்
விளையுமா இன்னுமழை வேண்டுமா செல்வம்
வளையுமா ஊர்செழிக்கு மா."

"உள்ளபடி பல்கலையு மோகையுட னெந்தனுக்குக்
கள்ளமற வோதுவித்த கண்மணியை-எள்ளளவும்
நீங்காம னேசம் நெகிழாமற் பக்கம்விட்டு
வாங்காம னீயிருத்தி வை"

(இவையிரண்டும் தனது நண்பர் கோட்டாறு பாக்கியம் பண்டாரம் அவர்களுக்கு 1907 ல் சென்னையிலிருந்து பாடலாய் எழுதிய கடிதத்தில் இருந்து எடுக்கப் பெற்றவை.)

"பொல்லார்க் குரைக்குநறும் போதனைக ளத்தனையும்
நில்லா தவரிடத்தே நீங்கிடுமால்-இல்லிக்

குடத்தகத்தே யள்ளியள்ளிக் கொட்டுநீர் மற்றத்
தடத்தகத்தே நின்றிடுமோ சார்ந்து''

(இது அவர்களது நீதி வெண்பாக்களில் ஒன்று.)

பாவலர் அவர்கள் ஆசிரிய விருத்தம் இயற்றுவதிலும் நிகரற்று விளங்கினார்கள் என்பதற்கு அவர்களுடைய ஆசிரிய விருத்தங்கள் அனைத்தும் சான்று பகருகின்றன. அவற்றுள் ஓரிரண்டு இதோ :

''உருமகளை அயன்நாவில் உறைமகளை
பொறைமகளை உலகுக் கெல்லாம்
குருமகளை அன்பர்புகழ்க் குலமகளை
மலர்மகளைக் குறைதீர் செல்வத்
திருமகளின் மருமகளை நிலமகட்கும்
கலைமகளைச் செவ்வி வாய்ந்த
ஒருமகளை எனக்கருள வருமகளைப்
பெருமகளை உன்னல் செய்வாம்''

(அச்சக அதிபர் இட்டா பார்த்தசாரதிநாயுடு அவர்களின் வேண்டு கோளுக் கிணங்கிய பாவலர், சரஸ்வதி பேரில் பாடிய விருத்தம்)

''ஆயுமகத் தாரகத்து ளநுதினமும்
அகலாம லன்போ டச்சம்
தோயுமகத் தாயெந்தன் தூயகுணச்
சிவதாணுத் தோன்றால் யானின் (று)
ஏயுமகத் தென்றென்று மிருந்துபணி
யிருந்துசெய இருங்கல் லாலோர்
தாயுமக வுந்தருவாய் தகுவிலையே
தருவலிசை தழைக்குந் தானே''

(இது தன்னுடைய புதுமனையிற் குடியேறும்போது தனது நண்பர் சிவதாணு பண்ணையார் என்பாரிடம் ஓர் அம்மிக் கல்லும் குழவியும் கேட்டு எழுதியது)

பாவலர் அவர்கள் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்ற கொள்கை உடையவர்கள் என்பதற்குச் சான்று இதோ :

''ஒன்றுதெய்வ மொன்றுமத மொன்றுமக்கள் சாதியென
நன்றுபெற வோதியவை நாட்டிநவின் நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தளித்துக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ''

(இஃது பாவலர் அவர்கள் இயற்றிய 102 கலிப்பாக்களடங்கிய நபிநாயக மான்மிய மஞ்சரியிலிருந்து எடுக்கப் பெற்றது)

கம்பன் காவியத்தில் பாவலர் அவர்களுக்கு மிகுந்த பற்றுதல் உண்டு. அவர்களுடைய கம்பராமாயணச் சொற்பொழிவுகள் பலவற்றை நான் பலவிடங்களிலும் கேட்டிருக்கின்றேன். ''கம்பன் காவியத்தை நயம்பட விளக்கும் பழைய தலைமுறைப் பெரியார்களுள் நம் காலத்து வாழ்ந்தவர் பாவலர் அவர்கள் ஒருவர்தான்'' என்று தமிழ்ப் பெரியார் திரு வி. க. அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

''சொல்லொக்கும் கடியவேக சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கும் நிறத்தினான்மேல் விடுதலும் வைரக்குன்ற
கல்லொக்கும் நிறத்தில் தங்காது அப்புறம் கடந்து கல்லா
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்
றன்றே''

இது கம்பராமாயணம் தாடகைவதைப் படலத்தில் உள்ளது. இப்பாடலைச் சிதைத்தும் திரித்தும் வெளியிட்டிருந்தார்கள். இப் பாடலை விளக்கங் கேட்ட காலத்தில் கம்பன் பாட்டுக்கும் திருத்தின பாடலுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளைச் செவ்விய முறையில் விளக்கினார்கள். அப்பாடல் வருமாறு :

''சொல்லொக்கும் கடியவேக சுடுசரம் ஒன்றைத்தூய
அல்லொக்கும் நிறத்தினான்மேல் விடுதலும் வைரக்குன்றக்
கல்லொக்கும் நிறத்தில்தங்காது அப்புறம் கடந்துகல்லாப்
புல்லர்க்கு நல்லோர்சொன்ன பொருளெனப் போயிற்
றன்றே''

என்பது. கரிய செம்மல் என்ற பதத்தைக் கம்பன் பலவிடங்களில் அமைத்திருக்கும் நயத்தை விளக்கிக் காட்டி அந்நூலில் இருந்தே பல செய்யுட்களை மேற்கோள் தந்தார்கள். இப்பாடலின் பயனிலை 'போயிற்று' என்னும் ஒருமை வினைமுற்றினால் விளக்கி யிருப் பதனழகையும் செயப்படுபொருள் விகுதியேற்று நின்ற ஒன்றை நின்று பயனின்மை என்பதின் குற்றம்தங்க அமைந்திருப்பதையும் விளக்கி அந்நூலில் உள்ள பல பாடல்களுக்கும் விளக்கம் தந்நார்கள். அவை அனைத்தையும் எனது முதுமையினால் நினைவில் வைத்துக் கொள்ள முடியவில்லை.

கோடீச்வரக் கோவைக்குப் பின்னர் மூன்று கோவை நூற்களைக் குறையறப் பாடிய பெருமை பாவலர் அவர்களுக்கே உரியது. இவ்வாறு கண்டனைய வண்டமிழ்ப் பாக்களை விண்டு தண்டமிழன்னையின் புகழை நாற்றிசையும் போற்றிசைப்ப வாழ்ந்

தார்கள். பாவலர் அவர்களுடைய காலத்தில் இருந்துதான் நாஞ்சில் நாட்டில் தமிழ்க் கல்வி பெருகி வளர்ந்து நறுமணம் வீசிக் கொண் டிருக்கின்றது. இப்பொழுது நாஞ்சில் நாட்டுலாவும் பல தமிழ் வித்துவான்களும், பாவலர் அவர்களின் மாணவர்களும் மாணவர் களுக்கு மாணவர்களுமே ஆவர் என்பதை எண்ணும்போது அவர்கள் செய்த தமிழ்த்தொண்டு நம் கண்முன் வந்து நிற்கிறது. அத்தொண்டு என்றும் நின்று நிலவும் என்பதில் ஐயமில்லை.

பாவலர் அவர்கள் திருநாகூர் திரிபந்தாதி, திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, அழகப்பக் கோவை, ஷம்சுத்தாசீன் கோவை, நபிநாயக மான்மிய மஞ்சரி முதலிய கவிதை நூல்களும் தனிப்பாடல்களும் சீறாப்புராண உரை, தேவலோகத்துக் கிரிமினல் கேஸ், வேதாந்த விவகாரக் கிரிமினல் கேஸ் முதலிய உரைநடை நூல்களும் இயற்றியுள்ளாகள். இவைகளில் ஒருசில அச்சாகி வெளிவந்துள்ளன. மிகுதியை வெளியிட வேண்டுவது தமிழர்களின் தளிப்பெரும் கடமையாகும். அக்கடமையைச் செய்ய தமிழர்கள் முன்வர வேண்டுகின்றேன்.

வாழ்க பாவலர் திருப்பெயர்!
வளர்க அவர்தம் பெரும்புகழ்!

பாமாலை பாடிய பாவலர் பெருமான்

பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன்

கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை என்ற அழகிய நூல் கீழக்கரையில் குடிகொண்டுள்ள கல்வத்து நாயகம் என்ற இஸ்லாமிய மெஞ்ஞானியைப் பற்றி எழுந்த நூறு பாடல்களைக் கொண்ட சிறு நூலாகும். இதனை இபற்றிய கவிஞர் பெருமகன் நம் காலத்தில் வாழ்ந்தவர். நாகர்கோவிலைச் சார்ந்த கோட்டாற்றில் தோன்றிய அக்கவிஞர்பிரான் முஸ்லிம் சமுதாயத்தைச் சார்ந்தவர். சதாவதானம் செய்யும் பேராற்றல் படைத்தவர்; தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்ற பட்டப் பெயரைப் பெற்றவர்.

இத்தமிழ்நாட்டைப் பொறுத்தவரை ஒரு தனிச்சிறப்பு என்றுமே இருந்து வந்துள்ளது. சமயப் பொறை நிறைந்திருந்த சிலப்பதிகார காலத்திலும், அப்பொறை குறைந்திருந்த மணிமேகலை காலத்திலும், பல்வேறு சமயங்கள் தோன்றித் தம்முள் கலாம் விளைத்து நின்ற பிற்காலத்திலும் ஒன்றுமட்டும் பொதுவாக இருந்து வந்தது. அதுவே தமிழ் வளர்ச்சியாகும். சமய வேறுபாடு என்பது தமிழ் மொழிப் பற்றிலும் அதனை வளர்க்க மேற்கொண்ட முயற்சியிலும் தலைகாட்டவில்லை. எல்லா சமயங்களிலும் அருங்கவிஞர் தோன்றினர். தம் சமயக் கொள்கைகளை இனிய தமிழ் மூலம் பரவச் செய்தனர். பிறசமயங்களைச் சேர்ந்தவர்களும் சமய மாறுபாடு சருதாமல் தமிழ்ச் சுவையை மாந்திக் களித்தனர். அத்தகைய பெரும் புலவருள் சதாவதானம் பாவலரும் ஒருவர். பல்வேறு துறைகளில் இவரது நுண்மாண் நுழைபுலம் புகுந்து புறப்பட்டது. இரண்டு கோவைகள், அந்தாதி, பாமாலை முதலியன இவரால் இயற்றப் பெற்றன.

சித்தர்கள் என்போர் தமிழ்நாட்டில் பன்நெடுங்காலமாக இருந்து வந்துள்ளனர். இவர்கள் எல்லாக் கட்டுக்களில் இருந்தும் நீங்கிய வர்கள். ஏதாவதொரு சமயத்தைச் சார்ந்தவர்கள் என்று கூறப் பெறினும் பல்வேறு சமயத்தாரும் தொழும்படியான பெருமை பெற்றிருப்பதே இவர்கள் சாதாரண மக்களிலும் மேம்பட்டவர்கள் என்பதையும் சித்தர்கள் என்பதையும் அறிவுறுத்தும். கீழக்கரையில் கோயில் கொண்டிருக்கும் கல்வத்து நாயகமும் அத்தகைய சித்தருள் ஒருவரே. கல்வத்து மாலை என்ற நூலில் இவர் கூற்றாகக் கூறியுள்ள பாடல்கள் ஒருண்மையை அறிவுறுத்துகின்றன.

''விஸ்தார ஞானகவி
வில்லுங் குணங்குடியார்
மஸ்தான்சா ஹிப்புரைத்த
வாக்கு அனைத்து மேஎனது
நாவாய் இருந்தவர்கள்
நவின்றது அன்றி வேறுவிதப்
பாவாய் இருந்ததில்லை'' ...... என்றும்

''ஆதனம் காமுனிவர்
அகஸ்தியரும் சொன்னசுத்த
சேதனம் எனும் பெயரும்
செப்பப்பட்ட ஷெய்கிவர்காண்"...

என்றும் வரும் அடிகள் இவர் சூஃபிகள் எனப் போற்றப்பெறும் சித்தர்களுள் ஒருவர் எனக்கூறச் செய்கின்றன.

இப்பெரியார்மேல் சதாவதானம் செய்கு தம்பிப் பாவலர் இயற்றிய நூல்தான், ''கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை" எனப்பெறுவது. இந்நூல் மாலை என்ற பிரபந்த வகையை யொட்டி 100 பாடல்களைக் கொண்டு விளங்குகிறது. பண்டைய தமிழ் இலக்கண இலக்கியங்களில் தோய்ந்து ஊறி எழுந்தவர் பாவலர். எனவே அவருடைய பிறபாடல்கள் ஓரளவு கடினமான நடையுடன் இருக்கக் காணலாம். இந்நூல் பக்தி கனியப் பாடப்பட்டதாகலின் பாவலரின் இயற்கையான சொல் லோவியங்கள், கற்பனைகள் என்பவை இந்நூலில் இடம்பெற வில்லை. ஆனால் தமிழ்நாட்டில் தோன்றிய பக்தி நூல்களை எடுத்து ஒப்பிட்டுப் பார்த்தால் அவை சாதி, சமய பேதங் கடந்து ஒன்றை ஒன்று தழுவி நிற்பதைக் காணலாம். ஆண்டாள் திருப் பாவையும், மணிவாசகரின் திருவெம்பாவையும் பல்வேறு ஒப்பு வமைகளுடன் விளங்கக் காணலாம்.

பக்திப் பரவசத்தில் திளைத்துப் பாடிய பாடல்கள் புறநோக்கத்தைத் தடுத்து அகநோக்கத்தில் எழுந்தவையாகும். எனவே அவற்றில் கற்பனை, சொல்லோவியம் என்பவை இடம்பெறா. ஒரேவழி இடம்பெறினும் நம்கவனத்தை அவை ஈர்ப்பதில்லை. காரணம் கற்பனை, சொல்லோவியம் என்பன அறிவின் துணை கொண்டு அனுபவிக்க வேண்டியவை. ஆனால் பக்திப் பாடல்களில் அறிவுக்கு வேலை இல்லை. அறிவைக் கடந்து நிற்கும் அனுபவ நிலையில் எழுவதே பக்திப் பாடல்கள். அவற்றை இயக்கு பவர்களும் அறிவைக் கடந்த அனுபவத்தில் திளைத்து நின்றே பாடுகின்றனர். அதாவது தம் அனுபவத்திற்குக் கவிதை மூலம் ஒருவடிவு கொடுக்கின்றனர். அவற்றைப் படிக்கின்ற நாமும் அறிவைக் கடந்த அனுபவத்துள் நுழைந்தால் ஒழிய அப்பாடல் களை அனுபவிக்க முடியாது.

இனிய பொங்கலின் மணம் ஓரளவு மூக்கினால் நுகரப் பட்டாலும் அதனை முற்றிலும் அனுபவிப்பது நாப்புலனே யாகும். அதுபோல பக்திப் பாடல்களை அறிவின் துணை கொண்டு கற்றாலும் அவற்றை முற்றிலும் அனுபவிக்க வேண்டுமாயின், உணர்வின் துணையே வேண்டும். இக்கருத்தை மனத்துட் கொண்டு கல்வத்து நாயகம் பாமாலையைக் காண்டல் வேண்டும். எதற்கெடுத்தாலும் கருத்து வேற்றுமை கொண்டு போரிட்டு மடியும் இந்த நூற்றாண்டில் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை போன்ற பக்தி நூல்கள் அதிகம் தோன்றவில்லை. காரணம் மனித மனம் அமைதி அடைய மறுக்கிறது. என்றாலும் இருக்கின்ற ஒன்றிரண்டு நூல்கள் பொறாமை, சகிப்பின்மை, மனக்கொடுமை என்ற மனித வாழ்க்கைப் பாலைவனத்தில் தோன்றிய நீரூற்றுக் களாகும்.

பாமாலையின் ஆசிரியராகிய பாவலர், திருவாசகம், தேவாரம், பிரபந்தம், தாயுமானார், வள்ளலார் அருட்பா ஆகிய நூல்களில் தோய்ந்து எழுந்தவர் என்பது இந்நூலை ஒரு முறை கற்பாரும் எளிதில் அறியலாம். என்றாலும் ஜி. யு. போப் போன்ற பிறநாட்டுப் பிற சமயத்தார்களை மயக்கித் தன்பால் ஈர்த்துக் கொண்ட திருவாசகம், நம் தமிழராகிய பாவலரை ஈர்த்ததில் வியப்பில்லை ஒவ்வொரு பாடலுமே திருவாசகத்தின் எதிரொலியாக விளங்கக் காண்கிறோம்.

"வரையேற்ற மென்முலையார்
மாயவலைக் குள்ளாகி
விரையேற்ற நுங்கமல
மெல்அடிக்கீழ் நில்லாமல்

தரையேற்ற வெம்பாசச்
சாகரத்துள் ஆடுகின்றேன்
கரையேற்றல் ஆகாதோ
கல்லத்து நாயகமே”

என்ற இந்தப் பாடல் ‘‘தனியனேன் பெரும்பிறவி’’ எனத் தொடங்கும் திருவாசகத்தில் வரும் கனியை நேர்துவர் வாயார் என்றும் காலால் கலக்குண்டு காமவான் சுறவின் வயப்பட்டு

‘‘இனி என்னே உய்யுமாறு என்று என்றெண்ணி
அஞ்செழுத்தின் புனைபிடித்துக் கிடக்கின்றேனே
முனைவனே முதல் அந்தம் இல்லாமல்
கரைகாட்டி ஆட்கொண்டாய்”

என்ற பகுதியை நினைவூட்டி நிற்கக் காண்கின்றோம்.

ஆண்டவன் அருளைப் பெற்ற அடியார்கள் அவ்வருளை அனுபவித்துக் கொண்டு மகிழ்ந்துள்ளனர். ஆனால் ஆசிரியர் தாம் மட்டும் மட்டமான காமவலையில் சிக்குண்டு கிடப்பதாக 32-வது பாடலில் பாடியுள்ளார்.

‘‘துள்ளுண்ட மைமறிபோல்
சூழ்ந்து எழுந்து தூயவர்தாம்
ஒள்ளுண்ட நின்அருளை
மொய்த்துண்டு வாழ்ந்தார்யான்
விள்ளுண்ட மாமுலையார்
வெங்காம வெள்ளமுண்டு
கள்ளுண்ட நாய்நிகர்த்தேன்
கல்வத்து நாயகமே!”

இப்பாடல்,

“சிரிப்பார் களிப்பார் தேனிப்பார்
திரண்டு திரண்டுன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சிடுவார்

அவர் முன்னே,

நரிப்பாய் நாயேன் இருப்பேனோ
நம்பி இனித்தான் நல்காயே”

என்ற திருவாசத்தை அடியொற்றி வருதல் காணலாம்.

மாலையின் 36-ம் பாடலாகப் பாவலர் யாத்துள்ள
“சேய்பிழையைத் தாய்பொறுப்பர்
சிற்றினத்தோடு ஏழையர்செய்

தேய்பிழையை மேலவர்கள்
எண்ணுவரோ எண்ணரும்இந்
நாய்பிழையை யார்பொறுப்பர்
நாடும்உமை அன்றிமற்றோர்
காய்பிழையைக் காத்தருளும்
கல்வத்து நாயகமே!”

என்ற பாடல் இராமலிங்க வள்ளலாரின்,

“தடித்தவோர் மகனைத் தந்தைஈண்டு
அடித்தால் தாயுடன் அணைப்பள்”

என்ற அடியையும், திருவாசகத்தில்,

“பொறுப்பரன்றோ பெரியோர் சிறுநாய்கள்தம்
பொய்யினையே”

என்ற அடியையும் நினைவூட்டுகின்றன.

பட்டினத்துப் பிள்ளையாரின், “காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே” என்ற பாடலின் அடி, பாவலரின் மாலையில் 47-ம் பாடலில்,

“...... வெம்மயக்காம்
பாழ்ம் பௌவம் வீழ்ந்து அந்தோ
காதற்ற ஊசியொத்தேன்
கல்வத்து நாயகமே!”

என்ற முறையில் பேசப்படுகிறது.

வெறும் ஏட்டுக் கல்வியாகிய சாத்திரக் கல்வி மட்டும் எவ்வித பயனையும் நல்காது என்பது நம் பெரியோர் கூறிய உண்மை. இதனைத் திருநாவுக்கரசர்,

“சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்?”

என்றும் நம் காலத்து வாழ்ந்த பாரதியார்,

“பலகற்றும் பலகேட்டும் முத்துமாரியம்மா
பயன்ஒன்றும் இல்லையடி முத்துமாரியம்மா”

என்றும் கூறியுள்ள கருத்துக்கள் பாவலரின் பாமாலையில் 45-வது பாடலாக வருகின்றது.

“சந்தமுறும் வேதகலை
சாத்திரங்கள் அத்தனையும்

பந்தமுறக் கற்றுணர்ந்தும்
பக்திநெறி நில்லாமல்
சொந்தமுறு மாடுமனை
சொத்துசுகம் என்றலைந்தேன்
கந்தமுறக் காப்பீரோ
கல்வத்து நாயகமே!"

என்பதே அப்பாடல்.

இந்நூலில் 56-ம் பாடலில் கல்வத்து நாயகரை நம்பி வாழும் ஓர் ஆன்மா தன் அறியாமை காரணமாகவும் சத்தியம் தவறியது காரணமாகவும் அவரால் கைவிடப்பட்டால் தன் கதி என்ன ஆகுமோ என்று அஞ்சி அழும் நிலை பேசப்படுகிறது. இப்பாடலில் உள்ள ஓர் ஆழமான கருத்தும் அறிதற்குரியது. உலகத்தில் வாழும் சாதாரண மனிதர்கள் சரியான வழி எது என்று அறிந்திருந்தும் அதன் வழிச் செல்லமாட்டாமலும் ஆனால் அதே நேரத்தில் தவறான வழியில் செல்வதால் ஏற்படும் தண்டனையை அனுபவிக்க விரும்பாமலும் இருக்கக் காண்கிறோம். இக்கருத்தை பாவலர், "பொய் விட்டார் நெஞ்சத்தில்" என்ற பாடலில்,

"மெய்விட்ட பாவியெனை
வேண்டாமல் வேறுஒதுக்கிக்
கைவிட்டால் என்செய்கேன்
கல்வத்து நாயகமே!"

என்று கேட்டு வருந்துகிறார்.

சமயபேதங் கடந்து நிற்பது கவிஞரின் பாடல்கள் என்பதற்கு,

"உய்வந்த முத்தர்குழாம்
உற்றபர சிற்சபையின்
மெய்வந்த சான்றுரைத்த..."

என்று வரும் 94-வது பாடலும்

"கூட்டுவிப்பீர் சன்மார்க்கம்
கொள்ளுவிப்பீர் அன்பொழுக்கம்
ஊட்டுவிப்பீர் பொன்னருளை
ஓங்குவிப்பீர் இன்பநலம்
சூட்டுவிப்பீர் நும்மலர்த்தாள்
தோற்றுவிப்பீர் ஞானநெறி
காட்டுவிப்பீர் முத்திநிலை
கல்வத்து நயகமே!"

என்ற 99-வது பாடலும்

"அடைத்தேற ஐம்பொறியும்
ஐம்புலனும் ஐங்கோசம்
துடைத்தேற ஐந்தவத்தை
தூர்த்தேற தூயதவம் .. ...."

என்ற 100-வது பாடலும் சான்று பகருகின்றன. பக்தி நெறி செல்லு வார்க்கு சிற்சபை, பஞ்சகோசம், பஞ்சாவஸ்தை முதலியன கட்டுப் பாடுகளைக் கடந்து எச்சமயத்தாரும் போற்றும் உண்மைகளாய் விளங்கக் காண்கிறோம்.

பக்திப் பாடல்கள் ஏனைய பாடல்களுக்குரிய அழகுகளைப் பெறாமல் ஆழ்ந்த அனுபவம் ஒன்றை மட்டும் வெளியிடும் கருவியாய் அமைகின்றன என்பதற்கும் பக்தி நெறி செல்வார் சிறு சிறு வேறு பாடுகள் கட்டுதிட்டங்கள் முதலியவற்றைக் கடந்து நிற்பர் என்ப தற்கும் "கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை" சிறந்த சான்றாக விளங்கக் காண்கிறோம்.



எழுச்சி ஊட்டிய பாவலர்

டாக்டர் சி.இ. சுப்பிரமணியம், M.A., Ph.D.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் நாஞ்சில் நாடு அளித்த முஸ்லிம் தமிழ்ப் பெருமகன். ஆழ்ந்த படிப்பும், தேர்ந்த வாத வன்மையும் உடையவர். மாணவர் பலருக்குத் தமிழ் கற்பித்துப் பெரு மதிப்புப் பெற்றவர்.

1937-ஆம் ஆண்டில் என நினைக்கிறேன்; பாவலர் அவர்கள் நாகர்கோவில் நகராண்மைக் கழகத் திடலில், காங்கிரஸ் பிரச்சாரம் செய்தார்கள். நல்ல தமிழில் விடுதலையின் மேன்மையைக் குறிப்பிட்டு காந்தியடிகளின் பெருமையை விளக்கினார்கள். அவர் அன்று செய்த வீரமுழக்கத்தால் எழுச்சியுற்ற சிறுவர்களில் நானும் ஒருவன்.

ஏறத்தாழ ஆறாண்டு கழித்து, தமிழ்க்கலை மகாநாடொன்று ஒழுகினசேரி சரசுவதி படக்காட்சி நிலையத்தில் நடைபெற்றது. தொலை தூரத்தில் இருந்து பல அறிஞர்கள் வந்திருந்தார்கள். ஒரு நாள் மகாநாட்டிற்குப் பாவலர் அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருக்குறளின் முதற்பாவை சுமார் ஒன்றரை மணிநேரம் வரை விளக்கினார்கள். இடையிடையே தமது அனுபவ நிகழ்ச்சிகளும், மேற்கோள்களும் அவர்கள் பேச்சை எழிலுறச் செய்தன. அவர்களுடைய நினைவாற்றலையும், வாதவன்மையையும் எல்லோரும் பாராட்டினர். அகல நின்று அவர்களை வியந்து பாராட்டிய இளைஞர்களுள் நானும் ஒருவன். அவர்களுடன் நெருங்கிப் பழகும்பேறு எனக்கில்லை. அவர்களுடைய மாணாக்கர்கள் பலரையும் அவர்கள் மகன் திரு. ஹமீதையும் நன்கறிவேன். பாவலர் அவர்களின் தமிழ்த் தொண்டினை அறிய அவர்கள் பெரிதும் துணைசெய்தனர்.

பாவலர் அவர்களின் பெருமையை நினைவூட்டுவதற்கென மலரும் இந்நூலைப் படித்து இளைஞர் பலர் எழுச்சியுற வாழ்த்துகிறேன்.

பாவலரா, நாவலரா?

கவிராச பண்டித இராமசுப்பிரமணிய நாவலர்

உலகில் கல்விப் பேறும் செல்வப் பேறும் பெறுவதற்கு அருமை யானவை. அவற்றுள்ளும் கல்விப்பேறு அரிதினும் அரிது. கல்வி யொடு சொல்வன்மையும் கவினுற வாய்க்கப் பெறுதல் பொன் மலர் நறுமணம் உடைத்தாதல் போல வியக்கத்தக்கது ஒன்றாம். குமரி நிலம் செந்தமிழ்த் திருமணம் செறிந்து வீசப்பெற்று, அறிவின் செழுமை அமைந்து இலங்கி, இன்ப விளையுள் ஈனும் எழில் நிலம் ஆகிச் சான்றோரால் யாண்டும் கருதப்படுமாறு, அந்நிலத்தின் கண்ணே தோற்றஞ் செய்த பெருந்தகையர் வியப்புக்குரிய உயர் திருவாளர் செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

எனது இளமைப் பருவத்தில் அன்னாரை ஒரு அவதானி என்று மட்டுமே நான் அறிந்திருந்தேன். அவதானம் நினைவாற்றலின் பயனாய் விளங்குதலாலும் அதன் பொருட்டு முற்றக்கற்ற நற்ற கவுடைமை வேண்டப்படும் என்பது ஒருதலையன்று ஆகலானும், அவதானத்தின் மீது எனக்கு மிகு மதிப்பு இல்லாதிருந்தது. (அவதானம் என்பது உள்ளத்தில் பதிய வைத்தல். சதாவதானம் என்பது ச அவதானம் (ஸ + அவதானம்) எனப் பிரிக்கப்பட்டு 'உள்ளக் கருத்துடன்' என்னும் பொருள்தரும்) பாண்டி நாட்டிலும் சோழ நாட்டிலும் அவதானிகள் சிலரை எதிர்ப்பட்டுள்ளேன். அவர்கள் யான் விடுத்த வினாக்களுக்கு மாற்றம் தராது மயங்கினமை கண்ட எனக்கு அவதானிகளிடத்து நினைவாற்றல் பற்றிய மதிப்பு உண்டாயினும் மாசறு கல்வி பற்றிய மதிப்பு இல்லாதிருந்தது. நான் விடுத்த வினாக்களிற் சில கீழ் வருவன.

கைகோள், புலனெறி வழக்கம் என்பதற்குப் பொருள் என்னை ?

வழக்கு, நாடக வழக்கு என்பவற்றுக்குத் தம்முள் வேற்றுமை யாது?

களவு வெளிப்படுவது இரு வகை ஒழுக்கத்தினுள் எதனைச் சாரும்?

'ஆன, மேன' என்னும் தொல்காப்பியச் சூத்திரச் சொற்கள் எந்நெறியான் அமைந்தன?

தொல்காப்பியர் வினாவெழுத்து மூன்று என்றார். ஏனையவை வழக்கிலிருந்தும் அவர் ஏன் கூறிற்றிலர்?

இவன், துறைவன், மாயிருஞாலம், ஆயிடை என்பவற்றுக்குரிய புணர்ச்சி விதிகள் யாவை?

இன்னோரன்ன வினாக்களைச் செவிமடுத்துப் புலன்மடித்த அவதானிகள் பலர். எனினும், பாவலர் பண்பட்ட புலவர் எனச் சிலர் வாய்க்கேட்ட பின்னர், அவரைக் கண்டு உசாவவேண்டும் என்னும் அவா என்னைத் தூண்டிற்று. அப்போது எனக்கு அகவை பதினேழு. புலவர் காவலர் ஆகிய பாவலரை ஆவலுறக் கண்டு பேச வாய்த்தது ஒருநாள். அது வாழ்வில் மறக்க இயலாததொரு பொன்னாள். பாவலரை அவர் கடையில் கண்டேன். 'யார்' என்றார். 'மகாராணி வாழ்த்து அனுப்பினவன்' என்றேன். அவர் இதழ்களில் புன்னகை விளையாடியது. 'தக்கலையா, நாவலரா?' என்று வினவினார். நான் குறுநகையால் உடன்பாட்டு விடையிறுத்தேன். 'இருங்கள்' என்றார் பாவலர். நானும் அவர் முன்னர்ச் சிறிது நீங்கி இருக்கலானேன். இருந்த பின்னர். 'பாடல் நன்றாயிருக்கிறது; தங்கட்குப் பத்து நாற்பது வயதிருக்கலாம் என்று எண்ணியிருந்தேன்; தோற்றத்தில் சிறுவராக இருக்கிறீர்கள்; வயதென்ன?' என்றார் பாவலர். 'பதினேழு; என்றேன் நான். 'இல்லை. தங்கள் கல்விக்கு வயது நாற்பது; தங்களைப் பற்றித் திருவனந்தபுரத்தில் உள்ள நண்பர் சிலர் வாயிலாகக் கேட்டிருக்கிறேன்' என்றார் பாவலர். அவ்வாறு கூறி முடித்தவுடனே மீண்டும் பாவலர் 'என்னால் ஆகவேண்டுவது யாதேனும் உண்டோ?' என்று கேட்டார் அக்கேள்வி என் உட்கருத்தை முடிப்பதற்கு சிறந்த வாய்ப்பளித்தது. அவதானிகள் சிலரிடம் நான் முன்னர் வினவிய வினாக்களைப் பாவலரிடமும் வினவினேன். ஒவ்வொரு கேள்விக்கும் ஆற்றொழுக்குப் போலத் தொடர்ச்சியாகவும் விரைவாகவும் மகிழ்ச்சியுடன் விடை அளித்தார் அப்புலவர் பெருந்தகை.

பாவலர் அவர்கள் உடல் வருந்துவது நோக்கி நான் இடைவிலக்கிப், 'போதும், நான் நங்களைத் தவறாகக் கருதி விட்டேன்'

என்று வருந்திக் கூறினேன். 'என்னைச் சோதிக்க விடுத்த வினாக்களே இவை, அல்லவா?' என்று மீட்டு வினாவிய பாவலர் கோமானுக்கு என்ன கூறுவேன், நான். வாளா இருந்தேன். அவர் விடுத்த விடைகள் கரிசறக் கசடறக் கழுமலறக் கற்றாரிடத்தன்றி மற்றாரிடத்து எதிர்பார்க்கலாகாதவை. அவ்விடைகளை எனக் கென்றே பாவலர் அவர்கள் ஒருக்கஞ்செய்து வைத்திருக்க வேண்டு மென்று எனக்குத் தோன்றியது. அத்துணைக்குத் தெளிவான விடைகள். அவற்றைக் கேட்டபின், 'நிரம்பாத கல்வி உடையாருக்கே சிறப்பளிக்கும் போலும் இவ்வுலகம்! உலகம் குருடோ? இன்னோரன்ன நல்லிசைப் புலமையாளரைக் கண்டுகளிக்கும் ஆற்றல் உலகிற்கு இல்லையோ ?' என்று நான் பெரிதும் கவன்றேன். கவற்சியை வெளிப்படுத்தாதிருக்க இயலவில்லை ஆகவே நான் பாவலர் அவர்களை நோக்கி 'தாங்கள் பாவலரும் நாவலருமாக விளங்கு கிறீர்கள். உலகம் விழிகளை மூடிக் கொண்டிருக்கிறது. சாமிநாத ஐயர் அவர்களையும் நாராயண அய்யங்கார் அவர்களையும் இராகவை யங்கார் அவர்களையும் எல்லோரும் இன்னும் அறியவில்லை' என்று தாழ்ந்த குரலில் கூறினேன். அதுகேட்ட பாவலர் அவர்கள், விசும்பைக் குடத்துள் அடக்கிக் காட்டுவது போல், என் கருத்துக்கு விடையாகக், "கூத்தாடியை யாவரும் அறிவார், கொற்றவனை யார் அறிவார் ? அறிவார் சிலரே" என்றார். கற்றாரோடு உரையாடல் நனி மகிழ்வு தரவற்றாயினும், பிறருடைய தலையீடு ஏதுவாக, விரைவில், நான் அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். பின்னர் இருமுறை பாவிலும் நாவிலும் வல்ல அப்பண்புடையாளரை என் வீட்டிலேயே எதிர்ப்படும் பேறு பெற்றேன் நாங்கள் எதிர்ப்படும்போது பெரும் பாலும் மொழி பற்றிய ஆராய்ச்சிகளே நிகழ்வன ஆயின. வழி யிடையேயும் பன்முறை நாங்கள் எதிர்ப்பட்டதுண்டு. எதிர்ப்படும் போதெல்லாம் தமது கல்விப் பெருமையையும் வயதின் மிகுதியையும் பொருள் செய்யாமல் நான் தொழுமுன்னரே அவர் சலாம் இடுவார். கல்விக்கழகு சான்றாண்மை, பண்பிற்கழகு பணிவுடைமை என்னும் சீரிய உண்மைகளைப் பாவலர் அவர்கள் முற்றிலும் கடைப் பிடித்து ஒழுகினார்.

ஒரு நாள் ஒருவர், 'புலவர்' எனத் தம்மைக் கூறிக் கொண்டு ஒரு சுவடியுடன் என்னைக் காண வந்தார். அவரை உபசரித்து இருத்திய பின், 'அடைந்தது என் கருதி' என்று கேட்டேன் அவர், 'இது நான் இயற்றிய பாடல்கள் கொண்டது. இதைத் திருத்தி ஒரு சாற்றுக் கவி தரவேண்டும்' என்று என்னை வேண்டிக் கொண்டார். நான் பாடல்களைப் படித்தபோது அவற்றுள் பல இலக்கண வழுக்கள் இருப்பன தெரிந்தன. பல இடங்களில் குற்றிய லுகரம் உயிர் முன்னிற்கவும் கெடுக்கப்படாதிருந்தது. "கெடுக்கப்படவேண்டு

மிடத்துக் குற்றியலுகரம் கெடுக்கப்படவில்லையே. புணர்ச்சி நிகழின் வழுவிய யாப்பு மேலும் வழுவாமே'' என்று நான் அவரைக் கேட்டேன். நான் கூறியது அவர்க்குப் புலனாகவில்லை. யாப்பிலக்கணம் உணராமலே, செய்யுள் ஓசையை அறிந்தவாறு பின்பற்றிச் செய்யப் பட்டவை அப்'பாடல்கள்'. ஆகவே நான் அவரிடம் ''இவற்றைப் பாவலரிடம் காட்டி சாற்றுக் கவி பெற்று வாருங்கள். அவர் ஒப்புக் சொண்டால் போதும்'' என்று கூறிப் பாவலர் அவர்களிடம் அவ்ரை வழிப்படுத்தினேன். பின்னர் அவர் இது வரை என்னை மீட்டும் எய்தினார் அல்லர். சில நாட்கள் சென்ற பிறகு நான் பாவலர் அவர்களை எதிர்ப்பட நேர்ந்தது. அப்பொழுது அப்'புலவரை'ப் பற்றி அவரிடம் வினவினேன். அதுகேட்ட அவர், ''உழாமலே விளைவுபெற முயல்பவர்கள் பலர்; அவரும் ஒருவர். அவர் தங்களிடம் வந்ததும் தாங்கள் என்னிடம் அவரை அனுப்பியதும் தெரிந்து கொண்டேன். 'சரக்கு அறுதி, செருக்கு மிகுதி'. ஆயினும் கட்டாயப் படுத்தினமையால் ஒரு சிலேடைக் கவி பாடிக் கொடுத்திருக்கிறேன்'' என்று நகைத்துக் கொண்டே கூறினார்.

பல சொற்களில் பிறர் கூறும் விடைகளைச் சில சொற்களில் அமைத்து ஆழ்ந்த பொருள் விளங்கக் கூறும் திறப்பாடு பாவலர் பெருந்தகையிடத்து இயல்பாகவே மிளிர்ந்தது.

'அவை வந்தது, அது எல்லாம்' என்றாற்போல வழுப்பட எழுதி விட்டு, 'ஒருமை பன்மை மயக்கம்' என்று சிலர் விடை கூறுகின்றனரே! தங்கள் கருத்து என்ன?' என்று ஒருபோது பாவலர் அவர்களிடம் நான் கேட்டேன். அவர் கூறிய விடை இன்றும் காதில் ஒலிக்கின்றது. அவர் கூறினார்: 'காமத்தால் மயங்கலாம்; மகிழ்ச்சியால் மயங்கலாம்; கோபத்தால் மயங்கலாம்; எப்பொழுதும் மயங்குவது மரணம் தானே? வழுக்கிச் சேற்றில் விழுந்தால் கழுவிக் கொள்ள வேண்டாமா?' என்று. இவ்வாறு பிறிது மொழிதல் அணிவகையால் மிக வாய்ப்புற்ற விடை வழங்குவது பாவலர் அவர்களுடைய தனிச் சிறப்புக்களில் ஒன்று. பாவலர் அவர்கள் கருத்தாவது: 'காமம், உவகை, சினம் முதலியவற்றால் திணைபால் இடங்கள் மயங்கி வரலாகும். யாண்டும் இவ்வாறு (ஏதுவின்றி) மயங்கின் முற்றிலும் வழுவாய் எடுத்துக் கொண்ட இலக்கியம் கெடும். மயக்கம் எங்கும் ஆகுமெனில் அவன் வந்தாள், அவள் வந்தான் என்பதும் ஒக்கும். சேற்றில் விழுந்தவன் கழுவிக்கொள்வது போலச்சொற்கள் சிலவிடத்து மயங்கினால் கருத்தினிமை யாப்பழகு வழுப்படா. நல்லியல்புகள் முதலியவற்றின் சிறப்பினால் அம்மயக்கம் கருதப்படாவாறு அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்' என்பதாம்.

திருக்குறள் முதலிய இலக்கியங்களிலும் பாவலர் அவர்களுக்குப் பண்பட்ட பயிற்சி உண்டு. அவருடைய புலமையாற்றல், பொருள் செயற்றிறன் முதலியவற்றை எழுதப் புகின், மிக விரிந்தொழுகு மாதலால் சிலவற்றை மட்டும் கூறிவிடுப்பல்.

'இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று'

என்னும் குறட்பாவுக்குப் பரிமேலழகர், "பலசுடரை உடைத்தாய பேரெரி வந்து தோய்ந்தால் ஒத்த இன்னாதவற்றை ஒருவன் செய் தானாயினும் அவனை வெகுளாமை ஒருவற்குக் கூடுமாயின் அது நன்று" என்று உரை கூறினார். பாவலர் அவர்கள், "பல...செய் தாயினும் அவ்வாறு செய்தவன் மீண்டும் வந்து நட்புக் கொள் வானாயின் அவனை வெகுளாமை நன்று" எனவும் ஒரு பொருள் உரைக்கலாகும் என்பர். பரிமேலழகர் 'வெகுளாமை புணரின்' என மொழி மாற்றி உரைத்தார். இவ்வாறே திருக்குறட்பாக்கள் பல வற்றுக்கும் ஓவரும் சிறப்பிற் பாவலர் ஏந்தல் பல்வுரை பகர்ந்து பயின்றாரை மகிழ்விக்கும் பண்பின் மேம்பட்டவராவர்.

பாவலர் அவர்களுடைய கருத்துக்கள் பொருள் பொருந்தியவை. மொழி நடையைப் பற்றிக் கூறுகையில், "எளிய நடை வேண்டுவதே ஆயினும், மக்களறிவிற்குத் தக்கவாறு மொழி நடையைத் தாழ்க்க லாகாது, மொழி நிலைக்குத் தக்கவாறு மக்கள் அறிவு உயரவேண்டும். இழிந்த நடை யாவர்க்கும் எளிது. உயர்ந்த நடை அரிது. உல கொழுக்கு இறந்த நடை பயன்படாது" என்பர். நடைக்கு மொழி நடையும் ஒழுக்கமும் பொருளாம் என்க. இவ்வுரையில் மறைந்து கிடக்கும் அரும்பொருளை ஆராய்ந்து காண்க.

கற்றாரைப் பற்றிக் கூறுகையில், "வள்ளுவனையும், கீரனையும், இளங்கோவையும் சிலரே அறிவார். ஊர்ப்பாடியை யார் அறியார்?" என்பர் பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்கள் யாப்பின் வழி ஒழுகும் பாடல்களையே பெரிதும் விரும்புவர். இக்காலத்து நிகழும் இசைப் பாடல்களில் விருப்ப மின்மையைக் குறிப்பாகக் காட்டுவர். பிற்காலத்துக் கவிஞராகப் பலரால் கருதப்படுவோருட் பலரும் பாவலர் அவர்களது நெஞ்சகத்துக் கவிஞராக இடம் பெறுபவர் அல்லர். இலக்கணப் புலமை சிறப்ப வாய்த்திராதவர்களைப் புலவர்கள் எனப் பலர் வழங்கினும் பாவலர் அவர்கள் அவர்களுக்குத் தம் உள்ளத்தில் பிறிதிடமே அமைப்பர். 'இவர் போதிய கல்வி இல்லாதவர்' என்று தெரிந்திருந்தும் அவரை ஊக்குவதன்றி இகழார்.

பாவலர் மிகுந்த சொல்லாற்றல் உடையவராதலால் நாவலருமாய் விளங்கினர். வாய்வந்த பேச வல்லார் நாவலர் ஆகார் இலக்கண இலக்கிய நூல் வல்லவரும் பாடுதலில் வல்லவருமே நாவலர் ஆவார்- இவ்வியல்புகள் பாவலர் கோமானிடம் நன்கு அமைந்து கிடந்தன. பாவலர் கோமான், நாவலர் பெருமான், இலக்கண வேந்தன், இலக்கியச் செம்மல் என்று நான் அவர்களைப் பல பெயர்களால் அழைப்பினும், அவர்களது உட்செறிந்த மாண்புக்கு ஈடாகாது.

பாவலர் வாழுங் காலத்து அவர்க்குச் சிறப்பளிக்க முற்பட்டவர் மிக அரியவர் ஆவர். அவர் புகழ் வாழும் இக்காலத்தும் நம்மனோர் நம் கடப்பாட்டைச் செய்ய முன்னிடாமை மிக வருந்தற்பாலது. தம் பாடல் அமுதால் உலகினை ஊட்டும் கவிஞர்க்கு அவர் உயிர் வாழும் பொழுதே உயர்வளித்து மகிழ்விக்க மாட்டாத உலகம் நன்றி கெட்டது என்றே நவிலவேண்டும். இனியேனும் பொறாமை, தன்னலம் பேணல், வெறுப்பு, பகைமை, வகுப்பு வேற்றுமை முதலியவைகளை அறவே நீக்கி நம் பாவலர் பெருந்தகையைப் பாராட்ட முற்படுவோமாக.

பொருள்சே ரகமும் புறமுமறிந் துள்ளம்
தெருள்சேர் வகையில் சிறந்தோன்--திருவாளர்
செப்புமவ தானியெனுஞ் செய்குதம் பிக்குநிசர்
ஒப்புவரு பாவலனுண் டோ

நான் கண்டபடி...

தெ.பொ.மீனாட்சி சுந்தரனார், M.A., B.L., M.O.L.

நான் சிறுவனாக இருந்த காலம் - பத்தாண்டு நிறைந்த பையனாக வெளியுலகினை அறியாது வீட்டிலேயே பழகிய நாட்கள் - வெளியுலகில் நான் செல்லாவிடினும் வெளியுலகம் என் வீட்டிற்குள் வந்து புழங்கிய காலம் - துறவிகள் - தமிழறிஞர்கள் - நாட்டுப் பற்றில் பழுத்த நல்லவர்கள் - அடிமை நாடாக நம்நாடு இருப்பதா என்று ஆராமைமிக்கு விடுதலைக்காகத் துடிதுடித்தார்கள். இதனிடையே பழைய பண்பாட்டினைத் தாய் நாட்டு வடிவமாகக் கண்டு போற்றியவர்கள் - தமிழாகக் கண்டு வாழ்த்தியவர்கள் - இவர்களைக் காணும் பேறும், பழகும் பேறும் பெற்ற யான் அவர்கள் அன்பையும் வாழ்த்தினையும் பெற்று, மகிழ்ந்தேன். பத்து ஆண்டுதான் நிரம்பிய பையனுக்கு என்ன விளங்கும்? இருந்தாலும் சூழ்நிலை ஆளை உருவாக்காது விடுவதில்லையே.

என் குடும்ப நிலை இப்போது விளங்குமே. தமிழறிந்த குடும்பம். என் பாட்டனாருடன் மெத்தென்ற படுக்கையில் படுத்திருப்பேன். அவர் அப்போதப்போது எடுத்துரைக்கும் திருக்குறளும் நாலடியாரும் நான் அறிந்தவை. என் தகப்பனார் அட்டாவதானம் சுப்பராயச் செட்டியாரின் மாணாக்கர். அதனாலேயே தம் ஆசிரியரின் ஆசிரியரான மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் பெயரை எனக்குச் சூட்டினார். என் தமையனார் திரு கிருஷ்ணசாமிப் பாவலர், திரு. வடிவேலுச் செட்டியாரிடம் தமிழ் பயின்றிருந்த காலம். என்னுடைய தமிழ்த் தொட்டில் தெரிகிறதன்றோ?

இந்தக் குழுவில் பல பெயர் வந்தனர். அப்போது வந்தவர் ஒருவர் நினைவு வருகிறது. அவரே செய்குதம்பிப் பாவலர். உடல் நலம்

குன்றி இருந்தாலும் உள்ளத்துறுதி குன்றாத தோற்றம். இசுலாமியர் என்று எண்ண நின்றாலும் பழுத்த தமிழ் வடிவம். நானோ சென்னை வாழ் பையன். அவரோ நாஞ்சில் நாட்டார். மொழி நடை விளங்குவதும் அரிதாகவே இருந்தது. ஆனால் அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ். பிறர் பேசும் வட்டார மொழி நடையை எல்லாம் அவரவர்கள் உயர்வோடு போற்றும் மனப்பான்மை என் உள்ளத்தில் எழுந்தது. எள்ளி நகையாடும் பிறர் போக்கு எனக்கு இன்றும் விளங்காமைக்குக் காரணம் இந்தப் பழக்கமே ஆம். என்மொழி நூல் கலைக்கு வித்து அன்றே இடம் பெற்றது.

பாவலர் அவர்கள் திருவருட்பாக் கூட்டத்தைச் சேர்ந்தவர். அருட்பாவை மருட்பா என்று இழித்துரைத்தவர்களோடு இந்தக் கூட்டம் எழுத்திலும் போராடும். கூட்டத்திலும் மன்றாடும். அரசியல் போராட்டம் இல்லாத காலத்தில் இத்தகைய போராட்டத்தில் மக்களுக்கு ஒரு ஈடுபாடு. போராட்டம் இன்றி மக்கள் வாழமுடியாது போலும்!

அப்போது திரு. கதிரைவேற்பிள்ளை அவர்கள் மருட்பாக் கூட்டத்தில் தலைசிறந்தவர். அவர் சதாவதானம் செய்தார். திரு. செய்குதம்பிப் பாவலர் தாமுந்தான் செய்யக் கூடும் எனச் செய்து காட்டினார். பலரும் செய்யக்கூடும் என்றும் வற்புறுத்தினார்.

இது என் தமையனார் ஊக்கத்தைத் தட்டி எழுப்பியது. ஒருவர் செய்வதனை மற்றொருவர் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் ஓங்கியவர் அவர். அதனால் பிறர் செய்து காட்டியதனைத் தாமும் செய்து காட்டத் துடிதுடிப்பவர். எனவே தாமும் அவதானம் செய்ய வேண்டும் என முனைந்தார். அவரிடத்தில் அன்பு கொண்ட செய்குதம்பிப் பாவலர் அடிக்கடி எங்கள் வீட்டிற்கு வருவார். இலாட சங்கிலியைக் கழற்றிக் கொண்டே புலவரிடையே சுற்றிக் கொண்டு வரவேண்டும். அப்போது ஒருவர் முதுகில் கல்லெறிவார். ஒருவர் நெல்லெறிவார். ஒருவர் பல குடங்களிலிருந்து பல சுவை நீரை ஒவ்வொரு சுற்றிலும் தருவார். ஈற்றடி கொடுத்து ஒரு வெண்பாவைப் பாடச் சொல்லுபவரிடம் ஒரு சுற்றுக்கு ஒரு சீராகச் சொல்ல வேண்டும். காலில்லா வெண்பாப் பாடச் சொல்லுவார் ஒருவர். கொம்பில்லா வெண்பாப் பாடச் சொல்லுவார் மற்றொருவர். பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து ஒரு பாட்டினைக் கொடுத்து விளக்கச் சொல்லுவார் ஒருவர். இதற்கிடையே சீட்டாட்டத்தில் ஒரு கையாக அவதானியார் இருந்தும் விளையாடி வரவேண்டும். 16 கட்டங்கள் நிறைந்த சதுரத்தில் கொடுத்த எண் எந்தப் பக்கம் கூட்டினாலும் வரும்படி வரிசையாக அமைக்கவேண்டும். இப்படி நூறு பணிகளை மனதொருமைப் பாட்டுடன் செய்வதே சதாவதானம்.

இவ்வாறு பல முறை எங்கள் தமையனார் செய்து வரும்படி வீட்டிலேயே செய்குதம்பிப் பாவலர் பழக்கினார். வீண் பெருமை சிறிதுமில்லை. ஆண்டவனிடம் ஊன்றிய அன்பு, மக்களிடம் பரந்த அருள், ஆன்றவிந்தடங்கிய புலமை, அயரா உழைப்பு, எளிமை - இவற்றையே என்றும் கண்டேன். பல நூல்களை அச்சிடும் வேலையில் ஓயாது பிழைதிருத்தும் பெருந்தொண்டும் என் கண்ணெதிரே நிற்கிறது. இவர் தந்த ஊக்கத்தினால் என் தமையனாரின் ஊக்கம் தழைத்தோங்கியது. அவரும் திரு. சதாசிவ ஐயர் தலைமையில் சோடசாவதானம் செய்தார். பின் சதாவதானமும் செய்தார்.

அம்மட்டுமா? கற்றறிந்த பலருக்கும் ஊக்கம் வந்தது. எனக்குக் கூட அப்படித் தோன்றியது. இப்படி எல்லோரையும் தம் போல பெரியோர் ஆக்கும் சிறப்பினைப் பலரிடம் காண்பது அரிது. திரு. செய்குதம்பிப் பாவலர் அந்தச் சிறப்பே உருவானவர். வேறு பல அவரைப் பற்றிக் கூறமுடியும் ஆனால் இதுவே என்னுள்ளத்தில் ஊறி என்னையும் வாழச் செய்தது என்று தோன்றுவதால் இதனை வற்புறுத்துவதோடு முடித்துக் கொள்கிறேன்.

புகழ்மாலை

ஜே.எம். சாலி, M.A.,

இறைவனின் நாமத்தை வாய் உச்சரித்துக் கொண்டிருக்க வேண்டும்.

கைகள் இலாட சங்கிலியைக் கழற்றிப் பூட்டியபடி இருக்க வேண்டும்.

வருகிறவர்களை 'வாருங்கள் வாருங்கள்' என்று வரவேற்க வேண்டும்.

நெல்லோ கல்லோ முதுகின்மீது வீசி எறியப்படும். அதையும் சரியாக எண்ணிக் கொள்ளவேண்டும்.

ஆளுக்கொரு வார்த்தை சொல்வார்கள். அவற்றைக் கேட்டுக் கொண்டு பின்னர் அவர்கள் கேட்கிற தருணத்தில் அவரவர் வார்த்தையைத் திருப்பிச் சொல்ல வேண்டும்.

கண்ணால் காண முடியாத மறைவிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்களிலிருந்து ஓசை எழுப்பப்படும். அந்த ஓசையின் அளவை நினைவுபடுத்தி அது எத்தகைய பாத்திரம், அதன் எடை என்ன என்பதைக் கூறவேண்டும்.

இப்படி ஒரு நீண்ட பட்டியலைப் பார்த்ததும் 'இதெல்லாம் நடக்கிற வேலையா ?' என்று கேட்கத் தோன்றும். ஒரே சமயத்தில் ஒருவரால் இத்தனைப் பணிகளைச் செய்யமுடியுமா? முடியும். எட்டு வேலை களை, பத்து வேலைகளை, நூறு வேலைகளை ஒரே நேரத்தில்

செய்யமுடியும். அவதானம் என்னும் அருங்கலையை அறிந்தவர்களால் இது இயலும்.

"மெஞ்ஞான நாதா...மெஞ்ஞான நாதா..."என்று வாய் உச்சரிக்க நூறு பணிகளை ஒரே சமயத்தில் நிகழ்த்தி சதாவதானி என்ற உயர் பெருமையைப் பெற்றவர் செய்குதம்பிப் பாவலர் அவர்கள். 1907-ம் ஆண்டு மார்ச் மாதம் 10-ம் நாள் சென்னை நகரம் அந்த அரும்பெரும் காட்சியைக் கண்டது. விக்டோரியா பப்ளிக் ஹால் என்று அழைக்கப்பட்ட மண்டபத்தில் மக்கள் திரள். பல முனைகளிலிருந்தும் கேள்விக் கணைகள் கிளம்புகின்றன. முதல் எழுத்தை, அடியைத் தந்து பாடல் கேட்கிறார் ஒருவர். கண்ட பத்திரிகை பாடச் சொல்கிறார் மற்றொருவர். இலக்கணத்திலிருந்து சில பல கேள்விகள், இலக்கியத்திலிருந்து சில ஐயப்பாடுகளை எழுப்புகின்றனர் வேறு சிலர். ஆயிரம் ஆண்டுகளுக்கிடையில் ஒரு ஆண்டு மாதம் தேதியைக் கூறி நாள் கேட்கிறார் ஒருவர். ஓசைகள், புலன்கள், சுவை பற்றிய சோதனைகள் நடத்தப்படுகின்றன. 'பாவலருக்கு இணை பாவலர்தான்' என்று அவை முடிவு செய்கிறது. மகாமதி, சதாவதானி என்ற பட்டங்கள் வழங்கப்படுகின்றன.

அவதான மேதை பாவலர் அவர்கள் பிரசங்க மேருவாகத் திகழ்ந்த பெருநிலையை அன்றைய தமிழகம் கண்டு மகிழ்ந்தது. பாவலர் அவர்களின் உரைக் கோவைகளைக் கேட்பதற்கு ஊரே திரண்டு வரும் நிலை இருந்து வந்தது. இராமாயணத்தையும் பெரிய புராணத்தையும் சீறாப் புராணத்தையும் ஊர்தோறும் நாட்கணக்கில் வாரக் கணக்கில் விரிவுரை நிகழ்த்தி வந்தார், பாவலர் அவர்கள். சொற்பொழிவு நிகழ்த்தத் தொடங்கி விட்டால் போதும். கூட்டத்திலுள்ள அத்தனை பேரின் கவனமும் ஒட்டு மொத்தமாக பாவலர் அவர்கள் மீதே சாய்ந்திருக்கும். இந்த ஆற்றல் காரணமாக அவருக்குக் கிடைத்த பட்டங்கள்தான், 'கலைக் கடல்' 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்'.

...

"இன்றைக்கு இராமாயணத்தை பழைய முறைப்படி விரிவுரை நிகழ்த்தக் கூடியவர் பாவலர் அவர்கள் ஒருவர்தான். அவர் என் குருஸ்தானத்தில் இருக்கிறார்..." என்று தமிழ்த் தென்றல் திரு வி.க. அவர்கள் ஒரு சமயம் குறிப்பிட்டார்.

...

பாவலர்! அப்படித்தான் அனைவரும் அழைத்தார்கள். அந்தச் சிறப்புக்கும் புகழுக்கும் உரியவராக அந்த நாளில் திகழ்ந்தவர், அவர்கள் ஒருவர்தான். செய்குதம்பிப் பாவலர் என்று முழுப் பெயரைக் குறிப்பிடுபவர்கள் அப்பொழுது இல்லை. அவர்களைப் போலவே இலக்கியம் படைத்த சிலரும் அவதானக் கலையை நிகழ்த்தி வந்த

சிலரும் தங்கள் பெயருடன் பாவலர் என்ற பட்டத்தையும் சேர்த்துக் கொண்டனர். "செந்தமிழ்ச் செல்வன், செய்குதம்பிப் பாவலன், ஒரும் அவதரனம் ஒருநூறு செய்தவன்; புகழ் படைத்த பண்டிதன்" என்று கவிமணி போற்றும் புலவராய்த் திகழ்ந்தவரை குருவாகக் கொண்டாடியது, தமிழுலகம்.

அந்த குருவின் வாழ்க்கைப் பாதை இந்த நூற்றாண்டு இலக்கியத்தின் வரலாறு. இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றை எழுதுகிற யாரும் முதலில் பாவலர் அவர்களை அணுகித் தீரவேண்டும். அவர் இல்லாமல் இலக்கிய வரலாறு இல்லை. இந்த உண்மையை யாராலும் மூடி மறைத்துவிட முடியாது.

கோட்டாறு, இளங்கடையில் இன்றைக்கு 112 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி இலக்கிய இமயமாய், அவதானக் கடலாய் புகழ் நிறுவிய செய்குதம்பிப் பாவலர் அவர்களின் எளிய வாழ்க்கையே ஓர் யதார்த்த இலக்கியம். கவலையற்ற செல்வச் செழிப்புள்ள வாழ்க்கை அமைந்தால்தான் உயர்ந்த இலக்கியங்களையும் காவியங்களையும் புலவன் படைக்க முடியும் என்று கருதுபவர்கள் உண்டு. இது தவறான கொள்கை. செல்வச் செழிப்புக்கும் இலக்கியப் படைப்புக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் செல்வராக இருந்திருப்பின் அள்ளிக் கொடுக்கும் வள்ளலாக மட்டுமே அமைந்திருப்பார். அவருடைய ஆழ்ந்த புலமை ஏழ்மையில் மலர்ந்தது. எளிய மக்கள், வறிய மக்களின் வாழ்க்கை அனுபவங்களை பாவலர் அவர்களும் அனுபவித்திருக்கிறார். கலைக் கடலாகவும் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியமாகவும் மகாமதியாகவும் பாவலர் அவர்களை உயர்த்தியது எளிமையும் ஏழ்மையும் இறை நாட்டமும்தான். யதார்த்த வாதியான பாவலர் அவர்கள் 'யதார்த்தவாதி" என்ற பத்திரிகையை நடத்தினார் என்றால் அதில் வியப்புக்கு இடமில்லை.

பாவலர் அவர்களின் எழுத்தும் பேச்சும் யதார்த்தப் பாங்குடையவை, இராமலிங்கரின் அருட்பா மீதான வாதங்களும் சர்ச்சைகளும் தமிழகத்தை இரண்டு படுத்திக் கொண்டிருந்தபோது செய்கு தம்பிப் பாவலர் அவர்கள்தான் அதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டி இருந்தது. இந்நிகழ்ச்சியை இலக்கிய உலகம் நன்கறியும். அருட்பாவை மருட்பா என்று ஒரு சாரார் வாதிட்டுக் கொண்டிருந்தபோது அருட்பா அருட்பாவே என்பதை ஆணித் தரமாக எடுத்துச் சொல்லி அனைவர் வாயையும் அடைக்கச் செய்தவர் பாவலர் அவர்களே. எதிர்க் கட்சியில் இருந்த திரு. வி. க. அவர்கள் பாவலர் அவர்களின் நாவன்மையைக் கண்டு வியந்து அவர்கள் பக்கம் திரும்பினர்.

கலைக்கடல் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தமிழுலகுக்கு ஒரு கவிதைக் கடலையே, இலக்கிய சாகரத்தையே வழங்கியிருக்கின்றார். பாவலர் அவர்கள் தொடாத இலக்கியத் துறையே இல்லை என்று துணிந்து கூறலாம். அந்தாதி முதல் கோவை வரை அத்தனை பிரபந்தங்களையும் பாடித் தந்திருக்கிறார்.

நபிகள் பெருமானார் மீது பாவலர் அவர்கள் கொண்டிருந்த பெருங்காதலின் வடிவமாக தமிழுக்குக் கிடைத்துள்ள பேரிலக்கியம் நாயக மான்மிய மஞ்சரி. அண்ணல் நபி அவர்களின் அவதாரத்தினால் அகிலத்தில் தோன்றிய மாற்றங்கள் ஒன்றா இரண்டா? அழகிய முன் மாதிரியாக உலகுக்கு அனுப்பப்பட்டவர்கள் அல்லவா? அவர்களின் அருமையும் பெருமையும் சொல்வதற்கு எளிதல்ல. பாவலர் அவர்களின் ஒரு பாடலைப் பதச் சோறாக எண்ணிப் பார்க்கலாம்.

"ஒன்றுதெய்வ மொன்றுமத மொன்றுமக்கள் சாதியென
நன்றுபெற வோதியவை நாட்டிநவின் நான்மறையுங்
குன்றுபெறு தீபமெனக் கோத்தருளிக் காத்தவுங்கள்
துன்றுமுயர் மாபெருமை சொல்லற் கெளிதேயோ
சோதிநபி நாயகமே சொல்லற் கெளிதேயோ!"

ஒன்றே குலம்; ஒருவனே இறைவன் என்ற பெருமானாரின் போதனையைக் கவிதையாக முழக்கமிடுகிறார், பாவலர் அவர்கள்.

நாகூர் ஆண்டகை மீது பாவலர் அவர்கள் கொண்டிருந்த பேரன்பின் விளைவாக திரு நாகூர்த் திரிபந்தாதி பிறந்தது. பாவலர் அவர்களின் முன்னோரும் ஞானப் புலவர் மணியுமான ஞானியார் சாஹிப் அப்பா அவர்களின் நலம் குறித்து பாவலர் அவர்கள் பாடித் தந்தது திருக்கோட்டாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதி. கீழக்கரையில் தோன்றி ஆன்மீக ஞானச் சுடர் பரப்பிய மகான் கல்வத்து நாயகம் அவர்கள் மீது கலைக் கடல் அவர்கள் பாடிய பக்திப் பண் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை. உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிப் பாமாலை இது. நீதி நெறிகளை எடுத்துச் சொல்வது எளிய பணி அல்ல. சொல்வது ஒரு புறம் இருக்க கேட்பதும் தொல்லையான பணிதான். நீதிகளையும் சுவையோடு எடுத்துச் சொல்லி கேட்பவரை வசப்படுத்த முடியும் என்பதை பாவலர் அவர்கள் மெய்ப்பித்துள்ளார்கள். பாவலர் அவர்களின் நீதி வெண்பாக்களை யாரும் படித்துச் சுவைக்குமளவுக்கு அவை எளிமையாக உள்ளன. பாவலர் அவர்களின் சிந்தனைத் தெளிவையும் உலகியல் அறிவையும் உணர்த்தும் நல்ல இலக்கியப் பாக்கள் அவை.

கோவை பாடுவது எளிய செயல் அல்ல என்பதை இலக்கிய உலகம் நன்கறியும். பாவலர் அவர்கள் பாடிய கோவைகள் பல. ஷம்சுத்தாசீன் கோவை, நாகைக் கோவை, அழகப்பக் கோவை முதலாயன. வள்ளல் அழகப்பச் செட்டியாரின் கொடைத் திறத்தை அழகப்பக் கோவையில் சிறப்பித்திருக்கிறார், பாவலர் அவர்கள். கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், பிள்ளைத் தமிழ் பிரபந்த வரிசையில் வைத்து எண்ணத் தக்க தலைசிறந்த நூல்

பாவலர் அவர்களின் உரை நடைத் திறன் தனித்து ஆராயத்தக்க சிறப்புடையது. சீறா புராணத்துக்கு அவர்கள் எழுதிய உரையை நாடறியும். வேதாந்த விவகார கிரிமினல் கேஸ், தேவலோக கிரிமினல் கேஸ் - இவை பாவலர் அவர்களின் உரை நடை நூல்கள். பாவலர் அவர்கள் பதிப்பித்த நூல்களின் பட்டியல் மிக மிக நீளமானது.

இந்த நூற்றாண்டின் இணையற்ற இலக்கிய மேரு பாவலர் அவர்கள் என்பதை அவருடைய படைப்புகள் தமிழுலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கின்றன. பாவலர் அவர்களின் பலதுறை ஆற்றல்கள் மலைப்பூட்டுகின்றன. சைவம், வைணவம், பௌத்தம், சமணம், கிறிஸ்தவம் ஆகிய அனைத்துச் சமயங்களின் தத்துவங் களும் இலக்கியங்களும் பாவலர் அவர்களுக்கு அத்துபடி. அவற்றின் தொடர்பில் எழுப்பப்பட்ட ஐயங்களைத் தீர்த்து வைப்பதில் அவர்கள் வாழ்ந்திருந்த நாட்களில் அவர்களுக்கு இணை அவர்களேதான். சார்ந்த சமயம் இஸ்லாமாக இருப்பினும் பிற சமயங்களைப் பற்றி பாவலர் அவர்கள் ஆற்றியுள்ள சொற்பொழிவுகள் மிக ஆழமானவை. எனவே அனைவருக்கும் இனியவராக பாவலர் அவர்கள் திகழ்ந்திருக் கின்றார்கள்.

> "பொன்மாலை தேயுமலர்ப் பூமாலை வாடுமணிக்
> கன்மாலைத் துண்டுபடும்..."

என்பது பாவலர் அவர்களின் பாடல் பகுதி. புகழ்மாலை தேயுமா? வாடுமா? துண்டு படுமா?

பாவலர் அவர்களின் பாதையில் அவர்தம் பரம்பரை நடை போட்டு இலக்கியப் பணிபுரிந்து வருவது நமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

புகழ் மாலைகளைப் போற்றுவோம்.

சைவம் பேசிய முஸ்லிம் பாவலர்

"முறுவல்"

தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் திடீரெனத் தமது எழுபத் தைந்தாவது வயதில் காலமாகி விடுவதற்கும் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர், அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறித்து பேராசிரியர் அ. சீனிவாச ராகவன் அவர்கள் வாய்மொழியாகக் கூறிய வற்றைக் கொண்டு தொகுத்த நிகழ்ச்சி யொன்று இங்கு விவரிக்கப் படுகின்றது.

மகாமதி பாவலர் அவர்களும் இந்த நிகழ்ச்சி பற்றி தங்கள் அன்பர்கள் பலரிடம் குறிப்பிட்டிருக்கிறார்கள். எனினும் பேராசிரியர் அ. சீனிவாசராகவன் அவர்கள் வாய் மொழியாகக் கூறியவற்றைக் கொண்டு தொகுத்தே நிகழ்ச்சி இங்கு விவரிக்கப்படுகின்றது.

முஸ்லிம் பெருங்குடி மக்கள் பெருமளவில் வதியும் திருநெல்வேலி, மேலப்பாளையத்திலிருந்து பாவலர் அவர்கள் ஒரு நாள் மாலை பேட்டையிலுள்ள தங்கள் நண்பர்களையும் அன்பர்களையும் சீடர் களையும் பார்ப்பதற்காகக் கார் ஒன்றில் வந்து கொண்டிருந்தார்கள். பாவலர் அவர்களின் மாணாக்கரும் தமிழ் பக்தருமாகிய மேலப்பாளை யத்தைச் சார்ந்த முஸ்லிம் ஒருவரும் பாவலர் அவர்களோடு இருந்தார். திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் அருகில் நெடுஞ்சாலை யிலுள்ள கடையொன்றில் பாவலர் அவர்களுக்கு மிகவும் பிடித்தமான - எப்போதும் அவர்கள் விரும்பிப் புகைக்கும் - குறிப்பிட்ட ஒரு ரக சுருட்டு வாங்குவதற்காகக் கார் நின்றது. மேலப்பாளையத்து தமிழ் மாணாக்கர் காரை விட்டு இறங்கி சுருட்டுக் கட்டு வாங்கச் சென்றார். நெல்லையப்பர் கோயில் வாசலின் முன்னால் சாய்த்து வைக்கப்பட்டி

ருந்த கரும்பலகை தாங்கி இருந்த விளம்பரம் அந்த மாணாக்கர் கண்ணில் பட்டது. திரு. வி. கல்யாணசுந்தரம் முதலியார் அவர்கள் தலைமையில் கோயிலின் உள்ளே கூட்டம் என்ற செய்தியைக் கண்ணுற்ற அவர் சுருட்டுக் கட்டுடன் ஓடோடி வந்து பாவலர் அவர்களிடம் தங்கள் பழைய மாணாக்கர் திரு வி. கல்யாணசுந்தரம் முதலியார் அவர்கள் தலைமையில் கோயிலின் உள்ளே கூட்டம் நடக்கிறது என்று கூறி தலையைச் சொறிந்து கொண்டு நின்றார். பாவலர் அவர்களுக்குத் தம் மாணாக்கர் திரு வி. க வின் பேச்சைக் கேட்க ஆசைப்படுகிறார் என்பது தெரிந்து விட்டது. அதே சமயத்தில் பாவலர் அவர்களின் மனத்திரையில் சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் தம்மைச் சுற்றி, தம் சொற்பொழிவுகளைக் கேட்க பின்னாலேயே வந்துகொண்டிருந்த திரு. வி. க. வைப் பற்றிய நினைவுகள் படரத் தொடங்கின.

நினைவில் படரத் தொடங்கிய அந்தக் காலம் அருட்பா மருட்பாப் போராட்ட காலம். சைவப் பயிர் தழைக்கவென்று போராடிய யாழ்ப்பாணம் மகாவித்துவான் கதிர்வேலுப் பிள்ளைக்கு 'எதிர்வேலுப் பிள்ளை'யாகப் பாவலர் அவர்கள் விளங்கிய காலம். 'அருட்பா, மருட்பா அன்று; அது அருட்பாவே' என்று நாடெங்கணும் சொற் போர் ஆற்றிய காலம். ஆயிரமாயிரம் சைவப் பெருமக்கள் பாவலர் அவர்களின் அருட்பாக் கட்சிப் பிரசங்கங்களைக் கேட்டு மயங்கிக் கிடந்த காலம். அருட்பாவின் அழகையும் நயத்தையும் மாண் பினையும் அருமை பெருமைகளையும் கேட்போர் வேட்குமாறு அமைந்த தம் பேச்சு வல்லமையால் பாவலர் அவர்கள் தமிழ் நாட்ட வருக்கு எடுத்து உணர்த்திய காலம்.

அக்காலை திரு. வி. க. அவர்கள் கதிர்வேலுப் பிள்ளையின் முதல் மாணாக்கராக இருந்தார். பாவலர் அவர்கள் செல்லுமிடமெல்லாம் சென்று, அவர்கள் நிகழ்த்தும் பிரசங்கங்கள் அனைத்தையும் கேட்டு, அவற்றின் சாராம்சத்தை அங்ஙனே வடித்தெடுத்துக் கொண்டு வந்து கதிர்வேலுப் பிள்ளை அவர்களுக்குத் தரும்பணி திரு. வி. க. அவர் களுடையதாக இருந்தது. இன்றைய பாஷையில் சொல்வதானால் பாவலர் அவர்கள் நிகழ்த்தும் பிரசங்கங்களைக் கேட்டு குறிப்பெடுத்து வந்து மருட்பாக் கட்சிக்குத் தலைமை வகித்த கதிர்வேலுப் பிள்ளை அவர்களுக்கு ஒப்புவிக்கும் 'ரிப்போர்ட்ட'ராக திரு. வி. க. அவர்கள் அக்காலை செயல் புரிந்தார்கள். பாவலர் அவர்களின் பேச்சைக் கேட்டுக் கேட்டு அப்பேச்சில் சொக்கிப் போய் பாவலர் அவர்களின் புலமைக்கும் பேச்சு வன்மைக்கும் அடிமையாகிவிட்ட திரு. வி. க. அவர்கள் உண்மையில் கதிர்வேலுப் பிள்ளை அவர்களின் மாணாக்க ராக இருந்தபோதிலும் பாவலர் அவர்களையே தமது இலட்சிய

குருவாக அன்று ஏற்றுக் கொண்டிருந்தார். பாவலர் அவர்களின் பிரசங்க மாரியைக் கண்டு கண்டு தாமும் பாவலர் அவர்களைப் போன்ற ஒரு மாபெரும் பிரசங்கியாக ஆக வேண்டுமென்று திரு.வி.க. அவர்கள் இரவு பகலாகத் துடித்துக் கொண்டிருந்தார்கள். "நான் அருட்பா மருட்பா காலத்தில் தங்களை குருவாக ஏற்றுக் கொள்ளத் தவித்த ஏகலைவனாக இருந்தேன்" என்று பிற்றைக் காலத்தில், அருட்பா மருட்பாப் பூசல் அடங்கி ஓய்ந்து அருட்பா, அருட்பாவாகவே மீண்டும் தலைதூக்கி நிலை நின்ற காலத்தில் திரு. வி. க. அவர்கள் பாவல்ர் அவர்களிடம் பல முறை கூறி இருக்கிறார்கள். திரு. வி. க. இவ்வாறு பல முறை கூறிய அந்த பழங் காலங்களும் நினைவுகளும் நெல்லையப்பர் கோயில் முன் காரில் உட்கார்ந்திருந்த பாவலர் அவர்களின் நெஞ்சத் திரையில் வட்ட மிட்டன.

தமிழ் நாட்டின் சைவப் பெருமக்கள் சைவத்திற்கும் சைவம் வளர்த்த தமிழுக்கும் சைவாகமங்களுக்குமாகத் தாம் ஆற்றிய சேவைக்கு நன்றி தெரிவிக்கும் முறையில் தம்மை யானைமீது ஏற்றி வைத்து ஊர்வலமாக அழைத்துச் சென்று பூரண கும்ப மரியாதை களுடன் காஞ்சீபுரம் பெரிய கோயிலில் வரவேற்று 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்ற பட்டத்தைத் தமக்குச் சூட்டிய அந்தப் பண்டைய புகழ் நாட்களெல்லாம் பளிச்சிட்டோடி மறைந்தன.

நாற்பது ஆண்டுகளுக்குப் பின்னால், மீண்டும் முதற்தடவை யாகத் தம் பண்டைய மாணாக்கராகிய திரு. வி. க. வை ஒரு முறைத் தாம் பார்த்தால்தான் என்ன? தரம் அவரைப் பார்ப்பதற்குரிய ஒரு வாய்ப்புத்தான் நெல்லையப்பர் கோயில் முன் தம்மை வரச் செய்தது போலும்! என்றெல்லாம் பாவலர் அவர்கள் நினைத்தார்கள்; காரில் இருந்து இறங்கினார்கள். மேலப்பாளையத்து தமிழ் சாகிபுவின் முகம் மலர்ந்தது. "திரு வி. க. வின் பேச்சைக் கேட்க ஆசைப்படு கிறீர்களா?" என வயது முதிர்ந்த அந்த மாணாக்கரைப் பார்த்துக் கேட்டார்கள். ஆர்வம் மிக்க குரலில் அவர் 'ஆம்' என்கவே பாவலர் அவர்கள் மேலப்பாளையத்து சாகிபு பின் தொடர பிரசங்கம் நடந்து கொண்டிருந்த இடத்தை நோக்கி நடந்தார்கள்.

பாவலர் அவர்கள் தமக்கென்றே உரிய வெள்ளைக் கதர் வேட்டி சட்டை, கரைபோடப்பட்ட வெள்ளைக் கதர் அங்கவஸ்திரம், வெள்ளைக் கதர் தொப்பி ஆகியவை அணிந்திருந்தார்கள். உடன் சென்ற மேலப்பாளையத்து முஸ்லிம் மாணாக்கரோ பதினேழாம் நூற்றாண்டின் தமிழ் முஸ்லிம்கள் உடை அணியும் வழக்கத்தை அப்படியே பின்பற்றி இருந்தார். கட்டம் போட்ட பச்சை நிற லுங்கி, இடுப்பில் நாலு விரல் அகலத்திற்கும் மேற்பட்ட கருஞ்சிகப்பு

கொழும்பு 'பெல்ட்', மேல் சட்டை, நீலநிறக் கோட்டு, கழுத்தைச் சுற்றி வண்ண நிற 'ஷால்' தலையில் 'மகமல்' தொப்பி. தொப்பியைச் சுற்றி மஞ்சள்பட்டு உறுமால், வளர்த்து சீராக வெட்டிவிடப்பட்ட தாடி ஆகிய இத்தனையும் கொண்ட நிலையில் அந்த மேலப்பாளை யத்து மாணாக்கர் காட்சி தந்தார்.

பாவலர் அவர்கள் தங்களுக்கு இயல்பாக உரிய அடக்கத்துடனும் அமைதியுடனும் கூட்டத்தில் கடைசி வரிசையில் கிடந்த பெஞ்சு ஒன்றில் போய் உட்கார்ந்தார்கள். முஸ்லிம்களுக்கே உரிய உடையில் இருந்த தமிழ் வித்துவானாகிய மேலப்பாளையத்து மாணாக்கர் பாவலர் அவர்களின் முதுகின் பின்புறமாக பெஞ்சின் அருகே நின்று கொண்டிருந்தார்.

திரு. வி. க. அவர்கள் மேடையில் நின்று பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். ஐந்தாறு நிமிடங்களுக்குள் கூட்டத்தில் ஒரு வித பரபரப்பு; ஒரு வித சவசலப்பு; சிறிய இரைச்சல். கூட்டத்தின் அமைதியே குலைந்து விட்டது போன்றிருந்தது. கூட்டத்தில் இருந்தவர்கள் திரு. வி. க. வின் சொற்பொழிவைக் கேட்பதை விட்டு விட்டு எங்கோ குறிப்பிட்ட ஒரு திக்கை நோக்கினார்கள். அவர்கள் அனைவரும் திரும்பிப் பார்த்த திசை அப்பாவி மேலப்பாளையத்து சாகிபு நின்று கொண்டிருந்தது. திரு. வி. க. அவர்களின் பார்வையும் அப்பக்கமாக விழுந்தது. அவர்களும் கவனித்தார்கள். கூர்ந்து கவனித்தார்கள். மறுகணமே, "ஐயா அவர்கள் அங்கே இருக்கக் கூடாது; தயவு செய்து இங்கே வரவேண்டும்; மேடைக்கு வர வேண்டும்". எனக் கைகூப்பி வணங்கி பாவலர் அவர்களை அழைத் தார்கள். கூட்டத்திலிருந்தவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. மீண்டும் மேலப்பாளையம் சாகிபு நின்ற திக்கை நோக்கிக் கூர்ந்து கவனித்தார்கள். 'பாவலர் ஐயா!' என்ற குரல் கூட்டத்தின் முன் வரிசையில் இருந்த தோழர்களிடம் இருந்து எழுந்தது. பேராசிரியர் சீனிவாசராகவன், சக்கரபாணி நம்பியார், இந்துக் கல்லூரி தமிழ்த் துறை ஆசிரியர்கள், பழம் புலவர்கள், பண்டிதர்கள் வித்துவான்கள் ஆகியோர் பாவலர் அவர்கள் அங்கிருப்பதை அறிந்து கொண்டு திரு. வி. க. அவர்களோடு குரல் கொடுத்து பாவலர் அவர்களை மேடைக்கு வருமாறு வேண்டி நின்றனர். பாவலர் அவர்கள் மெள்ள எழுந்து தமக்கே உரிய அடக்கமான முறையில், 'சும்மா பார்த்து விட்டுப் போகலாம் என வந்தேன். மன்னித்துக் கொள்ளுங்கள், நான் இங்கேயே இருக்கிறேன்' என்று இம்மாதிரி சந்தர்ப்பங்களில் தாம் எப்போதும் விடையளிப்பது போல் மிக்க பணிவன்புடன் கூறிக் கொண்டு உட்கார்ந்தார்கள். ஆனால் திரு. வி. க. அவர்களோ, "ஐயா அவர்கள் இங்கிருக்கும்போது இந்தக் கூட்டத்திற்கு நான்

தலைமை வகிப்பது மரியாதைக் குறைவு. தாங்கள் மேடைக்கு வந்தாலன்றி நான் இங்கு இருக்கமாட்டேன்" என கூறிக் கொண்டே பாவலர் அவர்களை அழைப்பதற்காக மேடையை விட்டு கீழே இறங்கினார்கள். இதற்கிடையில் இதர தமிழன்பர்களும் பிரமுகர் களுமாகச் சேர்ந்து பாவலர் அவர்களை எப்படியோ இட்டுக் கொண்டு சென்று மேடையில் அமரச் செய்து விட்டார்கள். மகிழ்ச்சியுற்ற திரு.வி.க. அவர்கள் மீண்டும் தமது சொற்பொழிவைத் தொடர்ந் தார்கள். மீண்டும் கூட்டத்தில் அமைதி நிலவ ஆரம்பித்தது. ஆனால் சற்றே நேரத்திற்குள் மீண்டும் ஒரு பரபரப்பு; ஒரு வித இரைச்சல்; ஒரு வித குழப்பம்; பூசல். குழுமியிருந்த பாவலர் அவர்களை நன்கு தெரியாத பழுத்த சிவ பக்தர்களுக்கும் சைவ அன்பர்களுக்கும் கூட்டம் நடந்து கொண்டிருந்த கோயிலின் உட்பிரகாரத்தினுள் முஸ்லிமாகிய ஒரு சாகிபு நுழைந்து விட்டதென்னவோ பிடிக்கவில்லை. கிசுகிசு வென கூட்டம் முழுவதும் பேச்சு பரவிற்று. பக்தர்கள் கொண்ட கருத்தைப் பகிர்ந்து கொண்டனர் ஒரு சிலர். வேறு சிலர் இந்த இக்கட்டான கட்டத்தைச் சமாளிப்பது எப்படி என அறியாது திகைத் தனர். கூட்டத்தில் ஏற்பட்ட பரபரப்புக்குக் காரணம் இன்னதுதான் என்பது மேடையில் இருந்தவர்களுடைய காதுகளையும் எட்டிற்று. திரு.வி.க. அவர்களுக்கோ ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது, *"யான் எம்மதமும் சம்மதம் என்னும் கொள்கை உடையவன். சமரச சன்மார்க்கப் பித்தன். இந்த மேடையில் தமிழ் தெய்வ மாகிய பாவலர் அவர்களுக்கு இடமில்லை என்றால் எனக்கும் இடமில்லை"* என்று கடுகடுப்பாகவும் கூறினார்கள். சிறிது நேரம் கூடி இருந்தவர்களிடையே ஏதோ பேச்சுக்கள் நடந்தன. இதற் கிடையே யார் மூலமாகவோ கோயில் எல்லைக்குள் சாகிபு நுழைந்த செய்தி போலீஸின் காதுக்கு எட்டிற்று. உயர்தரப் போலீஸ் அதிகாரி யிடம் இருந்து 'போன்' வந்தது. "இங்கு எவ்வித குழப்பமும் கலகமும் இல்லை; மேடையில் இருப்பவர் பாவலர் அவர்கள் – கூட்டத்தைச் சமாளிப்பதற்கு நாங்கள் இருக்கிறோம்" என்று உறுதி கலந்த தொனியில் பேராசிரியர் சீனிவாச ராகவன் அவர்கள் போனில் பதிலிறுத்தார்கள்.

அமைதியாக நடந்து கொண்டிருந்த கூட்டத்தில் தம் வரவால் ஏற்பட்டு விட்ட 'எக்கச் சக்க'மான சூழ்நிலைக்காக பாவலர் அவர்கள் மிகவும் உள்ளுடைந்து மெள்ள எழுந்து நழுவிவிட முயன்றார்கள். ஆனால் திரு வி. க. அவர்களும் இதர தமிழறிஞர்களும் பாவலர் அவர்கள் எழுந்து போகக் கூடாதென பிடிவாதமான உத்திரவிட்டு தடுத்து உட்கார வைத்து விட்டனர்.

பரபரப்பு அடங்கிற்று. அமைதி நிலவிற்று. மீண்டும் திரு. வி. க. அவர்கள் தொடர்ந்து பேசினார்கள். கூட்டம் இனிது முடிவுற்றது.

பாவலர் அவர்களின் பெருமை முழுவதும் அறியாதிருந்த சிலர் காரணமாக நிகழ்ந்து விட்ட முன்தின நிகழ்ச்சிகளுக்குப் பரிகாரமாக மறுநாள் கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. "சைவம் வளர்த்த தமிழ்" என்பது பற்றி மூன்று சொற்பொழிவுகள் ஆற்ற வேண்டுமென பாவலர் அவர்களைத் தமிழறிஞர்களும் அன்பர்களும் கேட்டுக் கொண்டிருந்தனர். இம் மூன்று பிரசங்கங்களுள் முதற் பிரசங்கம் முன்னைய சம்பவங்கள் நிகழ்ந்த மறுநாள் பாவலர் அவர் களால் ஆற்றப்பட்டது. இச்சமயம் கோயிலின் வெளிப்பிரகாரத்தில் இந்த மூன்று சொற்பொழிவுகளும் ஏற்பாடாகி இருந்தன. பாவலர் அவர்களின் முதல் நாள், இரண்டாம் நாள் சொற்பொழிவுகளைக் கேட்டு கிறுகிறுத்துப் போய் இருந்த சைவப் பெருமக்கள் மூன்றாம் நாள் கூட்டத்திற்குப் பெருவாரியாக வந்து குழுமியிருந்தனர். சைவாகமங்களையும் சிவஞான போதங்களையும் கரைத்துக் குடித் திருந்த பாவலர் அவர்களின் பேச்சு பிரவாகமாகப் பாய்ந்து கொண்டி ருந்தது. பெரிய புராணம் தொட்டு இராமலிங்க சுவாமிகள் பாடிய அருட்பா ஈறாக உள்ள சைவ நூற்கள் எத்தனையுண்டோ அத்தனையிலிருந்தும் மேற்கோள்களும் விரிவுரைகளும் விளக்கங் களும் காட்டி சைவம் கண்ட தமிழ்க் கடலில் மூழ்கி முத்தெடுத்த பாவலர் அவர்களின் அன்றைய பேச்சு அற்புதமாக அமைந்திருந்தது; அலாதி ரஸனை இருந்தது. அவர்களின் பிரசங்க வாருதியில் மூழ்கிப் போயிருந்த தமிழறிஞர்களும் புலவர்களும் சிவநேச பக்தர் களும் தங்களையே மறந்த நிலையில் இருந்த கட்டம். பேச்சின் வேகத்திற்கும் போக்கிற்கும் ஏற்ப பேச்சில் சொக்கிப் போய் மெய் மறந்திருந்த பழுத்த சிவபக்தர்கள் தங்கள் கண்களை மூடியபடி தலையை ஆட்டி ஆட்டி பாவலர் அவர்களின் 'சைவம் வளர்த்த தமிழில்' தம் நெஞ்சங்களைப் பறிகொடுத்திருந்த நேரம்.

அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தையே பாவலர் அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்களோ என்று எண்ணுமாறு அவர்களின் கண்கள் சுடர் விட்டன. அவர்களின் நெஞ்சில் ஒரு அலாதியான குதூகலம். முகத்தில் ஒரு அசாதாரண முறுவல். சைவம் வளர்த்த தமிழ் கண்ட தெய்வத்தின் தன்மைகளைப் பாவலர் அவர்கள்,

"கூர்த்தமெஞ் ஞானத்தார் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"

என்று வரும் மாணிக்கவாசக சுவாமிகளின் சிவபுராணப் பாடலைக் கூறத் தொடங்கி பாடல் அடிகளை மறந்து விட்டவர் போல நுண்ணுணர்வே...என்று மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டி ருந்தார்கள். பிரசங்கத்தின் அந்த நிமிடம் வரை சைவம் வளர்த்த தமிழில் எங்கெங்கெல்லாமே இருந்து பாடல்களையும் அடிகளையும்

வரிகளையும் சொற்றொடர்களையும் சொற்களையும் மேற்கோளாகத் தங்கு தடையின்றி எடுத்து வந்து சொற்சிலம்பாடிக் கொண்டிருந்த பாவலர் அவர்களுக்கு திடுதிப்பென்று இப்பொழுது எடுத்த பாடலை முழுவதும் கூறி முடிப்பதில் ஏற்பட்ட தடங்கல் அவர்களின் சொற் பொழிவில் இலயித்துப் போயிருந்த சிவ பக்தர்களுக்கும் தமிழறிஞர் களுக்கும் சிறிது ஆச்சரியத்தைக் கொடுத்தது. பாவலர் அவர்களுடன் நெருங்கிப் பழகிய சீடர்கள், "பாவலர் அவர்களாவது, அவர்கள் படித்த பாடலை மறப்பதாவது! வழக்கம்போல் பிரசங்கங்களுக் கிடையில் தமக்கேயுரிய பாணியில் ஏதோ குறும்பில் அல்லது இடக்கில் இறங்கி இருக்கிறார்கள்" என யூகித்துக் கொண்டு மௌனமா யிருந்து மேலே நடக்கப் போவதை கவனித்தனர். ஆனால் பாவலர் அவர்களோ உண்மையிலேயே பாடலின் அடுத்த அடி நினைவுக்கு வராதவர் போல,

"கூர்த்தமெஞ் ஞானத்தார் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே"

எனக் கூறிக் கொண்டு கூட்டத்தில் தங்கள் முன் கூடி இருந்த வர்களை நோக்கி அடுத்த அடியை எடுத்துக் கேட்கும் பாவனையில் தம் கையின் சுட்டுவிரலைக் காட்டி சைகை செய்தார்கள். கூட்டத்தில் குழுமி இருந்தோர் எவரிடமிருந்தும் பாடலின் அடுத்த அடி வரவில்லை.

பின்னர், "சிவநேசச் செல்வர்களே! பாடலின் அடுத்த அடியை உங்களில் யாருக்சாவது நினைவிருந்தால் கூறுங்கள்" என பாவலர் அவர்கள் கேட்டார்கள். அடுத்த அடியை எடுத்துக் கொடுப்பார் அங்கு எவருமே இல்லை. முன் வரிசையில் இருந்த பேராசிரியர் சீனிவாசராகவன் அவர்கள், "போக்கும் வரவும் புணர்வுமிலா......" என்று அடுத்த அடியைக் கூறி முடிப்ப தற்குள் பாவலர் அவர்கள், "ஐயா, உங்களை நான் கேட்க வில்லை. நீவிர் வைணவர்" "சைவர்களில் யாராவது நினைவூட்ட இயலுமா என்றே கேட்கிறேன்" என்று சிரிப்பு தொனிக்க கூறிவிட்டு, "இங்கு குழுமி இருக்கும் சிவபக்தர் களையும் சைவ அன்பர்களையுமே பாடலின் அடுத்த அடியை எடுத்துத் தருமாறு கூறினேன். வைணவர்களையும் இதர மத அன்பர்களையும் அன்று" என்று குறும்பாகக் கூறி விட்டு அவையி லிருந்த சைவ அன்பர்களிடம் பாடலின் எஞ்சிய பகுதியைக் கூறுமாறு வேண்டி நின்றார்கள். பாவலர் அவர்களின் குறும்பையும் குத்த லையும் கிண்டலையும் புரிந்து கொண்டு சீனிவாசராகவன் அவர் களும் சிரித்தவாறு பேசாமல் இருந்தார்கள். சிறிது நேரம் கூட்டத்தில்

அமைதி நிலவியது. ஆனால் பாடலின் எஞ்சிய பகுதிகளைக் கூறுவதற்கு குழுமியிருந்த சிவ பக்தர் ஒருவராலும் முடியவில்லை. பாவலர் அவர்கள்,

"கூர்த்தமெஞ் ஞானத்தார் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே"

என்றவாறு சிவபுராணப் பாடலின் அனைத்து அடிகளையும் கூறி முடித்து விட்டு, "சைவப் பற்றுமிக்கோர்களே! சிவனடியார்களே! உங்கள் ஒவ்வொருவர் நெஞ்சிலும் மனப்பாடமாக இருக்க வேண்டிய இந்த சிவ புராணப் பாடலை உங்களில் ஒருவரும் அறியாமலிருப்பது கண்டு ஆச்சரியமடைகிறேன். நான் ஒரு தமிழ்முஸ்லிம். சீனிவாச ராகவன் அவர்கள் ஒரு வைணவர். நாங்கள் தெரிந்து வைத்திருக்கிற அளவுக்குக்கூட சைவத்தைப் பற்றி சைவர்களாகிய உங்களுக்குத் தெரியவில்லையே! உங்கள் சைவப் பற்றெல்லாம் வெறும் பற்றுத்தானா? சைவம் வளர்த்த தமிழ் பற்றிய உங்கள் ஞானம் இத்தன்மையது தானா? சைவம் பற்றியும் உங்கள் சைவம் வளர்த்த தமிழ் பற்றியும் உள்ள உங்கள் அறியாமையை நினைந்து நீங்கள் வெட்கித் தலைகுனிய வேண்டாமா? பேரளவிற்கு மட்டும் சைவர்களாக இருந்து விட்டால் சைவத்தின் கதி என்னாகும்?" என்று ஒரேயடியாக எகத்தாளமாகவும் நையாண்டியாகவும் கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டு முடித்து விட்டு, "இனியாகிலும் தமிழ் தழைத்தோங்க சைவம் வளர்த்த தமிழை தயைசெய்து படிக்க முன் வாருங்கள்" என்று கேட்ட வண்ணம் தங்கள் மூன்றாம் நாள் பிரசங்கத்தை முடித்துக் கொண்டு உட்கார்ந்தார்கள், பிரசங்கக் களஞ்சியம் மகாமதி பாவலர் அவர்கள்.

லுங்கி, கோட்டு, தொப்பி, உறுமாலுடன் தாடியும் வைத்திருந்த பாவலர் அவர்களின் மேலப்பாளையத்து தமிழ் முஸ்லிம் சீடர் இப்போது மகிழ்ச்சியில் திளைத்தார். பெருமிதத்தில் மிதந்தார்.

நெல்லையப்பர் கோயிலில் திரு. வி. க. அவர்களின் தலைமையின் கீழ் நடந்த கூட்டத்தில் பாவலர் அவர்களின் பிரசன்னத்தை எதிர்த்த சைவ பக்தர்கள் தம் தவறை நினைத்து இப்பொழுது வருந்தினர்; வெட்கித் தலைகுனிந்தனர். கூட்டம் முடிந்த பின்னர் அவர்களுள் பலர் நான்கு நாட்களுக்கு முன்னர் பாவலர் அவர்கள் முன்னிலையில் தாம் நடந்து கொண்ட விதத்திற்காக மன்னிப்பும் கோரினர்.

★

தமிழ்ப் பரம்பரையின் தந்தை

வித்துவான் எல். ஆறுமுகம் M.A., B.T.

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

என்றார் வான் புகழ் வள்ளுவர். அவர்தம் கொள்கைக் கிணங்க வான் புகழ் கொண்டு வாழ்ந்த தமிழறிஞர் வரிசையுள் வைத்தெண்ணப் படுபவர் கோட்டாற்றுப் புலவர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள். அன்னார் பல நூற்றாண்டுகட்கு ஒரு முறை எங்கோ அரிதிற் தோன்றுகின்ற மேதைகளுள் ஒருவர். தமிழ் நாட்டிலே இஸ்லாமிய மதத்தவராகப் பிறந்தமைக்கு மாறாக அவர்கள் ஆங்கில நாட்டிலே தோன்றி ஓர் ஆங்கிலப் புலவராய் மிளிர்ந்திருப்பின் அவர்கள் பாலிருந்த அரிய பேராற்றல் அவர்கட்கு உலகப் புகழையும் நோபல் பரிசையும் பெற்றுத் தந்திருக்கும் என்பதில் சற்றேனும் ஐயமில்லை.

இப்பெரியாரை என் இளமைப் பருவத்திலிருந்தே நான் நன் கறிவேன் இற்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன் எங்கள் குடும்பம் சுசீந்திரத்தில் வாழ்ந்த காலம். நான் தந்தையாருடன் சுசீந்திரத்தி லிருந்து கோட்டாற்றிலுள்ள என் மாமனார் வீட்டிற்கு அடிக்கடி செல்வது வழக்கம் அப்போதெல்லாம் என் தந்தையார் கோட்டாறு வந்ததும் பாவலர் ஐயா அவர்களை அவர்கள் நூற்கடையிலே கண்டு வணக்கம் செலுத்தி வருவார்கள். அநுகாலை எப்போதும் மாணவர் குழாம் ஒன்று பாவலர் அவர்களைச் சூழ்ந்திருந்து பாடங் கேட்டுக் கொண்டிருப்பது இப்பொழுதும் என் கண் முன் நிற்கிறது. தான் பெற்ற அரிய செல்வத்தை அவர்கள் தன்னை அண்மிய யாவர்க்கும்

வரையாது வழங்கி வந்த காட்சி அது. அன்பும் நிறைவும் அமைதியும் ததும்பும் இன்முகத்தோடு இரவும் பகலும் இடைவிடாது அவர்கள் தமிழ்த் தொண்டு செய்து வந்தார்கள். எந்த நேரத்திலும் எந்த இடத்தும் எவர் எந்த ஐயத்தைக் கொணரினும் அதனைத் தடையின்றித் தக்க சான்றுகள் தந்து தெளிவுபடுத்த அவர்கள் தயங்குவதே இல்லை. இதனால் ஐயமறுப்போரும், அறிவு பெறுவோரும் ஆற்றல் கண்டு மகிழ்வோருமாகப் புலவர் குழாமென்று அவர்களை எப்போதும் சூழ்ந்து கொண்டிருக்கும்

அப்போது அவர்களுக்கு வயது ஐம்பதிற்கு மேலிருக்கலாம். அவர்கள் வாழ்ந்த காலம் இப்போது போலத் தமிழ்க் கல்வி போற்றப் படாத காலம். தமிழ்கற்ற புலவருக்கு அரிய வாய்ப்புக்கள் எதுவும் இருக்கவில்லை. ஆங்கில அரசாங்கம் ஆங்கிலம் கற்றோருக்கே ஆக்கமும் ஊக்கமும் நல்கி அரிய பதவிகளையும் வாய்ப்புகளையும் அளித்து வந்தது. இந்நிலையில் தமிழ்மீது கொண்ட பற்றுதலும் தமிழ் நூல்களில் தாம் கண்ட சுவையின்பமுமே அவர்களைத் தமிழைப்போற்றிக் கற்கவும் அதனைப் பிறர்க்குத் கற்பித்து மகிழவும் செய்திருத்தல் வேண்டும். இது போலவே அவர்கள்பால் தமிழ்கற்ற பலரும் இன்பப் பொழுது போக்கொன்றை பயனாகக் கருதிக் கற்றாரே யன்றி தமிழ்க் கல்வி தம் வாழ்க்கைக்கான பொருள் சேர்க்கத் துணை நிற்கும் என்ற கருத்தோடு கற்றார் சிலரென்றே கூறலாம். தமிழ்ப் பேரறிஞராக இருந்தும் பாவலர் அவர்கள் தம் வாழ்க்கைச் செலவிற்கு நூல் வியாபாரத்தையே நம்பியிருந்தார்கள் என்றால் மற்றையோர் நிலை என்னாம் ?

இற்றை நாளில் போல அக்காலத்து நாட்டில் பல தேசீயக் கட்சிகள் இல்லை. தேசீய காங்கிரஸ் ஒன்றே இந்தியாவின் விடுதலை இயக்கமாக விளங்கிற்று. அதில் பாவலர் அவர்கள் பெரும் பங்கு கொண்டு உழைத்தார்கள். எப்போதும் அவர்கள் தூய கதருடையே அணிந்திருப்பார்கள். வீட்டை விட்டு வெளியே செல்லும் போதெல் லாம் தூய வெண்மையான கதர்க் குல்லாய் அவர்கள் தலையை அணி செய்யும். உடலிலே முழுக்கையுடைய நீண்ட கதர்ச் சட்டையும் வேட்டியும் தோளிலே கதர்த் துண்டும் காணப்படும். முகம் சற்று வயது முதிர்ச்சியினைக் காட்டினும் அவர்கள் நல்ல கட்டான வளவிய உடலைப் பெற்றிருந்தார்கள். உடலை ஒப்பவே அவர்கள் உள்ளமும் நல்ல உரனுடையதாக இருந்தது. ஆங்கில ஆட்சியை எதிர்த்துக் கடுமையான தாக்குதல்களைக் கேட்போர் கொதித்தெழுமாறு வாரி வழங்குவதில் அவர்கள் சற்றும் அஞ்சியதில்லை. இயற்கையின் தண்மாரி கண்டும் காலிகளின் கல்மாரி கண்டும் கலங்காது சொல்மாரி பெய்யும் கொண்டலாக அவர்கள் துலங்கிய நாட்கள் பல.

"கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்" என்று பொதுமறை வகுத்த இலக்கணத் திற்கு ஒத்த இலக்கியமாக விளங்கிற்று அவர்கள் பேச்சு. எப்போதும் அவர்களுடைய பேச்சு இனிய எளிய நடையிலே இருக்கும், தொடங்குங்கால் மெதுவாகவும் தணிந்த குரலிலேயும் தோன்றி வர வர விரைவும் விறுவிறுப்பும் படிப்படியாக ஏறி இறுதியில் உணர்ச்சியின் உச்ச நிலையிலே இன்னும் பேசமாட்டாரா என எல்லோரும் எதிர் பார்க்கும்போது முடிவடையும். அவர்கள் பேசுகின்ற குரலின் இனிமையும் சொற்களை எடுத்தும் படுத்தும் நலிந்தும் வலிந்தும் இடத்திற்கேற்ற வகையில் பயன்படுத்தும் பண்பும் யாவரையும் எளிதில் கவர்ந்துவிடும். கருத்துக்களைக் காரண காரிய தொடர்பு படுத்தி அவர்கள் கூறுங்கால் சிறந்த நியாயவாதிகள் கூட எதிர் வழக்காட வகையறியாது ஏக்கற்று நிற்பர். இத்தகைய தனி ஆற்றலும் எதனையும் ஆழ்ந்து சிந்திக்கும் நுண்மாண் நுழை புலனுமே அருட்பா மருட்பா வழக்கின்போது பாவலர் அவர்களுக்கு அரிய புகழையும் "தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்" எனும் பெரிய பட்டத்தையும் பெற்றுத்தந்தன. அதுகாலை அவர்கள் செய்த அரிய சொற்பொழிவுகளின் நயங்களை காலஞ்சென்ற தசாவ்தானி ஆறுமுகம்பிள்ளை அவர்களும் என்னரும் தமிழாசிரியர், முதுபெரும் புலவர் தா. சாத்தாங்குட்டிப்பிள்ளை அவர்களும் கூறக் கேட்டிருக்கின்றேன்.

இராமாயணத்தில் வாலி தன்னை எதிர்ப்போரின் பலத்தில் பாதியைப் பெறும் வரம் பெற்றிருந்தான். பாவலர் அவர்களும் அத்தகைய வரம் பெற்றிருந்தார்கள் என்னலாம். எதிர்ப்பு மிகுந் தோறும் அவர்களது ஆற்றலும் மிகுந்து பெருகுதலை அவர்களது சொற்போர்களின்கண் காணலாம்.

ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளுக்கு முன் ஓர் கோடை விடு முறையின்போது கோட்டாறு பட்டாரியர் நெடுந்தெருவிலே ஒரு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் டாக்டர் சோமசுந்தர பாரதியார், எம்.ஏ.பி.எல். அவர்கள் திருவள்ளுவரைப் பற்றிப் பேச விருந்தார். முன் ஏற்பாட்டின்படி தலைமை தாங்குவதற்கு ஒப்புக் கொண்டிருந்த வழக்கறிஞர் பி. சிதம்பரம்பிள்ளை அவர்கள் ஏதோ காரணத்தால் வர இயலவில்லை. ஆகவே கூட்டத்திற்கு வந்திருந்த பாவலர் அவர்கள் தலைமை தாங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். தமது சொற் பொழிவின்போது பாரதியார் பரிமேலழகரையும் அவரது உரையையும் வன்மையாகத் தாக்கி அவருரைக்குத் தாம் செய்துள்ள திருத்தங்கள் சிலவற்றை எடுத்துரைத்து வந்தார். "உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் கடையரே கல்லாதவர்" என்ற

குறளுக்குப் பரிமேலழகர் உரையை மறுத்து அதை பிழை என்றார். இக்குறளுக்குப் பொருள் கொள்ளுங்கால் "முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார் உடையார் "கல்லாதவர் கடையர்" என்று இரு முற்றுச் சொற்றொடர்களாக உரைநடைப்படுத்திப் பொருள் கொள்ளலே ஏற்புடைத்து என்றும் குறளில் உள்ளவாறு "உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்" என நிறுத்திப் பொருள் கொள்ளின் "கற்றார்" என்னும் எழுவாய் எவ்விதப் பயனிலையையும் பெறாது வறிதே நின்று வாக்கியம் பிழைபடும் என்றும் வாதித்தார். அவருரை முடிந்தது. பாவலர் அவர்கள் முடிவுரை கூற எழுந்தார்கள். "ஐயா நான் ஒரு முஸ்லிம். இஸ்லாமியக் கண்ணொடு திருக்குறளைப் பார்ப்பவன். என் கண்ணிலே திருக்குறள் ஓர் இஸ்லாமிய நூலாகப்படுகிறது. எனவே திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதிய உரை பல இடங்களில் பிழைபட்டது என்று நானும் கூறுகின்றேன். எடுத்துக் காட்டாக ஒன்றிரண்டு சொல்கிறேன். நீங்கள் என் திருத்தத்தை ஏற்றுக் கொள்வீர்களோ மாட்டீர்களோ என அஞ்சுகிறேன். எனினும் கேளுங்கள்" என்று தொடங்கினார்கள்.

இஸ்லாம் மதத்தினருக்கு பசு மாமிசம் தின்பது மறுப்பல்ல. ஆனால் இஸ்லாமியர் செத்த பசுவைப் புசிப்பதில்லை. எங்கள் வேதப்படி மந்திரம் சொல்லிக் கொன்ற பசுவிறைச்சியையே உண்பது முறை இதனை வள்ளுவர் தம் குறளிலே கூறுகின்றார், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிரும் தொழும்" என்பது அக்குறள். இதற்குப் பரிமேலழகர் கொண்ட பொருளை விடுத்து நான் புதிதாகப் பொருள் சொல்கிறேன். கொல்லான் - கொல்லப்பட்ட பசுவினது, புலாலை - மாமிசத்தை, மல்துத்தானை - மிகுதியாகத் தின்பவனை, எல்லாவுயிரும் கைகூப்பித்தொழும் - உயிர்கள் எல்லாம் கைகுவித்து வணங்கும். இப்பொருளை ஏற்றுக் கொள்வீர்கள் என்றால் பாரதியாரது புதுப் பொருளையும் ஏற்றுக் கொள்ளலாம். இந்த ஒரு குறளுக்கு மட்டுமல்ல; இதுபோல எத்தனையோ குறள்களுக்குப் புதுப் பொருள் கூறலாம். ஆயின் அது பல நூறு ஆண்டுகள் தமிழுலகிலே பயின்றுவரும் பரிமேலழகரின் உரையை மறுத்ததாகாது.

பாரதியார் தாம் எடுத்துக் கொண்ட குறளிலே ஒரு வாக்கியம் பயனிலை இன்றி நிற்கிறது, அது பிழை என்கிறார்கள் தமிழிலக்கியத்திலே இவ்வாறு எழுவாய், பயனிலை பெறாது நிற்பதும் அப்பயனிலை அவாய் நிலையாற் பெறப்படுவதும் இயல்பு என்று கூறி பல சான்றுகள் காட்டினார்கள். அவற்றுள் ஒன்று என் நினைவுக்கு வருகிறது "கசதப ஒழித்த ஈரேழன் கூட்டம் மெய்மயக்கு உடனிலை ரழ ஒழித்து ஈரெட்டாகும்" என்ற

நன்னூல் சூத்திரத்தில் உடனிலை மயக்கத்திற்கு மட்டும் பெயர் குறித்து வேற்று நிலை மயக்கத்தைக் கூறாது விட்டாராயினும் உடனிலையைக் குறித்தமையால் மற்றது வேற்று நிலை என்பது தானே பெறப்படுதல் போல "கல்லாதவர் கடையர்" என்ற மாத்திரத்திலேயே கற்றவர் தலையாயவர் என்பது தானே பெறப்படும். இதற்காக ஒரு பயனிலையை வலிந்து காணவேண்டிய தேவையே இல்லை" என்று சொல்லி மேலும் தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். இதற்கிடையில் பெருமழை வந்து விட்டது, ஆகவே கூட்டம் அடுத்த நாள் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அடுத்த நாள் பரவலர் அவர்கள் வந்தார்கள். ஆனால் பாரதியார் கூட்டத்திற்கு வராமலேயே போய்விட்டார்கள்.

ஒரு நாள் சரவண ஆசாரி கடையில் ஐயா இருந்தார்கள். அவர்களுக்குப் பொழுது போக்குவதற்கு ஏற்ற ஆட்கள் யாரும் கடையில் இல்லை. அப்பொழுது அந்த வழியாக வந்த நான் ஐயாவுக்கு வணக்கம் செலுத்தினேன். அவர்கள் என்னைக் கூப்பிட்டு உட்காரச் சொன்னார்கள். நான் கடையில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்தேன். இலக்கணப் பாடத்தைப் பற்றிப் பேச்சைத் தொடங்கி மெதுவாக,'' நன்னூலில் நீ எது வரை படித்திருக்கிறாய்?" என்று கேட்டார்கள். நான் பொதுவியல் மட்டும் படித்திருக்கிறேன் என்று சொன்னதாக நினைவு. ''நான் நல்லவன்", ''நீ கெட்டவன்'' இந்த இரு வாக்கியங்களையும் கூறி, ''இவை சரிதானு. சொல்'' என்றார்கள். அப்போது என்ன விடை சொல்வது என்று எனக்குத் தெரியவில்லை. சற்று தயங்கிய பின் சரிதான் என்று துணிந்து கூறினேன். அப்பால் அவர்கள் தன்மை ஒருமை, முன்னிலை ஒருமை, வினைமுற்று விகுதிகளை என்னை சொல்லச் செய்து நன்னூல் முறைப்படி அவ்வாக்கியங்கள் பிழையாமாற்றை விளக்கி நன்னூலைப் படிப்பது மட்டும் போதாது அதை இலக்கியங்களிலும் பேச்சு வழக்கிலும் ஒட்டிப் பார்த்துப் பயன்பெறவேண்டும் என்று அறிவுரை சொல்லி அனுப்பினார்கள். இது போலத் தமிழ் கற்கும் மாணவர்களை சோதனை செய்து திணற வைத்துப் பின் வழி காட்டுவது அவர்களுக்கு ஓர் சிறு பொழுதுபோக்கு.

கதிர்வேல்பிள்ளை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள். ஓர் சிறந்த தமிழறிஞர். யாழ்ப்பாணத்து நாவலூர் ஆறுமுக நாவலர் அவர்களின் மாணவர். இவர் இராமலிங்க சுவாமிகளது நூல் அருட்பாவன்று; மருட்பா என்று சென்னையில் பல இடங்களில் பேசி வந்தார். அக்காலத்தில் நம் பாவலர் அவர்கள் சென்னையிலுள்ள ரிப்பன் அச்சகத்தில் பிழைதிருத்தும் வேலை பார்த்து வந்தார்கள். அவர்கள் பார்த்த வேலை அச்சடிக்கும் நூல்களில் ஏற்படும் அச்சுப் பிழை

களைத் திருத்துவதாக இருந்தாலும் பாவலர் அவர்கள் தம் கூர்த்த மதியால் அந்நூல்களை எல்லாம் நன்கு கற்றுப் புலமை நிறைந் திருந்தார். இந்து மதப் புராணங்களிலும் அவர்களுக்கு மிகுந்த ஈடுபாடும் அறிவும் இருந்தது. இராமலிங்க சுவாமிகள் அருட்பாவைப் பாடுங்கால் அதில் முழுவதும் ஈடுபட்டுக் கண்ணீர் சொரிந்து நிற்பது அவர்கள் இயல்பு. இத்நிலையில் கதிர்வேல்பிள்ளை அவர்களின் பிரசங்கங்களுள் ஒன்றைக் கேட்கப் பாவலர் அவர்கள் சென்றிருந் தார்கள்.

கதிர்வேல்பிள்ளை அக்கூட்டத்தில், "நாதர் முடிமேலிருக்கும் வெண்ணிலாவே அங்கு நானும் வர வேண்டுகின்றேன் வெண் ணிலாவே" என்ற இராமலிங்க சுவாமிகளின் பாடலைப் பழித்துப் பேசினார். சாதாரணமாக பக்தர்கள் ஆண்டவனது பாதார விந்தங் களையே அடைய விழைவர்; அதுவே முறையுமாகும். ஆனால் இங்கு இராமலிங்க சுவாமிகள் அம்மரபையே மாற்றி ஆண்டவனது முடிமீது சென்றமர விழைகிறார். இது முற்றிலும் அடாத ஆசை. இத்தகைய கருத்தமைந்த பாடல்களைக் கொண்ட நூலை அருட்பா என்பதும் அடாது. ஆகவே அதை மருட்பா என்றே கொள்ளல் வேண்டும் என அவர் பேசினார். பாவலர் அவர்களால் இதைப் பொறுத்துக் கொண்டிருக்க இயலவில்லை. கூட்டத்திலிருந்து எழுந்து மேடைக்குப் போனார்கள். தாமும் ஏதோ பேச விழைவ தாகச் சொல்லி தலைவரின் அனுமதி பெற்றார்கள்.

கதிர்வேல்பிள்ளை அவர்களின் புலமையையும் சொல்லாற் றலையும் சிறிது புகழ்த்து பாராட்டிவிட்டு அவர்கள் கருத்துடன் தாம் சற்று மாறுபடுவதாகவும் அவர்கள் கூறிய பாடலடிகளில் 'நாதர்முடி' என்பதற்கு பதில் 'நாதமுடி' என்றே இராமலிங்க அடிகள் பாடியிருக்க வேண்டும் என்றும் கூறி நாதர் என்பது அச்சுப் பிழையாக இருக்கலாம் என்றார். அப்பால் நாதம் என்ற பிரணவத்திற்கு விளக்கம் கூறி அதற்கு மேலிருக்கும் சந்திரமண்டலத்திலே சென்றி ருக்க தாம் விழைவதாக சுவாமிகள் பேசுகிறார். அதில் பிழை எதுவும் இல்லையென நிலை நாட்டினர் கூட்டம் முடிந்ததும் பாவலரது சொல்லாற்றலிலும் வாதத் திறமையிலும் கட்டுண்டு மகிழ்ந்த இராம லிங்கசுவாமிகளின் பக்தர்கள் இவர் ஓர் முஸ்லிம் என்பதையும் மறந்து விரைந்து வந்து அவரைத் தழுவித் தூக்கியெடுத்து 'கதிர்வேல் பிள்ளைக்கு எதிர்வேல்பிள்ளை" என்று குரலெழுப்பி ஆரவாரம் செய்தனர். அன்று முதல் கதிர்வேல்பிள்ளை எங்கேனும் அருட் பாவை எதிர்த்துப் பேசுவதாயின் அதற்கடுத்து அவர்தம் கூற்றை மறுத்துப் பேசுவது பாவலர் அவர்களின் வேலையாயிற்று. இதனால் இவர்களது புகழ் சென்னை நகரத்திலும் பிற இடங்களிலும் விரைந்து பரந்து பெருகிற்று என்பர்.

பாவலர் அவர்களைத் தற்போது நாஞ்சில் நாட்டில் உள்ள தமிழறிஞர் பரம்பரையின் தந்தை என்று கூறினால் அதில் உயர்வு நவிற்சி சிறிதும் இல்லை. அவர்களிடத்தில் கற்ற மாணவர் எண்ணற்றவர். தம்மைப் பாவலர் அவர்களது மாணவர் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்வோர் பலர். பாவலர் அவர்களின் மாணவர்களுள் முதன்மையானவர் முதுபெரும் புலவர் சாத்தாங் குட்டிப்பிள்ளை அவர்கள். இவர்கள்பால் கற்றுத் தேர்ந்தோர் பலர் இன்று தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் தமிழாசிரியர்களாகப் பணியாற்றி வருகின்றனர். அடுத்த ஓர் சிறந்த மாணவர் காலஞ் சென்ற தசாவதானி ஆறுமுகம் பிள்ளை. பின் பறக்கைக் கவிஞர் வித்துவான் மாணிக்க வாசகம் பிள்ளை. பாவலர் அவர்கள்பால் சில காலம் பாடம் கேட்டோர் பலர். திருவாளர்கள் ஏசுவடியான், பீ ஏ.. பில். டி.. பிச்சை வாத்தியார், பிராஸ்பர். கிருஷ்ணசாமிப் பிள்ளை, சுந்தர ஆசாரி, இ. சிவம், இராமசாமிப் பணிக்கர், சரவண ஆசாரி, அரங்கநாத ஐயர், மாணிக்கம் செட்டியார் போன்றோர். இங்ஙனம் நோக்கில் தற்போது நாஞ்சில் நாட்டைச் சார்ந்த தமிழறிஞர்களில் பெரும்பாலோரும் ஏதேனும் ஒரு வகையில் பாவலர் அவர்கள் பரம்பரையில் வந்தவர்களாகவே காணப்படுவர்.

இத்தகைய பிறவி மேதையைப் பெற்ற நாஞ்சில் நாடு அவர்களது புலமையைச் சரியாகப் பயன்படுத்தாமலும் அவர்களைச் சரியாகப் பாதுகாக்காமலும் ஓரளவு புறக்கணித்துவிட்டமை வருந்தத் தக்கதே. அந்நிலை மாற பாவலர் அவர்கள் செய்த பைந்தமிழ் நூற்களை வெளிக்கொணர உதவுமுகத்தான் அவர்கள் புலமையைப் பயன் படுத்தவும் அவர்கள் புகழைப் பாதுகாக்கவும் தமிழர்கள் முன்வர வேண்டும்.

வாழ்க பாவலர் திருப்பெயர்!
ஓங்குக அவர்தம் பெரும்புகழ்!!



பாவலரின் சீட்டுக்கவி

தமிழிலக்கியச் செல்வத்திற்கு ஒளி சேர்த்துக் கொண்டிருக்கும் பல்வகைப் பாவினங்களுள் சீட்டுக் கவிதைகள் என்ற பிரிவின்பாற் படும் செய்யுட் தொகுப்பும் ஒன்று. அறிஞர் பெருமக்கள் எழுதுகின்ற முடங்கல்களுக்கும் சாதாரண மனிதர் எழுதுகின்ற கடிதங்களுக்கும் இடையே வேறுபாடு உண்டு. முன்னையவை இலக்கிய வரலாற்றில் இடம் பெற்று விடுபவை. மற்றையவை எங்கெங்கோ சென்று மறைந்து விடுபவை.

சீட்டுக் கவிதை என்ற உடனே புலவர் பெருமக்கள் செய்யுள் வடிவத்தில் தத்தமக்கு வேண்டியவர்களுக்கு எழுதிக் கொண்ட கவிதைக் கடிதங்களே நம் கண்முன் வந்து நிற்கும். சீட்டிலும் ஓலையிலுமாக பாவடிவில் எழுதியும் குறித்தும் விடுத்த முடங்கல் தமிழிலக்கியச் சரித்திரத்திற்குப் புதியனவல்ல. 'ஓலைத் தூக்கு' எனப்படும் சீட்டுக் கவிதையில், புலவனொருவன் தன் பெருமையைத் தானே பறைசாற்றிப் பீத்திக் கொள்வதைக் குற்றமெனக் கொள்ளலாகாது' என்று பவணந்தி முனிவர் நன்னூலில் விதி விலக்கு அளிப்பதிலிருந்தே சீட்டுக் கவியின் தொன்மையும் முக்கியத்துவமும் தெரியவரும்.

பாவ நயமும் கருத்துச் செறிவும் கற்பனைப் பொலிவும் உணர்ச்சிக் குழைவும் கலை எழில் மிளிர பாவடிவாகி நிற்கும் சீட்டுக் கவியொன்று வந்து அமைந்து விடுமேயானால் அந்தக் கவி அழியா இலக்கியத்தி னின்றும் அகற்றி வைத்து விட முடியாத இடம் பெற்று விடுகிறது. இத்தகைய கவிதை உருவத்தில் அமைந்த கடிதங்கள் எத்தனை எத்தனையோ தமிழ் மொழியில் பிறப்பெடுத்திருக்கலாம். ஆயினும் அத்தகைய சீட்டுக் கவிகளுள் தமிழிலக்கியத்தோ டிலக்கியமாக

ஒன்றி நிற்கும் அளவுக்கு நிலைத்துவிட்ட ஓலைத் தூக்குகளின் எண்ணிக்கை மிகச் சிலவே. நிலையான இடம் பெற்றுவிட்ட இத்தகைய ஆய்தமிழ்ப் புலவோரின் எண்ணிக்கையும் மிகக் குறைவே.

இலக்கியத்தில் இடம் பெறத் தக்க கடிதம் எழுதுவதென்பது ஒரு தனிக் கலை. அதிலும் செய்யுள் வடிவில் திருமுகம் தீட்டுவதென்பது அத்தனிக் கலையிலும் தனிக் கலை. ஆகவே இந்த அருங்கலையில் வெற்றி காண்பதில் அரிய சிரமம் இருக்கிறது. கூர்த்த மதிபடைத்த கவிவல்லவரால் அன்றி எல்லாராலும் சீட்டுக் கவி எழுதி விடுவ தென்பது இயலாத தொன்று. சீட்டுக்கவி தீட்டும் கலை கைவர வேண்டுமெனின் அதற்கென்றே உரிய ஞானமும் தனித் திறமையும் பெற்றவராக இருக்கவேண்டும், ஓலைத் தூக்கு விடுக்க முனையும் புலவர் பெருமகன்.

சாதாரணமாக சீட்டுக் கவியொன்றை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதற்பகுதி திருமுகம் விடுக்கும் புலவரின் பிரதாபத் தையும் பிரதானத்தையும் பெருமையையும் வாசாமுகோசரமாய் விளம்பரப்படுத்தும் வகையில் அமைந்திருக்கும். இரண்டாம் பகுதி, யாருக்கு முடங்கல் விடப்படுகிறதோ அவரது மகோன்னத மகாத் மியங்களை பாடிப் புகழும் பாணியில் அமைந்திருக்கும் - மூன்றாம் பகுதி, புலவர் எதற்காக ஓலைத் தூக்கு அனுப்ப நினைத்தாரோ அதை உள்ளடக்கி நிற்கும். சென்று தேய்ந்து இறும் கதைக்கு ஒப்ப முற்பகுதியும் இடைப் பகுதியும் மிக நீண்டு விரிந்திருக்கும். மூன்றாம் பகுதி மிகச் சுருக்கமாக - ஆனால் கச்சிதமாக - கூறப்பட்டிருக்கும். இம்மூன்றாம் பகுதியைக் கவிக்கடிதத்தின் மிக முக்கிய பகுதி யாகவும் கவிஞரின் விருப்பம் இழைந்தோடும் உயிர் நாடியாகவும் கொள்ளலாம். இப்பகுதியில் தமக்கு வேண்டியவற்றை வெளிப் படையாகவே சொல்லுவர் சிலர். மற்றும் சிலரோ குறிப்புச் சொற் களால் தத்தம் வேண்டுகோளை சூசகமாக உணர்த்தி நிற்பர்.

தமிழ்ப் புலவர்களுக்கு ஆதரவு தந்து வாழ வைத்த வள்ளல்கள் தமிழ் முஸ்லிம்களிடையே பலர் இருந்திருக்கின்றனர் என்பதற்கு தமிழ்ப் புலவோரின் வாழ்க்கை வரலாறுகள் சான்று பகருகின்றன. அட்டாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர், தமிழ் முஸ்லிம் வள்ளல் ஒருவரிடம் இருபது இலட்சம் வராகன் வேண்டுமெனக் கோரி ஓலைத் தூக்கு விடுத்திருக்கின்றார். சென்னை செல்ல இந்தக் கவிராயருக்குப் பெருந்தொகை தேவைப்படுகிறது. இருபது இலட்சம் வராகன் என்றாலும் அத்தொகையை ஓலைத் தூக்கைக் கண்டவுடன் அனுப்பி வைக்கும் அளவுக்கு உதார குணம் படைத்தவர் முகம்மது

தம்பி என்னும் அளவுக்கு அந்த முகம்மது தம்பியின் வள்ளல் தன்மை சிறந்திருக்கின்றது என்றுதான் நாம் ஊகிக்க வேண்டி இருக்கிறது. இருபது இலட்சம் வராகன்களை சரவணப் பெருமாள் கவிராயர் தம் சீட்டுக் கவியில் குறிப்பாகக் கேட்டிருக்கும் முறை வருமாறு :

“உவ்வொன்று யவ்வொன்று
லவ்வொன்று டவ்வொன்று
சவ்வொன்று மவ்வொன்று
வவ்வொன்று, ரவ்வொன்று
கவ்லொன்று, னவ்வொன்று
வரவிடல் வேண்டுமே”

புலவர்களின் உள்ளங்களில் எழுகின்ற விருப்பங்கள் வினோதனமானவையாகவும் சிற்சில சமயங்களில் விசித்திரமானவையாகவும் அமையும் என்றால் நாம் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. சென்னைக்குச் செல்ல இருபது இலட்சம் வராகன் கேட்டு ஓலைத் தூக்கு விடுத்தார் அட்டாவதானம் சரவணப் பெருமாள் கவிராயர் என்றால், அந்தகக் கவி வீரராகவ முதலியார் என்பார் தமக்கு ஒரு குதிரை வேண்டுமென்று ஆசைப்பட்டிருக்கின்றார். புறக்கண் பார்வையற்ற அந்தக் கவிஞருக்குக் குதிரைக்கென்ன தேவை வந்தது என்று நாம் ஆச்சரியப்பட்டு விடக்கூடாது. புலவரின் ஆசையை நிறைவேற்றுவதுதான் வள்ளல் தன்மை படைத்தோரின் கடமை. செழியதரையான் என்பாருக்குக் குதிரை வேண்டுமென்ற தம் விருப்பத்தைப் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அந்தகக் கவி வீராாகவ முதலியார் தமது சீட்டுக் கவியில் எவ்வாறு வெளியிட்டிருக்கின்றார் பாருங்கள் ;

“பாடாத கந்தருவம், எரியாத கந்துகம்
பற்றிக்கொளாதசோணம்,
பறவாத கொக்கு, அனற் பண்ணாத கோடை, வெம்
படையிற் றொடாத குந்தம்
சூடாத பாடலம், பூவாத மாவொடு
தொடுத்துமுடி யாதசடிலம்
சொன்னசொற் சொல்லாத கிள்ளையொன்று எங்குந்
துதிக்கவர விடவேண்டுமே”

மகாமதி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், தமிழ்க் கடல், சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி இந்த நூற்றாண்டின் நடுப் பகுதி வரை வாழ்ந்தவர். அவர்கள் எழுதியுள்ள சீட்டுக் கவிகள் காலத்திற்கு ஏற்றவாறு அமைந்து, நண்பர்கள் ஒருவருக் கொருவர்

நேர்முகமாக உரையாடுவது போன்ற பாங்கு பெற்று புகழ் பெறுபவை. அவர்களது சீட்டுக் கவிகளுள் முற்பகுதி சுயப் பெருமையை தம்பட்டம் அடித்துக் காட்டுவதில்லை. இடைப் பகுதியும் முடங்கல் யாருக்குத் தீட்டப்படுகிறதோ அவரது பிர தாபங்களைப் புகழ்ந்து போற்றுவதில்லை. வார்த்தைகளை அள்ளிச் சொரிவதுமில்லை. முடங்கலில் அடங்கி இருக்கும் வேண்டுகோளை வீணாக வளர்த்து நிற்பதுமில்லை.

கடிதங்கள் கச்சிதமாக அமைந்திருக்க வேண்டும். 'வழவழா' என்று வீணாக வளர்த்தப்பட்டிருக்கக் கூடாது. நேருக்கு நேர் பேச முடியாத பொழுது கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட வேண்டிய விஷயங்கள் ஒரு சில வரிகளில் அமைந்திருக்கவேண்டும். இத்தகைய கடிதத்திற்கே உரிய அடிப்படை இலட்சியத்திற்கு மாறுபடாத வகையில் வார்த்தைகளை செட்டாகவும் சுருக்கமாகவும் கையாண்டு உணர்த்த வேண்டிய விஷயங்களை நயமாகவும் மனதிற் சென்று பதியும்படி அழுத்தமாகவும் கூறி விடுகின்ற சீட்டுக் கவிகளைப் புனைவதில் திறமை வாய்ந்தவர்கள் பாவலர் அவர்கள் என்பதற்கு அவர்கள் தம் நண்பர்கள் சிலருக்கு விடுத்துள்ள சீட்டுக் கவிகள் சான்று பகர வல்லவை.

சதாவதானம் பாவலர் அவர்கள் புதியதாக ஒரு வீடு கட்டு கின்றார்கள். கட்டிய அந்தப் புதுமனையில் குடிபுகுவதற்கு முன்னர் அம்மனையை முழுமையாக்க வல்ல அம்மிக் கல்லொன்றிற்கும் குழவிக்கும் தேவையேற்படுகின்றது. நாஞ்சில் மாவட்டத்திலேயே அம்மிக்கும் குழவிக்கும் பெயர்பெற்ற இடம் வாய்ப்பான முதுபெரும் மலைப் பாறைகளுக்குப் பெயர்போன தாமரைக்குளம் என்ற சிற்றூராகும். அம்மியும் குழவியும் அவ்வூர்ப் பாறையில் இருந்து உருவானவையாக இருக்கவேண்டும். அங்கிருந்து தமது புது மனையின் சமையற்கட்டில் வந்து இடம் பெறவேண்டிய அம்மிக் கல்லையும் குழவியையும் வேண்டி சதாவதானம் பாவலர் அவர்கள் தாமரைக் குளத்தைச் சார்ந்த சிவதாணுப் பண்ணையாருக்குச் சீட்டொன்றில் கவிதை யொன்று எழுதி அனுப்புகின்றார்கள்.

"ஆயுமகத் தாரகத்து ளனுதினமும்
அகலாம லன்போ டச்சம்
தோயுமகத் தாயெந்தன் தூயதணச்
சிவதாணுத் தோன்றால் யானின்(று)
ஏயுமகத் தென்றென்று மிருந்துபணி
யிருந்துசெய யிருங்கல் லாலோர்
தாயுமக வுந்தருவாய் தகுவிலையே
தருவலிசை தழைக்குந் தானே"

எடுத்துத் தொடுத்து முடித்திருக்கும் கடிதம் முழுமையான சின்னஞ் சிறு முடங்கலாக பூரணத்துவம் பெற்று மிளிர்கின்றது. முடங்கலைப் பெறுவோரை அழைக்கின்ற விளியின் பான்மையினைப் பாருங்கள்.

''ஆயுமகத் தாரகத்து ஊனுதினமும்
அகலாம லன்போ டச்சம்
தோயுமகத் தாயெந்தன் தூயகுணச்
சிவதாணுத் தோன்றால்!''

எடுத்த எடுப்பிலேயே முடங்கல் யாருக்கு எழுதப்படுகின்றதோ அவரை அன்போடழைக்கும் பாங்கு மிக அற்புதமாக அமைந்து விடுகின்றது. பாவலர் அவர்கள் தங்களை கவிராச சிங்கன் என்றோ, கலைமகள் இருப்பிடம் என்றோ, சொல் விற்பனம் விளையும் மதுரக் களஞ்சியம் என்றோ, சுகிர்தகுண அவதானி என்றோ, சகல கலை ஞாபகம் என்றோ, தமிழ்க் குஞ்சரம் என்றோ, தமிழ் பொக்கிஷம் என்றோ அடுக்கிக் கொள்ளவும் இல்லை; பறை சாற்றிக் கொள்ளவுமில்லை. ஆயதமிழை நாளெல்லாம் ஆயும் ஆய்புலவோர் தம் இதயங்களையும் அவர்தம் இல்லங்களையும் விட்டு அகலாது சுற்றிச் சுற்றி வந்து நிற்கும் பண்பு படைத்தவர் சிவதாணுச் செம்மல் என்பதை அவரை அழைக்கும் போதே அறிவிக்கின்றார்கள், பாவலர் அவர்கள். சிவதாணுப் பண்ணையார், சதாவதானி பாவலர் அவர்களிடம் தமிழ் பயின்று கொண்டிருந்த மாணாக்கர் ஆவார். ஆகவே ஆயுமகத்தாருக்கு நடுநாயகமாக விளங்குபவர் தாங்கள் என்பதைச் சொல்லாமலேயே சொல்லுகின்றார்கள், பாவலர் பெருமானார் அவர்கள். பெருந்தகையார் ஒருவரை அணுகிப் பழகி வருபவருக்கு முதலில் அப்பெருமானிடம் அச்சமும் பயமும் ஏற்படும் என்பர். மெல்ல மெல்ல பயபக்தியுடன் அணுகிப் பழகி நெருங்க அப்பெருமானார்பால் வளரும் அன்பு பெருக்கெடுக்கும் என்றும் சொல்வர். மேதகு பெரியார் ஒருவருக்கும் அவரை அண்டிவரும் சீடர் ஒருவருக்கும் இடையே வளரும் உறவின் தன்மை இத்தகையதாகவே இருக்கும் என்பது உலகியல் தெரிந்தவர்கள் கண்டறிந்த உண்மை. அத்தகைய மேதையாகிய தம்மிடம் வைத்திருந்த அன்போடு அச்சம் தோய்ந்த இதயப் பண்பால் வளர்ந்த உறவு காரணமாகத் தன்னை விட்டு அனுதினமும் அகலாமல் பக்திபூண்டொழுகிவந்த சீடனொருவனை ''தூய குண சிவதாணுத் தோன்றால்!' என முதலில் விளித்தபடி முடங்கலைத் தொடங்கி, தாம் குடியேறவிருக்கும் இல்லத்தில்,

''......என்றென்றும் இருந்துபணி
இருந்துசெய இருங்கல் வாலோர்
தாயுமக வுந்தருவாய்''

என அன்போடும் உரிமையோடும் கேட்கின்றார்கள் பாவலர் அவர்கள்.

பணத்தை வாரி இறைத்து மனதிற்குகந்த புதுமனை ஒன்றைக் கட்டிக் கொள்ளலாம். ஆனால் புதுமனை உண்மையில் குடியிருக்கும் நல்ல இல்லமாகப் பூர்த்திபெற வேண்டுமென்றால், அந்தப் புது வீட்டில் அம்மிக் கல்லும் குழவியும் வந்தாக வேண்டும். அம்மியும் குழவியும் இல்லாத வீட்டில் இல்லறத்தின் புனிதத்துவத்தைக் காண முடியாது. இல்வாழ்வில் நிறைந்த சின்னங்களாகக் கருதப்படத்தக்கவை அம்மியும் குழவியுமே. அம்மி இல்லை, குழவி இல்லை, சமையற் கட்டில் புகையும் எழவில்லை என்றால் வீட்டில் யாரும் குடியிருக்கவில்லை, வாழவில்லை என்றுதான் பொருளாகும். எந்த வீட்டில் வேளா வேளை நேரந் தவறாமல் அம்மி, குழவி எழுப்பும் இன்னொலியும் இங்கிதமும் எழுந்து காதுகளில் ரீங்காரம் செய்யவில்லையோ அந்த வீட்டைச் சார்ந்தவர் இல்வாழ்க்கை நடத்துகின்றார் என்று சொல்லுதற்கில்லை. ஆகவேதான் தாம் குடியேற இருக்கும் புது வீட்டை வாழவைக்கும் தனிப்பெருமையையும் உரிமையையும் தம் உயிர்ச் சீடரான சிவதாணுப் பண்ணையாருக்குத் தந்திருப்பதாக பாவலர் அவர்கள் தாமனுப்பிய முடங்கலில் கூறுகின்றார்கள். அம்மியும் குழவியும் சாதாரண அம்மியும் குழவியுமாக இருந்துவிடக் கூடாது என்பதையும் சூசகமாக எடுத்துரைத்து பாவலர் அவர்கள் எச்சரிக்கின்றார்கள். அரைக்க அரைக்கத் தேய்ந்து தேய்ந்து நாளடைவில், மழுங்கி மாய்ந்து விடுகின்ற அம்மியாகவும் குழவியாகவும் தம் புதுமனையில் வந்து குடிபுக விரும்புகின்ற தாயும் மகவும் இருந்துவிடக் கூடாது; ஒருநாள் கூட தம் இல்லத்தின் இனிமைக்குத் தடங்கல் தந்துவிடுகின்ற அம்மியும் குழவியுமாக சிவதாணுப் பண்ணையார் அனுப்பி வைக்கின்ற 'தாயுமகவும்' ஆகிவிடக் கூடாது என தங்களது முடங்கலில் அச்சுறுத்திக் கூறுகின்றார்கள், புலவர் பெருமானார் அவர்கள். என்றென்றும் தம் இல்லத்துள்ளோருக்கு சமையற் கட்டில் அம்மியடியே வேலை இருந்துவர வேண்டும். வீட்டில் உள்ளோர் இருந்து பணி இருந்து செய்யப் பண்ணும்படியான அம்மியும் குழவியும் ஆகும் பெருமை அந்த அம்மிக்கும் குழவிக்கும் இருக்கவேண்டும். மேலும் அந்த அம்மிக் கல்லுக்கும் குழவிக்கும் என்றே தம் வீட்டில் என்றென்றும் பணி இருந்து வரவேண்டும் என்றும் பாவலர் அவர்கள் தம் வீட்டிற்கு வரவிருக்கின்ற அம்மிக்கும் குழவிக்கும் வாழ்த்துக் கூறுவது போலவும் புலவர் அவர்கள் எழுதுகின்ற வேண்டுகோள் அமைந்திருக்கின்றது.

முடங்கலில் புலவர் பெருமானாரவர்கள் குறிப்பால் உணர்த்தியுள்ள செய்தி, 'தாயு மகவுந் தருவாய்' என்ற வேண்டுகோளுடன்

நின்று விடவில்லை. 'தருவிலேயே தருவல் இசை தழைக்குந் தானே' என்றும் கூறி சுபமங்களத்தோடு சீட்டுக் கவியை முடிக்கின்றார்கள்.

தகுந்த விலை தரத்தக்க பாக்கியமிக்க இருங்கல்லால் ஆன தாயும் மகவும் தருவாய்; தந்தால் இசை தழைக்கும், இன்பமாகும் என வாழ்த்துக் கூறி இச்சீட்டுக் கவியை பாவலர் அவர்கள் முடித்திருக்கின்றார்கள்.

இந்தச் சீட்டுக்கவி சிறந்த மாணிக்கங்கள் எனச் சொல்லத் தக்க சீட்டுக் கவிகளின் வரிசையில் வைக்கத் தகுந்தது.

பாவலர் அவர்கள் குடிபுகுந்த புதுமனைக்கு சிவதாணுப் பண்ணையார் அறுபது ஆண்டுகட்கு முன்னர் அனுப்பி வைத்த அம்மிக் கல்லும் குழவியும் இன்றளவும் இசையெழுப்பிக் கொண்டே இருக்கின்றன. வறுமையோ செம்மையோ புலவர் பெருமானார் புனைந்த சீட்டுக் கவியின் சொற்களினுள் அடங்கி நிற்கும் ஆசி காரணமாக இன்றளவும் புலவர் பெருமானார் வீட்டில் அம்மி அரைபடாமல் புசியாது பசித்திருந்தனர் என்ற நிலைமை மட்டும் ஏற்பட்டதில்லை. சீட்டுக் கவியின் மகாத்மியம் இப்படியல்லவா அமைந்திருக்க வேண்டும்!

நான் கண்ட பாவலர்

வித்துவான் செ. சதாசிவம்

இந்திய விடுதலை ஏட்டில் சிறப்பாகக் குறிப்பிடத் தகுந்த காலம் 1924. ஒவ்வாத ஆட்சியை ஒழித்துக் கட்டுவதற்கென்று ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினார் காந்தி அடிகள். அதனால் அவர் மீது அரச நிந்தனைக் குற்றம் சுமத்தியது அரசாங்கம். ஆறு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து அடிகளை எரவாடாச் சிறைக் கோட்டத்துக்குள் தள்ளினர் வெள்ளையர். இது கேட்டதும் இந்திய மக்கள் அனைவர் உள்ளங்களும் குமுறின. அடிகளுக்கும் அரசாங்கத்துக்கும்—ஏன் நாட்டு மக்களுக்குமே முதல் அனுபவம் இது. என்ன செய்வதென்று தெரியாத இளைஞர் உள்ளங்கள் புகைந்து கொண்டிருந்தன. நல்ல வேளையாக ஓராண்டுக்குள் அடிகள் விடுதலை செய்யப்பட்டு விட்டார். இப்போது, மாந்தரின் மனத் துயரெல்லாம் மகிழ்ச்சிப் பெருக்காக மாறிற்று என்றால் அதில் வியப்பில்லையல்லவா? நாடெங்கும் கொண்டாட்டம்; விடுதலைக் கொண்டாட்டம். சிறூர்களிலும் பேரூர்களிலும் எல்லா நகரங்களிலும் காந்தியார் விடுதலை பெற்ற நாளைச் சிறப்பாகக் கொண்டாடினர்.

நான் பிறந்த சிற்றூர் இரவிபுதூர். அங்கும் விடுதலைக் கொண்டாட்டம் நடைபெற்றது. விழாவுக்கு வெளியூர் பெரியார்கள் மூவர் அழைக்கப்பட்டிருந்தனர். ஒருவர் வ. வே. சு. ஐயர் அவர்கள். அவர் அப்போது சேரன்மாதேவியில் குருகுலம் அமைத்து நடத்திக் கொண்டிருந்தார். ஏனைய இருவரும் கோட்டாற்றுப் பெரியார்கள். ஒருவர் டாக்டர் எம். இ. நாயுடு அவர்கள். இன்னொருவர் பாவலர் அவர்கள். சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களைப் பாவலர் என்று சுருக்கமாகச் சொல்வதுதான் வழக்கம்.

நான் அந்நாளில் சிறுவன். பதினைந்தாண்டுகூட நிரம்பி இருக்காது. ஆயினும் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் உற்சாக

மாகக் கலந்து கொண்டேன். ஆவலோடு பேச்சுக்களைக் கேட்டுச் சுவைத்தேன். பாவலர் அவர்களின் பேச்சுத்தான் எல்லோரையும் பிணித்து நின்றது. கைதட்டலும் ஆரவாரமும் அதற்கே மிகுதியும் இருந்தன.

அப்போதுதான் முதன் முறையாக நான் பாவலர் அவர்களைப் பார்த்தது. அவர் பேச்சு என்னைக் கவர்ந்ததா, அல்லது அவரது தோற்றம்தான் என்னைக் கவர்ந்ததா என்று சொல்ல முடியவில்லை. அந்தக் கதருடையும், கதர்ச் சட்டையும், காந்திக் குல்லாவும் மட்டு மல்ல, கேட்டார்ப் பிணிக்கும் சொல்வன்மையும் என்னைக் கண் இமைக்காமல் செய்துவிட்டன என்றே சொல்லவேண்டும். பேச்சின் ஒரு பகுதி இன்றும் நன்றாக நினைவிருக்கிறது. கதர் உடுக்க வேண்டியதன் இன்றியமையாமையைப் பற்றிக் கூறி வந்தார் பாவலர். இறுதியாகச் சொன்னார் :

"நம்மவர் திருமணத்தின்போது கட்டுவது கூறை ஆடை எனப்படும். அது கோடி ஆடை, அதாவது புத்தாடை. பிணத்தைப் பொதிவதும் புத்தாடைதான்; ஆனால் அது மில் துணியாயிருக்கும். திருமணத்தின்போது மில் துணி கட்டுவது வழக்கம் இல்லை. கோடித் துணிகட்டுபவன் மணமகன். மில் துணி கட்டுபவன் பிணமகன். ஐயா! நீங்கள் மணமக்களாக இருக்க விரும்புகிறீர்களா, அல்லது பிணமக்களாக இருக்க விரும்புகிறீர்களா? இல்லை, இல்லை. நீங்கள் மணமக்களா, பிணமக்களா? மணமக்களானால் கையால் நூற்று நெய்த கதராடையை இன்றே கட்டுங்கள். பிணமக்களானால் மில் துணியைக் கட்டுங்கள். விதவைப் பெண்களைப் போல அந்த வெள்ளைத் துணியைக் கட்டிக் கொள்ளுங்கள். மணமக்களே நீங்கள் கதர் அணியப் போவதற்கு அறிகுறியாக உங்கள் மேலே கிடக்கும் அந்தப் பிண ஆடையை இப்பொழுதே எடுத்தெறி யுங்கள். எரிக்கு இரையாக்குங்கள். இங்கே, இப்பொழுதே ஒரு சொக்கப்பனை எழட்டும்".

அவ்வளவுதான். பிலுபிலுவென்று மேலாடைகள் கழற்றி எறியப்பட்டன. உடுப்புகள் கழற்றி வீசப்பட்டன. துணி மலை ஒன்று உருவாயிற்று. அதிலே தீ மூட்டப்பட்டது. கணப்பொழுதில் அது எழுநா விட்டு எரியத் தொடங்கியது. நீரற்று விரிந்து பரந்து கிடந்த அந்த ஏரியின் திடலில் எழுப்பப்பட்ட எரியின் கோலம் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது. இனி கதரே அணிவது என்று அந்தச் செந்தீயின் முன் பலரும் சபதம் எடுத்துக் கொண்டனர்.

அன்றைய கூட்டத்திற்குப் பிறகு எங்கள் ஊரில் மில் துணி கட்டியவரைக் கண்டால் நீ மணமகனா, பிணமகனா என்று கேட்டு வேடிக்கை செய்வது வழக்கமாகப் போயிற்று. பேச்சு வேடிக்கையாக இருந்தாலும் பெற்ற ஊதியம் பெரிது. இதனால் ஏராளமானோர் தேசீய மனப்பான்மை உடையவராயினர்; கதராடை கட்டினர்; தம்மை தேச சேவையில் ஈடுபடுத்திக் கொண்டனர். உலகம் தெரியாத கிராம மக்களிடையே ப்படி ஒரு புரட்சியைக் கிளப்பி விட்டுச் சென்ற பாவலர், அன்றே என் இளம் உள்ளத்தில் பசுமை கொடுக்க இடம் கொண்டு விட்டார்.

இதன்பின் பல ஆண்டுகளாகப் பாவலர் அவர்கள் தென்னகத்தில் காங்கிரசுக்கோர் தூணாகவே விளங்கி வந்தார். 1937–ல் காங்கிரஸ் தேர்தலில் கலந்து கொண்டபோது பல்வேறு இடங்களிலும் சென்று பிரச்சாரம் செய்து காங்கிரசுக்கு வெற்றியைத் தேடித் தந்தார். பாளையங்கோட்டையில் காங்கிரசை எதிர்த்து நின்றவரைக் கட்டிய பணம் இழக்குமாறு செய்தார். அப்போது முழங்கிவந்த தாரக மந்திரம், ''மஞ்சள் பெட்டி மங்கலப்பெட்டி; வெள்ளைப் பெட்டி வெறும் பெட்டி'' என்பதாகும். 'மஞ்சள் பெட்டியை நிரப்புங்கள், வெள்ளைப் பெட்டியை வெறும் பெட்டியாக்குங்கள்' என்று எழுப்பிய குரல் வீண் போகாமல் சிறந்த பயனையே தேடிக் கொடுத்தது.

இப்படி எல்லாம் தேசத் தொண்டு ஆற்றி வந்த பாவலர், பின் நாளில் நூல் கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் நம்ப முடிகிறதா? ஆனால் உண்மை அது. நூல் என்றால் கதர் நூலா? மில் நூலல்லவா? இதை என் கண்ணாரக் கண்டு உள்ளங் குமுறி இருக்கின்றேன். இப்படித் தம் கொள்கைக்கு மாறுபட்ட தொழிலில் அவர் ஈடுபட்டதேன்? பாரியும் பேகனும் அதிகனும் குமணனும் வாழ்ந்த காலமல்லவே அது? நாடென்றும் மொழியென்றும் பாடித் திரிந்தால் வாயும் வயிறும் நிறையாதே! வாழ்வு தழைக்காதே! அவருக்கும் பொருட்குறை உண்டாகாமல் போற்றிக் காக்க ஒரு புரவலன் மட்டும் இருந்திருந்தால் பாவலர் பலப்பல பாரகாவியங்களுக்குத் தந்தையாயிருந்திருப்பார்; பல்வேறு அவதானிகளுக்கு குருவாயிருந்திருப்பார். இன்னும் பல பாவலர், நாவலர், பண்டிதர், வித்துவான்களைப் படைத்திருப்பார்; என் செய்வது?

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பிருந்தே பாவலர் அவர்களை நெருக்கமாகத் தெரிந்து கொள்ளும் பேறு எனக்குக் கிடைத்தது. அதற்குக் காரணம் உண்டு. பாவலர் என் ஆசிரியருக்கு ஆசிரியர். அதாவது எனக்கு எழுத்தறிவித்த ஆசிரியத் தந்தையான பண்டித - சாஸ்தாங் குட்டிப்பிள்ளை அவர்களை முதன் மாணவராகக் கொண்டவர். அவர்களுடைய ஆசிரியத் தந்தை. ஆகவே பாவலர்

எனக்குத் தாத்தா ஆசிரியர். ஆதலால் நான் நாகர்கோவிலில் தங்கிய காலத்தில் பாவலர் அவர்களை நாள்தோறும் காண்பேன்; கண்டு மகிழ்வேன்; அதற்கு வாய்ப்பும் இருந்தது.

பொன் வாணிபம் நடத்தி வந்த திரு. சரவண ஆச்சாரி, பாவலருடைய கடைக்குட்டி மாணவர். தம் மாணவரைப் புலவர் ஆக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார் பாவலர். நாள்தோறும் ஆச்சாரியார் கடைக்குப் பாவலர் வருவார். அப்போது அவரைச் சூழ்ந்து அறிஞர் நிற்பர். நானும் அவர்களுக்கிடையில் இடம் பிடித்துக் கொள்வேன். மகாமதியின் செந்நாப்போது எப்போது மலரும் என்று ஆவலோடு எதிர்ப் பார்ப்பார்கள். வாயிலிருந்து சுருட்டை எடுத்துக் கீழே வைத்து விட்டு நிமிர்ந்து உட்கார்ந்து விட்டாரானால் 'இன்று நமக்குக் கொண்டாட்டம்தான்' என்றெண்ணி எல்லோரும் குதூகலம் கொள்வார்கள். கவிச் சுவைதேரும் உள்ளங்களைக் களிப்பில் ஆழ்த்த வல்ல பேச்சு வெளிப்படுவதற்கு அறிகுறி அது. சொற்பெருக்குப் பெரும்பாலும் கம்பராமாயணத்தைப் பற்றியதாக இருக்கும். இராமாயணத்தில் ஆழ்ந்த பயிற்சி பாவலருக்கு உண்டு. ஒரு நாள் நிகழ்ச்சி:

அன்று கிட்கிந்தைப் படலப் பாடலொன்று அறிஞர்க்கு விருந்தாயமைந்தது. பாடல் வருமிடம் இது:

இராமனருளால் ஆட்சி பெற்ற சுக்கிரீவன், சீதையைத் தேடித் தர உதவுவதாக வாக்களித்தவன், சொன்ன சொல்லை மறந்து இன்பப் போதையுள் ஆழ்ந்து தன் வயமிழந்திருக்கிறான். கார் காலமும் கடந்தது. பிரிவுத் துயரால் பொருமியிருக்கும் இராமனுக்கு மோகத்தில் மயங்கிக் கிடக்கும் சுக்கிரீவன் செயல் எல்லையற்ற கோபத்தை எழுப்பியது. ஒரு நாள் இராமன் தன் தம்பியை அழைத்தான். "மெய்ம்பினோய்! சொன்ன எல்லையினூங்கும் தூங்கினான் சுக்கிரீவன்; பெறலரும் திருப்பெற்றுதவிய நம் திறம் நினைந்திலன்; அறம் மறந்தனன்; நம்மறம் அறிந்திலன்; வாழ்வில் மயங்கினான். நன்றி கொன்று அருநட்பினை நாரறுத்து ஒன்றும் மெய்மை சிதைத்து உரை பொய்த்த அவனைக் கொன்று நீக்குதல் குற்றமாகாது. சென்று மற்றவன் சிந்தையைத் தெரிந்து வா" என்று கூறினான். இக்கருத்தோடு உறவாடி வரும் பாடல் இது:

"நஞ்ச மன்னவ ரைநலிந் தாலது
வஞ்ச மன்றும னுவழக் காதலின்
அஞ்சி லம்பதி லொன்றறி யாதவன்
நெஞ்சில் நின்றுநி லாவநி றுத்துவாய்"

'கொடியவர்களை ஒறுத்தல் குற்றமன்று. மனுவறத்துக்கு ஒத்ததே, சுக்கிரீவன் அஞ்சிலம்பதில் ஒன்றறியாதவன். அவன் மனதில் பதியுமாறு இதனைக் கூறிவா' என்பது இதன் திரண்ட பொருள்.

'நஞ்ச மன்னவர்' என்னும் தொடரை மூன்று வகையாகப் பிரித்துப் பொருள் கண்டார் பாலலர்.

நஞ்சம் மன்னவரை—நஞ்சைப் போன்ற மன்னர்களை
நஞ்சம் அன்னவரை—நஞ்சை ஒத்த கொடியவர்களை
நஞ்ச மன்னவரை—அறநெறியினின்று நைந்து கீழான மன்னர்களை

மூன்றாமடி பாவலரின் 'விளையாட்டரங்கமாயிற்று. அதற்குப் பொருள் கண்ட முறை முற்றிலும் புதுமையாயிருந்தது. அவை :

அஞ்சில், அம்பதில் ஒன்றறியாதவன் — இளையனாயிருந்த ஐந்து வயதுப் பருவத்திலும் சரி, முதியனான ஐம்பது வயதுப் பருவத்திலும் சரி; உறுதிப் பொருள் ஒன்றையும் அறியாத மூடன் (சுக்கிரீவன்)

அம் சிலம்பதில் ஒன்றறியாதவன் — அழகிய கிட்கிந்தை மலையிலே அரசு வீற்றிருக்கிற ஒரு பொருளுமறியாத சுக்கிரீவன்.

அஞ்சிலம்; பதில் ஒன்றறியாதவன் — (இவனைக் கொல்வது மனுவழக்காதலால் கொல்ல) அஞ்சினோமில்லை; எமக்குப் பதில் வந்து கூற அறியாத இந்தச் சுக்கிரீவனுடைய

அஞ்சில் அம்பு அதில் ஒன்று அறியாதவன் — (எம்மிடமுள்ள) அழகிய சில அம்புகளில் ஒன்றன் வலிமைகூட இன்னும் நன்கு அறிந்திருக்கமாட்டான். அத்தகைய சுக்கிரீவனுடைய

அஞ்சு இல் அம்பது இல்; ஒன்றறியாதவன் — (இவனை அழிப்பதற்கு) ஐந்து வேண்டியதில்லை; ஐம்பது வேண்டியதில்லை; ஒரு அம்பே போதும். இதனை அறிய மாட்டாத சுக்கிரீவனுடைய

அஞ்சு; இல்; அம்பு அதில் ஒன்று; அறியாதவன் — (நீ சுக்கிரீவனை நோக்கி) 'நீ என் தமையன் அம்புக்கு அஞ்சு; இல்லாவிட்டால் அவன் அம்புகளில் ஒன்றை (உன் தமையனைப் போல் நீயும்) ஏற்றுக் கொள்' என்று, ஒன்றும் அறியாத அந்தச் சுக்கிரீவனிடம் சொல்.

—என்றின்னவாறு வகுத்து வகுத்துச் சொல்லிக்கொண்டே போனார். ஒவ்வொரு வகையாகச் சொல்லும்போதும் கேட்டவர் உள்ளம் கிளர்ந்தெழுந்து கூத்தாடலாயிற்று. இப்படிப் பதச் சேதம் செய்தலும் புதுப்பொருள் காண்டலும் பாவலரிடம் அமைந்த தனித் தன்மைகள் ஆகும். வாதத்திறனும் அவருக்கென வாய்த்திருந்தது. இலக்கணம், தருக்கம் இவற்றை முன் நிறுத்தி அவர் புத்துரையோ மறுப்புரையோ கூறும்போது அவர் மாமேதைப் பொலிவுற்றுத் திகழ்வதைக் காண்போம். இதற்கோர் நிகழ்ச்சி:

ஏறக்குறைய நாற்பத்தைந்து ஆண்டுகள் இருக்கும். கோட்டாற்றுக்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் வந்திருந்தார். பாவலர் தலைமையில் திருக்குறள் பற்றிப் பேசினார் குறளுக்குச் சில பாட பேதங்கள், பரிமேலழகர் உரைக்குச் சில மறுப்புகள் என்பவை அன்றைய பேச்சில் இடம் பெற்றிருந்தன. பாரதியாரின் நாவன்மையும் புலமையும் அஞ்சாமையும் தமிழகம் நன்கு அறிந்தவை. ஆகவே, அவர் சொற்பொருளில் யாவரும் கட்டுண்டு கிடந்தார்கள் என்று சொல்வதில் சிறப்பில்லை. ஆனால் பாவலர் மட்டும் நாவலர் கூற்றை ஏற்கத் தயாராக இல்லையென்பது முடிவுரையில் தெரிந்தது. முடிவுரையில் தம் கருத்துக்களைக் கூறி இருப்பார் பாவலர். ஆனால் அதற்கு இயற்கை இடம் கொடுக்கவில்லை.

ஆகவே, இதனை மறுப்பதற்கென்றே மறுநாள் கூட்டம் கூட்டப்பட்டது. நாவலர் அன்று இருக்கவில்லை. எனினும் பாவலர் தம் மறுப்புரையை வழங்கலானார். அவற்றுள் ஒன்று:

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்"

என்ற குறளுக்கு 'செல்வர்முன் ஏழைகள் நிற்குமாறு போலத் தாமும் ஆசிரியர் முன் ஏக்கற்று (ஆசையாகத் தாழ்ந்து) நின்றும் கற்றார் தலையாயினார்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் எஞ்ஞான்றும் இழிந்தாரே யாவர்' என்பது பரிமேலழகர் உரைப்பொருள்.

இப்பாட்டில் 'கல்லாதவர் கடையர்' என்பது தனித் தொடர். இதை நீக்கி விட்டால் எஞ்சியிருப்பது 'உடையார் முன் இல்லார் போல் ஏக்கற்றும் கற்றார்' என்னும் முதலடி. கற்றார் என்பது கற்றலைச் செய்தவர் என விரியும். எவ்வாறு கற்றலைச் செய்தவர் என்பதைத்தான் அதற்கு முன் நிற்கும் சொற்கள் அனைத்தும் சேர்ந்து காட்டுகின்றன. கற்றார் என்பது அதற்கு முன்னாலுள்ள சொற்பொருளை அடைமொழியாகப் பெற்று வந்த எழுவாய். அந்த எழுவாய்க்கு ஏற்ற பயனிலை அத்

தொடரில் இல்லை. இல்லாமலிருக்க, பரிமேலழகர் 'தலையாயினார் என்னும் பயனிலையை வருவித்துரைத்தார். 'கடையர்' என்றதனால் அதன் மறுதலைப் பெயர் வருவித்துரைக்கப்பட்டது' என விளக்க உரையும் கூறினார் அவர். இதனை இந்தப் பன்னூறாண்டாக அறிஞருலகம் ஏற்றுத்தான் வந்திருக்கிறது. ஆனால் இங்கே எதிர் நீச்சலிட்டார் பாரதியார். பரிமேலழகர் கொண்ட முறைக்குக் குறைபாடும், திருத்தப்பாடும் நாவலரால் கூறப்பட்டன. அவர் கூற்றின் சுருக்கம் வருமாறு:

இரண்டாமடியில் 'கல்லாதவர் கடையரே' என்று சொன்னது போல, முன்னடியில் கற்றார் இத்தகையர் எனப் பயனிலை கூறி இருக்க வேண்டுமல்லவா? உரையாசிரியர் சொல்வது போல, நாயனார் பயனிலை கூறாது உய்த்துணருமாறு விட்டிருப்பாரா? எழுவாய் கூறாது விடுவதுண்டு. தொடர்புபட்டு வருவதனால் உணர்ந்து கொள்ள முடியும், பயனிலை கூறாது விடுவதுண்டோ? விட்டால் கருத்து முடியுமோ? இங்ஙனம் பயனிலையில்லாப் பாடல் ஒன்றாவது உண்டா? எனவே பயனிலை கூறாதபழியை நாயனார்மீது ஏற்றுவது அறிவுடைமை யாகாது. அவர் கூறாதிருக்கவில்லை; கூறியிருக்கிறார். முதலடியில் உள்ள உடையார் என்பதே பயனிலையாகும். 'முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார் (பின்) உடையார் (ஆவர்) என இயைத்துப் பொருள் கொள்ளவேண்டும். அதாவது, முன் வறுமைப்பட்டு நின்றவர் செல்வத்தின் மீதுள்ள ஆசையால் தாழ்வு பாராது உழைத்துச் சேர்ப்பதுபோல் கல்வியின் மீதுள்ள ஆசையால் அறிவுடையார் முன் தாழ்ந்து நின்றும் கற்றவர் அக் கல்விச் செல்வம் பெற்ற பிறகு எல்லாம் உடையராவர் என்ற பொருள் இதில் அமைந்திருக்கிறது. இங்ஙனம் கொள்வதே பொருத்தமும் சிறப்புமாகும். இதனை உணராமல் பரிமேலழகர் தப்பு வழி காட்டி விட்டார்'' என்று கூறினார்.

இவ்வுரை, கேட்டார்க்கு வியப்பையும் இன்பத்தையும் ஒருங்கே எழுப்பியது. இதுவே மெய்யுரை என எல்லோரும் ஏற்றுக் கொண்டனர். மறுநாள் நடந்த மறுப்புக் கூட்டத்தின்போது 'பாவலர்' இதனை எப்படி மறுத்துவிடப் போகிறார், பார்ப்போமே' என்று அன்பர்கள் ஆவலோடு செவியைத் தீட்டிக் கொண்டிருந்தனர்.

“நேற்று நாவலர் சோமசுந்தர பாரதியார் இந்த உரை மறுப்புக்குக் காட்டிய காரணங்கள் இரண்டு. ஒன்று, பயனிலையின்றிப் பாடல் அமையாது; அப்படி ஒரு பாடலே இல்லை என்பது. இரண்டாவது, பொருத்தமான பயனிலையாக 'உடையார்' என்ற சொல் இருக்கிறது என்பது.

நாவலர் கூறிய முதற் குற்றத்திற்குக் காரணம் அவருக்கிருக்கிற இலக்கிய இலக்கணப் பயிற்சியின் குறைவேயன்றி வேறல்ல. நன்னூல் என்ற இலக்கண நூலில் பதவியலில் 'ஏழாமுயிர் இய்யும் இருவும்' எனத் தொடங்குகிறது ஒரு சூத்திரம். அது 'ஆஈறு ஐயும் ஈஈறு இகரமும்' என முடிகின்றது. மேல் வருவனவற்றையும் தழுவிக் கொள்வதற்காக ஆசிரியர் பயனிலை கொடுக்காது முடித்தார் என அதற்கு உரை எழுதியோர் அனைவரும் காரணங் காட்டியுள்ளனர். ஆகவே பயனிலை இன்றி முடிக்கிற பாடல் இலக்கியத்தில் அல்ல, இலக்கணத்திலேயே இருக்கிறது என்பது தேற்றமாம்.

இனி, அவர் தரும் புதுப் பொருளைப் பார்ப்போம். உடையார் என்பதைப் பயனிலையாகக் கூறுகின்றார். கல்லாதவர் கடையர் என்பது இரண்டாமடியில் கூறப்பட்ட பொருள். கல்லாதவர் கடையரானால் கற்றவர் தலையாயவர் என்று அமைவது தானே முறை. (மேசைமீதிருந்த மணியைக் கையிலெடுத்துக் கொண்டு) இது பெரியது என்றால் இதற்கினமான இன்னொன்று சிறியது என்பதுதான் பெறப்படும் இரண்டு பொருட்களை வைத்துக் கொண்டு ஒன்று பெரியது என்று சொல்லும்போது ஏனையது சிறியது என்று கொள்ளப்படுவதன்றி அழகானதென்றோ பிறவாறோ கருதப்படுவதில்லை. நாயனாரும் 1. பெருமை, சிறுமை 2. பெரியார் - சிறியார் 3. அறிவுடையார், அறிவிலார் இப்படி இணைத்து இணைத்துப் பாடியிருப்பதைப் பார்க்கிறோம். ஆகவே கல்லாதவர் என்னும் எழுவாய்க்குக் கடையர் என்னும் பயனிலை அமைந்திருப்பதற்கு ஏற்ப, கற்றார் என்னும் எழுவாய்க்குத் தலையாயவர் என்னும் பயனிலையை உய்த்துணர்ந்து கொள்வதுதான் முறையாகுமேயன்றி, இருக்கிறதென்று கருதி உடையாரைப் பயனிலையாக்கல் ஒரு சிறிதும் பொருந்தாது. அன்றியும் அங்ஙனம் கொள்ளும்போது 'முன்' என்னும் சொல் நின்றுவற்றும். இவற்றால் பரிமேலழகர் உரையே நேரியது; அறிவுக்கு விருந்தாயது என்பதைத் துணிந்து கூறுவேன்''—என்று முடித்தார் பாவலர்.

கேட்டார் அனைவரும் கோட்டாற்றில் இப்படியொரு மேதை புதையுண்டு கிடப்பதை அப்பொழுதுதான் உணர்ந்தனர். சில ஆண்டுகளுக்கு முன் சென்னையில் மருட்பா மறுப்பினை ஒழித்துக் கட்டுவதற்காக மகாமதி புரிந்த சொற்போரின் ஆற்றல் எத்தனை உயர்வுடையதா யிருக்குமென்பதை இங்கிருந்தே ஊகித்து இறும்பூதெய்தினர்.

நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்களுடைய திருக்குறள் புத்துரைக்குக் கொடுத்த மறுப்புரையும் அதன் பின்னர் 1944-ல் இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்களுடைய கம்பராமாயணப் புதுப் பாடங்களுக்குக் கொடுத்த மறுப்புக்களும் என் நெஞ்சைவிட்டு என்றும் அகலாதவை. அவை எந்நாளும் புதுமைப் பொலிவோடு இனிப்பூட்டிக் கொண்டிருப்பவை. நான் கண்ட பாவலர் ஓர் விடுதலைச் சுடர், அறிவுக் கடல், சொன் மழை, தருக்கவாள். இந்தச் சுடரை, கடலை, மழையை, கூர்வாளை ஒரே இடத்தில் ஒரே வடிவுக்குள் இனி எங்கே காணப்போகிறோம் என்றெண்ணும்போதுதான் பாவலர் பெருமான் தந்து விட்டுப் போன பிரிவுத்துயரம் பன்னூறு மடங்காகப் பெருக்கெடுத் தோடுகிறது. பாவலர் பரம்பரை முட்டுற்றுப் போகவில்லை. தம் புலமை தழைத்தோங்கச் சில தீபங்களை ஏற்றி விட்டுத்தான் சென்றார் அவர். அவற்றுள் ஒன்று தெய்வத் திருவிளக்காய் வாடா விடிவிளக்காய் தெங்கம்புதூரில் சுடரொளி பரப்பிக் கொண்டிருந்தது. அறிவுச் சுடர்களை, சிறுசிறு கைவிளக்குகளை ஆங்காங்கே ஏற்றி வைத்ததே அதன் திருப்பணி. பாவலர் விட்டுச் சென்ற அந்த ஒரு சுடர் ஓராயிரம் கோடியாகப் பெருகிச் சிதறியது; தமிழ் சிறப்பெய்தியது.

வாழ்க பாவலர் நாமம்!
வளர்க தமிழொளி!

செயல்முறைச் சிந்தனையாளர்

டாக்டர் நா. மகாலிங்கம்

செய்குதம்பிப் பாவலர் பெயர் திருவருள் பிரகாச வள்ளலார் வாழ்வுடன் நெருங்கிய தொடர்புடையது. இத்தொடர்பை நன்குணர அவர் சமய மதம் கடந்த தமிழ் உணர்வினர் என்பதே போதும். ‘தமிழ் ஒளியைச் சமயத்தில் சாய்க்காமை வேண்டும்’ என்று பாரதி தாசன் பாடினார். இதற்கு இலக்கியமாக சதாவதானி செய்குதம்பிப் பாவலர் விளங்க நேர்ந்ததை வரலாறு நமக்கு உணர்த்துகின்றது. அருள்பா மருள்பா போராட்டத்தில் முன்னணி வீரராக பாவலர் விளங்கி நின்று வென்றவர் என்பது திருவருள் பிரகாச வள்ளல் பெருமான் அன்பர்கள் அனைவரும் உணர்ந்து இன்புறுகின்றனர். பாவலர் திறமைக்கும் அது சிறந்த ஊன்று கோலாகியது. ‘அருள் அலாது அணுவும் அசைந்திடாது’ என்பர் வள்ளலார். **(Even atom does not move without gracc)** செய்குதம்பிப் பாவலர் செயல்முறைச் சிந்தனையாளர் என்பதை அவர் வரலாறு மட்டுமா, அவர் பெயரும் பிரகடனம் செய்கிறது். ஒருவர் சிறந்த தமிழ்ப் புலவர் என்றால் அவர் செயல் வீரராகவும் விளங்குவார் என்பதற்கு நம் பாவலர் செயல் திறமையும் குறிப்பிடத்தக்கதாகும். அவருடைய நினைவு நூல் என்றதும் நினைவில் தோன்றிய ஒன்றையும் இங்கே குறித்திட விரும்புகிறேன். பாவலர் பெயரால் பதிப்பகம் இருப்பது மகிழ்ச்சி தருகிறது. பாவலர் நூல்கள் உருவாக வேண்டும். அப் பெரியாருடைய நினைவாக நூல் வெளியிட இருப்பது பாராட்டுதற் குரியது. தமிழகத்தில் சென்ற கால அறிஞர்கள் பற்றிய நினைவு நூற்கள் எதிர்காலத்தில் சரித்திரம் எழுத அடிப்படையாக அமையும். அன்னாருடைய புகழ் நிலைத்திட நூல் சிறப்பாக அமைய பிரார்த்திக்கிறேன்.

அருங்கலை அவதானி

கே.பி. செய்குதம்பி

ஒன்றில் தோய்ந்த சிந்தை அதே நேரத்தில் மற்றொன்றிலும் கூட ஈடுபட மறுக்கிறது. எழுதிக் கொண்டே பேசுவதென்பதோ பேசிக் கொண்டே கேட்பது என்பதோ சாதாரணவருக்கு இயலாதது. இயற்கை வகுத்தளித்து விட்ட நியதி இது.

ஒன்றுக்கு மேலாக எட்டு, பத்து, பதினாறு, நூறு என்ற அளவில் பல்வேறு காரியங்களில் ஒரே வேளையில் சிந்தையைச் செலுத்தித் தெளிவுறத் தெரிந்த சித்தி சிலருக்குக் கைகூடியுள்ளது என்பதைக் கேட்கும்போது ஆச்சரியமாக இருக்கின்றதல்லவா?

அவதானம் என்னும் அருங்கலை, பயிற்சியின் வாயிலாகக் கைவரப் பெறுவது. ஒன்று இரண்டாகி, இரண்டு சிலவாகி, சில பலவாகும் அளவுக்கு அடுத்தடுத்துச் செய்கின்ற முயற்சியின் முடிவில் அந்த சக்தி துளிர் விடுகிறது. துளிர்விட்ட சக்திக்குப் பெருந்துணையாய் அமைவது நினைவாற்றல். இந்த ஆற்றலுடையாருக்கே அவதானம் கைகூடும்

எட்டுச் செயலில் ஈடுபட்ட அட்டாவதானிகளையும் பத்துச் செயலில் சிந்தையைச் செலுத்திய தசாவதானிகளையும் பதினாறு காரியங்களில் கருத்தூன்றிய சோடஷாவதானிகளையும் பலராகப் பெற்ற தமிழகம், ஒருநூறு எண்ணங்களை ஒரே வேளையில் சிந்தையில் தேக்கிய சதாவதானி ஒருவரையே பெற்றது என்பது எண்ணற்பாலது.

சரித்திரம் காணாத சதாவதானத்தை 1907-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள், தமிழறிஞரென அன்று யார் யார் இருந்தனரோ

அவர்களெல்லாம் ஒருங்கு திரண்டிருந்த சென்னை விக்டோரியா மண்டப அரங்கில் செய்து காட்டிச் சிறப்பினை ஈட்டிய அந்த மாமேதை, பண்டைய கேரளத்தின் தென்கோடியான நாஞ்சில் வளநாட்டில் கோட்டாறு என்னும் ஊரில் பிறந்த தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, கலைக்கடல் கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களாகும்.

பத்துச் செயல்களில் சிந்தையை ஈடுபடுத்தும் தசாவதானம் செய்ய ஒப்புதல் தந்த பாவலர் அவர்கள், அதற்கென அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களில் தசாவதானம் என்ற வார்த்தையின் முதலிரண்டு எழுத்துக்களும் இடம் மாறி அச்சாகிவிட்டதால் ஏற்பட்டுவிட்ட பிழை காரணமாக நூறு செயல்களுக்கான சதாவதானமே செய்துவிடத் துணிகிறார்கள்; 'ஆண்டவனின் நாட்டம் அதுபோலும்' எனக் கொள்கிறார்கள். பத்துக்கு ஒத்துக் கொண்டவர் நூறுக்கு இசைந்து விட்டதில் நண்பர்களுக்கெல்லாம் மெத்த மகிழ்ச்சி.

ஆடம்பரமான ஏற்பாடுகளும் அறிக்கைகளும் விளம்பரங்களும் என சென்னை மாநகரே பெருவியப்பில் ஆழ்ந்தது. யாரோ ஒரு தமிழர் புலனாற்றலுக்கே முற்றும் புதுமையான—அறிவுக்கு அப்பாற்பட்ட—ஏதோ ஒரு அருஞ்செயலில் ஈடுபடப் போகிறார் என்று பேசிக் கொண்ட அன்றைய அரசு தரப்பு ஆங்கில அதிகாரிகளும்கூடப் பெருமளவில் மண்டபத்தில் குழுமி விட்டனர். மக்கள் கூட்டம் மண்டபத்தில் நிறைந்து வழிந்தது. பாவலர் அவர்களைச் சோதனை செய்யவென படித்தறிந்த தமிழர் குழாம் படையெடுத்திருந்தது.

அவதானி அவர்களின் கையொன்றைச் செய்யவும் வாய் ஒன்றைப் பேசவும் ஆக இரண்டு செயல்கள் நீங்கலாக எஞ்சியுள்ள தொண்ணூற்று எட்டுச் செயல்களையும் சோதிக்கவென தொண்ணூற்று எண்மர் ஆயத்தமாக இருந்தனர்.

இலாட சங்கிலி என்பது சற்றே கவனம் பிசகினாலும்கூட சரிவரப் பொருந்தாது "தகராறு" செய்துவிடும். கவனம் பிசகாது கருத்தனைத்தையும் அதிலேயே ஈடுபடுத்தியாக வேண்டிய இலாட சங்கிலியைக் கையில் பிடித்தவாறு துய்ய வெள்ளைத் துகிலுடுத்திய அந்த உருவம் அரங்கிலே நுழைந்தது. 'மெஞ்ஞான நாதா! மெஞ்ஞான நாதா!' எனத் தொடர்ந்து மொழிந்து கொண்டே வந்த அந்த உருவத்தின் குரலைக் கூடியிருந்தோரின் மகிழ்ச்சி ஆரவாரம் அமுக்கிற்று. 'மெஞ்ஞான நாதா!' என்று இறைவனை நினைந்து மொழிந்த அந்தப் பதங்களிலே இந்த அவதானச் சோதனைகளில் வெற்றி பெறுமளவுக்குப் பேச 'மெய்ஞானம் தோய்ந்த நாவைத் தா' என்று இறைவனைக் கெஞ்சும் பாவமும் தொனித்தது.

அவதானம் தொடங்குவதற்கும் முன்னரே நான்கு வெவ்வேறு நிறையுள்ள பாத்திரங்கள் அவதானி அவர்களின் முன்னால் கொணரப்பட்டு அவை ஒவ்வொன்றும் இன்னின்ன நிறையுள்ள பாத்திரம் எனச் சொல்லப்பட்டதோடு அவை தனித்தனியே தட்டப் பட்டதால் எழுந்த வெவ்வேறு ஒலியை நினைவில் வைத்துக் கொள்ளுமாறு அவதானி அவர்களுக்குக் கூறப்பட்டது.

அதேபோன்று ஒரே மாதிரியான நான்கு கோப்பைகளில் நிரப்பப் பட்டிருந்த வெவ்வேறு கிணற்று நீரை அவதானி அவர்களுக்குச் சுவைக்கக் கொடுத்து அவை எந்தெந்தக் கிணற்று நீர் என்பதும் கூறப்பட்டது.

அவதானம் தொடங்கியாயிற்று. அவதானி அவர்களின் கவனம் முற்றாக இலாட சங்கிலியில் இலயித்திருக்க வாய், 'மெஞ்ஞான நாதா' என தொடர்ந்து கூறிக் கொண்டே இருந்தது. அவையில் அந்தக் குரலைத் தவிர மறுகுரல் இல்லை. அமைதி...அமைதி... எங்குமே பேரமைதி !

அமைதியைக் குலைத்தவாறு ஒரு குரல் திடீரெனக் கேட்கிறது. அதைத் தொடர்ந்து 'ஆஜானுபாகு'வான தோற்றத்துடன் விளங்கிய அன்றைய கல்லூரி மாணவர் இரசிகமணி டி. கே. சிதம்பர நாத முதலியார் அவர்கள் எழுந்து நிற்கிறார். இத்தனை எழுத்துக் களாலான இன்ன வகை பா என்று மட்டும் கூறிவிட்டு அமர்ந்து விடுகிறார், அவர். உதாரணமாக 104 எழுத்துக்களைக் கொண்ட கட்டளைக் கலித்துறை எனக் கூறினார் எனக் கொள்வோம். இலக்கிய மரபும் இலக்கண நெறியும் அந்தப் பாவுக்கு என்னென்ன இலட்சணங்களைக் கூறிகின்றனவோ அந்த இலட்சணங்கள் இமியும் பிசகாத நிலையில் கவிதையைக் கடைசியாகக் கூறியாக வேண்டும். இடையிடையே ஒவ்வொன்றாக சோதனையாளரால் கூறப்படும் எழுத்துக்களை அவ்வப்போது கேட்டு அமைத்துக் கொள்ளவென எழுத்துக்களின் எண்ணிக்கைக்குத் தக்கவாறு கட்டங்களை அவதானி அவர்கள் தமது மனவரங்கிலேயே வகுத்துக் கொள்ளவும் வேண்டும். இதுவே 'கண்ட பத்திரிக்கை' எனப்படும். அதன்படியே கட்டம் வகுத்துக் கொள்கிறார்கள், பாவலர் அவர்கள்.

மற்றோர் பகுதியிலிருந்த இலக்கணத் துறை வித்தகர் ஒருவர் திடீரென எழுந்து அவதானி அவர்களிடம் ஏதோ ஓர் இலக்கண ஐயப்பாட்டைக் கேட்டு வைக்கிறார். அவரது ஐயத்தையும் சிந்தையில் தேக்கி அதற்கான விளக்கம்கூற நன்னூலை – நைடதத்தை – நிகண்டை – நினைவு கூர்ந்தபடியே மேலும் நகர்கிறார்கள், அவதானி அவர்கள்.

அடுத்தோர் மூலையிலிருந்து பாவாணர் ஒருவரால் வெண்பா ஒன்று கூறப்படுகிறது. அவர் கேட்கும் நேரத்தில் அதைத் திருப்பிக் கூறத் தோதாக அந்த வெண்பாவையும் தங்களின் பல்வேறு சிந்தனைகளுக்கூடே சிரத்தையோடு செவிமடுத்துக் கொள்கிறார்கள், பாவலர் அவர்கள்.

பிறிதோர் இடத்திலிருந்து ஈற்றடி தந்து புதிய கவிதை கேட்கப் படுகிறது. ஈற்றடி என்றால் ஈற்றடி இப்படியா அமைய வேண்டும்? முரண்பட்ட ஈற்றடிகள் எல்லாமே சிக்கலைத் தந்தன; மூளையைக் குழப்பின.

"மாமனுக்குக் கந்தன் மகன்!" இஃதோர் ஈற்றடி. கூறியவர் வெண்பாக் கேட்டார். மாமனுக்குக் கந்தன் எப்படி மகனாக முடியும்? மருமகன் அன்றோ? என்றாலும் கேட்டவர் களிப்புற மாமனுக்குக் கந்தனை மகனாக்கிக் காட்டுகின்றார், அவதானி. அதற்குத் துணை நிற்கின்றன, சமய புராண வரலாற்றுச் சம்பவங்கள்.

"அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டல் வண்ணமேனிக் குரிசிலாம்—விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும்படி யாயமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்"

வெண்பாவைக் கூறி முடித்துவிட்ட அவதானி அவர்களின் வியத்தகு கவித் திறனை நினைந்து மகிழ்ந்த அவையினருக்கு மற்றோர் விருந்தாக பிறிதோர் ஈற்றடி பிறப்பெடுக்கிறது.

'விராடனையே பெண்ணென லாமே' என்ற அந்த ஈற்றடி அவையையே கலக்கியது. விராடன் என ஆண்பால் விகுதி பெற்று முடிந்துள்ள நிலையில் எவ்வாறு பெண்ணெனக் கூறல் இயலும்? என்றாலும் ஆணைப் பெண்ணாக்கிட அணுவும் தயங்காத நிலையில் அவதானி அவர்கள் ஈற்றடிக்கு இயைந்த கவிதையைக் கூறி முடிக்கிறார்கள்.

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னா—மண்ணில்
வராடவனை யேதெய்வ மன்னனெனுஞ் சொற்ற
விராடனையே பெண்ணெ னலாமே!"

என்ற அவதானி அவர்களின் கவிதைச் சித்திரம் எண்ணி வியக்கத் தக்கது; வியந்து ஆயத்தக்கது.

உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒன்றை எண்ணும் பொழுதும் கொழுநனை நினைத்தவளாக, எக்காலத்தும் எக்காரியத்தும் கொழுநனான அந்தக் கொண்டவனின் கருத்துக்கு அட்டிகூறாதவளாக விளங்குபவள் எவளோ அவளே பெண்ணெனக் கூறத் தக்கவள் எனும் பொருள்பட மூன்றாவதடியின் இறுதியில் "சொற்ற" என வருமளவில் கவிதையை ஆக்கி நான்காவதடியின் முதற்சீரில் விராடனையே என வரச் செய்ததன் வாயிலாக சொற்ற விராடனையே, சொல்தவிராள் - தனையே என்று கொண்ட கூர்த்த மதியினைக் கூடியிருந்தோர் குரலெழுப்பிப் பாராட்டினர்.

அடுத்துக் கேட்ட ஈற்றடி, 'கண்கெட்ட பின்னென்றும் காணாத காட்சியைக் கண்டனரே' என்பது.

கண்கெட்ட பின்னர் காண்பதெங்ஙனம்? அதுவும் காணாத காட்சியைக் காண்பது எப்படி? கேளாத கவிதையைக் கேட்கத் துடித்தது, அரங்கம்.

பாவலர் அவர்களின் இலக்கிய ஈடுபாடு கண்ணப்ப நாயனார் சரிதையை நினைவுக்குக் கொண்டு வந்தது.

தமது தெய்வமான சிவபெருமானின் இடக்கண்ணில் குருதி வழியக் காண்கிறார் கண்ணப்பர், ஒரு நாள். செய்வதறியாது திணறுகிறார். ஊனுக்கு ஊனே இடர் என்ற நினைவு வந்த கண்ணப்பர் சற்றும் சிந்தியாது தனது இடக்கண்ணைப் பெயர்த்தெடுத்து இஷ்ட தெய்வத்தின் குருதி வழிந்தோடும் இடக் கண்ணில் பொருத்துகிறார். சற்றைக்கெல்லாம் தெய்வத்தின் வலக்கண் ஊனமுற்று இரத்தம் கசிகிறது. கண்ட கண்ணப்பர் தமது வலக்கண்ணையும் பெயர்த்து தெய்வத்தின் வலக்கண்ணில் பொருத்துகிறார். இரண்டு கண்களையும் இழந்துவிட்ட - பழுதாக்கிக் கொண்ட - நிலையிலே இறைவனின் திவ்ய தரிசனம் கிடைக்கப் பெற்று கண்ணுள்ள நாட்களில் காணக்கிடைக்காத அந்தக் காணாத காட்சி சித்தித்த மகிழ்ச்சியில் ஆனந்த நர்த்தனமே ஆடி விடுகிறார். கண்கெட்ட பின்னென்றும் காணாத காட்சியைக் கண்டுவிட்ட கண்ணப்பரின் சம்பவத்தைக் கவிதையாக்கிக் கூறி களிபேருவகை கொள்கிறது அவதானி அவர்களின் உள்ளம். கேளாத கவிதையைக் கேட்டுவிட்ட களிப்பில் மிதக்கிறது அவையோர் நெஞ்சம்.

இதோ அந்தக் கவிதை :

"விண்தொட் டசையும் தருமலி கானில் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்விழி

புண்பட்ட தென்றுதம் கண்ணைப் பெயர்த்துப் பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றும் காணாத காட்சியைக்
கண்டனரே"

ஈற்றடிக்குக் கவிதை கேட்போர் இப்படிச் சோதிக்க இன்னொருவர் கடந்த கால ஆண்டு, மாதம், தேதி கூறி அன்று என்ன கிழமை என உசாவ, மற்றொருவர் எதிர் காலத் தேதியும் மாதமும் ஆண்டும் கூறி என்ன நாள் எனக் கேட்கிறார்.

இத்தகு நிகழ்ச்சிகளுக்கு மத்தியிலே ஒருவர் பாவலர் அவர்களிடம் சிக்கலான கணக்கொன்றைக் கூறி விடை கோர, ஐவர் உட்கார்ந்து சீட்டாடும் இடத்தில் அவதானி, அவர்களுக்காக உட்கார்ந்திருப்பவரிடம் எந்தெந்த சீட்டை இறக்க வேண்டுமென அவதானியே கூறி இறுதியில் அவரே வெற்றியும் பெற்றாக வேண்டுமென்ற அளவில் அவதானி அவர்கள் அதிலும் சிந்தை செலுத்த வேண்டியிருந்தது.

இவையனைத்தும் அரங்கிலே நடந்து கொண்டிருந்த வேளையில் அரங்குக்கு உள்ளே மறைவிடத்தில் வைக்கப்பட்டிருந்த அவதானம் துவங்கும் முன்னால் அவதானி அவர்களுக்குக் காட்டப்பட்ட பாத்திரங்களில் ஒன்று தட்டப்படுவதால் எழுந்த ஓசை கேட்கிறது. அதைக் கேட்கும் அவதானி அவர்களிடம் அந்தப் பாத்திரத்தின் நிறையென்ன என்று கேட்கப்படுகிறது. முன்னர் கேட்டு மனதில் பதித்துக் கொண்ட ஒலி அளவை நினைவுபடுத்தி அது இன்ன நிறையுள்ள பாத்திரம் எனக் கூறுகிறார்கள், பாவலர் அவர்கள்.

எத்தனையோ அலுவல்களில் ஈடுபட்டிருந்த அவதானி அவர்களுக்கு தாகம் உண்டாகி விட்டது போலும்! ஒருவர் கோப்பையொன்றில் நீர் கொணர்ந்து தருகிறார். அவதானி அவர்களும் அதை ஆசையோடு பருகுகிறார்கள். பருகி முடித்த மாத்திரத்தில் அது எந்தக் கிணற்றின் நீர் எனக் கேட்கப்படுகின்றது. முன்னர் சுவைத்து உணர்ந்ததை நினைவுக்குக் கொண்டு வந்து அது இன்ன கிணற்றின் நீர் எனக் கூறுகிறார், அவதானி அவர்கள்.

'மெஞ்ஞான நாதா' என கூறிக் கொண்டே இலாட சங்கிலியைக் கழற்றிப் பூட்டியவாறு அரங்கிலே உலவிக் கொண்டிருந்த பாவலர் அவர்களின் சட்டை அணியாத முதுகிலே நெல், பயிறு, சிறு கல், மலர் அரும்பு என வெவ்வேறு உணர்ச்சிகளைத் தரும் பொருட்களை வெவ்வேறு வேளையில் எறிந்து கொண்டிருப்போரில் யாராவது ஒருவர் திடீரென எறிந்து நிறுத்தி தாம் எறிந்த பொருள் யாதென்றும் அது வரை எறிந்தவை எத்தனை என்றும் கேட்டு பதில் பெறுவார்.

கண்டப் பத்திரிக்கைக்கான எழுத்துக்களை ஒவ்வொன்றாக கூறி வந்தடி. கே. சி. அவர்கள் திடீரென எழுந்து இத்தனாவது எழுத்து இதுவெனக் கூறி உட்கார்ந்து விடுவார். உதாரணமாக பதினாறாவது எழுத்து 'ம' என்றோ இருபத்தேழாவது எழுத்து 'க' என்றோ அமையலாம். இவ்வாறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் சோதனையாளர் கூறிய ஒவ்வோர் எழுத்தையும் மனவரங்கில் அதற்கென்றே அமைத்துக் கொண்ட கட்டங்களில் உரிய இடத்தில் பொருத்தி சோதனையாளர் அத்தனை எழுத்துக்களையும் கூறி முடித்துவிட்ட பிறகு எழுத்துப் பிசகாமல், அடி புரளாமல், எதுகை எகிறாமல், மோனை முறியாமல் அப்படியே கவிதையைக் கூறியாக வேண்டும்.

அவதரனம் என்ற அருங்கலையில் ஒவ்வோர் சோதனையுமே சிரமமானது; சிக்கலானது. என்றாலும்கூட நூற்றுப் பதினேழு முறை கூறப்பட்ட எழுத்துக்களைக் கோவை செய்து நினைவு படுத்திக் கவிதையாக்கிக் கூறுவதிலுள்ள சிரமத்தை – சிக்கலை – சிந்திக்கவே தனித்திறன் வேண்டுமல்லவா?

பாவலர் அவர்களைச் சோதிக்கவென அன்று குழுமி இருந்தோர் யாரோ எவரோ அல்ல, தமிழ் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் பாண்டித்தியமும் பரிபூரண பக்குவமும் பெற்றிருந்த தலைசிறந்த புலவர்கள், பாவாணர்கள், பண்டிதர்கள், பண்டித சிரோன்மணிகள், வியத்தகு ஆற்றல் பெற்றிருந்த வித்வ இரத்தினங்கள், மேதைகள். அத்தனை பேருடைய சோதனையிலுமே மெஞ்ஞான நாதனருளால் வெற்றி பெற்று விட்ட பாவலர் அவர்கள் அவையோரால் பலபடப் பாராட்டப்பட்டார்கள்; பரிசுகள் வழங்கி மகிழ்ச்சியைப் பகிர்ந்தார்கள். அவைத் தலைவர் அவர்களால் சதாவதானி, மகாமதி என்ற பட்டங்கள் சூட்டப்பட்டு கௌரவிக்கப்பட்டார்கள். பாவலர் அவர்கள் பணி செய்துவந்த அச்சகத்தின் உரிமையாளரும் அவதான நிகழ்ச்சிக்கே காரணமாக இருந்தவருமான இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்கள் பாவலர் அவர்களின் இரு புஜங்களிலும் பொற்தோடா பூட்டிப் பூரித்துப் போனார். விழாவுக்கு வந்திருந்த ஆங்கிலத் துரைமார்கள் அதிசயித்து வாய்பிளந்தனர்.

1907-ம் ஆண்டு—சென்னை போன்ற பெரு நகரங்களிலேகூட வாகன வசதிகள் பெருகாதிருந்த காலம் அது. மனிதனை மனிதனே இழுக்கும் ரிக்ஷாக்களும், குதிரை, மாட்டு வண்டிகளுமே மலிந்திருந்த காலம். அவதானம் முடித்துக் கொண்ட பாவலர் அவர்களும் நாயுடு அவர்களும் அவதானம் நடந்த விக்டோரியா மண்டபத்திலிருந்து அவர்கள் குடியிருக்கும் ஆச்சாரப்பன் தெருவுக்குச் செல்லக் குதிரை வண்டி கொண்டுவந்து நிறுத்தப்பட்டது. அது ஓட ஆரம்பித்த

சற்றை நேரத்திற்கெல்லாம் பாவலர் அவர்கள், வண்டியை நிறுத்து மாறும் அதில் எங்கோ பாம்பு இருப்பதாகவும் கூறினார்கள். பதறிப் போன வண்டியோட்டி வண்டியை நிறுத்தி அதிலிருந்தவர்களை இறங்கச் செய்து எங்கெங்கோ தேடியும் எதுவும் கண்ணுக்குப் புலப் படவில்லை. வண்டி மீண்டும் ஓடத் தொடங்கியது. பாவலர் அவர்கள் உறுதியாகவும் உரத்தும் 'பாம்பு இருக்கவே இருக்கிறது' என கூச்ச லிட்ட பின்னர் மீண்டும் தேடப்படுகிறது. இறுதியாக் குதிரைக்கான புல் நிரப்பப்பட்டு வண்டிக்குக் கீழே கட்டி தொங்கவிடப்பட்டிருந்த கோணியை அவிழ்த்துப் புல்லை உதறினர். என்ன ஆச்சரியம்! நீண்டு பருத்த கருத்த நாகமொன்று தலைதூக்கிப் படம் எடுத்து களிநடம் ஆடத் துவங்கிய அந்தக் காட்சியைக் கண்டவர்கள் கண் கொட்டாது பின்வாங்கினர்.

பாவலர் அவர்கள் பேசுகிறார்கள் :

'மெய்யிலே கல்லெறிந்தும், வாய் ஓபாது மெஞ்ஞான நாதனை அழைக்க வைத்தும், கண்ணுக்குச் சோதனைகள் தந்தும், நாவுக்கு நீர் தந்து சுவைக்கச் செய்தும், ஒலியெழுப்பி பரீட்சித்தும் விட்ட நண்பர்கள் அறிந்தோ அறியாமலோ ஐம்புலன்களில் ஒன்றான மூக்குக்கு வேலைதந்தனரில்லை. அந்தக் குறை என்னை அரித்துக் கொண்டே இருந்தது. வல்லநாயன் என் குறையுணர்ந்து அதைப் போக்கு முகத்தான் இப்படியொரு பாம்பை மறைந்திருக்கச் செய்து அதன் மணத்தை எனது சுவாசத்தில் படச்செய்து விட்டான். எல்லாம் அவன் அருள்! மனிதர்களால் மட்டுமே அங்கு சோதனை செய்யப்பட்ட நான், இங்கு மாபெரியோனுடைய சோதனைக்கும் ஆளாகி விட்டேன். அவனே எல்லாம் அறிந்தவன்; அவன் அருளன்றி வேறில்லை.''

மெய்யுருகப் பேசிய அவதானி அவர்களின் இறைநம்பிக்கை கண்டு இறும்பூதெய்தினார், நாயுடு அவர்கள்.

இயற்கைக்கு முரணான — அமைப்பு விதிகளுக்கே முற்றும் அப்பாற்பட்ட — அறிவியல் அதிசயிக்கத்தக்க — இத்தகு வித்தையில் — அவதானம் என்னும் அருங்கலையில் — ஈடுபட்ட செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்கு ஆண்டவனின் பேரருட்கடாட்சமாம் திருவருள் கூடி நின்றது என்னும் கூற்றை யாரே மறுக்க வல்லார்?

பாவலரின் வருங்கால உணர்வு

அவ்வை தி.க. ஷண்முகம்

1925-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம். திருவனந்தபுரம் ஆரிய சாலை நாடக அரங்கில் எங்கள் சொந்த நாடகக் குழுவைத் துவங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வந்தன. அரங்கின் சுற்றுப் புறத்திலேயே சில வீடுகள் இருந்தன. அவற்றில் ஒரு மாடி வீட்டில் நாங்கள் குடியிருந்தோம்.

எங்கள் தாய் மாமனார் திரு. செல்லம் பிள்ளை நாகர்கோவிலில் இருந்து நான்கு பையன்களைக் கூட்டி வந்திருந்தார். அவர்களில் ஒரு பையனுடைய குரல் மகரக் கட்டு வந்து தேறிய குரலைப் போல் கனமாகவும் கம்பீரமாகவும் இருந்தது. புதிதாய் வந்தவர்களுக்குப் பாட்டுக்களைச் சொல்லி வைக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பெற்றது. நான் புதியவர்கள் நால்வரையும் மாடியில் உட்கார வைத்து, “மூல மந்திர மோன நற்பொருளே'' என்று தொடங்கும் சங்கரதாஸ் சுவாமிகளின் பாடலைச் சொல்லிக் கொடுத்தேன். சில நிமிடங்களுக்குப் பின் தண்ணீர் குடிப்பதற்காகக் கீழே சென்றேன். மறுபடியும் நான் மாடிக்கு வந்தபோது புதியவர்களில் கனமான சாரீரமுடையவர் மற்ற மூன்று பேருக்கும் அந்தப் பாடலைச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார். எனக்கு ஒரே வியப்பாக இருந்தது. ‘‘இந்தப் பாட்டு உனக்கு ஏற்கனவே தெரியுமா ?'' என்று அவரைக் கேட்டேன்.'' ‘‘நாகர்கோவிலில் உங்கள் நாடகங்கள் நடைபெற்ற போது நான் அடிக்கடி வந்து பார்த்திருக்கிறேன். நாடகாரம்பத்தில் தோத்திரப் பாடல்களைப் பாடவரும் சிறுவர்கள் இந்தப் பாடலை தினமும் பாடுவதைக் கேட்டிருக்கிறேன்” என்று பதில் கிடைத்தது.

எனக்குப் பெரு மகிழ்ச்சி ஏற்பட்டது. ''சரி, நீயே சொல்லிக் கொடு'' என்று சொல்லி விட்டு நான் வேறு வேலையை கவனிக்கச் சென்றேன்

பாட்டுச் சொல்லிக் கொடுத்த முதல் நாளே ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட அந்த இளைஞர் யார் தெரியுமா? அவர்தாம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்.

'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்பார்கள். என்.எஸ். கிருஷ்ணன் எதிர்காலத்தில் மகோன்னதமாக விளங்கப் போகிறாரென்பதை அவரது இளம் பருவச் செயல்களே காட்டின. ஓய்வு நேரங்களில் நாங்கள் பலின் சடுகுடு, நொண்டி, கிளித்தட்டு, பிள்ளையார் பந்து முதலிய பல விதமான விளையாட்டுக்களில் ஈடுபடுவோம். கட்சி பிரிக்கும்போது ஒவ்வொருவரும் என். எஸ். கிருஷ்ணன் எந்தக் கட்சியில் இருக்கிறாரோ அதிலேயே சேர விரும்புவோம். ஏன் தெரியுமா? அவர் இருக்கும் கட்சி கண்டிப்பாக வெற்றி பெறும்.

விளையாட்டுக்களில் இவ்வாறு முதன்மை பெற்றிருந்தாலும் நாடகங்களில் சிறிய பாத்திரங்களையே அவர் தாங்கி வந்தார். கோவலனில் பாண்டியன்; சாவித்திரியில் சத்தியவானின் தந்தை துயுமத்சேனன்; மனோகரனில் மந்திரி பௌத்தாயனன்—இவைதான் என். எஸ். கிருஷ்ணனுக்கு துவக்கத்தில் கிடைத்த வேடங்கள்.

1925 மார்ச் 31-ஆம் நாள். திருவனந்தபுரம் ஆரிய சாலை அரங்கில் எங்கள் முதல் நாடகமாக ''கோவலன்'' அரங்கேறியது. மொத்தம் ஆறு நாடகங்களை நடித்து விட்டு அடுத்தபடியாக நாகர் கோவிலுக்கு வந்தோம். நாகர்கோவில் ஒழுகினசேரி சரஸ்வதி ஹாலில் நாடகங்கள் நடைபெற்றது. கோவலன் நாடகத்தன்று ஒழுகினசேரியிலுள்ள சில நண்பர்கள் உள்ளூர்க்காரர் என்ற அபிமானத்தோடு பாண்டியனாக நடித்த என். எஸ். கிருஷ்ணனுக்கு ஒரு தங்கப் பதக்கம் பரிசளிக்க விரும்பினார்கள். மேடையில் அதைக் கொடுப்பதற்குத் தக்க பெரியார் ஒருவரையும் ஏற்பாடு செய்திருந்தார்கள்.

பாண்டியன் காட்சி முடிந்தது. வாழ்த்துரை கூறிப் பரிசைக் கொடுக்க வந்திருந்த பெரியார் மேடையில் வந்து கம்பீரமாக நின்றார். அவர் பெரும் புலமை வாய்ந்தவரென்று உள்ளே சிலர் பேசியது என் காதில் விழுந்தது. பெரியவர் பேசத் தொடங்கினார். தங்கு தடையில்லாமல் சொற்பொழிவு செய்தார். ஐம்பெருங் காப்பியங்களுள் தலைசிறந்த 'சிலப்பதிகாரம்' இவ்வாறு கோவலன் நாடகமாகக் கொலை செய்யப்படுகிறதே என்று குமுறினார். சிறிது நேரம் பேசி விட்டு இறுதியாக என்.எஸ். கிருஷ்ணனுக்கு வாழ்த்துக் கூறினார்.

"நம் நாஞ்சில் நாட்டு இளஞ் சிறுவன் கிருஷ்ணன் வருங் காலத்தில் மகாமேதையாக விளங்கப் போகிறான். இவனுடைய பெரும் புகழால் நம் நாஞ்சில் நாடு மட்டுமல்ல, தமிழ் நாடே பெருமையடையப் போகிறது.'' — என்று அப்பெரும் புலவர் வாழ்த்திப் பரிசளித்தபோது சபையோர் அனைவரும் கைதட்டி அதை ஆமோதித்து வரவேற்றனர்.

அப்பெரியாரின் தீர்க்க தரிசனத்தை எண்ணிப் பிற்காலத்தில் நான் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்திருக்கிறேன். கலைவாணர் என். எஸ் கிருஷ்ணன் இதை எத்தனையோ முறை பெருமையோடு சொல்லி மகிழ்ந்திருக்கிறார். இவ்வாறு தீர்க்க தரிசனமாக வாழ்த்துக் கூறிய பெரியார்தான் நமது பெரும்புலவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

1935-ஆம் ஆண்டில் நாங்கள் சில மாதங்கள் நாகர்கோவிலில் ஓய்வு பெற்றிருந்தோம். அந்த நாட்களில் பாவலர் அவர்களின் அருமையான சொற்பொழிவுகளைக் கேட்க எனக்கு வாய்ப்புகள் கிடைத்தன. திரு. சிவதாணுபிள்ளை அவர்கள் நாகர்கோவில் நகரசபைத் தலைவராகத் தேர்வு பெற்றதைப் பாராட்ட மீனாட்சி புரத்தில் ஒரு கூட்டம் நடந்தது. பாவலர் அவர்கள் அக்கூட்டத் திற்குத் தலைமை தாங்கினார்கள். அன்றைய பேச்சாளர்களிலே நானும் ஒருவனாக இருக்கும் பாக்கியத்தைப் பெற்றேன்.

என் நாடகாசிரியர்களில் ஒருவரான கிருஷ்ணசாமிப் பாவலர் அவர்கள் தசாவதானம் செய்வதை நான் பார்த்திருக்கிறேன். சில ஆண்டுகளுக்கு முன் சதாவதானி பாவலர் அவர்களின் மாணாக்கர் களில் ஒருவரான திரு. ஆறுமுகம் பிள்ளை அவர்களின் தசாவ தானத்தை நானும் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்களும் முன்னின்று சென்னையில் நடத்தினோம். அன்று எங்களுக்கு ஏற்பட்ட வியப்புக்கு அளவே யில்லை. பத்து அவதானம் செய்வதே வியப்புக்குரிய தென்றால் நூறு அவதானம் செய்து பெரும் புகழெய்திய நம் பாவலர் அவர்களின் செயற்கருஞ் செயலை எப்படி விரித்துரைப்பது?

அவதானத்தின் இலக்கணத்தைப் பற்றி சரவணப் பெருமாள் கவிராயர் ஒரு பாடலிலே குறிப்பிடுகிறார். அந்தப் பாடலின் ஒரு பகுதியை இங்கே கூறுவது பொருத்தமாக இருக்குமென்று கருது கிறேன்.

"மாறாமல் வாய்வேலு மயிலுமென வேசொல்வ
வாசகம் கைகள் எழுத
வருகணக் கொருபுறம் தீரமற் றொருபுறம்
வரைந்திடும் இலக்க மாற
வினைதிரைக் குட்சிறிது கல்லணி வகுக்கின்ற
வன்கணக் கினிது பகர
மருவு சொக்கட்டானும் விளையாட மறைவாக
வைத்த சதுரங்க மாட......"

இப்படியே இன்னும் பலவகையான அற்புதச் செயல்களை எல்லாம் நினைவாற்றலோடு செய்ய வேண்டும். அவதானம் செய்வோர் சபைக்குத் தக்கவாறு தம் செயல்களை மாற்றிக் கொள்வதுண்டு. இது ஓர் அபூர்வமான கலை. அபாரமான திறமை, புலமை, நினைவாற்றல் இவற்றோடு இறைவனின் திருவருளும் இருந்தால்தான் இக் கலையில் வெற்றி பெற இயலும் என்பது என் நம்பிக்கை. அத்தகைய அருளாற்றலைப் பெற்றவர் நம் பாவலர் அவர்கள். அப் பெரியாரின் நினைவு நம் உள்ளத்தில் என்றும் பசுமையாக இருக்க வேண்டும் என்பதே என் பிரார்த்தனை.





கோவைக்கொரு பாவலர்

"கேபியெஸ்"

தமிழை செந்தமிழ், தீந்தமிழ், பைந்தமிழ், ஆய்தமிழ் என்றெல்லாம் சொல்வார்கள். என்றாலும் தமிழை இன்னொரு பெயர் சொல்லியும் அழைப்பர். அப்பெயர்தான் 'சங்கத் தமிழ்' என்பது. சங்கத் தமிழுக்கென்றே அமைந்த தனிப்பவிசும் மௌசும் சிறப்பும் பண்பும் தனித்தன்மை வாய்ந்தவை. காவியத் தமிழும் தோத்திரத் தமிழும் பக்தித் தமிழும் பிரபந்தத் தமிழுமாக வளர்ந்து விட்ட காலத்தும்கூட சங்கத் தமிழ் தோய்ந்த கவிதை இலக்கியத்தைத் தோற்றுவிக்க நினைத்தது தமிழர் நெஞ்சம். அந்த நினைப்பில் பூத்ததுதான் கோவைப் பிரபந்தம்.

கோவையில் "சங்கமலி செ தமிழின்" சுவை ஊறிவரக் காணலாம். அகத்துறை இலக்கணத்திற்கு இலக்கியமாக விளங்குபவை கோவை நூற்கள். பத்துப் பாட்டு, எட்டுத் தொகை நூற்களில் அகத்தை சுற்றி நிற்கும் துறைகளையும் உணர்ச்சிகளையும் கோவையாகத் தொகுத்து நானூறுக்கு மேற்பட்ட கட்டளைக் கலித்துறை செய்யுட்களால் காதலன் காதலியரிடையே நிகழுகின்ற சம்பவங்களைக் கதையாக்கி, நாடகமாக்கி, ஒழுங்குபடுத்தித் தருவது கோவை நூல்.

உணச்சியை மையமாக்கி அகத்துறைப் பாடல்களைக் கிளவியாகத் தொகுத்துத் தரும் நானூறுக்கு மேற்பட்ட ஒவ்வொரு நிகழ்ச்சியையும் ஒவ்வொரு துறையாக்கி துறைக்கு ஒரு கட்டளைக் கலித்துறையாக கோவை நூல் ஆசிரியர்கள் பாடி வைத்திருக்கிறார்கள்.

தலைவனும் தலைவியும் திருமணம் செய்து கொள்வதற்கு முன் பிறர் அறியாமல் காதலிப்பதை களவொழுக்கம் என்றும் திருமணம் செய்து கொண்ட பின்னர் கணவன் மனைவியாக வாழும் வாழ்க்கையை கற்பொழுக்கம் என்றும் அகப்பொருள் இலக்கணம் வரையறுத்து களவு, கற்பில் நிகழும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் நுணுக்கமாக விளக்கி ஒவ்வொரு துறைக்கும் கட்டுதிட்டமும் இலட்சண இலட்சியங்களும் வரன் முறையும் வகுத்திருக்கின்றது

ஒத்த தலைவனும் தலைவியும் பிறர் உதவியும் தூண்டுதலும் இன்றி தனி இடத்தில் சந்திப்பார்கள்; காதல் கொள்வார்கள். தலைவியைப் பிரிந்து சென்ற தலைவனைப் பாங்கன் காண்பான். தலைவனிடம் ஏதோ மாற்றம் கண்டு காதல்வலையில் கட்டுண்டு இருப்பதை பாங்கன் அறிந்து தலைவியைச் சென்று அவள் அறியா தவாறு கண்டு குணத்தாலும் அழகாலும் நலத்தாலும் எவ்வாற் றானும் அவள் தலைவனுக்கு ஏற்றவளே என்று தலைவனிடம் வந்து தெரிவிப்பான்.

தலைவனும் தலைவியும் மீண்டும் சந்தித்து அளவளாவுவார்கள். தன் தோழி இன்னார் என்று தலைவனுக்குத் தலைவி குறிப்பால் புலப்படுத்துவாள். தலைவியை அடைய தலைவன் தோழியின் துணையை நாடுவான். தலைவியின் உண்மைக் காதலன் தலைவன் எனத் தேர்ந்து பாங்கி அவர்களிடையே சந்திப்புகள் ஏற்பட உதவுவாள். சந்திப்புக்குத் தடங்கல் ஏற்படும். தினைப் புலத்தைக் காக்கவும் பூக்கொய்யவும், பகலில் புறத்தே வரமுடியாமல் வீட்டிலி ருக்கவும் தலைவியின் தாய் கட்டுப்பாடுகள் விதிப்பாள். பின்னர் இராக் காலங்களில் சந்திப்புகள் ஏற்படும். இந்த சந்திப்புகளுக்கும் தடங்கல்கள் ஏற்படும். தலைவன் தலைவியை மணந்து கொண்டு வாழ்வதுதான் சரியென தோழி தலைவனுக்கு உணர்த்துவாள். திருமணத்தின் பொருட்டு பொருள்தேடப் புறப்படுவான், தலைவன். பிரிவால் தலைவி துயருறுவாள். இதற்கிடையில் தலைவியின் தாய் தந்தையர் அவளை வேறு யாருக்காவது மணம் செய்து கொடுத்துவிட நினைத்தால், தலைவி தலைவன் ஒருவனிடம் காதல் கொண்டிருக் கிறாள் என்பதை பாங்கி குறிப்பாகப் புலப்படுத்துவாள். அதை உணர்ந்து பெற்றோர்கள் தலைவியை அவள் விரும்பும் அந்தத் தலைவனுக்குக் கொடுக்க இசைவார்கள். இல்லை யென்றால் தலைவன் யாரும் அறியாமல் தலைவியை தன் ஊருக்கு அழைத்துக் கொண்டுபோய் மணம் செய்து கொள்வான். அவர்களின் உண்மைக் காதலைத் தெரிந்த தாயும் செவிலித்தாயும் வருந்துவார்கள். தலைவி எங்கிருந்தாலும் அழைத்து வருகிறேன் என்று செவிலித் தாய் புறப் படுவாள். இந்த நிலை வரையுள்ள நிகழ்ச்சிகள் களவு என்ற பிரிவின்பாற்படும்.

கணவன் மனைவியாக வாழும் காலத்தும் சில காரியங்களுக்காக கணவன், வீட்டை விட்டுப் பிரிந்து செல்ல நேரிடும். பொருளீட்ட அல்லது அரசனுக்குச் சேவை செய்ய! இவ்வாறு பிரிந்து செல்லும் போது இருவருக்குமிடையே வருத்தம் ஏற்படும். பரத்தையிடம் சில சமயம் தலைவன் செல்வான். அக்காலை தலைவி ஊடல் கொள் வாள். தோழியின் துணையாலும் தன் திறத்தாலும் தலைவியின் ஊடலை ஒழித்து தலைவன் அவளோடு ஒன்றுபட்டு வாழ்வான். இத்தகைய நிகழ்ச்சிகள் கற்பின்பாற்படும்.

களவும் கற்பும் உணர்ச்சி வகையால் ஐந்து பகுதிகளுக்குள் வரும். இவை ஐவகை நிலங்களில் நிகழும். குறிஞ்சியில் புணர்தல், பாலையில் பிரிதல், முல்லையில் தலைவனை எதிர்நோக்கி இருத்தல், மருதத்தில் ஊடல், நெய்தலில் தலைவனை நினைந்து புலம்புதல் ஆகிய இந்த ஐந்து பகுதிகளையும் இறையனார் அகப்பொருள் இலக்கணத்திற்கு ஏற்ப தொகுத்தும் கோத்தும் தருவதென்பது இலகுவான காரியமல்ல. அசாதாரண புலமையும் அதியற்புத கவிதைத் திறனும் உள்ளவர்க்கே கோவை பாட முடியும். ஆகவே தான் "யாவும்பாடிக் கோவைபாடு" என புலவர்கள் அச்சுறுத்தி எச்சரித்திருக்கின்றனர். தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஆழ்ந்த ஞானமும் அகன்ற பயிற்சியும் பெற்ற 'நுண்மாண் நுழைபுலத் தோர்'க்கே அகத்திணைக் கோவை எனப்படுகிற ஐந்திணைக் கோவை புனைய முடியும்.

தமிழில் முதற்கோவை பாண்டிக் கோவை எனக் கருதப்படுகிறது ஏறத்தாழ தொள்ளாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழில் முதல் கோவை நூல் தோன்றிற்று என்பர். பேரின்ப மருந்தை சிற்றின்ப வெல்லத்தில் குழைத்துத் தந்த பெருமை மாணிக்க வாசகரைச் சாரும். அவரது கோவை திருக்கோவை எனப்படும். "பாற்கடலைக் கடைந்து அமுதமெடுப்பதை ஒத்ததாகும், தமிழ்க் கடலைக் கடைந்து கோவையாப்பது' என்று சொல்வார்கள். தமிழில் பல கோவை நூற் கள் உள. தஞ்சை வாணன் கோவை, அம்பிகாபதிக் கோவை ஆகியவை புலவர் நெஞ்சங்களை அள்ளி நிற்பவை. தமிழில் கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர் விட்டுச் சென்ற கோடீஸ்வரக் கோவைக்குப் பின்னர் கடந்த இரண்டு நூறு ஆண்டுகளிலும் வேறு கோவை நூற்கள் வெளி வந்ததில்லை. காரணம் கோவை புனையும் ஆற்றல் பெற்ற வல்லாள கண்டர்கள், தமிழ்ப் புலவர் மரபில் தோன்றா திருந்தமையே! இந்த நூற்றாண்டில் இந்தக் குறையைப் போக்க கோவை நூல் எழுதித் தந்த பெருமை காலஞ்சென்ற மகாமதி, சதாவதானி, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், தமிழ்க்கடல், அல்லாமா கா. ப. செய்குதம்பிப் பாவலர்

அவர்களையே சாரும். தமிழ்ப் புலவர்களின் உலகக் கிரீடத்தைத் தாங்கி நின்ற அவர்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, மூன்று கோவை நூற்களை குறையறப் பாடி வைத்து விட்டுச் சென்றிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல. தங்கள் முதற்கோவை நூலின் பாட்டுடைத் தலைவராக ஒரு முஸ்லிம் வள்ளலைத் தேர்ந்தெடுத்து முஸ்லிம் தமிழ் இலக்கியத்திற்கு வேறு யாரும் செய்யாத - செய்ய முடியாத – அரும் சேவை செய்து பெரும் மதிப்பும் தேடித் தந்திருக்கிறார்கள்.

கோவை நூலில் வரும் ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு கட்டளைக் கலித்துறை என்றால் தமிழ் மொழியின் இலக்கணத்தின் இலக்கியத்தின், யாப்பின், கற்பனையின், உணர்ச்சியின் உருவகத்தின் அசகாய சூரத்தனம் அனைத்தும் அந்த கட்டளைக் கலித்துறையின் உள்வந்து நின்றாக வேண்டும். தங்கத்தை உரைத்து தரம் பார்க்கும் உரைகல்லின் மற்றோர் பெயர் 'கட்டளை' என்பது. அப்படியானால் கவிதையை உரைத்து மாற்றுப் பார்க்க உதவுவது பாவினங்களில் மிகக் கடினமான வரிக்குப் பதினாறு அல்லது பதினேழு எழுத்துக்களைக் கொண்ட கட்டளைக் கலித்துறையாகும். நான்கே அடிகளையுடைய கட்டளைக் கலித்துறையில் பாட்டுடைத் தலைவனின் பெயர் வெற்பு அல்லது அவனின் நாடு ஆகியவை வந்தாக வேண்டும். பின்னர் திணை, துறை, மெய்ப்பாடு. இடம் பாத்திரங்களுக்கும் கட்டளைக் கலித்துறையில் இடம் ஒதுக்கி ஆகவேண்டும்.

கோவையின் தொடக்கத்தில் 'காட்சி' என்ற துறை வரும். முதன் முதலில் குறிஞ்சி நிலத்தில் பொழிலிடத்தில் தலைவன் தலைவி நிற்பதைக் கண்டு உவகையில் திளைப்பான். காட்சித் துறைக்கு அடுத்த துறை 'ஐயம்' எனப்படுவது. தான் கண்ட பூங்கொடியாள் தெய்வ மகளோ. விண்மகளோ, நீரணங்கோ அல்லது மண்ணுலகப் பெண்தானோ என்ற ஐயம் தலைவனுக்கு ஏற்படும். மூன்றாம் துறை, 'தெளிவு' என்பது. தான் கண்ட பெண் கொடியாளின் பாதங்கள் தரையைத் தொட்டும் கண்ணிமைகள் இமைத்தும் புன்முறுவல் பூத்தும் இருப்பதால் அவள் மனிதகுல மங்கையே என்று ஐயம் தெளிவான் தலைவன். நான்காவது துறை தேற்றம் என்பது. தான் கண்ட பெண்ணணங்கு தன்மீது காதல் கொண்டிருக்கிறாள் என்று தலைவன் தேறுவதைச் சுட்டுவதே இந்தத் துறை. இந்த நான்கு துறைகளும் 'கைக்கோள்' என்ற பிரிவின் கீழ் வருபவை.

காட்சிதான் காதலுக்குக் காரணம். மலையிடத்து பொழிலருகில் பூங்கொடியாள் ஒருத்தியை தலைவன் காண நேரிடும். அவள் மனிதப் பெண்தான் என்று திட்டவட்டமாக உறுதிப்படுத்திச் சொல்லி

விடும் துணிவு அவளை அவன் கண்ட மாத்திரத்தில் ஏற்பட்டுவிட முடியாது. ஆகவே முதன் முதலில் பொழிலிடத்தில் கண்ணுற நேரிடும் காமவல்லிக் கொடியாளை உருவகமாகத் தான் காட்சித் துறையில் வர்ணிப்பார்கள். தாமரை, காவி, பூங்குமிழ், கோங்கு, பைங்காந்தள் ஆகிய ஐவகை நிலங்களின் பூக்களாலும் ஆன மாலை ஒன்றை தலைவன் கண்ணுறுகிறான்; உவகை கொள்கிறான். மாலை என்றால் பெண் என்ற பொருளுமுண்டு. ஐவகை நிலங்களின் உணர்ச்சிகளையும் உள்ளடக்கி நிற்கும் ஐந்திணைக் கோவைக்குக் காரணமாகிய பூங்கொடியைக் கண்ணுற்ற தலைவன் உவகையில் திளைக்கிறான். தெய்வமணங் கமழ் மாலையாள், அவள்.

“திருவளர் தாமரை சீர்வளர் காவிகள் ஈசர்தில்லை
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங் காந்தள் கொண்டோங்குதெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின் ஒல்கி அனநடைவாய்ந்து
உருவளர் காமன்தன் வென்றிக்கொடி போன்றொளிர்கின்றதே”

திருக்கோவையார் காட்சித் துறை இவ்வாறு அமைகின்றது. காந்தள் மலர் குறிஞ்சி நிலத்தைக் குறிப்பது. குறிஞ்சி என்ற உடனேயே இங்கு புணர்ச்சி வந்து விடுகின்றது. குறிஞ்சியை அணி செய்ய முல்லையும் பாலையும் மருதமும் வந்து பைங்காந்தள் மலரோடு இணைந்து மாலையாகி விடுகின்றன. அம்மாலை பாதங்கள் பெற்று நடக்குமேயானால் அதன் நடை அன்ன நடையை ஒத்திருக்கும் என்று குறிப்பதன் வாயிலாக அந்த காமவல்லிக் கொடியாள் எந்த உலகத்துப் பெண்ணோ என்ற சந்தேகம் அடுத்துவரும் ஐயத்துறையில் எழுவதற்கு இப்பாடலிலேயே இடம் வைத்து விடுகிறார், மாணிக்கவாசகர். ஐவகை மலர்களாலான மலர் மாலையாள் காமன் தன் வெற்றிக் கொடி போன்று சுடர் விட்டு தில்லை ஈசரின் வெற்பில் நிற்கும் பாட்டுடைத் தலைவரின் நெஞ்சில் நிறைகிறாள். தலைவனின் கண்ணிற்பட்ட முதற்பூ தாமரை. முதன் முதல் பெண் கொடி ஒன்றின் முகம் தலைவனின் கண் முன் காட்சி அளிக்கின்றது.

நம்பியாண்டார் நம்பி அகப் பொருள் இலக்கணத்திற்கு விளக்கமாக அமையும் தஞ்சைவாணன் கோவையில் பாட்டுடைத் தலைவியை பாதாதிகேசமாக அன்றி கேசாதிபாதமாகக் கொண்டு நிறுத்துகிறார், பொய்யா மொழிப் புலவர். தலைவன் முதன் முதல் தடாகத்தின் அருகில்தான் காணும் தலைவியை உருவகமாகச் சித்திரிக்கிறார், புலவர். வெள்ளை அன்னமும் செந்நெற் கதிர்களை உடைய வயலும் பொய்கையும் சூழ்ந்த தஞ்சைவாணன் மலையத்திலே புயலைச் சுமந்து பிறையை அணிந்து போர் செய்யும் வில்லுடனும் கயல்மீன் விழிகளுடனும் அமைந்த தாமரை முகம்

மலர்ந்த பசும்பொற் கொடியொன்று கேட்டதெல்லாம் தரும் கற்பக விருட்சத்தின் அருகில் நிற்கக் கண்டு வியக்கிறான், தலைவன்.

''புயலே சுமந்து பிறையே அணிந்து பொருவிலுடன்
கயலே மணந்த கமலம் மலர்ந்தொரு சுற்பகத்தின்
அயலே பசும்பொற் கொடிநின்ற தால்வெள்ளை அன்னஞ்
சென்னெல்
வயலே தடம்பொய்கை சூழ்தஞ்சை வாணன் மலையத்திலே''

பாடலில் குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த ஓரினப் பொருட்களையே சுட்டி கற்பகத் தருவின் அருகில் நிற்கும் காமவல்லிக் கொடியின் கூந்தலையும் விற்புருவத்தையும் கயல்விழியையும் முகத்தாமரை யையும் கண்டு உவகை கொள்கிறான், தலைவன்.

இரண்டு காட்சித் துறைகளைக் கண்டோம். சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் பாடியுள்ள ''ஷம்சுத் தாசீன் கோவை''க்கு வருவோம். இங்கும் காட்சித்துறை தொடங்குகிறது.

''மாவே தழைத்து வனசமுங் கோங்கு மருவியல்லிப்
பூவே புணர்ந்து புதுநற வேற்றளி பூண்டுபுகழ்க்
கோவே யெனவரு வோன்ஷம்சுத் தாசீன் குளிர்சிலம்பின்
காவே சிறப்ப நடுவிலொ ராவிநங் கண்ணுற்றதே''

மா, குறிஞ்சி நிலத்தைச் சார்ந்தது. எடுத்த எடுப்பிலேயே கட்டளைக் கலித்துறையின் முதற்சொல் குறிஞ்சியைக் காட்டி புணர்ச்சியைச் சுட்டி களவியலைக் குறிக்கின்றது. நூல், அகப் பொருள் ஐந்திணைக் கோவை என்று அறிவிக்கின்றது. திருக் கோவையாரின் குறிஞ்சியைக் காட்டும் பைங்காந்தள் ஐந்தாம் மலராக –கடைசிப் பூவாக– வைக்கப்படுகிறது. அந்த உத்தியினின்றும் மாறுபட்ட உத்தியாக இங்கு குறிஞ்சிக்குரிய மா முதலிடம் பெறு கிறது. மாவே பூத்து வனசமுங் கோங்கும் மருவி அல்லிப் பூவே புணர்ந்து புது நறவு ஏற்று அளிபூண்டு நடுவிலோர் ஆவியாக தோற்றமளிக்கின்றது. இத்தோற்றத்தைக் கண்களாற் கண்டு உவகையில் மூழ்கி நிற்கிறான் பாட்டுடைத் தலைவனாகிய புகழ்க் கோவே என வரும் கோன் ஷம்சுத் தாசீன்.

பெண் கொடி தோற்றமளிக்கிறாள். முதன் முதலில் தலைவன் கூந்தலைக் காணவில்லை; நெற்றியைக் காணவில்லை; புருவத் தையோ கயல்விழிகளையோ மார்பையோ காணவில்லை. முதன் முதலில் அவன் கண்ணில்படுவது இன்னவள் என்று சொல்ல முடியாத பெண்ணணங்கு ஒருத்தியின் மேனியேதான். இதுவே தான் இயற்கை. கண்ணில் ஒருத்தியின் மேனித் தோற்றம் வந்து

படுகின்றது. அது இங்கு தமிழ்நாட்டு பெண்ணினத்திற்கே என்று அமைந்த மாந்தளிர் மேனி. தோற்றம் வசீகரமானதாக இல்லையெனில் யாரும் பின்னர் அவளை ஏறிட்டும் பார்க்க மாட்டார்கள். இங்கோ மேனி நல்லாள் நெஞ்சையே அள்ளி நின்று விடுகிறாள். ஆகவே கண்ணைப் பறித்து நிற்கும் மேனியாளை தலைவன் உற்று நோக்குகிறான். அவள் முகம் வனசமாக-தாமரையாக-சுடர் விடுகின்றது. அடுத்தபடியாக கண்பார்வை சற்று கீழே தணிகிறது. கொங்கைகள் கோங்கரும்புகளாகக் காட்சி தருகின்றன. பின்னும் சற்று மேலாக விழிகளை உயர்த்துகிறான். வாயும் இதழும் பற்களும் அல்லி மலராக விரிகின்றன. இதழ் இன்ப ஊற்று, புத்தம் புது தேனாகச் சுரக்கின்றது. உள்ளத்தின் உள்ளெழும் இன்பமெல்லாம் தேங்கி வண்டு விழிகளில் பளிச்சிடுகின்றது. இப்பொழுதுதான் இதழ் அவிழ்த்து மதுவார்த்து அளிவந்து மொய்க்க மலரும் கொடியாகவும் மலராகவும் செழித்தொளிரும் காமவல்லிக் கொடியாள், எவ்வுலகத்துப் பெண்ணோ? வானோ? புவியோ? மலையோ? கடலோ? மதி இரவி தானோ?—என்றெல்லாம் ஐயம் கொள்ள வேண்டிய அடுத்த துறையை உள்ளில் எண்ணுகிறார், கவிஞர். ஆகவே காட்சித் துறையிலேயும் 'நடுவிலொர் ஆவி' என்று சூசகமாகக் கூறி பாதங்களுக்கு வராமலே நின்று விடுகிறார். அன்ன நடை வாய்ந்தது என்றோ வெள்ளை அன்னம் என்றோ கூடக் குறிக்கவில்லை. பொய்பட்ட மருங்கினள்–இல்லை என்று சொல்லும்படியான இடையை உடையவள் என்றுகூடச் சொல்லாமல் இடையே இல்லாத ஆவி என்கிறார், புலவர் பெருமான். மாந்தளிர் மேனியில் தொடங்கி ஆவியில்–தலைவனின் ஆவியில்–கொண்டு நிறுத்துகிறார். பாட்டுடைத் தலைவனின் ஆவியாகி விடுகின்றாள், அந்தப் பூங்கொடியாள். கோன் ஷம்சுத் தாசீன் குளிர் சிலம்பின் காவே சிறக்க நிற்கும் நடுவில்லாத அந்த ஆவியைக் கண்டு உவகை பூத்து நிற்பதாகத் தன் நெஞ்சோடு சொல்கின்றான், பாட்டுடைத் தலைவன். ஷம்சுத்தாசீன் மலையவெற்பில் அவன் கானகத்திற்கே சிறப்பளிக்க கானின் நடுவில் ஓர் வாவி, பொய்கை, தடாகம் ரமணீயமாகக் காட்சி தருகிறது. அந்த அற்புத வாவிதான் மாந்தளிர் மேனி பெற்ற ஆவியோ? குறிஞ்சியும் முல்லையும் பாலையும் மருதமும் நெய்தலும் காட்சித் துறையில் நம் நெஞ்சை அள்ளி நிற்கின்றன. கருத்தில், கற்பனையில், உணர்ச்சியில், உருவகத்தில், சொல்லில், சொல்லின் வைப்பு முறையில் எல்லாம் புதுமை! புதுமை!! புதுமை!!! முன் சென்ற கோவை நூல் ஆசிரியர்கள் கையாளாத-கைக் கொள்ளாத–முற்ற முற்ற முழுமை பெற்ற முழுப்புதுமை!

உண்மைக் கவிதை இவ்வாறு தானே இருக்கும்?

★

வளவிய புலமைப் பாவலன்

ஔவை சு. துரைசாமி

மொழித் துறையில் சிறப்புப் பெறுகிறவர்களில் சிலர் பேச்சுத் துறையில் மேம்படுவர்; சிலர் எழுத்து வகையில் ஏற்றம் எய்துவர்; சிலர் பாப்புனைவதில் பண்புறுவர். பேச்சாளரை நாவலர் எனவும், எழுத்தாளரைப் புலவர் எனவும், பாவல்லுநரைப் பாவலர் எனவும் தமிழர் குறிப்பது மரபு. நாவலரின் நற்பணியில் கற்றவர் கல்லாதவர் என்ற இருதிற மக்களின் செவியுணர்வு பெருகிச் சிறப்புறும். புலவர்களின் எழுத்துக்கள் கற்றவர் உள்ளத்துக்குக் கவினிய கருத்து நல்கி மனக்கண்ணைப் பரக்கத் திறக்கும் பாங்கினவாகும். பாவலரின் பாப்புனைவுகள் பயிலும் உள்ளத்திற்குக் கிளர்ச்சியும் படிக்கும் நாவுக்கு நல்லிசையும் கேட்கும் செவிக்கு இன்பத்தையும் நல்குகின்றன. இவ்வாற்றால் பாவலர், மக்களிடையே நன்மதிப்புப் பெற்று விளக்கம் பெறுகின்றனர்.

இவ்வகையில் திரு. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் இனிய பாப்புனைவதும் அவதானம் செய்வதும் ஆகிய இரண்டிலும் இனிய புகழ் பெற்றவர். அவர் தமது பாடுபுகழைத் தாமே எடுத்துரைக்க வேண்டிய சூழ்நிலை தோன்றியபோது,

''கலனெடுத்துக் கடல்நடத்திக் கனநிதியந்
தேடுநரும் கதிக்கச் செம்பொன்
குலனெடுத்துக் குணனெடுத்த குறியினரும்
கோன்மைபெறு கொற்றோர் தாமும்
பலனெடுத்த பெருந்தவத்தின் பணியெடுத்துப்
பதமடைந்த பான்மை யோரும்

வலனெடுத்த அரியகவி வளனெடுத்து
மதித்திடுபா வல்லோன் யானே!"

என்று வெளியிட்டுள்ளார்.

பாவலர் அவர்கள் தென்குமரி நாட்டு நாகர்கோவிலுக்கும் சுசீந்திரத்திற்கும் இடையிலுள்ள இடலாக்குடி எனுமூரில் 1874-ல் மாண்புடைய இஸ்லாமியக் குடியில் பிறந்தார். இடலாக்குடி என்பது இடரிலாக்குடியின் மரூஉப் போலும்! அவர் தந்தை பக்கீர் மீறான். இளமையிலேயே வளவிய தமிழறிவு பெற்ற இனிய பாக்கள் புனையும் எழில் பெற்றார். அக்காலத்தில் கற்றார் சூழலில் பெருமதிப்புப் பெற்று விளங்கிய அவதானக் கலையில் நம் பாவலருக்கு ஆர்வம் பெருகவே அதனை முற்றக் கற்று 1907-ஆம் ஆண்டில் சென்னையில் பாவலரும், நாவலரும், புலவரும் கூடிய நல்லவையில் அவதானம் ஒரு நூறு செய்து அவர்கள் உவந்தளித்த சதாவதானப் பட்டம் பெற்றார். அவ்வவையில் ஒருவர் "விராடனையே பெண்ணெ னலாமே" என்று ஈற்றடி கொடுத்துப் பாடுமாறு கேட்டார்.

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னா—மண்ணில்
வராடனையே தெய்வ மன்எனுஞ் சொற்ற
விராடனையே பெண்ணென லாமே!"

என்று பாடினார். கேட்டவர் வெள்கிய முகத்துடன் வியந்து மகிழ்ந்தார்.

மறந்தும் புறந்தொழா மாண்புடையது முஸ்லிம்களின் இஸ்லாமிய சமயம். அதன் இறுதித் தூதரான முகம்மது நபியின்பால் நம் பாவலர் பேரன்பு உடையார். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டும் அவர் வழங்கிய அறங்களிற் சிலவற்றைப் பொருளாகக் கொண்டும் "நபிகள் நாயக மான்மிய மஞ்சரி" என்றொரு நூலை அவர் செய்துள் ளார். அது நான்கடியின் மிக்கு ஐந்தடியால் அமைந்த கொச்சகப் பாட்டுக்கள் நூற்றிரண்டு உடையது. கள், சூது முதலியவற்றை அறவே விலக்க வேண்டுமென நபிகள் நாயகம் வற்புறுத்தியதை முறையே நம் பாவலர்,

"கேடுவருந் தொல்லைமிகுங் கேண்மையறும் பண்பொழியும்
பாடுவரும் கைப்பொருளும் பாழாகும் பல்குமனச்
சூடுவருங் கொள்ளற்க சூதாட்ட மென்றமறைப்
பீடுவரும் வாய்மைசொற்ற பின்னேயு முன்னேமோ
பெட்பு நபி நாயகமே பின்னேயு முன்னேமோ!

உள்ளுணர்வு போக்கியந்தோ உன்மத்த நாய்போலும்
வள்ளுணர்வு தேக்கியுயிர் வாதையொடு போதைதரும்
கள்ளுணர்வு கொள்ளகிலீர் ! கத்தனுரை ஈதென்னத்
தெள்ளுணர்வு தந்துவந்த செம்மைநிலை ஏதேயோ
திட்பநபி நாயகமே செம்மைநிலை ஏதேயோ !

என்று பாடுகின்றார்.

நபிகள் நாயகம் வழங்கிய ஞான உரையைக் காண்பார் அவற்றை எக்கல்லூரியில் எந்தப் பெருஞானிபால் பயின்றுணர்ந்தாரென மயங்குவதியல்பு. அவர்தான் வரலாற்றிலேயே உயர்ந்த படிக்காத மேதை. அதனை வியந்து கண்ட நம் செய்குதம்பிப் பாவலர்,

"பள்ளியிடைப் போந்ததில்லை பாரகலைக் கற்றதில்லை
தெள்ளியவிஞ் ஞானவியல் சேர்ந்திருந்து தேர்ந்ததில்லை
ஒள்ளியமெய்ப் போதநலம் உற்றதத்து வத்தொகுதி
அள்ளியநும் மாய்வுடைமைக் காரே வியவாதார்
ஆகிர்நபி நாயகமே ஆரே வியவாதார்."

என்று அழகொழுகப் பாடுகின்றார்.

நம் பாவலர் செந்தமிழ்ச் செய்யுள் உலகில் திரிந்ததனால் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புலமை ஒழுக்கமே நிறைந்திருந்தாரேனும் நாட்டுப்பற்று அவரை விடவேயில்லை. கோல்டு சுமித் என்னும் ஆங்கிலப் புலவன்,

**"Where ever I roam whatever realms to see
My heart untravelled fondly turns to thee
Still to my brother turns with ceaseless pain
And drags at each remove a lengthening chain"**

என்று கூறியதைப் போலப் பாவலர் எத்துணை நெடுந்தொலைவு செல்லினும் அவருள்ளம் அவர் நாட்டோடு பிணிப்புண்டே இருந்தது. அவர் தமது கோட்டாற்று நாட்டை நினைந்து பாடிய பாட்டொன்றில், வானளாவ உயர்ந்து வளம்பெருகி நிற்கும் பொழில்களில் மந்தியொன்று,

"....................அகலிரு விசும்பின்
ஓங்கி வளர்ந்த ஒருநெடுந் தெங்கின்
பாங்கிற் குதிப்பப் பச்சிளங் காய்கள்
சிதறிப் பழுத்த செழுமாங் கனியில்
கதலிக் குலையில் கவின்படு பலவின்
முழவிற் பொலியு முட்புறக் கனியில்
விழவுந் தகர்ந்து வெளிப்படு நறவம்

ஊற்றிற் பெருக்கெடுத் தொள்ளிய குளக்காற்
சேற்றிற் புரளச் சென்றிடும் பணைகள்
புயங்க மணியில் பொலிதரு செந்நெல்
வயங்க வளர்த்து மகிமைகொள் கோடை!

என்று இறும்பூது பயக்கப் பாடுகிறார்.

கவிச் செல்வராகிய நம் பாவலர்க்குப் புவிச் செல்வர் பலர் நண்பர்களாயினர். நெல்வேலி நகர்க்கண்மையிலுள்ள மேலப்பாளையத்தில் வாழ்ந்த செல்வர் சம்சுத் தாசீன் என்பவர் பாவலர் உள்ளங் கவர்ந்த அன்பர். அவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு ஒரு கோவை பாடினார் நம் கோட்டாற்றுப் பாவலர். கோட்டாறு, இடலாக்குடி, சுசீந்திரம் ஆகிய அனைத்தும் நாகர்கோவில் பகுதியின் கூறுகளே!

தலைவனுக்குந் தலைவிக்கு முண்டான காதலுறவை அத் தலைவியின் தோழி செவிலிக் குரைக்க வேண்டிய சூழ் நிலையில் ஒரு நாள் தலைவி பூக்கொய்யச் சென்றபோது, தலைவன் அங்கு வந்து ஒரு தாமரை மலரைக் கையிலேந்தி நிற்கிறான். அதன்பால் தலைவியின் கட்பார்வை ஆர்வமுடன் பாய்கிறது. அது கண்ட அவன் "அரிவையே வா தருகிறேன்'' என்றலும் அவன் அருகே சென்றாள்; பூக்கொண்டாள்; அவனும் அது தந்து தன் மார்பில் அவளைத் தழுவிக் கொண்டான். இருவர் கண்களும் ஒத்து நோக்கத்தால் ஒன்றுபட்டன என்ற கருத்துப்பட,

''வரத்தா லுயர்ந்தபு மான்சம்சுத் தாசீன் வரைக்கொருவன்
கரத்தா மரையில் விழித்தா மரைகள் கவியநின்ற
தரத்தா லரிவாய் வருவாய் பெறுதி தருதுமென
உரத்தா லளப்ப நயனமொத தேற்றங் குவந்தனளே!"

எனப் பாடுகிறார்.

அவர் காளைப் பருவத்திலிருக்கும்போது தமிழ் நாட்டில் சைவ சமயத்தவரிடையே சிவநெறியின் பெருமைக்குச் சிறுமை தேடும் வகையில் விரிவிலா அறிவினார் சிலர் அருட்பா மருட்பா என்ற சொற் பூசலைத் தொடுத்தனர். அந்நாளில் பூசல் தொடுத்தவர் இனத்தில் முன்னணியில் நின்ற திரு. நா. கதிரைவேல் பிள்ளையை எதிர்த்து அருட்பா வழி நின்று சொல் மறவராக நம் பாவலர் போராடினார். திரு. பிள்ளை அவர்கள் "அருட்பா ஆபாச தருப்பணம்'' என நூல் ஒன்று வெளியிட, அதனைக் கண்ட பாவலர், "அருட்பாவா ஆபாச தருப்பணம்'' எனப் பொங்கி "அருட்பா! ஆ! பாசதருப்பணம்" எனப் பிரித்துப் பொருள் சொல்லி மருட்பா

என்றோரை மருட்டி ஓட்டினராம். பாவலர் உலக வாழ்வை நீத்த போது கையறவுற்ற அன்பரொருவர்,

“கதிர்வேல் திறத்தானைக் கண்டஞ்சி நில்லாமல்
எதிர்வேலன் நான்என வந்து ஏற்றமிக வுற்றனையே!”

என்று பாடியிருப்பது மேலே குறித்த சேதியை வலியுறுத்துகின்றது.

திரு. கதிரைவேல் பிள்ளையிடத்து திரு வி. க. அவர்கட்கு மிக்க ஈடுபாடு. ஆயினும் பிள்ளையவர்கட்கு மாறுபட்டு நின்ற நம் பாவலரிடத்தும் ஒத்த நன்மதிப்புண்டு. திரு. வி.க. அவர்கள் தமக்கும் பாவலருக்கும் உண்டான தொடர்பை ஏகலைவனுக்கும் துரோணருக்கும் இருந்த தொடர்பென்று கூறினர்.

ஒருகால் திருநெல்வேலியில் திரு. வி. க. சைவர் கூட்டமொன்றில் சொற்பொழிவாற்ற வந்திருக்க, அப்போது அங்கே சென்ற பாவலர் அவர்களைக் கூட்டத்தினிடையே கண்டு உடனே மேடைக்கு அவர்களைக் கொண்டு போய்த் தம்மோடு உடனிருத்தினர். அது கண்டதும் சிலர் உள்ளத்தே சமய வேற்றுமை உணர்வு தலை காட்டிற்று. அதனையறிந்த திரு. வி. க. அவர்கள், “பாவலர்க்கிங்கே இடமில்லை யெனில் எனக்கும் இடமில்லை'' என்று வெகுண்டார் இந்நிகழ்ச்சியின் விளைவாகத் திரு பாவலர் அவர்கள், ‘‘சைவம் வளர்த்த தமிழ்” என்ற தலைப்பில் மூன்று நாள் சொற்பொழிவாற்றிச் சைவர் பாராட்டுஞ் சால்பெய்தினர் என்றறிஞர் கூறுவர்.

திரு. பாவலர் அவர்கட்கு சைவ நூல்களோடு வைணவ நூலான இராமாயணத்திலும் மிகச் சிறந்த பற்றும் புலமையும் உண்டு. அவரது இராமாயண விரிவுரை “சர்க்கரைப் பந்தரில் தேன் மழை பொழிந்தாற்போலும்” என்று அறிஞர் பாராட்டிக் கூற நான் நேரில் கேட்டிருக்கிறேன். நான் 1941-ல் நாகர்கோவில் சென்றிருந்த போது, சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்ப்பேராசிரியராயிருந்து காலஞ்சென்ற திரு ரா. பி. சேதுப்பிள்ளையவர்களும் தம்மையடைந்து கம்பராமாயணத்தில் தோன்றிய ஐயங்களைத் தெரிந்து செல்வது உண்டு என்று கூறினர்.

திரு. பாவலர் அவர்கள் 1950-ல் தமது 76-ஆவது வயதில் காலமானார். இதற்கிடையே அவர் பாடிய பாட்டுக்கள் பல. அப் பாட்டுக்களின் அமைப்பும் எளிமையும் சிறிது கற்றோரையும் மிகவும் இன்புறுத்தும் இயல்பின. பாக்கியம் என்ற நண்பர் ஒருவருக்கு அவர் எழுதிய முடங்கற் கவியைக் கண்டேன். தம் ஆசிரியர்பால் பெரு மதிப்புக் கொண்டிருந்த பாவலர் அவர்கள் அக்கடிதத்தில் தம் ஆசிரியர் அவர்களை என்றும் அருகே வைத்துப் பேணுமாறும் எப்போதும் அவருடனேயே இருக்கவேண்டும் என்றும் வற்புறுத்தி,

"உள்ளபடி பல்கலையும் ஓகையுடன் என்றனுக்குக்
கள்ளமற ஓதுவித்த கண்மணியை—எள்ளளவும்
நீங்காமல் நேசம் நெகிழாமல் பக்கம்விட்டு
வாங்காமல் நீயிருத்தி வை"

என்று கூறியுள்ளார்.

மேலும் அக்கடிதத்தில்,

உற்றவர்க்கும் வேலா யுதமுதலி யார்க்குமுளம்
பற்றுமெம தாசிரியர் பாலினுக்கும்—மற்றவர்க்கும்
மெத்தமெத்த வேண்டி விருப்பமுள்ள வந்தனத்தை
நித்தநித்த முஞ்செலுத்தி னேம்."

என்று எழுதியிருப்பது நெஞ்சை உருக்குவதாகும்.

சித்திரைத் திருநாள் என்ற திருவாங்கூர் மன்னரின் மருகன் அவிட்டந் திருநாள் இளவயதிலேயே இறந்தமைக்குக் கேரள நாடு முழுதுமே வருந்திற்று. அப்போது பாவலர் அவர்கள்,

"பெற்றோரும் சித்திரைப்பேர் பெம்மானும் உள்ளுணர்ச்சி
அற்றோராய் மாழ்கி அழுதிரங்க—கற்றோரா
ஏமா வனநல் இளவேந்தைக் கொன்றபழி
போமா, அறமா, புகல்"

என்றும்,

"கண்ணிருந்து மந்தகன்யான்; காண்மினென்றே காலாநீ
மண்ணிருந்த மாந்தர் மனமறுக—விண்ணிருந்த
சீரான் அவிட்டந் திருநா ளிளமையெலாம்
பாரா துயிர்கவர்ந்தாய் பாய்ந்து"

என்றும்,

எங்கள் இளவரசை ராமவர்ம பூபதியைத்
திங்களோ ரெண்பான் திகையுமுனே—பங்கமுறக்
கொன்றனையே பாவிக் கொடுங்கூற்றே நீதருமன்
என்றபே ரேற்ற தெதற்கு?"

என்றும்,

"பாவி நமனே பழிகாரா வஞ்சி மன்னன்
ஆவி கவர்ந்த அமைவென்னே—தாவி
எருமைப் புறத்தலைந்த ஈனமதி யல்லால்
பெருமைகொள வேறுமுண்டோ பேசு"

என்றும் பாடியுள்ளார். பாடல்களில் எத்தனை உருக்கமும் உண்மையும் கலந்துள்ளன காண்மின்!

இவ்வாறே கணபதி என்ற தமிழ்ப் பெரியார் மறைந்தபோது,

"முன்னொருபோழ் தெமையழைத்து முன்னிருத்திப்
பலவினவி மொழிந்த மாற்றம்
தன்னையறிந் தடுத்திருந்த தப்பாளர்
தமைநோக்கித் தக்கோய்! மிக்கோய்
என்னையிவன் கோட்டாற்றி லிருந்தவனா
யிருந்தவனா என்று கேட்ட
பன்னரிய வாயுமினிப் பார்த்திடுங்கா
லுண்டுகொலோ பாவி யேமே"

என்று பாடிய பாட்டு, படிக்கும் உள்ளத்தைக் கரைத்து விடுகிறது. கோட்டாற்றின் இருந்தவனா? இருந்தவனா? என்ற சொற்கள் தாமே 'இரும்,தவனா? 'இருந்த அவனா?' எனப் பிரிந்து பொருள் உணர்த்துமாறு பாட்டமைப்பது எல்லாப் பாவலர்க்கும் எளிதில் அமைவதுஅரிது. இவருடைய பாட்டுக்கள் பலவும் திரிகூட ராசப்பக் கவிராயர் பாட்டுக்களை நினைப்பிக்கின்றன.

இறுதியாக ஒன்று கூறி இக்கட்டுரையை முடிக்கிறேன். வள்ளல் திரு. அழகப்பர் அவர்கள் திருவாங்கூர் பல்கலைக் கழகத்துத் தமிழ், சமஸ்கிருதம் என்ற மொழிகளின் ஆராய்ச்சித் துறைக்கெனப் பொருள் வழங்கிய சேதி நம் பரவலரைப் பரவசத்தில் ஆழ்த்தியது. அவர் உள்ளம் "கரைசெய்ய வரியதொரு பேருவகைக் கடல் மூழ்கி"க் கவிப் பெருக்கைத் தோற்றுவித்தது. மணல் கிளைக்க நீர் ஊறுவது போலக் கருத்துக்களும் கவின் மலிந்த சொற்களும் ஒன்றினொன்று முந்துகின்ற செயலை அப்பாட்டுக்களிற் காணலாம். அழகப்பரின் வள்ளன்மைக்கு நிகர் காண எண்ணியபோது பொன், மலை, கடல், முகில் முதலியவற்றை அவர் நெஞ்சம் எடுத்துரைக்க லுற்றது. அவை ஒவ்வொன்றையும் நன்கு மறுத்து ஒப்புயர்வின்றி விளங்கும் வள்ளல் அழகப்பரின் புகழைத் தமது வளவிய பாட்டுக்களால் நம் பாவலர் நிலைபெற நாட்டுவது நவில் தொறும் நயம் பயந்து மகிழ்விக்கின்றது.

வள்ளல் அழகப்பரின் வண்மைக்குப் பொன்னை நிகர் கூறலாம் என்ற நெஞ்சுக்கு,

பொன்னையே சிறந்த பொருளென்ப ரதுதீப்
புகுஞ்சுடும் புலர்வரு முருகும்
பின்னையே பலபேர் பெறுமுரு மாறும்
பெருவிலைக் கடைபடும் பெண்பால்

தன்னையே நாடுஞ் சரண்புகும் மேலும்
தாடலை வீழ்தரு மதனால்
என்னையே நினக்கு மிணையெனப் புகல்கேன்
இயம்புதி அழகப்ப துரையே!'

என்றும்,

மேகத்தை உவமையாய் மொழிக என்ற நெஞ்சினை நோக்கி

"மண்ணக மளிக்கும் மழைமுகில் முன்னீர்
மடுப்படும் பயங்கொளுங் கறுக்கும்
விண்ணக மடங்கும் விழிக்குமிக் கலறும்
மெய்யெலாம் வியர்த்தலர் தூற்றும்
கண்ணகன் ஞாலம் காண்கலா துருவும்
காக்கும்பின் வெளுப்புறும் அதனால்
எண்ணகத் துனக்கோர் இணையென லாமோ
இயம்புதி அழகப்ப துரையே!

என்றும் வரும் பாட்டுக்கள் படிக்குந்தொறும் இன்பம் பெருக்குவதைக் காணலாம்.

இவ்வாறு வளவிய புலமையும் நலம்மலி பாவன்மையுஞ் சிறந்த நம் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் 1950-ல் தாம் விரும்பிய விண்ணுலக வாழ்வு நோக்கி மறைந்த காலை, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் மனம் கரைந்து கையறவு எய்தி,

"ஓரும் அவதானம் ஒரு நூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
செந்தமிழ்ச் செல்வனை செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி."

என்று பாடிப் புலம்பினர் எனின், நாம் வேறு கூறுவது மிகை.

ஒளிகுன்றாத் தமிழ் விளக்கு

ஆர். வீரபத்திரன், M.A., L.T.,

பாரத கண்டத்தின் தென்கோடியில் அமைந்துள்ள நாஞ்சில் நாடு சங்க காலம் முதல் இன்றளவும் தமிழ்வளம் கொழிக்கும் சால்புடன் விளங்குவதைப் பலரும் அறிவர். சங்க இலக்கியங்களில் சிறப்பிக்கப்படும் அதிகமான்களும், நாஞ்சில் வள்ளுவனும் இந்நாட்டை ஆண்ட பெருமைக்கு உரியராவர். நாஞ்சில் நாட்டில் உள்ள பூதப்பாண்டி என்ற ஊருக்கு அப்பெயர் தோன்றக் காரணமாக இருந்த பூதப்பாண்டியனும் அவன் இறந்தபோது உடனுயிர் நீத்த அவன் தேவியும் பாடிய பாடல்கள் அகம், புறம் ஆகிய தொகை நூல்களில் மிளிர்கின்றன. சங்கப் புலவர்களில் ஒருவரான ஔவையாரும் இந்நாட்டோடு தொடர்புடையவர் ஆவர். திருவிசைப்பாப் பாடிய ஞானச் செல்வர்களில் ஒருவரான வேணாட்டடிகள் நாஞ்சில் நாட்டின் பகுதிகளை ஆண்ட சேரகுலச் செம்மல் என்று கருதப்படுகின்றார். இந்நல்லிசைப் புலவர்களுக்குப் பின்னரும் பல கவிஞர்கள் அந் நாட்டில் தோன்றித் தமிழ்த் தொண்டு புரிந்துள்ளனர்.

கன்னியாகுமரி, சுசீந்திரம், சோழபுரம் முதலிய ஊர்களிலுள்ள திருக்கோவில்களில் பொறிக்கப்பட்டிருக்கும் பாவடிவில் அமைந்த கல்வெட்டுக்களும் இறைவன் துதியாக அமைந்த சுசிந்தை மாலை முதலிய சிறு நூல்களும், திவான் வெற்றி, செண்பகராமன் பள்ளு என்பனவும் இவர்களால் இயற்றப்பட்டனவாம். கோட்டாற்றைச் சாந்த இளம் பெருமானார் என்ற புலவர் பாடிய பாடலொன்று திருச்சியை அடுத்த செந்தலை என்னும் ஊரிலுள்ள சிவன் கோவில் கல்வெட்டில் காணப்படுகிறது. மேற்குறித்த புலவர் பரம்பரையில்

சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மூன்று பேரறிஞர்கள் தோன்றி, நாஞ்சிலின் பெருமையை நாடறியச் செய்ததோடு தமிழ் மொழிக்கும் தகைசான்ற தொண்டும் புரிந்துள்ளார்கள். அன்னோர் அறிஞர் கே. என். சிவராஜபிள்ளை அவர்களும், கவிமணி சி. தேசிகவிநாயகம்பிள்ளை அவர்களும், சதாவதானி கா. ப. செய்கு தம்பிப் பாவலர் அவர்களுமாவர்.

திரு. சிவராஜபிள்ளை அவர்கள் தமிழிலக்கிய இலக்கணங்களில் அழுத்தமான ஞானமும் ஆராய்ச்சி வன்மையும் படைத்தவர்கள். தமிழிற் போலவே ஆங்கில இலக்கியங்களிலும் நிறைந்த புலமை வாய்ந்தவர்கள். அவ்விரு மொழிகளிலும் திட்ப நுட்பம் செறிய எழுதும் கட்டுரை வன்மையும் அவர்கள் பெற்றிருந்தார்கள். அவர்கள் இயற்றிய பண்டைத் தமிழர்களின் கால அடைவு **(Chronology of the early Tamils)** புறநானூற்றின் பழமை, தமிழ் நாட்டில் அகஸ்தியர் **(Aghastiya in the Tamil land)** முதலிய நூல்களும், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை பதிப்பித்த மனோன்மணீய நாடகத்துக்கு அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஆராய்ச்சி முன்னுரையும் தமிழுலகுக்கு அவர்கள் வைத்துப் போன எய்ப்பில் வைப்புக்கள் என்பதில் ஐயமில்லை. மேலும் அவர்களது "கம்பராமாயண கௌஸ்துப மணிமாலை", "நாஞ்சில் வெண்பா" என்னும் கவிதை நூல்களும் பேரறிஞர் போற்றும் பெருமை வாய்ந்தனவாம்.

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் ஓர் பிறவிக் கவிஞர். அவர்கள் தம்மிடம் இயற்கையிலே அமைந்திருந்த கவிதை உணர்ச்சியை தமிழிலக்கிய இலக்கணப் பயிற்சி மூலமும், ஆங்கிலக் கல்வி மூலமும் வளமும் வனப்பும் உடையதாகச் செய்து கொண்டார்கள். அதன் பயனாய் ஆங்கிலக் கவிதைகளில் கண்ட அரும் பொருளையும் அமைப்பையும் தமிழ்க் கவிதைகளில் ஏற்றிப் புதிய நெறியிலே இனிமையும் எளிமையும் வாய்ந்த பல பாடல்களை இயற்றினார்கள். தென்னிந்திய வரலாற்றை எழுதுவதற்கு அவர்களது ஆராய்ச்சி முடிவுகள் பயன்படுவனவாம். அவர் இயற்றிய "மலரும் மாலையும்", "ஆசிய ஜோதி" முதலிய நூல்கள் தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியர் எந்நாளும் கற்றுப் பயனடைதற்குரிய இலக்கியச் செல்வங்களாகும்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தனித்தமிழ் வித்தகர். அவர்களது கல்வியும் கேள்வியும் பழைய மரபினைப் பின்பற்றி ஆழ்ந்தும் அகன்றும் அமைந்தன. அவர்கள் சங்க இலக்கியங்களையும் பிற்கால இலக்கியங்களையும் ஐயம் திரிபறக் கற்றுத் தேர்ந்தவர்கள். அரிய நினைவாற்றல் படைத்த பாவலர் உள்ளத்தில் அவர்கள் கற்ற கவிதைகளும் இலக்கியங்களும் மங்காது

சுடரொளி வீசிக் கொண்டிருந்தன. எனவே பழைய இலக்கியக் கருவிலே தமது புதிய கருத்துக்களை உருக்கி வார்த்துக் கவிதை புனைவது அவர்களுக்கு மிகச் சுலபமாக அமைந்தது. அவர்கள் இயற்றிய நூல்கள் அவர்களது தமிழிலக்கிய பயிற்சியையும், பாவன்மை யையும், கற்பனை வளத்தையும், இலக்கணப் புலமையையும் பறை யறைந்து சாற்றுகின்றன.

பாவலர் பாடிய நூல் வகைகளில் கோவை ஒன்றாகும். அகப் பொருள் பற்றிய அப்பிரபந்தம் தலைவனும் தலைவியும் முதன் முதலாகக் காண்கிற காட்சி முதல் பரத்தையற் பிரிவு ஈறாக நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களால் அந்தாதியாகப் பாடப்படுவது. தமிழ் மொழியில் கோவை நூல் ஏறக்குறைய ஒன்பதாம் நூற்றாண் டளவில் முதன் முதலாகத் தோன்றத் தொடங்கியது. அதற்கு முன்புள்ள சங்க இலக்கியம் முதலியவற்றில் அகப்பொருள் செய்திகள் கூறப்பட்டிருப்பினும், அவை ஒவ்வோர் துறை பற்றித் தனித் தனிப் பாடல்களாகப் பாடப்பட்டுள்ளனவேயன்றி நாடக இயல்பு புலப்படும் வண்ணம் ஒன்றோடொன்று பிணைத்துக் கோவையாகப் பாடப்பட வில்லை. தொல்காப்பியரும் அகப்பொருள் பாத்திரங்களின் கூறு களை ஒரு சேர தனித்தனி சூத்திரங்களில் கூறுகிறார். கோவை நூல்களிற் போல அவற்றை முறைப்பட அமைத்துச் சித்திரித்துக் கூறவில்லை.

கோவை நூலை முதன் முதலில் பாடிய புலவர் மணிவாசகப் பெருமானார். அவர் பாடிய திருச்சிற்றம்பலக் கோவையார் சிற்றின்பச் சுவையும் பேரின்பக் கனிவும் ஊற்றெடுத்துப் பெருகுவதாய் அமைந் துள்ளது. அவர் பேரின்பமாகிய பக்தி அனுபவ மருந்தைச் சிற்றின்ப மாகிய வெல்லத்திற்குள் பொதிந்து காட்டி, மக்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, ஆர்வத்துடன் அருந்தப் பண்ணி அவர்களை நிலையாத உலக வாழ்க்கைக் கடலினின்றும் கரையேற்றி. நிலைத்த வீட்டுலக நெறியிலே உய்க்க விழைகின்றார். திருக்கோவையரைப் பின்பற்றிப் பல புலவர்கள் கோவைபாடும் முயற்சியில் தலைப் பட்டனர். ஆனால் ஆழ்ந்த பக்தி அனுபவமின்றிப் புலமையொன்றே உடைய அப்புலவர்களுக்குத் தமது நூல்களால் மக்களுக்கு முக்தி நெறி காட்டுதல் இயலாதாயிற்று. எனவே அந்நூல்களில் இலக்கியச் சுவை மட்டுமே எஞ்சியது. இலக்கிய நயம் மிக்க கோவைகளில் பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சைவாணன் கோவை சிறப்பு வாய்ந்ததாகும்.

நமது பாவலர் அவர்களும் மூன்று கோவை நூல்கள் பாடி யுள்ளார்கள். அவை முஸ்லிம் வள்ளலான ஷம்சுத் தாசீன் என்பவ வரைப் பற்றி அமைந்த ஷம்சுத் தாசீன் கோவையும் திருவிதாங்கூரின்

திவானாக அமர்ந்து எண்ணற்ற நன்மைகளை மக்கட்குப் புரிந்த சசிவோத்தமர் சர் சி. பி. ராமசுவாமி அய்யர் மீது பாடிய சசிவோத்தமக் கோவையும், வள்ளல் அழகப்பச் செட்டியார் மீது பரடிய அழகப்பக் கோவையும் ஆகும். இந்த மூன்று நூல்களும் தஞ்சைவாணன் கோவைக்கு எவ்வகையிலும் இளைக்காத வனப்புடன் பாவலர் அவர்களின் அரும்புலமையைக் குன்றின் மேலேற்றிய தீபம் போன்று ஒளி விளங்கச் செய்கின்றன.

பாவலர் அவர்கள் சிறந்த நாவலருமாவர். கேட்பாரைப் பிணிக்கும் வகையில் நயம்படப் பேசும் நாவன்மை படைத்தவர்கள். 'சொல்லின் செல்வர்' என்று அவர்களைக் குறிப்பிடுவது சாலப் பொருந்துவதாகும். அவர்களது உள்ளத்தின் தெளிவால் மொழியும் தெளிவு பெற்றிலங்கியது. பேசும் பொருளைக் காரண காரிய முறைப்படி நிரல்பட வகுத்து இனிமையாகப் பேசும் ஆற்றல் அவர்களிடம் அமைந்திருந்தது. பேசும் பொருளில் அவர்கள் மனம் தோய்ந்து நிற்றலால் அவர்களது மொழியில் அற்புதமான காந்த வேகம் பிறந்து விடுகிறது. தாம் பேசும் பொருள் எவ்வளவு அரியதாக இருப்பினும் அதனைக் கல்லாதவரும் எளிதில் உணர்ந்து மனம் கொள்ளும் வகையில் பக்குவம் செய்து வழங்குவது அவர்களிடம் காணப்பட்ட தனிச் சிறப்பாகும்.

மகாத்மா காந்தி சுதந்திர இயக்கத்தைத் தோற்றுவித்து ஆங்கில அரசாங்கத்தோடு அறப்போர் நிகழ்த்திய காலங்களில் பாவலர் அவர்களும் அவ்வியக்கத்தில் ஈடுபட்டு நாஞ்சில் நாட்டு மக்களை அதில் தூண்டி வந்தார்கள். அக்காலத்தில் அவர்கள் ஆற்றிய மேடைச் சொற்பொழிவுகள் மக்கள் உள்ளத்தில் சுதந்திரக் கனலை எழுப்பி, ஆட்சியாளரின் அடக்கு முறைக்கும் அஞ்சாது நாட்டு விடுதலையின் பொருட்டு அரிய தியாகங்களை புரியுமாறு செய்தன.

பாவலர் அவர்களின் இலக்கியச் சொற்பொழிவுகள் இலக்கிய ரசிகர்களுக்கு இன்சுவை விருந்தாக அமைந்தன. திருக்குறள், கம்ப ராமாயணம், சீறாப் புராணம் முதலிய இலக்கியங்களைக் குறித்து அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகள் அப்பெரு நூல்கள் ஒவ்வொன்றிலும் தம் வாழ்வு முழுவதையும் செலவிட்டு கற்ற பண்டிதர்களையும் வியக்க வைப்பதாக இருக்கும். ஒரு முறை அவர்கள் திருக்குறள் கடவுள் வாழ்த்தின் முதற் செய்யுளான 'அகர முதல வெழுத்தெல்லாம்' என்று தொடங்கும் குறளுக்கு உரையும் விளக்கமும் நயமும் கூறத் தொடங்கி இரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக விரித்துரைத்து அவையோரை மகிழ்ச்சிக் கடலில் திளைப்பித்ததாகக் கேள்வியுற்றிருக்கிறேன்.

"பொய்ம்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்ற குறளுக்கு அவர்கள் கூறும் விரிவுரையைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு ஒரு சமயம் மிக அருமையாக அமைந்தது. ஒரு சொல் பொய்யே யாயினும் அது குற்றமற்ற நன்மையை விளைக்குமாயின் வாய்மையின்பாற் படுவதாக ஆன்றோர்களால் மதிக்கப்படும் என்ற சாதாரணப் பொருளை விரிவாக விளக்கிக் கூறி விட்டுப் பின்னர் நயங் காணத் தொடங்கினார்கள்.

"ஒரு பொய்ம்மைச் சொல் அது பொய்யிலிருந்து பிறந்த காரணத்தால் பிறர்க்கு நன்மை பயத்தல் அரிது. "நன்மை பயக்கும் எனின்" என்ற இடத்தில் அமைந்த உண்மையால் இக்கருத்தை வள்ளுவர் குறிக்கின்றார் ஒருக்கால் அது நன்மை பயப்பதாக இருப்பினும் அது புரைதீர்ந்த நன்மையாக அமைதல் அரிதினும் அரிது. வள்ளுவர் கருத்தின்படி ஒரு பொய்ச் சொல் ஏதேனும் ஒரு சிறு நன்மையை ஒருவனுக்குப் பயந்து விட்டால் அக்காரணத்தால் அது வாய்மைச் சொல் ஆகிவிட மாட்டாது. அந்நன்மை யாவரும் அங்கீகரிக்கும் வகையில் புரைதீர்ந்த நன்மையாய் அமையவேண்டும். ஒருவனுக்கு ஏதேனும் சிறி தளவு நன்மையைத் தருவதாகத் தோன்றும் அப்பொய்ச் சொல் வேறு ஒருவர்க்கோ பலர்க்கோ பெருந்தீங்கை விளைவிப்பதாகவும் இருக்கலாம். இவ்வகைப் பொய்ச் சொல் ஆன்றோர்களால் வாய்மையென அங்கீகரிக்கப்பட மாட்டாது. எத்தகைய சிறிய தீமையையும் எவர்க்கும் எந்நாளும் விளைக்காததாய் ஆனால் பலர்க்கும் பெருநன்மை அளிப்பதாய் ஒருபொய்ம்மைச் சொல் இருக்குமானால் அதுவே வாய்மைச் சொல்போல மதிக்கப்படும் என்பது வள்ளுவர் கருத்தாகும். அத்தகைய புரைதீர்ந்த நன்மை பயக்கும் பொய்மைச் சொல்லையும் வாய்மை என்று கூறிவிடுவதற்கு வள்ளுவரின் அறவுணர்ச்சி நிரம்பிய தூய உள்ளம் ஒப்பவில்லை. புரைதீர்ந்த நன்மையே தரினும் பொய், பொய்தானே? அக்களங்கம் அச்சொல்லில் நீங்காத வடுப்போல அமைந்துதானே இருக்கிறது! எனவே அதற்கு மெய்ம்மை போன்று திகழமுடியுமா? மெய்ம்மைக்குரிய தூய தனி இருக் கையில் அதற்கு இடம் உண்டா? வேண்டுமென்றால் மெய்யின் அருகாமையில் ஓர் இடத்தை அளிக்கலாம். அதுவும் எப் பக்கத்தில்? மேன்மையைச் சுட்டும் வலப்பக்கத்திலா? இல்லை; இல்லை. வலப்பக்கத்தை அளிப்பதற்கு வள்ளுவர் உள்ளம் மறுக்கிறது. எனவே, வாய்மையின் இடப்பக்கத்தில் அதற்கோர் இடம் ஒதுக்குகிறார். புரைதீர்ந்த நன்மை பயக்கின்ற பொய்ம் மைக்குங்கூட வாய்மையின் இருப்பிடத்திலோ, சிறப்புக்குரிய அதன் வலப்பக்கத்திலோ அமர்வதற்குரிய தகுதியில்லை. சிறப்

பில்லாத இடப்பக்கத்தில் இருப்பதற்குள்ள சற்றுத் தாழ்ந்த நிலையே அதற்கு உள்ளது. இக்கருத்துக்களை எல்லாம் ''வாய்மை இடத்த'' என்ற சொற்றொடரில் பொதிந்து வைத்து நுழைபுல முடையார் உய்த்துணரும்படி வள்ளுவர் குறளை அமைத்துள்ளார்.''

மேற்கூறிய கருத்தைப் பாவலர் அவர்கள் தம் கைவந்த விவாதத் திறமையுடன் சொல் நயம் ததும்ப விரித்துரைத்தபோது அங்கிருந்த மக்கள் அனைவரும் கைகொட்டி அவர்களது மேதையை புகழ்ந்துப் போற்றினார்கள்.

பாவலர் அவர்களின் தொண்டால் நாஞ்சில் நாடு தமிழ்வளம் பெற்றுள்ளது. அவர்களிடம் கல்வி கற்றுப் புலமை யெய்தினோர் பலராவர். அவர்களுள் தசாவதானி ஆறுமுகம் பிள்ளை, முதுபெரும் புலவர் சாஸ்தாங்குட்டிப் பிள்ளை, பறக்கை மாணிக்க வாசகம் பிள்ளை, வித்துவான் மாடசாமி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் அனைவரும் பாவலர் அவர்களின் மாணாக்கர் என்று தம்மைக் கூறிக் கொள்வதில் எப்பொழுதுமே பெருமை அடைகின்றனர். இவர்களில் ஆறுமுகம்பிள்ளை தசாவதானம் புரிவதில் வல்லவர்கள். திருவனந்த புரத்தில் நீதிபதி சேஷையர் தலைமையில் அவர்கள் நிகழ்த்திய அவதானத்தைக் கண்டு வியந்து கவிமணி அவர்கள் பாடிய சாற்றுக் கவியைப் பலரும் அறிவர். பாவலர் அவர்களின் சதாவதானச் சிறப்பை நேரில் கண்டுகளிக்கும் பேறு பெறாதவர்கள் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் காட்டிவந்த தசாவதானத்தைக் கண்டிருந்தால் அதனினும் பன்மடங்கு மகத்தான பாவலரின் அருந்திறனை உய்த்துணரக் கூடும்.

திரு. சாஸ்தாங்குட்டிப்பிள்ளை அவர்கள், முதுமையிலும் இளமை முறுக்குடனே ஊக்கமும் உணர்ச்சியும் குன்றாது, தமிழ் மொழிக்குக் காவலராய், தமிழுக்குச் சிறுமை இழைக்கும் அரைகுறைப் புலவர் களையும் ஏனையோரையும் மட்டந்தட்டும் ஒட்டக்கூத்தரே போன்று தமிழுலகில் உலவி வந்தவர். அவர்கள் செய்த தமிழ்த் தொண்டைப் பாராட்டி நன்றியுடைய தமிழுலகம் முதுபெரும் புலவர் என்ற பட்டத்தை அவர்களுக்குச் சூட்டி அதனால் தான் பெருமையுற்றது. இம்முதுபெரும் புலவரின் இலக்கிய வழித்தோன்றல்களாக விளங்கு பவர்கள் வித்துவான் சி. சதாசிவம் பிள்ளை, வித்துவான் எஸ். ஆறுமுகம் எம்.ஏ., பி.டி., வித்துவான் எஸ். உமைதாணு பிள்ளை, வித்துவான் எஸ். சிவனணைந்த பெருமாள் முதலியோர் ஆவர். இவ்வாறு பாவலர் அவர்கள் ஏற்றிய தமிழ் விளக்கு ஒளி குன்றாமல் நாஞ்சில் நாட்டில் தழைத்தோங்கி வருகிறது.

கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி, அல்லாமா செய்குதம்பிப் பாவலர் அவர்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் தமிழ்ச் சந்ததியார்களுக்கு எந்நாளும் பயன்படுதல் வேண்டும். அவற்றை நல்ல முறையிலே மலிவுப் பதிப்பாக வெளிக் கொணரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்.

பாவலர் புகழ் தமிழ் மக்கள் உள்ளத்தில் நிலைத்து வாழ்க!

"செஞ்சொற் புலவன் சிறந்த கவிவலவன்
நஞ்சைப் பதிவந்த நாவலன்—விஞ்சுபுகழ்
செய்குதம்பிப் பாவலன்செய் தீந்தமிழின் தொண்டுக்கு
வையகமென் ஆற்றும் உவந்து"

தன்னிகரற்ற தமிழ்ச் சிங்கம்

கலைமாமணி கவி கா.மு. ஷரீப்

தமிழ்ச் சமுதாயம் முழுமையுமாகப் போற்றக் கூடிய மிகப் பெரிய தமிழறிஞர் அல்லாமா செய்குதம்பிப் பாவலர் அவர்கள். இவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டு தமிழ் உள்ள வரையிலும் நிலையாக நிற்கக் கூடிய ஒன்று. இவர்களை யொத்த தமிழறிஞர் இனியொருவர் தோன்ற முடியாது என்பது மட்டுமல்ல, இவருக்கு முன்னர் ஒருவர் இருந்தாரென்று குறிப்பிடவும் இயலாது. இத்தகைய சிறப்புக்குரிய அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் நாளாவட்டத்தில் மறந்து விட்டதோ என்று ஐயுறும் நிலை இன்றைக்குள்ளது. ஆம்! அவர்களுடைய தொண்டினை அவர் தோன்றிய சமயத்தைச் சார்ந்தவர்கள் சரியானபடி அறிவிக்கவில்லை என்று சொன்னால் இக்கூற்று தவறாகாது.

ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தில் தோன்றிய மேதைகளை - அறிஞர்களை - கவிஞர்களை - கலைஞர்களை - கற்றுணர்ந்த நல்லார்களைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டத் தவறுவதே இல்லை. நான் குறையாகச் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. முஸ்லிம் சமுதாயம் மட்டும் - அதுவும் தமிழ் முஸ்லிம் சமுதாயம் மட்டும் - இதற்கு விலக்காக இருந்து வரக் காணுகிறோம். இக்கால இஸ்லாமிய இளைஞர்கள் இந்நிலை சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்ற நினைவோடு - மாற்றி அமைக்க வேண்டுமென்ற விருப்போடு - இதனை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

தசாவதனம் ஆறுமுகம் பிள்ளை என்றொரு தமிழறிஞர் நாகர் கோவில் பகுதியிலிருந்தார். இவர் செய்குதம்பிப் பாவலர் அவர்

களுடைய மாணவர் என்று தம்மைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைபவர். இந்த வார்த்தை அவர் வாயிலிருந்து வெளிப்படும் போது அவர் தலை கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதைப் பார்த்திருக் கிறேன். இவரை யொத்த எத்தனையோ சாதாரண மனிதர்களைக் கவிஞர்களாகவும் புலவர்களாகவும் தமிழறிஞர்களாகவும் தமிழ் நிலம் கொண்டாடும் மாமனிதர்களாகவும் ஆக்கிப பெருமை அல்லாமா கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்குண்டு.

பாவலர் அவர்களின்பால் நெருங்கி – அடுத்து – அன்போடு வேண்டி தமிழறிவைப் பெற்றுக் கொண்டவர்களின் வரிசையிலே மறைமலை அடிகள், திரு. வி. க. போன்றவர்கள் எல்லாம் இடம் பெறுகிறார்கள்.

பாவலர் அவர்கள், தமிழறிவைப் பெறவேண்டும் என்று தன்னை அடுத்து வருவோருக்குக் கற்பகத் தரு என்று சொல்வார்களே அது போன்று விளங்கியவர்கள். ஆனால் தமிழ்த் தெரியும் என்ற அகந்தையுடன் பாவலர் அவர்கள் முன்பு எவ்வளவு பெரிய தமிழறிஞனும் நின்றுவிட முடியாது. அகந்தை கொண்ட தமிழ்ப் புலவர்களுக்கு அச்சத்தை ஊட்டுகின்ற தன்னிகரற்ற தமிழ்ச் சிங்கமாக பாவலர் அவர்கள் விளங்கி இருக்கிறார்கள். இதனை விளக்குவதற்கு எத்தனையோ... ...சான்றுகள் உள்ளன.

நான் 1949–ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் நடந்த ‘தெற்கு எல்லை மீட்சி’ மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். அதுகாலை கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைச் சந்திக்க அவரது இல்லத்திற்குப் பல தமிழறிஞர்களோடு சென்றிருந்தேன். அவர் களைச் சந்தித்து விட்டுத் திரும்பும்போது பாவலர் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற அவா எனக்கு எல்லை கடந்ததாக இருந்தது. என்னோடிருந்த தமிழறிஞர்கள் அனைவரிடத்தும் என் ஆவலை வெளியிட்டு “வாருங்கள் இப்படியே சென்று பாவலர் ஐயா அவர்களைப் பார்த்து வருவோம்” என்று கூறினேன். போவதற்கு வாகன வசதி இருந்தது; போதிய நேரமும் இருந்தது. ஆனால் என்னோடிருந்த அனைவருக்கும் பாவலரைக் காண்பதில் விருப்ப மில்லை எனத் தெரிந்தது. வரமறுத்து விட்டார்கள். அதற்கான காரணத்தை அப்பொழுது நான் உணர்ந்திருக்கவில்லை. எனவே சாதாரண தமிழுணர்வு படைத்த நான் தன்னந் தனியாக பாவலர் அவர்கள் வீட்டை நாடிச் சென்றேன். அப்பொழுது அவர்கள் இல்லத்தில் இல்லை. அவருடைய மூத்த மகனார் இருந்தார்கள். “அமருங்கள், வந்து விடுவார்கள்” என்று கூறினார்கள். சிறிது நேரத்தில் பாவலர் அவர்களும் வந்து விட்டார்கள். என்னைக் கண்டதும் “யார்?” என்று அன்போடு கேட்டார்கள். அப்பொழுது

தன்னிகரற்ற தமிழ்ச் சிங்கம்

கலைமாமணி கவி கா.மு. ஷரீப்

தமிழ்ச் சமுதாயம் முழுமையுமாகப் போற்றக் கூடிய மிகப் பெரிய தமிழறிஞர் அல்லாமா செய்குதம்பிப் பாவலர் அவர்கள். இவர்கள் ஆற்றிய தமிழ்த் தொண்டு தமிழ் உள்ள வரையிலும் நிலையாக நிற்கக் கூடிய ஒன்று. இவர்களை யொத்த தமிழறிஞர் இனியொருவர் தோன்ற முடியாது என்பது மட்டுமல்ல, இவருக்கு முன்னர் ஒருவர் இருந்தாரென்று குறிப்பிடவும் இயலாது. இத்தகைய சிறப்புக்குரிய அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் நாளாவட்டத்தில் மறந்து விட்டதோ என்று ஐயுறும் நிலை இன்றைக்குள்ளது. ஆம்! அவர்களுடைய தொண்டினை அவர் தோன்றிய சமயத்தைச் சார்ந்தவர்கள் சரியானபடி அறிவிக்கவில்லை என்று சொன்னால் இக்கூற்று தவறாகாது.

ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தில் தோன்றிய மேதைகளை - அறிஞர்களை - கவிஞர்களை - கலைஞர்களை - கற்றுணர்ந்த நல்லார்களைப் போற்றிப் புகழ்ந்து பாராட்டத் தவறுவதே இல்லை. நான் குறையாகச் சொல்வதாக யாரும் கருதக் கூடாது. முஸ்லிம் சமுதாயம் மட்டும் - அதுவும் தமிழ் முஸ்லிம் சமுதாயம் மட்டும் - இதற்கு விலக்காக இருந்து வரக் காணுகிறோம். இக்கால இஸ்லாமிய இளைஞர்கள் இந்நிலை சரிதானா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்ற நினைவோடு - மாற்றி அமைக்க வேண்டுமென்ற விருப்போடு - இதனை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

தசாவதனம் ஆறுமுகம் பிள்ளை என்றொரு தமிழறிஞர் நாகர் கோவில் பகுதியிலிருந்தார். இவர் செய்குதம்பிப் பாவலர் அவர்

களுடைய மாணவர் என்று தம்மைக் கூறிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைபவர். இந்த வார்த்தை அவர் வாயிலிருந்து வெளிப்படும் போது அவர் தலை கம்பீரமாக நிமிர்ந்து நிற்பதைப் பார்த்திருக் கிறேன். இவரை யொத்த எத்தனையோ சாதாரண மனிதர்களைக் கவிஞர்களாகவும் புலவர்களாகவும் தமிழறிஞர்களாகவும் தமிழ் நிலம் கொண்டாடும் மாமனிதர்களாகவும் ஆக்கிய பெருமை அல்லாமா சா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்குண்டு.

பாவலர் அவர்களின்பால் நெருங்கி – அடுத்து – அன்போடு வேண்டி தமிழறிவைப் பெற்றுக் கொண்டவர்களின் வரிசையிலே மறைமலை அடிகள், திரு. வி. க. போன்றவர்கள் எல்லாம் இடம் பெறுகிறார்கள்.

பாவலர் அவர்கள், தமிழறிவைப் பெறவேண்டும் என்று தன்னை அடுத்து வருவோருக்குக் கற்பகத் தரு என்று சொல்வார்களே அது போன்று விளங்கியவர்கள். ஆனால் தமிழ்த் தெரியும் என்ற அகந்தையுடன் பாவலர் அவர்கள் முன்பு எவ்வளவு பெரிய தமிழறிஞனும் நின்றுவிட முடியாது. அகந்தை கொண்ட தமிழ்ப் புலவர்களுக்கு அச்சத்தை ஊட்டுகின்ற தன்னிகரற்ற தமிழ்ச் சிங்கமாக பாவலர் அவர்கள் விளங்கி இருக்கிறார்கள். இதனை விளக்குவதற்கு எத்தனையோ... ...சான்றுகள் உள்ளன.

நான் 1949–ஆம் ஆண்டு கன்னியாகுமரியில் நடந்த 'தெற்கு எல்லை மீட்சி' மாநாட்டுக்குச் சென்றிருந்தேன். அதுகாலை கவி மணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களைச் சந்திக்க அவரது இல்லத்திற்குப் பல தமிழறிஞர்களோடு சென்றிருந்தேன். அவர் களைச் சந்தித்து விட்டுத் திரும்பும்போது பாவலர் அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற அவா எனக்கு எல்லை கடந்ததாக இருந்தது. என்னோடிருந்த தமிழறிஞர்கள் அனைவரிடத்தும் என் ஆவலை வெளியிட்டு "வாருங்கள் இப்படியே சென்று பாவலர் ஐயா அவர்களைப் பார்த்து வருவோம்" என்று கூறினேன். போவதற்கு வாகன வசதி இருந்தது; போதிய நேரமும் இருந்தது. ஆனால் என்னோடிருந்த அனைவருக்கும் பாவலரைக் காண்பதில் விருப்ப மில்லை எனத் தெரிந்தது. வரமறுத்து விட்டார்கள். அதற்கான காரணத்தை அப்பொழுது நான் உணர்ந்திருக்கவில்லை. எனவே சாதாரண தமிழுணர்வு படைத்த நான் தன்னந் தனியாக பாவலர் அவர்கள் வீட்டை நாடிச் சென்றேன். அப்பொழுது அவர்கள் இல்லத்தில் இல்லை. அவருடைய மூத்த மகனார் இருந்தார்கள். "அமருங்கள், வந்து விடுவார்கள்" என்று கூறினார்கள். சிறிது நேரத்தில் பாவலர் அவர்களும் வந்து விட்டார்கள். என்னைக் கண்டதும் "யார்?" என்று அன்போடு கேட்டார்கள். அப்பொழுது

நான் திருவாரூரிலிருந்து வந்ததால் திருவாரூர் ஷெரீப் என்று சொன்னேன். "ஓ....நேற்று மாநாட்டில் பேசியதாகச் சொன்னார்களே, அது நீ தானா?" என்று கேட்டார்கள். அந்த "நீ தானா?" என்பதிலுள்ள அழுத்தம் என்னை நடுக்குறச் செய்து விட்டது. நண்பர்கள் வரமறுத்த காரணம் இப்போது புரிந்தது. தமிழ்த் தெரியும் என்ற அகந்தை உடையவர்கள் பாவலர் அவர்கள் முன்பு சென்று நிற்க முடியாது என்று.

"நேற்றைய உன் பேச்சைக் கேட்டுவர ஆளனுப்பி இருந்தேன்" என்றார்கள்.

"எதற்காக" என்றேன் தயங்கியபடி.

"இங்கே வாழுகின்ற முஸ்லிம்கள் தமிழில் சிறப்பான ஆற்றல் உடையவர்கள் என்று பேர் இருக்கிறது. எங்கே அதை நீ வந்து கெடுத்துவிடப் போகிறாயோ என்பதனைத் தெரிந்து வர அனுப்பி னேன்" என்று சொன்னார்கள்.

'வந்தவர்கள் என்ன சொன்னார்கள்?' என்று கேட்டேன்.

'பரவாயில்லை; சுமாராகப் பேசுகிறாய் எனச் சொன்னார்கள்' என்று கூறினார்கள்.

தன்னிகரற்ற தமிழ்க் கடலாகிய அவர்கள் வாயால் 'சுமாராகப் பேசுகிறேன்' என்ற சொல்லைக் கேட்டபோது குடத் தேனைக் குடித்து விட்டது போன்றிருந்தது எனக்கு. அவர்களுடைய ஆசியைப் பெற்று விட்டதாகக் கருதினேன்.

நான் நின்று கொண்டே பேசிக் கொண்டிருந்தேன். 'அருகில் கிடந்த நாற்காலியில் அமருமாறு கூறினார்கள். பல விஷயங்கள் கேட்டார்கள். நான் அச்சத்துடன் பதில் கூறிக் கொண்டிருந்தேன். பிறகு எங்கள் பேச்சு பாவலர் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிதிக்குழு பற்றிச் சென்றது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களுக்கும் பாரதிதாசனுக்கும் பெருநிதி அளிக்கப் பட்டிருந்த காலம் அது. எனவே இந்த நிதியளிப்பு அவ்விரு நிதி அளிப்பை விடவும் சிறப்பாக இருக்க வேண்டுமென்று என் மனத்தில் தோன்றியது. இதை நான் அவர்களிடம் சூசகமாகக் குறிப்பிட்டேன். அதற்கு அவர்கள் சொன்ன பதில், "எனக்கு நிதிதர ஏற்பாடு செய்யப் பட்டு வருகிறது என்ற செய்தியைக்கூட இன்றைய பத்திரிகைகள் சரியாக வெளியிடவில்லையே" என்பதாக இருந்தது.

"உங்களுடைய மேதா விலாசத்தை - தமிழாற்றலை - அறிவை - தமிழ்த் தொண்டை - இன்றைய பத்திரிகைக்காரர்கள் சரியாக அறிந் திருக்க நியாயமில்லை. அதை நிதிக் குழுவினர் செய்திருக்கலாம். ஏனோ, செய்யவில்லை" என்றேன்.

"எப்படி ?" — என்று கேட்டார்கள்.

"நிதிக் குழுவினர் தங்களை சென்னைக்கு அழைத்து அங்குள்ள பத்திரிகைக் காரர்களை எல்லாம் வரவழைத்து உங்களை நன்கறிந்த மறைமலை அடிகள், திரு, வி.க. போன்றவர்களைக் கொண்டு அவர்கள் முன்பு உங்கள் சேவையை எடுத்துரைக்கச் செய்திருந்தால் உங்களை இந்தத் தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வாய்ப்பினைப் பத்திரிகைக்காரர்கள் செய்திருப்பார்கள். அதன் மூலமாக முஸ்லிம் கள் மட்டுமின்றி தமிழ்ச் சமுதாயமே திரண்டு உங்களுக்கு நிதி யளிப்புச் செய்து சிறப்பிப்பது என்ற பேற்றினைப் பெற்றிருக்கக் கூடும்" என்றுரைத்தேன்.

"நீ சரியாகத் தானே கூறுகிறாய்; நிதிக் குழுவினரிடம் இந்த ஆலோசனையைக் கூறேன்" என்றார்கள். அப்பொழுது நான் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். விடை பெற்று சேலம் வந்த பிறகு அந்த நிதிக்குழுவின் செயலாள ரான காலஞ்சென்ற ஆர்.பி.எம் கனி அவர்களுடன் தொடர்பு கொண்டேன். கடிதத் தொடர்பு நிறைவு பெற்று ஒரு முடிவுக்கு வருமுன் அல்லாமா அவர்கள் காலமாகி விட்டார்கள். அந்த நிதிக் குழுவின் பணியும் அத்துடன் நின்றுவிட்டது.

என்னுடைய கருத்து, பாவலர் அவர்கள் காலமாகிவிட்ட பின்னரும் அந்த நிதிக் குழு செயல்பட்டு அவர்களுக்கென ஒரு நினைவுச் சின்னத்தை ஏற்படுத்தி இருக்கலாம் என்பதே ஆகும். பாவலர் அவர்களின் பேரரான செய்குதம்பி அவர்களின் தூண்டு தலின் பேரில் இன்றைய தமிழக அரசு பாவலர் அவர்களின் ஊராகிய கோட்டாற்றில் அவர்களுக்கென ஒரு நினைவு மண்டபமும் நூல் நிலையமும் ஏற்படுத்துகிறது என்பதை அறியும்போது மன நிறைவு ஏற்படுகிறது.

பாவலர் அவர்களை மட்டுமின்றி முஸ்லிம் சமுதாயத்தில் தோன்றிய எந்தப் பெரிய அறிஞர்களையும் கவிஞர்களையும் புலவர் களையும் மார்க்க மேதைகளையும்கூட அவர்கள் வாழ்கிற காலத்தில் மட்டுமின்றி அவர்கள் வாழ்ந்து முடிந்த பின்னரும்கூட அவர்களை நினைவு கூர்ந்து மதித்துப் போற்றுகின்ற பண்பு தமிழ் முஸ்லிம் சமுதாயத்திடம் இல்லை என்பதை எண்ணும்போது வருந்தத்தான் வேண்டி உள்ளது.

புகழ்மிக்க பெரும்புலவர்–சொல்லாற்றல் மிக்கவர் - தமிழ் வல்லார் - ஆம்! தமிழில் தன்னிகரற்ற வல்லார் தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் அல்லாமா செய்குதம்பிப் பாவலர் அவர்களை நினைக்கும் போது அவர்கள் இதர சமுதாயத்தில் பிறந்திருந்தால் ... ... என்ற எண்ணத்தோடுதான் நிறைவு செய்ய வேண்டியிருக்கிறது. வல்ல இறைவன் அருள் பாலிப்பானாக. ★

அறம் பாடிய பாவலர்

பேராசிரியை சுசீலா பாண்டியன், M.A.,

தமிழ் இலக்கியப் பரப்பிலே 'அறம்' என்ற ஒரு சொல், இரு பொருள் காட்டிநிற்பதை நாமறிவோம்.

தகாதவை எனப் பொருள்படும் 'மறம்' என்ற சொல்லுக்கு நேரெதிரிடையான நல்லவை – தக்கவை – எனப் பொருள்படும் அறம் என்பது ஒன்று. 'அறம் செய விரும்பு' என்ற ஆத்திச்சூடி தொடர் இதையே உணர்த்துகிறது.

பெரும் புலவர்களின் கோபக் கனலை மூட்டி அவர்கள்தம் சினம் காரணமாக அவர்களை நொந்து - வெந்து – பாடச் செய்து – சாபம்பெற்று – அதற்கு பலியான பலரது சோக வரலாறுகளை நாம் இலக்கியங்களில் சந்திக்க முடிகிறது. இத்தகைய பாடல்களே அறம் என்ற வகையைச் சார்ந்தவை.

முன்னைய அறத்திற்கும் பின்னைய அறத்திற்கும் இடையே தான் எத்தனை வேறுபாடு ?

யாருக்கு வேண்டுமானாலும் கோபம் வரலாம்; இந்தப் புலவர் களுக்கு மட்டும் அது வந்துவிடக் கூடாது. அறம் பாடியே அழித்து விடுவார்கள். கூறியது பலிக்கும் அளவுக்கு அவர்களுக்கோர் சக்தி! இந்த சக்தி கொடுமையானதே என்றாலும் அதுவே புலமைக்குக் கிடைத்த பெருமை.

பண்டைப் புலவர் சிலர் அறம் பாடுமளவுக்கு ஆற்றல் பெற்றி ருந்தனர். துளிர்த்துப் பூத்துக் காய்த்து கனிந்து கொம்பும் கிளை யுமாக நின்ற மரத்தைப் பார்த்து பாடி முடித்த கவி காளமேகத்தின் வாய் மூடிய மாத்திரத்திலே அது பட்டொழிந்து போனதாகக் கூறப் படும் சம்பவம் மிகப் பிரபலமானது.

இருகண் குருடி ஒருத்திக்குத் தமது வல்லமை காரணமாக இறை யருள் வேண்டிப் பாடிக் கண்பெற்றுக் கொடுத்த சிவகவி, மீண்டுமொரு முறை அவளைக் காண வந்தபோது செருக்குக் காரணமாகக் கதவைத் திறக்காமல் இருந்தாள் என்றும் அதனால் சினமுற்ற சிவகவி, 'பழைய குருடி கதவைத் திறடி" எனக் கூறிய உடனேயே அவளது கண்கள் மீண்டும் ஒளியிழந்து போனதாகவும் கதையொன்று உண்டு.

இவை போன்று எத்தனையோ நாம் கேள்விப்பட்டதுண்டு; படித்ததுமுண்டு.

ஆனால்,

நாம் வாழும் இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்து மறைந்த சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களும் அறம் பாடி யுள்ளார் என்பதை எத்தனைபேர் அறிவர்?

தமிழறியத் துடித்த தம் கால இளைஞர்களுக்கெல்லாம் எத்தகைய பிரதி பலனையும் எதிர்பாராமல் இரவும் பகலும் அன்பும் பண்பும் மீக்கூரப் பயிற்றுவித்த அந்தப் பாவலர் அவர்களின் இளகிய மனம் கூட அறம்பாடத் துணிந்தது என்பதை அறியும்போது யார்தான் வியக்காமல் இருக்க முடியும்? அதுவும் ஒன்றிரண்டல்ல, பல்வேறு சந்தர்ப்பங்களில் பாவலர் அவர்கள் அந்த நிலைக்கு ஆளாகி யுள்ளார்கள் என்பதைத் தெரிய வரும்போது அந்த வியப்பு இரட் டிப்பாகி வேதனையாகவும் படுகின்றதல்லவா?

உள்ளம் வெந்து போகுமளவுக்கு வேதனைக்குள்ளாக்கியோர் மீது சினமுண்டாவது மனித இயற்கை. இதில் யாருமே விதி விலக் கல்ல. அந்த இயற்கையின் வயப்பட்டு உணர்ச்சி மேலீட்டால் உள்ளம் நோகப் பாவலர் அவர்களும் தங்களை நோவினைக்கு ஆளாக்கினோரை நொந்து நோக்கினார்கள். அந்த அவர்களின் நோக்கு, ஆண்டவனின் அருள் நோக்கில்பட்டு ஆன்றவிந் தடங்கிய சான்றோராம் பாவலர் அவர்களுக்குத் தீவினை நினைத்தோரை – செய்தோரை – தீயெனச் சுட்டது; எரித்தது; பொசுக்கியது. சூடு தாங்கமாட்டாமல் துவண்டனர்; தவித்தனர்; செத்தனர்.

பா, நூலாகிறது இலக்கியத்தில். நூல், பாவாகிறது நெசவில். இரண்டிலுமே சீருண்டு; அசையுண்டு; தளையுமுண்டு. "செய்யும் தொழில் அத்தனையிலும் நெய்யத் தொழிலுக்கு நிகரில்லை" என்பர். அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களில் பலர் பெரும் கவிஞர்களாக, பேரிலக்கியங்கள் சமைத்த வித்தகர்களாக, பாவாணர்களாக, பாவலர் களாகத் திகழ இந்த ஒற்றுமைதான் காரணமோ?

பொய்யா மொழியார் எனப் புகழ் பெற்ற திருவள்ளுவரும் கம்ப நாடனும் மற்றும் புலவர் பலரும் நெசவுத் தொழில் செய்தவர் களாகவோ அல்லது அதைத் தொழிலாகக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர்களாகவோ கூறப்படுகின்றனர். அவர்களைப் போன்றே நம் பாவலர் அவர்களும் நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருந்த பெற் றோருக்குப் பிறந்தவர்.

பாவலர் அவர்களின் இளம் பருவத்தில் ஓர் பகுதி சென்னையில் கழிந்தது. பதிப்பாசிரியராகவும் பத்திரிக்கை ஆசிரியராகவும் விளங்கிய அந்தக் காலத்தில்தான் வியத்தகு அவதானத்தை வித்தகர்கள் மத்தியில் செய்துகாட்டி சதாவதானி என்ற சிறப்புக்கு ஆளா னார்கள். திருமணம் செய்து கொண்ட பின்னர் தங்களின் சொந்த ஊரான கோட்டாற்றிலேயே தங்கி தொழில் செய்யலானார்கள். குடும்பத்தொழிலை ஒட்டிய நூல் வியாபாரத்தில் ஈடுபட்ட அவர்கள் அந்தக் காலங்களிலேயே நூல்பல எழுதும் வாய்ப்பினையும் பெற் றார்கள்.

நூல் எழுதுவதில் அவர்களுக்கு இருந்த நுணுக்கங்கள் நூல் வியாபாரத்திலும்கூடப் பெருமளவில் இருக்கவே செய்தன. தங்கள் வாணாளின் கடைசி நிமிடம் வரையிலும் அவர்கள் நூல் வியாபாரி யாகவே விளங்கினார்கள். தறிகளுக்கு மாத்திரமே அவர்கள் நூல் தந்தார்கள் என்றில்லை. அவர்கள் வாழ்ந்த பகுதியிலேயே இல்லாத நூலால் செய்யப்படும் ஒரு தொழிலையும் அவர்கள் மேற்கொண் டார்கள். தையல் மற்றும் பின்னலுக்கான உருண்டை மற்றும் கட்டை நூல் செய்யும் இயந்திரங்களைத் தருவித்து அந்தத் தொழிலை உருவாக்கினார்கள்.

நூல் வியாபாரத்தில் கட்டுப்பாடுகள் மிகுந்திருந்த காலம் அது. நாஞ்சில் நாட்டில், இந்திய சுதந்திரத்திற்காகத் துணிந்து போராடிக் கொண்டிருந்தவர்களில் முதன்மையாக விளங்கிய பாவலர் அவர்களை அன்னிய ஆட்சி வெகுவாகக் கண்காணித்துக் கொண்டிருந்த வேளையும்கூட.

வியாபாரம் என்றால் எத்தனையோ நெளிவு சுளிவுகள்! கணக்கில் வருபவை; வரக்கூடாதவை. கண்ணில் எண்ணெய் விட்டுக் கொண்டே இருந்தாக வேண்டும். அவர்கள் செய்து கொண்டிருந்த உருண்டை நூல் வியாபாரத்திற்கென தனியாக நூல் கேட்டும் அன்றைய அரசு தர மறுத்து விட்டது. என்றாலும் அவர்கள் எப்படி எப்படியோ அந்தத் தொழிலையும் செய்துகொண்டுதான் வந்தார்கள். சுருங்கக் கூறுவதானால் கணக்கில்லாத வியாபாரம்.

கோட்டாற்றை யடுத்த வடசேரியில் பிரபலமாக வியாபாரம் செய்து வந்த ஒருவர் பாவலர் அவர்கள் தயார் செய்யும் நூல் அத்தனையையும்

மொத்தமாக வாங்கி சில்லரை வியாபாரிகளுக்கு விற்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்தார். இருதரப்பிலுமே கணக்கில்லாத வியாபாரம். ஒருவரால் மற்றவருக்கு இலாபம். கொடுக்கலும் வாங்கலுமாக இருவருமே மிக நெருக்கமாக இருந்தனர்.

நம்பிக்கைக்கு உரியவராக நீண்ட காலம் நடந்து கொண்ட அந்த வியாபாரி பாவலர் அவர்களுக்குப் பெருந்தொகை யொன்று தர வேண்டிய அளவுக்கு ஆளாகி விட்டார். என்ன காரணமோ அவரது நாணயம் திடீரென தேயத் துவங்கியது. பணம் கேட்டுப் போகும் போதெல்லாம் 'நாளை வா; மறுநாள் வா' எனக் காலம் கடத்த ஆரம்பித்தார். பணம் வந்துவிடும் என்று பாவலர் அவர்களும் ஓரிரு மாதங்கள் பொறுத்திருந்தார்கள்.

அன்றொரு நாள் !

என்னதான் தொழில் செய்தாலும்—எத்தனைதான் வருவாய் இருந்தாலும்—பாவலர் அவர்களின் வீட்டில் தேவை அதிகமாக இருந்தது. 'வறுமை இல்லாத புலமையில் உண்மையோ பெருமையோ இல்லை' என்பது பாவலர் அவர்கள் விஷயத்திலும் பொய்க்க வில்லை.

வீட்டில் மணி அரிசிகூட இல்லை. விஷயத்தை எத்தி வைத்து விட்டார்கள், வீட்டம்மா. வாங்கலாம் என்றாலோ கையில் காசில்லை. மாசில்லாத உள்ளத்தவரான பாவலர் அவர்கள் குறிப்புக் காட்டி இருந்தால் போதும், மூட்டை மூட்டையாகக் கொண்டு வந்து கொட்ட வல்ல வசதி படைத்த எத்தனையோ 'மூத்தபிள்ளை"கள் எனப்படும் நாஞ்சில் நாட்டுப் பண்ணையார்கள் பலர் அப்போதும் அவர்களிடம் பாடம் கேட்டுக் கொண்டிருந்தனர். கேட்பதற்குக் கூச்சம். கல்விக்கு விலை கேட்கத் துணிவில்லை.

பணம் தரவேண்டியிருந்த வியாபாரியிடம் ஓரளவாவது வாங்கி வரும்படி தங்களின் பேரரை அனுப்புகிறார்கள். ஏறத்தாழ இரண்டு மைல் தூரமுள்ள அந்த வியாபாரியின் கடைக்குக் கொளுத்தும் வெயிலில் சென்ற வேகத்திலேயே பேரர் திரும்பி வந்து விட்டார். வெயிலின் கொடுமை அந்தப் பிஞ்சின் முகத்திலே வியர்வையாக வழிந்து கொண்டிருந்தது. கன்னிக் கருத்த முகத்தோடு வீட்டுக்கு வந்த சிறுவர் பசி மயக்கமும் சேர சோர்ந்து உட்கார்ந்து விட்டார். எதுவுமே பேசவில்லை. பேரன் என முறை சொல்லப் பிறந்த வீட்டின் முதல் பேரன் - தம் மடியிலே கிடத்தி தம் பெயரையே வைத்த தலைப் பேரன் – வாட்டங் கண்டு தடுமாறி விட்ட பாவலர் அவர்கள் நடந்ததை அறியத் துடித்தார்கள். சற்றே இளைப்பாறிய பேரர், "சடசட" வென விஷயத்தைக் கூறினார்.

''ஊதிப் பெருத்த அந்தக் கடைக்காரர் தமது 'கல்லா'வில் மல்லாந்து படுத்தபடி தான் எதுவும் வாங்கவில்லை; யாருக்கும் கொடுக்கவேண்டியதுமில்லை எனக் கூறிவிட்டார்.''

வீட்டின் நிலைமை, வெயிலென்றும் பாராமல் நான்கு மைல்கள் வியர்க்க விறுவிறுக்க நடந்து விட்டு வந்துள்ள பேரரின் கன்னிக் கருத்துவிட்ட முகம், எல்லாவற்றுக்கும் மேலாகத் தன்னையே நாணயக் குறைவாக மதித்துத் தர வேண்டாததைக் கேட்பதுபோல் கூறி யனுப்பிவிட்ட வியாபாரியின் நாணயமற்ற திமிர் எல்லாமே பாவலர் அவர்களை வருத்தியது.

"அப்படியா சொன்னான் ?''

"அப்படித்தான் சொன்னார் ''

"அப்படியா சொன்னான் ?''

"அப்படித்தான் சொன்னார் ''

"அப்படியா சொன்னான் ?''

"அப்படித்தான் சொன்னார் ''

மூன்று முறை ஒரே கேள்வியைக் கேட்ட பாவலர் அவர்களுக்கு அதே பதிலையே மீண்டும் மீண்டும் கூறினார், பேரர்.

அந்த பதில்களிலே அணுப்பிரமாணம் மாற்றமோ அல்லது அந்தக் குரலிலே எங்கேனும் தொய்வோ தென்பட்டிருந்தால் ஒரு வேளை அவர்கள் சமாதானப்பட்டிருப்பார்களோ, என்னவோ ?

'தாளும் பேனாவும் எடுத்து வா' என்றார்கள், பேரரிடம். கோபம் அவர்கள் கண்களில் சிவப்பேற்றியது. ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகிறது என்பதைக் காட்டும் அபாய விளக்காக அதுபட்டது. முன்னெப்போதும் பார்த்திராத நிலையில் பாட்டனார் அவர்களைப் பார்த்து விட்ட பேரருக்கு ஒரே நடுக்கம். அந்த அளவுக்குப் பாவலர் அவர்களின் கண்களில் ஒரு 'ஜ்வாலை' வீசியது.

தாளோடு வந்து பாட்டனாரின் தாளடியில் அமர்ந்தார், பேரர். பாவலர் அவர்களின் கடைசி காலங்களில் அவர்கள் கூறுவதை எழுது கின்ற பெரும் பேறு பெற்றவர் அந்தப் பேரர்.

அனல் கக்கும் விழிகளோடு கனல் தெறிக்கக் கவிதை ஒன்றைக் கூறினார், பாவலர் அவர்கள். அது அறம் வகையைச் சார்ந்த வெண் பாவாக அமைந்தது.

சுருட்டுக்காக வைத்திருந்த சில்லரைக் காசுகளில் ஒன்றே கால் சக்கரத்தை (கோட்டாறு, முன்னாளில் கேரளாவைச் சார்ந்தது. திருவிதாங்கூர் சமஸ்தான நாணயங்களில் சக்கரமும் ஒன்று. ரூபாய்க்கு இருபத்தெட்டு சக்கரம்) கொடுத்து 'அஞ்சல் கூடு' வாங்கி

வருமாறு கூறினார்கள், அந்தக் கூட்டினுள்ளே கவிதை எழுதியிருந்த தாளை வைத்து அந்த வியாபாரியின் முகவரி எழுதி, அஞ்சலில் சேர்த்துவிடப் பணித்தார்கள். அவர்களைப் பொறுத்த வரையில் பிரச்சினை அத்தோடு முடிந்து விட்டது. பாவலர் அவர்கள் காலமாகி விட்டார்கள்.

பாவலர் அவர்கள் காலமாகிவிட்ட நான்கு ஆண்டுகட்குப் பின்னர், தனது தமிழ்ப் பேராசிரியர் அவர்களிடம் இலக்கியம் காணாத இந்த வெண்பாவையும் அது பிறந்த சம்பவத்தையும் கூறினார் பேரர். அந்தக் கல்லூரிப் பேராசிரியருக்கு ஒரே வியப்பு! அவர் கூறிய தகவல்களைக் கேட்ட பாவலர் அவர்களின் பேரர் உடம்பெல்லாம் சிலிர்க்க, உள்ளம் பதைக்கக் கல்லாய்ச் சமைந்து விட்டார்.

பேராசிரியர் அவர்கள் கூறியதெல்லாம், "அந்த வியாபாரி எங்கள் ஊரைச் சார்ந்தவர்தான். கோட்டை போன்று வீட்டைக் கட்டினார். கட்டி முடித்த சில நாட்களிலேயே யாருக்கும் கூறாமல் எங்கோ போய் விட்டார். எங்கு போனார், என்ன ஆனார் என்பது இதுவரை தெரியவில்லை. அவரது பிள்ளைகளை ஒருவர் பின் ஒருவராகச் சாவு காவு கொண்டு விட்டது. அவர் பெயர் சொல்ல குடும்பத்தில் யாருமே இல்லாத அளவுக்குப் பூண்டோடு அழிந்து விட்டது அந்தக் குடும்பம். கட்டிய வீடு பாழடைந்து கிடக்கிறது" என்பதே.

பேராசிரியர் அவர்களின் வார்த்தைகளில் பளிச்சிட்ட பரிதாப உணர்வு சகஜமானது.

செல்லாத வழக்கைச் செலுத்தத் துணிந்தவரை அல்லாஹ் — ஆண்டவன் — விடவில்லை. யாருக்குமே சொல்லாமல் போய்விட்ட அந்த வியாபாரியின் வாழ்வு, போக்கற்று, சந்ததியினர் ஒருவர் பின்னொருவராகத் தவிக்கத் தவிக்கச் செத்து விழுந்து விட்டனர்.

நொந்து பட்ட பாவலர் அவர்களின் உள்ளத்தில் பிறப்பெடுத்த அந்த வெண்பாவை இப்போது படியுங்கள் :

"செல்லா வழக்கைச் செலுத்தத் துணிந்தோனை
அல்லாஹ் விடுவானோ அம்புவியீர்—சொல்லாமல்
போமே அவன் வாழ்வு போக்கற்றோன் தன்கிளையும்
சாமே விழுமே தவித்து"

நாணயமற்றவர்களை, நம்பிக்கை துரோகிகளை, ஏமாற்றுக்காரர்களை, எத்தி அலைபவர்களை ஆண்டவன் தன் கோபப் பார்வையிலிருந்து தப்பி விடுமளவுக்கு விடமாட்டான்; விடவே மாட்டான்.

'அறம், கூற்றாவது' என்ற தொடர் நினைவுக்கு வருகின்றதல்லவா ?

★

ஐந்தின் வகைதெரியும் அறிவின் திருவரு

டாக்டர். சி. சுப்பிரமணியன், M.A.B.O.L.Ph.D.

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்பது வள்ளுவர் வாய்மொழி. அஃதாவது, ஐம்பூதங்களாலாய உலகு, ஐம்பொறியா லறிய வல்ல ஐம்புல நுண்மை யுடையாரது அறிவின் கண்ணது என்பது.

உலகு குறித்த உணர்வு ஐம்பொறி உணர்வினைப் பொறுத்தது. உலக வாழ்வின் உயர்வு ஐம்புல உணர்வின் ஆற்றல் குறித்தது. இத்தகைய உணர்வினையும் ஆற்றலினையும் உடைய அறிஞரே உலகில் உயர்ந்தாராகக் கருதப்படுகின்றனர். உலகில் உயர்வுக் குரிய, குறிப்பிடப்பட்ட அறிவு, இயல்பில் கருவில் பெறும் இயற்கை அறிவு, செயலில் முயல்வில் பெறும் செயற்கை அறிவு என இரு வகைப்படும். சிலர் செயற்கையறிவு மிகக் கொண்டு சிறப்புறுவர். சிலர் இயற்கையறிவு மிகக் கொண்டு ஏற்றமுறுவர். சிலர் இரண்டும் மிகக் கொண்டு ஈடேறுவர். உண்மையான உயர்ச்சிக்கு அடிப்படை யாகிய இயற்கையறிவு இன்றியமையாது வேண்டப்படுவது. இவ் வாறான இயற்கையறிவுடையாரைக் கருவிலே திருப்பெற்ற செல்வர் என்கின்றோம். இவ்வகையில் திருப்பெற்ற செல்வர் ஒரு சிலருள் அரிய ஒருவரே நம் பாவலர் அவர்கள்.

அவர் ஐந்தில் அறிஞர்; அஃதாவது ஐந்து வயதிலேயே அறிஞர். ஐந்து வருப்புக்களையே கற்றும் அறிஞர்; ஐந்திலக்கணத்தில் அறிஞர்; ஐந்து புலத்தறிவோடு ஆறிலும் பேரறிஞர்; நூறிலும் (அவதானத்தில்) தனியறிஞர். இவரது ஐந்து வயதுப் பருவத்தில் தம்மையொப்பாரினும் தனியறிவோடு ஏற்றம் பெற்றார். 'திருக்குரான்' முதலிய மெய்யறிவு நூற்களை அப்பருவத்திலேயே கேட்கப் பெற்றார். இனி இவர் பள்ளியில் கற்றதும் ஐந்து வகுப்புக்களே. அதுவும்

ஒவ்வோர் வகுப்பிலும் சிற்சில திங்கள் கற்றலே போதும் எனத் தேற்றங்கொடுக்கப் பட்டாராதலால் பின் தனியொரு ஆசிரியரை யடைந்து சில காலம் ஐந்திலக்கணம் முதலியன கற்றார். ஆயின் கற்றார் பலரும் கடல் நடுவே கட்டு மரமாக, இவர் மட்டும் அன்னோரை யெல்லாம் தன் வசப்படுத்தும் கலங்கரை விளக்கமாக விளங்கினார்.

இனி, இவர் ஐந்து புலத்தறிவில் நுண்மையோடு ஆறிலும் தனி வன்மை பெற்றார் என்பதனை இவர் செய்த அவதானத்தால் அறியலாகும். இவ்வகையான அவரது வாழ்வின் உயர்ச்சியில் எல்லாம் தன் முயற்சியே பேரடிக் கல்லாக இருக்கும். எனவே 'இவர் உழைப்பால் உயர்ந்த ஒருவர்; நினைப்பால் நிறைந்த நிறைகுடம் என்று பலரும் பாராட்டும் பான்மையில் அமைந்தது பாவலர் வாழ்வு. அச்சுப் பிழை திருத்தும் நிலையில் அமைந்தும் அறிவடையும் அவாவுடன் வந்த நூலை எல்லாம் தாமே கற்றுத் தம் கலையை வளர்த்தார். சிறு வயதிலேயே யாரும் துணையின்றிச் சிறந்த சீறாப் புராணத்திற்கு உரையெழுதும் சிறப்பினையும் பெற்றார்.

ஓர் நாள் முன் பயிற்சியில்லாது முதன் முறையாக ஒருவர் இவரிடம் கண்டப் பத்திரிகையிட்டுச் சோதனை செய்யவே பிறர் வியக்குமாறு தனி நின்று விடையிறுத்தார். அன்று தொட்டு அவதானப் பயிற்சியும் தன் முயற்சியாலேயே பிறர் துணையின்றி நடந்து வந்தது. முதலில் நாகர்கோவிலில் சோடசாவதானம் நன் முறையில் நடந்து வெற்றிபெறவே, சென்னையிலும் அதை நடத்த முற்பட்டுப் பலர் வேண்டுகோளால் அத்தகைய பதினாறு அவதானம் செய்ய உடன்பட்ட காலத்தில் அன்பர் பலர் வற்புறுத்தப் பதினாறு அவதானம் திடீரென நூறவதானம் என ஆக்கப்பட்டது. முன் முயற்சியின்றித் தன் முயற்சியிலேயே இத்தகைய நூறும் விடை யளித்து, நாடும் வியக்குமாறு ஆறும் வல்லவரானார்.

நாவின் நலமறிய வேண்டி சுவையில் சிறிது வேற்றுமையுடைய பல்வேறு கிணற்று நீர் கொணரப்பட்டு இன்னின்ன கிணற்று நீரென பெயர்களும் அறிவிக்கப்படுகின்றன. பின் பல வகை சிக்கலுக் கிடையே அவ்வவ்வகைக் கிணற்று நீர் பல வகையில் மாற்றிக் கொணரப் பட்டும் பாவலரால் சுவையறியப்பட்டு இன்ன கிணற்று நீர் இதுவெனக் குறிப்பிடப்படுகின்றது. இவ்வாறு நாவின் வகை தெரியும் ஆற்றல் நன்கு உணரப்பட்டது.

பின் அவர் உற்றறியும் உணர்வின் ஆற்றலை உணர்ந்தறிய புறப்பட்டுப் புறமுதுகில் சில கற்களையும் நெற்களையும் கணக் கின்றிக் குழம்புமாறு இடைவிட்டுப் பல்கால் எறிந்து கொண்டே இருந்தனர். இறுதியில் கல், நெல் எத்தனை எறியப்பட்டன என அவற்றைக் காணாதே தன் உற்றறியும் உணர்வால் பிறர் உளங்

கொளக் கூறி முடித்தார். இவ்வாறு அவரது உற்றறியும் உணர்வின் உயர்ச்சி உணர்ந்தறியப்பட்டது.

பின் அவர் செவியுணர்வின் செம்மையைச் சிறக்க அறிய எண்ணிச் சிறிதளவே நிறையில், ஒலியில் வேற்றுமையுடைய பல்வேறு செம்பு முதலிய கலன்கள் கொண்டுவரப்பட்டு ஒலித்துக் காட்டப்பட்டன. பின் பல சிக்கலுக்கிடையே ஒவ்வோர் கலனும் மறைவில் வைத்து ஒலி செய்து காட்டப்பட்டபோது இன்ன எடையுடைய இன்ன கலன் என்று ஒலி நுட்பத்தால் அவரால் கூறப்பட்டது. இவ்வாறு அவரது செவியுணர்வின் செம்மை காணப்பட்டது.

இடையிடையே அவரது மனவாற்றலை யறிவதற்குப் பற்பல வினாக்கள் பற்பல வகையில் வினாவப்பட்டன. இலக்கிய வினாக்கள் பல; இலக்கண வினாக்கள் பல; சோதிட வினாக்கள் பல; கணித வினாக்கள் பல. யாவற்றிற்கும் தயங்காது விடையளித்தார் நம் பாவலர். இவ்வாற்றால் அவரது மனவாற்றலின் மாண்பும் கணித் தறியப்பட்டது.

இத்தகைய ஐம்புலத்தால் மனத்தாலமைந்த நுண்மையும் வன்மையும் இயல்பாக மாந்தர்க்கு அமைவனவல்ல. இயற்கையாக மனிதர் ஓர் உணவில் உப்புக் கூடுதலா குறைவா என்று சரியாகக் கூறவியலார். நேற்றுள்ள உணவின் வகைகளை இன்னவின்ன என்று கூறவியலார். ஆயின் நம் பாவலர் ஐந்தறிவோடு ஆறாவ தனையும் யாவரினும் மேம்பாடாக, யாவரும் வியக்குமாறு பெற்று ஐந்தையும் நுட்பமாக வகை தெரியும் ஆற்றல் பெற்றிருந்தார் ஆதலின் ஐந்தின்வகை தெரியும் அறிவின் திருவுருவாயினார். இது வரையும் கூறிய யாவும் அவரது இயற்கை யறிவின், தன் முயற்சியின் மேம்பாட்டையே காட்டுகின்றன.

இத்தகைய பெரியாரது இலக்கண அறிவே தனி வகை உடையது. நாஞ்சில் நாட்டில் இவர் போல் இலக்கண நுட்பமுடையாரும் இல்லை; இவர்போல் சொற்பொழிவாற்றுவாரும் இல்லை. இவர் போல் குறள், இராமாயணம், சீறாப்புராணம் முதலியவற்றிற்கு உரை கூறுவாரும் இல்லை. இன்னோரன்ன யாவும் இவரது இயற்கை யறிவின் மேம்பாட்டினையே காட்டுகின்றன. இத்தகைய பெரியாரது பின் அவர் பெயர் கூறச் சில நூற்களும் எண்ணிறந்த மாணவரும் உளர். ஆய்ந்து பார்க்கின் நாஞ்சில் நாட்டின் தமிழறிஞர் யாவரும் மாணவர் பின் மாணவராக அவர் அறிவின் வழி வந்தோரே யாவர் எனல் மிகையாகாது. இத்தகைய யாவை ஏற்றத்திற்கும் காரணம் மேலே கூறியவாறு இயற்கையா யமைந்த ஐந்தின் வகை தெரியும் அறிவின் திறமே யாகும். ஆகவேதான் அவர் ஐந்தின் வகை தெரியும் அறிவின் திருவுரு என்னப்பட்டா ராவர்.

★

சதாவதானி பாவலர் பாராட்டு

மகாவித்துவான் ஆறுமுகநாவலர்

கன்னிக் குமரி கடுந்தவம் புரியும் குமரிமா நகரின் மருங்கமர்ந் திலங்கும் கோட்டாற் றிடலாக் குடியெனும் ஊரில் செந்தமிழ்த் தாயின் சீரிய புதல்வராய் செய்குதம்பி சிறப்புடன் தோன்றினார். செந்தமிழ் இலக்கிய, இலக்கணக் கடலில் திளைத்துக் களித்து திருவிளை யாடினார். மதுரைச் சங்க மாபெரும் புலவராய் மதித்திட அமர்ந்து மாநலம் பெற்றனர். செந்தமிழ் நூற்கள் சிற்சில இயற்றினர். அருந்தமிழ் நூற்கட் குரைவளம் கண்டனர். அவர்தமை யடுத்த அந்தமில் தமிழரைச் செந்தமிழ்ப் புலவராய் திகழச் செய்தனர்.

கலையில் தெளிவும் கவிபாடும் செவ்வியும் இயற்கையாய்ப் பெற்ற இணையிலா இவரை பாவலரெனவே பாராட்டுவமோ? நாவல ரெனவே நவின்றேத்துவமோ! மாமதியோன் என மகிழ்ந்தேத் துவமோ!

அவதானம் பல ஆற்றிப் பேர் பெற்று சதாவதானியாய் செக மெல்லாம் போற்ற பட்டிமண்டபம் பாங்குற ஏறி அவதானத்தால் அருந்தமிழ் வளர்த்தனர்

திருவிளையாடலில் ஒரு விளையாடலாம் மாமனாய் வந்து வழக்குரைக் காதையில் ஒருமா புலவர் ஒருபெரும் வினாவை வினவியே விடையினைக் காண விழைந்தனர்.

அஃது எதுவென அறைகுதும் கேண்மின்:

கணவனை இழந்த கைம்பெண்ணொருத்தி தமயன் ஆதரவால் தன்னொரு மகனொடு தனி மனை அமர்ந்தாள். மாமன் மருகனைப் புதல்வனென மதித்து தன்னிரு நிதிக்கு தனியுரிமை நல்கி கடுந் தவம் புரியக் கானகம் சென்றனன். சென்றபின் தாயத்தார் அதனை

யெல்லாம் வெளவிக் கொண்டனர். கவலைக் கடலில் மூழ்கிய காரிகையைத் தேற்ற மதுரை நாயகன் மாதுவனாகி வந்து "தாதுல ராதகோதை தன்னொடுந் தழீஇ" என்ற இடத்து, பெண்ணோ கைம் பெண்; பொன்னோ போயிற்று; மகனோ சிறுவன்; உதவிக்கோ ஒருவர் இல்லை; கவலைக் கடலில் கரை தெரியாமல் கண்ணீர் வடித்துக் கதறும் பெண்ணின் கூந்தலில் (தாது = மகரந்தப் பொடி) புரண்டு இருந்தது எனக் கூறப்படுகிறது. பொருத்தமோ? பொருத்த மெனின் விளக்கம் தருக என்பது வினா.

உரையாசிரியர்களும் "தாது" எனும் சொல்லுக்கு மகரந்தம் எனவே உரை கூறிச் சென்றனர். இவ்வினா எழுந்தபோது விடை காணத் துணிந்தார் நமது வித்தகப் பாவலர். மகரந்தம் பொருந் தாததுதான், தாது என்பதற்கு வேறொரு பொருளும் உளது. அது எதுவெனின் ஒரு முதலின் சினை. ஆதலால் உடைந்து பொடிந்த மண்ணின் சினையாகிய புழுதி புரண்ட கூந்தலை உடையவள். வெப்பத்தால் வடிந்த புழுதி நனைந்து உலர்ந்திலது என பல்லோரும் கேட்க பறையறைந்து முழக்கினர், பாவலர். வினவியர் வெருண்டார். என்னே, இவரது மதி நுட்பம்? இவரை மகமதியர் என்பதைவிட மகாமதியர் (பேரறிவிற் சிறந்தவர்) என்பதே பொருந்தும் என்றனர். அவையோர் அனைவரும் ஆரவாரித்தனர். இத்தகையப் பற்பல இணையிலாச் செயல்கள் இயற்றித் திகழ்ந்த நம் இன்னிசைச் செந்தமிழ்ப் பாவலர், தோன்றிய இடலாக்குடிக்கா! அவர்தம் இணை யிலாக் குடிக்கா! நாஞ்சிலுக்கா! வஞ்சிக்கா! தமிழன்னைக்கா! பரத தேவிக்கா! எதற்கு, அதற்கு அணிகலனாய் இயங்கினரென இயம்புவது எங்ஙனம்?

கன்னி பாரத அன்னை அன்னிய ஆட்சியால் அவலக் கடலில் ஆழ்ந்து ஆற்றொணா துயரில் அழுந்திய காலை அவள் தன் சேயென, அருமைத் தம்பியென தேசப்பணி யாற்ற வந்த இவருக்கு செய்குதம்பி எனும் பெயர் சிறந்த பொருத்தமுடையதன்றோ?

மலையே வீழினும் நிலை கலங்கா வன்மையும், அஞ்சாநெஞ்சமும் கேளாரும் வேட்ப ஆற்றும் செந்தமிழ்ச் சொன்மாரியும் கண்ணை விட்டும் கருத்தை விட்டும் அகலாது கலங்கரை விளக்கென இலங்கி நிற்கின்றது.

இத்தகைப் பெரியார் நந்தமைப் பிரிந்தனர் எனினும் அவர் ஆற்றிய அந்தமில் பெருந்தொண்டுகள் நம் நெஞ்சை விட்டகல வில்லை. அவரை நாம் பாராட்டுவது தமிழ் நிலத்தை, தமிழ் மொழியை, தமிழ்க் கலையை, தமிழ்ப் பண்பை பாராட்டுவதாகும்.

வாழ்க பாவலர் பணி! வளர்க செந்தமிழ் மொழி!!

★

என்னருமைத் தந்தையார் அவர்கள்

கே.பி.எஸ். ஹமீது B.Sc., B.L., M.Litt.

"மகாமதி, சதாவதானி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர், தமிழ்க் கடல், அல்லாமா கா.ப. செய்கு தம்பிப் பாவலர் அவர்களைப் போன்றவர்கள் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறை அல்லது பதினாயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் உலகத்தில் பிறக்கிறார்கள்; பிறப்பெடுக்க முடியும். அவர்கள் ஒரு அபூர்வப் பிறவி. தெய்வத்தின் அருள்கடாட்சம் பெற்றவர்கள். மனித உருவில் பிறப்பெடுத்துவிட்ட அதி அமானுஷ்ய அற்புத மகான். சரஸ்வதியின் முழு அருளுக்கும் பாத்திரமானவர்கள். அதிலும் அவர்கள் இத்தமிழ் நாட்டின் தென்குமரி வட்டாரத்தில் பிறந்தது தமிழும் தமிழ்நாடும் செய்த பாக்கியமாகும்." — இவ்வாறெல்லாம் என் தந்தையார் அவர்களோடு நெருங்கிப் பழகியவர்களும் என் தந்தையார் அவர்களின் மகிமை கண்டு ஆற்றாது புழுங்கிய அறிவுச் செம்மல்களும் எனது தந்தையார் அவர்களின் அதியபூர்வத் தன்மையையும் மேதா விலாசத்தையும் ஞானத்தையும் புலமையையும் பாரபட்சமற்ற முறையில் நிறுத்து எடை போட்டுக் கணித்துக் கூறியிருப்பதை எத்தனையோ தடவைகள் நான் கேட்டிருக்கிறேன். பெருமையும் புளகாங்கிதமும் எய்தியிருக்கிறேன். அத்தகைய மாமேதை ஒருவருக்குப் புத்திரனாகப் பிறந்துவிட்ட பேற்றையும் பாக்கியத்தையும் எண்ணி எண்ணிப் பூரித்திருக்கிறேன். அதே சமயத்தில் என் தந்தையார் அவர்கள் பெற்றிருந்த ஆற்றலில் — திறமையில் — அறிவில் ஆயிரங்கோடிப் பங்கில் ஒரு பங்குகூட பெறுவதற்கான சூழ்நிலையும் — சந்தர்ப்பங்களும் வசதிகளும் இல்லாமற் போய்விட்ட என் வாழ்வின் துர்பாக்கியத்தை நினைந்து நினைந்து நொந்துருகி வெந்தும் வெதும்பியும் போய் இருக்கிறேன்.

பள்ளிப் படிப்பு, கல்லூரிப் படிப்பு மூலம் கல்வி கேள்விகளைப் பெற்று அறிவை விருத்தி செய்து கொள்ள வேண்டிய இக்கட்டுக்கு ஆளாகிவிட்ட இக்காலத்து நம் தலைமுறையினர், கற்க முடிந்தது கடுகளவுதான்; கைமண் அளவுகூட அல்ல. ஆனால் பாவலர் அவர்கள் பிறந்து வளர்ந்த தலைமுறை, குரு சிஷ்ய பரம்பரை வளர்ந்த தலைமுறை, ஆகவே கல்வித் துறையில்— இலக்கண, இலக்கியத் துறையில் — கலைத் துறையில் — அறிவுத் துறையில் அவர்கள் பெற்ற பயிற்சியும் ஞானமும் புலமையும், முழுமையும் பூரணத்துவமும் பெற்றவையாக இருந்தன. ஆகவேதான் பாவலர் அவர்களைக் குறுமுனிக்கடுத்த பெருமுனியாக அவர்கள் காலத்துத் தமிழகம் கருதிற்று. தமிழ்ப் பேராசிரியராகவும் பண்டிதருக்கும் பண்டிதராகவும் தனிப்பெரும் பாவலராகவும் நாவலராகவும் அவர்கள் திகழ்ந்தார்கள். பன்னூல்ஆசிரியர், பதிப்பாசிரியர், போதகாசிரியர், பத்திரிகாசிரியர், உரையாசிரியர், சொற்பொழிவாசிரியர், அவதான ஆசிரியர் எனப் பிறர் உச்சி மீது வைத்து மெச்சும் பெருமை பெற்றிருந்தார்கள். பாவலர் அவர்கள் சிறந்த தர்க்க சாஸ்திரியாகவும் தத்துவ ஞான போதகராகவும் விளங்கினார்கள். தமிழை ஒட்டி வளர்ந்திருந்த கலைத்துறைப் பிரிவுகள் எத்தனை எத்தனை இருந்தனவோ அத்தனையிலும் அவர்கள் ஆழ்ந்த பாண்டித்தியம் பெற்றிருந்தார்கள். ஆகவேதான் பாவலர் அவர்களை அவர்கள் காலத்து மக்கள் ஒரு நடமாடும் பல்கலைக் கழகமாகக் கருதினர்.

பௌத்தமும் சைவமும் வைணவமும் கிறித்தவமும் இஸ்லாமும் இதர உலக மதங்கள் அனைத்தும் வளர்த்த தத்துவங்களிலும் தத்துவ விசாரணைகளிலும் பாவலர் அவர்கள் தனிப்பெரும் ஞானம் பெற்றிருந்தார்கள். கணிதத்திலிருந்து சோதிடம் வரையிலும் ஆன்மீகத்திலிருந்து அரசியல் வரையிலும் அவர்கள் பெற்றிருந்த பேரறிவு வியக்கத் தக்கதாக இருந்தது.

எனது தந்தையார் அவர்களை இவ்வாறெல்லாம் புகழ்ந்தவர்கள் — புகழ்கிறவர்கள் — இம்மட்டோடு நின்று விடவில்லை; நிற்பதுமில்லை. பழுத்த மிகப் பெரும் தேசபக்தர் என்றும், மக்கள் நெஞ்சங்களில் சுதந்திரக் கனலை ஜுவாலையாக எழுப்பி விட்டவர்கள் என்றும், வாழ்வின் பெரும் பகுதியை தேச விடுதலைக்காக அர்ப்பணித்தவர்கள் என்றும் புகழ்வர்.

அறிவே உருவாகி வந்த மேதையென்பர் சிலர். தமிழின் காவலன் என்பர் வேறுசிலர். கவிராட்க்ஷசன் என்றும், ஈவிரக்கமும் பாரபட்சமுமற்ற தமிழ்க் கோடரி என்றும் விமரிசகர் என்றும், இலக்கிய இலக்கண பிரசங்க விற்பன்னர் என்றும் தமிழ்ப் புலவர் பரம்பரையின்

பாதுகாவலர் என்றும், தமிழால் தாம் வாழாமல் தமிழுக்காகத் தாம் வாழ்ந்தவரென்றும், தமிழ் வல்லுநரை பிரஜைகளாகக் கொண்ட அந்தந் தனிப்பெரும் ராஜியத்தின் முடிசூடா மன்னரென்றும் புகழ்ந் தனர் இன்னும் சிலர்; தமிழேதான் பாவலர் அவர்களென்றும் பாவலர் அவர்களேதான் தமிழென்றும் போற்றினர் மற்றும் சிலர். தமிழின்— தமிழ்ப் புலவர் மரபின் கௌரவத்தையும் கண்ணியத்தையும் மாண் பையும் போற்றி நிலை நிறுத்துவதில் பாவலர் அவர்கள் கடைப் பிடித்த கண்டிப்பான கொள்கையையும் விட்டுக்கொடுக்காத தன்மை யையும் வீறாப்பையும் வீம்பையும் கண்டோர் பலர் பாவலர் அவர் களைக் கவி காளமேகத்திற்கும் பிள்ளைப் பாண்டியனுக்கும் வில்லிக்கும் ஒட்டக் கூத்தருக்கும் சீத்தலைச் சாத்தனாருக்கும் நக்கீரருக்கும் ஒப்பிட்டனர். தமிழுக்காக பாவலர் அவர்கள் தங்கள் உற்றார் உறவினரையும் சுற்றத்தாரையும் ஆருயிர் நண்பர்களையும் பிரமுகர் களையும் மேதைகளையும் இழந்துவிடச் சித்தமாக இருந்தனர்; இழக்கவும் செய்தனர்.

தமிழ் மேல் ஆர்வம் கொண்டிருந்தவர்களை எல்லாம் அரவ ணைத்து அவர்தம் நெஞ்சங்களில் எல்லாம் தமிழ்ப் பித்தை ஏற்றி வைத்தவர்கள் பாவலர் அவர்கள். அரைகுறையாகக் கற்று தமிழில் நுனிப் புல் மேய்ந்து விட்டு அனைத்தையும் கற்று விட்டோம் என்ற செருக்கில் திரிந்தோரின் குட்டையெல்லாம் உடைத்துத் தலை குனியச் செய்தவர்களும் அவர்கள் ஆவார்கள்.

“இந்தத் தலைமுறையில் மகாமதி பாவலர் அவர்களுக்கு தமிழ்த் துறையில் இருந்த நுண்ணிய அறிவும், அபூர்வப் புலமையும் வேறு யாருக்கும் இருந்ததில்லை; அவர்கள் இறந்து விட்டார்கள் என்றால் தமிழ் மொழியின் வரலாற்றுச் சரிதம் இன்று வரை ஈன்றெடுந்து வளர்த்துக் கொண்டிருந்த முதுபெரும் புலவர் மரபு இறந்து விட்டது என்றுதான் அர்த்தம்” என்று பாவலர் அவர்களின் மரணச் செய்தி கேட்டுத் துயருற்ற ரஸிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தம் அனுதாபக் கடிதத்தில் குறிப்பிடும் அளவிற்குப் பாவலர் அவர்கள் தம் உயிர் நீங்கும் வரையில் தமிழ்ப் புலவருலகக் கிரீடத்தைச் சூடி இருந்தார்கள்.

சதாவதானம் சரவணைப் பெருமாள் ஐயங்காரின் காலத்திற்குப் பின்னர் இன்று வரைத் தமிழ் நாட்டில் சதாவதானம் செய்து காட்டிய பெருமையைப் பாவலர் அவர்கள் அன்றி வேறு யாரும் பெற்ற தில்லை. ‘யாவும் பாடிக் கோவை பாடு’ என முத்தமிழ்த் துறையில் முறை போகிய உத்தமர்கள் அச்சுறுத்தி எச்சரித்துக் கட்டளையிடும் கோவை நூலைத் தமிழ்ப் புலவர் பரம்பரையில் கடைசியாகப் பாடிய கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகரின் கோடீச்வரக் கோவைக்குப்

பின்னர் இன்னும் மூன்று கோவைகளைக் குறையறப் பாடித் தமிழுக்குச் சிறப்பளித்த பெரும் பெருமையும் பாவலர் அவர்களையே சாரும்.

இப்படியெல்லாம் பலவாறாகத் தமிழ் நாட்டின் இலட்சக் கணக்கான தமிழன்பர்கள் புகழ்ந்தேத்தும் பெரும்பேற்றிற்கு அருகதை உடையவர்களாக விளங்கிய என் தந்தையார் அவர்களின் கூர்த்த மதியினுக்கும் மகிமையினுக்கும் மூலகாரணமாக அவர்கள் வாழ்வில் கைகொடுத்து உதவியது அவதானக் கலையில் அவர்களுக்கிருந்த ஆற்றல், என்பர் ஒரு கூட்டத்தினர். மற்றொரு கூட்டத்தினரோ பாவலர் அவர்களின் பெரும் கீர்த்திக்கு வழி வகுத்தது தமிழில் அவர் களுக்கிருந்த ஆழ்ந்த புலமை யென்பர். இவ்விரு கூட்டத்தினரின் கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் நிரூபிப்பது போன்று என் தந்தையார் அவர்களின் வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை என் தந்தையார் அவர்களிடம் கணக்காயராக இருந்து ஊழியம் செய்து பின்னர் தசாவ தானியாகவும் தமிழ்ப் புலவராகவும் ஆகிய மாணாக்கர் ஒருவர் கூற நான் கேட்டிருக்கிறேன். எத்தனையோ தடவை இந்நிகழ்ச்சி என் ஓய்ந்த நேரங்களில் என்நெஞ்சத் திரையில் சித்திரமாக விரிந்திருக் கின்றது.

என் தந்தையார் அவர்களுக்கிருந்த அதிசயிக்கத்தக்க நினை வாற்றல், அவர்கள் காலத் தலைமுறையில் வேறு யாருக்கும் இருந்ததாக யாரும் கூற நான் கேட்டதில்லை. அவர்களுக்கிருந்த அபார ஞாபக சக்தி இறைவனால் அவர்களுக்கு அருளப்பட்ட வரப் பிரசாதமாக இருந்தது எனப் பலரும் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். தமிழின் காவலராகவும் தமிழ்ப் புலவர் மரபின் பாதுகாவலராகவும் விளங்கி வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண்மொழி வாழ வழி வகை செய்தவர்கள் அவர்கள் என்றால் அதற்காக அவர்களுக்குத் துணை நின்றது அவர்களது இத்தப் பெரும் நினைவாற்றலும் பொன்றா ஞாபக சக்தியுமே. தொல்காப்பியர் காலந்தொட்டு என் தந்தையார் அவர்கள் காலம் வரை தமிழ் கூறும் நல்லுலகில் உலவியும் நிலவியும் வந்த தமிழ் நூற்கள், காவியங்கள், காப்பி யங்கள், பிரபந்தங்கள், இயல்—இசை—நாடக சிருஷ்டிகள், ஏடுகள் எத்தனை இருந்தனவோ அத்தனையும் அழிந்துபட்டாலும் மறைந்து விட்டாலும் தங்கள் உயிருள்ள வரையிலும் அவை அனைத்தையும் எப்பொழுது வேண்டுமாயினும் தாங்கள் மனப்பாடமாக எழுத்து, சொல், வரிகளாகக் கால் புள்ளியுடனும் முற்றுப் புள்ளியுடனும் மீண்டும் அப்படியே ஒப்புவிக்க முடியும் என மார்புதட்டி நின்று பெரு மிதத்துடன் தங்கள் நண்பர்களிடமும் தமிழன்பர்களிடமும் மேடை களிலும் கூட்டங்களிலும் கூறியிருக்கிறார்கள்.

எந்த ஒரு நூலையும் ஒரு தடவைப் படித்து முடிக்கும் பொழுதே அந்நூலின் மற்றொரு பிரதியை அவர்கள் தங்கள் மனத்திரையில் பகர்ப்பெடுத்து வைத்துக் கொள்வது வழக்கமாம். எத்தனை ஆண்டு கள் சென்ற பின்னரும்கூட அவர்கள் தங்கள் மனத்தகத்துப் பதித்து வைத்திருந்த நூலின் பகர்ப்பும் பதிப்பும் மறைந்து விடுவதில்லையாம். கண்ணால் ஒரு முறைப் படித்தவற்றை காதால் ஒரு முறை கேட்ட வற்றை அவர்கள் தங்கள் வாணாள் முழுவதும் மறந்தது மில்லையாம். தமிழோ ஆங்கிலமோ பாரசீகமோ அரபியோ உரோமானிய மொழியோ எதுவாக இருப்பினும் அவ்வம் மொழிகளிலிருந்தும் ஆயிரமாயிரம் பக்கங்களாக இருப்பினும் ஒரே ஒருமுறை மட்டும் அவர்கள் முன்னிலையில் அவர்கள் காதில் விழும்படி படித்து முடித்துவிட்டு மீண்டும் படித்தவற்றை ஒப்புவிக்குமாறு அவர்களிடம் கேட்டால் அப்படியே ஒப்புவிப்பார்களாம். இத்திறன் அவர்கள் கேள்வி ஞானத்தின் பலதரப்பட்ட அம்சங்களில் ஒன்றையே விளக்குவதாக அமைந்துள்ளது. தனித்து ஏகாந்தமாக இருக்கும்போது மட்டுமல்ல, பலரோடு பேசிக் கொண்டு பல காரியங்களில் சிந்தையை ஈடு கொடுத்துக் கொண்டிருக்கும்போது கூட மேற்கூறியவாறு எதை யேனும் படித்துவிட்டு மீண்டும் ஒப்புவிக்கச் சொன்னால் ஒப்புவிக்கும் அளவிற்கு அவர்களது செவிப்புலனும் நுண்மாண் நுழைபுலன்களும் தீட்சண்யமும் கூர்மையும் பெற்றிருந்தன.

தமிழ் இலக்கிய இலக்கணங்களையும் இதர நூற்களையும் எழுத் தெண்ணிப் படித்த பெரும் புலவர்களுள் எல்லாம் முதலிடத்திற்கு அருகதை உடையவர்களாக அவர்கள் விளங்கினார்கள். எழுத் தெண்ணி மட்டுமே அவர்கள் படித்திருந்தார்கள் என்றில்லை; எழுத்தின்—சொல்லின் — அடியின் — வரியின்—செய்யுளின் கருத்து, பொருள், நயம், சுவை முதலாய ஒவ்வொன்றையும் சுவைத்துச் சுவைத்தும் ரஸித்து ரஸித்தும் அலசி அலசிப் பகுத்துப் பகுத்தும் பிரித்துப் பிரித்தும் பாடபேதங்களையும் விரிவுரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தும் அறிந்துணர்ந்தவர்கள் அவர்கள், எந்த நூலுக்காகவும் எந்த வாசகசாலையின் துணையையும் அவர்கள் நாடியதை என்றைக்குமே நான் கண்டதில்லை; அவர்களோடு நெருங்கிப் பழகிய நண்பர்களும் சீடர்களும் பார்த்ததுமில்லை.

சங்க இலக்கியங்களோ காப்பியங்களோ இதர பெருங்காவி யங்களோ தனிப்பாடல்களோ அவை ஒவ்வொன்றிற்கும் அவர்களின் மனத்தினுள் இருந்த இலட்சக்கணக்கான அறைகளுக்குள் பட்டியல் களிருந்தன. வரிசை வரிசையாகப் பாக்களின் முதற்குறிப்பு அகராதி களும் இன்று நாம் ஆங்கிலத்தில் சொல்கின்ற 'இண்டெக்ஸ்'களும் பாடபேத விளக்கங்களும் வரிசை வரிசைகளாகவும் மேல்கீழ்

அடுக்குகளாகவும் இடம் பெற்றிருந்தன. இதனாற்றான் புலவர் பெருமக்கள் பாவலர் அவர்களின் புலமை கண்டு அஞ்சினர் போலும்! இக்காரணங்களினால்தான் அவர்களை நடமாடும் பல்கலைக் கழகத்திற்கும் நூல் நிலையத்திற்கும் ஒப்பிட்டனர் போலும்! இத்தகைய அருஞ்சாதனைகள் கைவரப் பெறுவதற்கு அவர்களின் அற்புத நினைவாற்றலும் அதியபூர்வ ஞாபக சக்தியும் கூர்த்த மதியும் காரணமாக இருந்திருக்கவேண்டுமென்பதை ஏற்றுக் கொள்ளாமல் இருக்க முடியாதல்லவா?

ஆரம்பத்தில் என் தந்தையார் அவர்களுக்கு அவதானம் என்ற கலையில் அணுவும்கூட நம்பிக்கை இருந்ததில்லையாம். அவதானம் செய்யமுடியும் என்று யாரேனும் சொல்லிக் கொண்டு அவர்களிடம் வந்தால், உடனே வந்தவரை ஒரு வித பொய்ப் புரட்டுக்காரன் என்று நினைத்து விடுவது வழக்கமாக இருந்ததாம். இப்படி அவர்கள் நினைத்துக் கொண்டிருந்த காலத்தில்தான் அவர்களிடம் முதுகுளத் தூரைச் சார்ந்த கலியாணசுந்தரம் பிள்ளை என்பார் வந்து கண்டப் பத்திரிகையில் தனக்குத் தேர்ச்சி உண்டென்று கூறினாராம். எனது தந்தையார் அவர்கள் விழுந்து விழுந்து சிரித்து அவரை ஒரு மாய்மாலக்காரர் என்றார்களாம். ஆனால் பிள்ளையவர்கள் கண்டப் பத்திரிகையைச் செய்து காட்டியபொழுது எனது தந்தையார் அவர்கள் ஆச்சரியப்படவில்லையாம். நேர்மாறாக மனிதனுக்கு அவதானம் செய்யும் ஆற்றலும் இருக்கத்தான் செய்கிறது என்று எண்ணினார் களாம். மறுகணமே எனது தந்தையார் அவர்களும் கண்டப் பத்திரிகை செய்து காட்டினார்களாம். அன்றிலிருந்து அவர்களின் ஐம்புலன்களும் அவர்களுக்கு வசப்பட்டன.

மண்மீது வாழ்பவர்கள் புற உணர்வுகளையும் புலன்களையும் மட்டும் தீட்டிக் கூர்மைப்படுத்தி விடுவதோடு நில்லாமல் மனிதனின் உள்ளுணர்வுகளையும் அவனின் உள்ளுக்குள்ளே மறைந்தும் புதைந்தும் இருக்கும் அதியற்புத சக்திகளையும் தூண்டிவிட்டு ஒளி யேற்றும் திறன் பெற வேண்டுமென்றும் எண்ணினார்களாம். அவர்களின் முயற்சியில் அவர்கள் வெற்றியும் பெற்றார்கள். ஒரே சமயத்தில் நூறு காரியங்களைச் செய்யும் ஆற்றல் பெற்றிருந்த அவர்கள், மனத் தத்துவ சாஸ்திர ஆராய்ச்சி அபரிமிதமாக வளர்ந்து விட்ட இன்றைய மேனாட்டவர் மத்தியில் வாழ்ந்திருந்தால் ஆயிரங் கோடி மனங்களைத் தன் ஒற்றைத் தனி மனத்தினுள் அடக்கி வைத் திருக்கும் அற்புத அதிசய மனிதர் இவர் என்று வியந்துரைத் திருப்பார்கள்.

மனத்தத்துவ நிபுணர்கள் மூக்கின் மேல் விரல் வைத்து வியக்கத் தக்க வண்ணம் எனது தந்தையார் அவர்களின் அடி மனத்தின்

அடிமனம் எனப்படுகிற உள் மனத்திற்கும் உள் மன விதானத்திற்கு எல்லையென்பதொன்றே இல்லாதிருந்திருக்க வேண்டும் என்று தான் நாம் யூகிக்கவேண்டி இருக்கிறது. இந்தப் பின்னணியிலேயே எனது தந்தையார் அவர்களின் பழம் பெரும் மாணாக்கரான காலஞ்சென்ற திருவாவடுதுறை ஆதீன வித்துவான் தசாவதானி ஆறுமுகம்பிள்ளை அவர்கள் தன் குருவின் வாழ்வில் நிகழ்ந்ததைப் பற்றி என்னிடம் கூறிய நிகழ்ச்சி என் மனத்திரையில் சித்திரமாக விரியும் போதெல்லாம் நான் கூர்ந்து கவனிக்கிறேன்.

எனது தந்தையார் அவர்கள் தங்கள் மனவறைக்குள் கட்டங்கள் வகுத்தும் குறுக்கும் நெடுக்குமாகச் சிற்றறைகள் அமைத்தும் அவை ஒவ்வொன்றிலும் தமிழ்க் காவியச் செல்வங்கள் ஒவ்வொன்றிற்கும் பாட்டு முதற் குறிப்பு அகராதிகளையும் முதலெழுத்துக்களுக்கான அட்டவணையையும் உருவாக்கி வைத்திருந்தார்கள் என்று மட்டு மில்லை; ஒவ்வொரு பாடலுக்கும் செய்யுளுக்கும் அவற்றின் ஒவ்வொரு எழுத்திற்கும் கூட குறுக்கும் நெடுக்குமாகவும் மேல் கீழாகவும் இடம் வலமாகவும் எழுத்தகராதி வரிசைப் பட்டியல்கள் (Index) தயாரித்து வைத்திருக்கிறார்கள் என்பது தசாவதானம் ஆறுமுகம் பிள்ளை அவர்கள் கூறிய நிகழ்ச்சியிலிருந்து தெரிய வருகிறது.

தமிழ் வித்துவான்கள், பண்டிதர்கள், புலவர்கள் முதலியோர் வளர்த்து வந்த — முதுபெரும் புலவர் பரம்பரையினரின் கையிலிருந்த தமிழும் தமிழ்க் கலைகளும் தமிழ்ப் பத்திரிகைக்காரர்களின் கைக்கு வந்துவிடும் துர்பாக்கியத்தை எட்டாதிருந்த காலம் அது. சென்னையில் தமிழ்ப் பேரறிஞர் அவையில் முதன் முதல் அவர்கள் செய்து காண்பித்த நூறு அவதானத்தின்போது அவர்களைச் சிறிது திணற வைத்த அவதானம், காலஞ்சென்ற டி. கே, சி. அவர்கள் சோதித்தக் கண்டப் பத்திரிகைதானாம். அக்கண்டப் பத்திரிகையோ ஐநூறுக்கும் மேற்பட்ட அட்சரங்களைக் கொண்ட பத்திரிகையாக இருந்ததாம். அதையும் வெற்றிகரமாகச் செய்து அவையோரை வியப்பிலாழ்த்தி விட்டார்களாம்.

இற்றைக்கு எண்பது வருடங்களுக்கு முன்னர் நாஞ்சில் நாட்டில் கோட்டாற்றில் தமிழ் முஸ்லிம் பெருங்குடி மக்களின் மத குருவாகிய ஆற்றக்கோயா தங்கள் அவர்கள் முன்னிலையில் எனது தந்தையார் அவர்கள் சோடசாவதானம் செய்து கொண்டிருந்தார்களாம். அவதானியார் அவர்களை கண்டப் பத்திரிகையில் அப்போது சோதிக்க முன் வந்தவர் சேர நாட்டின் முதுபெரும் தமிழ்ப் புலவ ராகவும் நக்கீரராகவும் விளங்கிய தாழக் குடியைச் சேர்ந்த பிள்ளை யவர்கள் ஆவார்கள். சோடசாவதானத்தில் தம் கண்டப் பத்திரி கையைத் தொடங்கியதும் "முதலடியின் இரண்டாம் எழுத்து தமிழ்

வல்லின வரிசையில் ஒற்றடுத்து வந்த ஒன்றாம்" என்று ஒரே சமயத்தில் பதினாறு சோதனைகளில் ஈடுபட்டிருந்த எனது தந்தை யார் அவர்களின் காதில் படும்படி கூறினாராம், மகாவித்துவான் பிள்ளை அவர்கள். சிறிது நேரங் கழிந்த பின்னர் "இரண்டாம் அடியின் இரண்டாம் எழுத்தும் அஃதே" என்றனராம். எனது தந்தையார் அவர்களோ "முதலடியிலும் இரண்டா மடியிலும் தமிழ் வல்லின வரிசையில் முற்ற முற்ற ஒற்றடுத்துவரும் ஒற்றெழுத்துக் களைக் கொண்ட எத்தனையோ தாம் உளவாமே, நீவிர் அறியீரோ?" என அவதானத்திற்கிடையில் தங்களுக்கே உரிய நகைச்சுவை ததும்பக் கேட்டார்களாம். உடனேயே பிள்ளை அவர்களும் "முதலடி யின் பதினான்காம் எழுத்தும் தமிழ்ச் சிறப்பெழுத்து மூன்றனுள் ஒன்றாம்"—என்று தமக்கே உரிய புலவர் நடையில் மொழிந்தனராம். மறுகணம்தானே முதற் பாவலராம் திருவள்ளுவர்தம் முப்பாற் குறளில் வரும்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

—என்ற குறளடிகள் பாவலர் அவர்களின் நினைவில் நிழலாடியது.

சொலல் வல்லராகத் திகழ்ந்து, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சி யமாக விளங்கிய பாவலர் அவர்களின் சொற்றிறனும், அவர்களது சொற்போரின்போது இயல்பாகவே பொங்கும் கிண்டலும் இடக்கும் வெளிவந்தன. 'நீவிர் தமிழை நும் நாக் கலப்பையால் உழுவீர் போலும்'' என நையாண்டி தொனிக்கப் பிள்ளையவர்களை எனது தந்தையவர்கள் கேட்டார்களாம்.

நாஞ்சில் நாட்டில் வயல்களில் நிலம் உழுகையில் ஏர்பூட்டி எருதுகளின் வால்முறுக்கி ஏரோட்டுகின்ற உழவர்கள், 'காளை! ற்... ற்...ற்... காளை! ற்...!' என்று குரலெழுப்பிக் காளைகளை ஓட்டி வயல் உழுவது இன்றைக்கும் வழக்கம்.

"தமிழாகிய வயலில் நுமது நாவாகிய கலப்பை கொண்டு தமிழின் சிறப்பெழுத்தாகிய 'ற்' என்ற வல்லின ஒற்றெழுத்தை உச்சரித்து உழுவது நும்முடைய வழக்கம் போலும்?'' என்று கிண்ட லாகப் பிள்ளையவர்களைப் பார்த்துக் கேட்டபோது அவையிலிருந்த பண்டிதர்களும் வித்துவான்களும் புலவர்களும் பிறரும் கொல்லென்று சிரித்தனராம்; எனது தந்தையவர்களின் நகைச்சுவைப் பேச்சைக் கேட்டு ரஸித்தனராம். எனினும் அவர்கள் ஒருவரும் கண்டப் பத்திரி கைக்கும் நகைச்சுவைக்கும் இருந்த தொடர்பை அந்தக் கணத்தில் புரிந்து கொள்ளவே இல்லையாம். அர்த்தத்தை விளங்கிக் கொண்ட ஒரே நபர் பிள்ளையவர்களாகவே இருந்தாராம். ஆனாலும் அவரோ

ஒன்றையும் புரிந்து கொள்ளாதவர்போல் தம் கண்டப் பத்திரிகையைத் தொடரலானார். "முதலடியின் பத்தாவது எழுத்தும் "ற்" என்று சொல்லி முடிக்கும் முன்னர் அவதானியார், "வேண்டாம், நிறுத்து வீராக. நுமது கண்டப் பத்திரிகையை யான் கண்டப் பத்திரிகையே" என்று ஒருவித இறுமாப்புடனும் தெம்புடனும் அங்கு தாம் செய்து கொண்டிருந்த இதர அவதானங்களுக்கிடையே பதிலிறுத்தார் களாம்.

மகாவித்துவான் பிள்ளையவர்களுக்கோ ஒரு பக்கம் ஒரே திகைப்பு; ஒரு பக்கம் ஒரே ஆத்திரம். ''என்னத்தைக் கண்டு விட்டீர் நீவிர்?'' என ஒரே ஆங்காரமாகக் கேட்டாராம்.

பிள்ளையவர்களின் ஆத்திரத்திற்குக் காரணம் இருந்தது. முதல் அடியிலும் இரண்டாம் அடியிலும் இரண்டாம் எழுத்தும் முதலடியின் பதினான்காம் எழுத்தும் 'ற்' ஆகவரும் குறள் திருவள்ளுவ நாய னாரின் திருக்குறளில் மட்டும்தான் வரமுடியும். தமிழ் இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிக் கற்றுத் தேர்ந்திருந்த அவதானி யாருக்கு தம் சோதனைகளுக்கிடையே கண நேரத்தில் அது தெரிந்து விட்டதே!

அந்தக் குறளடியில் ஐந்தாம் 'ற்' ஆக வரும் இருபத்து மூன்றாவது எழுத்தும் அவதானம் செய்து கொண்டிருந்த பாவலர் அவர்களின் மனத்திரையில் பளிச்சிட்டு வந்து காட்சியளித்து விட்டது. ஆகவே கண்டப் பத்திரிகையை எழுதி வைத்து அவதானி யாரை சோதித்துக் கொண்டிருந்த பிள்ளையவர்களின் கண்டப் பத்திரிகையின் விடையைக் கண்ணிமை மூடி விழிக்கும் நேரத்திற் குள்ளாக பாவலர் அவர்களின் மன அறைகள் கோத்தெடுத்து அவர் களின் அகக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தின. திருக்குறளின் குறட்பாக்கள் அத்தனைக்குமான முதற்பாட்டகராதியின் முதலெழுத்து அகராதியும் குறட்பாக்கள் ஒவ்வொன்றிற்குமுள்ள ஒவ்வொரு எழுத்துக்குமான அகராதி வரிசையும் பாவலர் அவர்களின் உள் மனத்திற்கும் உள் மனத்திற்குள்ளே ஏற்கனவேயே எந்தக் காலத் திலோ பதித்து வைக்கப்பட்டிருந்தன. பிள்ளையவர்கள் பதினான்காம் எழுத்து இன்னதென மூன்றாம் முறையாகக் கூறிய அக்கணத் திலேயே என் தந்தையார் அவர்களுக்குக் கண்டப் பத்திரிகையின் விடை தெரிந்து விட்டது. அந்த மகிழ்ச்சியிலேயே அவர்கள் நகைச் சுவை ததும்ப, "நீவிர் தமிழை நும் நாக் கலப்பையால் உழுவீர் போலும்!" என்று கேட்டிருக்க வேண்டும்.

இரண்டு 'ற்'கள் மூன்று 'ற்'கள் எட்டு 'ற்'கள் வருகின்ற குறட் பாக்கள் திருக்குறளில் எத்தனையோ இருக்கின்றன. இத்தகைய

குறட்பாக்கள் எத்தனை இருக்கின்றன என்று துல்லியமாக இந்தத் தலைமுறையைச் சார்ந்த நம்மில் யாருக்கும் நினைத்த மாத்திரத்தில் அறுதியிட்டுச் சொல்ல இயலாது. இதற்கென்று இரண்டு வருட ஆராய்ச்சி மாணவனாக இருந்து இரவு பகலாக இந்தக் காலத்தில் நாம் ஆராய வேண்டியிருக்கும்.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்."

"கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்."

குறட்பாக்களை மனனம் பண்ணி வைத்திருப்பவர்களுக்குக்கூட எடுத்துக் காட்டாக மேலே குறிப்பிட்டிருக்கும் முதற் குறளின் இரண்டாவது அடியில் இரண்டாவதாக வரும் சொல்லிலுள்ள 'ற்' எத்தனாவது எழுத்து என்று கேட்டால் உடனடியாகச் சொல்ல முடியாது. எண்ணிப் பார்த்து ஆறாம் எழுத்து என்பர். அந்தக் குறளில் எத்தனை 'ற்'கள் இருக்கின்றன என்று கேட்டாலும் எண்ணிப் பார்த்த பின்னரே எட்டு 'ற்'கள் என்பர். இவ்வாறே மேலே குறிப்பிட்ட குறள் ஒவ்வொன்றிலுமுள்ள 'ற்'களைப் பற்றிக் கேட்கும்போது எல்லாம் எழுத்துக்களையும் 'ற்'களையும் எண்ணிப் பார்க்கத் தொடங்குவர். ஆனால் பதினாறு அவதானங்களையும் ஒரே நேரத்தில் செய்து கொண்டிருந்த எனது தந்தையார் அவர்களோ குறட்பாவின் முதலடியின் பதினான்காம் எழுத்து 'ற்' என்று தெரிந்த உடனேயே அக்குறட்பாவின் எஞ்சிய மூன்றாம் ஐந்தாம் 'ற்'களை தாம் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இல்லையென்று சொல்லி விட்டார்கள். ஆயிரத்து முன்னூற்று முப்பது அருங்குறட் பாக்களுக்குள்ளும் பதினான்காம் எழுத்தை 'ற்' ஆகக் கொண்டுள்ள குறட்பா இன்னதுதான் என்பதை அவதானியார் அவர்கள் அரை நொடியில் தெரிந்து கொண்டு விட்டார்கள்.

இங்கேதான் எனது தந்தையார் அவர்களின் புலமைக்கும், ஞானத்திற்கும், கூர்த்த மதியினுக்கும், மகிமைக்கும், மாட்சிக்கும், சீர்த்திக்கும் துணை நின்றவை தமிழை ஒட்டி வளர்ந்த அவதானக் கலையில் அவர்களுக்கிருந்த தேர்ச்சியும் தமிழில் அவர்களுக்கிருந்த ஆழ்ந்த பயிற்சியும் ஆகும் என்று துணிந்து கூற இடமிருக்கிறது. அபரிமிதமான நினைவாற்றலும் அசாதாரணமான ஞாபக சக்தியும் பெறுதற்கரிய புலமையும் நினைத்தற்கரிய அவதான ஆற்றலும்

அவர்களுக்குத் தமிழ்ப் புலவருலகில் தனியிடம் தேடிந் தந்திருக்கின்றன.

கண்ணிழந்தோரை உய்விக்க வந்த மேலை நாட்டு மூதாட்டியும் சீமாட்டியுமான டாக்டர் ஹெலன் கெல்லர் என்ற அம்மையாரின் நுண்ணிய புலனறிவை மெச்சாதவர்கள் கிடையாது. கண்பார்வை இல்லாத அந்த அம்மையார் மலரொன்றின் மணத்தை வைத்துக் கொண்டே இது இன்ன மலர் என்று சொல்லி விடுவார்களாம். இதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை என்னலாம். கண் செய்ய வேண்டியதை மூக்கு செய்கிறது என்று கூறி விடுவோம். எனினும் மணமேயில்லாத ஒரு மலரை இன்ன நிறமுடையது என்று கண்ணொளி அற்றவர்களால் கூறி விடமுடியுமா? ஆனால் ஹெலன் கெல்லர் அம்மையாருக்கு அது என்ன நிறமுடையது என்று கூறிவிட முடியுமாம். அந்த விந்தையினும் விந்தையை நினைத்து மூக்கின் மேல் விரலை வைத்து வியக்கலாம். ஆனால் கண் செய்வதை மூக்கும் மூக்கு செய்வதைக் காதும் இவை மூன்றும் செய்வதைக் நாக்கும் இவை எல்லாமாக இணைந்து செய்வதை மெய்யும் செய்துவிடக் கூடுமென்று இன்றைய விஞ்ஞான உலகம் ஒப்புக் கொள்கிறது. இத்தகைய அமானுஷ்யத் தன்மை முழுக்க முழுக்க கைவரப் பெற்றிருந்த என் தந்தையார் அவர்கள் சோடசாவதானம் செய்து கொண்டிருந்த பொழுது 'நும் கண்டப் பத்திரிகையை யான் கண்டப் பத்திரிகையே' என்று மொழிந்த பின்னருங்கூட ஆத்திரத்துடனும் ஆங்காரத்துடனும் மகாவித்துவான் பிள்ளையவர்கள் மடிபிடித்து விடை கேட்பது போன்று, "நீர் கண்ட பத்திரிகையைத்தான் கூறுமே" எனத் துடுக்காகக் கேட்டாராம். சோடசாவதானியார் அவர்களோ மீண்டும் தனக்கே இயல்பாகவுடைய குறும்பும் கிண்டலும் நையாண்டியும் நகைச்சுவையும் நிறைந்த பாணியில் பதில் தந்தார்களாம்.

"அஞ்சிற்கொள் வாசகமொன் றுண்டே அருமறையில்
நெஞ்சிற்கொள் வீர தறிந்து"

—என மற்ற அவதானங்களுக்கிடையில் கண்டப் பத்திரிகையின் விடையைக் குறள் வடிவில் யாத்துக் கொடுத்தார்களாம், என் தந்தையார் அவர்கள்.

விஷயம் புரியாமல் திகைத்தபடி "இதுவன்று என் கண்டப் பத்திரிகையின் குறள்" என்று மகாவித்துவான் பிள்ளையவர்கள் மறுத்த பொழுது அவதானியார் அவர்கள் விளக்கம் தரும் முறையில் இலக்கிய நயமும் சுவையும் மிக்க இனிய சொற்பொழிவொன்றையே நிகழ்த்தி இருக்கிறார்கள்.

ஐந்து 'ற்'களையுடைய அழகிய குறட்பாவொன்று அருமறை யாகிய தமிழ் மறையில் இருக்கின்றது. அதன் பதினான்காம் எழுத்தும் இருபத்து மூன்றாம் எழுத்தும் 'ற்'களாகும். அதுவே,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

—இக்குறளை ஐந்து வயது முதற் கொண்டே நெஞ்சில் பதித்திட வேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்றெல் லாம் ஐந்திற் கொள்ளவேண்டிய கல்வியைப் பற்றியும் ஐந்து 'ற்' கொண்ட குறட்பா பற்றியும் அருமையான பிரசங்கம் ஒனறையே நிகழ்த்தி முடித்தார்களாம். மகாவித்துவான் பிள்ளையவர்கள் அப்படியே அகமகிழ்ந்து சொக்கிப் போய் அவதானியார் அவர்களை உறத் தழுவ எழுந்து நின்றார்களாம். மீண்டும் அவதானியார் ஐந்து வயதில் நெஞ்சம் முழுதும் நிரப்பி வைக்க வேண்டிய "சிவாய நம" என்ற மந்திரமும் ஒன்றுண்டு என்று "அஞ்சிற் கொள் வாசகமொன் றுண்டே" என்ற புதுக் குறளுக்கு வியாக்கியானம் தந்த பொழுது பழுத்த சிவபக்தராகிய மகாவித்துவான் பிள்ளையவர்கள் ஆனந்தப் பெருக்கீட்டால் தமது இரு கரங்களையும் மேல் நோக்கி உயர்த்தி, 'பேஷ், பேஷ்' என்று துள்ளத் தொடங்கி விட்டாராம். அவையிலிருந் தோர் எழுப்பிய கரகோஷம் ஓய்ந்தடங்க பல நிமிடங்கள் ஆயிற்றாம்.

இந்த ஒரு நிகழ்ச்சியை நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எனது அரும்பெரும் தந்தையார் அவர்களின் பாததூசிக்குங்கூட நிகராக முடியாத என்னையும் இந்தத் தலைமுறையினரையும் நான் நினைத்துப் பார்க்கிறேன். பாவலர் அவர்கள் காலஞ் சென்றபோது ரஸிகமணி டி.கே.சி. அவர்கள் எழுதியிருந்த அனுதாபக் கடித வரி களுன் அடங்கியிருந்த உட்கருத்தையும் அங்கலாய்ப்பையும் எண்ணி எண்ணிப் பார்க்கிறேன். தமிழையும் தமிழ் கூறு நல்லுலகின் எதிர் காலத்தையும் என்னையறியாமலே எண்ணவும், எண்ணி ஏங்கவும் செய்கின்றேன்.

விடுதலைப் போராட்ட வீரர்!

"யதார்த்தவாதி"

கும்பினி ஆட்சியின் கோரப் பிடியிலே சிக்குண்டு வெந்து வெதும்பி வெய்துயிர்த்து நின்றது பாரதம். ஏய்த்து இடம் பிடித்த ஆங்கிலேய துரைத் தனத்திற்கு இந்தியத் தாய் அடிமைப்பட்டுக் கிடந்தாள். அன்னையின் தளையுடைத்து சுயாட்சி காணத் துடித் தனர் நாட்டோர். விடுதலைக்காக எதை வேண்டுமானாலும் விலை யாகத் தர விரும்பி முன்வந்தனர் அவர்கள்.

விடுதலை வேட்கையின் முன்னே இனமோ மொழியோ எல்கையோ பிறவோ குறுக்கிடவில்லை. தடிகொண்டு தாக்கப்பட் டோரில்—வெடிகுண்டுக்கு பலியானோரில்—சிறையில் அடைக்கப்பட்டு சித்திரவதைச்கு ஆளாக்கப்பட்டோரில் — இனம் பிரித்துக் காட்ட முடியாத அளவுக்கு எல்லோருமே பங்கு பற்றினர். இந்துக்களும் முஸ்லிம்களும் தோளொடு தோளிணைந்து நின்று துயரங்களைப் பகிர்ந்தனர். நாடே வாய் திறந்தது; 'வெள்ளையனே வெளியேறு' என உரத்துக் குரல் கொடுத்தது.

விடுதலைத் தீயைப் பெருநெருப்பாக்கி ஆளவந்தாரைச் சுட் டெரித்த வகையில் தமிழகம் முன்னணியில் நின்றது. வேதாரண் யத்திலே உப்பு சத்தியாக்கிரகம், தூத்துக்குடியிலே சுதேசிக் கப்பல் நிறுவனம், தீண்டாமை ஒழிப்பு இயக்கம், கள்ளுக்கடை மறியல் போராட்டம், விதேசித் துணி பகிஷ்கரிப்பு என்றிப்படியே தொடர்ந்த அனைத்துமே ஒன்றோடொன்று தொடர்புடைய விடுதலை இயக்க மாக உருவம் பெற்றன.

தமது பாட்டுத் திறத்தாலே விடுதலைக்கு வித்தூன்றினார், மகாகவி பாரதியரர். பாவால் மட்டுமல்ல, தமது நாவாலும்—பேச்சுத் திறத்தாலும்—அந்த விடுதலை வித்துக்கு நீர் பாய்ச்சிப் பயிர் வளர்த்தார், சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

இந்தியத் திருநாட்டின் எந்தவொரு மாநிலத்தையும்விட நந்தமிழ் மாநிலம் அதிலும் குறிப்பாக நாஞ்சில் நற்பதி நாட்டு விடுதலைப் போராட்டத்திலும் அதை முன்னின்று நடத்திய காங்கிரசுப் பேரியக்கத்திலும் பெரும் பங்கு எடுத்துக் கொண்டதற்குக் காரணமானவர்களில் மிக முக்கியமான இருவர் டாக்டர் எம்.இ. நாயுடு அவர்களும் சதாவதானி பாவலர் அவர்களுமாவர்.

டாக்டர் அவர்களின் தீவிர செயல்பாடுகளுக்குத் துணையாய் அமைந்த பாவலர் அவர்களின் சண்டமாருதப் பிரசங்கங்கள் மிகப் பிரசித்தி பெற்றவை.

தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தீவிரப்படுத்தப்பட்ட காலத்தில் தெருக்கூட்டி குப்பையள்ளிய நிகழ்ச்சிகளை—ஒத்துழையாமை இயக்கம் ஓங்கி வளர்ந்த நேரத்தில் ஆங்கிலப் படிப்பை—அதனால் கிடைத்த அரசு அலுவல்களை உதறி எறியச் செய்த சம்பவங்களை—விதேசித் துணி பகிஷ்கரிப்பு இயக்கம் விரிவாக்கப்பட்ட நேரத்தில் வீதி முனைகளில் எல்லாம் அந்நியத் துணியை மலையெனக் குவித்து தீக்கிரையாக்கிய நிகழ்ச்சிகளை டாக்டர் நாயுடு அவர்களும் பாவலர் அவர்களும் முன்னின்று நடத்திய வரலாற்றுச் சம்பவங்கள், அன்று இளைஞர்களாக இருந்து இன்று அறுபது அறுபத்தைந்து வயதினராக உள்ள பெரியவர்கள் வாயால் கதைபோலக் கேட்க முடிகின்றது.

நாஞ்சில் நாடானாலும் அதை அடுத்திருந்த நெல்லைச் சீமையானாலும் பாவலர் அவர்கள் இல்லாத இலக்கிய நிகழ்ச்சியே அன்று நடந்ததில்லை. அதே போன்று அவரில்லாத அரசியல் மேடையும் கிடையாது.

கம்பனிலிருந்து — சீறாவிலிருந்து — பாரதத்திலிருந்து இவையன்ன பிற இலக்கியங்களிலிருந்து பொருத்தமான கவிதை அடிகளைத் தேனில் குழைத்து தெவிட்டாது கூறி அவை வாயிலாக விடுதலையின் மேன்மை குறித்து விளங்க வைக்கும் தனித் திறத்தால் பாவலர் அவர்கள் பேசுகின்ற கூட்டங்களுக்குப் பெருந்திரளாக மக்கள் வந்தனர்; விடுதலை உணர்வு பெற்றனர்; வீர முழக்கங்களை எழுப்பினர்.

பாவலர் அவர்களின் உணர்ச்சி பூர்வமான உரைகள் ஆயிரமாயிரம் இளம் நெஞ்சங்களில் எழுச்சியூட்டி இந்திய விடுதலைக்காக இரத்தம் சிந்தவும் அவர்களை ஆயத்தப்படுத்தின. அதே வேளையில் அந்நிய துரைத்தனத்திற்கு ஆலவட்டம் வீசிக் கொண்டிருந்த, பாவலர் அவர்களின் இனிய நண்பர்கள்—அவர்களின் இலக்கியத் திறனில் தங்களை இழந்து விட்டிருந்த அன்பர்கள்—பலர் இதன் காரணமாக அவர்மீது வெறுப்புக் கொள்ளவும் விரோதம் பாராட்டவும் நேர்ந்தது. இதன் காரணமாக சில தொல்லைகளுக்கு ஆளானார் பாவலர் அவர்கள். உதாரணத்திற்கு ஒன்று : ஊருக்கெல்லாம் ஒளியூட்டிய மின்சாரம், அந்நிய அரசுக்கு விசுவாசம் காட்டி வந்த ஓர் தனி நபரின் ஒட்டு மொத்த விநியோக உரிமை காரணமாக பாவலர் அவர்களுக்குக் கிடைக்கவே இல்லை. சுதந்திர சூரியன் உதயமான பின்னரே பாவலர் இல்லம் மின்னொளி கண்டது.

பாவலர் அவர்களைத் தங்களின் அரசியல் ஆசானாகக் கொண்டோர் பலர் நாட்டு விடுதலைக்குப் பின்னர் நாடறிந்த தலைவர்களாகத் திகழ்ந்துள்ளனர். அமரர் ஜீவாவும் அவர் போன்றார் பலரும் பாவலர் அவர்களிடம் அரசியல் பயின்றவர்கள்; மேடைப் பேச்சுக்குப் பயிற்சி பெற்றவர்கள்.

காந்தீயத்தில் முழுக்க முழுக்கத் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட பாவலர் அவர்கள், கையால் நூற்றெடுத்த கதராலான உடையைத் தவிர வேறாடை எதனையும் தங்களின் உயிர் பிரிவது வரையிலே உடுத்தியதில்லை. இடுப்பிலே நான்கு முழக் கதர் வேட்டி; கழுத்தில்லாத முழுக்கைக் கதர்ச் சட்டடை; கழுத்தில் மடிந்து மார்பிலே தொங்கும் கரைபோட்ட நீண்ட கதர் அங்கவஸ்திரம்; தலையிலே கதர்க்குல்லாய் என்றிப்படி எந்நேரமும் காட்சி தருவார்கள்.

கதராடையை மணமகனின் ஆடை என்றும் மற்றையவை பிண ஆடை என்றும் விளங்கப் பேசி, ‘மணமகனாக இருக்க விரும்புகிறீர்களா?’ என்று கூட்டத்திற்குக் கூட்டம் கேள்வி கேட்டு விதேசித் துணியை யாவரும் வெறுத்தொதுக்கச் செய்தவர் பாவலர். மது விலக்குக்கு ஆதரவாக அவர் எழுதிய பாடல்கள் அனந்தம்.

காங்கிரசுப் பேரியக்கம் பற்றிப் பேசிய கூட்டங்களில் அதை விரும்பாத ஆங்கிலேய அடிவருடிகள் அவர்மீது விட்டெறிந்த கருங்கற்களைக் கையிலேந்தி நின்று, ‘இதோ அந்நிய ஆதிக்கத்தின் புதைகுழிக்கு முதற்கல் கிடைத்து விட்டது. தொடர்ந்து இரண்டாவது மூன்றாவது கற்கள் வரக்கூடும், இதைக் கண்ணாடிப் பேழையில் பாதுகாப்பாக வைத்துக் கண்ணே போல் காக்கக் கடமைப் பட்டுள்

ளோம். இந்தக் கல்லை விலை கொடுத்து வாங்குவோர் காலமெல் லாம் கண்ணியம் பெறுவர். இதை ஏலம் விடப்போகிறேன்' எனக் கூறி ஒரு ரூபாய் என்பார். இரண்டு, மூன்று, ஆறு, நூறு எனக் கூட்டத்தினர் போட்டி போட்டு அந்தக் கற்களை வாங்கிச் செல்வர். அதனால் வரும் பெரும் பணம் காங்கிரசு நிதிக்குதவும். இது போன்ற நிகழ்ச்சிகள் ஏராளம்.

பாவலர் அவர்கள் வெறும் பாப்புனைபவராக மட்டுமல்ல, பரந்த பாரதத்தின் விடுதலைக்காகப் பெரிதும் பாடுபட்டவரும் ஆவார். பண்டித நேரு போன்றோர் அருகிருத்தி காங்கிரசுப் பேரியக்கம் பற்றிக் கலந்துரையாடிய அளவுக்குப் பெருந்தலைவர்களில் ஒருவராகப் பாவலர் அவர்கள் விளங்கினார்கள் என்ற உண்மையை இன்றைய காங்கிரசார் எத்தனை பேர் அறிவர்? இத்தகைய உரையாடல்கள் நிகழ்ந்த டாக்டர் நாயுடு அவர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க இல்லம் வாழ்த்துதற் குரியதன்றோ!

பாவலர் அவர்களின் தேசத் தொண்டை—தீர உணர்வை—வீர உரையை — உடனிருந்து அனுபவித்து அறிந்த டாக்டர் நாயுடு அவர்களும் சிவதாணுபிள்ளை அவர்களும் வ.வே.சு. அய்யர் அவர் களும்கூட இப்போதில்லை. அமரர்களாகி விட்டனர். நமது தலை முறையைச் சார்ந்த இவர்களெல்லாம் பட்ட துயரங்களின்—தொல்லை களின்—விளைவாகக் கிட்டிய விடுதலை, பட்டுப் போகாமல் காக்கப் பட வேண்டியது இளைய தலைமுறையினரான நமது கடமை.

இதுவே அவர்களுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன்.

கைம்மாறு

டாக்டர். மா. நடராஜன், M.A., D.Litt

அறியாத இளம் பருவத்தே எனக்கு அரசியல் ஞானப்பாலூட்டிய அம்மையப்பர் மகாமதி செய்குதம்பிப் பாவலர் ஆவார். அன்று எனக்கு ஆண்டு பன்னிரண்டிருக்கும். காந்தியடிகள் காங்கிரசைக் கைக் கொண்டு, பட்டதாரிகள் ஒரு சிலர் நிறுவனம் என்றிருந்ததைப் பல்கோடி மக்களின் சாத்வீகப் போர்க்களமாக்கிச் சபர்மதிச் சிறை சென்ற காலம். ஒவ்வொரு மாதமும் பதினெட்டாம் நாள் அடிகள் சிறை சென்றதன் நினைவாக நாடெங்கும் தொண்டர்கள் தேசீய முழக்கத்தோடு ஊர்வலம் வந்து, மக்களைத் திரட்டி, சொற்பொழிவு களாற்றித் தட்டி எழுப்பி வந்தனர்.

இடலாக்குடியில் டாக்டர் எம்.இ. நாயுடு அவர்களின் இல்லமே தேசீயப் பாசறையாகப் பொலிந்தது. அங்கிருந்து அங்கப்பன் அவர்கள் இனிய, எழுந்த குரலில் பாரதிப் பாடல்களைப் பாட, அன்றைய தலைவர்கள் அணிவகுக்க ஊர்வலம் புறப்பட்டு நகரை வலம் வந்து கிருஷ்ணன் கோவில் போய்ச்சேரும். அங்கே கலைமகள் பேரில் நிறுவப்பட்ட இளைஞர் கழகத்தின் சார்பில் பெருங் கூட்டங்கள் நடைபெறும். இவ்வாறு திங்கள்தோறும் நடைபெறும். இதில் சிக்குண்ட சிறுவனாகிய நான், முதன் முதற் கேட்ட அரசியல் சொற்பொழிவு மகாமதி செய்குதம்பிப் பாவலர் அவர்களுடையதே.

சொற்பொழிவென்றால் போதாது; 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' என்ற பட்டம் அவர்களுக்கு முற்றிலும் பொருந்தும்; அவர்களுக்கே பொருந்தும். என் இளமை உள்ளத்தில் அன்றே நாட்டுப் பற்றையும் மொழிப் பற்றையும் நட்டுச் சென்றார். அவர் நினைவுக்கு எவ்வாறு கைம்மாறு செய்வேன்?

அறுபது ஆண்டுகளுக்கு முன் மகாமதி வகுத்துத் தந்த தடத்தில் சென்று நாட்டின் பொருளாதார விடுதலைக்காகத் தோளோடு தோள் சேர்த்து, மெய்வருத்தம் பாராது, கண் துஞ்சாது எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, பாவலர் பெருமான் கனவுகண்ட சமதர்மத்தை நனவாக்க உழைப்பதல்லால் அவர் நினைவுக்கு நாம் செய்யும் மற்று நன்றி யாது? வாழ்க நம் புலவர் பெருமான் திருப்பெயர்! வாழ்க அவரின் புனிதத் தொண்டு. ★

கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை

பேராசிரியர் கா. அப்துல் கபூர், M.A.,

பரந்து விரிந்து கிடக்கும் பாருலகப் படத்தை உற்று நோக்குவோர் ஒரு பசுவின் வடிவத்தைக் கற்பனை செய்து மகிழ்வதுண்டு. அப்பசுவின் தலைப்பகுதி ஐரோப்பா; முதுகுப் பகுதி சைபீரியா; வால் போல்வது ஜப்பான்; மடியாக அமைவது பாரதம்; அம்மடியிலிருந்து பால்சுரக்கும் சுரையாக அமைவது தென்பாண்டி நாடு.

“தரணியே பசுவெனச் சாற்றலும் மற்றதில்
பரதமே மடியெனப் பகர்வதும்—சுரதமேல்
பால்சொரி சுரைதென் பாண்டியென்பது
மேல்விளம் பாதே விளங்கும்”

—என்பதாக இக்கருத்திற்குப் பாவடிவம் தருகின்றார், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள். நீர் வளமும் நிலவளமும் மலைவளமும் மனவளமும் கைகோத்துக் களிநடம் புரியும் மண்ணில் கலைவளமும் கவிவளமும் பெருக்கெடுத்து ஞானப்பால் சுரப்பதில் வியப்பில்லை. இவ்வுண்மையை விளக்கும் தென்பாண்டி நாட்டின் தெவிட்டா இலக்கியங்களுள் தனியிடம் பெற்றுத் திகழ்வது ‘கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை’. இந்நூலின் ஆசிரியரும் பாட்டுடைத் தலைவரும் தென்பாண்டி நாட்டின் சிறப்புக்குக் காரணமான சீரியர்கள்.

தென்பாண்டி நாட்டின் தொல்பகுதிகளில் ஒன்றாகிய காயல் பட்டினத்தில் தோன்றி அறிவுக் களஞ்சியமாகவும் பன்னூலாசிரிய

ராகவும் பண்பட்ட ஞானியாகவும் திகழ்ந்தவர்கள் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்கள். அவர்களின் வாழ்க்கைத் துணைவியார், மாறாப் புகழ் படைத்த புனிதவதியார் ஸாறா உம்மா அவர்கள். இவ்விருவருக்கும் "பிறவிச் செல்வமாக" ஏறத்தாழ 143 ஆண்டுகளுக்கு முன்னர் ஹிஜ்ரி 1264 றஜபுத் திங்கள் முதல் நாள், புதன்கிழமை யன்று, கீழக்கரையில் தோன்றியவர்களே கல்வத்து நாயகம் என்னும் காரணப் பெயர் பூண்ட ஞானியர் திலகம். நாகூர் நாதர் ஷாஹுல் ஹமீது ஆண்டகை அவர்கள்பால் அளப்பரும் ஈடுபாடு கொண்டிருந்த தந்தையார் தம் செல்வக் குழவிக்குச் சூட்டிய பெயர் செய்யது அப்துல் காதிர் என்பதாகும். இவ்வாறு தோன்றிய செல்வர் இளமையிலேயே சீரிய ஒழுக்கமும் கூரிய அறிவும் திருமறை ஞானமும் திருநெறி உணர்வும் வாய்க்கப் பெற்றார். காதிரியா தரீகா எனப்படும் மெஞ் ஞான வழியில் தம் தந்தையார் அவர்களின் சீடராகிப் பாட்டனாராகிய மாமேதை சதகத்துல்லா அப்பா அவர்களுடன் ஆத்மீகத் தொடர் புண்டு, தமக்குரிய ஒரு தனியிடத்தில் ஏறத்தாழ 30 ஆண்டுகள் "கல்வத்து" என்னும் தனித்தவம் பூண்டு தனித்திருந்தார்கள். இச்சிறப்பின் காரணமாகவே அவர்களுக்கு "கல்வத்து நாயகம்" என்னும் காரணப் பெயர் அமைந்தது. தனித்திருந்து அருந்தவம் மேற்கொண்ட அவர்கள் 18 நாட்களில் 'தஜல்லி' எனப்படும் இறை வெளிப்பாடுற்றுக் காணாத காட்சிகள் கண்டு பூணாத நிலையாகிய 'கமாலியத்' என்னும் நிறைவான நிலையைப் பெற்றார்கள். தனித்தவ நிலையிலே ஹிஜ்ரி 1331 ஷவ்வால் 27-ம் நாள் மண்ணுலக வாழ்வைத் துறந்தார்கள். இன்று தமிழ் கூறும் நல்லுலகில் பல்லா யிரத்தவர் அவர்களின் 'தரீகத்தில் காதிரியா' என்னும் ஞான நெறியைப் பின்பற்றி வருகின்றனர். இவ்வருமகனாருக்குப் பாமாலை சூட்டிய பெருமகனார் பலராவர். மேலப்பாளையம் காளை ஹஸனலிப் புலவர், ஜமால் செய்யிது முஹம்மது ஆலிம் சாஹிப், யாழ்ப்பாணம் நித்தியானந்தன் ஆகியோர் அவர்களுள் குறிப்பிடத்தக்கோர்.

கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலையின் ஆசிரியர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள், பாட்டாறாகிய கோட் டாற்றில் பிறந்து மகாமதி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம் என்னும் பட்டங்களைப் பெற்றவர். 'ஓரும் அவதானம் ஒரு நூறு செய்திந்தப் பாரில் புகழ் படைத்த பண்டிதர்' எனக் கவிமணி அவர்களால் பாராட்டப் பெற்றவர். அறிவுக் கடல், இலக்கியப் பொருப்பு, கவிக் கொண்டல், கற்பனை யூற்று, உவமைக் களஞ்சியம், உரையாசிரியர், பதிப்பாசிரியர், நல்லாசான். அவர்களின் தன்னிகரற்ற தமிழ்ப் புலமையும் தேர்ந்த ஞானமும் தெவிட்டாத சொல்லாட்சியும் இப்பா மாலையை நிலக்களனாகக் கொண்டு கடன்மடை திறந்தாற் போலப் பொங்கிப் பாய்வதைக் காணலாம். இப்பாமாலைப் பாமலர்கள்

ஒவ்வொன்றும் செந்தமிழ்த் தேன் பிலிற்றும்; சொல்லிதழ்கள் ஒவ்வொன்றும் உள்ளத்தைச் சொக்கவைக்கும் ; பாடல்களின் பக்திச் சுவை ஆறாகப் பெருகும். இனிய இசை பொருந்திய கொச்சகக் கலிப் பாக்களாலான இப்பூமாலை பாவலர் அவர்களின் பைந்தமிழ்ப் புலமையைக் காலமெல்லாம் பறைசாற்றி நிற்கும்.

"பொன்மாலை தேயுமலர்ப் பூமாலை வாடுமணிக்
கன்மாலைத் துண்டுபடுங் காரணத்தால்—சொன்மாலை
என்மாலை என்றொருநூல் ஈந்துதவினான் பெருமாள்
வன்மாலை நீத்து மகிழ்ந்து"

—என்பதாகப் பாவலர் அவர்கள் இன்னொரு நூலுக்கு அளித்த மதிப்புரை அவர்தம் இந்நூலுக்கு மிகப் பொருந்துவதாகும்.

பாமாலையின் சீரிய தொடக்கமே நம்மைப் பேரின்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்து விடுகிறது. நச்சுப் பொருட்களைச் சுட்டெரிக்கும் சூழலைத் தூய்மையாக்கி, புத்தொளியும் நறுமணமும் பரப்பவல்லது கற்பூரம். மறுமை வாழ்வில், சுவனபதியில் இறைவனின் நல்லடியார்கள் கற்பூரம் கலந்த பானத்தை அருந்துவார்கள் என்பது திருமறை. தன்னை நாடிவரும் அன்பர்களின் தீக்குணங்களும் தீச்செயல்களும் ஆகிய நச்சுத் தன்மைகள் தீய்ந்து போவதற்குக் காரணமாக இலங்கும் கற்பூரவொளி போன்றவர்கள் கல்வத்து நாயகமவர்கள். அவர்களுக்குக் கழுத்திலே பூமாலை சூட்டாமல் பாதத்தில் பாமாலை பூட்டுகின்ற பணியும், ஐம்புலன்களையும் ஒடுக்கி, தூய்மையெலாம் அடக்கி, எழில் கனியும் கவி மலராகத் தருகின்ற பாங்கும் சுவைத்தின்புறத் தக்கன.

"அற்பூர நும்மடிக்கே யஞ்சவித்த நெஞ்சினொடு
பொற்பூர வின்னிசைப்பாப் பூட்டிமகி ழீட்டேனோ
இற்பூர அன்பருளத் தேற்றிவைத்துப் போற்றுமொரு
கற்பூர தீபமொத்த கல்வத்து நாயகமே!"

அண்ணல் பெருமான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருமைத் தோழராகவும் இஸ்லாமியக் குடியரசின் முதற் கலீபாவாகவும் விளங்கிய ஹஸரத் அபுபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் பரம்பரையில் பாட்டுடைத் தலைவர் தோன்றியது ஒரு தனிச் சிறப்பு. அவர்களின் முன்னோர்களில் ஒருவராகிய செய்யிது முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்கள் அருந்தவம் மேற்கொண்டு 'மஜ்தூப்' எனப்படும் பரமானந்த வெள்ளத்தில் மூழ்கிக் கானகத்தில் உலவி வந்ததால் அவர்களுக்குக் "காடுமுறித்தார்" என்னும் காரணப் பெயர் உண்டாயிற்று. இதனையே ஆசிரியர்,

"...வாடுமுறித் தோங்குசித்தீக் மாமரபில் வந்தபெருங்
காடுமுறித்தார் குலத்தீர் கல்வத்து நாயகமே!"

—எனக் குறித்தார். மேலும் கல்வத்து நாயகமவர்களின் உயர்வின் உச்ச நிலையாகத் திகழ்வது அவர்கள் பெற்றிருந்த "மௌலல் கௌமி'' என்னும் சிந்தைக்கினிய சிறப்புப் பட்டமாகும். இத் தொடர், 'இனத்தின் தலைவர்' என்னும் பொதுப் பொருள் தருவதாயினும் மெஞ்ஞானத் துறையில் ஆழ்ந்த தத்துவங்களை உள்ளடக்கியது. பாரசீக இலக்கியப் பூக்காட்டின் மாமேதை மௌலானா ரூமி அவர்களும் இந்தத் தொடரைப் பயன்படுத்தியுள்ளது சிந்தைக்கு விருந்தாம். இதனையே,

"...மலைவைத்த தீபமொத்த மௌலல்கௌமி யானவெங்கள்
கலைவைத்த மாமதியே கல்வத்து நாயகமே!''

—என மாமதியார் குறித்துள்ளார்.

ஒரு நூறு பாடல்களைக் கொண்ட இப்பாமாலையின் செய்யுட்களின் ஈற்றடிகள் அனைத்தும் ககர இனத்திலே தொடங்குவது ஒரு தனிச் சிறப்பு. அவ்வாறு ஈற்றடிகளில் அமைந்த சில சொற்களில் பாட்டுடைத் தலைவரின் அருஞ்சிறப்புக்களை ஆசிரியர் அமைத்துக் காட்டும் திறம் பாராட்டுதற்குரியது. கைகண்ட மாமருந்தே—கான் கண்ட கற்பகமே—காலவட்ட மாமதியே—கட்டி வைத்த பொக்கிசமே —காராரும் கையுடையீர்—கள்ளிருக்கும் பூம்பதத்தீர்—(இரு) கான் மலரும் கான் மலரீர் – (இருட்) கரை கடந்த வாரிதியே என்றிவ்வாறாக எழுந்துவரும் சொல்லோவியங்கள் ஏராளம். பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போல் சில சொல்லாற் பெரும் பொருட்கிடனாகி வரும் செய்யுட்கள், ஆசிரியர் அவர்களைக் கைதேர்ந்த கலைஞராகக் காட்டுகின்றன. 'நாம் ஒரு முறை நவின்று விட்டால் நம் நாநுனியை விட்டகலாமற் பற்றி நிற்கும் சொற்களைச் சமைப்பவனே கவிஞன்' என்பதாகக் கூறுவார்கள். அவ்விலக்கணத்திற்குப் பாவலர் அவர்கள் இலக்கியமாகத் திகழ்கின்றார். இரு பாடல்களில், "நாடும்", "நாடி" எனும் இரு சொற்களை அணி நயம் தோன்ற ஆசிரியர் பயன்படுத்துவது செவிகளுக்குத் தேன் பாய்ச்சுகின்றது.

"வானாடும் பூநாடு மற்றனவுந் தானாட
நானாடு நும்மருட்டேன் நாயேனுண் டுய்யேனோ
ஊனாடு மாந்தரெலா முண்ணோட முன்னாடுங்
கானாடும் பூம்பதத்தீர் கல்வத்து நாயகமே!"

"மண்ணாடிப் பெண்ணாடி மாநிதியந் தானாடி
புண்ணாடி நின்றநெஞ்சப் புல்லனையு மாளீரோ
உண்ணாடி வந்தவெலா முற்றுணர்ந்து மற்றுரைத்துங்
கண்ணாடி யானீரென் கல்வத்து நாயகமே"

மனத்திலே ஒன்றை நினைத்துக் கொண்டு குருநாதரை நாடிச் செல்லும் சீடர்களின் சிந்தையறிந்து அவர்கள் எண்ணியவற்றை எடுத்துரைப்பது கண்ணாடியினும் சிறப்பன்றோ ?

காரிகையின் கடைக்கண் பார்வையால் நெஞ்சழிந்து நிற்கும் ஆடவர்க்கு நரக வேதனை விளையாமல் காக்கவேண்டும் என்னும் கருத்தை,

"மைதூக்கிச் சேலொதுக்கு மங்கைமட மாதர்விழிக்
கெய்தூக்கி நெஞ்சமுங்கி யீடழிந்து நின்றவெனைப்
பைதூக்கி ஆடரவப் பாழ்நரகிற் புக்காமல்
கைதூக்கி யாளுமெங்கள் கல்வத்து நாயமே"

—படமெடுத்தாடுகின்ற பாம்புகள் நிறைந்த கொடுநரகிலிருந்து கைதூக்கியாள வேண்டுமெனக் கேட்பது நெஞ்சை நெகிழ்விப்பதாகும்.

கவிதைகளில் அமையும் ஓசை நயம் காதுகளைக் கவர்ந்து எழிலூட்ட வல்லதாகும். இப்பாமாலையில் அந்நயம் நெடுகிலும் பரந்து காணப்படினும் ஒரு சில இடங்களில் விஞ்சி நிற்கின்றது. அதற்கோர் எடுத்துக் காட்டு :

"வேல்சோர ஓரிடக்கண் மெல்லிநல்லார் வேட்கையினைப்
பால்சோர நின்றீந்த பாசவலை பட்டொரீஇ
மேல்சோரக் கைசோர மெய்சோர வாய்சோரக்
கால்சோர நின்றிருந்தேன் கல்வத்து நாயகமே!"

—போர் வீரர் பயன்படுத்தும் வேல் கூடத் தோற்றுவிடும் கூர்மை வாய்ந்த, செவ்வரி படர்ந்த கண்களையுடைய, மாதர்களின் கூந்தல் சோர்ந்து விடும்படியாகக் கவர்ந்த பாசவலையில் வீழ்ந்து விடுபட்டு கல்வத்து நாயகத்தின் திருமுன் வந்து காலும் கையும் வாயும் மெய்யும் தளர்ந்து நிற்கும் காட்சியை ஆசிரியர் இங்கு அழகாகக் காட்டி யுள்ளார். இத்தகைய ஓசை நயத்துடன் கற்பனையும் கலந்து விடுகின்ற இடங்களில் பாடல்கள் சுவைமிக்கனவாய் அமைகின்றன. கானகத்தில் மதம் கொண்ட யானைகள் வெறிபிடித்து அலைவ துண்டு. வேல் போன்ற கண்களையுடைய மாதர்களின் கொடுமை யான காதற் காட்டில் யானையைப் போன்று வெறிபிடித்து உழலாமல்

செங்கோல் பிடித்து ஆட்சி செய்கின்ற மன்னர்களும் காண்பதற்கரிய கல்வத்து நாயகத்தின் காலைத் தொட்டு கண்களில் ஒற்றுகின்றார் ஆசிரியர்.

"வேல்பிடித்த கண்மடவார் வெய்யமையற் காட்டகத்தே
மால்பிடித்த யானையென மாழாந்து நில்லாமற்
கோல்பிடித்த கையுடைய கொற்றவருங் காண்பருநுங்
கால்பிடித்தேன் கண்ணில்வைத்தேன் கல்வத்து நாயகமே"

—என்பது பாடல்.

பெரும் புலவர்களின் ஆற்றலை அறிதற்கு ஒரு கருவியாகப் பயன் படுவது அவர்கள் கையாளுகின்ற உவமைகளாகும். பொருத்தமான உவமைகளைக் கையாண்டதன் காரணமாகப் பல புலவர்களின் இயற் பெயர் மறக்கப்பட்டு அவர்கள் பயன்படுத்திய தொடர்களே அவர் களுக்குப் பெயர்களாக நிலைத்தன. செம்புலப் பெயனீரார், தேய்புரி பழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார் போன்ற பல பெயர்கள் அதற்கு எடுத்துக் காட்டுகள். இப்பாமாலையில் பாவலர் அவர்கள் பயன்படுத்துகின்ற உவமைகள் அவருக்கு அழியாப் புகழை அளித்து விடுகின்றன. பயனற்று வாழும் தன்னிலையை விளக்குவதற்குத் தாம்பூலம் அருந்திவிட்டு இறுதியில் கக்கிவிடுகின்ற கோதினை உவமையாகக் கொண்டு,

"கொக்கிவிட்ட சங்கிலிபோற் கூண்டெழுந்து நும்மடியார்
சொக்கிவிட்ட நல்லருட்கே தோய்ந்துநின்றா ரையோநா
னுக்கிவிட்ட நெஞ்சினனா யுள்ளுடைந்து மெய்ம்மயங்கி
கக்கிவிட்ட தம்பலொத்தேன் கல்வத்து நாயகமே''

—எனப் பாடுகின்றார். 'சிறுதுரும்பும் பல்குத்த உதவும்' என்பது பழமொழி, கக்கிவிட்ட வெற்றிலைக்கோது ஒன்றைத்தான் யாருமே தீண்டுவதில்லை. 'கண்ணாடியை அடுத்த பொருள் அக்கண்ணாடி யில் காட்சி அளிப்பதைப் போலத் தமது மனத் தாமரையில் கல்வத்து நாயகம் வீற்றிருந்து அருள் பொழிய வேண்டுமென்றும், ஆடித் திங்களில் உதிர்ந்து விடுகின்ற இளஞ் சருகை யொத்து இதயம் காற்றாடி யாகாமல் காக்கவேண்டும்' என்றும் ஓரிடத்தில் உரைப்பார். 'பொருங்காலி போன்ற மடப்புல்லரையும் தாங்குகின்ற கருங்காலித் தூண் போன்று உறுதிபடைத்தவர்கள் கல்வத்து நாயகம்' எனப் பிறிதோரிடத்தில் பகர்வார். 'பாற்கடலைப் பருகி எழும் மேகத்தி லிருந்து பொழிகின்ற மாரி போன்று அருள் சுரக்க வேண்டும்' என வேறோரிடத்தில் வேண்டுவார். 'இறைவன் எள்ளுக்குள் எண்ணெய் போன்று எங்கும் நிறைந்திருப்பவன்' என இன்னோரிடத்திலே இயம்புவார். 'கலங்குகின்ற தம் நிலையைக் காதற்ற ஊசி'க்கு

ஒப்பிட்டுக் காட்டுவார். 'காந்தமுற்ற ஊசியொத்து சேந்தமுற்ற நாயகர்தான் சேர்ந்திருக்க' நாடுவார். ஒரு பாடலிலேயே ஐந்து உவமைகளை அடக்கிக் காட்டுவார்.

"சுழலிலிடு பஞ்சென்னச் சூழ்கமரிற் பாலென்னத்
தழலிலிடு நெய்யென்னத் தத்தளித்து மாளாது
நிழலிலிடு தூளென்ன நின்றுய்ய நன்றுவந்தேன்
கழலிலிடு தோலாக்கீர் கல்வத்து நாயகமே!"

இந்த ஈற்றடியில் 'கழலிலிடு தோலாக்கீர்' என வருந்தொடர் இரு பொருள் ஈந்து நிற்கிறது. 'தத்தளித்து நிற்கும் என்னை தாங்கள் செருப்புத் தோலாகவேனும் பயன்படுத்துங்கள்' என்னும் பணிவையும், 'ஏங்கி நிற்கும் என்னைச் செருப்புத் தோலாகக் கொண்டு துன்புறுத்தலாகாது' என்னும் இரக்கத்தையும் இதனுள் காணலாம். 'சிரமாறுடையான்' என்னும் தமது செய்யுள் தொடர் ஒன்றுக்கு ஐந்து பொருள் கூறுவரன்றோ பாவலர்!

சிரம், ஆறுடையான் — ஆறு தலைகளையுடைய முருகன்

சிரம், மாறுடையான் — மாறுபட்ட யானனத் தலையை உடைய விநாயகன்

சிரம், ஆறுடையான் — ஆறாகிய கங்கையைத் தலையிலே கொண்ட சிவபெருமான்

சிரம், ஆறுடையான் — ஆற்றிடைத் துறையாகிய திருவரங்கத்தில் தலையை வைத்துப் பள்ளி கொண்ட திருமால்

சிரம், ஆறுடையான் — தலையாய நெறியை மக்களுக்குக் காட்டும் முழுமுதற் கடவுளாகிய பரம் பொருள் - அல்லாஹ்

என்றிவ்வாறாகப் பொருள்விரித்த பாவலர்தம் பாடல்கள் பல இடங்களிலும் பல்பொருள் வழங்கும் கருவூலமாக அமைகின்றன. உரையாடலிலும் சொற்பொழிவிலும் சொற்சிலம்பம் ஆடுவது பாவலர் அவர்களுக்குக் கைவந்த ஒரு கலையாகும்.

"மாலூருங் கோட்டூரும் வாய்ந்தகடைக் காவூரும்
மேலூருங் கீழூரும் மெல்லியர்பால் வேட்பேனோ..."

என்னும் இப்பாமாலைத் தொடர் அவ்வாறு அமைந்ததாகும். இதில் கூறப்படும் ஊர்கள் மாதர்கள் இடத்தில் அடங்கி இருப்பதை ஆய்வது ஒரு புதிருக்கு விடை காண்பது போலாகும்.

வையகத்து வாழ்க்கையின் மாசுகளிலும் ஆசாபாசங்களிலும் சிக்கித் தவிக்கும் மக்கள் நிலையினைத் தம்மீதேற்றிப் பாடுவது தோத்திரப்பா பாடுவோரின் ஓரியல்பாகும். அருணகிரிநாதர் பட்டினத்தடிகள், தாயுமானவர், மஸ்தான் சாஹிப் போன்றோரிடத்து இவ்வியல்பைக் காணமுடியும். இந்நிலையில் இப்பாமாலை ஆசிரியர் தம்மைத் தாழ்த்திப் பாடும் பாடல்கள் உள்ளத்தை உருக்குவனவாக அமைந்துள்ளன.

"அடக்கமுடி யாவாசை யாறிழுக்கப் பேறிழந்து
கிடக்கமுடி யாதுழன்றேன்..."

"நண்பார்த்த வண்குடும்ப நாடகத்தி லாடுகின்றேன்..."

"சூர்காத்த வெந்துயரின் சூழலிடைப் பட்டுலைந்து
கார்காத்த பக்கியொத்தேன்..."

"தூலமெலாம் பூரிப்ப சொத்தைமனம் போம்வழியே
காலமெல்லாம் போகின்றேன்..."

"பொல்லாரைக் கூடியவர் போம்நெறிக்கே போந்தலைந்து
நல்லாரைக் காணவுநான் நாணுகின்றேன் நாய்க்
குணத்தேன்..."

"வஞ்சமலர் நெஞ்சமொடு வல்வழக்கும் பொய்யுரையும்
விஞ்சமலர் வாய்கொண்டு விண்டுரைத்தேன்
வெய்யேனான்..."

"சூதிட்ட ஐம்புலனும் சூழ்ந்தகுண மாறுமொன்றாய்
வாதிட்டுத் தாழ்த்துமெனை..."

—இவ்வாறாகப் பாடும் இடங்கள் படிப்போர் நெஞ்சத்தில் பதிந்து விடுகின்றன, 'சேய்பிழையைத் தாய் பொறுப்பது போலும், சிறியோர் பிழையை மேலோர் பொறுப்பது போலும், நாயேன் பிழையை நாயகர் பொறுத்தருள வேண்டும்' எனக் கேட்பதும் 'வேல்பட்ட புண் போன்று உள்ளம் வெந்து மாளாமல் இருப்பதற்கு நும் கால்பட்ட தூசருள்வீர் கல்வத்து நாயகமே!' எனக் கெஞ்சி நிற்பதும், 'என்னை ஆட்கொண்டால் என் ஏழை நெஞ்சைக் காணிக்கையாக வைப்பேன்' எனக் கூறுவதும் நம் உள்ளத்தை உலுக்கியே விடுகின்றன.

ஞானமேதையாக விளங்கிய கல்வத்து நாயகமவர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழில் நல்ல பயிற்சியும், தமிழ்ப் பழமொழிகளில் நல்ல ஈடுபாடும், தமிழ் இலக்கியங்களில் – சிறப்பாக திருக்குறளில் –

தேர்ந்த அறிவும் பெற்றிருந்தார்கள் என்பதை அவர்களின் வாழ்க்கை வரலாறும் அவர்கள் எழுதிய திருமுகங்களும் தெளிவாகக் காட்டு கின்றன. இப்பண்பினை உணர்ந்திருந்த பாவலர் அவர்கள்,

"பண்ணெடுத்த செந்தமிழ்சேர் பாவெடுத்துப்
போற்றுமெனைக்
கண்ணெடுத்துப் பார்த்தருள்வீர் கல்வத்து நாயகமே!"

—என வாயினிக்கப் பாடுவது தமிழ் முஸ்லிம் பெருங்குடி மக்களின் தாய் மொழிப் பற்றிற்கு மிகச் சிறந்ததோர் எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது.

இவ்வாறாகச் சீலமெலாம் ஒருருவாய்ச் சேர்ந்தெழுந்த சீரியரை – நற்றவரும் ஞானநெறி நாடுநரும் நான்மறை நூல் கற்றவரும் போற்றவரும் புனிதரை - அந்தரத்தில், அம்புவியில் ஆய பல சீலர் தம்மைத் தந்தரத்தில் ஆக்கவல்ல சால்பு மிக்கவரை – பாட்டாற்றி வந்த பக்தர் மனப் பான்மை முற்றும் கேட்டாற்றிக் கேட்கவல்ல கேண்மை மிக்கவரை--மண்ணொளியும் பொன்னொளியும் வாய்ந்த பல மாமணியின் தண்ணொளியும் ஒவ்வாத தாளொளி உடையாரை - குறைதவிர்த்த அன்பருளக் கோனகத்துள் மேவும் கறைதவிர்த்த மாமதியை – நிரைகடந்த அன்பர் குழாம் நேர்ந்திறைஞ்சச் சூழ்ந்த வருட் கரைகடந்த வாருதியை – மலங்கரை விவேகமிலா வம்பர்வள வாரிதிக்கோர் கலங்கரை விளக்க மொத்தவரை – சொல்லுருகப் பாடு கின்ற தோத்திரத்தால் இதயக் கல்லுருக வைக்கின்றார் கவிக்கோன். தென்பாண்டி நாட்டு இலக்கியச் சோலையில் கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை ஒரு வாடாத நறுமலர்; தோத்திரப்பா வரிசையிலே ஒரு காத்திரப்பா; இஸ்லாமிய இலக்கிய வானிலே ஒரு இன்னிலா; தமிழிலக்கியக் கடலிலே ஓர் அரிய முத்து. வாழ்க அப் பாமாலை! வாழ்க அப்பாமாலை!

பாரகம் போற்றும் பாவலர்

திருக்குறள்மணி டாக்டர் க.த. திருநாவுக்கரசு

தமிழக மறுமலர்ச்சிக்கு இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் கட்டியம் கூறி, வரவேற்பு நல்கிய தமிழறிஞர்களுள் குமரி நாடு ஈந்த செய்குதம்பிப் பாவலர் சிறப்பு மிக்கவராவார்.

பல பட்டை தீட்டப்பட்ட வைர மணியாக விளங்கியவர் பாவலர். அவருடைய நுண்மாண் நுழைபுலனும், படைப்பு இலக்கியத் திறனும், சமரச நோக்கும் பாரகம் போற்றும் திறமையைத் தேடிக் கொடுத்தன.

அவரை நான் கண்டது இல்லை! ஆனால், புலவர்கள் பலர் வாயிலாக மகாமதிப் புலவரின் அருமை பெருமைகளை நான் கேட்டு வியந்ததுண்டு.

அவருடைய படைப்புகளில் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது அவர் இயற்றிய 'மாணவர் ஆற்றுப்படை' எனும் சிறு நூலாகும்.

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் மதுரை மாநகரில் பாண்டித்துரைத் தேவரால் நான்காவது தமிழ்ச் சங்கம் தொடங்கப் பெற்றது. அந்தத் தமிழ்ச் சங்கத்திற்கு வந்து மாணவர்களைப் படித்துப் பயன்பெறுமாறு பாவலர் ஐயா, தமிழுணர்வு உடைய மாணவர்களை ஆற்றுப்படுத்துகிறார். அவ்வாறு ஆற்றுப்படுத்தும் பொழுது தமிழின் சீரிளமைத் திறத்தையும், பாண்டிய நாட்டின் பழம் பெருமையையும், மதுரையில் பண்டைக் காலத்தில் சிறப்புற்று விளங்கிய மூன்று தமிழ்ச் சங்கங்களின் மாட்சியையும் விளக்குகிறார்.

பிறகு, 'மதுரைக்கு எங்கிருந்து எப்படி வருவது?' என்பதைப் பற்றியும் பாவலர் ஐயா விரிவாகப் பேசுகின்றார். சென்னையிலிருந்து

கால்நடையாகப் புறப்பட்டால், உண்டாகக் கூடிய துன்பங்களையும் எத்தனை மாதங்கள் ஆகும் என்பதையும் பாவலர் பெருமான் எடுத்துரைக்கிறார். அடுத்து மாட்டு வண்டியில் புறப்பட்டால் மதுரையை வந்தடைய எத்தனை நாட்களாகும் என்பதையும் தெரிவிக்கிறார். ஆனால் வெள்ளைக்காரன் நமக்கு அளித்திருக்கிற 'வரப்பிரசாதம்'ாகிய ரயில் வண்டியில் ஏறினால், மறுநாளே மதுரையை அடைய இயலும் என்பதை அறிவிக்கிறார்.

எனவே "நேரத்தையும் உழைப்பையும் வீணாக்காமல் மாணவ மணிகளே! தமிழ்ப் பண்டிதர்களே! ரயிலில் ஏறி, விரைவில் மதுரை மாநகரை வந்தடைக! அங்கே பாண்டித்துரைத் தேவர் அமைத்துள்ள தமிழ்ச் சங்கம் உங்களைக் கனிவுடன் வரவேற்கும்; அங்குத் தங்கி, உங்கள் புலமையை வளர்த்துக் கொள்ளலாம். எனவே விரைந்து வாரீர்" எனும் அழைப்பினைப் பாவலர் ஐயா விடுத்துள்ளார்.

இந்த முறையில் வழிகாட்டி, அழைப்பினை விடுக்கும் பகுதிகளுக்கு இடையே ரயிலின் பெருமையைப் பேசுகின்றார் ஆசிரியர். அவற்றுள், "ரயிலே! ரயிலே! உன்னைப் போல் பரோபகாரி இந்த உலகில் உண்டோ? கடவுளே முயன்றாலும் ஒன்று சேராத சாதி வெறி பிடித்து அலையும் மக்களை ஒன்றாகச் சேர்ந்து பயணம் செய்யுமாறு செய்து விட்டாயே! போற்றுதும் நின் செயலை இப்புவி மிசையானே!'' என்று பாராட்டியுள்ளார்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், இந்தப் பகுதியை அப்படியே தம்முடைய 'கிந்தனார்' காலட்சேபத்தில் எடுத்துப் பயன்படுத்தியுள்ளார்.

ரயிலின் சாதனையாகப் பாவலர் பாடியுள்ளது கலைவாணர் உள்ளத்தைச் சுண்டி ஈர்த்துள்ளது. ஆதலினால். அதைத் தம்முடைய வில்லுப் பாட்டு கிந்தனார் காலட்சேபத்தில் அப்படியே சேர்த்துக் கொண்டுள்ளார்.

மேற்கண்ட ரயிலின் சாதனையைப் பற்றிய பகுதி, பாவலருடைய சீர்திருத்த நோக்கை வெளிப்படுத்துகிறது. 'பல்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களாகத் தமிழ் மக்கள் இருந்தாலும் அவர்கள் எல்லாம் ஒன்றாகக் கூடித் தமிழை வளர்க்க, மதுரைக்கு வரவேண்டும்' என்னும் அவாவை – முற்போக்குச் சிந்தனையைப் பாவலர் நயமாகத் தெரிவித்துள்ளார்.

வாழ்க தமிழ்!

வளர்க பாவலரின் புகழ்!

★

என் நினைவுகள்

டாக்டர் எஸ். முத்துக் கருப்ப பிள்ளை, M.B., B.S.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களை நான் பள்ளி மாணவனாக இருக்கும்போது — சுமார் 65 வருடங்களுக்கு முன்னரிருந்தே அறிவேன். அக்காலத்தில் அவரைத் தெரியாதார் தமிழ் நாட்டில் இலர். அவர் சதாவதானம் செய்து பெயர்பெற்றிருந்த காலம், அது. அந்த அரிய சாதனையை வேறு ஒருவரும் செய்து காட்டியதில்லை. பிற்காலங்களில் அஷ்டாவதானம் செய்தவர்களையே காண்பது அரிது. அதைச் செய்பவர்களுக்கே மிகுந்த பெருமை உண்டென்றால் சதாவதானம் செய்வதைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?

பாவலர் தமிழ்ப் புலவராகவும் திகழ்ந்தார். அப்பொழுது நமது நாட்டில் தமிழில் புலமை கிட்ட வேண்டுமென்றால், அவர்களை அணுகித்தான் தமிழ் கற்கவேண்டும். அவர் மிகவும் சிறந்த தமிழ்ப் பேராசிரியருங்கூட. நமது நாட்டிலுள்ள தமிழ்ப் புலவர்களில் பலர் அவரிடம் சென்று பாடம் கேட்டவர்கள்தாம். அவர்களில் எனக்குத் தெரிந்தவர்களுள் பறக்கை, காலம்சென்ற மாணிக்க வாசகம் பிள்ளை அவர்கள் ஒருவர். எனது ஆரம்பக் கல்வி குருவாக இருந்து, பிறகு தமிழ் வித்துவானாகி, தமிழ் ஆசிரியர்களுள் சிறந்து விளங்கிய தேரூர், திரு உ. சிதம்பரதாணுபிள்ளை அவர்கள் மற்றொருவர்.

பாவலர் அவகளை நான் நேரில் சந்தித்தது மேற்கூறிய காரியங்களில் அல்ல. 1920-ம் ஆண்டை அடுத்து நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் ஆரம்பித்த பொழுது அந்த இயக்கத்தில் நடுநாயகமாக விளங்கிய நமது காலஞ்சென்ற டாக்டர் எம் இ. நாயுடு அவர்களின் தோழராக அவர் விளங்கினார். அன்று காங்கிரஸ் இயக்கத்தில் சேருவதென்றால் அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களாக இருக்கவேண்டும். எனது தந்தையாரும் இயக்கத்தில் பெரும்பங்கு

எடுத்ததால் பாவலர் அவர்களை எனக்கு அடிக்கடி சந்திக்க வாய்ப்புக்கள் ஏற்பட்டன. நாகர்கோவிலில். இடலாக்குடியில், முகம்மதியப் பாடசாலையின் பின்பக்கமுள்ள தெருவில் அவர்களது பழைய வீட்டிற்குச் சென்ற ஞாபகம் இருக்கிறது.

பாவலர் அவர்கள் மிகவும் அடக்கமான எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்கள். அப்பொழுதே உடல் நலங் குன்றியிருந்தார்கள். எனினும் தேசீயக் காங்கிரஸ் இயக்கத்தில் அவர்கள் ஊக்கம் குறையவில்லை. காங்கிரஸ் பிரச்சாரக் கூட்டங்கள் அடிக்கடி நடக்கும். முக்கியமாக பாவலர் அவர்கள்தான் தலைமை தாங்குவார்கள். சிறந்த பேச்சாளர். கதை சொல்வது போலிருக்கும். அவர்கள் கருத்தை ஆணித்தரமாக மனதில் பதிய வைப்பார்கள். அவர்கள் பேச்சைக் கேட்கப் பல இடங்களில் இருந்தும் ஜனங்கள் வருவார்கள். தென் இந்தியாவில் மற்ற மாவட்டங்களைவிட நாஞ்சில் நாட்டில் காங்கிரஸ் இயக்கம் அன்று வலுவுற்றிருந்ததென்றால். கதர்ப் பிரச்சாரமும் அதுபோலவே. அவர்கள் வாயிலாகத்தான் டாக்கா மஸ்லினை ஒரு மோதிரத்தினுள்கூட உருவி எடுக்கலாம் என்பன போன்ற பழைய இந்தியாவின் சாதனைகளின் பெருமைகளை முதலாவதாகக் கேட்டிருக்கிறேன். பேச்சில் ஒரு தனி இனிமை உண்டு. பெரிய தமிழ்ப் புலவரானாலும் எளிய நடையில் யாரும் புரியும் விதத்தில் பேசுவார்கள். பேச்சைக் கேட்கக் கேட்க இன்னும் கேட்க வேண்டும் என்று தோன்றும்.

சிறந்த தேச பக்தர். காங்கிரஸ் கூட்டங்கள் கூடுவதற்கு முன்னர் கைராட்டை ஏந்தித் தெருத் தெருவாக பஜனைகள் நடக்கும். திலக் சுவராஜ் நிதி போன்றவைகளுக்கு பணவசூல் செய்வோம். மனம் கோணாமல் மற்ற தலைவர்களுடன் அவர்களும் அவைகளில் கலந்து கொள்வார்கள். அவர்கள் ஆர்வத்தை என்னவென்று சொல்வது?

இன்று நமது தாய்நாடு சுதந்திரமடைந்து நாம் முன்னேறிக் கொண்டிருக்கும் சமயத்தில் அவர்கள் அன்று செய்த தேச சேவையை நினைவுபடுத்துவது நமது நன்றியுள்ள கடமையாகும்.

பாவலர் நாயகம்

"சோமு"

சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் என்றால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரே சிம்ம சொப்பனந்தான்! நான் முதன் முதல் இந்த சிம்ம சொப்பனத்தைப் பற்றிக் கேள்விப்பட்டது, டி, கே. சி. அவர்களின் வீட்டில் நடந்த 'வட்டத் தொட்டி'க் கூட்டத்திலே! அங்கு கூடியிருந்த தமிழறிஞர்கள் எல்லாரும் அப்பொழுது நாஞ்சில் நாட்டில் நடைபெற்ற ஓர் இலக்கியத் திருவிழாவுக்குச் சென்று திரும்பி யிருந்தார்கள். அந்த விழாவில் பாவலர் அவர்கள் பொழிந்த சொன்மாரியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள், அத்தனை பேரும்!

சில ஆண்டுகள் கழித்துத் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையத்தில் நான் பணியாற்றி வந்தபோது, ஒருநாட் காலையில் பாவலர் அவர்களின் புதல்வர் கே.பி.எஸ், ஹமீது அவர்கள் எங்கள் அலுவலகத்தில் பணிபுரிய வந்து சேர்ந்தார். அதிலிருந்து அடிக்கடி பாவலர் அவர்களின் சிறப்புக்களைக் கேட்கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது.

பாவலர் அவர்களைச் சந்திக்கும் பேறு எனக்குக் கிட்டியதில்லை. எனினும் அவர்களோடு நெருங்கி உறவாடியவர்களின் பேச்சுக்களிலிருந்து பாவலரின் ஓவியம் எனக்கு நன்கு அறிமுகமாயிற்று என்றே சொல்லுவேன்.

இந்தக் காலத்தில் தமிழ் மொழியைப் பயின்று ஒரு தமிழ்ப் புலவராகி வளைய வருவதில் ஆபத்துக்கள் கிடையாது! ஆனால் அன்றைய நிலைமை வேறு. தமிழிலே பண்டிதன் எனப் பெயர்

வாங்க வேண்டுமென்றால் வெறும் பல்கலைக் கழகப் பட்டம் போதாது! எத்தனையோ சொற்போர்களாகிய மற்போர்களைச் செய்து வகை சூடியிருக்க வேண்டும். அந்தக் காலத்துப் படிப்பு அப்படி! பட்டம் பதவிகளை வைத்து மனிதர்களை ஏமாற்றிவிட முடியாத காலம் அது. இலக்கண இலக்கியங்களை எழுத்தெண்ணிப் படித்தாலன்றி உலகம் யாரையும் எளிதில் ஒப்புக்கொள்ளாது. மற்போர்கள் செய்து வாகை சூடி வெளியே வந்து விட்டால் மட்டும் போதாது; எந்த நேரத்திலும் மீண்டும் கோதாவில் இறங்குவதற்கு ஆயத்தமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட பயங்கரமான நாட்களில் தம்மைக் கண்டு எல்லாரும் நடுநடுங்கும்படியாக ஒருவர் விளங்கினார் என்றால் அவருடைய கல்வியைப் பற்றி என்னென்று சொல்வது?

இலக்கண இலக்கியங்களில் அந்தக் காலத்துப் படிப்புக்கு ஓர் உரைகல்லாகத் திகழ்ந்தார் சதாவதானி செய்குதம்பிப் பாவலர். அவருடைய பாராட்டைப் பெறுவதில் புலவர்கள் எல்லாரும் குறியாக இருந்தார்கள். அதைப் போலவே அவருடைய கண்டனத்திற்கும், குலை பதறினார்கள்.

பழமையான புலமையோடு, யாரும் மலைத்துப் போகும் வண்ணம் அவதானம் செய்யக் கூடிய ஆற்றல் பாவலரிடம் குடிபுகுந்தது. எனவே அறிஞர்கள் எல்லாரும் அவரை "மேல் வருக" என்று பணிந்து வரவேற்றார்கள்.

பாவலர் அவர்கள் எழுதி வைத்த நூல்கள் பல. அவர் பயிற்றிச் சென்ற மாணவர்கள் பலர். அவர் விட்டுச் சென்றுள்ள நினைவுகளோ பற்பல.

மொழியின் பெயராலும் புதுமையின் பெயராலும் ஏதேதோ விபரீதப் படைப்புக்களைச் செய்ய முனைகிற இந்தப் புரட்சி யுகத்திலே பாவலரைப் போன்ற புலவர்கள் இல்லை. 'தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டன்' என்று ஒரு வசனம் உண்டு. குட்டுதற்கும் தட்டுதற்கும் கையிருந்தால் மட்டும் போதுமா? பாவலருடைய படிப்பு வேண்டாமா?

பெருகி ஓடும் தமிழ் வெள்ளத்திற்குக் கரை கட்டி நெறி வகுக்க வேண்டும் என்றால் அந்தப் பணிக்குப் பாவலர் அவர்களின் நினைவு துணை செய்ய வல்லது. அந்த மரபைப் பேணுவதே சதாவதானி அவர்களின் நினைவுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் நாம் செய்யக் கூடிய பெரிய சேவையாகும்.

★

பாவலரின் சாற்றுக்கவி

"செந்தாமரை"

இற்றைய நாள் தமிழ் நூற்களில் சாற்றுக் கவிகளைக் காண்பது அரிது. நூலுக்கு அணிந்துரை, பாராட்டுரை, முன்னுரை, முகவுரை என இத்தியாதி தலைப்புக்களில் - வசன நடையில்-நூலைப் பற்றியும் நூலாசிரியர் பற்றியும் விரிவான விளக்கங்கள் இருப்பதையே இந்தக் காலத்தில் நாம் பார்க்கிறோம்.

தமிழ் வசன நடை வளம் பெற்று வனப்பும் இலாவகமும் துடிப்பும் பெற்றதெல்லாம் கடந்த அரை நூற்றாண்டு காலத்திலேயே என்று துணிந்து கூறலாம். ஆனால் மறைந்த இந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு முன்னர் தமிழ்ப் புலவர்கள், பண்டிதர்கள், வித்துவான்கள், ஆசிரியர்கள் அநேகமாக முற்ற முற்ற செய்யுள் வடிவிலும் பாவினங்களிலுமாகவே தம் கருத்துக்களை வெளியிட்டனர். அக்காலத்தில் எல்லாம் புலவர்கள் யாத்த நூற்களுக்கு பிற புலவர்கள் தந்த சாற்றுக்கவிகள் அணி செய்தன. சாற்றுக் கவிகளே முகவுரையும் முன்னுரையும் அணிந்துரையும் செய்த பணியினை செய்துநின்றன. இத்தகைய சாற்றுக் கவிகளை 'சாத்து கவிகள்' என்றும் சொல்வர்.

தாம் புனைந்த நூலுக்கு பெரும் புலவர் திலகங்களிடமிருந்து சாற்றுக் கவிகள் வாங்குவதில் ஒரு தனி இன்பத்தைக் கண்டனர், நூலாசிரியர்கள். சாதாரண இலக்கண இலக்கியச் சுவை குன்றிய நூற்களுக்கு சாற்றுக்கவிதர மறுத்திருக்கிற புலவரேறுகளைப் பற்றிய கதைகள் பல என்பதையும் நாமறிவோம். குறிப்பிட்ட புலவர் ஒருவரிடமிருந்து சாற்றுக் கவி பெற்றுவிட்டால் பிரசுரமான நூல் பற்றி வேறு எவரும் குறைகூற முடியாது என்று நூலாசிரியர்

பெருமிதங் கொள்ளுமளவிற்கு சாற்றுக் கவிகள் வன்மை பெற்றிருந்த காலமும் உண்டு.

தமிழ் இலக்கியத் துறையில் சாற்றுக் கவிகளுக்கென்றே ஒரு தனியிடம் வகுத்து விடுமளவிற்கு சாற்றுக் கவி இலக்கியம் வளர்ந்து விட்டிருக்கிறது. சாற்றுக் கவியை வைத்தே நூலை எடை போடும் பழக்கமும் கூட இருந்திருக்கிறது. பக்கம் பக்கமாக எழுதி நூலை விமரிசனம் செய்யும் சங்கடத்தை ஒரே செய்யுளில் அமைந்த தன்னந் தனி சாற்றுக் கவிபொன்று போக்கிவிட முடியும் என்ற உண்மையை எடுத்துக்காட்டத் தக்க சாற்றுக் கவிகளுக்கு தமிழ் மொழியில் பஞ்ச மில்லை. நூலின் தரத்திற்கு சான்றளிக்கவும் அதன் மதிப்பை கணிக்கவும் விமரிசனம் செய்யவும் சாற்றுக் கவிகள் உதவி இருக் கின்றன.

சாற்றுக் கவிகள் வாயிலாக குறிப்பிட்ட புலவர் ஒருவரின் ஊர் பற்றியும் தாய் தந்தையர் பற்றியும் மதிநுட்பம் பற்றியும் புலமை பற்றியும் நூல் பற்றியும் அதன் உள்ளடங்கிய கருத்துப் பற்றியும் சிற்சில வேளைகளில் அச்சிட்டவர், அச்சிட உதவியவர், துணை நின்றவர் ஆகியோர் பற்றியும் தெரிந்து கொள்கிறோம். இவற்றோ டெல்லாம் மட்டுமின்றி சாற்றுக் கவி அளித்த புலவரின் தனித் திறமையையும் மேதா விலாசத்தையும் கண்டு அனுபவிக்கிறோம். பல சாற்றுக் கவிகளில் கவிதை இன்பத்தின் சாறு பிழிந்து வைக்கப் பட்டிருப்பதால் அவை இலக்கியத்தில் என்றும் அழியா இடம் பெற்றி ருப்பதை அறிகிறோம்.

1833-ல் பிறந்து தம் புகழ் நிறுத்தி 1908-ல் மறைந்த மதுரை தமிழ்ச் சங்கப் புலவர் குலாம் காதிறு நாவலரை இற்றை நாள் தமிழர் மறந்திருக்கக் கூடும். மகா வித்துவான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்டவர் இவர். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள் தாம் எழுதிய மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை வரலாற்றில் நாவலர் பற்றி கூறியிருப்பதாவது :

"நாகூரில் புகழ் பெற்று விளங்கிய குலாம் காதிறு நாவலர் என்ற முஸ்லிம் புலவர் ஒருவரும் நமது மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை அவர்களிடம் பாடம் கேட்ட மாணவர்களில் ஒருவரே"

இவ்வளவுதான் கூறியிருப்பினும் குலாம் காதிறு நாவலரின் புகழ் தமிழ் கூறும் நல்லுலகு முழுவதுமாகப் பரவி நின்றிருக்கிறது. ஆனால் தமிழ்ச் சங்க மான்மியத்தில் புலவர், குலாம் காதிறு நாவலர் பற்றி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"தண்டமிழ்க்குத் தாயாகிப் பலபுராணம்
தகையபல பிரபந்தம் வசன நூல்கள்
எண்டரவே இயற்றி உலகுவப்பத் தந்திட்(டு)
எத்திசையும் புகழ்நிறுவி ஆலவாயில்
பண்டனைய தமிழ்ச் சங்கப் புலவராற்றுப்
படையோதிப் பெரியவிரல் படைத்து நாளும்
வண்டமரும் பொழிலுடுத்த நாகூர் வாழ்க்கை
மருவுகுலாம் காதிறு நாவலன் தன்னை..."

தண்டமிழுக்குத் தாயாக விளங்கிய பெரும்புலவர் குலாம் காதிறு நாவலர் பற்றி சித்திரமொன்று நம் முன்னர் தோன்றுகிறது. பல புராணங்கள், பிரபந்தங்கள், வசன நூற்கள் எழுதித் தந்தவர்; பெரும் புலவர் என்ற தோற்றம் மனக்கண்முன் உருவாகின்றது. வண்டமரும் பொழிலுடுத்த நாகூரும் நம் மனத்திரையில் படர்கின்றது.

'புலவராற்றுப் படை' இயற்றிய பெரும்புலவர், நமது நாவலர். அவர் எழுதிய இலக்கண இலக்கிய நூற்களுக்குக் குறைவில்லை. 'ஒற்றைத் தனிநபர் தமது வாணாளில் இத்தனைக் காப்பியங்கள். பாடல்கள் எழுதி இருக்கிறாரா' என மூக்கின் மேல் விரல் வைத்து வியப்புறத் தோன்றும். தமிழ் வசனக் குழந்தை தளிர்நடை போடத் துவங்கி இருந்த காலத்தில் குலாம் காதிறு நாவலர் அவர்கள் ஒன்றிரண்டல்ல, பல வசன நூற்களை தமிழில் எழுதிக் குவித்திருக்கிறார். நன்னூல் விளக்கம், பொருத்த விளக்கம் என்பன போன்ற இலக்கண நூற்கள், சீறாப் புராண வசனம், ஆரிபு நாயக வசனம், நாகூர் ஆண்டகையின் காரண சரித்திரம் என்றெல்லாம் அவர் எழுதிய வசன நூற்களுக்குக் குறைவில்லை.

ஆரிபு நாயக புராணமும் அவருடையதே. காவியத் தலைவரான செய்யது அஹ்மதுல் கபீர் ரியாயி ஆண்டகையின் அருள் வேண்டி நாவலர் இறைஞ்சிப் பாடிய புராணம்தான் இது. இப்புராணத்திற்குத் தான் திட்டச்சேரி முஸ்லிம்கள் ஒருமுகமாக வேண்டிக் கொண்டதன் பேரில் ஆரிபு நாயக வசனம் எழுதினார் குலாம் காதிறு நாவலர் அவர்கள்.

இந்த ஆரிபு நாயக வசனத்திற்கு சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சாற்றுக் கவியொன்று வழங்கியுள்ளார்கள். ஐந்து விருத்தங்களைக் கொண்ட இந்த சாற்றுக் கவியில் முதலிரண்டு விருத்தங்களில் பாட்டுடைத் தலைவர் செய்யது அஹ்மதுல் கபீர் சுல்தானுல் ஆரிபீனாரின் மகாத்மியத்தை வியந்துரைக்கிறார்கள்.

ஐந்தாம் விருத்தம், அய்யம்பேட்டை பதியில் வாழ்ந்த அப்துல் கனி சாஹிப் பொருளுதவி ஆரிபு நாயக வசனத்தை அச்சியற்றி "இருஞ் சீர்த்தி'' துளக்குற்ற மாட்சியினை வருணிக்கிறது. குலாம் காதிறு நாவலர் அவர்களையும் திருநாகையில் இருந்தபடி அவர் தமிழ்க் கோலோச்சியிருந்த தன்மையையும் மூன்றாம் நான்காம் விருத்தங்கள் அற்புதமாக சித்திரிக்கின்றன.

சொற்கள் கவிதை வடிவம் பெறும்போது ஒலிநயமும் கவிதை களின் உள்ளமைந்த பொருள் நயமுமாகச் சேர்ந்து சிறந்த ஒரு சித்திரத்தை அப்படியே தத்ரூபமாக நம் மனக்கண் முன் கொணர்ந்து என்றென்றும் அழியாதவாறு நிறுத்தி விடுமே யாகில் இறவா வரம் பெற்று விடுகின்றன.

குலாம் காதிறு நாவலர் அவர்கள் பாஸ்கரப் பண்டித வாப்பு ராவுத்தர் அவர்களின் புதல்வர். கலைமகளோ, நாமகளோ, தமிழாய்ந்த அகத்தியரோ என திருநாகைப் பதியிலிருந்து தமிழ்ப் புலவர் இதயமெனும் இராஜியத்தில் கோலோச்சும் வேந்தனாக குலாம் காதிறு காட்சி தருகிறார்.

"மாவருத்தும் பெருநிலத்து வாப்புதவ மருண்மகவாய்
வந்தெஞ் ஞான்று
மூவருத்துங் கலைமகளு நாமகளே கும்பர்குறு
முனியே என்னத்
தாவருத்துந் திருநாகை யிருந்துதமிழ்க் கோலோச்சித்
தகைமிக் கார்ந்த
மேவருத்து மிணையில்குலாம் காதிறுநா வலனென்னும்
விபுதர் வேந்தன்"

சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் குலாம் காதிறு நாவலர் அவர்களினின்றும் வயதில் இளையவர்கள். எனினும் நாவலர் அவர்களின் சம காலத்தவர். டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களும் நாவலர் காலத்து வாழ்ந்தவரே. நாகூர் குலாம் காதிறு நாவலர் அவர்கள் புகழையும் கீர்த்தியையும் அவர் வாழ்ந்த மாட்சியினையும் நேரிற்கண்டவர்கள் சொல்ல சொல்லக் கேட்பதில் நமக்கோர்வித தனி மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

தமிழ்ச் சங்க மான்மியத்தில் புலவர், நாகூர் குலாம் காதிறு நாவலரின் இலக்கியச் சேவைகளை நாம் உணருமாறு செய்திருக் கிறார். ஆனால் சதாவதானம் செய்குதம்பிப் பாவலர் அவர்களோ

நாகூர் புலவர் வேந்தர் எவ்வாறு கொலு வீற்றிருந்தார் என்பதை ஒரு அழியாச் சித்திரமாக இற்றைத் தலைமுறையோரின் மனத் திரையில் தீட்டி வைத்திருக்கிறார்கள். 'தேன் கனியும் பாலமிழ்தும் கற்கண்டும் சர்க்கரையும் சேர்ந்து தான்கனிய சுற்றிவந்து மொய்த்து நிற்கும் ஓவியத்தின் உள்ளடங்காப் பெருங்காட்சி யொன்றை பாவலர் பெருமானார் அவர்கள் தம் சாற்றுக் கவியின் நான்காவது விருத்தப் பாவில் தீட்டியிருக்கிறார்கள். கான்கனியும் செந்தமிழ் கொண்டு உணர்வளிக்கும் ஓர் நூலாம் ஆரிபு நாயக வசனம் தந்த குலாம் காதிறு நாவலரை சாற்றுக் கவி வாயிலாக நாம் பார்க்க முடிகின்றது.

''தேன்கனியும் பாலமிழ்தும் கற்கண்டும் சர்க்கரையும்
சேர்ந்த தென்னத்
தான்கனியப் புலவர்குழாம் தலைகுனிந்து மனமுவந்து
தகைவிற் கொள்ளக்
கான்கனியும் செந்தமிழ்கொண் டுணர்வளிக்கு மோர்நூலாய்க்
கவினச் செய்து
வான்கனியு மாரிபுநா யகவசனப் பெயர்நிறுவி
வழங்கி னானால்"

தமிழ்ப் புலவர் குழாத்திடையே குலாம் காதிறு நாவலர் கோலோச்சும் தோற்றத்தை நாம் காண முடிகிறது. நாவலர் கொலு வீற்றிருந்து தமிழ் வளர்த்த மாண்பினையும் மாட்சியினையும் அவர் காலத்து வாழ்ந்த மற்றொரு பெரும் புலவர் வாயிலாக நாம் கேட்கிறோம்; பார்க்கிறோம். சொல்லின்பமும் காட்சி இன்பமும் சேர்ந்து மனத்திரை விட்டகலா ஓவிய மொன்று அப்படியே நம் உள்ளமெங் கணும் நிறைந்து நிற்கின்றது. சாற்றுக் கவியின் இலட்சியமும் நிறைவேறுகின்றது.



பாவலரும் வள்ளலாரும்

அரசு. ஆறுமுகம், M.A.,

எட்டாம் நூற்றாண்டிலும் பதின்மூன்றாம் நூற்றாண்டிலும் எகிப்து மன்னர்களின் கொடுங்கோன்மைக்கு அஞ்சித் தஞ்சம் புகுந்த முஸ்லிம் மக்களைப் பாண்டிய மன்னர்கள் அன்புடன் வரவேற்று, அவர்களுக்கு ஏற்றமும் தோற்றமும் அளித்தார்கள் என்று முஸ்லிம் தமிழுலகம் கூறும். இஃது இருதிறத்தாரும் கொண்டுள்ள அன்புணர்ச்சியை விளக்குகின்றது. இன்னும் தமிழகத்தில் முஸ்லிம் களும் இந்துக்களும் ஒரு தாய் வயிற்று மக்களைப்போல் அன்புரிமை பூண்டு வாழ்ந்து வருகின்றார்கள். காலம் அவர்கள் அன்புரிமையை வளர்க்க வேண்டுமே யொழிய, அழிக்கக் கூடாது என்பதே என் வேண்டுகோள்.

தமிழன்னைக்கு யாவரும் அன்பு மக்களாகவே வாழ்ந்து வருகின் றனர். மக்கள் இந்துக்கள் என்றும், முஸ்லிம்கள் என்றும், கிறித்த வர்கள் என்றும், சமணர்கள் என்றும், பௌத்தர்கள் என்றும், சைவர்கள் என்றும், வைணவர்கள் என்றும் இவர்களை எல்லாம் ஒருசேர நோக்கும் சமரசவாதிகள் என்றும் பிரிந்திருந்தாலும் அவர்களை எல்லாம் தமிழன்னை தன் வயிற்றுப் பிள்ளைகளாகவே பேணி வந்திருக்கிறாள். இப்பண்பு ஆங்கில மொழியிடத்தும் இல்லை என்று துணிந்து கூறலாம்.

செய்குதம்பிப் பாவலர் நாஞ்சில் நாட்டைச் சார்ந்தவர்; கோட் டாறு என்னும் ஊரைச் சேர்ந்தவர் எனினும் அவர்தம் புலமையாலும் பிற அருங்கலைகளாலும் தமிழுலகம் அவரை அறிந்து போற்று மளவுக்கு உயர்ந்தார். அவரது உயர்வு அத்துடன் அமையவில்லை. அதற்கு மேலும் சென்றது.

இருபதாம் நூற்றாண்டில் தமிழுலகம் போற்றுமளவுக்கு திருவள்ளுவர் கூறும் மனத்துறவு வழிநின்ற துறவிகள் வெகு சிலரே. அச்சிலரிலும் இராமலிங்க வள்ளலாரைப் போன்று சிறந்த அடிகளாக வாழ்ந்தவர்கள் இது வரையிலும் இல்லை. சமயங்கள் பலவாகப் பெருகியதாலோ, பல சமயத்தவரும் தம் தெய்வம் சிறந்தது என்று சிறுபிள்ளைகளைப்போல் வாழ்ந்ததாலோ தாம் சைவ சமயத்தவ ராயினும் சித்தாந்தம் கூறும் சிவனின் பரம்பொருள் தன்மையை விளக்குவதைப் போலக் கடவுளின் பொதுவான அருள் தன்மை களையும் பாடிவந்தார். பல சமயத்தவரும் உண்மைப் பரம் பொருளின் தன்மையை உணராமல் சாத்திரச் சண்டைகளிலும், சமயச் சண்டை களிலும் ஈடுபடுவதை அவர் வெறுத்தார். மக்கள் எல்லோரும் கடவுளின் புதல்வர்களாக இருக்க, அவர்களில் ஒரு சிலர் கடவுளின் தன்மையையே அறியாதவாறு தடுக்கப்படுவதை அவர் உணர்ந்தார். இவ்வாறு உணர்ந்தும், அறிந்தும் அவர் தாழ்த்தப்பட்டோரை உயர்த்துவதிலும், சர்வ சமய சமரச சன்மார்க்க நெறியை வகுப் பதிலும் முனைந்தார். காலத்திற்கு ஏற்ற இச்சீர்திருத்தப் போக்கு சில சைவப் பெருமக்களுக்குப் பிடிக்கவில்லை.

சித்தாந்தம் சொல்லும் சைவ சமய நெறியையே இராமலிங்க வள்ளலார் புது முறையில் கூறி வருகின்றார்; செயற்படுத்தி வருகின்றார் என்று அவர்கள் உணரவில்லை. அவர்கள், "இராம லிங்கர் சிவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் கொண்டு பாடிய பாடல்களில் சில, ஆபாசக் களஞ்சியங்கள்" என்றும், "அவர்கள்தம் அருட்பா, மருட்பா" என்றும் சொற்பொழிவாற்றி வந்தார்கள். இதனை இராமலிங்கர் கேட்டு வருந்தினார். இதை அவர் "கடைவிரித்தோம் கொள்வாரில்லை" என்று வருந்திக் கூறி யதால் அறியலாம். அவர் மறைந்த பிறகும் அவர் இயக்கம் வளர்ந்து வந்தது; அவர் தம் நற்போக்கை எதிர்க்கும் இயக்கமும் வளர்ந்து வந்தது எனலாம்,

யாழ்ப்பாணத்தில் கதிரைவேல் பிள்ளை என்றொரு செந்தமிழ்ப் புலவருண்டு. அவர் ஆழ்ந்த சைவப் பற்றுடையவர். அவர் இராம லிங்கரின் பெருமையை இழித்துக் கூறிவந்தார். அதனால் மனமுடைந்த இராமலிங்கரின் சீடர்கள் தொழுவூர் வேலாயுதம் பிள்ளை முதலியோர்கள் கதிரைவேற் பிள்ளையின் சொற்பொழிவு களை மறுத்துச் சொற்பொழிவுகளைச் செய்யத் தொடங்கினர். செய்குதம்பிப் பாவலர் அப்போது சென்னையில் இருந்தார். அவர் இராமலிங்க வள்ளலார் தம் பாடல்களில் பெரிதும் ஈடுபாடுடையவர். நல்ல சொற்பொழிவாற்றல் மிக்கவராய் அவர் விளங்கியதால் "சொல்லின் செல்வர்" என்று புலவர் பாராட்டும் புகழும் பெற்றி ருந்தார்.

"இராமலிங்க வள்ளலாரின் அருட்பாவை, மருட்பா என்பவர் யார்?" என்றார் அவர். மேலும் கதிரைவேற் பிள்ளை போன்ற பெருமக்கள் இராமலிங்க வள்ளலாரின் பெருமையை இழித்துக் கூறும் சொற்பெருக்குகளை அவர் கேட்டார்; அவற்றை எதிர்த்து சொற்பெருக் காற்றினார்.

அவர் தமது புலமையைக் கொண்டு, இராமலிங்க வள்ளலாரை எதிர்த்து அவர்கள் எழுதிய நூல்களின் தலைப்புக்களை எள்ளி நகையாடினார்.

"இராமலிங்க சுவாமிகள் பாடலாபாச தருப்பணம் அல்லது மருட்பா மறுப்பு'' என்றொரு நூலைக் கதிரைவேற் பிள்ளை எழுதி வெளியிட்டார். "இராமலிங்க சுவாமிகள் பாடலா!'' என்று வியப்புக் குறியுடன் வினாவி விட்டு அது "பாச தருப்பணம் (பாச நீக்கம்) என்றல்லவோ நூலின் தலைப்புக் காணப்படுகின்றது? மேலும் மருட்பா மறுப்பு என்ற சொல் மருட்பாவை மறுப்பது இராமலிங்கர் தம் அருட்பாவே என்று ஏற்றுக் கொள்கின்றதே" என்றெல்லாம் அவர் மேடைகளில் கூறிவந்த கருத்துக்களை திரு. வி. க. அவர்கள் குறித்துக் கொண்டு திரு. நா. கதிரைவேற் பிள்ளை அவர்களிடம் காட்டுவார். இவ்வாறாகப் பாவலரிடம் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் பற்றுக் கொண்டார்கள். அவர்கள் பற்று நாளடைவில் வளர்ந்தது. பாவலரைப் பற்றி அவர்கள் தம் குறிப்பில், எழுதி வைக்கவும் அது தூண்டியது.

"பழைய முறையில் கம்பராமாயணத்தைச் சொற்பொழிவு செய்யக்கூடியவர் பாவலர் ஒருவரே'' என்றார் திரு. வி. க. அவர்கள். மேலும், "பாவலர் என் குரு ஸ்தானத்தில் இருக்கிறார். எனது குரு கதிரைவேற் பிள்ளை இராமலிங்க சுவாமிகளின் பாடல்களை மருட்பா என்றபோது அவருக்கு எதிராகப் பாவலர் அவை அருட்பாதாம் என்று சொற்பெருக்காற்றினார். அவருடைய சொற்பெருக்கை நான் குறிப்பு எழுதிக் கொண்டுபோய் என் குருவிடம் காட்டுவேன். இப்பொழுது என் குரு இறந்துவிட்டதால் தமிழ் மரபுப்படி அவருடைய எதிரியாகிய பரவலர் தாம் என் குருவாகின்றார்'' என்றும் கூறியுள்ளார்.

"இராமலிங்க சுவாமிகளின் அருட்பாவை ஆதரித்துப் பாவலர் பேசவேண்டும் என்ற நியதி இல்லை. ஏனெனில் இருவரும் வெவ்வேறு சமயத்தவர்'' என்று பிறர் கூறினாலும் அதில் வியப் பில்லை. எனினும் காலம் அழிந்தாலும் தான் அழியாது என்று காட்டிவரும் தமிழ்ப் பண்பு – பொதுமைப் பண்பு பாவலர் தம் உள்ளத் திலும் ஊறியிருந்தது. பொதுமைப் பண்பு நீங்காத பாவலருக்கு அஞ்சலி செலுத்துவோம். அவர் உள்ளம் நமது உள்ளம் என்று கொண்டாடுவோம். "நீங்காது அவர் புகழ் வளர்க'' என்று பண்பாடு வோம். பாவலர் எந்தத் தமிழுணர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ அந்தத் தமிழுணர்ச்சியை வளர்த்து வருவோம். ★



காளமேகமும் பாவலரும்

செ.ப. ஜமால் முகம்மது

"உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே" என்பது வாக்கு. இத்தகைய உயர்ந்தோருள் மிகச் சிறந்தோராக மதிக்கப் படுவோர் புலவோர் எனப்படுவர். செல்வத்துட் செல்வமன்றோ புலமைச் செல்வம் ! அச்செல்வம் வாய்க்கப் பெற்றார் புலவர் எனப்பட்டார்.

வாழும் வளமார் மொழிகளுள் நம் வண்டமிழ் மொழி தனிச் சிறப்புற்றது. அதற்குக் காரணம் தமிழ்ப் புலவர் பெருமக்களேயாம். இந்தப் புலவர்களை கவி, கமகன், வாதி, வாக்கி என இலக்கண விளக்கமுடையார் நால்வகையாகப் பிரித்துள்ளனர், இந்நான்கினும் முதற்பிரிவாகிய கவியை மேலும் நான்வகைப் பிரிவாக்கி ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்றனர். இந்நால்வகைக் கவிகளுள் முதல் வகையே ஆசுகவி என்பது.

'ஆசு' என்னும் தமிழ்ச் சொல்லுக்குப் பல பொருட்கள் இருப்பினும் ஆசுகவி என்னும்போது அப்பொருட்களுள் ஒன்றேனும் அமையாது. வடமொழியில் 'ஆசு' என்பதற்கு விரைவு என்று பொருள். இச்சொல்லிலிருந்தே ஆசுகவி தோன்றிற் றென்பர். விரைவாகச் செல்லும் அம்பை ஆசுகம் என்றும் பறவையை ஆசுகி என்றும் வழங்குவதிலிருந்து 'ஆசு' என்பதை விரைவு என்று உணரலாம். இவை போன்றே கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடும் கவிஞனையும் ஆசுகவி என்றனர். அவன் பாடும் பாட்டும் 'ஆசுகவி' எனப்பட்டதென்க.

"எழுத்துச் சொற்பொரு ளணியாப் பிவையின் விழுத்தக ஒருவன் விளம்பிய உள்ளுறைக் கப்பொழு துரைப்ப தாசு கவியே" என்றரர் இலக்கண நூல் வல்லார்.

குறிப்பிட்ட ஓர் எழுத்தையோ, சொல்லையோ, பொருளையோ, யாப்பையோ, அணியையோ கொடுத்து ஒருவர் பாடச் சொல்ல அப்போதே அவரெதிரிலேயே பாடப்படுவது ஆசுகவியாக அமையும்.

கொடுத்த பொருளை அடுத்த பொழுதில் பாடும் இத்தகைய அருந்திறன் கைவரப் பெற்ற ஆற்றலுடைய தமிழ்ப் புலவோர் பலர் பழந்தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்தனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள. எனினும் பிற்றைக் காலத்தில்தான் ஆசுகவியை ஒரு தனிக் கலையாகத் தமிழகம் வளர்க்கத் தொடங்கியது என்னலாம். தமிழ் இலக்கியத்துடன் இடம் பெற்ற முதல் ஆசுகவியாகக் குறுந் தொகையின் இரண்டாவது செய்யுளையும் அதை இயற்றிய இறை யனாரையுமே கொள்ளல் வேண்டும். இறையனாரின் இந்த ஆசு கவியில் குற்றங்கண்டு உரைத்ததாகக் கூறப்படும் நக்கீரரும் சிறந்த ஆசுகவியாக விளங்கியுள்ளார்.

இவ்வாறு பழந்தமிழ் நரட்டில் ஆசுகவிகள் பலர் இருந்திருப் பினும் இடைக்காலத்தேதான் இத்துறை வளம் பெறலாயிற்று. ஆசுகவி பாடும் அருந்தமிழ்ப் புலவோர் தம் பெயருடன் 'ஆசுகவி' என்னும் அடைமொழியையும் கொண்டிருந்திருக்கின்றனர் என்பதி லிருந்தே ஆசுகவியின் சிறப்பை உணரலாம்.

ஆசுகவித் துறையில் கவி காளமேகம் பெற்றிருந்த ஆற்றல் வியந்து போற்றற்குரியது. "ஆசுகவியால் அகில உலக மெங்கும் வீசுபுகழ்க் காளமேகமே" என்னும் பாடல் அடிகள் அவரது ஆசு கவித் திறமையைக் காட்டி நிற்கின்றன.

மன்னன் திருமலைராயன் அவைக்குச் சென்றிருந்த கவி காள மேகத்தை, அதிமதுர கவியின் தலைமையின் கீழ் மன்னரவையில் வீற்றிருந்த புலவர்கள்,

"மூச்சு விடுமுன்னே முன்னூறும் நானூறும்
ஆச்சென்றால் ஐந்நூறும் ஆகாதோ—பேச்சென்னை
வெள்ளைக் கவிகாள மேகமே நின்னுடைய
கள்ளக் கவிக்கடையைக் கட்டு"

எனக் கூறி எளனம் செய்ததைக் கன்டு சிறிதும் மலைக்காமல், சளைக்காமல்,

"இம்மென்னு முன்னே எழுநூறும் எண்ணூறும்
அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ—சும்மா
இருந்தால் இருந்தேன் எழுந்தேனே யாயின்
பெருங்காள மேகம் பிளாய்"

எனக் கூறி காளமேகம் மட்டம் தட்டிய பாடல் படித்து இன்புறத் தக்கது.

ஆசுகவியில் ஈற்றடி கொடுத்து ஒருவரை பாடச் சொல்லும் வழக்கே மிகுதியாக அமைந்துள்ளதென்று கூறலாம்.

ஆசுகவி பாடும் அருந்திறன் கைவரப் பெற்றிருந்த கவி காள மேகம் ஆசுகவிகள் பல பாடியிருப்பினும் அவருடைய பெருந்திறனை விளக்கப் போதிய சான்றாக நம் கண்முன் வருவது "குடத்திலே கங்கை அடங்கும்" என்னும் ஈற்றடிக்கு அவர் பாடிய வெண்பாவே. அந்த ஒரு வெண்பாவும் நினைந்து நினைந்து போற்றுதற்குரியது. என்ன, குடத்திலே கங்கை அடங்குமா எனக் கேட்டிருந்தோர் வியந்திருக்க மகுடத்திலே கங்கையை அடக்கிக் காட்டினார், கவி காளமேகம்.

கங்கையானது விண்ணுலகிலும் மண்ணுலகிலும் கயிலை மலை யிலும் பாய்வதோ டமையாது பெருகிவந்தபோது மங்கையொரு பங்கராகிய ஈசனார் அதைத் தனது சடா - மகுடத்திலே சடை முடியாகிய கிரீடத்துள்ளே – அடக்கிக் கொண்டார் எனப் பாடி யுள்ளார்.

"விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல்
மண்ணுக் கடங்காமல் வந்தாலும்—பெண்ணை
இடத்திலே வைத்த இறைவர் சடாம
குடத்திலே கங்கை யடங்கும்"

என்னும் கொடுத்த ஈற்றடிக் கேற்ப சொன்னயம், பொருண யத்துடன் பாடிய இந்த ஆசுகவி வெண்பா காளமேகத்தின் ஆசுகவித் திறமைக்கு மிகச் சிறந்த எடுத்துக் காட்டாய் விளங்கி வருகிறது.

கொடுத்த பொருளை அடுத்த பொழுதிற் பாடும் ஆசுகவியால் அகில உலகமெங்கும் வீசுபுகழ் கொண்ட காளமேகத்தைப் போன்று,

இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே சிறந்த ஆசுகவிகள் சிலர் வாழ்ந்திருந்தனர் என்றாலும் கவி காளமேகம் என்றதுமே நமது கண்முன் வருபவர் கோட்டாற்றூரில் தோன்றி நாட்டவ ரனைவரும் வியக்க எய்தற்கரிய புகழெய்திய தமிழ்ப் பெரும்புலவர், கலைக்கடல், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், அல்லாமா (டாக்டர்) மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் பெருமானார் அவர்கள்தாம்.

கவி காளமேகத்திற் கொப்ப பாவலர் பெருமானார் அவர்கள் ஆசு கவிகள் பல பாடியிருப்பினும் அவர்களுடைய பெருந்திறமைக்கு எடுத்துக் காட்டாய் அமைந்த ஆசுகவிகள் அவதானத்தின்போது சிறந்து விளங்கக் காண்கிறோம். அவற்றுள் எண்ணும் போதெல்லாம் இன்புறுத்தும் இலக்கிய நிகழ்ச்சிகள் ஒரு சிலவற்றை இவண் காண்போம்.

அவையிலே புலமையிற் சிறந்தோராகக் கருதப்படும் ஒரு நூற்றுவருக்கும் மேற்பட்டோர் உட்பட பல்லாயிரவர் வீற்றிருக்க நமது பாவலர் பெருமானார் அவர்கள் அவதானம் செய்ய ஆயத்த மாகின்றார்கள். அவ்வமயம் ஜி. சுப்பிரமணிய ஐயர் என்பார் எழுந்து சிலேடையாகக் கடவுள் வணக்கச் செய்யுளொன்று பாடுமாறு பாவலரை வேண்டினார். உடனே பாவலர் அவர்கள்,

"சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்"

எனும் பாடலைப் பாடி பாடலுக்கு விளக்கமும் தந்தார்கள். செய் யுளின் முதலடியின் முதலிரண்டு சீராம் "சிரமா றுடையான்" என்னும் சொற்றொடருக்கு பாவலர் அவர்கள் தந்த விளக்கம் யாவரையும் பரவசத்தில் ஆழ்த்தியது,

சிரம் ஆறுடையான் — சிரத்திலே கங்கையாற்றை யுடைய சிவபெருமான்

சிரம் ஆறு உடையான் — ஆறு தலைகளையுடைய முருகன்

சிரம் மாறுடையான் — இயல்பிற்கு மாறுபட்ட சிரத்தை யுடைய கணபதி

சிரம் ஆறுடையான் — காவிரியாற்றின் நடுவில் சிரம்
வைத்துள்ள திருமால்

சிரம் ஆறு உடையான் — தலையாய நல்வழிகளை உலகுய்யக்
காட்டும் 'அல்லாஹ்'

என அத்தொடருக்குள் அமைந்த ஐம்பொருளையும் பிரிமொழிச் செம்மொழி சிலேடைகளால் விளக்கி ஐம்பொருளாயும் விளங்குகிற இறைவனது திருவடிகளை மறவாது மனத்திருத்தி, தலை தாழ்ந்து வணங்கி, பிறபெண்டிரை விரும்பாது, இறைவனையே எண்ணி உருகுவோர் பெருந்தவத்தினராய் விளங்கிச் சிறப்புறுவர்" என விளக்கவும் அவையிருந்தோர் செய்யுளையும் செய்யுளின் பொருட்செறிவையும் பாவலர் அவர்களது பொது நோக்கையும் ஒழுக்கத்தில் கொண்டிருந்த உறுதிப் பாட்டினையும் உன்னி உன்னி உவந்தனர்.

நூற்றுவர் கேட்கும் வினாக்களுக்கும் நொடிப் பொழுதில் விடையிறுத்துவரும் கூட்டத்தில் மூலைக்கொருவராக கேள்விக் கணையைத் தொடுக்கின்றனர். ஏனைய அவதானங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையிலேயே புலவர் ஒருவர் எழுந்து "கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக் கண்டனரே! என்னும் ஈற்றடி வருமாறு கட்டளைக் கலித்துறை பாடுக" எனக் கேட்டு நின்றார். 'கண்கெட்ட பின்னர் காணாத காட்சியை எவ்வாறு காணக் கூடும்?' என்னும் கேள்வி அலை அவையிலே நெளிந்தது. நுண்மாண் நுழைபுலன் வாய்க்கப் பெற்றிருந்த பாவலர் அவர்களின் நூலறிவு விரைந்து செயல்பட்டது. திருத்தொண்டர் புராணம் அவர்களின் நினைவுக்கு வந்தது. கண்ணப்பரின் காட்சி அவர்களின் உள்ளத் திரையில் பளிச்சிட்டது. திண்ணனாரின் தெள்ளிய - திண்ணிய - அன்பை வெளிப்படுத்த விழைந்த காளத்தியப்பர் தமது வலக்கண்ணில் செந்நீர் சொரியச் செய்தார். உள்ளங் கவர்ந்த தெய்வத்தின் நிலை கண்ட திண்ணனார் உள்ளம் பதைத்தார். வழிபடும் தெய்வத்தின் விழியில் வழியும் செந்நீரை நிறுத்தத் துடித்தார். 'ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது' என்னும் பழமொழியை நினைவிற் கொண்டார். கண்ணுக்குக் கண்ணே பொருந்திய மருந்து எனக் கண்டார். தமது வலக்கண்ணை அம்பினால் தோண்டி காளத்தி நாதரின் குருதி கொட்டும் கண்ணில் பொருத்தினார். புண்ணும் மாறியது; ஆனால் இப்போது இடது கண்ணிலிருந்து செந்நீர் சிந்தத் துவங்கியது. உடனே திண்ணனார் தமது இடது கண்ணையும் பெயர்த்தெடுத்து இரு கண்களுமே புறக்காட்சியற நின்றார். இந் நிலையில் திண்ணனாரின் திண்ணிய அன்பைக் கண்டு அக மகிழ்ந்த காளத்தியப்பர், திண்ணனாருக்குக் காட்சி தந்தார்.

ஈடில்லாத திருத்தொண்டர், என்றும் காணாத காட்சியைக் கண்டு இன்பம் கொண்டார். இப்புராண நிகழ்ச்சி பாவலர் அவர்களின் உள்ளத்தில் நிழலாடியதும்,

''விண்தொட் டசையும் தருமலி கானில் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்விழி
புண்பட்ட தென்றுதன் கண்ணைப் பெயர்த்துப் பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக்
கண்டனரே''

என்னும் எழுத்தெண்ணிப் பாடும் கட்டளைக் கலித்துறை வெளிப் போந்தது. கண்கெட்டபின் கண்ணப்பர் கண்ட காணாத காட்சியைப் பற்றிய பாவலர் அவர்களின் கேளாத பாடலைக் கேட்டுக் கிறு கிறுத்துக் கையொலி செய்து களிப்பினைக் காட்டினர்.

பாவலர் அவர்களின் பாடல்களைக் கேட்டுக் கிறுகிறுத்த அவையின் கையொலி அடங்கும் முன்னரே மற்றொருவர் எழுந்து 'விராட்டனையே பெண்ணெனலாமே!' என்ற ஈற்றடியைக் கொடுத்து வெண்பாக் கேட்டார்.

'விராடனையே பெண்ணெனலாமே' என்னும் தொடர் பொருள் முரண்கொண்டதாகும். 'விராடன் என்பவன் ஆண் மகன். அவனை எப்படிப் பெண் என்று சொல்ல இயலும்?' என அவையோர் திகைத்திருந்தனர். பாவலர் அவர்களின் புலமையைப் பார்க்க வேண்டுமென்று ஐயமும் ஆவலுங்கொண்டனர், அவர்கள். பாவலர் அவர்கள் சிறிதேனும் தயக்கமோ, மயக்கமோ, கலக்கமோ கொள்ள வில்லை. மாறாகத் தங்களுக்கே உரித்தான முறுவலை சற்று வெளிப்படுத்தினார்கள். உடனேயே விராடனைப் பெண்ணாக்கிக் காட்டினார்கள்.

ஈற்றடியின் இறுதியிலே 'சொற்ற' எனுஞ் சீரினைக் கொண்டு "சொற்ற விராடனையே பெண்ணெனலா மே'' என அமைத்து, "உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதும் ஒன்றை சிந்தனை செய்யும்பொழுதும் ஒருவன் அமைதியாக இருக்கவேண்டும். ஆனால் அவ்வேளையிலும்கூட ஒருவன் கோபக்கனல் தெறிக்க வாழ் கின்றான். அத்தகைய இயல்பினை யுடைய ஒருவனைக் கணவ னாகக் கொள்கிறாள் ஒருத்தி. அவள் அவனையே தெய்வமென்றும் மன்னனென்றும் போற்றவேண்டும். அவன் சொல்லைத் தட்டாமல் — தவிராமல் — வாழவேண்டும். காரணம் அவன் கைப்பிடித்த கணவன். அவ்வாறு வாழ்பவள் எவளோ அவளே பெண்ணாவாள்.

அஃதாவது சொல் தவிராள் தனையே பெண்ணெனலாம்” என்னும் பொருள் நயம் தொனிக்க,

“உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுதுமொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னாய்—மண்ணில்
வராடவனை யேதெய்வ மன்னெனும் சொற்ற
விராடனையே பெண்ணெனலா மே”

என்ற வெண்பாவை பாவலர் அவர்கள் கூறி முடித்தார்கள்.

இவ்வாறு விராடனைப் பெண்ணாக்கிக் காட்டிய பாவலர் அவர்களின் இந்த ஒரு பாடலே போதும், ஆசுகவியில் அவர்களுக்கிருந்த பெருந்திறமையை விளக்குவதற்கு. இவ்வெண்பாவில் கவி காளமேகத்தையும் நமது பாவலர் அவர்கள் மிஞ்சி விட்டார்கள் என்று துணிந்து கூறுமளவுக்குப் பாவலர் பெருமானார் அவர்களின் புடம் போட்ட புலமை பூத்துக் குலுங்கி நிற்கப் பார்க்கின்றோம். ஆசுகவி என்றால் இவ்வாறு தானே இருக்கவேண்டும்?

நம் பாவலர்

பண்டித ந. பிச்சைத் தண்ணு

"செயற்கரிய செய்வர் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்க லாதார்"

என்ற வள்ளுவப் பெருந்தகையாரின் வான்குறளுக்கு எடுத்துக் காட்டாய்த் தமிழகம் வியக்க—கேட்டார் அதிசயிக்க – கண்டார் புகழ ஒரு நூறு அவதானம் செய்து நாற்றிசையும் போற்றிசைப்ப வாழ்ந்த பெரியார் செய்குதம்பிப் பாவலர் ஒருவரே ஆவர். இத்தகைய ஆற்றல் பெற்றோர் முன்னுமில்லை; பின்னுமில்லை.

நம் பாவலர் அவர்கள் இலக்கண இலக்கியத்தில் ஈடும் எடுப்பு மின்றி இணையிலாப் புகழ்பெற்று விளங்கிய காலையிலும் தம் ஆசிரியரை மறவாது அவரது பெருமையை எடுத்துச் சொல்லுதலைத் தனது பெருமையாகக் கொண்டொழுகியது அவாது தலையாய பண்பைக் காட்டும். நம் பாவலர் அவர்களின் ஆசிரியராய் அமைந்தவர் சங்கர நாராயண அண்ணாவி என்னும் பெருந்தகையார் ஆவார். இப்பெருந்தகையார் கோட்டாறு பட்டாரியர் சமுதாயத்தில் பிறந்தவர். ஆடம்பரம் சிறிதுமில்லாது வாழ்ந்தவர். தான் ஒரு புலவன் என்பதை வெளிக்காட்ட வேண்டும் என்ற எண்ணம் சிறிதுமே யில்லாத பண்பாளர். இவரது காலத்தில் வாழ்ந்த கணபதி ஆசாரி என்னும் புலவர் நாஞ்சில் நாட்டில் தம்மைவிடப் புலமையுடையோர் வேறு இல்லை என்ற எண்ணத்தால் சங்கர நாராயண அண்ணாவியின் புலமையைப் பற்றிப் பல இடங்களிலும் குறை கூறும் பழக்கத்தை மேற்கொண்டிருந்தார். கணபதி ஆசாரியின் இச்செயல் கண்டு அண்ணாவி அவர்கள் சிறிது மனவருத்தம் அடைந்த போதிலும் அவரோடு பகைமை கொள்ளவோ தம் புலமையை அவருக்கு வெளிக்

காட்டவோ முன் வரவில்லை. ஆசிரியரது இம் மன வருத்தம் மாணவராகிய பாவலரைப் பெரிதும் வருத்தியதோடு கணபதி ஆசாரியின் புலமையின்மையைப் பிறர்க்கு எடுத்துக்காட்ட வேண்டு மென்ற உறுதியையும் உள்ளத்தில் உண்டு பண்ணியது.

சவேரியார் கோவிலின் சமீபம் இருந்த புத்தகசாலையில் கணபதி ஆசாரி அவர்கள் தினமும் வந்து இருப்பதுண்டு. அப்புத்தகச் சாலைக்கு தினமும் சென்றுவரும் இடலாக்குடியில் வாழும் ஒருவர் ஒரு நாள் கணபதி ஆசாரி அவர்களிடம் சங்கர நாராயண அண்ணாவி யிடம் படித்த புலவரொருவர் எங்கள் ஊரில் இருக்கிறார் என்று சொன்னதும், "சங்கர நாராயணனிடம் படித்தவனா? அவனை ஒரு நாள் இங்கு கூட்டிக் கொண்டு வாருங்கள். மாற்றுப் பார்த்து விடுகி றேன்" என்று கூறினார்கள். நம் பாவலர் அவர்கள் இச்செய்தியை யறிந்ததும் அவரது மனம் படபடத்தது. எண்ணம் எத்தகைய செயலையும் செய்ய மறுத்தது. மறுநாள் தன்னிடம் இச்செய்தியைக் கூறியவரையும் உடனழைத்துக் கொண்டு நேரே புத்தகச் சாலைக்குச் சென்று கணபதி ஆசாரியின் வரவை எதிர்பார்த்து இருந்தார்கள். சிறிது நேரத்திற்குப் பின் ஆசாரி அவர்களும் வந்தார்கள். நம் பாவலரையும் இன்னாரென்று அறிந்து கொண்டார்கள். தன்னிட மிருந்த புத்தகத்தைக் கொடுத்துப் படிக்கச் சொன்னார்கள். நம் பாவலர் அவர்களோ சிறிது நேரம் வரை அதைப் புரட்டிப் புரட்டிப் பார்த்துக் கொண்டிருந்ததைக் கண்டு, "என் போன்றப் பழுத்த புலவர்கள் எழுதிய பாடலைத் தற்காலத்தில் புலவர் என்று வருபவர் களுக்கு எப்படிப் படிக்க முடியும்? நான் படித்துக் காட்டுகிறேன்" என்று சொல்லிக் கொண்டு அதை வாங்கிப் படித்தார்கள். ஒரு பாடலைப் படித்ததும் நம் பாவலர் அவர்கள் "இப்பாடல் தாங்கள் எழுதியது தானோ?" என்றதற்கு "நுமக்கு இதில் ஏன் சந்தேகம்" எனக் கேட்டார் ஆசாரியார் அவர்கள். பாவலர் அவர்கள், "இப் பாடலை நான் முன்பே படித்திருக்கிறேனே" என்று மீண்டும் கூறிய போது, "நான் எழுதிய இப்பாடலை நீவிர் எப்படிப் படித்திருக்க முடியும்?" எனக் கேட்டார் ஆசாரியார் அவர்கள். "இல்லை, இல்லை. இப்பாடல் திருவிளையாடற் புராணத்தில் வரும் பாட லல்லவா? அதை நீங்கள் உங்கள் பாடலென்று கூறுகின்றீர்களே, உங்கள் பாடல் அத்தனையும் இப்படித்தான் இருக்குமோ?" என்று சொல்லி திருவிளையாடற் புராணத்தை எடுத்துவர ஆளை அனுப் பினார்கள். இனியும் இங்கிருந்தால் தமது புலமை புலப்பட்டுவிடும் என்றுணர்ந்த கணபதி ஆசாரி அவர்கள் "எனக்கு நீர்க்குற்றம் (நீரிழிவு) உண்டு. வீட்டிற்குச் சென்று வருகிறேன் என்று சொல்லி எழுந்தார்கள். நம் பாவலர் அவர்களோ, "எனது அண்ணாவிக்குத் தெரியாததை உங்களிடமிருந்து படித்துப் போகலாம் என்ற எண்ணத்

தோடல்லவா வந்தேன். நீங்கள் போகிறீர்களே? இருங்கள், போக லாம்" என்றார். அவரோ வெளியில் போகும்போது வெளியில் நின்ற வர்களிடம், "இவன் கோட்டாற்றில் இருந்தவனா? இருந்தவனா? எனக்கேட்டுக் கொண்டே போய்விட்டார். பின் அங்கு வரவே யில்லை. பாவலர் அவர்களோ வெகு நேரம் வரை அங்கே இருந்து தம் அண்ணாவியின் புலமைத் திறத்தைப் பாராட்டி வெற்றியோடு திரும்பி வந்தார்கள்.

1938ஆம் ஆண்டு கோட்டாறு பட்டாரியர் நெடுந்தெருவில் நாவலர் சோமசுந்தர பாரதியார் அவர்கள் சொற்பொழிவாற்றிய கூட்டத்தில் தலைமை வகித்துப் பேசிய பாவலர் அவர்கள், "என்னை இந்நிலைக்கு ஆளாக்கிய எனது குரு சங்கர நாராயண அண்ணாவி அவர்கள் வாழ்ந்த இதே தெருவில் நடக்கும் கூட்டத்தில் தலைவராக இருக்கும் பாக்கியம் கிடைத்தது எனது நல்வினையே" என்று மனம் மகிழ்ந்து ஆர்வத்தோடு கூறினார்கள். என்னே இவரது குரு பக்தி!

"நூலா சிரியர் கருத்தினை நோக்கா
தொருசூத் திரத்திற் கொவ்வொரா சிரிய
ரொவ்வொரு பதமா யுரையுரைக் குவரே
யவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட்
கவர்கருத் தறியா தவரவர் கருத்தினுட்
கொண்ட பொருள்படப் பொருள் கூறுவரே"

என்று கூறிச் சென்ற இலக்கணக் கொத்து நூலாசிரியர் சுவாமிநாத தேசிகரின் கூற்றுப்படி இன்று தமிழகத்தில் உரைகள் மலிந்து காணப் படுகின்றன.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா வுயிருந் தொழும்"

'இக்குறள் ஒரு உயிரையும் கொல்லாதவனாய் இருப்பதோடு புலாலையும் உண்ணாது இருப்பவனை இவ்வுலகிலுள்ள எல்லா உயிரும் கைகுவித்து வணங்கும் என்ற பொருளைத் தருவது. இதில் கொல்லான் என்பதை வினைத்தொகையாகக் கொண்டு கொல் ஆன் எனப் பிரித்தும் (கொன்ற பசு) மறுத்தானை என்பதை மல் + துத்தான் + ஐ (மிகுதியாக உண்பவனை) எனப் பிரித்தும், கொன்ற பசுவின் மாமிசத்தை மிகுதியாக உண்பவனை இவ்வுலகிலுள்ள எல்லாவுயிரும் கைகுவித்து வணங்கும் எனப் பொருள் கூறி எல்லோரையும் வியப்புக் குள்ளாக்கினார்கள். இவ்விதம் பொருள் கொள்ளும் விதத்திலும்

திருக்குறள் அமைந்துள்ளது. இவ்விதம் பொருள் கொள்ளுமிடத்து எவ்வித இலக்கணக் குற்றமும் இல்லை. ஆனால் இப்பொருள் ஏற்றுக் கொள்ளத் தகுதி உடையது அன்று. ஏனெனில் புலால் உண்ணுதல் ஏற்புடையதாகாது. அதை அறவே விட்டொழிக்க வேண்டுமென்று சொல்லி வருகின்ற பத்துக் குறளில் ஒன்றாக இதுவும் இருப்பதால் ஆசிரியர் கருத்துக்கு முற்றிலும் மாறு பாடானது. பாடலுக்குப் பொருள் கொள்ளுமிடத்து ஆசிரியர் கருத்தையும், அவர் காலத்தையும் மனதினுட் கொண்டு பொருள் கொள்ளுதல்தான் அறிவுடைமை'' என்றார்கள். 'பாவலர் அவர்கள் இத்தகைய குறிக்கோளை உடையவராகத் திகழ்ந்ததனால்தான் வடலூர் வள்ளலாரின் அருட்பாவை மருட்பாவென ஒருவர் பல கூட்டங்களிலும் பேசி இராமலிங்க அடிகளாருக்கு இழுக்கு உண்டாக்கிய காலையில் அருட்பா அருட்பாவே என எடுத்துக் காட்டுக்களுடன் விளக்கி வீர முழக்கமிட்டு வெற்றி முரசு கொட்டினார்கள். என்னே இவரது நுண்மாண் நுழைபுலன் !

தமிழ்நாட்டின் பல இடங்களிலும் இன்று தமிழ்த் துறையில் பெரும்பணி ஆற்றிப் பெரும்புகழ் கொண்டு விளங்கும் சான்றோர் பலர், நாஞ்சில் நாட்டில் தோன்றுவதற்கு முழுமுதற் காரணமாய் நாஞ்சில் நாட்டில் தமிழ்ப் பயிரை நட்டு வளர்த்த பெருமை நம் பாவலர் அவர்கட்கே உரியது. அன்னியராட்சி அகன்று நாடு விடுதலை அடையவேண்டும். நாட்டு மக்கள் வறுமை நீங்கி இன்பமாய் வாழ வேண்டும் என்றெழுந்த சுதந்திர உணர்ச்சியைப் பாரதத்தின் தென்னெல்லையாகும் குமரி முனையிலே வாழும் மக்கள் உள்ளத்திலும் ஊட்டி, உணர்ச்சியைத் தட்டி எழுப்பி, விடுதலைப் போராட்ட வீரர் பலரை இங்கு தோற்றுவித்த பெருமையும் நம் பாவலர் அவர்கட்கே உரியது என்றால் அதுமிகை படக் கூறலாகாது.

நாஞ்சில் நாட்டின் நற்றவப் புதல்வராய்த் தோன்றிய நம் பாவலர் அவர்கள், சொற்சுவையும் பொருட்சுவையும் மலிந்து கற்போர்க்கு இன்பம் பயக்கும் பாடல்களும் நூற்களும் பல இயற்றியுள்ளார்கள். அவையாவும் இலைமறை காய்கள் போன்று மறைந்து கிடக்கின்றன. அவைகளையெல்லாம் வெளிக்கொணர்ந்து தமிழகத்திற்கு அளிக்கும் பணியையும் மேற்கொண்டாக வேண்டும்.

“தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று”

★

நான் அறிந்த பாவலர்!

நமச்சிவாயம் அம்மாள்

நாஞ்சில் தந்த தமிழ் மணி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்களை அறியாத தமிழர் இரார். அப்பெரியார் நம்மிடையே வாழ்ந்து, தமிழ் அன்னைக்கும் பாரதத் தாய்க்கும் அரியதொண்டாற்றி அண்மையில் நம்மை விட்டு விண்ணுலகடைந்தவர். பெண்ணினத்தின் சார்பில் அப்பெருமானுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலே இக்கட்டுரையை வரைகின்றேன்.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் தமிழன்னை ஈன்ற அரும்புதல்வர்களில் ஒருவர். 1907-ஆம் ஆண்டு சென்னை மாநகரில் விக்டோரியா மண்டபத்தில் முதுபெரும் புலவர்கள் பலர் முன்னிலையில் சதாவதானம் என்னும் செயற்கருஞ் செயலைச் செய்து அன்னாரது தெய்வப் புலமையையும் அமைதியின் அளவையும் அறிவின் கூர்மையையும் நன்கு விளக்கியுள்ளார். அவற்றையெல்லாம் விரித்துக் கூறி உங்கள் பொழுதைக் கவர விரும்பவில்லை. அன்னார் வாழ்க்கையில் காணப்பட்ட சில அரிய குணங்களையும் அவை வெளிப்பட்ட நிகழ்ச்சிகளையும் பற்றிக் கூற விரும்புகிறேன்.

அன்னாரது கலைத்திறனைப் பொதுவாகக் கூறுமிடத்து.

"நடையழ கோர்புறம்; கற்பனை
நயத்தழ கோர்புறம்; சொற்றொடர்
கடலலை போல்வரும் காட்சியில்
கலையழ கோர்புறம்; தமிழ்மொழி
தடையறக் குழைந்திடும் தன்மையின்
தனியழ கோர்புறம்; இத்தகு
படையலைத் தருபவன் பாவளர்
பாவலனாம் செய்கு தம்பியே"

என்பது மிகப் பொருந்தும்.

பாவலர் அவர்கள் வாழ்ந்திருந்தது இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில். அதிலும் அவர் ஊக்கி உழைத்த காலம் 1920க்கும் 1940க்கும் இடையே அமைந்தது. அப்பொழுது பாரத நாடெங்கும் அரசியல் கொந்தளிப்பு — சுதந்திரப் போராட்டம் அனல்போல் நாடெங்கும் பரவியது. காந்தியடிகளின் தலைமையில் ஒத்துழையாமை இயக்கமும், கதர், தீண்டாமை ஒழிப்பு ஆகிய ஆக்க வேலைகளும் ஓங்கி வளர்ந்தன. இயற்கையிலேயே தேசப் பற்றுக் கொண்டு விடுதலைப் போராட்டத்திற்காக உழைக்க முன்வந்த முஸ்லிம்கள் பலருக்கு "கிலாபத் இயக்கம்" புத்துயிர் ஊட்டியது. ஜனாப்கள் முகம்மதுஅலி, ஷவ்கத் அலி, டாக்டர் அன்சாரி போன்ற முஸ்லிம் தலைவர்கள் பலர், எல்லாம் துறந்து அறப்போர் புரிய முன்வந்தனர். அங்ஙனம் சுதந்திரப் போராட்டத்திற்கு இழுக்கப்பட்ட ஓர் தலைவர் நம் பாவலர் அவர்கள். நாஞ்சில் நாட்டில் தேசீயப் போராட்டத்திற்கு வித்திட்ட ஒரு சில தலைவர்களுள் பாவலர் அவர்கள் சிறந்த இடம் பெறுகின்றார். அரும்பெரும் தேசத் தலைவர் டாக்டர் எம்.இ. நாயுடு அவர்களின் சாத்வீகத்தோடு பாவலர் அவர்களின் சொல்வன்மையும் விறுவிறுப்பும் ஒன்றுபட்டு குமரி எல்லையில் விடுதலைப் போராட்டம் அரசாங்கத்தை நடுநடுங்கச் செய்யும் அளவுக்கு ஓங்கி வளர்ந்தது. கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், நடமாடும் சுதந்திரம் ஆகிய பலவகைப்பட்ட உரிமைகளுடன் சுக வாழ்வு நடத்துவதற்கேற்ற காலமல்ல அது.

இப்பொழுது எல்லோரும் தலைவர்கள் ; எதுவும் பேசலாம் ; சிறையில் உரிய மரியாதைகள் வழங்கப்படும். ஆனால் அன்றோ அன்னியரின் அடக்கு முறையில் எல்லா வகை உரிமைகளும் பறிமுதல் செய்யப்பட்டிருந்த காலம். அப்பொழுது ஆவேசத்துடன் போராட்டத்தில் குதித்துத் தமது அருமையான சொற்பொழிவுகளால் மக்கள் உள்ளத்தைக் கவர்ந்து அவர்களையும் நாட்டுக்காக தியாகம் செய்யத் தூண்டிய பெருமை நம் பாவலருக்கே உரியது.

பாவலர் நாமம் கேட்டால் கூடுகின்றவர்கள் பல்லாயிரவர். அனைவரும் அன்னாரது சொற்பெருக்கில் மூழ்கி அவர் வகுத்த வழியே செல்ல முன்வருவது அன்றைய வழக்கம். அளவற்ற தேசப் பற்றுடன் விடுதலைக்காக உழைத்து அந்த அரும்பேற்றைக் காணும் பாக்கியமும் அவர் பெற்றார்.

பண்டைக் காலத் தமிழ்ப் புலவர்களுக்கு இயற்கையாகவே அமைந்த அருங்குணங்கள் அஞ்சாமை, சுதந்திரம் முதலியன. பெரியோர்களின் புகழ் பாடிப் பரிசில் பெறும் வழக்கம் ஒரு சிலரிடத்தில் மட்டுமே அமைந்திருந்தது. கம்பன் போன்ற சிறந்த புலவர்கள்,

''மன்னவனும் நீயோ ? வளநாடும் உன்னதோ'' என்று பாடி மன்னர்களின் இறுமாப்பை அடக்கினர். ''நாமார்க்குங் குடியல்லோம்; நமனையஞ்சோம்'' என்று பாடியவர்களும் தமிழ்ப் புலவர்களே, ஆதலின் அப்பரம்பரையில் பிறந்த நம் பாவலரிடத்தும் அஞ்சாமை அளவற்ற முறையில் அமைந்திருந்தது. ஆகவே அதிகாரிகளின் அச்சுறுத்தலுக்கும் அடக்கு முறைக்கும் அஞ்சாது தாம் பெற்ற சொல் வன்மை என்னும் மலர்களால் சுதந்திரத் தாய்க்கு அஞ்சலி செய்தார். அவ்வன்னை பூரித்தாள்; மக்களும் பூரித்தனர். பாரத நாட்டின் வேறெந்தப் பகுதியையும் விட சற்றும் குறைவில்லாத அளவில் நாஞ்சில் நாட்டவரும் தேசப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். தியாகங்களும் பல செய்தனர்.

நமது பெருமைக்குரிய பாவலர் அவர்களிடத்தில் காணப்பட்ட இன்னுமோர் அரிய குணம் சமரச மனப்பான்மையாகும். அன்னாரது தாய் மொழியாகிய தமிழ் மொழி சைவத்தில் முளைத்து வைணவத்தில் பயிர் விட்டது அதிலமைந்துள்ள பாடல்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையவை. இடைக் காலத்தில் மட்டிலும் ஒரு சில முஸ்லிம் தமிழ்ப் புலவர்களும். ஒரு சில கிறித்தவத் தமிழ்ப் புலவர்களும் தோன்றினர். அவர்களுள் ஒருவராக இடம் பெறும் செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சமரச மனப்பான்மையுடன் தமிழ் நூற்களை எல்லாம் பாடம் செய்து, அவைகளை ஆராய்ச்சிக்குள்ளாக்கி அவற்றின் சிறப்புக்களையும் வெளியிடலாயினர். அன்னாரின் அவதானத்தின்போது அவரிடம் கேட்கப்பட்ட வினாக்களும் அவர் பகர்ந்த விடைகளும் சைவத்திலும் வைணவத்திலும் அவர் அடைந்திருந்த அளவற்ற அறிவுக்கு எடுத்துக் காட்டுக்களாக விளங்குகின்றன.

ஆழ்ந்த அறிவும் அளவிறந்த ஆற்றலும் அன்னாரிடம் அமைந்திருந்ததுபோல் அவரது உள்ளத்தில் பேரன்பும் இடம் பெற்றிருந்தது. அன்பர்களுக்கு அவர் வரையும் கடிதங்கள் பலகாலும் பாடலாகவே அமைந்திருந்தன. அன்னாரின் நண்பரான பாக்கியம் பண்டாரம் அவர்களுக்கு உடல் நலம் கேட்டு அவர் எழுதிய கடிதத்திலிருந்து அவரது எளிய நடையும் ஆழ்ந்த கருத்துக்களும் பேரன்பும் தெற்றென விளங்கும்.

''பாக்கியமே யோருருவாய்ப் பாரிடத்து வந்ததிருப்
பாக்கியமே நின்சமுகம் பல்கோடி—யாக்கியவெம்
வந்தனமெ லாமேற்று வாழுமுன்சே மத்தினையு
வந்தனமெ லாமெழுது வாய்."

"ஆசுஞ் சுசுமா அடுத்தவர்கள் சேமமா
மேகம் வழங்கியதா மேலுமிந்தப்—போகம்
விளையுமா இன்னுமழை வேண்டுமா செல்வம்
வளையுமா ஊர்செழிக்கு மா"

"திருவிளையாடற் படித்துத் தீர்ந்ததா வேறுன்
திருவிளையா டற்கென் செய்தாய்—செருவிளையாட்
டுற்ற பெருங்காந்த மோதிவரக் கொள்ளாதே
சற்று மறுதாமி தம்."

இது போன்ற பகுதிகளைப் படிக்கும்போது வெண்பாக்களின் இனிமையுடன் நண்பர்கள் நேருக்கு நேரிருந்து உரையாடுவது போன்றதோர் இயல்பினையும் உணருகின்றோம்.

பெரியார் பாவலரிடத்தில் தமிழ்ப் பாடங்கற்றோர் பலர்; பயன் பெற்றோரும் பலரே. ஆனால் அதைத் தமிழன்னைக்குச் செய்யும் தொண்டாக அவர் கருதினாரே தவிர பொருள் தேடுவதற்குள்ள வழியாகக் கருதினாரில்லை. இன்று நாஞ்சில் நாட்டில் திகழும் தமிழ்ப் பண்டிதர் பலரும் அவரிடம் அளவற்ற மதிப்புக் கொண்டிருந்தார்கள். எந்தச் சிக்கலான ஐயப்பாடும் அவரைக் காணுமளவில் கதிரவனைக் கண்ட பனிபோல மறைந்து விடும்.

நானறிந்த பாவலர் ஓர் தேச பக்தர்; தமிழ்க் களஞ்சியம்; அறிவுக் கருவூலம் !

வாழ்க பாவலர் நாமம்! ஓங்குக அவர் புகழ்!!

அசைவம்

தமிழ்நாட்டின் இலக்கியச் சொற்போர் வரலாற்றில் புகழ் பெற்று நின்ற விவாதங்களின் வரிசையில் அழியா இடம் பெற்ற சொற் போராக அருட்பா மருட்பா போர் விளங்குகின்றது. இராமலிங்க சுவாமிகள் எழுதிய துய்யதமிழ் தேன்பாக்களாலான திருவருட் பாவை மருட்பா என ஒரு கூட்டத்தார் பிரச்சாரம் செய்தனர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் அவர்களின் அரும்பெரும் சீடரான கதிர்வேல் பிள்ளை அவர்கள் மருட்பா கட்சிக்குத் தலைமை தாங்கி அருட்பாவை மருட்பா ஆக்கிக் காட்டி வந்தார்.

வள்ளலார் அவர்களின் அமுதொத்த பாடல்கள் மருட்பா ஆக்கப் பட்டதைக் கண்டும் கேட்டும் உளம் நைந்துவிட்ட மகாமதி, சதாவதானி கா. ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள் அருட்பா, அருட்பாவே என்று நிலைநிறுத்த கதிர்வேல்பிள்ளையின் எதிர்வேல் பிள்ளையாக ஊர் ஊராய்ச் சென்று சொற்பெருக்காற்றினார். முடிவில் அருட்பா மருட்பா போராட்டம் ஓய்ந்தது. அருட்பா கட்சிக்கு அழியா வெற்றி கிட்டியது. தமிழ் நாட்டின் சைவாகம பக்தர்களும் தமிழ் இலக்கிய விற்பன்னர்களும் பாவலர் பெருமனாரின் சொன்மாரியில் இதயம் பறிகொடுத்த ரஸிகப் பெருமக்களும் பாவலர் அவர்கள்பால் தமக்குள்ள நன்றிப் பெருக்கையும் பெருமதிப்பையம் காட்டுவதற்காக காஞ்சீபுரத்தில் பெரும் வெற்றித் திருவிழா ஒன்றைக் கொண்டாடினர்.

பாவலர் அவர்களை யானைமீது வைத்து ஊர்வலமாக அழைத்து வந்து காஞ்சீபுரத்துக் கோயிலில் பூரண கும்ப மரியாதை நல்கி கௌர வித்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு வந்திருந்த மாபெரும் கூட்டத்தில் பாவலர் அவர்கள் அருட்பாவின் அருமை பெருமைகளை எடுத்து விளக்கி மக்கள் மனத்தினின்றும் என்றும் அகலா ஒரு மாபெரும் பிரசங்கத்தை நிகழ்த்தி முடித்தார்கள். மணிக்கணக்கில்

பாவலர் அவர்களின் தேவாமிர்தப் பிரசங்கத்தில் நெஞ்சம் பறிகொடுத்திருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் எழுப்பிய கரகோஷம் ஓய்ந்ததும் கூட்டத்திலிருந்த ஒருவர் திடீரென எழுந்து நின்று அப்போதுதான் பிரசங்கத்தை முடித்துவிட்டு மேடைமீது அமர்ந்திருந்த பாவலர் அவர்களை நோக்கி உரக்கக் குரல் கொடுத்தார். 'விழுந்தும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்று சொல்லிக் கொண்டிருந்த மருட்பா கட்சியில் இருந்து கொண்டிருந்த ஒரு சிலருள் முக்கிய ஒருவராக விளங்கிய அவரின் குரலைக் கேட்டதும் கூடியிருந்தோர் அனைவரும் காதைத் தீட்டிக் கொண்டு அவர் சொல்லப் போவதைக் கேட்க தயாராக இருந்தனர். அமைதியைக் கிழித்தவண்ணம் பாவலர் அவர்களை நோக்கி கணீரென்ற குரலில், "என்ன இருந்தாலும் நீவிர் ஓர் அசைவம்" என்று கூறிவிட்டு அவர் உட்கார்ந்து விட்டார். தக்க தருணம் பார்த்து பாவலர் அவர்களை அவமதித்துவிட்ட பெருமிதத்தில் அவர் மகிழ்ந்தார். கூடியிருந்தோர் அனைவருக்குமே அவர் கூறிய வார்த்தைகள் விரசமாகப் பட்டன. முஸ்லிமாகிய பாவலர் அவர்களுக்கும் சைவத்திற்கும் என்ன சம்பந்தம் என்று மருட்பாக் கட்சிக்காரர் பாவலர் அவர்களைப் பார்த்து கேட்டுவிட்ட அசம்பாவிதத்தை எண்ணிக் கூடியிருந்தோர் அனைவருமே மனம் வருந்தித் தலை குனிந்தனர். தாம் கௌரவிக்கவென அழைத்து வந்த ஒரு மாமேதையை இதமற்ற மொழிகள் கூறி தம்மவருள் ஒருவர் அகௌரவித்துவிட்டதை நினைந்து நினைந்து துடிதுடித்தனர், குழுமி இருந்தோர்.

பிரசங்கத்தை முடித்துவிட்டு மேடைமீது அமர்ந்திருந்த பாவலர் அவர்கள் அமைதி இழக்கவில்லை; மனம் நொந்து போகவில்லை; ஆத்திரப்படவில்லை; ஆவேசம் கொள்ளவுமில்லை. கனன்றெழுந்து கோபாக்கினியை தன்னை அவமதித்து விட்டதாக நினைந்து கொண்டிருந்த அந்தப் பேர்வழிமீது கக்கவுமில்லை. புன்முறுவல் பூக்க மெள்ள எழுந்து அந்த குறிப்பிட்ட நபர் இருந்த திக்கை நோக்கிய வண்ணம் ஒரு கணம் நின்றார்கள்.

இயற்கையிலேயே பாவலர் அவர்கள் ஆஜானுபாகுவான தோற்றம் உடையவர்கள். நல்ல உயரமும் பரந்த மார்பும் விம்மிய தோள்களையும் உடையவர் அவர்கள். இத்தகைய சந்தர்ப்பங்களில் அவர்கள் முகத்தில் தோன்றுகிற இறுமாப்பின் பெருக்குக்கும் பெருமிதத்தின் செருக்குக்கும் ஊடே அவர்களுக்கே உரிய ஏளனமும் குறும்பும் கலந்த சிரிப்பும் தோன்றின.

பாவலர் அவர்கள் என்ன சொல்லப்போகிறார்களோ என்று அஞ்சிக் கொண்டிருந்தனர், கூட்டத்தினர். தம்மை "அசைவம்"

எனக் கூறிய அந்த நபரை நோக்கி பாவலர் அவர்கள் "ஆம், யாம் அசைவம்" என்று கூறியபடி மேடையில் நின்ற வண்ணமே தம் ஆஜானுபாகுவான மேனியை இப்பக்கமும் அப்பக்கமும் இடமும் வலமுமாக சிறிது அசைத்துக் காட்டினார்கள். தங்களுடைய பரந்த இரு தோள்களையும் இடது புறமும் வலது புறமுமாக சற்றே தாழ்த்தித் தாழ்த்தி சிங்கேற்றைப் போல தலையை நிமிர்த்தி அசைத்துக் காட்டினார்கள். பீடுமிக்க களிற்றினைப் போல் இங்கு மங்குமாக அசைந்தவண்ணம் மீண்டும் தம்மை அசைவம் என்றழைத்த அந்த நபரை நோக்கி "ஆம், யாம் அசைவோம்" என்று அசைந் தாடிக் காட்டி நகைத்தவாறே மீண்டும் இருக்கையில் அமர்ந்தார்கள். கூட்டத்தினர் 'கொல்'லென்று கைகொட்டிச் சிரித்தனர். பாவலர் அவர்களின் கௌவரமும் மாண்பும் மீண்டும் குன்றென நிமிர்ந்து விட்டதை எண்ணி உள்ளம் குளிர்ந்தனர்; மகிழ்ந்தனர்; பாவலர் அவர்களின் மேதா விலாசத்தையும் சாதுரியத்தையும் எண்ணி எண்ணி வியந்தனர்; மெச்சினர்.

"அசைவம்" எனக் கூறியவரை இப்போது கூட்டத்தில் எவராலும் கண்டு கொள்ள முடியவில்லை.

பாவுக்கரசர் கண்ட நாவுக்கரசர்!

திருப்பூர் ஏ.எம். முஹைதீன்

ஆண்டு எனக்கு நினைவில்லை. இற்றைக்குச் சுமார் 45 ஆண்டுகளுக்கும் முன்னால் தேவகோட்டை மீலாத் விழாவுக்குச் சென்றிருந்தேன். அந்நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பவேண்டிய நான், அங்கேயே தங்கி விடுகிறேன். அடுத்த நாள் தொண்டியிலே பெருமானார் (ஸல்) அவர்களின் பிறந்த நாள் பெரு விழா நடக்க இருக்கிறது. எனக்கு அழைப்பில்லைதான்! என்றாலும் அந்த விழாவிலே கலந்து கொண்டாக வேண்டுமென்ற வேணவா. பேசுவதற்காக அல்ல; கேட்பதற்காக.

தொண்டி மாநகர் விழாவில் ஒரு கேட்பாளனாகக் கலந்து கொள்ளவேண்டிய அவசியம் என்ன வந்தது?

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுள் ஒருவரான தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் பெருமானார் அவர்கள் தொண்டி நிகழ்ச்சியின் சிறப்புப் பேச்சாளர். அந்த மாமேருவின் பேச்சாற்றலையும் பேரறிவின் பெருந்திறனையும் வெகுவாகக் கேள்விப்பட்டிருந்த எனக்கு அவர்களின் பேச்சைக் கேட்கக் கிடைத்த அந்த அரிய வாய்ப்பை இழந்துவிட மனமில்லை.

தேவகோட்டை சகோதரர் ஷாகுல் ஹமீது அவர்கள் தமது வேனில் தொண்டிக்கு அழைத்துச் சென்றார்.

விழா கோலாகலமாகத் தொடங்கியது. விழாவுக்கு முன்னிலை வகித்த தொண்டி சேர்மன் கான் சாஹிப் அவர்கள் நான் அங்கிருக்கும் சேதியை பாவலர் அவர்களுக்குத் தெரிவித்தார்கள். பாவலர் அவர்கள்

என்னைப் பார்க்க விரும்பினார்களாம். மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். தூய வெண்ணிறக் கதராடையும் காந்தி குல்லாயுமாக வீற்றிருந்த அந்த ஆஜானுபாகுவான உருவம் என்னை அன்பொழுகப் பார்த்தது. அந்தக் கணநேரப் பார்வையில் கனிவிருந்தது; என்னைப் பற்றிய ஒரு கணிப்பும் கூடவே நடந்தது.

என்னைப் பேசப் பணித்தார்கள். 'திருவினும் திருவாய்' எனத் துவங்கும் சீறாவின் முதற்பாடலின் 'திரு' எனத் துவங்கும் முதலிரண்டு எழுத்துக்களுக்கு மட்டுமே பத்து இரவுகள் சிறப்பான விளக்கம் செய்தவர் எனக் கேள்விப்பட்டிருந்த பாவலர் பெருந்தகையின் முன்னால் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றிப் பேச நின்றேன்.

'இலக்கிய நயத்திற்காக — இலக்கண அமைதிக்காக — உவமைத் திறனுக்காக — கவிதை இனிமைக்காக வேண்டுமானால் சீறாவை ஏற்றுக் கொள்ளமுடியுமே தவிர எம்பிரான் ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கையைப் பூரணமாகவும் பொருந்துமாறும் கூறும் ஓர் காவியம் என்று அதை ஏற்றுக் கொள்ளமுடியாது' என்ற எனது வாதத்தைக் கூடியிருந்தோர் ஏற்றுக் கொள்ளும் வகையில் நிறுவ முயன்றேன்.

பேசி முடித்து விட்டுப் பின்னால் சென்று அமர்ந்தேன்.

பாவலர்கோன் தங்களின் இருக்கையை விட்டு எழுந்தார்கள். எனது கருத்துக்களைப் பற்றிய விமரிசனங்களில் ஈடுபட்டிருந்த கூட்டத்தினர் மத்தியில் குண்டூசி விழுந்தால்கூடக் கேட்குமளவுக்கு அமைதி நிலவியது. முஹைதீனின் கருத்துக்களைப் பற்றி என்ன கூறுவாரோ, எடுத்தெறிந்து பேசுவாரோ என எதிர்பார்த்து எல்லோருமே பாவலர் அவர்கள் பக்கமாக தங்கள் காதுகளைத் திருப்பினர்.

மேடையில் நின்றுகொண்டிருந்த பாவலர் அவர்கள் அமைதியாக நாற்புறமும் தங்கள் பார்வையை ஓட்டினார்கள். நானிருந்த பக்கமாக அவர்களின் கண்கள் திரும்பின. அவையை நோக்கி அவர்களின் கம்பீரமான குரல் ஒலிக்கத் துவங்கியது.

'என்ன துணிவு? இவனுக்கு என்ன துணிவு?' என்றே அவர்களின் பேச்சுத் துவங்கியது.

'பாவம்! முஹைதீன் வகையாக மாட்டிக் கொண்டு விட்டான்' என பச்சாதாபத்தோடு என்னை எட்டிப் பார்த்தனர், மக்கள். பாவலர் அவர்கள் என்ன கூறுவார்களோ என எதிர்பார்த்தவனாக அமர்ந்திருந்தேன்.

பாவலர் அவர்களின் பேச்சு தொடர்ந்தது.

'என்னையும் வைத்துக் கொண்டு சீறாவைப் பற்றி இப்படிக் கருத்தறிவிக்க என்ன துணிவு? இவனுக்கு என்ன துணிவு? இந்த இவனது துணிவினால் தான் தமிழ்நாடு இவனைப் பெரிதுவந்து பேணி நிற்கிறது போலும்? இன்று முதல் என்னாடு, என்னினத்தார் 'நாவுக்கரசு' என இவனை அழைக்கட்டும். இவன் நாவன்மை நாளும் பெருகட்டும்' என வாழ்த்தி முடித்துவிட்டு தங்கள் பேச்சைத் தொடர்ந்தார்கள்.

இடியை எதிர்நோக்கி இருந்த அவையோர் இதமான தென்றலை அனுபவித்து அகமகிழ்ந்தனர். வசிஷ்டர் வாயால் வாழ்த்தினைப் பெற்ற மயக்கத்தில் தலை குனிந்தேன்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பாவலர் பெருந்தகை அவர்களோடு எனக்கு ஏற்பட்ட தொடர்பு நெருக்கமாகி அவர்களின் வாணாள் உள்ளளவும் நீடித்தது; நிலைத்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் அவர்களின் ஊரான கோட்டாறுக்குச் சென்று அவர்களோடு அளவளாவி அறிவுரை பெற்று மகிழும் அரிய வாய்ப்பினைப் பெற்றதைப் பெரும் பேறாகக் கருதுகிறேன். அவர்கள் தலைமையிலேயே அவர்கள் ஊரிலும் பேசும் வாய்ப்பினைப் பெற்றேன்.

பாவலர் பெருமான்மீது நான் அளப்பரும் மரியாதை வைத்திருந்தேன். அவர்கள் என்பால் அலாதியான அன்பு வைத்திருந்தார்கள். அத்தகைய அன்புள்ளம் கொண்ட ஆற்றல் மறவர்கள் இன்று அரிதாகி விட்டனர்.

—தொகுத்தவர் : "செம்பியன்"

மறக்க முடியாத அந்த நாள்

MK.F. மவ்லானா

ஒவ்வொருவருக்குமே தம் வாணாளில் மறக்க முடியாத அரிய நிகழ்ச்சிகள் ஒன்றிரண்டு நிகழ்வதுண்டு. அவை நெஞ்சோடு நிலைத்து நினைக்குந்தோறும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவனவாக இருக்கும் ; அல்லது வேதனையின் உச்சமாக அமையும்.

நெஞ்சோடும் நினைத்து வெளியிலும் கூறிப் பெருமைப்படத் தக்க நிகழ்ச்சி யொன்று ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பு எனது வாழ்வில் நிகழ்ந்தது, அதை நினைத்து நான் இன்றும்கூட மகிழ்வ துடன் பலவிடங்களில் பெருமையாகப் பேசிக் கொண்டுமிருக்கிறேன், இப்போது அந்நிகழ்ச்சிக்கு எழுத்துருக்கொடுத்து இலட்சோபலட்சம் மக்களிடத்தும் சமர்ப்பிக்க வாய்ப்புக் கிடைத்தமைக்கு சொல்லொணாப் பூரிப்புஅடைகிறேன்.

1949ஆம் ஆண்டு, மீலாத் விழாவிற்கு ஒரு மாதத்திற்கு முன்பு, கீழக்கரையில் மீலாது விழாக் குழு கூடியிருக்கிறது. அந்த ஆண்டு அல்லாமா, சதாவதானி பாவலர் அவர்களை அழைத்து அவர்களின் அரிய உரையைக் கேட்க வேண்டுமென்ற ஊரார் விருப்பு பேசப்படு கிறது. புலவர்களுக்கு வாரி வழங்கும் புரவலர்களைக் கொண்ட பெரு நகரல்லவா ? ஆகவே அன்றைக்கு மட்டுமென்ன, இன்று வரையும் ஈடில்லாது திகழும் பெரும் புலவரும் நாவலரும் அல்லாமாவுமான பாவலர் அவர்களை அழைத்து கௌரவிக்க நாடியதில் வியப்பில்லை ! குழுவினரின் வெகு நேரப் பேச்சுக்குப் பிறகு மகாமதி சதாவதானி, நாவலர் செய்குதம்பிப் பாவலர் அவர்களையும் மதுரையிலிருந்து தமிழுக்கு அணி செய்து கொண்டிருந்த மதிப்புக்குரிய சோம சுந்தர பாரதியார் அவர்களையும் அழைத்து கௌரவிப்பது என முடிவு செய்து அவ்விருவரோடும் தொடர்பு கொண்டு ஒப்புதல் பெறும் பணியைக் குழு என் மேல் சுமத்தியது.

ஊரார் எனக்கு ஆணையிட்டதும் அன்றே மதுரை புறப்பட்ட நான், மதுரை பசுமலையில் சேது வமிசத்துச் சிறப்பாளர் உயர்திரு சோமசுந்தர பாரதியார் அவர்களைக் கண்டு என்னை நான் அறிமுகம் செய்து கொண்டேன். பாரதியார் அவர்கள், கீழக்கரைக்கும் அவர்களுக்கும், கீழக்கரைக்கும் இராமனாதபுரம் அரண்மனைக்கும் உள்ள பாரம்பரியத் தொடர்புகள் பற்றிய அதிசய வரலாறுகள் பலவற்றைக் கூறினார்கள். வள்ளல் சீதக்காதிக்கும் கிழவன் இரகுநாத சேதுபதிக்கும் இருந்த சகோதர பாசத்தை எல்லாம் பாரதியார் அவர்கள் விளக்கமாகப் பேசினார்கள். இறுதியில்,

நபிகள் கோமானின் பிறந்த நாளாகிய ரபீயுல் அவ்வல் பிறை 12க்கு உரிய ஆங்கிலத் தேதியைப் பேசி ஒப்புதல் பெற்றுக் கொண்டு, அங்கிருந்து நெல்லை வழியாக நாகர்கோவிலை அடைந்தேன். நாகர்கோவிலில் ஒரு குதிரை வண்டியை அமர்த்திக் கொண்டு கோட்டாறு சென்று அல்லாமா அவர்களின் இல்லத்தில் விசாரித்த போது, முதலிற் கிடைத்த சேதி ஏமாற்றமாக இருந்தது. நாகர்கோவிலில் நான் கடந்து வந்த பாதையில்தான் ஒரு பிரமுகருடைய இடத்தில் பேசிக் கொண்டிருப்பார்கள் என்று கூறப்பட்டது.

நான் காணச் சென்றபோது வீட்டில் இல்லை என்ற செய்தி சர்வ சாதாரணமானதுதான். என்றாலும் பிறகு நடந்த நிகழ்ச்சியை நான் எண்ணிப் பார்க்கும்போது "அது முன்னோடியா?" என ஐயுறுகிறேன். இன்றைக்கும் அந்த வேதனை எனக்கு உண்டு.

வீட்டிலிருந்து ஒருவரைத் துணைக்கு அழைத்துக் கொண்டு, சென்ற ஜட்காவிலேயே நாகர்கோவிலுக்குத் திரும்பினேன்.

பாவலர் அவர்கள் பேசிக் கொண்டிருந்த இடத்தை அடைந்ததும் கூடவந்தவர், 'அதோ இருக்கிறார்கள்' என்று கையைக் காட்டிக் கொண்டே வண்டியிலிருந்து இறங்கினார். நான் வண்டிச் சத்தத்தைக் கொடுத்து விட்டுத் திரும்பி ஸலாம் சொல்லிக் கொண்டே அந்த சன்னிதானத்தை அடைந்தேன். 'சன்னிதானம்' என்று நான் சொன்னதும் அந்த முகவிலாசத்தை நேரில் காணாதவர்களுக்கு சற்று வியப்பாகத் தோன்றலாம். தரிசித்தவர்கள் உள்ளுக்குள்ளே பெருமிதம் கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.

உலகை ஒரு சிறு குளிகையாகச் சுருக்கி, அதையே மையாகக் குழைத்து தன் கண்களுக்கு இட்டுச் கொண்டிருப்பது போன்று மிக்க ஆழமான பார்வை! அந்தப் பார்வை நேருக்கு நேர் சந்திப்பவர்களைப் பணியச் செய்து மரியாதையைக் காணிக்கையாகச் சமர்ப்பிக்க வேண்டும் போன்ற உணர்வைத் தூண்டி விடுவதாகும்!

அல்லாமா அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த அந்த இடத்தில் நான்கு அடிக்கு மேல் அகலமும் எட்டு அடிக்கு மேல் நீளமும் கொண்ட ஒரு பெரிய மேசை கிடந்தது. அவர்களுக்கு எதிரில் என்னை அமரும்படி கூறினார்கள். அவர்களுக்குப் பக்கத்திலேயே ஒருவர் நின்று சொண்டு அவர்களுக்குத் தேவையானவைகளை கவனித்துத் தொண்டு செய்து கொண்டிருந்தார். அவர்தான் அவ் விடத்தின் சொந்தக்காரர் என்றும் நிறைந்த செல்வந்தர் என்றும் பிறகு தெரிந்து கொண்டேன்.

அல்லாமா அவர்களிடம் நான் இன்னார், இன்ன வேலையாக வந்திருக்கிறேன் என்று கூறியதும் அவர்கள் முதன் முதலில் சொன்ன வார்த்தைகள் எனக்குப் பெருமிதத்தை உண்டாக்கியது. நெஞ்சுக்குள் ஒரு கிளுகிளுப்பைத் தோற்றுவித்தது. அவர்கள் சொன்னது இதுதான் :

"கீழக்கரையை நான் நேசிக்கிறேன். கீழக்கரையின் பொக் கிஷப் பெட்டகமாகிய உலகச் சொத்து கல்வத்து ஆண்டகை அவர்களை நான் பாடிப் புகழ்ந்து பரவசமடைந்திருக்கிறேன். எனினும் இதுவரை நான் கீழக்கரைக்கு வந்ததில்லை. வர நாடி இருக்கிறேன்."

ஊர் பொதுச் செய்திகள் குறித்துச் சிறிது நேரம் பேசிய பிறகு மீலாது விழா பற்றிக் கேட்டார்கள், வேறு யார் யாரை அழைக்கப் பட்டிருக்கிறது என்றும் கேட்டார்கள். அவர்களின் இக்கேள்வியில் சிறிது வருத்தம் கலந்திருப்பது போல் உணர்ந்தேன். நான் எண்ணியது சரிதான் என்பதை விரைவிலேயே உணர்ந்தேன்.

"மீலாது விழா என்று ஏற்பாடு செய்து விட்டு அதில் மரியாதைக்காகவும் பெருமைக்காகவும் டஜன் கணக்கில் பேசு வதற்கு ஆட்களை அழைத்து விளம்பரங்கள் செய்வார்கள். அது மட்டும் அன்று.

நபிகளாரைப் பற்றி அறியாதவர்களையும் அறிந்தும் நம்பாத —மதிக்காதவர்களையும் கூட அழைத்துப் பேச வைப்பார்கள்."

என்று கூறி விட்டு "உங்கள் ஊர் விழாவுக்கு இன்னும் யார் யாரை அழைத்திருக்கிறீர்கள்?" எனக் கேட்டார்கள். சோமசுந்தர பாரதியார் அவர்களை மதுரையில் சந்தித்து வந்த செய்தியை கூறினேன். அல்லாமா அவர்கள் இலேசாகச் சிரித்துக் கொண்டு, "என்னையும் அழைப்பது அவருக்குத் தெரியுமா ?" எனக் கேட்டார்கள்.

“தங்களுடைய அனுமதி கிடைப்பதற்கு முன் அவருக்கு அதைச் சொல்லவேண்டாமெனக கருதியதால் சொல்லவில்லை” என்றேன்.

உடனே பாவலர் அவர்கள் கடல் மடை திறந்து கொண்டது போன்று, பண்டைய நிகழ்ச்சி ஒன்றைச் சுவையாகக் கூறினார்கள். நானாகக் கேட்க விரும்பி தயங்கிக் கொண்டிருந்த நிலையில் அவர்களாகச் சொல்லத் துவங்கியதானது, அவர்களை ‘விலாயத்து’ பெற்றவர்களாக எண்ணும்படி என்னைத் தூண்டியது.

“இலக்கிப விவாதத்தில் என்னைத் தோல்வி காணச் செய்ய வேண்டும் என்பதில் அதிதீவிர அக்கரை கொண்டுப் பெரும் பாடுபட்ட புலவர்களோடு சேர்ந்து முயற்சி மேற்கொண்டவர் இந்த சோமசுந்தர பாரதியார். எல்லாம் வல்ல அல்லாஹ்வின் பேரருள் என்னைச் சூழ்ந்து, அரவணைத்து ஆக்கம் தந்ததை நான் தெளிவாக உணருகிறேன். அதனால் எனக்கு அச்சம் என்ற உணர்ச்சியே இல்லாதிருந்தது. தொடர்ந்த வெற்றிகளை அவனே எனக்கருளினான்.

திருக்குறள் உரை பற்றிய சர்ச்சையில் பாரதியாரின் கருத்துக்களுக்கு இலக்கண இலக்கியங்களின் துணையோடு நான் எடுத்து வைத்த மறுப்புக்களுக்கு பதில் கூறவென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மறுநாள் கூட்டத்திற்கு வராமலே போய் விட்டவர் நம் பாரதியார். என்ன காரணத்தாலே அச்சம் அவரைச் சூழ்ந்து கொண்டு விட்டது. அந்த பாரதியார் நானும் கலந்து கொள்கிறேன் என்பது தெரிய வந்தால்...” – எனக் கூறி நிறுத்தினார்கள். நான் நிலைமையைப் புரிந்து கொண்டேன்.

இறுதியாக கீழக்கரை மீலாது விழாவிற்கு வருவதற்கு அவர்களின் ஒப்புதலைப் பெற்றுக் கொண்டு நிறைந்த நெஞ்சத்துடன் ஊர்வந்து சேர்ந்தேன்.

ஊருக்கு வந்ததும் மீலாதுக் குழுவுக்குச் செய்தியை அறிவித்து விட்டு குழுவினரில் சிலரும் நானுமாக மதிப்புக்கும் மரியாதைக்குரிய பெரியார் தைக்காதம்பி எனப்படும் அல்ஹாஜ் தை.மு. அப்துல் கையூம் சாஹிப் அவர்களிடம் சென்று, சதாவதானி அவர்கள் கீழக்கரைக்கு வர ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சிக்குரிய சேதியைக் கூறினோம்.

கீழக்கரைக்கு அல்லாமா பாவலர் அவர்களை அழைத்து கௌரவிக்க வேண்டும் என்பதில் ஆசை கொண்டிருந்த ஹாஜி தைக்கா தம்பி அவர்கள் மிக்க மகிழ்ச்சி அடைந்தார்கள். பாவலர் அவர்

களைத் தங்க வைப்பது உட்பட, அவர்களுக்குப் பணிவிடை செய்வதற்கான ஆட்களை நியமிப்பது வரை உள்ள சகல வசதிகள் பற்றியும் அப்பொழுதிருந்தே சிந்தித்துச் செயல்படத் துவங்கி விட்டார்கள்.

புலவர்களைப் போற்றி கௌரவித்து அவர்களுக்குப் பொன்னால் அபிஷேகம் செய்து மகிழக்கூடிய புரவலர்களைப் பரம்பரையாகக் கொண்ட பதியல்லவா, கீழக்கரை!

நான் வந்து தகவல் சொன்ன மறுநாளே அல்லாமா அவர்கள் கீழக்கரைக்கு வருவதற்குத் தேவையான பணம் அனுப்பி வைக்கப் பட்டது. துண்டுப் பிரசுரங்களின் மூலமும் சுவரொட்டிகளின் மூலமும் பிரமாத விளம்பரங்கள் செய்யப்பட்டன. பாவலர் அவர்கள் கீழக்கரைக்கு வருகிறார்கள் என்ற செய்தியை எப்படியெப்படியோ தெரிந்து கொண்ட அண்டைய ஊர்களிலுள்ள அறிஞர்களும் கலைஞர்களும் பலர் பாவலர் அவர்களின் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் கேட்டுத் தொடர்பு கொண்டனர்.

இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில்தான் மறக்க முடியாத அந்த நேரத்தைச் சந்திக்கும் அபாக்கிய நிலை ஏற்பட்டது.

அன்று தபால்காரர் ஒரு கடிதத்தைத் தந்து விட்டுச் செல்கிறார். மீலாதுக் குழுவின் செயலாளன் என்ற முறையில் பிரித்துப் படித்த நான் பிரமை கொண்டவனாக இடிந்துபோய் அப்படியே அமர்ந்து விட்டேன்.

எனது செயலற்ற நிலையைக் கண்ட சக தோழர்கள் காரணம் கேட்டபொழுது என்னால் பேசமுடியவில்லை. துக்கம் தொண்டையை இறுக்கிச் சிறைப்படுத்தி விட்டது. ஆகையால் அந்தக் கடிதத்தை அவர்களிடமே கொடுத்தேன். படித்துப் பார்த்த அனைவருமே ஏறக்குறைய என் நிலையைத்தான் அடைந்தார்கள். கடிதத்தில் காணப்பட்ட வாசகம் இதுதான்:

"வாப்பா அவர்கள் சுகக் குறைவால் படுத்த படுக்கையாக இருக்கிறார்கள். தங்கள் மணியார்டருக்கும் படுக்கையிலிருந்தே கையெழுத்திட்டார்கள். எனினும் உடல் நிலை சீராக இல்லாமையால் பணத்தைத் தங்களுக்குத் திருப்பி அனுப்பும்படியும் இன்ஷா அல்லாஹ் அடுத்த ஆண்டு எங்கள் சொந்தச் செலவிலேயே கீழக்கரைக்கு வர நாடி இருப்பதாகவும் தங்களுக்கு எழுதச்சொன்னார்கள். பணம் திரும்ப அனுப்பப்பட்டிருக்கிறது."

இவ்வாறாக இருந்தது அந்த நிருபம். உண்மைதான். அடுத்த ஆண்டுக்குள் அவர்கள் பயணமாகி விட்டார்கள். அப்பயணம் கீழக் கரைக்கு அல்ல; மேலக்கரைக்கே பயணமாகி விட்டார்கள்.

இப்படி ஒரு பாமலையை, நடமாடிய பொக்கிஷப் பெட்டகத்தை, கடலைக்கடைந்து திரட்டிய அமுதை தமிழ்நாடு மீண்டும் எப்பொழுது காணும்?

மனிதன் என்றாவது ஒரு நாள் மண்ணுலகைப் பிரிய வேண்டியவன்தான். இது இறை நியதி.

அல்லாமா அவர்கள் மறைவதற்கு முன்னால் அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பினை எனக்கருளிய இறை நாட்டத்தை — அவர்களைச் சந்தித்த அந்த நாளை — என்னால் மறக்க முடியாது. யாரால்தான் முடியும்?

எந்த நாள் காண்போம் இனி

பேராசிரியர் சி. நயினார் முகம்மது, M.A.,

'தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை; தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ' என்றார் புதுவை தந்த புதுமைக் கவிஞர்.

தேடிச் சோறுநிதம் தின்று—பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிளப்பருவ மெய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ!

என்றார் பாட்டுத் திறத்தாலே உலகைப் பாலித்திட விழைந்த பாரதியார்.

முயன்று நிறுவிய மாடமாளிகைகள் மறைந்து விட்டன; மாநகர்கள் சரிந்து விட்டன; மலைகள், மாகடல்கள் அழிந்து விட்டன. ஆனால் இன்ப நிலையங்களாக உள்ள இலக்கியங்கள் இலங்கிக் கொண்டே இருக்கின்றன. இனிய இலக்கியங்களைத் தந்த அரிய புலவர்களும் இறவாது இருந்து கொண்டே இருக்கின்றனர். இவ்வாறு இறவாத புகழுடைய பெருநூல் செய்து என்றும் வாழ்ந்துவரும் பெரும் புலவர் பரம்பரையிலே செயற்கரிய செய்த செய்குதம்பிப் பாவலரும் ஒருவர்.

'மூச்சு விடும் முன்னே முந்நூறும் நானூறும்' பாடும் கவிஞர் கன்னித் தமிழுக்குண்டு. ஏன், 'இம்மென்றால் எழுநூறும் எண்ணூறும் அம்மென்றால் ஆயிரம் பாட்டாகாதோ' என்று கூறி மாசிலா ஆசுகவிகள் பொழிந்து தேசு கொண்ட பாவலருண்டு, பைந்தமிழுக்கு. பல்லாண்டுகட்கு முன்னர் தமிழ்க் கவிஞர் வேண்டும் போது வேண்டியாங்கு கவிபாடிக் களித்தார்கள். ஆனால், இன்று கவிபாடும் கவிஞர்க்கு 'மூடு' வேண்டும் என்பர். 'உள்ளத்தே உணர்ச்சி பெற்ற போதே கவிதை வெளிப்படும்; சூழ்நிலை சேர்ந்த போதே கவிதை உருவெடுக்கும்' — இது மேனாட்டார் தருகின்ற விளக்கம் என்பது மட்டுமல்ல, உண்மையுங்கூட. பொதுவாகக் கவிஞரின் இயல்பு இதுவேதான். ஆனால், பிறப்பிலே சிறப்பமைந் தவர்கள் — கருவில் திருவுடையவர்கள் — விந்தைக் கவிஞர்கள் உண்ணும்போதும் உறங்கும்போதும் கவிபாடும் இயல்பினைக் கொண்டிருப்பர். கவிதைக்குரிய உணர்ச்சி எப்போதும் அவர்களைப் பற்றியே நிற்கும். கங்கையைப்போல், காவிரிபோல் கவிதைகள் பெருக்கெடுத்துக் கொண்டே இருக்கும்.

பாவின் சுவைக்கடல் உண்டெழுந்து கவிமாரி பொழிந்திட்ட தண்டமிழ்க் கொண்டல் கம்பர் இரவிற்கு எழுநூற்றைம்பது பாடல்கள் வீதம் பாடி முடித்தார், இராம காதையை என்றொரு மரபுச் செய்தி உண்டு. பிற்காலத்தில் கவிதை மண்டலத்தே கதிரவனாக ஒளி வீசிய திரிசிரபுரத்து மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை சோதிக்க வந்த மாணவன் எழுதும் கை சோர்ந்து கடுக்கும் அளவிற்குப் பாடிக் குவித்தார் என்பது தமிழ் வரலாறு தரும் குறிப்பாகும். இடியும் மழையுமாக கவிதை பொழிந்த காளமேகத்தை அறியாத தமிழர் இரார். இவர்கள் போன்றே பாவலரும் வேண்டிய போதெல் லாம் இன்பக் கவிகள் பாடி களிப்பில் ஆழ்த்தும் அருந்தமிழ்ப் புலவராவார்.

'ஒன்றே செய்தல் வேண்டும்' (One thing at a time) என்பர். பலவற்றில் ஈடுபட்டு ஒன்றையும் செவ்வையாகச் செய்யாது பரிதாப நிலையிலிருப்பது கூடாது என்பதை உணர்த்தவே இப் பழமொழி தோன்றியுள்ளது, ஒன்றைத் தொடங்கி அதனையும் நன்றாகச் செய்யாத மாந்தரும் பலருண்டு. ஆனால் அறிவு மேதைகள், வியத்தகு செய்திடும் விந்தை மனிதர்கள் பல செயல்களை ஒரே காலத்தில் சிறக்கச் செய்துவிடுவர். இவ்வாறு ஒரே காலத்தில் பல துறைகளில் முறையாகப் பல செயல்களைச் செய்து காட்டுவதனை அவதானம் என்பர். நினைவாற்றல், ஊன்றிய கவனம், மேன்மைச் செயல் எனும் பல பொருட்களைக் கொண்டுள்ளது அவதானம் எனும் சொல். அவதானியாரிடம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும்

ஐம்புலனும் அருமையாகச் செயல்படுகின்றன. அறிவு, அகில இருளை அகற்றும் கதிரவனாக ஒளிவீசும். இவ்வாறு எத்தனை செயல்களைச் செய்யக் கூடுமோ அவற்றிற் கேற்றவாறு அவதானம் அமையும். எட்டுச் செயல்களை ஒரே காலத்தில் செய்வது அட்டாவ தானமாகும். பத்துச் செயல்களைச் செய்வது தசாவதானமாகும். அவதானம் செய்வது அருமையாகும். அதினும் சதாவதானம் செய்வது மிகவும் அருமையாகும். இன்பத் தமிழிலே இதுகாறும் சதாவதானம் செய்தவர் மூவரே. நூறு செய்ய முயன்றோர் மூவருள் வெற்றி கண்ட நம் பாவலர் மிகச் சிறந்தவராவார்.

மதிநுட்பம் வாய்ந்த புலவர்களின் புலமைச் சுவை கவிகளில் மட்டுமல்ல, அவர் தம் உரையாடலிலும் ஒளி வீசித் திகழும். அறிவு நிரம்பிய அறிஞர் தம் உரையாடலிலும் சுவை பயக்கும் பிறிதொன்று மில்லை. எனவேதான் விண்ணகத்தே துறக்க இன்பங் கிடைப்பதா யிருப்பினும் மண்ணகத்தே அறிஞர் தம் உரையாடலிலே மின்னும் சுவையே விரும்பப்படுவது என்று கூறுகிறது ஒரு நாலடிப் பாடல். நுண்ணறிவும் நூலறிவும் கைவரப் பெற்ற பாவலரின் உரையாடலும் உவகை பயப்பதாகும்.

ஒருநாள் பாவலரின் நண்பர் மகன் வந்தார். இவரும் புலமை வாய்ந்தவர். பாவலரின் புலமைத் திறத்தைச் சோதிக்க விரும்பினார். நண்பரின் மகனை நல்விருந்தாகக் கொண்டார் பாவலர். தம் தந்தை பாவலரிடம் நூறு ரூபாய் வாங்கிக் கொள்ளச் சொன்னதாகக் கூறினார். நண்பரின் விருப்பத்தை நிறைவேற்ற முற்பட்ட பாவலர் 'அதற்கென்ன நூறு ரூபாய் தருகிறேன்' என்று கூறினார். பாவலரைச் சோதிக்க முனைந்த வந்தவர், 'அதிகச் செலவுள்ளது; ஆதலின் இருநூறு ரூபாய் தந்தால் பேருதவியாகும்' என்றார். பாவலரும் பளிச்சென 'இரு நூறு ரூபாய் தருகிறேன்' என்று இரு நூறு என்பதனைப் பிரித்துக் கூறினார். பாவலரின் சிலேடையைப் புரிந்து கொண்ட வந்தவர், 'முந்நூறு ரூபாய் தந்தால் நல்லது' எனக் கேட்டார். பாவலரும் தயங்காமல் 'முன் நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். முன்பு கூறிய நூறு ரூபாய் தருகிறேன் என்னும் பாவலரின் குறிப்பை அறிந்த வந்தவர், 'நானூறு ரூபாய் தந்தால் நலமாகும்' என்றார். பாவலரும் பரிவோடு 'நான், நூறு ரூபாய் தருகிறேன்' என்று கூறினார். பொருளைப் புரிந்து கொண்ட வந்தவர், 'ஐந்நூறு ரூபாய் தாருங்கள்' எனக் கேட்டார் வியப்புக் குறிப்பை முகத்தில் காட்டி விந்தை உணர்ச்சி வெளிப்பட 'ஐ! நூறு தருகிறேன்' என்றார் பாவலர். சிந்தை மகிழ்ந்த வந்தவர் 'அறுநூறு ரூபாய் தாருங்கள்' எனக் கேட்டார். 'நீட்டாது பேச்சை அறு'

எனும் பொருளில் 'அறு, நூறு ரூபாய் தருகிறேன்' என்றார் பாவலர். பெருமகிழ் வெய்திய வந்தவர் 'எழு நூறு ரூபாய் வேண்டும்' என்றார். பாவலரும் கையசைத்து 'நூறு பெற்று எழுந்து செல்' எனும் பொருள்பட 'எழு, நூறு ரூபாய் தருகிறேன்' என்றார். வந்த புலவர் தொடர்ந்து 'எண்ணூறு ரூபாய் வேண்டும்' என்றார். பணப் பையோடு வந்த பாவலர். 'இதோ எண்ணு நூறு ரூபாய் இருக்கிறது' எனும் குறிப்பில் 'என் நூறு ரூபாய்' எனக் கூறிப் பணத்தைக் கொடுத்துப் பேச்சை முடித்தார். பாவலரின் மதி நுட்பத்தையும் உரைத் திட்பத்தையும் கண்டு வியந்து மகிழ்ந்தார் சோதிக்க வந்தவர் இது போன்று மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சிகள் பலவுண்டு, பாவலர் வாழ்விலே.

பாவலர் இணையற்ற நினைவுத் திறன் மிக்கவர். எளிதில் ஈர்க்கும் அறிவுத் திறன் படைத்தவர். சதாவதானம் எனும் புகழ்ப் பெயருக்கேற்ப 'சதா அவதானம்' செய்து கொண்டே இருக்கும் ஆற்றல் வாய்ந்தவர்.

பாவலர் நாவன்மை மிக்க பெரும் நாவலராவார். அருட்பா மருட்பாப் பூசலிலே கலந்து பெருங் கூட்டங்களிலே இவர் நிகழ்த்திய உரைப் பெருக்கு அருட்பா இயக்கத்திற்குப் பெருந்துணை செய்தது. 'தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்' எனும் பட்டமும் வழங்கப் பெற்றார். இவர் தம் பேருரை கேட்டு மகிழ்ந்த மக்கள் 'கலைக்கடல்' எனும் பட்டம் வழங்கிப் பாராட்டினர்.

ஏட்டுச் சுவடியிலே அமைந்து நாட்டுக்கு உதவாதிருந்த நல்ல நூல்களைப் பதிப்பித்து வழங்கிய பாவலர் சிறந்த நூலாசிரியராகத் திகழ்ந்தார். ஷம்சுத் தாசீன் கோவை, அழகப்பக் கோவை, சசிவோத்தமர் கோவை, திருநாகூர்த் திரிபந்தாதி, திருக்கோட் டாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி, கோட்டாற்றுப் பிள்ளைத் தமிழ், நீதி வெண்பா, கல்வத்து நாயகம் இன்னிசைப் பாமாலை, நாயக மான்மிய மஞ்சரி முதலிய பல நூல்கள் செய்துள்ளார். இவர் உயர்ந்த உரையாசிரியருமாவார். சீறாப் புராணத்திற்குச் சிறந்த தொரு உரை செய்துள்ளார். பத்திரிகை ஆசிரியராகவும் இவர் பணி யாற்றியுள்ளார்.

நாஞ்சில் தந்த நற்றமிழ்த் தென்றல், இலக்கியக் கருவூலம், நாவீறு கொண்ட நாவலர், பனுவல் பல செய்த பைந்தமிழ்ப் பாவலர் 74 ஆண்டுகள் வாழ்ந்து 1950-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாளில் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு விட்டார். உறவினர்

கண்ணீர் பெருக்கினர். தமிழ்ப் பெருமக்கள் பாவலரின் பிரிவைத் தாங்காது பெரிதும் வருந்தினர். புலவர் புலம்பினர். இனிய பாடல் செய்திடும் அரிய கவிமணி கசிந்துருகிச் சிந்திய கண்ணீர்,

"ஓரும் அவதானம் ஒருநூறு செய்திந்தப்
பாரில் புகழ்படைத்த பண்டிதனைச்—சீரிய
செந்தமிழ்ச் செல்வனை செய்குதம்பிப் பாவலனை
எந்தநாள் காண்போம் இனி"

எனும் கவியாக வடிவெடுத்தது. ஆம்! நூறு செய்த பாவலரை, பேரொளி வீசிய மகாமதியை, அமுத மழையெனச் சொற்பெருக் காற்றிய தேவாமிர்தப் பிரங்கக் களஞ்சியத்தை, கலையலை வீசிய கலைக்கடலை, புலமையின் பேரின்பப் பெருநிலையை நாம் எந்த நாள் காண்போம் இனி!

பாவலர்தம் பார்வையில்

சமயமும் இலக்கியமும்

பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம்

என் கடந்த கால வாழ்வினைத் திரும்பிப் பாக்கும்போது எத்தனை எத்தனையோ காட்சிகள் என் முன் நிழலிடுகின்றன; எத்தனை எத்தனையோ நினைவுகள் உளத்தில் வட்டமிடுகின்றன. ஆம்! இன்று கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக அமைதியாக என் பணியினைச் செய்து கொண்டிருக்கும் நான், அந்த இளமைக் காலத்தில் நாற்பது — நாற்பத்தைந்து — ஆண்டுகளுக்கு முன்பும் அதை ஒட்டியும் தமிழ் நாட்டில் செல்லாத இடமில்லை; ஏறாத அரங்கு இல்லை; பேசாத ஊர் இல்லை; பழகாத நல்லவரும் அறிஞரும் இலர். நெல்லை மாவட்டத்தில் திருச்செந்தூர் கோவில் விழாச் சொற்பொழிவுகளில் பெரும்பாலும் பங்கு கொள்வேன். பிற நாடுகளிலும் இந்திய நாட்டின் வடபகுதிகளிலும் பட்டுழன்றிருக்கிறேன். நெல்லை சுந்தர ஓதுவா மூர்த்திகள், ஆயத்த அணிகல அங்காடி சுப்பிரமணியஞ் செட்டியார், சைவ சித்தாந்தக் கழகம் திருவரங்கம் பிள்ளை, தூத்துக்குடி சிவகுருநாதப் பிள்ளை, இராசவல்லிபுரம் சேதுப்பிள்ளை ஆகியோருடன் அடிக்கடி நெல்லையில் கலந்து மகிழ்ந்த காலங்கள் பல. அத்தகைய காலங்களில் நான் பங்கு கொண்ட மாநாடுகள், கூட்டங்கள், அரங்குகள் பலப்பல. அத்தகைய கூட்டங்கள் ஒன்றிரண்டில் நான் நலம் நிறைந்த செய்குதம்பிப் பாவலரைக் கண்டிருக்கிறேன்; ஓரளவு அவருடன் பேசியும் இருக்கிறேன். அவர்தம் பரந்த புலமையினையும் சிறந்த பண்பினையும் சமரச மனப்பான்மையினையும் எண்ணிப் பார்த்த நாட்களும் உள. எனினும் அவருடன் மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு ஏனோ கிட்டவில்லை. ஆனால் இன்று அவருடைய பெயரர் — அதே பெயரை உடைய பெயரர் — அப்பெரியவர் தம் பண்புகளைப்

பாராட்டும் வகையில் வெளியிட இருக்கும் நினைவுத் தொகுப்பில் என் கட்டுரையும் இடம் பெற வேண்டும் என்று கடிதங்களின் வழியும் நேரிலும் கேட்டுக் கொண்டதை நினைக்க நினைக்க அந்தப் பெரியவர் தம் உருவ நிழலும் உணர்வும் உற்ற பல நல்லியல்புகளும் என் முன் நிழலிடுகின்றன. அவற்றின் அடி ஒற்றி அவரைப் பற்றி ஒரு சில எழுதத் துணிகின்றேன்.

இன்றைய உலக நிலையினையும் நாட்டின் போக்கினையும் எண்ணிப் பார்க்கின்றபோது, நாம் எங்கே செல்கிறோம் என அறியாது ஏங்க வேண்டியுள்ளது. ஒரே உலகம் என்று பேசிக் கொண்டே வல்லரசுகள் ஒன்றை யொன்று ஒழிக்கத் திட்டமிடுவதும் வெள்ளையர் கறுப்பர் என்ற வேறுபாட்டால் கொடுமைகள் நிகழ்த்துவதும் அறம் வளர்த்த தெய்வ நெறியாளர் தம் சமயங்களின் பேராலும் மொழியின் பேராலும் எண்ணற்ற கொடுமைகள் இழைப்பதும் இன்றைய உலக நாகரிகமல்லவா! அப்படியே ஒரே நாடு—நாட்டு ஒருமைப்பாட்டுணர்வு—என்று எழுதியும் பேசியும் நடித்தும், அதே வேளையில் மொழியால்—இனத்தால்—சாதியால்—சமயத்தால் பிற வேறுபாடுகளால் எத்தனை எத்தனை கலாம்—போர்—சண்டைகளை நாம் நடத்துகிறோம். ஒரே நாட்டில் ஓடும் நீரைப் பகிர்ந்து கொள்வதில்தான் எத்தனை சண்டை? இந்த நிலையில் இஸ்லாமிய சமயத்தில் தோன்றி, சமயத்தால் அல்லாஹ்வினை உளத்தால் போற்றி வணங்கி, அதே வேளையில் எல்லாச் சமயங்களையும் ஒத்து நோக்கி சமரச நோக்கோடு அனைவரையும் தழுவி வாழ்ந்தும்—சாதியால் உண்டாகும் வழக்கையெல்லாம் சாடி எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வை உலகுக்கு உணர்த்தியும் வாழ்ந்த செய்குதம்பிப் பாவலர் அவர்களின் உயரிய பண்பும் பார்வையும் எண்ணிப் போற்றத் தக்கனவன்றோ!

செய்குதம்பிப் பாவலர் அவர்கள் பாடிய பாடல்களில் சமய மாறுபாடு உண்டா? வேறுபாட்டுக் கண்கொண்டு காண முடியுமா? 'அரனதிகன் உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலார்க்கு, பரகதி சென்றடை வரிய பரிசே போல்' என்று சமய ஒருமைப் பாட்டை உணர்த்திய கம்பன் பாட்டில் ஒரு காற்புள்ளி யிட்டு 'அரனதிகன், உலகளந்த அரியதிகன் என்றுரைக்கும் அறிவிலார்' என்று காட்டி சமயத்திற்கே மாசு கற்பிக்கும் 'பெரியவர்கள்' வாழ்ந்த—வாழ்கின்ற—உலகில் பாவலர் தம் பரந்த சமய நோக்கும் சமரச சன்மார்க்கப் போக்கும் எல்லா இலக்கியங்களையும் போற்றும் புலமை உள்ளமும் நாடறிய வேண்டுவன அல்லவோ?

இனி அவர்தம் பார்வையில் சமயங்கள் பெற்ற ஒருமை நிலையினை ஓரளவு காண்போம். இராமலிங்க அடிகளாரின் பாடலை,

'அருட்பா' என்னாது 'மருட்பா' என வேண்டும் என்ற கதிர்வேற் பிள்ளையினையும் அவரைச் சார்ந்தவரையும் வழக்கிடைச் சாடியும் பாடல்களின் விளக்கங்களைத் தெளிவு படுத்தியும் 'அருட்பா'வே என நிலை நாட்டிய பாவலர் பண்பினை நாடறியும். நல்லவர் பலர் எழுதியும் உள்ளனர். பல சைவர்கள் வாளாவிருக்க, பாவலர் 'அருட்பா'வினை 'அருட்பா'வே ஆக்கிய அப்பெரு நிலையை எண்ணிப் போற்றி அந்த அளவிலே அதை விட்டு, வேறுள்ள சான்றுகளை எண்ணிக் காணலாம். இரண்டொன்று போதும் என எண்ணுகிறேன்.

'கண்கெட்ட பின்னென்றும் காணாத காட்சியைக் கண்டனரே' என்னும் ஈற்றடி தந்து கட்டளைக் கலித்துறை பாடச் சொன்ன புலவருக்கு பாவலர் எத்தனையோ கருத்துக்கள் அமைந்த பாடலைப் பாடியிருக்கலாம். இந்த ஊனக்கண் கெட்டபின் ஞானக் கண்ணால் காணும் தெய்வீகக் காட்சியினைப் பொதுவாகவும் பாடியிருக்கலாம். ஆயினும் 'தென்னாடுடைய சிவனே போற்றி — எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' என்ற மணிவாசகர் தம் ஒப்பு நோக்கில் யாண்டும் ஒரே இறைவனைக் கண்ட பாவலர், 'கண்ணப்ப ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்' எனத் தனக்கும் மேலாக மணிவாசகர் காணும் அக்கண்ணப்பரைப் பற்றியே கட்டளைக் கலித்துறையினைப் பாடியுள்ள பான்மை போற்றுதற் குரியதன்றோ ?

"விண்தொட் டசையும் தருமலி கானில் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்விழி
புண்பட்ட தென்றுதன் கண்ணைப் பெயர்த்துப் பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக்
கண்டனரே"

என்று பாடி திண்ணனார் சமயத் திண்மையைக் காட்டியதோடு, 'பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்' என்று காளத்தியப்பரைச் செந்தமிழ் வல்லார் பாடிப் பரவும் பெரும் சிறப்பினையும் அல்லவா உலகுக்குக் காட்டியுள்ளார் ?

இப்படியே திருமாலைப் பாடும் ஒரு பாடலும் நினைக்கத்தக்கது. 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்னும் ஈற்றடி தந்து வெண்பா ஒன்றினைப் பாடச் சொன்ன புலவருக்கு,

"அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டல் வண்ணமேனிக் குரிசிலாம்—விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்"

எனப் பாடிக் காட்டியுள்ளார் பாவலர்.

இப்பாடலில் எத்தனையோ உண்மைகளை இவர் புதைத்து வைத்துள்ளார். முதல் இரண்டு அடிகளில் திருமால் பாற்கடலில் பள்ளிக் கொண்ட சிறப்பினைக் காட்டி, அவ்'விண்டு' என்னும் திருமால் பெற்றவன் காமன் என்பதைச் சுட்டி, திருமாலின் தங்கையாகிய பார்வதியை மணந்த பரமனை காமனின் மாமன் எனக் காட்டி, அப்பரமனுக்குக் கந்தன் மகனாவான் என்ற உறவின் முறையினைத் தெளிய வைக்கிறார் பாவலர். இந்த உறவின் முறை உண்மையேயாயினும் சைவ வைணவர் பலருக்குக்கூடத் தெரியாத ஒன்றாகும். மேலும் அந்தக் காமனையே மாமனாகிய பரமன் எரித்ததை மனத்தில் எண்ணியோ — அன்றி ஏனோ — அதனால் உலகுக்கு உண்டான நன்மையினை எண்ணியோ — 'காமனுக்கு முற்றும் கருதும்படியமைந்த மாமன்' எனக் குறிப்பிடுகின்றார். ஒருவேளை அப்படி எரித்ததால் இருவரும் வேறுபட்டவர் எனக்கொள்ளலாகாது என்ற கருத்தில் 'முற்றும் கருதும்படியமைந்த மாமன்' எனச் சொல்லிக் காட்டுகின்றார். இஸ்லாமிய மரபில் வந்த பாவலர் இவ்வாறு சைவ வைணவத் தொடர்பினையும் இரண்டும் இணைந்ததையும் சுட்டிக் காட்டி சமரச உணர்வை இரு சமய வாதிகளுக்கும் ஊட்டுகிறார். 'அரங்கனைப் பாடிய வாயால் குரங்கனைப் பாடமாட்டேன்' எனும் சமயவாதிகளும் வடகலை, தென்கலை வழக்கினை இலண்டன் வரை இழுத்துச் சென்றவர்களும் இப்பாவலர் தம் பரந்த உள்ளத்தைப் பாராட்டக் கடமைப்பட்டவரன்றோ?

பாவலர் தம் மற்றொரு பாடலையும் ஈண்டு எண்ணிப் பார்க்க வேண்டும். அது ஒரு சிலேடைப் பாடல்; அதுவும் சதாவதானத்தின் அடிப்படையில் அன்பர் ஒருவர் தம் வேண்டுகோளின் பேரில் பாடியதாகும்.

"சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகார் உருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்"

எனும் பாடலில் எத்தனை கருத்துக்களைப் பாவலர் புகுத்தியுள்ளார் என்பதை எண்ணி வியக்கத் தோன்றுகிறது. ஐந்து தெய்வங்களை— தான் வணங்கும் தெய்வம் உட்பட பிற தெய்வங்களையும் ஒருமைப் படுத்தி — இணைத்துப் பொருள் கொள்ளும் வகையில் அமைந்த இப்பாடலின் பொருளை அறியின் நலம் உண்டாகும். முதல் அடிக்கு, தலையிலே கங்கையினை உடைய சிவன், மாறுபட்ட தலையினை உடைய விநாயகர், ஆறு தலைகளை உடைய முருகன், ஆற்றின் இடையிலே தலை வைத்துப் பள்ளிகொள்ளும் பரந்தாமன்,

தலையாய நல்வழியினைக் காட்டும் அல்லாஹ் என ஐந்து வகையாகப் பாவலர் அவர்களே பொருள் கூறிப் பின் பிற அடிகளுக்கு விளக்கம் தந்துள்ளார். அத்தகைய 'தன் தெய்வம் என் தெய்வம்' என்று அனைவரும் போற்றுகின்ற ஒப்பற்ற ஒரே இறைவனுடைய நல்ல மலர்ப்பாதங்களை நிலையாக மனத்துள் இருத்தித் தலை வணங்கி வழிபட்டு, பிற பெண்களை விரும்பாமல், அவர் மையல் வழி மயங்காது, இறைவனையே எண்ணி உருகுபவரே பெரிய தவசீலராக விளங்குவார்' என்று விளக்கங் காட்டி சமய நெறியினையும் ஒழுக்க வழியினையும் ஒருங்கே சுட்டிக் காட்டும் பாவலர் தம் உள்ள உயர்வினை எண்ணிப் போற்றல் கடனன்றோ!

பாவலர் அவர்கள் பல அன்பர்களுக்குத் திருமண வாழ்த்துப் பாக்கள் பாடியுள்ளார். அவற்றுள், இவர் இஸ்லாமியராயினும், அன்பர் தம் சமய நெறிக்கு ஏற்றபடி,

'கயிலைமலை மேவும் அறனும் உமையும்' எனவும்
'பாற்கடல்சேர் மாலும் கமல மாதென' எனவும்
'செந்தில்வளர் கந்தன் வள்ளியம்மை என' எனவும்

வாழ்த்தியிருப்பது இவர் தம் பரந்த பார்வைக்கும் உளத்துக்கும் சான்றுகளாகும். இவை போன்று எண்ணற்ற எடுத்துக் காட்டுக் களைக் காட்டலாம். எனினும் ஈண்டைக்கு இவை அமையும் எனக் கருதி மேலே செல்லுகிறேன்.

பாவலர் அவர்கள் பாடியுள்ள எண்ணற்ற பாக்களிலும் நூல் களிலும் பிற சமய இலக்கியங்களில் — சிறப்பாகத் திருவாசகம், தேவாரம் போன்ற பாக்களில் வரும் தொடர்கள், கருத்துக்கள், பிற இலக்கிய மரபுகள் அப்படி அப்படியே இலங்கி விளங்குவதைக் காணும்போது இவர் தம் சமய இலக்கியத்தினை மட்டுமின்றி பிற சமய இலக்கியங்களையும் வழுவறக் கற்றுத் தெளிந்தவர் என்பது புலப்படும். மேலும் இவரோடு பழகிய அன்பர்களும் இவர் தம் ஆசிரியரும் மாணவர்களும் உற்றவரும் மற்றவரும் பிற சமயத் தவராக இருந்தமையும் அவர்களுடன் உள்ளும் புறமும் கலந்து ஒத்து நின்று பாவலர் வாழ்ந்த வாழ்வும் யாவராலும் பின்பற்ற வேண்டிய ஒன்றாகும். ஆம்! அந்த வாழ்வு நெறி இன்று வற்றி வருகின்ற காரணத்தாலேயே, சமயப் பொறை தவழ்ந்த தமிழ் நாட்டில் இன்று சமயக் காழ்ப்பும் மாறுபாடுகளும் கலகங்களும் பிற பூசல்களும் நிகழ்கின்றன. பாவலரும் பிற தெளிந்த நல்லவரும் காட்டிய வழியைப் பின்பற்றி—அவர் தம் நோக்கின் வழியே நோக்கி, நாட்டில் அன்புப் பயிர் தழைக்கப் பணிபுரிய வேண்டுமென இன்றைய மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

இனி, பாவலர் இலக்கண இலக்கியத் தெளிவினையும் தெளிந்த பார்வையினையும் ஓரளவு கண்டு அமையலாம் என எண்ணுகிறேன். பாவலர் தாமே பல தனிப் பாடல்களைப் பாடியதோடு, கோவை, அந்தாதி போன்ற நூல்களையும் பாடி, கவிவாணராகவும் திகழ்ந்தார் என அறிகிறோம். இறைவனைப் பாடியதோடு அல்லாது, கல்வி அறம் போற்றிய காரைக்குடி அழகப்பர் பேரிலும் கோவைப்பாடிப் பாராட்டியுள்ளமையும் எண்ணத்தக்கது. (இந்நூல் வெளிவரவில்லை என அறிகிறோம்) இவர் தம் 'நபிகள் மான்மிய மஞ்சரி' அச்சிடப் பெற்று நாட்டில் உலவும் நல்ல இலக்கியமாகும். இத்தகைய இலக்கியங்களில் தாம் காட்ட விழைந்த சிறந்த பொருள்களை எளிதில் யாவரும் புரிந்து கொள்ளும்படி அமைத்து விளக்கும் இவர் தம் நடையும் தெளிவும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கன. இவர் பாடல்கள் பல வெளிவரவில்லை என அறிகிறேன்; அனைத்தும் வெளிவரின் இவர் புலமை இன்னும் நன்கு விளங்கும் என்பது உறுதி.

பாவலர் அவர்கள் பெற்றிருந்த இலக்கண இலக்கியப் புலமைக்கும் தெளிந்த நோக்கினுக்கும் எண்ணற்ற எடுத்துக் காட்டுகள் காட்டலாம். எனினும் எல்லை கருதி ஓரிரு காட்டுகளை மட்டும் ஈண்டு சுட்டி அமைகின்றேன்.

'நாதர்முடி மேலிருந்த வெண்ணிலாவே — அங்கு நானும் வர வேண்டுகின்றேன் வெண்ணிலாவே' "இறந்தார் எழுவர் என்று புறந்தரரை ஊது' என்பன போன்ற இராமலிங்க அடிகளாரின் பாடற் பகுதிகளுக்கும், 'முன்மை புரிவன் கயிறு கொய்து' என்ற கம்பரின் பாடலுக்கும் பாவலர் அவர்கள் தந்திருக்கும் விளக்கங்கள் அவரை உயர்ந்த சைவ சித்தாந்தி என்னுமாறு செய்வதை யாவரும் அறியக் கடமைப்பட்டவராவர். சைவர் எனத் தம்மைக் கூறிக் கொள்பவரும் அறியாத பல உண்மைகளைப் பாவலர் விளக்கி, தம் சமயச் சமரச ஆற்றலுடன் இலக்கியத் தெளிவினையும் புலப்படுத்திக் கொண்டுள்ளார். அப்படியே நம் பாவலர் கவிராச பண்டிதர் இராம. சுப்பிரமணிய நாவலருடன் நிகழ்த்திய உரையாடல் வழி இவர் தம் இலக்கணப் புலமையும் ஆழ்ந்து தெளிந்த விளக்க மரபுகளும் நன்கு விளங்குகின்றன. இவர் தம் எழுத்து, சொல், பொருள், யாப்பு அணி ஆகிய ஐந்திலக்கண அறிவும் ஆற்றலும் அவற்றை அணுகி ஆராய்ந்து, உற்று உணர்ந்து மற்றவர்களுக்கு உணர்த்தும் பான்மையும் போற்றி அவர் அடி நோக்கி வணங்கத் தக்கன.

கம்பராமாயணத்திலும் அப்பாடல்களின் நுண்பொருள் உணர்ந்து விளக்குவதிலும் பாவலர் வல்லவராகத் திகழ்ந்துள்ளார் எனவும்

அறிகிறோம். அக்காலத்திய புலவர்களோடு கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்களையும் பலப்பல சிற்றிலக்கியங்களையும் ஆராய்ந்த நிலையினை அன்றே நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இரண்டொரு முறை நானும் உடனிருந்திருக்கிறேன். என்றாலும் நான் முன்னரே சுட்டியபடி, அக்காலத்தில் அவரோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பினைப் பெற்றேன் இல்லை.

பாவலர் கம்பனில் தோய்ந்த தன்மையினை அவரைப் பற்றி எழுதிய அன்பர்கள் பலர் முன்னரே குறித்துள்ளனர். அவற்றுள் ஒரு சிலவற்றை ஈண்டு சுட்டிக் காட்ட நினைக்கின்றேன். 1961ல் வெளிவந்த நினைவு மலரிலும் பிறவற்றிலும் இவை சுட்டப் பெறு கின்றன.

“சொல்லொக்கும் கடியவேகச் சுடுசரம் கரியசெம்மல்
அல்லொக்கும் நிறத்தினான் மேல்விடுதலும் வைரக்குன்றக்
கல்லொக்கும் நிறத்தில்தங்கா தப்புறம் கழன்றுகல்லா
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப்
போயிற்றன்றே!”

என்ற பாடலுக்குத் தெளிந்த உரை கூறியதோடு இலக்கண அமைதி யினைத் தொட்டு விளக்கிய பான்மை சிறந்ததாகும்.

இப்பாடலின் பயனிலை ‘போயிற்று’ என்பது, அஃறிணை ஒன்றன்பால் வினைமுற்று. இதற்கு எழுவாய் ‘சுடுசரம்’ என்பது. இப்பால் பகா அஃறிணைப் பெயர் ஒருமைக்கும் பன்மைக்கும் உபயோ கப்படுத்துவதைப் ‘போயிற்று’ என்னும் ஒருமை வினைமுற்றினால் விளக்கியிருப்பது அழகு’ என்று கூறி செயப்படு பொருள் விகுதி ஏற்று நின்ற ஒன்றை ‘நின்று பயனின்மை’ என்ற குற்றம் நீங்க அமைத் திருப்பதையும் விளக்கினார்.

‘வந்தெதிரே தொழுதானை வணங்கினான் மலரிருந்த
அந்தணனும் தலைவணங்கு மவனுமவ னடிவீழ்ந்தான்’

என்ற கம்பர் அடிகளில் பிரமன் வணங்கிய பரதன் என்ற கூற்று எப்படிப் பொருந்தும் என்பதற்குப் பாவலர் கூறிய பொருந்தியபதில் போற்றக் கூடிய ஒன்றன்றோ? திருமால் அம்ச மாகிய பரதனை அத்திருமாலின் மகனான பிரமன் வணங்கியதில் தவறில்லையே ?

"நஞ்ச மன்னவரை நலிந்தாலது
வஞ்சமன்று மனுவழக் காதலின்
அஞ்சிலம்பதில் வொன்றறி யாதவன்
நெஞ்சினின்றுநி லாவ நிறுத்துவாய்"

என்ற பாடலில் வரும் 'அஞ்சிலம்பதில் ஒன்றறியாதவன்' என்ற தொடருக்குப் பாவலர் தரும் பல்வேறு விளக்கங்கள் எண்ணி எண்ணிப் போற்றத்தக்கன. இத்தொடர் சுக்கிரீவனைக் குறிக்க வருகின்ற ஒன்றாகும். வாலியை வென்று சுக்கிரீவனுக்கு முடிசூட்டி ஆட்சி தந்து, பின் சீதையைத் தேடத் தனக்கு உதவக் காலம் கணித்தான் இராகவன். ஆம்! கார் காலம் கழித்து அவன் செயலாற்ற வேண்டுமென்பது ஆணை. ஆயினும் கார்காலம் கழித்தும் சுக்கிரீவன் வராததை அறிந்த இராமன் முகம் சோர்வுற, இலக்குவன் சீற்றமுறுகின்றான். அவனை நோக்கி, சுக்கிரீவனுக்குக் கடமையினை உணர்த்துமாறு கட்டளையிடும் இராமன் கூறிய பாடலே இது. இதில் சுக்கிரீவனை 'அஞ்சிலம்பதிலொன்றறியாதவன்' என்கின்றான் இராமன். அந்தத் தொடருக்குத்தான் பாவலர் பலப்பல வகையில் விளக்கம் தருகின்றார்.

'ஐந்து வயதிலாயினும் ஐம்பது வயதிலாயினும் ஒன்றையும் அறியாதவன்' என்றும்

'அழகிய கிட்கிந்தை மலையில் வீற்றிருந்தும் அதில் ஒரு பொருளும் அறியாதவன்' என்றும்

'(சொன்ன சொல் தவறிய இவனைக் கொல்லுதல் மனுநெறியாயினும்) இவனைக் கொல்ல அஞ்சவில்லை; விட்டு விட்டோம். பாவம், பதில் ஒன்றும் கூற அறியாதவன்' என்றும்

'என்னிடம் உள்ள சில அம்புகளில் ஒன்றின் ஆற்றலைக்கூட இன்னும் அறிந்து கொள்ளாதவன்' என்றும்

'இவனைக் கொல்லுவதற்கு ஐந்தும் வேண்டியதில்லை; ஐம்பதும் வேண்டியதில்லை. ஓர் அம்பே போதுமானது. இதை அறியாதவன்' என்றும்

(இலக்குமணா! நீ சுக்கிரீவனை நோக்கி) 'நீ இராமன் அம்புக்கு அஞ்சு; இல்லாவிடின், அவன் அம்பில் உன் உடலை ஒன்றச் செய்' என்று கூறு அவன் ஒன்றும் அறியாதவனாயிருக்கிறான்' என்றும்

'$5+50+1=56$ ஐம்பத்தாறாவது ஆண்டின் பெயர் துந்துபி. துந்துபி என்ற அசுரனைக் கொன்ற வாலியைக் கொன்றவன்

இராமன் என்பதை எண்ணிப் பார்த்தறியாதவனாகிய சுக்கிரீவன்' என்றும் பல வகையிலே விளக்கம் கூறுகிறார் பாவலர்.

ஒரு வேளை கம்பன் இப்போது எழுந்து வந்து, இத்தனை விளக்கங்களை கேட்பானேயானால் பாவலரைக் கட்டித் தழுவி, 'உம் போன்ற நல்ல பாவலராலன்றே என் பாடல் பன்மடங்கு சிறக்கின்றது' என்று போற்றிப் புகழ்வான் என்பதில் ஐயமில்லை. இவ்வாறே இன்னும் கம்பன் பாடல்கள் பலவற்றிற்கும் பிற இலக்கியங்களுக்கும் புதுப்புது வகையில் அதே வேளையில் பொருந்தும் முறையில் விளக்கமும் தெளிவும் தருகின்ற பாவலர் பான்மையினை எழுதிக் கொண்டே போகலாம். அவர்தம் இலக்கியப் பார்வை விரிந்தது — தெளிந்தது — தெண்ணீரோடை போன்றது. ஏன்? தித்திக்கும் தேன் போன்றதும் கூட. இவ்வாறு சமயங்களையும் இலக்கியங்களையும் விரிந்த பார்வையால்—நுண்ணிய உணர்வினால் —சமரச நோக்கினால் — சன்மார்க்க நெறியினால் — நெஞ்சினால் உணர்ந்து, நெடிது நினைத்து, வையம் வாழ வாய் மொழியால் வாரி வழங்கிய பாவலர் புகழ் இவ்வுலகம் உள்ளளவும் வாழும் என்பது உறுதி!

வாழ்க செய்குதம்பிப் பாவலர்தம் புகழ்!

வளர்க அவர்தம் வழிகாட்டும் நல்லுரைகள்!

சதாவதானம்!

வித்துவான் சி. குமரேச பிள்ளை

தமிழன்னையை அணி செய்துவந்த அணிகலன்களில் தனிச் சிறப்புற்ற ஒரு பல்மணிக் கோவை அவதானக் கலை. இன்று ஒளி யிழந்து அஃகித் தோன்றும் இவ்வணி அன்று தமிழன்னையை அணி செய்த அணிகலன்களிலே தலை சிறந்ததாக மிளிர்ந்து வந்தது. ஏனைய வளம் பெற்ற நம் நாட்டு மொழிகளிலும் அவதானம் என்ற கலை, அண்மைக் காலம் வரை பயிலப்பட்டு போற்றப்பட்டு வந்தி ருக்கிறது. மேனாட்டினரால் இன்றும் அறியப்படாத இக்கலை, நம் பண்டை மக்களின் ஆழ்ந்தகன்ற அறிவுத் திறனுக்கும் நினைவாற்ற லுக்கும், உள்ள ஒருமைப்பாட்டிற்கும், அருள் திறத்திற்கும் எடுத்துக் காட்டாய் விளங்குகிறது.

"சிந்தையை அடக்கிச் சும்மா இருக்குந் திறனரிது'' என்பது ஆன்றோர் கண்ட உண்மை. புலன்கள் வழியாக உலகத்தைக் கண்டு – கேட்டு – உண்டு - உயிர்த்து – உற்று அனுபவித்து வருகின்ற உள்ளத்தை அவ்வழிகளில் செல்லாது அடக்கி உள்ளத்தின் உள்ளாக விளங்கி நிற்கின்ற பரம்பொருள்பால் உள்ளத்தை ஒன்ற வைத்து ஏனைய சிந்தனைகள் அற நிற்கின்ற பெரு நிலையைத் தான் ''சிந்தையை அடக்கிச் சும்மா இருக்குந் திறன்" என்றனர். அந்நிலையை யடைதல் அட்டமா சித்தி பெற்றவர்க்கும் அரிதென்று குமரகுருபரர் குறிப்பிடுகின்றார். அப்பெரு நிலைக்குரிய ஒருபடி நிலையே அவதான நிலை. அறிவுக் கதிரொளியில், உடல் உறுப்புக் கள், பொறிபுலன்கள், மனம் ஆகியவை தனித்தனித் துறையில் நின்று பணியாற்றுதல் அவதானம். கால் நடக்க, கையொன்று செய்ப, நாவொன்று நவில, கண் அவையைப் பார்க்க, காது ஒலியைக் கேட்க, மெய் உணர, மனம் இத்தனையையும் இயக்கி

வருகின்ற இடையிலேயே செவிமடுத்த பல்வேறு வினாக்களை எல்லாம் சிந்தனையில் கோத்து ஏற்ற விடையை உருப்படுத்தி வினாவாளர்க்கு முறைப்படி பகர்ந்து வருதல் என்பது அவதானக் கலை நிகழ்ச்சி.

நினைவு ஆற்றலைப் பெற்று புலனை அடக்கி அவதானம் செய்யும் அறிஞர் பல துறைகளில் நுணுகிய புலமை உடையவராக இருத்தல் வேண்டும். இலக்கிய இலக்கணங்களில் ஆழ்ந்தகன்ற ஞானம் வேண்டும். கணிதம், சோதிடம் போன்ற கலைகளிலும் நுணுகிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும். கொடுக்கப்பட்ட ஆசுக்குச் செய்யுளியற்றல் என்பது அவதானத்தின் முக்கிய நிகழ்ச்சி. அவதானிகள் இவ்வகையில் திறமை பெற்றுள்ள துறைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப அவதானத்தின் பெருமை உயரும். எட்டு, பத்து, பதினாறு, முப்பத்தி மூன்று, நூறு வகையான அவதானக் கலைகளிலும் தமது நுண்மாண் நுழைபுலனைச் செலுத்தி அவ்வக்கலை விற்பன்னர்கள் அவை பற்றி வினவும் வினாக்களுக்கு ஒருங்கே விடை பகரும் திறமையை முறையே அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், துவதிரீம் தசாவதானம், சதாவ தானம் என்னும் பெயர்களால் அழைப்பது வழக்கம்.

நம் பண்டைப் பெருமக்கள் இவ்வவதானக் கலையை அருட் கலையாகவே போற்றி வந்தனர். குமரகுருபரர், கந்தர் கலிவெண் பாவில் முருகப் பெருமானை வேண்டும்போது, அட்டாவதானமும் தமக்குச் சித்திக்கவேண்டுமென்று வேண்டுவதிலிருந்து அக்கலையின் அருமை பெருமை தெரியவரும். அட்டாவதானத்தின் பெருமை இத்தன்மைத்து என்றால் சதாவதானத்தைப் பற்றி யாது கூற வேண்டும்? சதாவதானம் இயற்றிய புலவரின் பெருமைக்கு அளவு கோல் எங்கே தேடுவது? தமிழ் வரலாற்றிலே கவி பாடிய புலவர் பலருண்டு; சதாவதானம் இயற்றி சதாவதானி எனப் புகழப் பட்டோர் ஒரு சிலரே. அவருள் தலைசிறந்தவர் அல்லாமா, மகாமதி, தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், சதாவதானி கா ப. செய்குதம்பிப் பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்கள் தமது முப்பத்தோராவது வயதில் சென்னை விக்டோரியா மண்டபத்தில் அறிஞர் பெருமக்கள் முன்னிலையில் அரிய சதாவதானக் கலையை நிகழ்த்திக் காட்டினார்கள். அவர்கள் சதாவ தானத்திற்காக எடுத்துக்கொண்ட பொருள் தொகையால் இருபத்தி ஐந்தும் வகையால் நூறுமாகும்.

1. இறைநாம உச்சரிப்பு :

அவதானத் தொடக்க முதல் முடிவு வரை வினாக்களுக்கு விடையிறுக்கும் காலம் நீங்கலாக இறை நாமத்தை நவின்று கொண்டிருத்தல்.

2. கைப்பணி :

கையால் இலாட சங்கிலியைக் கழற்றவும் பூட்டவும் செய்து கொண்டிருத்தல்.

3. தலைவரோடு உரையாடல் :

அவதானம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே தலைவரோடு ஏதேனும் ஒரு பொருள் பற்றித் தொடர்பாக உரையாடிக் கொண்டிருத்தல்.

4. கவி பாடல் :

கேள்வியாளர் விரும்பும் யாப்பும் பொருளும் அமைய அவர் கொடுக்கும் ஆசுக்குக் கவி பாடுதல்.

5. இலக்கியம் :

தமிழ் இலக்கிய நூற்களிலிருந்து வினவப்படும் வினாக்களுக்கு விடையிறுத்தல்.

6. இலக்கணம் :

வினவப்படும் இலக்கண வினாவிற்கு விடைபகர்தல்.

7. வெண்பாவை இருகாற் கேட்டுக் கூறுதல் :

அவையோர் கூறும் புதிய வெண்பாவை இருமுறைக் கேட்டுத் திரும்பச் சொல்லுதல்.

8. கண்டப் பத்திரிகை :

ஏதேனும் ஒரு பாடலில் அடங்கியுள்ள எழுத்துக்களை இலக்கமிட்டு வெட்டி ஒரு பாத்திரத்திலிட்டு குலுக்கி வைத்துக் கொண்டு அவதானி தன் முன் வரும்போது ஒரு துண்டை எடுத்து அஃது இத்தனாவது எழுத்து — இன்னது என்று கூறுதல் வேண்டும். இவ்வாறு அவதான நிகழ்ச்சியில் கொடுத்து வரும் எழுத்துக்களை உள்ளத்தில் வாங்கிப் பதித்துக் கொண்டு முடிவில் பாடலைக் கூறுதல்.

9. சுவைப் புலனறிவு :

அவதானி அவதானம் செய்து வருங்கால் பல நீர் நிலைகளிலுள்ள நீரைக் கொடுத்துச் சுவை பார்க்கச் செய்து அவை இன்னின்ன நீர் நிலைகளிலிருந்து எடுக்கப்பட்டன எனக் கூறி விடுதல். பிறகு ஏதேனும் ஒரு நீர் நிலையிலுள்ள நீரைக் கொடுக்க அவதானி சவைத்துப் பார்த்து இது இன்ன நீர் நிலையிலுள்ளது எனக் கூறுதல்.

10. ஒலி மாறுபாடுணர்தல் :

வேறுபட்ட நிறையுடைய பாத்திரங்களை ஒவ்வொன்றாகத் தட்டி ஒலி எழுப்பி அவற்றின் நிறைகளை அவதானியிடம் கூறி விடுதல். பின் ஏதேனும் ஒன்றினை மறைவிடத்திலிருந்து அடித்து ஒலியெழுப்ப அவ்வொலியின் மூலம் அதன் நிறையை அறிந்து கூறுதல்.

11. ஒலி எண்ணம் :

அவதானம் நிகழுங்கால் பின்னால் ஒருவர் அழைப்பு மணியை இடையிடையே அடித்துக் கொண்டிருப்பார். அவர் வினவுங்கால் எத்தனை முறை அடிக்கப்பட்டது என அவதானி கூறுதல்.

12. நெல்லெறிதல் :

அவதானம் நிகழுங்கால் ஒருவர் அவதானியின் முதுகில் நெல்லெறிந்து கொண்டிருப்பார். அவதான முடிவில் எத்தனை நெல் எறியப்பட்டன என அவதானி கூறுதல்.

13. கல்லெறிதல் :

நெல்லெறிந்தது போல் கல்லெறிய முடிவில் எண்ணிக்கை கூறுதல்.

14. கண்டத் தொகை :

வினாவாளர் கூறும் தொகையை பதினாறு அறை கொண்ட சதுர வீட்டில், ஒரு அறையில் வந்த எண் மறு அறையில் வராத வண்ணம் எப்பக்கமாகக் கூட்டினாலும் கேள்வியாளர் விடுத்த தொகை வருமாறு, ஒவ்வொரு அறைக்காக எண் சொல்லி அமைத்தல்.

15. நூறுசொல்லுதல் :

அவையிலுள்ள ஒருவரும் அவதானியும் ஒன்று முதல் பத்திற்கு மேற்படாத எண்ணை மாறி மாறிக் கூட்டி வரும்போது அவதானி

நூறு தான் சொல்லும்படியாக எண்களைக் கூறிவந்து முடிவில் நூறு சொல்லுதல்.

16. தொகை கூறல் :

பெரிய எண்களின் கூட்டுத் தொகை, பெருக்குத் தொகைகளை உடன் கூறல்.

17. நினைத்த எண் கூறல் :

ஒரு எண்ணை நினைத்துக் கொள்ளக் கூறி பின் அதனோடு சில எண்களைக் கூட்டியும் குறைத்தும் வரச் சொல்லி விடையை வினவி முன் நினைத்த எண்ணைக் கூறல்.

18. கிழமை கூறல் :

ஆயிரம் ஆண்டுகளுக்குட்பட்ட ஆண்டு, திங்கள், நாளை அவையோர் கூற அந்நாளுக்குரிய கிழமையை அவதானி கூறல்.

19. உடுநாள் கூறல் ;

முன்போல் ஆண்டு, திங்கள், நாள் கூற அத்நாளுக்குரிய உடு (நட்சத்திரம்) கூறல்.

20. நாள் கூறல் :

ஆண்டு, திங்கள், கிழமை கூற அத்திங்களில் அக்கிழமை வருகின்ற நாளைக் கூறுதல்.

21. திங்கள் கூறல் :

ஒருவர் பிறந்த ஆண்டும், நாளும், கிழமையும் கூற பிறந்த திங்கள் கூறல்.

22. வயது கூறல் :

பிறந்ந திங்களும் நாளும் கிழமையும் கூற வயது கூறுதல்.

23. ஆண்டு கூறல் :

பிறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற பிறந்த ஆண்டின் பெயர் கூறுதலும்; இறந்த திங்களும் நாளும் கிழமையும் கூற இறந்த ஆண்டு கூறலும்.

24 சீட்டாடல் :

குறிப்பிட்ட ஒரு சீட்டாட்டத்திற்கு அதற்குரியவர் சீட்டுடன் ஒரு புறம் இருப்பர். அவதானியின் ஆளாக ஆடத் தெரியாத ஒருவர்

இருப்பார். சீட்டுக் கொடுக்கப்பட்டதும் அவதானி ஆளிடம் இருக்கும் சீட்டை ஒரு முறை பார்ப்பார். பின் ஆட்டம் தொடங்கப்படும். அவதானம் நிகழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே தான் சீட்டு இறக்க வேண்டிய இடம் வந்ததும் தன் ஆளிடம் தன் சீட்டைப் பார்க்காமலேயே சீட்டைக் குறிப்பிட்டு இறக்கும்படியாகக் கூறுதல். ஆட்டம் பிழைபடாது நடத்தல் வேண்டும்.

25 பதினைந்து நாயும் புலியும் விளையாடல் :

மூன்று புலிகளை பதினைந்து நாய்கள் கூடி தடைப்படுத்துவதாக, காய்களைக் கொண்டு இருவர் விளையாடும் இந்த ஆட்டத்தில் அவதானியின் ஆளாக ஒருவர் இருப்பார். அவதானம் நிகழ்ந்து வரும் காலையிலேயே தமது ஆளிடம் நகர்த்த வேண்டிய காய்களைக் கூறிவருதல்.

இவ்வாறு தொகையால் வகுக்கப்பட்ட இவ்விருபத்தி ஐந்தில், இறைநாம உச்சரிப்பு, கைப்பணி, தலைவரோடு உரையாடல், சீட்டாடல், பதினைந்து நாயும் புலியும் விளையாடல் நீங்கலாக ஏனையவை ஒவ்வொன்றிலும் பலவகைகள் சேர்க்கப்பட்டு அவதானக் கலைப் பொருள் நூறாகக் கொள்ளப்பட்டது.

பிரபவ ஆண்டு மாசித் திங்கள் 27–ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (1907 மார்ச் 10) சென்னை விக்டோரியா மண்டபம் அறிஞர் பெருமக்களால் பொலிவுற்று விளங்கியது. காஞ்சி, மகாவித்துவான் இராமசாமி நாயுடு, தஞ்சாவூர் சுப்பிரமணிய ஐயர், பச்சையப்பன் கல்லூரி தமிழ்த் துறைத் தலைவர் திருவேங்கடசாமி நாயுடு, புலவர் கா. நமசிவாய முதலியார், 'இந்து', 'சுதேசமித்திரன்' முதலிய செய்தித் தாட்களின் ஆசிரியரான ஜி. சுப்பிரமணிய ஐயர், திரு. வி. கலியாண சுந்தர முதலியார், அக்காலையில் சட்டக் கல்லூரி மாணவராக இருந்த டி. கே. சிதம்பரநாத முதலியார் ஆகிய தமிழறிஞர்கள் அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள்.

தமிழறியாத வெள்ளை நீதிபதி ஒருவரும் அவ்விந்தையைக் காண அங்கு வந்திருந்தார். அப்பேரவைக்கு வித்துவான் கண்ணபிரான் முதலியார் அவர்கள் தலைமை தாங்கினார்கள். வினாவாளர் இரு புறமும் அணிசெய்து அமர்ந்திருந்தனர். கலை விழாவைக் கண்டும் கேட்டும் உணர்ந்தும் இன்புறக் குழுமியிருந்த பெருமக்கள் எண்ணிலர்.

பாவலர் அவர்கள் தூய வெள்ளாடை அணிந்து அவையோர் முன் காட்சியளித்தார். அவதானச் சிறப்பையும் பொருளையும்

விளக்கி விட்டு அவதானத்திற்கு ஆயத்தமானார். 'மெஞ்ஞான நாதா; மெஞ்ஞான நாதா' எனும் சிலேடைப் பொருள் கொண்ட சொற்றொடரை நா நவில, கை இலாடச் சங்கிலியில் பணியாற்ற அவை முன் உலவி வருவாராயினர். அப்பொழுது ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் எழுந்திருந்து சிலேடையாக கடவுள் வணக்கச் செய்யுளொன்றைப் பாட வேண்டினர். அக்கணமே பாவலர் அவர்கள்,

> "சிரமா றுடையான் செழுமா வடியைத்
> திரமா நினைவார் சிரமே பணிவார்
> பரமா தரவா பருகா ருருகார்
> வரமா தவமே மலிவார் பொலிவார்."

எனும் பாடலைப் பாடி,

சிரம் ஆறுடையான்—சிரத்தில் கங்கையாற்றை உடைய சிவபெருமான்

சிரம் மாறுடையான்—இயல்பிற்கு மாறுபட்ட சிரத்தையுடைய கணபதி

சிரம் ஆறு உடையான்—ஆறு தலைகளையுடைய முருகன்

சிரம் ஆறுடையான்—காவிரி ஆற்றின் நடுவில் தலைவைத்துள்ள திருமால்

சிரம் ஆறு உடையான்—தலையாய நல்வழிகளை உலகிற்குக் காட்டும் அல்லாஹ்

என அத்தொடருக்கு அமைந்த ஐம்பொருளை பிரிமொழிச் செம் மொழி சிலேடைகளால் விளக்கி, 'ஐம்பொருளாயும் விளங்குகின்ற இறைவனது திருவடியை மறவாது மனக் கோயிலினுள் இருத்தித் தலை தாழ்ந்து வணங்கிப் பிற பெண்கள் மீது இச்சை வையாது இறைவனையே எண்ணி உருகுகின்றவர்கள் பெருந்தவத்தினராய் விளங்கிச் சிறப்புறுவர்' என விளக்கவும் அவையோர் அவரது பொது நோக்கையும் ஒழுக்கத்தில் கொண்டிருந்த உறுதிப்பாட்டினையும் எண்ணிக் குதூகலித்தனர்.

ஏனைய வினாவாளரும் தத்தம் மருகில் அவதானியார் வரும் போது தாம் ஆயத்தப்படுத்தியிருந்த வினாக்களை விடுப்பாராயினர். கண்டப் பத்திரிகையாளர் எழுத்துக்களைக் கொடுக்கத் தொடங் கினார். அதனை வாங்கிக் கொண்ட அளவிலேயே அடுத்தவர் 'விராடனையே பெண்ணென லாமே' என்பதனை ஈற்றடியாக வைத்து வெண்பா ஒன்று பாடும்படியாக வேண்டினர். இதனைக்

கேட்ட அவையோர் முகங்களில் வியப்புக் குறி எழுந்தது. விராடன் என்ற ஆண் மகனை எவ்வாறு பெண் எனக் கூறலாம் என வியந்தனர். அவ்வினாவைச் செவிமடுத்தவாறே பாவலர் அடுத்தவர் அண்மையில் சென்றார். அவர் 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்ற ஈற்றடிக்கு வெண்பா ஒன்று வேண்டினார். மறுகணமே மற்றொரு புலவர் எழுந்திருந்து 'கண்கெட்ட பின்னென்றுங் காணாத காட்சியைக் கண்டனரே' என்பதனை ஈற்றடியாக வைத்துக் கட்டளைக் கலித்துறை ஒன்று பாடும்படியாக வேண்டினார். இதனைக் கேட்ட அவையோர் கண்ணுள்ளபோதுதானே காட்சியைக் காணமுடியும்; கண்கெட்ட பின் எவ்வாறு காட்சியைக் காணமுடியும் எனவியந்தனர். இவ்வினாக்களைச் சிந்தித்தவாறே இறைநாம உச்சரிப்புடன் உலவி வருங்கால் இலக்கிய வினாவாளர் ஒருவர் எழுந்து பரஞ்சோதி திருவிளையாடலில் மாமனாக வந்து வழக் குரைத்த படலத்திலுள்ள,

"மாதுலராகி வந்தோர் மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை தன்னொடுந் தழீஇத் தங்கண்ட
மீதுல ராதசாம வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானிரந்தோ வையவென் றழுது நைந்தார்"

எனும் பாடலுக்குப் பொருள் வினவினார்.

பாவலர் அவர்கள் அப்பாடலின் பொருளை விளக்கினார். ஆனால் வினாவாளர் மீண்டும் அவரை நோக்கித் 'தாதுலராத கோதை' எனும் தொடரை விடுத்தார். அதனைச் செவியில் வாங்கி யவாறே அப்பால் நகர்ந்தார் அவதானி. கண்டப் பத்திரிகையாளர் எழுத்தினைக் கொடுத்தார். கல்லெறிபவரும் நெல்லெறிபவரும் தத்தம் பணியை யாற்றினர். மேடையின் பின்புறம் இருந்தவர் அழைப்பு மணி ஒலியை எழுப்பினார். பல்வேறு நிறையுடைய பாத்திரங்களில் ஒலியை எழுப்பி அவை ஒவ்வொன்றின் நிறையையும் கூறினர் ஒருசார். பல நீர் நிலைகளிலுள்ள நீர் சுவைத்துப் பார்க்கக் கொடுக்கப்பட்டு அவற்றிற்குரிய நீர் நிலைகளின் பெயரும் கூறினர் இன்னொருசார். இவற்றை யெல்லாம் உள்ளத்தில் வாங்கிப் பதித்துக் கொண்டே வந்தார். சீட்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. தமது சீட்டைக் கவனித்துக் கொண்டார். கண்டத் தொகையாளர் தம் வினாவை விடுத்தார். அறை அமைத்து வரிசை எண் இட்டுக் கொள்ளும்படியாகக் கூறிவிட்டு அப்பால் நகர்ந்தார். ஈற்றடி மூரீப்புக் கொடுத்தவர் அருகில் வந்தார். அவரவர் செய்யுட்களுக்குரிய சீர்களில் ஒவ்வொன்று கூறிக் கொண்டே 'தாதுலராத கோதை' வினவியவரை அடைந்தார். அவர் மீண்டும் அவ்வினாவை விடுத் தார். பாவலர் அவரை நோக்கி தாதுலராத கோதை என்பதற்கு

'மகரந்தப் பொடி நீங்காத கூந்தலுடையாள் என்பது யான் கூறிய பொருள். அப்பெண் விதவையாதலின் அப்பொருள் பொருந்தா தென்பது உங்கள் கருத்து. அவள் அண்மையிலேயே விதவை யாயினாள் என்பதைக் காட்ட அவ்வாறு கூறினார். மேலும் கைம்மை நோன்பு கொண்டார் தரையிலே பாயின்றிப் படுத்தல் வழக்கம். அப்பெண் கைம்மை நோன்பை மேற்கொண்டவளாதலின் கூந்தல் புழுதி நீங்காதிருந்தது என்பதைக் காட்ட 'புழுதி' என்னும் பொருள்பட தாது எனும் சொல்லை அமைத்தார் எனினும் அமையும். அன்றியும் தாயத்தார் அவளைத் தரையில் தள்ளி அடித்தார் என முன் பாடலில் குறிப்பிடப்படுவதால், அதனால் படிந்த புழுதி நீங்காத கூந்தலுடையாள் எனக் கூறுதலும் பொருந்தும் எனப் பொருள் உரைத்தார். வினாவாளர் அதற்கு மேல் வாய் திறக்கவில்லை. இலக்கிய வினாக்கள் மேலும் சில வினவப்பட்டன. தகுந்த விடை அளித்தார் பாவலர்.

இலக்கண வினாக்கள் ஐந்து வினவப்பட்டன. அவற்றுள் ஒன்று, 'தொடக்கப் பள்ளிகளில் எழுத்துக்களைப் படிக்கும்போது அனா, ஆவனா, கனா, காவனா எனப் படிப்பிப்பது இலக்கணத் திற்குப் பொருந்துமா?' என்பது. அதற்குப் பாவலர் அவர்கள்,

'மெய்க ளகரமு நெட்டுயிர் காரமும்
ஐயௌக் கானு மிருமைக் குறிலிவ்
விரண்டொடு கரமுமாம் சாரியை பெறும்பிற'

என்னும் நன்னூல் சூத்திரத்தின்படி எழுத்துக்கள் அகரம், அஃகான், அகாரம், ஆகாரம் எனச் சாரியைகள் பெறுவதோடு கூட, பிற என்ற மிகையினால் அ னா, ஆ வனா எனச் சாரியைகள் பெற்று வருவதும் இலக்கணத்திற்குப் பொருந்து மென்றார்.

பிற அவதான நிகழ்ச்சிகளும் தொடர்ந்து நடந்து வந்தன. அவையிலிருந்த ஒருவரும் அவதானியும் ஒன்று முதல் பத்திற்கும் மேற்படாத தொகையை ஒருவர் பின்னொருவராக அவதான நிகழ்ச்சிகளினிடையே கூட்டி வந்தனர். இறுதியில் அவதானி நூறு எனக் கூறி முடித்தார். ஆயிரம் ஆண்டுகளுக்கிடைப்பட்ட ஆண்டு, திங்கள், நாள் கூறி கிழமைகள் ஐந்து கேட்கப்பட்டன. 1905-ஆம் ஆண்டு டிஸம்பர் திங்கள் 9-ஆம் நாள் என்ன கிழமை எனக் கேட்ட வருக்குச் சனிக்கிழமை என்றார். வினவியவர் இல்லை என்றார். அவதானி மீண்டும் சனிக்கிழமை என்றார். வினாவாளர் இல்லை யென மறுக்கவே கூட்டத்தில் பரபரப்பு ஏற்பட்டது, அப்பொழுது கூட்டத்திலிருந்த ஒருவர் தம்மிடமிருந்த நாட் குறிப்பைப் புரட்டிப் பார்த்து சனிக்கிழமையாகவே இருக்கக் கண்டு தெரிவித்தார்.

வினவியவரும் தன் தவறுணர்ந்து தாம் 1805-ஆம் ஆண்டு என எண்ணி வினவியதாகத் தெரிவித்து மன்னிப்பு வேண்டினார். உடுநாள், பிறந்த மாதம், வயது கூறுதல் ஆகியவை பற்றியும் ஐந்து வீதம் வினாக்கள் எழுந்தன. பெருந்தொகைகளுக்குக் கூட்டுத் தொகை, பெருக்குத் தொகை வினவியவர் ஐவர். கேட்டவுடனேயே இவைகளுக்கு விடைகள் அளிக்கப்பட்டன. நினைத்த எண்ணைக் கூறுதல் ஐந்து தடவை நிகழ்ந்தது.

அறிஞர் பதின்மர் தாம் இயற்றி வைத்திருந்த வெண்பாக்களை அடுத்தடுத்துக் கூற, ஒருகாற் கூறிய அளவிலேயே அதனை நெஞ்சிற் பதித்துக் கொண்டு அவதான நிகழ்ச்சிகளிடையே ஒவ்வொருவரிடமும் அவர்கள் கூறிய வெண்பாக்களைக் கூறினார். இவ்வாறு கூறப் பட்ட வெண்பாக்கள் நூற்றைம்பது. இடையிடையே எறியப்பட்ட கல், நெல், இவற்றை எண்ணிக் கொண்டே வந்து அவர்கள் வினவிய போது எண்ணிக்கையைக் கூறினார். இவ்வாறு ஐந்து தடவை வினவப்பட்டன. மேடைக்குப் பின்னால் அழைப்பு மணியில் ஒலி எழுப்பிக் கொண்டிருந்தவர் ஐந்து தடவைகள் வந்து அது வரை அடிக்கப்பட்ட எண்ணிக்கையைக் கேட்க அவதானி கூறினார். நால் வகை பாத்திரங்களை ஓசைபட முழக்கினர். நிறையறிந்து கூறினார். முன்னால் சுவைத்துப் பார்த்த வெவ்வேறு நீர் நிலைகளிலுள்ள நீரை ஒவ்வொன்றாக நான்கு தடவைகள் கொண்டு கொடுக்க சுவைத்துப் பார்த்து இன்ன நீர் நிலையிலுள்ளது என்றார். கண்டத் தொகையாளருக்கு ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு எண்ணாகக் கூறிக் கொண்டே வந்து முடித்தார். இவ்வாறு முடிவுற்ற கண்டத் தொகைகள் ஐந்து. சீட்டாட்டமும் வெற்றிதர முடிந்தது. அவதானத் தொடக்கத்தில் தலைவரோடு தொடங்கப் பெற்ற உரையாடல் அவதான நிகழ்ச்சிகளினிடையே தொடர்பாக நிகழ்ந்து முடிவுற்றது. கண்டப் பத்திரிகையாளர் ஐவர் தொடக்கம் முதல் எழுத்துக்களைக் கொடுத்துக் கொண்டே வந்தனர். இப்பொழுது ஐவருக்கும் ஒரு சேர விடையளித்தார் அவதானி. பதினைந்து நாயும் புலியும் விளையாடல், கிழமைக்கு நாள் வினவுதல் இவற்றிற்கு வினாவாளர் அமையவில்லை.

ஈற்றடி மூரீப்புக் கொடுத்தவர்களுக்குச் சீர்களைக் கொடுத்து வந்த அவதானிக்குப் பாடலை முடித்துக் கூறும் சமயம் வந்தது. 'விராடனையே பெண்ணென லாமே' என வெண்பா ஈற்றடி கொடுத்தவரை நோக்கி,

"உண்ணும் பொழுதும் உறங்கும் பொழுது மொன்றை
எண்ணும் பொழுதும் எரிமுன்னாய்—மண்ணில்
வராடவனை யேதெய்வ மன்னெனும் சொற்ற
விராடனையே பெண்ணென லாமே"

எனும் வெண்பாவைக் கூறி, 'உண்ணும்பொழுதும் உறங்கும் பொழுதும் ஒன்றை எண்ணும் பொழுதும், அக்கினிச் சான்றாய்த் தன்னைக் கைப்பிடித்த ஆடவனையே தெய்வமாகக் கொண்டு அவனுடைய சொல் தவிராதவளையே பெண் என்று கூறலாம்' என்று பொருளையும் கூறினார். இப்பாடலில் ஈற்றடி 'விராடனையே பெண்ணென லாமே' என்றிருப்பினும் முன்னடியின் ஈற்றுச் சீராகிய 'சொற்ற' என்பதோடு சேரும்போது 'சொல் தவிராள் தனையே' எனப் பொருள் தரும் அருமைப்பாடு அறிந்து இன்புறத் தக்கது.

'மாமனுக்குக் கந்தன் மகன்' என்னும் ஈற்றடியைக் கொடுத்தவர் முன் வந்தார். பாடலை விடுத்தார்.

"அண்டர் முறையால் அலைகடலில் பள்ளிகொண்ட
கொண்டல் வண்ணமேனிக் குரிசிலாம்—விண்டுபெற்ற
காமனுக்கு முற்றும் கருதும் படியமைந்த
மாமனுக்குக் கந்தன் மகன்"

என்றார்.

திருமாலின் மகனாகிய மன்மதனுக்கு முறைமையால் மாமனான சிவபெருமானுக்குக் கந்தன் மகன் எனக் கூறி, 'மாமனுக்குக் கந்தன் மகன்' என்ற சிக்கலை அறுத்தெறிந்த அற்புதத்தை எண்ணி வியந்தனர் அனைவரும்.

கட்டளைக் கலித்துறை வினவியவர் அருகே வந்தார். எஞ்கிய சீர்களைக் கொடுத்தார். பின் பாடலின் முழு உருவமும் கொடுக்கலானார்.

"விண்தொட் டசையும் தருமலி கானின் மிகுதிண்ணனார்
பண்பட்ட செந்தமிழ்ப் பாவாணர் போற்றும் பரமன்விழி
புண்பட்ட தென்றுதம் கண்ணனைப் பெயர்த்துப் பொருத்தியிரு
கண்கெட்ட பின்னென்றும் காணாத காட்சியைக்
கண்டனரே"

என்றார்.

சிவபெருமான் இடக்கண் புண்பட்டு விட்டதென்று எண்ணி, ஊனுக்கு ஊன் மருந்து எனும் உண்மையை நினைத்தவராய்த் தம் இடக்கண்ணைக் கையம்பால் பெயர்த்தெடுத்துப் பொருத்த, மேலும் வலக்கண்ணில் குருதிபாய, அதனைத் தடுக்க தன் வலக்கண்ணையும் தோண்ட முனைந்து இரு கண்களும் புறக்காட்சியற நின்ற நிலையிலே இறைவன் காட்சி கொடுக்க, அக்காட்சியைக் கண்டு களித்த கண்ணப்பரின் பெருநிலையைப் புலப்படுத்திய அவதானியாரின் மதி நுட்பத்தைச் சிந்தித்த யாவரும் வியப்புக் கடலில் ஆழ்ந்தனர்.

அவதானம் வெற்றி முழக்கோடு முடிந்தது. பொதுமக்கள் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்தனர். பூமாலை புனைந்து புகழ்ந் தேத்தினர், பலர். பொன்னாடை போர்த்திப் போற்றினர் பலர். அவதான நிகழ்ச்சிகளுக்குக் காரணமா யிருந்த இட்டா பார்த்தசாரதி நாயுடு அவர்கள் இன்பக் கடலில் மூழ்கிக் கரையேற முடியாமல் தத்தளித்தவராய்ப் பாவலரின் இருகரங்களையும் பிடித்துத் தங்கத் தோடாக்களிட்டுக் கரையேறினர். சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் அவர்கள் 'மகாமதியர்' எனப் புகழ்ந்து 'மகாமதி' எனப்பட்டம் வழங்கினார். தலைவர் பாராட்டுரை பகர்ந்து 'சதாவதானி' எனும் பட்டம் வழங்க 'மகாமதி, சதாவதானி செய்குதம்பிப் பாவலர் வாழ்க' என அவை வாழ்த்தியது. அங்கு வந்திருந்த வெள்ளையராகிய நீதிபதி அடைந்த வியப்பிற்கோர் அளவில்லை. ஒரே பொழுதில் இரு எண்ணங்கள் தங்கா என்றல்லவா உளநூற்கள் கூறுகின்றன; இவரோ ஒரே பொழுதில் நூறு எண்ணங்களைச் சிந்தையிலடக்கிச் செயலாற்றி விட்டாரே என இறும்பூ தெய்தினார். புலவர் பெருமக்கள் காற்று வருட காளமேகம் பொழிந்தாலெனக் கவிகளைப் பொழிந் தனர். அக்கவி யமுதனைத்தும் 'சதாவதானச் சிறப்பு' எனும் சிறு நூலாக வெளிவந்துள்ளது. காஞ்சீபுரம் மகாவித்துவான் இராமசாமி நாயுடு அவர்கள்,

"சீராரு நங்கள்செய் குத்தம்பிப் பாவலரின்று செய்த
ஏராரீ ரைம்பா னவதாந நோன்மை யிசைத்திடற்கீண்
டாரா ரறிஞர் புகழும் அகந்தன் அரியவன்பாற்
பேரார் இலக்கணங் கற்றோன், இவரன்றிப் பேசிடினே"

என்று பாராட்டினார்.

ஆதிசேடனும் இந்திரனிடம் ஐந்திரவியாகரணம் கற்ற தொல் காப்பியனு மல்லாது, அவதானப் பெருமை பேசுதற்கு அறிஞர் யாருளர் என்றார். அவ்வவதானத்திற்குப் பிறகு சதாவதானம் செய்ய முன் வந்த அறிஞர்களும் யாருளர்? பாவலர் அவர்களுக்குப் பின் அவர்களது மாணவர்களில் ஒருவராகிய சுசீந்திரம் தசாவதானி பெ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள் தமிழகத்தில் பல இடங்களிலும் தசாவதானம் இயற்றிப் புகழ் பெற்றார். இப் பெருமக்கள் அருள் நோக்கால் அவதானக்கலை தமிழகத்தில் மேலும் தழைத்தோங் குவதாக.

மரியாதைக்குரிய மகாமதி

நாரண துரைக்கண்ணன்

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே!"

இத்தாரக மந்திரத்தைத் தமிழ் மக்களுக்குப் புகட்டித் தலை நிமிர்ந்துநிற்கச் செய்தவர், மகாகவி பாரதியார். இவரைப் போலவே பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் பேணிக் காத்துப் பெருமையுறச் செய்த பெரும்புலவர் மகாமதி, சதாவதானி, அல்லாமா கா. ப. செய்குதம்பிப் பாவலர் ஆவர்.

'தமிழ்ப் பண்டிதர்களுக்கும் புலவர்களுக்கும் நாட்டு வளப்பம் தெரியாது; நாட்டு வளப்பத்தை நாடவும் மாட்டார்கள்; தாங்கள் உண்டு; தங்கள் தமிழ் உண்டு; பாடஞ் சொல்லும் பணி உண்டு. என்ற அளவில்தான் நிற்பார்கள். கிணற்றுத் தவளைகள்' என்று ஆங்கிலம் படித்தவர்களாலும் பிறராலும் ஏளனமாகப் பேசப்பட்டு வந்த காலத்தில் நம் நாட்டு வளப்பத்துக்காக—நம் நாட்டு விடுதலைக் காகப் பாடுபட முன்வந்த பெரியார் சதாவதானி பாவலர் அவர்கள். இவர் தாய் மொழிப் பற்று மட்டும் கொள்ளாமல் தாய் நாட்டுப் பற்றுங் கொண்டு, நம் பாரதத்தைப் பிணித்திருந்த அடிமைத் தளையை அறுத்தெறிய அரும்பாடுபட்ட தேசீய வீரர்களில் தன்னி கரற்ற வீரராய்த் திகழ்ந்தார். வட இந்தியாவில் மௌலானா முஹம்மது அலி, மௌலானா ஷௌகத்அலி, டாக்டர் அன்சாரி, மௌலானா அபுல்கலாம் ஆசாத், கான் அப்துல் கபார்கான், டாக்டர் கான்சாகிப், ஆஸப்அலி முதலியவர்களைப் போல் தென்னிந்தியாவில்

அதிலும் தமிழகத்தில் மௌலானா சாகிப். ஜனாப் யாகூப் ஹஸன், அப்துல் ஹமீது கான், பஷீர் அகமது சையீத் முதலியவர்களோடு அவர்களில் பலருக்கு வழி காட்டியாகத் தேச மகா சபையாகிய காங்கிரஸ் ஸ்தாபனத்தில் சேர்ந்து தேசத் தொண்டு புரிந்தவர் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் என்பது இன்றைய தலைமுறையினருக்கு—தேச பக்தர்களுக்குக் கூடத் தெரியாது.

சதாவதானி செய்குதம்பிப் பாவலர் தமிழ்ப் பெரும் புலவர்; பாவல்லார்; பன்னூல் ஆசிரியர்; பல நூல்களை அழகுபடப் பதிப்பித்த பதிப்பாசிரியர்; தம்மை நாடிவந்து விரும்பிக் கேட்போருக்கெல்லாம் முறையாகத் தமிழ் இலக்கியங்களை மனங்கொள்ளப் பாடஞ் சொல்லிப் புலமையாளராக்கிய போதகாசிரியர்; கேட்பாரை முற்றுங் கவரக் கூடிய வகையில் சோணாமாரியாகச் சொற்பொழிவாற்றும் பெருஞ் சொற்கொண்டல்; அறிஞர் அவையில் தங்கு தடையின்றி அவதானம் பல செய்த சதாவதானி என்பனவெல்லாங் கூடப் பலருக்குத் தெரியும். ஆனால் அப்பெரியார் புரிந்த மகத்தான தேச சேவை எப்படியோ தெரியாமல் போய்விட்டது. அத்தியாக வாழ்வைத் தேசத் தலைவர்கள்கூட எப்படியோ மறந்து விட்டார்கள்.

அந்நாளில் நாஞ்சில் நாட்டில் சுதந்திரப் போராட்டம் குறித்து அவர் பேசாத கூட்டங் கிடையாது. அவரது சொற்பொழிவு கேட்காத சிற்றூர் கிடையாது. அந்த அரசியல் கூட்டங்களில் அவர் பேச்சில் கம்பன் பாடல்கள், புகழேந்திப் பாடல்கள், அதிவீரராம பாண்டியன் பாடல்கள், உமறுப் புலவர் பாடல்கள், இராமலிங்க சுவாமி பாடல்கள் அடிக்கொரு முறை வந்துவிழுந்து கொண்டேயிருக்கும். தேன்போல் இனிக்கும் அவருடைய தீந்தமிழ்ப் பேச்சைக் கேட்டு மக்கள் பரவசமுறுவார்கள். பாவலர் அவர்களின் கவிதை நடைப் பேச்சு நாகர் கோவில், கோட்டாறு, சுசீந்திரம், கன்னியாகுமரிப் பகுதி முழுவதும் எதிரொலித்தது.

அடுத்து, பாவலர் அவர்கள் கலந்து கொண்ட இயக்கம் அருட்பா மருட்பாப் போர். பாவலர் ஐயா அவர்கள் எங்கள் பேராசிரியர் மறைமலையடிகளாருடன் நின்று, இராமலிங்க வள்ளலார் பாடியுள்ள பாடல்கள் அனைத்தும் அருட்பாக்களே என்று தக்க ஆதாரங்களுடன் பேசி அருட்பாக் கட்சிக்கு வெற்றி தேடித் தந்தார்கள். அவருடைய பேச்சில் தர்க்க வாதத் திறமை நிறைந்திருந்ததாக அக்கால அறிஞர்கள் வியந்து பாராட்டியதை நான் பல முறை கேட்டிருக்கிறேன். அருட்பா அல்ல; மருட்பா தான் என வல்லடி வழக்காடிய யாழ்பாணம் நா. கதிர்வேல் பிள்ளையுடன் சேர்ந்திருந்த பானு கவிக்கு எதிராகத் தம்மை கேதுகவி என்று

பாவலர் அவர்கள் சொல்லிக் கொண்டு நையாண்டி செய்தாராம். இவ்விவாதத்தின்போது, சதாவதானி பாவலர் அவர்கள் சென்னை மாநகரில் வதிந்திருந்தார்கள். 'அருட்பா' கட்சியில் வெற்றி கண்ட அவர் எங்கு சென்றாலும் மக்கள் குதூகலத்துடன் வரவேற்று மரியாதை செய்வார்களாம். எதிர்ப்படும் அன்பர்கள் செய்யும் வணக்கங்களுக்குப் பிரதி மரியாதை செய்யப் பாவலர் அவர்கள் இரு கரங்களையும் தூக்கிக் குவித்துக்கொண்டே போக வேண்டியிருக்குமாம்.

பாவலர் அவர்கள் வாழ்க்கையில் புரிந்த அரிய செயல்களில் முதன்மையானது சதாவதானம் ஆகும். சென்னையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில் அவர் அறிஞர் பெருமக்கள் அவை நடுவே பல விஷயங்கள் பற்றியும் பலரும், ஏக காலத்தில் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்க விடைகளை அளித்து சதாவதானி என்ற சிறப்புப் பெயரையும் பட்டத்தையும் பெற்றது பொன்னெழுத்துக்களில் பொறிக்கத் தக்க நிகழ்ச்சியாகும்.

ஷம்சுத் தாசீன் கோவை

வித்துவான் ரு. அபுபக்கர், B.A.,

நீராருங் கடலுடுத்த நிலமடந்தையாம் இப்பூவுலகு, நாடாகவோ, காடாகவோ அன்றி மேடாகவோ, பள்ளமாகவோ இருக்கலாம். இது வைத்து நாட்டின்சிறப்பு அளக்கப்படுவதில்லை. 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே' என்ற ஔவை மொழிக் கேற்ப மக்களைப் பொறுத்தே மாறுபடுகின்றது இம்மாநிலம். இதனா லன்றோ தெய்வப் புலவர் திருவள்ளுவனாரும்,

> "பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
> மண்புக்கு மாய்வது மன்"

என்று கூறினார். இவ்விரு நல்லார் மொழிக்கேற்ப, பண்புடைமை பெற்று வாழ்ந்த சீரியர்கள் பலர். அவர்களுள் இவ்வுலகின் புற விருளை அகற்றும் ஞாயிற்றைப் போல், மக்கள்தம் மனவிருளை அகற்றி மாசு துடைத்து, மாண்பை ஏற்றிப் பண்புடன் விளங்கச் செய்த பாவலர்கள் சிலர். அவர்கள்தம் அறிவுரைகளே இன்றைய நம் இலக்கியங்களாம்.

கசடறக் கற்ற கவி வல்லோர்கள், திறனறிந்து, கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிந்த இலக்கியங்கள் எண்ணற்றவை. இவைகளுள் சிலவற்றை 96 வகைப் பிரபந்தங் களுள் அடக்குவர் என்பதைப், 'பிள்ளைக் கவிமுதற் புராணம் ஈறாத் தொண்ணூற் றாறெனும் தொகையதாம்...' என்னும் பிரபந்த மரபியலும், 'தொண்ணூற்றாறு கோல ப்ரபந்தங்கள் கொண்ட பிரான்' எனச் சிவந்தெழுந்த பல்லவராயன் உலாவும் அறிவிக் கின்றன. இவைகளுள் ஒன்றே, 'தெள்ளிய பாற்கடல் கடைந்து தேவர் பொருட்டால் அமுதந் திரட்டுமாபோல் ஒள்ளிய தீந்தமிழ்க்

கடலின் உயர்வு பெறும் அகப்பொருளில் ஓதும் அன்பின் உள்ளிய ஐந்திணைக் கோவை' என்பர் கல்வி வள்ளல், முதுபெரும் புலவர் சாத்தாங்குட்டிப் பிள்ளை அவர்கள், அகப்பொருள் இலக்கணத்திற்கு இலக்கியமாக அமைந்த இந்நூல் செய்யுட்களைக் கிளவிகளாக வகுத்து, துறைகளாக விரித்து, வரலாற்றுத் தொடர்ச்சி அமையக் கோத்துப் பாடப்படுவதாதலின் இப்பெயர் பெற்றது என்பர்.

இக்கோவைகள் கடவுளர்களையோ, அரசர்களையோ. குறுநில மன்னர்களையோ, வள்ளல்களையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு அத்தலைவர்களின் ஆட்சி முறைக்குட்பட்ட நாட்டில் இக்காதலர் நிகழ்ச்சி நிகழ்வதாகத் துறைகொண்டு அமைந்து செல்லும். இவற்றுள் கடவுளையே பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டு பாடப்பட்டவைகளே திருக்கோவையாரும், திருவெங் கோவையுமாம். பாண்டிய அரசன் நெடுமாறனைப் பாட்டுடைத் தலைவனாய்க் கொண்டு பாடப்பட்ட கோவையே பாண்டிக் கோவை யாம். மற்று, தஞ்சைவாணன் கோவை போன்றவை யெல்லாம் புலவர் பெருமக்களைப் புரக்கும் புரவலராய் - வந்தார்க்கு வாரி வழங்கும் வள்ளல்களாய் விளங்கியோர்களையே பாட்டுடைத் தலைவர்களாகக் கொண்டு பாடப்பட்டவைகளாகும். இவ்வினத்தில் ஈடும் எடுப்பு மில்லாச் சிறப்புடனே இலங்கும் ஒன்றே ஷம்சுத்தாசீன் கோவை.

கோவைகளுள் கோமேதகம் எனக் கொள்ளப்படுவது மாணிக்க வாசகப் பெருமானாரின் திருச்சிற்றம்பலக் கோவையாம். திருக் கோவையே யாயினும், அகப்பொருள் இலக்கணத்தை வகைப்படுத்திக் கூறும் இலக்கியமாய்த் திகழ்வது தஞ்சைவாணன் கோவையொன்று தான். பொய்யாமொழிப் புலவரின் கோவையைப் படித்துப் படித்துப் பரவசமுற்றார், ஷம்சுத்தாசீன் கோவையைப் படிப்பாராயின் பரவச முறுவதோடு நில்லாது பாரில் இதற்கு நிகரேது என்றும் பகர்வர் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

ஷம்சுத் தாசீன் கோவை என்னும் இந்நூல் 425 செய்யுட்களைத் தன்னகத்தே கொண்டு, சொல்லணி, பொருளணி முதலிய அணிகள் பல அமைந்து கற்றோர் வியக்கும் வண்ணம் விளங்குகின்றது. இக்கோவையை அழகு படக் கோத்தளித்த பெருமை,

"உன்னரிய புலவரெனும் உடுக்களிடை மாமதியாய்
ஒளிரும் மேலோன்
மன்னரிய நலனுடையான் ஷெய்குதம்பிப் பாவலனா
மதிவல் லோனையே"

சாரும்.

இந்நூல்,

"சீரேறு கலையுடையான் செய்யதிருக் குணமுடையான்
சேணு லாவுங்
காரேறு காதலத்தான் காட்சிமிகு ஹாமிமெனக்
கழறு மூரான்
பாரேறு புகழுடையான் பரம்பொருளை யுளநிறுத்தும்
பான்மை யுள்ளான்
தாரேறு செழுமார்பன் ஷம்சுத்தா சீன்பெயர்கொள்
தக்கோன் மீதே."

அகப்பொருள் துறைகள் பலவும் அமைய 1915ல் பாடப்பட்டதாகும்.

தலைவன் தலைவியை முதன் முதற் கண்ட காட்சி என்னும் துறைக்குத் தலைவன் தலைவியின் உருவ அழகை வியந்து கூறுங்கால்,

"மாவே தழைத்து வனசமுங் கோங்கு
மருவி யல்லிப்
பூவே புணர்ந்து புதுநற வேற்றளி
பூண்டு புகழ்க்
கோவே யெனவரு வோன்ஷம்சுத் தாசீன்
குளிர்சி லம்பின்
காவே சிறப்ப நடுவிலொர் பூங்கொடி
காண்கின்றதே"

என்று கூறுவதன் மூலம் தலைவியின் இளமையழகை இயற்கை யழகோடு ஒப்பிட்டு அழகுருவில் கூற எண்ணிய சதாவதானி செய்கு தம்பிப் பாவலர் அவர்கள், மேனியழகை மாந்தளிர் என்றும், முகத்தை வனசமென்றும், கொங்கைகளை கோங்கரும்புகளென்றும் வாயை அல்லி மலரென்றும் கண்களை வண்டின மென்றும் இவைகளை எல்லாம் ஒருங்கே தாங்கித் தளர்ந்து மெலிந்து சிறுத்திருக்கும் இடையைப் பூங்கொடி என்றும் அமைத்து, இவைகளை எல்லாம் ஒரு பூங்கொடி இடத்துக் கண்டு என் கன் களிகொண்டதெனத் தலைவன் கூற்றாகக் காட்டியிருக்கும் திறப்பாடு எண்ணி இன்புறுதற் குரியதேயாம்.

மாந்தளிரும் கோங்கரும்பும், வனச மலரும் அல்லிப்போதும் வண்டினமும் ஒருங்கே ஒரே நொடியில் சார்ந்திருப்பதைக் கண்படைத் தோர் கண்டால் அகறலும் உண்டோ...? பேடியரன்றோ பெற்றியின் நின்றிடின்...! ஆகவே இக்காட்சியைக் கண்ட தலைவன் கண்களால் களிபேருவகையுடன் பருகினான் என்பதோடு நின்றிருக்கலாம். ஆனால் சுவியம் யாவையும் கற்றுக் கோவையையும் ஆக்கிய பாவலர் பெருந்தகையார் இத்துட்னே நில்லாது அன்பின்

ஐந்திணைக்கு நிலமும் கருப்பொருளும் அமைத்துக் காட்டும் திறன் மறக்கற்பால தன்று. 'மாவே தழைத்து' எனக் கூறியமையால் குறிஞ்சியையும், 'கோங்கு மருவி' என்று சொல்லியமையால் பாலையையும், 'வனசமும் அல்லிப் பூவே புணர்ந்து' என்றமையால் நெய்தலையும், 'நடுவிலோர் பூங்கொடி' என்று குறிப்பிட்டமையால் முல்லையையும் காட்டி அவைகளுக் கேற்பப் புணர்தல், பிரிதல், ஊடல், இரங்கல், இருத்தல் ஆகிய ஒழுக்கங்களையும் காட்டியுள்ளதோடு தலைவியின் ஒவ்வோர் உறுப்பையும் மலர்களின் இயற்கை அழகோடு பொருத்திக் காட்டி, மங்கை நல்லாளின் மென்மையான பண்பையும் பெற வைத்துள்ளமை உன்னி நோக்குதற்குரியதேயாம்.

இவ்வாறு கண்டவர் காமுறும் பொலிவுடனே காட்சி அளிக்கும் பூங்கொடியைக் கண்ட தலைவன் இவள் எவ்வுலகத்தவளோ என ஐயுறுகின்றான். இந்த ஐயப்பாட்டை அறிவுறுத்தும் துறையே 'ஐயம்'. இத்தலைப்பிலே தலைவன் ஒருவனின் ஐயத்தை அறிவுறுத்த

"அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு"

என்று வள்ளுவத்திலும்,

"பாரணங்கோதிருப் பாற்கடல் ஈன்றபங்
கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோஉயர்
பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணன்தென்
மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேயீங்கு
நின்றவரே"

என்று தஞ்சைவாணன் கோவையிலும்,

"தருவோ வரையுறை தெய்வங்கொ லோதெண்
திரையமுதின்
உருவோ வளர்கொல்லி யோவிய மோவுயர்
வானிடையில்
வருவோர் சிலவிஞ் சையர்மக ளோவன்றி
மானிடமோ
தருவோடு வல்லி தழுவுந்தண் சாரலிற்
றாழ்குழலே"

என்று அம்பிகாவதிக் கோவையிலும் முறையே வள்ளுவரும், பொய்யா மொழிப் புலவரும், அம்பிகாவதியாரும் கூறுகின்றனர். இவர்கள் எல்லாம் தலைவன் வழி தலைவியைக் கண்டு, உற்று நோக்கி, இவள் எவ்வுலகத்துப் பெண்ணோ என்று எண்ணி, அத்துடனே தங்கள் ஐயத்தை முடித்துக் கொள்கின்றனர். ஆனால் இவைகளையெல்லாம் பருகிப் பருகிப் பழகிப் போன பைந்தமிழ் மக்களுக்கு இப்பாணியிலே செய்குதம்பிப் பாவலர் கூற நினைந்தாரல்லர். இத்துறையிலே புதுமையைப் புகுத்த எண்ணிய அவர் நெஞ்சம், தலைவன் நெஞ்சத்தோடு இரண்டறக் கலந்து ஐயமாய் வெளிப்படும் பொழுது, முன்னே உள்ளவைகளை யெல்லாம் மிஞ்சி விடுவதோடு நில்லாது, வென்றும் விடுகிறது. இத்தலைவியாம் பூங்கொடி இங்கே நிற்கின்றமையால் இப்பூவுலகு விண்ணாய் – மண்ணாய் - மாமலையாய் - திருப்பாற்கடலாய் – சந்திர சூரிய மண்டலங்களாய் - தாமரை மலரின் நனியாசனமாய்க் காட்சியளித்தது எனக் கூறுகிறார் என்றால் பாவலர் அவர்களின் கற்பனைச் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பது ? இதோ அப்பாடல் :

“வானோ புவியோ மலையோ கடலோ மதியிரவி
தானோ வனசத் தனித்தவி சோவுற்ற தண்டமிழ்க்கோர்
கோனோ வெனவருள் வோன்ஷம்சுத் தாசீன்
குளிர்சிலம்பின்
கானோ டொளிதரு வாளிரு டந்தவக் காவகமே”

இங்ஙனம் இனித்திடும் அமுதம் போன்று காட்சியளிக்கின்ற இக்கோவையை விரித்துரைப்பதாயின் விரியுமென்றஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன் ஆயினும் இந்நூல் முழுவதையும் படித்தின்புறவோ, அன்றிப் படிக்கப் பக்கம் நின்று கேட்டு இன்புறவோ செய்கிறவர்கள் இதில் காணப்படுகின்ற கருத்து நயங்களையும், பொருட் செறிவுகளையும், சொற்றொடர்களையும், பன்னூற் கருத்தமைப்புக்களையும் முறையொடு கண்டு இன்புறுவர் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கோவையை மறக்கினும் கோவையில் உள்ள யாவையும் தான் மறந்து விடினும், தலைவியை இரந்து பின்னிற்றற்கு எண்ணுகின்ற தலைவன் கூறும் கூற்றாகப் பாவலர் கூறுகின்ற, ‘கோடித் தவமுல ரொன்றிரண் டீகுலர் கூடுநர்க்கே’ என்பதை மறப்பரோ ?

பாவலரின் சிலேடை நயம்!

"மித்திரன்"

ஒரு சொல் இரு பொருள் தோன்ற நிற்பது சிலேடை எனப் படும். சிலேடையாலேயே சிறப்புற்ற புலவர் பலர் தமிழ் இலக்கியப் பரப்பிலே நெடுகிலும் தென்படுகின்றனர். நுண்மாண் நுழைபுலம் கொண்ட சொல்வளம் மிக்காருக்கே சிலேடை சிரந்தாழ்த்தும்.

சிலேடையை செம்மொழி, பிரிமொழி எனப் பகுத்த தண்டியலங் கார ஆசிரியர், அதனை ஒருவினை, பலவினை, முரண்வினை, நிச்சயம், நிச்சய விலக்கு, ஒற்றுமை, வேற்றுமை என ஏழாகப் பிரித்தார். அங்கதப் பேச்சிலே (Satire) அகமிக மகிழ்ந்த ஆங்கி லேயரும்கூட இங்கிதச் சிலேடையின் இதம் கண்டு இரசித்தனர். போற்றுதல் போன்று தோற்றும் தூற்றுதலுக்கு சிலேடை துணை நின்றுதவும்.

நம்மிடையே வாழ்ந்திருந்த தமிழ்ப் பெரும் புலவர், தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம், மகாமதி, அல்லாமா, கலைக்கடல் சதாவதானி செய்குதம்பிப் பாவலர் அவர்கள் சிலேடை நயம்படப் பேசுவதிலும் கவிபுனைவதிலும் தன்னிகரற்று விளங்கினார்கள். அவர்கள்தம் சிலேடையிலே சிந்தை பறிகொடுத்தோர் ஏராளம். சிரிப்பதற்காக மட்டுமின்றி சிந்திப்பதற்காகவும் பயன்படும் பார கவிதைகள் பல வற்றை சிலேடை நயம் மிளிரப் பாடியுள்ளார், பாவலர் அவர்கள்.

பாவலர் அவர்களின் பல்கலை ஞானத்தில் பளிச்சென ஒளி உமிழ்வது சதாவதானம். அந்த சதாவதானத்தைத் தங்களுக்கு முன்னரும் – ஏன் பின்னரும்கூட யாரும் செய்து முடிக்காத நிலையில் 1907-ம் ஆண்டு மார்ச் திங்கள் 10-ம் நாள் சென்னை விக்டோரியா

நினைவு மண்டபத்தில் செய்யத் தொடங்கிய பாவலர் அவர்களிடம் வினவப்பட்ட முதற்கேள்வியே சிலேடை பற்றியதுதான். கடவுள் வணக்கப் பாடலொன்றை சிலேடையாகப் பாடக் கேட்ட ஜி. சுப்பிரமணிய ஐயர் அவர்களின் கேட்டவாய் மூடு முன்னரே பாவலர் அவர்களின் பாவூறும் வாயிலிருந்து பாடல் வெளிப்போந்தது.

"சிரமா றுடையான் செழுமா வடியைத்
திரமா நினைவார் சிரமே பணிவார்
பரமா தரவா பருகா ருருகார்
வரமா தவமே மலிவார் பொலிவார்"

என்ற பாவலர் அவர்களின் இந்தப் பாடலின் முதலிரண்டு சீர்களான 'சிரமா றுடையான்' எனும் சொற்றொடர், சிரத்திலே கங்கை ஆற்றை உடைய சிவபெருமான் எனவும், இயல்பிற்கு மாறுபட்ட சிரத்தை உடைய கணபதி எனவும், ஆறு தலைகளை உடைய முருகன் எனவும், தலைப் பாகம் காவிரி ஆறு கரைபுரண்டோட திருவரங்கத்திலே பள்ளி கொண்டுள்ள திருமால் எனவும், தலையாய நல்வழிகளை உலகுய்யக் காட்டும் அல்லாஹ் எனவும் ஐம்பொருள் கொண்டுள்ள சிலேடைத் தொடராக அமைந்துள்ள சிறப்பினைப் பெறுகின்றது. இருபொருள் தரவல்ல சிலேடைக்கே சிறப்புண்டெனில் ஐம்பொருள் விரித்து நிற்கும் இத்தொடரின் மதிப்பை எதனால் அளப்பது; எப்படி கணிப்பது?

உரையாடற் கலையில் உயர்ந்து விளங்கிய பாவலர் அவர்கள் தம்மோடிருப்போரை சதா சர்வகாலமும் சிந்திக்கத் தூண்டிய படியே இருப்பார். அவர் வாயினின்றும் உதிரும் வார்த்தைப் பரல்களை வாரிக் கோக்க வகை தெரியாமல் விழிப்பர், உடனிருப்போர். தாம் போட்ட முடிச்சை தாமே அவிழ்த்து சக புலவர்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவதோடு தாமும் மகிழ்ந்திருப்பது மகாமதியின் அன்றாட வழக்கம்.

அன்றும் அப்படித்தான்.

ஆறேழு புலவர்கள் பாவலர் அவர்களோடு அமர்ந்து இலக்கிய சுவை மாந்திக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவர் சைவப் பிள்ளை. சைவப் பிள்ளைமார் ஊன் உண்ணுவதில்லை. அதைக் கேட்டாலே அவர்களுக்கு ஓர் அருவெறுப்பு உணர்வு உண்டாகும். அத்தகைய ஒருவரை வைத்துக் கொண்டு பாவலர் அவர்கள் சிரித்துக் கொண்டே, 'காக்காய் கறி சமைத்து கருவாடு மென்றுண்பர் சைவர்' எனக் கூறியது பிள்ளைக்கு மட்டுமல்ல, பிறருக்கும் கூட என்னவோ போன்றிருந்தது. பிள்ளையின் நிலைகண்டு அனைவருமே வருந்தினர். பாவலர் அவர்களின் இதழ்க்கடையிலே முறுவல் தவழ்ந்தது. தம்கூற்றின் பொருளை தாமே விளக்க முற்பட்டார், அவர்.

காக்காய் = கால் + காய் = ஒரு காயின் நான்கிலொரு பாகம்
கறி சமைத்து = உணவாக்கி
கருவாடு மென்று = கரு + வாடுமென்று = வயிறு பசியால் வாடுமென்று
உண்பர் சைவர் = சைவர்கள் உண்ணுவர்

என்றவாறு பிரிமொழி சிலேடையால் பிரித்து' வயிறு பசியால் வாடும் என்பதற்காக ஒரு காயின் நான்கிலோர் பாகத்தை உணவாக்கி, சைவர்கள் உண்ணுவர் என விளக்கினார். உடனிருந்தோர் உள்ளம் மகிழ்ந்தனர். சைவப் பிள்ளையின் சாம்பியிருந்த முகத்திலே ஒரு தனிப் பொலிவு தாண்டவமாடியது

பசுமரத்தாணி எனப் பதியுமாற் பேரன்று மாணவர்க்குப் பாடம் கூறுவதில் பாவலர் அவர்கள் கைதேர்ந்தவர். சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தாம் கூறும் கருத்தை மாணவர் உள்ளத்தில் நிலைத்து நிறுத்த உதாரணம் காட்டுவதில் பாவலருக்கு நிகர் பாவலரே!

சிலேடை பற்றிய பாடம் நடந்து கொண்டிருக்கிறது. பாவலர் அவர்களின் காதுகளில் 'ஆமவடை தேன்குழல் முறுக்கு' எனத் தெருவிலே சிறுமி யொருத்தி கூவி விற்கும் குரல் விழுகிறது. 'ஆமவடை தேன்குழல் முறுக்கு' எனக் கூறியவாறே தெருப்பக்கம் கையைக் காட்டுகிறார் பாவலர். ஆசிரியப் பெம்மானுக்கு நொறுக்குத் தீனியின் மீது நோக்கம் வந்து விட்டது எனக் கருதிய மாணவர் ஒருவர் விரைந்தோடிச் சென்று ஆமவடை, தேன்குழல், முறுக்கு வாங்கி வந்து பாவலர் அவர்கள் முன் வைக்கிறார். பாவலர் அவர்களோ மீண்டும் மீண்டும் அதையே கூற ஒவ்வொருவராக எழுந்து சென்று வாங்கி வந்து அவர் முன் வைக்கின்றனர். சிறுமி வைத்திருந்த அத்தனையையும் கொண்டு வந்து குவித்த பின்னரும் பாவலர் அவர்கள் ஆமவடை, தேன் குழல், முறுக்கு எனக் கூறுகிறார். காலந்தாழ்ந்தேனும் பாவலர் கூற்றின் கருத்தைப் புரிந்து கொண்ட மாணவர் ஒருவர் ஓடிச் சென்று அந்தச் சிறுமியின் தலை முடியைப் பிடித்து முறுக்க முற்படுகிறார். இதனைக் கண்ட பாவலர் அவர்கள், 'காசு விடு' என மொழிய அந்த மாணவர் வாங்கி வந்த பொருளனைத்திற்கும் உண்டான காசைக் கொடுத்து விட்டு வந்து சேருகிறார். அவரை மனம் நெகிழ்ந்து பாராட்டிய பாவலர் அவர்கள்,

ஆமவடை = ஆம் + அவள் + தை = ஆம் அவள் ஒரு பெண்
தேன்குழல் = தேன் சிந்தும் மலர்க் கூந்தல்
முறுக்கு = முறுக்கி விடு

என்ற சிலேடைப் பொருளை விளக்கியதோடு, 'காசு விடு' என்பது, அப்படி அந்தச் சிறுமியின் கூந்தலை முறுக்குவதானது 'குற்றம் விடு' எனும் பொருளோடு 'காசைக் கொடு' என்ற பொருளிலும் கூறப் பட்டது என்றும் குறிப்பிட்டார். சிலேடையைப் புரிந்து செயல்பட்ட மாணவன் பாராட்டப் பெற்றான். செவிக்கு உணவோடு அனை வருக்குமே ஆமவடை தேன்குழல் முறுக்கும் வயிற்றுக்குக் கிடைத்தது.

சுருட்டுப் புகைப்பதில் பாவலர் அவர்களுக்கோர் தனி இன்பம். சாதாரணமாக நண்பர்களுடன் பேசிக் கொண்டிருக்கும் வேளைகளி லும்கூட அவர் வாயில் சுருட்டு இருந்து கொண்டே இருக்கும். பிரம்ம நாயகம் சுருட்டு என்ற பெயர் கொண்ட அந்தக் குறிப்பிட்ட ரகச் சுருட்டு பாவலர் அவர்கள் வழக்கமாக உட்கார்ந்திருக்கும் நீண்ட ஓய்வு நாற்காலியின் (Easy Chair) அருகில் கிடக்கும் வட்டமேஜையின்மீது கட்டுக் கட்டாகக் காட்சி தரும். தனக்குப் பிரியமான - தன்னால் நேசிக்கப்படுகிற ஒன்று எப்போதும் இல்லாத நிலையில் இடக்கிலே ஈடுபட்டால் எரிச்சல் தானாகவே வந்துவிடும் தானே? அப்படித்தான் அன்று சுருட்டும் இடக்குச் செய்யத் தொடங்கியது. எத்தனையோ முறை நெருப்பு வைத்தும்கூட, கன்னம் குழிவிழ 'தம்' பிடித்தும்கூட என்ன காரணத்தினாலோ அந்தச் சுருட்டு புகைய மறுத்தது. எரிச்சலோடு கூடிய ஏளனத்துடன் 'பிரம்ம நாயகம் புகையிலை பெருந்தீ வைத்தும் புகையிலை' எனக் கூறினார் பாவலர். உடனிருந்தவர்கள் பாவலர் அவர்களின் சிலேடைச் சொல்வில் மகிழ்ந்தனர்.

ஓர் நாள்...... கம்பராமாயணச் சொற்பொழிவின்போது, 'கல்லா மதியே கதிர்வானிலவே...' எனவரும் கம்பராமாயணப் பாடலை விளக்கிக் கொண்டிருந்தார் பாவலர். பேச்சினூடே "இந்தப் பாட லுக்குப் பலர் பல மாதிரியான பொருள் கூறி சொற்கொலை, பொருட் கொலை செய்து வருகின்றனர். இப்படி அவர்கள் செய்வதானது கம்பனையே — அவன் கவித் திறனையே பிறர் ஐயுறுமாறு செய்து விடுகின்றது" எனக் கூறியபோது கூட்டத்திலிருந்து எழுந்த ஒருவர் குறுக்கிட்டுப் பேசத் தொடங்கினார். இந்த அவரது செயல் தம் பேச்சைத் தடைப்படுத்தும் நோக்கத்தோடானது என்பதைப் புரிந்து கொண்ட பாவலர் அவர்கள் அவர் பக்கமாகத் திரும்பி நின்று கொண்டு நிதானமாக — ஆனால் அழுத்தமாக — "கல்லா மதியே கேள்" எனக் கூறியதும் கூடியிருந்தோர் அனைவரும் கைகொட்டிச் சிரித்தனர். இதைச் சற்றும் எதிர்பாராத குறுக்கிட்டவர் கூனிக் குறுகி நின்றார்.

பாவவர் அவர்களின் ஊரான கோட்டாற்றை அடுத்திருந்த திருவிதாங்கோட்டில் ஓர் நாள் சீறாப் புராணம் சிறப்புரை நிகழ்த்திக்

கொண்டிருந்தார் பாவலர். நானிலம் போற்ற வந்த நபிகள் கோமானார் வலியுறுத்திய சீர்திரு கருத்துகளை — சிறப்பான தத்துவங்களை – சிலாகித்துப் பேசிவந்த போது விதவா விவாகம் பற்றிய பெருமானார் அவர்களின் விசாலமான கருத்தைப் பெரிது வந்து பாராட்டினார். கணவனை இழந்த கைம்பெண்ணுக்கு வாழ்வு கொடுக்கப் பணிக்கும் இஸ்லாத்தின் – வாழ்வு கொடுக்கும் முஸ்லிம் களின் முற்போக்கு உணர்வினை முஸ்லிம்களல்லாத ஏனையோர் ஏளனம் செய்வதை சுட்டிக் காட்டி வாதிட்டார். தம் வாதத்திற்கு உழவுத் தொழிலையே உயிர்த் தொழிலாக – உயர் தொழிலாக – கொண்டிருந்த நாஞ்சில் நாட்டின் உழவர்கள் மத்தியில் நிலவும் நல்லதோர் பழ மொழியை உறுதுணையாகக் கொண்டார். ‘அறுத்தால் கட்டு; அல்லது அழியும்’ என்பதே அது. நிலத்திலிருந்து அறுத்தெடுக்கப் பட்ட நெற்கதிர்களைக் கட்டாகக் கட்டி களத்து மேட்டிலே அடுக்கி வைப்பர். ஏனெனில் அப்படிச் செய்யாத கதிர் அழியும். இது அனைவருக்கும் தெரிந்த ஒன்று. இதையே “ஓரிளம் பெண் கணவனை இழந்து தாலி அறுத்தால் அவளை வேறொருவனுக்குக் கட்டிக் கொடுத்தாக வேண்டும்; இல்லையேல் பல்லாற் றானும் அவள் வாழ்வு அழியும்” எனக் கூறி விளங்க வைத்த பாவலர் அவர் களின் மதியூகத்தையும் சிலேடை நயத்தையும் வியந்து ரஸித்து மகிழ்ந்தனர் கூட்டத்தினர்.

அன்பர் ஒருவர் வீட்டில் திருமணம். பாவலர் அவர்களை விரும்பி அழைத்திருந்தார் அவர். ஆயினும் பாவலர் அவர்கள் அம்மண விழாவிலே கலந்து கொள்ள முடியாதாயிற்று. பின்னர் ஓர் நாள் அந்த அன்பரைச் சந்தித்த பாவலர் அவர்கள், திருமணத்தில் கலந்து கொள்ள முடியாது போனமைக்கான காரணம் கூறி வருத்தம் தெரி வித்தார், பருவரலுற்று பருவரலுற்றேன்; எனவே வர இயல வில்லை'' எனக் கூறினார். ‘முகத்திலே முளைத்த பருவால் மிகவும் பருவரல் (துன்பம்) உற்றேன். அதனால் வர இயலாதாயிற்று’ என்பதை சிலேடை நயம் தொனிக்க இப்படிக் கூறிய பாவலர் அவர் களின் வார்த்தை விளையாட்டில் அந்த அன்பர் மனம் மகிழ்ந்து போனார்.

நாளெல்லாம் நாடெல்லாம் இலக்கியம், அரசியல் என சொன் மாரி பெய்து வந்த பாவலர் என்னும் அந்தக் கார்முகில் 1950-ம் ஆண்டில் தஞ்சாவூரில் நடந்த மீலாது விழாவிலே கலந்து கொண்டது. அதில் பேசும்போது பாவலர் அவர்கள் தஞ்சாவூருக்கு வந்திருக்கிறேன் (தன் - சாவூர்) எனக் குறிப்பிட்டதைக் கேட்டக் கூடியிருந்தோர் கவலை மிகக் கொண்டனர். தன் சாவை தானே உணர்ந்திருந்த தபோவலிமை பெற்றவர் பாவலர் அவர்கள் என்பது

மேற்படி விழா நடந்த ஓரிரு நாட்களிலேயே அவர்கள் காலமாகிவிட்ட போது அனைவருக்கும் புரிந்தது. பாவலர் அவர்கள் தஞ்சாவூருக் கல்ல ; தன் சாவூருக்குத் தான் சென்று திரும்பி இருந்தார்கள்.

ஒரு நூறு ரூபாய் கடன் கேட்ட நண்பரின் மகனுக்குத் தர இசைவு தெரிவித்தார் பாவலர். அவர்களைச் சோதிக்க விரும்பிய வந்தவர், ஒவ்வோர் நூறாக எண்ணூறு வரை ஏற்றிக் கொண்டே வந்ததும் அவர் கேட்ட ஒவ்வோர் நூறுக்கும் இல்லை என்னாது சிலேடை நயம்பட தருவதாகக் கூறி முதலில் இசைவு தெரிவித்ந ஒரு நூறை மட்டுமே தந்து நின்ற நிகழ்ச்சியும், காஞ்சி மாநகரில் நடந்த அருட்பா வெற்றி விழாவில் பாவலர் அவர்களை “அசைவம்” எனக் குறிப்பிட்ட மருட்பாக் கட்சிக்காரர் மருண்டோடும் அளவுக்கு “ஆம் பாவலன் அசைவன் ; அசையாதிருக்க அவனொன்றும் ஜடப் பொருள் அல்லன் ; அசைவன் ” எனக் கூறிக் கொண்டே அசைந்தும் ஆடியும் குனிந்தும் நிமிர்ந்தும் கூட்டத்தினரைக் குதூகலிக்கச் செய்த நிகழ்ச்சியும் பிரசித்தி பெற்றவை.

எத்துறையை - எக்கலையை எடுத்தாலும் ஏற்றம் மிகக் கொண்டிருந்த பாவலர் என்னும் சகல கலா வல்லுநர் சிலேடைக் கலையிலும் கூட சிறப்பான இடம் வகித்தார் என்பது சிந்திக்கத்தக்கது; வந்தனைக்குரியது.

சதாவதானி

செய்குதம்பிப் பாவலர் அவர்களுக்கு

கவிதாஞ்சலி....

திறனவித்த பாவல்லான்!

ம. கா. மு. கதிர்முஹ்யித்தீன் மரைக்காயர்

ஆண்டொருநாற் பானொன்றன் முன்ன மோர்நாள்
அடியனேன் கோட்டாறு போந்த காலை
மாண்டபினு மெனையுலகோர் நினைவு கூரும்
வண்ணமொரு கோவைசொல விழைகின்றேனீ
பூண்டதொழின் முதல்வனையே தலைவ னாக்கொள்
பொருத்தமுள தவனிசைவு பெறுக வென்னா
வேண்டினன்றன் றகையுணரா முஸ்லிமென்னும்
வெறும்பெயரா ரிடைப் பிறந்த பாவல்லானே!

மறைகிடந்த மனப்புலவன் வேண்டு மாறே
வாக்கிசைவு பெற்றளித் திரங்கூன் சென்றேன்
பொறைகிடந்த வுளத்தினனாம் ஷம்சுத் தாசீம்
பூமான்மேற் பொருவிலொரு கோவை செய்யுட்
டுறைகிடந்த நயங்களெலாஞ் செறிந்து தோன்றச்
சொல்லியத னொருபகுதி யாப்புக் கல்லாக்
கறைகிடந்த நெஞ்சினனேற் கனுப்பிச் சாத்துக்
கவிதருக வெனப்பணித்தான் கவிஞ ரேறே!

எழுத்தறிவே வகையறியேன் சிறியேன் யாப்பி
னிலக்கணமோர்ந் தியற்றலெங் ஙனையா நின்போற்
பழுத்ததமிழ் வாணனருள் கோவைக் கான்ற
பண்டிதரே சாத்துகவி பகரற் பாலார்
இழித்தகையே னிதுகாறும் பாவொன்றேனும்
யாத்தறியே னெனைமன்னித் தருள்க வென்னா
வழுத்திவிடை யிறுத்தனன்மற் றொருவர் செய்யுள்
வாங்கியென தெனுமியல்பெற் றில்லாதாலே!

பாட்டியற்ற வல்லாய் நீயென்னு முன்றன்
பக்குவம்யா னன்கறிவேன் கவிதை நிற்குத்
தீட்டவரு மையமில்லை யுனது சாத்துச்
செய்யுளொன்றே யாயினுநீ யெழுதிப் போக்குஞ்
சீட்டெனக்குக் கிடைத்திலதே லென்றன் கோவை
சேர்பனுவ லைப்பதிப்பித் தரங்கி லேற்றும்
நாட்டமெனக் கிலையிதுசத் தியமா மென்னா
நல்வாக்கோ டாணையிட்டா னாவல் லானே!

இன்னதொரு தருமசங்க டத்திற் காளா
யென்செய்ய யெனவருந்திப் பாட்டு நிற்குப்
பன்னவரும் பாடுகெனும் பாவல் லான்சொற்
பலிக்குங்கொல் பார்ப்பமென நெஞ்சந் தேறி
யன்னவயல் சூழெனுமோ ரெதுகை முன்னா
ளாரோ சொன்னா னதனாற் றொடங்கியெந்தன்
சின்னமதிக் கேற்பவியற் றியதா மாறு
சீர்விருத்த மோரொன்ப தனுப்பி னேனால்!

ஓலையொன்று தேடியெழுத் தாணி தேடி
யொருவரு மிலாத்தலத்தைத் தேடிக் குந்தி
காலைமுதல் மாலைவரை முயன்றோர் பாட்டுக்
கட்டுவனென் றெவனையோ வொருவன் சொன்னான்
நூலையுண ராத்தமியே னங்கன் யாத்த
நொய்யகவி யேற்றிரங்கூ னகர்க்கண் ணேயோர்
மூலையினிற் கிடந்தேனை யரங்குக் கீர்த்து
முதுகவிஞ ரிடைவித்வா னெனவைத் தானால்!

நானொருவித் வானல்லே னென்னு முண்மை
நன்கறிவே னானாலு நாவல் லார்க்குக்
கோனனையா னல்வாக்காற் பெற்ற பேறு
கொண்டிசுலாம் பணிதொடங்கி நபிகள் கோமான்
வானமுத வாக்குஹதீஸ் நூன்மிஷ் காத்துல்
மஸாபீஹைச் செந்தமிழிற் பெயர்த்திப் பாக்கண்
மானுபல பாவியற்றிப் பதிக்கின் றேனிவ்
வழிப்புகுந்து பாவலனை மறப்பன் கொல்லோ

திருவேறு தெள்ளியரா தலும்வே றாகத்
　　திகழ்வதிந்த வையகத்தி னியற்கை யென்ப
திருவேறு வகையினதா யென்ன முன்னா
　　னியம்பினன்பொய் யாமொழியா னெம்மனோர்க்குப்
பொருளேறு பேறுடையார் பாவல் லான்றன்
　　புலனேறு தெருளருமை யுணரா லோப
மருளேறு மனத்தினரா தலினா லன்னான்
　　மாணறிவு நூலரிதாய்ப் போயிற் றந்தோ!

இலக்கணமு மிலக்கியமும் பாடஞ் சொல்லி
　　யெண்ணரிய தமிழ்ப்புலவர் ஈந்த தல்லால்
கலக்கமறுத் தெனைப்போல்வார் தமக்கும் வாக்காற்
　　கவிதைபுனை திறனளித்த பாவல் லான்சீர்
சொலத்தகுமோ மதத்துறையில் யான்செய் யாப்புத்
　　தொண்டனைத்து மவன்புரிந்த தொண்டா மன்றோ
அலக்கணொழித் தாகிறுநாள் அல்லாஹ் தன்மெய்
　　யடியரினத் தவனையுஞ்சேர்த் தருள்க ஆமீன்!

புகழ்ப் பாமாலை

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

வீறார்ந்த சந்தத் தமிழ்ப்பா வலர்களின் மெய்ம்மரபில்
நூறார்ந்த வண்கைக் கலைவந்த பெம்மான் நுணங்குகல்விப்
பேறார்ந்த செல்வன் பிறங்குசெய் குதம்பிப் பாவலன் றன்
ஆறார்ந்த வண்ணப் புகழ்வான் கொடிஅலை ஆடுகவே!

வாழுந் தமிழ்மொழி வைகுங் குமரி மலையிழிந்து
தாழுங் குமரித் தமிழாற்றின் கோட்டில் தவழ்ந்துகலை
சூழுந் திருத்தலம் கோட்டாறு தோன்றிய முத்தமிழின்
வேழங் குலவும் ★இடலைப் பதிபுகழ் வீறுகவே!

ஒன்றே குலம்படைத் தாண்டான் ஒருவன் உடையநெறி
நன்றே நபிநா யகம்திரு வள்ளுவர் நாட்டும் மெய்ம்மை
என்றே உலகுக் கெடுத்தியம் பும்பெரு மான்இசையின்
குன்றே எனும்தமிழ்க் கோமான் குடிச்சீர் குலவுகவே!

விடலை படத்தெறி தேம்பழம் என்றிட வீதியெலாம்
இடலை படத்தமிழ் இன்னமு தாக்கி இருங்கலையின்
கடலை மடுத்தெணில் ஆயிரம்சீடர் கருத்தினிலே
படலை படத்திரு ஓங்கிய பண்பிசை நீடுகவே!

முத்தமிழ்க் கோநல் இளங்கோவின் முப்பழச் சேறளைந்து
நித்தமுப் பாலின் நெறிவித்தி நேரார் களைகளைந்து
புத்தெழிற் கம்பன் பொலிவிற் பொலிந்துசீ றாப்புராணத்து
ஒத்த கதிர்த்திரு ஓங்கல்கண் டான்புகழ் ஓங்குகவே!

★ இடலை – இடலாக்குடி.

தழைத்து வாழ்க!

சௌந்தரா கைலாசம்

கடற்கரையில் தவம்புரியும் குமரி அன்னை
காட்டுகிற தண்கருணை கடலை மிஞ்சும்!
அடுக்குமுயர் இயற்கையெழில் சித்திரங்கள்
ஆயிரமாய் ஆயிரமாய் விழியில் கொஞ்சும்!
தொடுக்குமொரு செந்தமிழின் கவிதை மாலை
தொல்லுலகம் எங்கணுமே மணத்தைக் கூட்டும்!
வடக்கிமய மலையதனைக் குன்றச் செய்யும்
வண்ணமொரு புகழ்மலையை உலகம் சேர்க்கும்!

இந்தவிதம் பெருமைமிகும் திருக்கோட் டாற்றில்
இரவியவன் உருமாறிப் பிறவி தாங்கி
வந்தனனோ எனுமாறு செய்கு தம்பி
வந்தரிய திருப்பிறவி எடுத்தார்; ஆமாம்!
சுந்தரநற் றமிழன்னை மகுடம் தன்னில்
சுடர்கின்ற புதுமணியைச் சூடிக் கொண்டாள்!
சிந்தனையில் புவியெங்கும் பவனி செல்லத்
தேரோட்டி புதியவராய்க் கிடைத்து விட்டார்!

சிறுவயதில் அருங்கல்வி கற்றுத் தேர்ந்து
சென்னைநகர் சென்றடைந்தார் செய்கு தம்பி
அறிஞர்பல ரோடுநிதம் கலந்து பேசி
ஆற்றலிலே மிகப்பெரிய வளர்ச்சி பெற்றார்.
மறுபடியும் கல்லாமல் எதைக்கற் றாலும்
மனத்தினிலே ஒருமுறையில் பதித்துக் கொண்டார்.
வறுமையிலும் செம்மையுடன் வாழ்ந்து காட்டி
வண்டமிழர் குலத்துக்குப் பெருமை சேர்த்தார்.

ஒப்பரிய அவதானக் கலையினாலே
　　உலகெங்கும் அவருடைய புகழோங்கிற்று !
செப்பரிய விதமாக உழைக்கும் ஆற்றல்
　　சேர்ந்ததனால் அவருடைய திருவோங் கிற்று !
கப்புகிற இருள்யாவும் அவரைக் கண்ட
　　கணத்தினி ல எங்கோயோ கரைந்தோ டிற்று !
தப்பறியா வகையிலவர் நடந்து சென்ற
　　தடத்தினிலே செந்தமிழின் படைகூ டிற்று !

பயன்மிகவும் நமக்களித்த செய்கு தம்பிப்
　　பாவலரின் வாழ்க்கைஅறி வாற்றல் முற்றும்
நயமுடைய புத்தகமாய்த் திரட்டித் தந்து
　　நானிலத்து மக்களுக்கு வழங்கி நிற்கும்
உயர்வுடைய பேரன்பர் செய்கு தம்பி
　　ஓங்குபுகழ் மேன்மேலும் எய்தி ஈசன்
தயவதனால் தாரணியில் நீண்ட காலம்
　　தழைத்தினிது வாழ்வதற்கு வாழ்த்து வேனே !



எங்கள் பாவலர்!

கவிஞர் தே. ப. பெருமாள்

பிறவியிலே இலக்கியமாம் திருவைப் பெற்று
பிழையில்லா நினைவாற்றல் முதிர்ச்சி யாலே
மறவாதே யவதானம் நூறுஞ் செய்து
வையத்துப் புலவரெலாம் வியக்க நின்ற
இறவாத புகழுடையாய் செய்கு தம்பி
என்றதமிழ்க் கற்பகமே புலவர் கோவே
நறவாக அமுதாக உரைகள் செப்பி
நற்றமிழின் சுவையெல்லாம் தெரிவித் தாயே!

நாஞ்சிலினில் தமிழ்ப்பண்ணை செழிப்பு கொண்டு
நல்விளைவைத் தந்திடவே நாளும் நீதான்
வாஞ்சையினால் பணிசெய்தாய் பயனோ வென்றால்
வண்புலவர் பண்டிதர்கள் நிரம்ப லானார்
ஊஞ்சலென மனமாட இளைஞ ரெல்லாம்
உவகைவெறி கொண்டுதமிழ்க் கற்க லானார்
யாஞ்சிறந்தோம் உனைப்பெற்ற இறுமாப்பாலே
இன்றந்தப் பீடெல்லாம் இழந்தோ மன்றோ!

நினைத்ததுமே கவிபாடும் மேதைக் கம்பன்
நிறைபுலமைப் புகழேந்தி ஒட்டக் கூத்தன்
நனியிணையும் இரட்டையர்கள் காளமேகம்
நாமிவரைக் கற்றதன்றிக் கண்ட தில்லை
இளையவர்கள் அடிச்சுவடு நோக்கிச் சென்ற
எங்களுயர் பாவலரை நேரில் கண்டோம்
கனிவளிக்கும் சொற்கேட்டோம் கவிதை கேட்டோம்
களிப்புற்றோம் நாம்நல்ல பேறு பெற்றோம்!

பாவலரின் கவிதைகளில் உவமை பேசும்
பழுதற்ற சீரணியும் முகத்தைக் காட்டும்
கூவிடுமே குயிலிசையாய் ஓசை ஒன்றி
கொட்டிடுமே நன்மழைபோல் பொருள்கள் கூடி
ஆவல்தரும் சுனையூற்றின் தெளிவு தங்க
அற்புதமாய் மந்திரங்கள் விந்தை செய்யும்
மேவிடுவாள் உண்மையெனும் வடிவ நங்கை
வித்தாரம் பேசிடுவாள் நகைத்து நிற்பாள்!

குளிர்சாந்தம் மணம்கமழும் தென்றல் வீசக்
குறுநகைசெய் முல்லையுமே களிப்பு நல்கும்
விளைந்துள்ள சுவைக்கனியை உண்ணுங் காலை
விஞ்சுரசப் பெருக்காலே நாவும் சொக்கும்
அளையாத நறுந்தேனை அள்ளி யுண்ண
ஆனந்தத் தேக்கெறியும்; அருவி சொல்லும்
தெளிவான பண்ணிசையில் இன்பம் துள்ளும்
சேகுதம்பீ நின்கவியில் அனைத்தும் பெற்றோம்!

மூண்டெழுந்த பக்தியினால் அன்பு பொங்க
மோதுணர்வில் நற்கவிதை நித்திலங்கள்
நீண்டொளிரக் கோதையாய் யாத்துத் தந்த
நிறைஞான இராமலிங்க வள்ளலாரின்
தூண்டுமொளி யருட்பாவை மருட்பா வென்ற
சொற்சிலம்பப் புலவரையே வாதில் வென்ற
யாண்டுமொளிர் புகழ்வேய்ந்தாய் ஞான மென்னும்
எழில்விளக்கின் சுடர்தந்தாய் தெளிவுதந்தாய்!

தேசீய இயக்கத்தி லீடு பட்டுச்
செய்திட்ட நின்னுரைகள் இன்னும் காதில்
ஓசையிடும் நெஞ்சமதில் உணர்வை யூட்டும்
ஒளிமணியே தமிழ்த்தாயின் அருமை மைந்த
மாசில்லா நின்னறிவுப் பேழை தந்த
மணிமணியாம் இலக்கியச் செல்வந் தன்னில்
ஆசில்லா நின்வடிவை இனியாம் காண்போம்
ஆனந்த அனுபவத்தில் திளைப்போம் இங்கே!

தமிழ் உலாவரும் பாதையில் - ஓர் தங்கவிளக்கு

- தமிழன்பன் -

★ கோட்டாற்றில்
ஊற்றெடுத்த பாட்டாறே
பாவலரே
அவதானக் கலைபெற்ற
வெகுமானமே
உங்கள்
தமிழ் நனைந்த நெஞ்சங்கள்
என்றும் உமை நினைந்திருக்கும்!

★ நபிகளே — ஒரு
சேயாகிச்
செந்தமிழ் அன்னைக்குத்
தித்திப்பு
முத்தங் கொடுக்கும்
சத்தம் அல்லவா — உங்கள்
'நாயக மஞ்சரி'யில்
நான் கேட்கின்றேன்.

★ உங்கள்
கடிதக் கவிதைகளில்
புலமையின் முத்திரை
புதுமையின் முகவரி.

★ உங்கள்
வாக்குச் சதுரப்பாடு
படிப்போரை
வளைத்துப் போட்டு வைத்த விருந்துகள்
கொஞ்சம் அல்லவே !

★ ஒட்டகம் போல்
உயர்ந்த புலவர் நீங்கள் !
முதுகு முடிச்சிலும்
முத்தமிழ்க் கனவுகள்
அவசியப் படும் போதெல்லாம்
அவிழ்த்துக் கொடுத்தீர்கள்

★ இலக்கிய வரலாறு — உங்கள்
சுவைத் தமிழில்
இளைப்பாறித் தான் பயணம் தொடர்கிறது
எப்படி உங்கள்
நினைவை நீக்கிவிட முடியும் ?

★ பாவலரே
தமிழ் உலாவரும்
தடத்தில் எல்லாம்
விளக்காக நிற்கின்றீர் ! உங்களை
விலக்குவது எப்படி முடியும் ?

பாவலர் புகழே வாழி!

பெருங்கவிக்கோ வா. மு. சேதுராமன்

அளப்பரிய இசுலாத்தின் ஆன்மீக நெறியினையே
அகத்தினிலே பதித்த மேலோன்
வளமுடைய செந்தமிழை வாழ்விக்கத் தூய்மையாம்
வல்லமையைக் காட்டிய சான்றோன்
களவழியாய்த் தனைஆக்கக் கருத்திட்டார் உள்ளேயும்
கலங்காமல் உண்மையைக் காத்தோன்
உளமோங்கு சதாவதானி யென்னும் உயர்ந்தோனாம்
உயர்செய்கு தம்பிப் பாவலர் கோவாம்.

★

அருட்பாவை இன்றுபல அருந்தமிழர் வியக்கின்றார்
அந்நாளில் செய்த தென்ன ?
மருட்பாவென் றேமருட்டி மாகொடுமை செய்போதில்
மதிநுட்ப ஆற்றல் கோமான்
இருட்கூட்டம் ஒளிசெல்லும் இனியநலத் தன்மைபோல்
இனத்தமிழர் உணரு மாறு
வருபகைமை தொலைத்தாரே வஞ்சகத்தைத் தகர்த்தாரே
வாய்மைநிலை நாட்டி னாரே!

★

ஒருநினைவைப் புந்தியிலே உணர்ந்துசெயல் செய்திடவே
ஓராயிரம் அவலம் மேவும்
வருநினைவை உளமனதில் வல்லமையால் ஒப்பில்லா
வகைநூறு பொருள்கள் மேவ
தருநினைவைக் கருப்பொருளைத் தான்நினைவில் வைக்கின்ற
சதாவ தானம் செய்தே
பெருநினைவின் வேந்தரெனப் பேறுபெற்ற செய்குதம்பிப்
பாவலரின் ஆற்றல் என்னே ?

★

சமயத்தைச் சமயத்திற் கேற்றவாறு பயன்படுத்தித்
தன்வயிறு வளர்க்க வென்றே
சமயத்தை இசுலாத்தைத் தழுவிபயன் படுத்துவோர்கள்
தம்படிகள் சுருட்டு நாளில்
சமயத்தில் உயர்ந்தோங்கு சமயமாம் இசுலாத்தைச்
சமயம்போல் பயன்படுத்தா
சமயவெறி இல்லாத தலைமகனாய் இசுலாத்தின்
தகைமைக்கோ பாவலர்தான்.

★

தமிழ்வளர்த்தோர் விஞ்சுகின்ற தமிழ்க்கவிப் பயிர்வளர்த்தார்
தமிழின ஒருமை கண்டார்
அமிழ்தமாம் இசுலாத்தின் அருமைமிகு கொள்கையினை
அகிலமே உய்ய வென்றார்
இமிழ்கடல்சூழ் வையத்தில் எதற்குமே அஞ்சாதே
இறைஅச்சம் ஆண்மை நின்றார்
உமியளவும் தீமையின்றி உள்ளத்தால் நிறைசெய்கு
உயர்பாவலர் புகழே வாழி!

பாவலர் பற்றி பண்டிதர் கருத்துக்கள்

தொகுத்தவர் - வை. தங்கப்பன்

"விண்பட்ட தருமலிபூம் பொதிகையில்வாழ்
குறுமுனிவன் விரித்த வைந்து
பண்பட்ட விலக்கணமு மிலக்கியமு
முலகுவப்பப் படித்துத் தேர்ந்தோன்
கண்பட்ட மணிபோல்வான் கருதுமுயிர்
பான்மையுளான் கற்றோர் போற்று
மெண்பட்ட புகழுடையா னிகழ்வடையான்
கோடைநக ரிருந்து வாழ்வோன்"

"ஆற்றுதவப் பேறனைத்து மனுதினமு
மோருருவா யமைந்தா லொத்துத்
தோற்றுதவம் படைத்துயர்ந்த தொல்குலத்தான்
பல்புகழான் தூய வாய்மை
சாற்றுதவ நெறியுடையான் கதியுடையான்
மதியுடையான் சார்ந்தோர்ப் போற்றி
ஏற்றுதவ வாய்ந்தசெழு மிருங்குணத்தா
னரும்பொறையர னினிய வாழ்வான்"

—*(முதுபெரும் புலவர் தா. சாத்தாங்குட்டிப் பிள்ளை)*

"புத்தகத்தை யெப்பொழுதுங் கைக்கொண்டு
பொய்யுரைத்துப் பொறுமையற்று
நத்தகத்தி லுறுபணியி னெயிறன்ன
குணம்பொருந்தி நன்மை நீண்ட
வித்தகத்தைக் கைக்கொண்டார் தமைப்பழித்துப்
புறங்கூறி வீணே யீண்டுப்
புத்திகெட்டுப் பாவலரென் றேதிரிவா
ரொடுங்கும்வகை புரியுந் தீரன்"

"அடுத்தவர்வைத் திருக்கின்ற புத்தகமெ
லாம்வாங்கி யன்பீர் நாளைக்
கொடுத்துவிடு வேன்றிரும்ப வெனக்கூறி
யேமாற்றிக் கொடுபோ யில்லத்
தடுக்கிவைத்துப் படித்தலின்றி வருவார்க்குத்
தம்பெருமை யனைத்துங் காட்டத்
தொடுக்குமறி வெனைத்துமிலாப் பாவலருக்
கறிவுறுத்துந் துங்க முற்றோன்"

—*மதுரை ஆசுகவி ஆறுமுகஞ் சேர்வை*

"பண்டையருந் தமிழ்நூற்கள் பலவுணர்ந்தோ
னரியகுறான் பகர்ந்த மாசில்
எண்டயங்கு நெறிநிற்போ னிசைசெய்கு
தம்பிப்பா வலனென் றோதும்
பண்டழையுங் கவிவாணன் பண்புடைய
நட்பாளன் படியிற் சீர்த்தி
எண்டிசையுந் தழைவித்தோ னின்மொழியன்
பன்னலஞ்சார்ந் திலகு வோனே"

—*சென்னைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியார்*

"பன்னயஞ்சேர் மலைநாட்டுக் கணிகலனா
யவிர்கோடைப் பதியில் வாழ்வோன்
மன்னியசீர் செழுந்தமிழி னிலக்கணமு
மிலக்கியமு மாணக் கற்றோன்
வின்னமற வியன்கவிதை மாரிபொழி
கிற்குமதி விரகன் முற்றப்
பன்னருஞ்சீ ரினியகுண சம்பனன்செய்
குத்தம்பிப் பாவல் லோனே"

—*சென்னை திரு. கு. முஹம்மது ஜமாலுத்தீன் சாஹிப்*

"எவ்வகைய பனுவலையு மிம்மென்னு
மளவையினி லியற்ற வல்லோன்
செவ்வியற் றமிழ்ப்புலவன் செய்குதம்பிப்
பாவலனாத் திகழு மேலோன்"

—*மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் கா. நமச்சிவாய முதலியார்*

"மாவாரு மேருதனை மருவினருக்
குயர்வருளு மாறே கல்விக்
காவாரு மடையினுட னரும்புலமைக்
காளாக்கு மருமை வாய்ந்தோன்
நாவாரு நறுந்தமிழை நன்றெனக்கு
மருள்குரவன் ஞான ரூபன்
பாவாரு நாவுடையான் பண்புடைசெய்
குத்தம்பிப் பாவலோனே"

—வித்துவான் தா. மாணிக்க வாசகம் பிள்ளை

★

செய்குதம்பிப் பாவலர் போல் சிறந்தோர் உண்டோ?

- கவிமணிதாசன்" - சி. ஆதிமூலப் பெருமாள் -

கன்னிநிலத் தாய்வயிற்றில் தோன்றி அன்புக்
கலைமகளின் ஞானப்பா லுண்டு நாட்டில்
தன்னிகரில் லாதமிழண் ணுவி யான
சங்கரநா ராயணன்பால் தமிழைக் கற்றுப்
பன்னுபெரும் புலவர்களைப் பாருக் கீந்து
பலரேத்த மாமதியாம் அணையிலேறித்
தென்னகத்தே தமிழாண்ட செம்மல் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

எக்கவிக்கும் வெட்டியொட்டிப் பொருள்சொல் வல்லான்
இதயத்தே நினைவாட்சி புரிந்த ஏந்தல்
தக்கபெருங் கற்பனைகொள் கவிதை யூற்றுச்
சங்கநூற் கடலாழங் கண்ட சான்றோன்
மிக்ககுணக் கவிமணியார் புகழ்ந்த மேதை
வேதாந்தம் நாதாந்தம் விளக்குந் தீபம்
திக்கெட்டும் புகழ்வளர்த்த திறலோன் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ?

இந்துமுடித் திறைநடஞ்செய் அருட்பா வென்னும்
எழிற்கடலின் அமுதெடுத்து நீதி மன்றில்
வந்தவர்க்கும் இருந்தவர்க்கும் வழங்கி இஃது
வாழ்வளிக்கும் அருட்பாவே யென்று வென்று
கந்தமுறும் "தேவாமிர் தப்பிர சங்கக்
களஞ்சிய"மெ னும்பெரிய பட்டந் தன்னைச்
சிந்தைமகிழ்ந் திடப்பெற்ற தீரன் எங்கள்
செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ

காங்கிரசு மேடைமிசைக் கர்ச்சித் தாலும்
　　கண்டனக்கூட் டத்தரங்கில் கடாவி னாலும்
பாங்குடைய இலக்கியப்பே ரவையுற் றாலும்
　　பலர்நடுவே பரிவுறுசொல் பகர்ந்திட் டாலும்
ஓங்கைங்கோண் இலக்கணச்சக் கரத்துக் குள்ளே
　　ஒளிநடஞ்செய் தமிழ்த்தாயை உவக்கக் காட்டித்
தேங்கறிவு செல்வனெனத் திகழ்ந்த எங்கள்
　　செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ ?

வித்தகர்தம் நூறுவினா அங்கு சங்கள்
　　விரைந்தெழுகால் தனதுவிடைத் துதிக்கரத்தின்
சத்தியினால் பிடித்தடக்கிக் காள மேகந்
　　தான்மீண்டும் அவதரித்தான் என்று சொல்ல
முத்தமிழ்மும் மதம்பொழிந்த தமிழ்மா வேழம்
　　முருகுறுநா றவதான முதல்வன் வாணி
சித்திபெறு தெய்வீகப் புலவன் எங்கள்
　　செய்குதம்பிப் பாவலர்போல் சிறந்தோர் உண்டோ ?

பிறப்பாரோ பாவலரைப் போல்!

புலவர் ஆபிதீன், சென்னை

செயல்நூறு செய்தவன் செந்தமிழில் சீமான்
பெயல்போலச் சொற்பொழியும் பேரறிஞன்—வயலாரும்
கோட்டாறு தந்தகவிக் கோமான்போல் இப்புவியில்
மீட்டொருவர் உண்டோ விளம்பு !

செத்துங் கொடையீந்த செய்கப்துல் காதிரெனும்
வித்தகர்தம் கால்வழியின் வேரன்றோ—இத்தரையில்
உன்னதமார் சின்னம் உருவாக்கி வைத்திடுவோம்
அன்னவரின் ஆத்மாவுக் காம் !

போனதெலாம் போகட்டும் பொன்றாப் புகழ்வாழ
ஆனவரை நாமுதவி ஆக்குவிப்பம்—மானமுடன்
செவ்வானை முத்தமிடும் சீராம் கலைக்கூடம்
இவ்வுல குள்ளவரை இங்கு !

எத்தனைப் பாட்டுவகை எந்தமிழில் உள்ளனவோ
அத்தனையும் சொல்லவல்ல ஆற்றலுடை—வித்தை
இறந்ததுகாண் ; சிந்திப்பீர், இப்புவியில் யாரும்
பிறப்பாரோ பாவலரைப் போல் !

ஒப்பற்ற பாவலர்!

பண்டித அ. சிவசுப்பிரமணிய பிள்ளை

பாரினிலே ஒப்பற்ற பாவலரே! வானுறையும்
சீரினிய வாழ்வினிலே சேர்ந்தீரோ—மாரியைப்போல்
பாட்டைப் பொழிகின்ற பண்புடையார் யாருளரோ
தேட்டமுடன் கூறத் தெளிந்து.

பாவலரும் நாடிப் பணிகின்ற செய்குதம்பிப்
பாவலரென்கின்றபாவாணா!—மேவுபுகழ்
வண்டமிழால் கோவையை வையத்தார்க் கீந்ததனால்
கொண்டலென் போமன்பு கூர்ந்து.

அருந்தமிழில் நன்றாய் அவதானம் செய்தும்
அருட்பா மறுப்பினுக்கு அன்பாய்—திருந்திய
நன்மொழியால் மற்றவர்க்கு நல்லுரைசெய் பாவலரை
இன்மொழியால் ஏத்தினார் இங்கு.

மறந்திட இயலுமோ!

திருவை அப்துர்ரஹ்மான்

அருட்கவிஞரே —
உங்களின்
ஆன்மா இசைத்தவை யெல்லாம்
இதயக் கழநியில்
விதைத்த விதைகள் —
தோகைவிரித்தே தளிர்த்தவை
மோனம்
ஞானம்!

கோட்டாறு கண்ட பாட்டாறே—
பாட்டறைகளின் பட்டறைகளில்
நீங்கள்
வைரச் சொற்களைச் செதுக்கியபோது
தீட்டிய பட்டைகள்
தீனின் பாட்டைகள்

இந்த
தேவாமிர்தப் பிரசங்கக் களஞ்சியம்
தோன்றியிரா விட்டால்
நாஞ்சிற் சோலையில் தமிழைத் தாலாட்ட
ஊஞ்சல் ஏது?

சீரும் தளையும் பாலும் பழமும்
எதுகை மோனை இடக்கை வலக்கை
சந்தம் என்றும்
சொந்தம் பந்தம்

உருவகம் உங்கள்முன்
உருகி நிற்கும் —
உவமை தனது கருமை நீக்கி
வெண்மை காண
வெண்பா தேடும் --
அணியணியாக அணிகள் வந்தே
மணிகளை அசைத்து
வாசலில் நிற்கும் —

பாவலர் எழுதுகோல்
பட்டால் போதும்
பாட்டால் பயனைப்
பெறலாம் என்றே!

பாவலர்
ஷெய்குத் தம்பி ஒரு
தீன்தமிழ்த் தும்பி —
சுவைத்தது தமிழ்த்தேன்
சேகரமானது தீன் தீன்

இறையின் மொழியும்
ஏந்தலர் வழியும்
வழியெனக் கொண்டதால்
காட்சிகளெல்லாம் சாட்சிகளாயின
கவிதைகளெல்லாம்
காவியமாயின — ஆமாம்
ஜீவியமாயின.

நம்மீது நபிகளுக்கு நேசம்
நபிமீது நமக்கெல்லாம் பாசம்
உங்கள் பாடல் வரிகள்
அவர்கள்தம் புகழை வாசித்தன
இல்லையில்லை
சுவாசித்தன
விசுவாசித்தன.

சாதா அவதானியல்ல
சதாவதானி!
சதா அவதானம் கண்ட
இந்த
சதாவதானியால்தான்
ராஜதானிகளும் வரவேற்பு
விதானம் போட்டன!
உங்கள் பாதையோ
நிதானம்
சமாதானம்.

உங்கள் சொற்களென்ன
மகுடியோ —
நானிலமே ஆடியது —
நஞ்சுடைய நாகமும்கூட
நச்சிவந்து உச்சிமகிழ்ந்ததே!
மண்டிடும் அறிவை
மாந்திட வென்றுதான்
வண்டியினுள்ளே மண்டியிட்டதோ!
அச்சகம் உங்களால்
உச்சகம் கண்டது—ஆனால்

தவறில்லா தவஞானத்தால்
இச்சகம் வெற்றிகள்
நிச்சயம் கொண்டது.

சொற்போட்டி எப்போதும்
உங்களின்
மற்போட்டி !
அர்த்தமில்லாமற் போட்டியில்லை
எப்போதுமே
அர்த்தமில்லா மற்போட்டியில்லை.

ஒருநூறு இருநூறு மூன்நூறு
நான் நூறு ஐ நூறு அறு நூறு
எழு நூறு எண் நூறு – என் நூறு –
கல்லை உடைத்துதான் பலர்
பல்லை உடைப்பார்கள்
இங்கோ
சொல்லை உடைத்தே.........
....

கடுகைத் துளைத்தது
அணுவைத் துளைத்தது – திருக்குறள் !
நீங்களோ
குறளைத் துளைத்துப்
பொருளைத் தந்ததால்
குவலயம் வியந்தது.

மேடைப் பேச்சோ
கோடை மழை
நனைந்தவரெல்லாம்
பேதம் அகன்றே இணைந்தனர்.

நாட்டின்மீது உங்கள் பற்று
நாட்டோர்க் கெல்லாம்
பாவலரே உங்கள்
தமிழ்மேல் பற்று.
தேசியவாதியாய்த் திகழ்ந்த
செம்மலே !
இறைவன்
ஆசியால் கவிதைகள்
ஆக்கிய புலவரே
மறந்திட இயலுமோ
மாபெரும் சேவையை !

★

பாவலர் வாழ்க! பைந்தமிழ் வாழ்க!

'அறிவுதாசன்'

நஞ்சை செழித்தது நாஞ்சில் நாடாம்
நற்றமிழ்த் தேன்மணம் நாறிடும் வீடாம்
அங்கு பிறந்தனர் அருந்தமிழ்க் காவலர்
அவரொடு பிறந்தனர் அரியபற் பாவலர்.

அமிழ்து வளர்ந்தது; அறிவு வளர்ந்தது
அவையொடு மாங்கே அறமும் வளர்ந்தது.
கவிஞர் வாழ்ந்தனர் கலைஞர் வாழ்ந்தனர்
காலம் முழுதும் கலைகள் வாழ்ந்தன.

இத்தனைச் சிறப்பும் இலங்கிடு நாஞ்சிலிற்
கெழில்தரு கோட்டா றெனுநற் பதியில்
பத்தியு முத்தியும் படைத்தொளிர் குடியில்
பக்கீர் மீறான் பண்பினர் குடிலில்

ஆண்மைக் குருவாய் அறிவுக் குருவாய்
அஞ்சா நெஞ்சாய் அழகுகொள் பிஞ்சாய்
கன்னித் தமிழாய்க் கவிபொழி முகிலாய்
காண்பவ ரெல்லாம் களித்திடுஞ் சிசுவாய்

பைந்தமிழ் பிறந்தது பாவலர் பிறந்தார்
பண்பிற் சிறந்தவர் படியில் பிறந்தார்
பிறந்தவர் வளர்ந்தரர் பெருந்தமிழ் கற்றார்
பெற்றதும் கற்றதும் பிறர்க்கெடுத் துரைத்தார்

கன்னித் தமிழில் கவிபல யாத்தார்
கம்பனின் கவியைக் கவின்பட உரைத்தார்
நுண்ணிய அறிவு நூல்பல பெய்தார்
நூறவ தானம் வீறுடன் செய்தார்

பாவலர் வாழ்க! பைந்தமிழ் வாழ்க!

பாவலர் பதிப்பகம் பன்னூல் காண்க!

★

இவர்க்கெவர் இணையாம் இங்கே?

நாஞ்சில் ப. ஜமால் முகம்மது

நிலந்தனை உழுது உடலினை வளர்க்கும்
நெல்லே ருழவர்கள் சூழும்
புலன்தனை உழுது உயிரினை வளர்க்கும்
புகழ்ச்சொல் லாளர்கள் வாழும்
பலகலை வாணர் பயின்றிடும் சாலை
பாமணம் வீசிடும் சோலை
கலைவளர் கன்னிக் குமரியின் நாஞ்சில்
கவின்மிகும் திருநகர் கோடை!

திருநகர் கோடைத் தவமெய்ஞ் ஞானி
திருக்குலம் தந்தவோர் சொத்து
பெருமகள் ஆமினா ஃபக்கீர் மீரான்
பெற்றெடுத் திட்ட நன் முத்து
திருவருள் ஏந்தி கலைக்கடல் நீந்தி
திகழ்ந்திடும் செய்குத் தம்பி
வருபவர்க் கெல்லாம் வளர்கலை எல்லாம்
வழங்குபா வலர்புகழ் வாழ்க!

எண்ணுதற் கரிதாம் இயம்பிடப் பெரிதாம்
எழிற்கலை யாம்அவ தானம்
நுண்ணிய அறிவால் நினைவாற் றலினால்
நிறைவுறச் செய்தினி தோங்கி
தன்னிக ரில்லாக் கலைமா மதியாய்
சதாவ தானியும் ஆன
எந்தையின் தந்தை விந்தைகள் எல்லாம்
எண்ணிடில் வியப்புறும் உலகே!

'யாவையும் பாடிப் பாடுக கோவை'
என்றனர் இலக்கண நூலார்
ஆவலும் கொண்டு அன்பினில் நின்று
அரும்புகழ்ச் சான்றவர் பேரில்
கோவைகள் மூன்று குறையறச் செய்து
தண்டமிழ்ப் புகழினைக் கூட்டும்
பாவலர் பாடல் பாடிடும் போதில்
பரவசம் பெருகிடக் காண்போம்!

பாவலர் பாடல் பரம்பொருள் மீதில்
பக்தியைப் பெருக்கிடத் தூண்டும்
பாவலர் பாடல் பரமா நபிகள்
பாசமும் நேசமும் காட்டும்
பாவலர் பாடல் பைந்தமிழ்த் தாயின்
பழம்பெரும் பெருமைகள் கூட்டும்
பாவலர் என்றால் செய்குத் தம்பிப்
பாவலர் தான்என நாட்டும்!

இந்திய நாட்டின் விடுதலை வேண்டும்
எழுச்சியை நெஞ்சினில் ஊட்டும்
அந்நியத் துணியை எதிர்த்திடும் போக்கும்
அதனையே எதிர்த்துளம் ஈர்க்கும்
தன்னரும் பேச்சால் விடுதலைத் தீயை
தென்னகம் எங்கிலும் மூட்டும்
என்னரும் பாட்டன் பெருமைகள் எண்ணில்
இவர்க்கெவர் இணையாம் இங்கே?

போற்றாத நாவும் உண்டோ?

பேராசிரியர் கா. முகம்மது பாரூக்

சென்னைநகர் மக்களெலாம் சேர்ந்திருக்க
சிறப்பளிக்கும் அறிஞரெலாம் சூழ்ந்திருக்க
என்னையிது எனப்பலரும் வியப்பில் மூழ்க
எல்லாரும் அதிசயித்துப் பார்த்திருக்க
தன்னையொரு சோர்வில்லாக் கருவி யாக்கி
தகைமையுடை அவதானம் நூறு செய்து
மின்னுபுகழ் சேர்த்திட்ட மேதை தன்னை
மேன்மையுடன் போற்றாத நாவும் உண்டோ?

கல்லாதார், கற்றவர்கள், காளை யர்கள்
காரிகையர், தொழிலாளர், சிறுவர், மூத்தோர்
எல்லாரும் ஒருசேர இன்பம் காணும்
எழிலாரும் சொல்விருந்தை என்றும் தந்து
பல்லாண்டு போற்றிவரும் மரபுக் கொப்பப்
பைந்தமிழில் பாமாலை பலவும் கண்ட
நல்லாராம் பாவலரின் நிறைவுச் செயலை
நினைந்துருகிப் போற்றாத நாவும் உண்டோ?

சீறாவின் உரையாளர்; சிறப்புக் கவிஞர்;
செந்தமிழில் கைதேர்ந்த செம்மல்; ஆசான்
வீறான நாநலத்தில் வேந்தர்; நாட்டின்
விடுதலைக்காய் உழைத்திட்ட வீரர்; என்றும்
மாறாத குணக்குன்று; மாண்பின் சின்னம்;
மாபெரியோன் அருள்விழையும் மாமதியர்; வல்லார்;
பேறாகத் தமிழ்நிலத்தார் பெற்ற கோமான்
பெருமையினைப் போற்றாத நாவும் உண்டோ?

பாவலப் புலவன் நீயலவோ ?

மா. இளைய பெருமாள்

“முன்பே விளங்கும் கவிதைகளின்
மொழியை மனம்போல் திருத்துதற்கு
என்ன முறையிங் குள்ளதடா
இதயம் குமுறிச் சொல்கின்றேன்
கன்னித் தமிழின் உயிர்நிலையாம்
கம்பனைச் சிதைத்தால் விடுவேனோ ?”
என்று முழங்கிய உன்னுரையை
என்னால் மறக்க முடிந்திடுமோ ?

மண்ணில் வாழும் உயிரிளங்கள்
மல்கு துயரில் மயங்குதலை
எண்ணி யெண்ணி நிலையிழந்து
இதயம் நொந்து கண்கலங்கி
அண்ணல் அளித்த அருட்பாவை
அல்ல என்று சொன்னவர்கள்
எண்ணம் தன்னை முறியடிக்க
எழுந்த உள்ளம் உன்னதன்றோ ?

வாழ்க்கைச் சுழலில் சிலமறக்கும் ;
வறுமைத் தீயில் சிலபொசுங்கும் ;
சூழ்வார் செயலில் சிலமறையும் ;
துயரக் கடலில் பலதாழும் ;
பாழும் இவற்றிற் கஞ்சாது
பலரும் புகழும் அவதானம்
வாழும் நினைவால் நூறுசெய்த
வன்மை மதியும் உனதன்றோ ?

காண்போம் நன்மை புதுமையிலும் ;
காலப் போக்கில் மாளாமல்
நீண்டுநிற்கும் பழமையினை
நெஞ்சில் நிறுத்தும் பலநூற்கள்
மீண்டும் காண்போம் எனக்கற்று
மேன்மை யடைந்தப் பரம்பரையைக்
காண்டல் விருப்பால் அருந்தமிழைக்
கற்றுக் கொடுத்ததுன் செயலாகும்.

இலக்கியப் பொருளை எளிதுணர
இயற்கை நெறியில் பிறழாமல்
கலையுணர் இன்பம் அழியாமல்
கருதி வகுத்த இலக்கணத்தை
மலையென மயங்கி ஓடாமல்
மதிவன் மையினால் கற்றுணர்ந்து
பலர்க்கும் எளிதில் எடுத்துரைத்த
பாவலப் புலவன் நீயலவோ ?



சதாவதானிப் பாவலர்


புலவர் 'அரசு'

செந்தமிழ்த்தேன் ஊற்றெடுக்குந் தென்னாஞ்சில் வளநாட்டிற்
கோட்டா றென்று
முந்தையுறு சீர்நாகர் கோயிலைச்சார் இளங்கடையில்
முஸ்லிம் மக்கள்
சிந்தையுறு தவப்பயனால் பக்கிரிமீ றான்பொருப்பிற்
சிறக்கத் தோன்றிப்
பைந்தமிழார் சங்கரநா ராயணவா ரியின்தமிழைப்
பருகி யார்ந்து

கலைவானில் எழுந்துதமிழ்ப் பயிர்தழைத்துக் கவின்பெறவே
சதாவ தானக்
கலைமழைபெய் செய்குதம்பிப் பாவலனாம் முகில்நன்றி
கருதுந் தோறும்
உலைவில்லாப் பேரின்ப அமிழ்தூறி நெஞ்சமெலாம்
உவக்கும் என்னே
கலையுலகோ சாதிமதச் சுழல்கடந்துங் கருத்தினிலே
கலந்தான் மன்னே.

வாய்ப்பறிந்து தொனிப்பொருளைப் பேரவையார்ப் பெடுக்கநுவல்
மாண்பி னானை
மீப்புலமை யுடையோரும் வியப்புறப்பன் னூலியற்றி
வெளியிட் டானை
மாப்புகழ்சேர் இராமலிங்க வள்ளலருட் பாமறுப்பை
மறுத்திட் டானை
நாப்புகழ்ந்து சுவைத்திடவே சீறாவை யுரைவிரித்த
நல்லோன் றன்னை

நற்றமிழில் வாதிக்கும் நாவலனை, மாணவர்க்கு
நாடித் தூய
நற்றமிழைக் கற்பிக்கும் போதகனை, உரைவிரிக்கும்
நயத்தி னானைச்
சொற்பொழிவில் வல்லோனைப் பலநூல்கள் பதிப்பித்த
தோன்றல் தன்னைப்
பொற்புறுதே வாமிர்தப் பிரசங்கக் களஞ்சியனைப்
போற்றுவோமே.



பாவலர் பஞ்சகம்

வித்துவான் சு. உமைதாணுபிள்ளை

தாலமெல்லாம் போற்ற சதாவதானஞ் செய்திந்த
ஞாலமிசை நன்குயர்ந்த நாவலனை—ஜாலமிகு
சித்தங் குடிகொண்ட செய்குதம்பிச் சீமானை
நித்தமும் நெஞ்சே நினை.

ஓதும் அவதானம் ஒருநூறுஞ் செய்திந்த
மேதினியில் மிக்குயர்ந்த வித்தகனை—கோதிலா
செய்ய தமிழ்த்தொண்டன் செய்குதம்பிப் பாவலனை
வையமிசை நாவேநீ வாழ்த்து.

பக்திச் சுவைசொட்டும் பாவாம் அருட்பாவை
சொக்கப் புகழ்மணக்கச் சொல்லியவன்—திக்கெல்லாம்
தேடுகின்ற சீருடையான் செய்குதம்பிச் செல்வனைப்
பாடுகவே என்நா பணிந்து

தீண்டாமை போக்கத் திருச்சுசிந்தை வீதியிலே
நீண்டமறிச் சான்தாண்ட நின்றவன்காண்—பூண்டபுகழ்
பாவலன் செய்குதம்பிப் பண்டிதன் பேரோங்கி
பூவுலகில் வாழ்க பொலிந்து.

நாஞ்சினாட்டுச் சிங்கமாய் நாடறியக் காங்கிரசை
வாஞ்சையுடன் போற்றிய வள்ளல்காண்—தீஞ்சொலன்
தன்னேரில் செய்குதம்பித் தண்டமி ழாசான்றன்
நன்னாமம் வாழியவே நன்கு.

பாவலனை மறந்ததேனோ?

"வெற்றிச் செல்வன்"

காவிலுயர் தமிழ்நாட்டின் கனியா யுள்ள
கவின்பெறுசீர் நாஞ்சிலதன் கோடை தன்னில்
காவலர்க்கும் பூவுலகின் வாழ்வு ளோர்க்கும்
கடை நின்றும் விடையளித்தே உறுதி நல்கும்
மாவலராம் சொல்லுழவர் ஓங்கு சீர்த்தி
மதியொடுநாத் திறங்கூறும் தேனாய் ஊறும்
பாவினிலே வல்லவர்க்கும் பாடஞ் சொல்லும்
பாவலன்மா மதியினையும் மறந்த தேனோ ?

௨

பாவல்ல நம்செய்குத் தம்பி கண்டே
பைந்தமிழும் பாருலகும் மகிழ்ந்த தன்றே
பாவல்ல பாவலனின் இனிய பேச்சும்
பகைத் திறத்தோர் தமையுமிக ஈர்த்ததொன்றோ ?
பாவலனின் பலவாய பொருள்கோள் தன்மை
பல்கலைஞர் தமைக்கூட மாட்டு மன்றோ ?
பாவலனை மாமதியை உரைக்கு வேந்தைப்
பாவியர்நாம் பெற்றிருந்தும் விடுத்த தேனோ ?

௩

தேன்சொட்டும் சொற்பயனும் தெவிட்டா நிற்கும்
தெள்ளியநற் பாகனைய கவிதைப் போக்கும்
வானகமுஞ் செவிமடுக்கும் அமுதம் போன்ற
வண்டமிழில் உரையாடும் தன்மை தானும்
கானமயில் நடனமிடும் எழிலே என்னக்
கல்லார்க்கும் விருந்தாகும் தமிழைக் காத்தோன்
தானமென உறைநாவன் தமிழைக் காத்தோன்
தனைப்பெற்றோம் தாரணியில் இழந்தோம் ஏனோ ?

4

தமிழ்வாழ இசுலாமும் தந்த நல்ல
  தனிப்பெருநூல் சீறாவின் சுவைய னைத்தும்
தமிழறிந்தோர் அறியாத நிலையை மாற்றத்
  தந்திறனைக் காட்டியதன் பொருளைக் கூட்டித்
தமிழ்ச்சுவையுந் தஞ்சுவையுஞ் சேர நல்ல
  தகுநூலாய் உரையிட்டுச் செய்த தொண்டைத்
தமிழினத்தார் யாவருமித் தரணி தன்னில்
  தமிழ்வருந்த மறந்திடலும் தக்க தாமோ ?

5

இமிழ்கடலின் புகழ்மாய்க்கும் சீர்த்தி மிக்க
  இனிமைத்தெள் ளமுதமென நிற்கும் வண்ணத்
தமிழ்மொழியைக் கற்றதனால் வந்த பேறோ
  தம்மவரும் புறக்கணித்த நிலைக்கு வித்து ?
தமிழ்ப்புலவர் யாவர்க்கும் இதுதான் ஊறோ ?
  தாரணியில் தமிழ்ப் புலவோர்க் குயர்வி ராதோ ?
இமைகொட்டும் கணப்பொழுதில் அழியும் மாயும்
  இழிவுடைய மொழிவந்தும் உறக்கம் ஏனோ ?

நாவாரப் போற்றிடுவோம்!

அருங்கலைகள் ஆய்ந்தொருநூ றவதானஞ்செய்தவுயர்
பெருங்கவியின் பெருமைதனைப் பேசியுளங் குளிர்ந்திடுவோம்.

பல்விதத்து முன்திறமைப் பயனறியா மக்களெலாங்
கல்விதனி லகத்தியன்போற் கனம்படைத்தா ரரென்பார்.
வெற்றிதரு மிலக்கணத்தின் நற்றிறனுன் பாலறியார்
பற்றிறத்தொல் காப்பியனை மற்றவரொப் பாரென்பார்.

கள்ளமற இறைமறையைக் கற்றுணர்ந்த நினையறியார்
வள்ளுவன்போல் நீதியுரை வழங்கிடவே றாரென்பார்.
கண்டொத்த நின்கவியைக் கருத்தேற்றிச் சுவையாதார்
விண்டிடுவர் கம்பனைப்போல் வேறெவர்தா முண்டெனவே.

பண்பாயுன் பாநயத்தைப் படித்தறியா தேமாந்தோர்
வெண்பாவிற் புகழேந்தி வெகுசமர்த்த னென்றிடுவார்.
நயன்மிளிரும் விசித்திரநின் நாவன்மைப் பாவறியார்
வியன்சிலேடைக் குயர்காள மேகம்போ லாரென்பார்.

மெச்சுமுமற் கவிக்குமுன் நீ விரித்தவுரை நயமறியார்
நச்சினார்க் கினியருரை நனிசிறந்த தென்றிடுவார்.
செப்பரிய நின்கோவைத் திறனறியா மாந்தரெலாம்
ஒப்புடைய ரெவருலகில் ஒட்டக்கூத் தனையென்பார்.

பகரரும்பா வகைக்குனையோர் பாவலனென் றறியார்கள்
செகமதிலே கவிநான்கிற் றிறங்காட்ட லரிதென்பார்.
விரைதமிழி னருங்கவியை விளக்கிடுமுன் னாய்வறியார்
குரைகடலிற் குளித்துமுத்தைக் கொள்வதுமே லென்றிடுவார்.

வானமுது நிகராகா வகைசேருன் பாவறியார்
தேனமுதுங் கற்கண்டுஞ் சிறந்தமது வென்றிடுவார்.
ஒண்மதிசேர் உனைச்சூழ்ந்தே உறைவாரெண் காணார்தாம்
தண்மதிசூழ் தாரகைகள் தன்மதிப்பை வியந்திடுவார்.

கலைக்கடலின் ஆழமதைக் கண்டளந்த நினையறியார்
அலைகடலின் ஆழமதை ஆரறிவ ரெனவியப்பார்.
செய்குதம்பிச் செம்மால்நீ பெய்தமிழை யறியாதார்
பொய்முகிலை யுலகினிலோர் பொருளெனவே புகன்றிடுவார்.

பிரசங்க முனைப்போலும் பேரவையோர் மெச்சிமிக
சிரசங்க மனங்குளிரச் செய்துநின்றார் மற்றெவரே?
கதிர்வேல் திறத்தோனைக் கண்டஞ்சி நில்லாமல்
எதிர்வேல் எனவந்தே ஏற்றமிக வுற்றாயே.

கம்பனிருங் கவியிலவன் கருத்தினுமேற் கருத்தோதும்
உம்பர்புகழ் உன்திறனை ஒத்தாரா ருலகினிலே?
புவிநய னுந்தமிழ்நற் போதமதைப் பெற்றிருப்பின்
கவிநாயன் நீயெனவுன் காலடியில் வீழானோ?

வஞ்சிநாட்டிற் றெம்புகொண்டே வருபுலவோ ருன்திறல்முன்
அஞ்சியோடல் கண்டிருந்த அறிஞரெலாம் உனைவியந்தார்.
உற்றபெரும் ஐயமெலாம் உனைத்தேடி வருவார்க்குக்
குற்றமறத் தீர்த்துவிக்குங் குருவாகச் சிறந்தனையே.

தங்களுக்கே தமிழ்மொழியில் தனியுரிமை யெனவுரைத்தோர்
பங்கமுறத் திறன்காட்டிப் பயந்தொடுங்கச் செய்தனையே.

ஆதிமறை முறைவழுவா தறம்வளர்த்தோர் நடுவிலொரு
சோதியென வியந்திடவுஞ் சுடர்வீசி நின்றாயே.

பரம்பொருளை முற்றுமுணர்ந்து பலன்பெறவே மற்றெவர்க்குந்
திரமாக ஊட்டுமுயர் தேசிகனா யிருந்தனையே.

வெண்மதிமுன் மிகவொடுங்கி விறைத்துநிற்கும் உடுக்குலம்போல்
உன்மதிமுன் புலவரெலாம் ஒடுங்கிமிக நடுங்கினரே
அள்ளியள்ளி நீசொரிந்த அந்தாதி தனைக்காணிற்
கொள்ளுபுகழ் கவியொட்டக் கூத்தனுஞ்சீர் குலையரனோ?

நாயகத்தின் மான்மியத்தை நவிலரும்பா மஞ்சரியாய்
ஆயகத்தோர் மனங்களிக்க ஆக்கியளித் துயர்ந்தனையே.

நாகைநகர் ஆண்டகைமேல் நற்றிருபந் தாதிசொலி
வாகைமிகச் சூடியவுன் மாபெருமை யாருரையார்?

மதிசிறந்த கோடைநகர் மாஞானி தாளிணைக்கே
பதிற்றுப்பத் தந்தாதி பகர்ந்தவுனைப் போற்றாரார்?

பொன்னிசையும் பின்னிசையப் பொருணயஞ்சேர் பன்னயத்தோ
டின்னிசைப்பா என்றொன்றீந் தேற்றமிக வுற்றாயே


மாமதியாய்ப் பொலிந்துநின்ற மாகவியைக் கலைக்கடலை
நாமதித்துப் புகழ்ந்தென்றும் நாவாரப் போற்றிடுவோம்.



சதாவதானி செய்குதம்பிப் பாவலர்
அரசு மேநிலைப் பள்ளியின்
புதிய கட்டிடம்



பள்ளியின் மற்றொரு
தோற்றம்





நினைவு மண்டபத்தினுள்ளே
நடுவில்: சதாவதானி பாவலர்
முதலாவது: மூத்த குமாரர்
கவிஞர் செ.ப.மீரான்
கடைசியில்: பாவலர்
அவர்களின் துணைவியார்



சதாவதானி பாவலர்
அவர்கள் வாழ்ந்திருந்த
இல்லம்